DIGITIZED

O-,11x
1V11

76765

உ

குமரன்றுணை

திருச்செந்தூர்ப்

பிரபந்தத் திரட்டு

பாலவனத்தஞ் ஜமீந்தார் ஸ்ரீபா.

பாண்டித்துரைச்சாமித் தேவரவர்களது

மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான்

மு. ரா. அருணாசலக்கவிராயரால்

இயற்றிய

அரும்பதவுரையுடன்

மேற்படி

மு. ரா. அருணாசலக்கவிராயரால்

மதுரைப் புதுமண்டபம் புத்தகஷாப்

இ. ராம.

குருசாமிக்கோனாரவர்களது

மதுரை வடக்குமாசிவீதி

ஸ்ரீ ராமச்சந்திர விலாச அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1911.

Registered Copy Right.

விலை ரூ. 1—8—0.

OFFICE ... MADRAS 25 JUL 1911

26

1911

76765

O-11x
N11

செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட
டிசம்பர் மாதம் 1985 வருடம்
செப்பனிட்டு முடித்த
ஜனவரி மாதம் 1986 வருடம்
ஆராய்ச்சி உதவியாளரின் கையொப்பம்.

குமரன்துணை.

இப்புத்தகத்தி லடங்கியவை.

எண்	விஷயம்	பக்கம்
௧	சிறப்புப்பாயிரம்.	௫
௨	திருச்செந்தூர்த் தலபுராணம்.	௭
௩	மேற்படி அரும்பதவுரை.	௱௩௩
௪	திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ்.	௱௮௫
௫	பகழிக்கூத்தர் சரித்திரம்.	௨௱௰௮
௬	திருச்செந்தில் நிரோட்டக யமகவந்தாதி.	௨௨௧
௭	சிவப்பிரகாசசுவாமிகள் சரித்திரம்.	௨௩௩
௮	திருச்செந்திற் கலம்பகம்.	௨௩௫
௯	சுவாமிநாததேசிகர் சரித்திரம்.	௨௯௮
௰	திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா.	௨௯௯
௰௧	குமரகுருபரசுவாமிகள் சரித்திரம்.	௨௪௩
௰௨	திருச்செந்தூர்த் திருப்புகழ்.	௨௮௫
௰௩	அருணகிரிநாதர் சரித்திரச்சுருக்கம்.	௩௭௫
௰௪	கந்தவருக்கச் சந்தவெண்பா.	௩௭௭
௰௫	சரவணப்பெருமாட்கவிராயர்சரித்திரம்.	௪௱௧
௰௬	திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ் அரும்பதவுரை.	௪௱௩

1917

அத்தியாய அகராதி.

அத்தியாய எண்.	அத்தியாயப் பெயர்.	பக்கம்.	பாட்டுத் தொகை.
௧௬	இயமனுக்குச் சிந்துபுர வைபவ முரைத்த அத்தியாயம்	௱௰	௩௪
	கடவுள் வாழ்த்து	௬	௰௪
௧௮	சுகப்பிரமரிஷி பூசைபண்ணின அத்தியாயம்	௱௰௮	௱௪
௧௪	சுவாமினது மந்திரமகிமை யுரைத்த அத்தியாயம்	௬௨	௩௮
		௪௫	௨௪
௭	சுவாமி வள்ளியம்மை யிடத்துச் சென்ற அத்தியாயம்	௪௫	௨௪
௫	செயந்திபுர அத்தியாயம்	௨௬	௭௨
௩	செயந்திபுரவைபவ முரைத்த அத்தியாயம்	௰௬	௭௪
௧௨	திரிசுதந்திரர் வரலாறுரைத்த அத்தியாயம்	௭௩	௨௩
௪	திருவவதார அத்தியாயம்	௨௬	௰௮
௧	நைமிசாரணியத்திற் சூதமுனி சென்ற அத்தியாயம்	௰௨	௰௨
௬	பலகதை யுபதேசித்த அத்தியாயம் ...	௬௭	௭௪
	பதிகம்	௬	௰௭
௧௫	பிரமாவுக்கு வரங்கொடுத்த அத்தியாயம்	௯௧	௮௮
௧௭	பிரமதேவர்கட்குபதேசித்த அத்தியாயம்	௱௰௪	௩௰
௧௧	மாதபூசை விதியுரைத்த அத்தியாயம் ...	௭௭	௩௭
௮	வள்ளியம்மை திருக்கலியாண அத்தியாயம்	௪௬	௬௩
௯	வள்ளியம்மை திருவவதார அத்தியாயம்...	௩௬	௫௨
௧௩	விசுவரூப அத்தியாயம்	௮௬	௪௧
௧௨	விபூதி அத்தியாயம்	௮௨	௩௰
௨	வியாதர் சுகருக்குபதேசித்த அத்தியாயம்	௰௪	௰௭

சிவமயம்.

குமரன்றுணை.

OFFICE OF THE REGISTRAR ... 28 JUL 1911 MADRAS.

முகவுரை.

புராணமென்பது பழையசரிதங்களை யுணர்த்துவது. அவை, பழைய சரிதங்களாவன: தேவர் மனிதர் நரகராகிய உயர்திணைப் பொருள்களும் மிருகம் பறவைகளாகிய அஃறிணைப்பொருள்களும் போகத்தை யடையும்பொருட்டு, செபம் தியானம் ஓமம் விரதம் தானம் தவம் பூசை தரிசன முதலியவற்றை யியற்றி யுயர்ந்த பேறுபெற்றமையும் செய்து, தலம் தீர்த்தம் மூர்த்திகளை வணங்குந் தன்மைகளையும் பலவற்றையுஞ் செய்கைகளைச் செய்து வேண்டுவார் வேண்டிய வரங்களைக் கொடுத் தருளுந் திருச்செந்தூ ரென்பது முன்னொரு கற்பத்திலே, பிரபாகர னென்னும் அரசன் மனைவியாகிய சுகுமாரி யென்பவள் ஒருகருவி லிரண்டு பிள்ளைகளையும் அதன்பின் தனித்தனி யொரு கருவி லொரு பிள்ளையாக இரண்டு பிள்ளைகளையும் பெற்றனள்; இந்த நான்கு பிள்ளைகளுக்கும் பிதாவாகிய பிரபாகரன் முறையே சூரன், பன்மன், சிங்கன், தாரக னென்னும் பெயர்களை வைத்து வளர்த்துப் பருவம்வந்தவுடனே தன்னரசாட்சியை அவர்களிடங்கொடுத்துவிட்டுத் தன்மனைவியுடனே காட்டிற் சென்று தவஞ்செய்து கொண்டிருந்தனன். சூரன் முதலிய நான்கு மைந்தரும் பிதாவின் கட்டளைப்படி, சாகரத்தினை யரசாண்டு வருங்காலத்தில் அகத்திய மாமுனிவ ரவ்விடத்துக்கு எழுந்தருளிச் சூரன், பன்மனென்னு மிருவருக்கு முருகக்கடவு ளாற்புத சரித்திரத்தை யுபதேசித் தருளினர். அவ்வாறே கிரௌஞ்சிக்கிடைய முனிவர் வந்து சிங்கன், தாரகனென்னு மிருவருக்கு முறையே பார்வதி, ஐயனார் சரித்திரங்களை யுபதேசித் தருளினர். உபதேசம் பெற்ற நால்வருள் பன்மன் முருகக் கடவுளுடைய கோழிக் கொடியாகவும் சூரன் அக் கடவுளுடைய வாகனமாகிய மயிலாகவும் சிங்கன் பார்வதியின் வாகனமாகிய சிங்கமாகவும் தாரகன் ஐயனார் வாகனமாகிய யானையாகவு மிருக்கவேண்டுமென்று சிந்தித்துத் தங்களுடைய புத்திரரைச் சாகரத்தினைக் காக்கும்படி சொல்லிவிட்டுத் திருக்கயிலாச மலைப்பக்கத்திலே போய் நாற்பதினாயிர வருடந் தவஞ்செய்து வசித்தனர்.

அப்போது திருக்கயிலாச பதியாகிய சிவபிரானைத் தரிசிக்கும் பொருட்டு, முருகக்கடவுள் முதலாயினோர் ஆங்குவந்து தங்கள் தங்கள் வாகனங்களை வெளியே நிறுத்திவிட்டு, உள்ளே சென்றாராக. அவ் வாகனங்களுள் முருகக்கடவுள் வாகனமாகிய மயிலும் அவர் கொடியாகிய சேவலும் துர்க்கை, ஐயனார் வாகனங்களாகிய சிங்கமும் யானையும் சூரன் முதலிய நால்வர் தவஞ்செய்யு மபிப்பிராயத்தை யவரிடங் கேட்டுத் தெரிந்து நீங்களெங்கள் பதவியை யபகரிக்க நினைத் திருப்பதால் பூதங்களாகக் கடவீரென்று சபிக்க, உடனே யந்நால்வரும் அவ்வாறே மயில் சேவல் சிங்கம் யானை முகங்களையுடைய பூதங்களாகி அண்டாபரணரென்னும் பூதத்தலைவருக் கேவல்செய் திருப்பாராயினர்.

பின்னுமொரு தினத்தில் முருகக்கடவுள் முதலாயினோர் அவ்விடத் துக்கு வந்து அவரவர் வாகனங்களை வெளியே நிறுத்திவிட்டுச் சிவ பிரானைத் தரிசிப்பதற்காக உள்ளே சென்றனர்; அதுகண்டு சூரன் முதலிய பூத வீரர்களாகிய நால்வரு மயிலையுஞ் சேவலையு நோக்கி யுங்களை விஷ்ணு முதலிய தேவர்களது வாகனங்கள் வணங்கவில்லையே யென்று கோபத்தை மூட்டுதலும், அவ்விரண்டும் கருடன் அன்னம் முதலியவற்றோடு போர்செய்து, அவைகளைக் கொன்றன; இவற்றை யெல்லா முருகக்கடவு ளறிந்து, இவ்வளவு தீச்செயலை யுண்டுபண்ணிய அப்பூத வீரர்களை நீங்கள் அசுர குலத்திற்போய்ப் பிறக்கக் கடவீ ரெனச் சபித்தனர். அச்சாபம் பெற்ற பூதவீரர் நால்வருள் சூரனும் பன்மனு மாகியவிருவருங் காசிப முனிவருக்கு மாயை வயிற்றிலொரு சரீரத்தை யெடுத்துப்பிறந்தனர். மற்றிருவரு மவள்வயிற்றிலே தனித் தனி யொவ்வொரு சரீரத்தை யெடுத்துப் பிறந்தனர். இம்மூவரும் பதினாயிரவருட காலமாகப் பற்பல யாகங்களைச்செய்து சிவபிரானிடத் திலே யுயர்ந்த வரங்களைப்பெற்று, அக்கருவத்தால் பிரமவிஷ்ணுக்கள், அட்டதிக்குப் பாலகர் முதலியோரையும் யுத்தஞ் செய்து சயித்து, அவர்கள் செல்வங்க ளெல்லாவற்றையுங் கவர்ந்து, அசுரர்கள் மனமகி ழும்படி கடலினடுவே மகேந்திரபுரி யென்னுமொரு பட்டணமுண்டு பண்ணி, அதிலிருந்து நூற்றெட்டுயுகம் ஆயிரத்தெட்டு அண்டங்களை யரசாட்சி செய்து வாழ்ந்தனர்.

இவர்க ளிடுக்கண் பொறுக்கமாட்டாம லிந்திரன் முதலிய தேவர் கள் திருக்கயிலாசத்திலே சென்று சிவபிரானிடத்திலே முறையிடுத லும், அவர் தமது ஆறு திருமுகங்களிலுமுள்ள ஆறு நெற்றிக் கண்களி லும் ஆறு தீப்பொறிகளைப் பிறப்பித்துச் சரவணப் பொய்கையிலே விடுத்துக் கந்தசுவாமி யென்னுந் திருக்குமாரரை யுண்டாக்கினர்; அக்குமாரக்கடவுள் நவவீரராகிய ஒன்பது தம்பிமாரும் இரண்டாயிர வெள்ளம் பூதசேனையுஞ் சூழ எழுந்தருளிவந்து யுத்தஞ்செய்து மாமர மாகிய சூரபன்மனைத் தமது சத்திவேலா லிரண்டு கூறாக்கிக் கொன் றருளுதலும், அவ்விரண்டுகூறும் பண்டைத்தவத்தால் சேவலுமயிலு மாகத் தம்முன்னே வந்துநிற்க, அவற்றைக் கொடியாகவும் வாகனமா கவுந் தரித்துக்கொண்டு இந்திரன் முதலாயின தேவருக்குப் பெருவாழ் வளித்தருளி மகிழ்ந்து வீற்றிருக்கப் பெற்ற திவ்ய க்ஷேத்திரமாம். இதற்குச் சான்றாக மாமரமாகிய சூரனைப்படுத்த (கொன்ற) இடமா னது இன்றும் மாப்பாடு என இத்தலத்தில் வழங்கப்பட்டுள்ளது. அருணகிரிநாதர் திருப்புகழன்றி, மதுரைத் தமிழ்ச்சங்கப் புலவருள் நடுநாயகமாக வீற்றிருந்த நக்கீர தேவரால் திருமுருகாற்றுப்படையி லிரண்டாவது தலமாகவும், தமிழ்த் தெய்வ நிலையமாகிய திருவாவடு துறையாதீனம் சாமிநாத தேசிகரால் கலம்பகமும், பத்திவடிவாகிய பகழிக்கூத்தரால் பிள்ளைத்தமிழும், இன்னும் பல வித்துவான்களாற் பல பல பிரபந்தங்களும் பாடப்பெற்ற மான்மியமுமுள்ளது. பிரதான மான இருபத்துநான்கு தீர்த்தங்களுமுடையது. குமாரக்கடவுளாலே பூசிக்கப்பட்ட சிவலிங்கப் பெருமானையும் தன்னுட்கொண்டது.

இத்தகைய தலந், தீர்த்தம், மூர்த்தியாகிய மூவகையினுஞ்சிறந்த திருச்செந்தூர்த் தலபுராணத்தைக் குமாரக்கடவுள் தமதுதிருவாக்கால் நீ பாடுவாயென்று கட்டளையிட்டருள, அக்கட்டளைப்படியருள்வாக்குப் பெற்று வென்றிமாலைக் கவிராசரென்பவர் செயந்திமான்மியமென்னும் வடமொழியினின்றுந் தமிழில் மொழிபெயர்த்து விருத்தப்பாவினாலே பாடியருளினரென்பது இந்நூற்சிறப்புப்பாயிரத்தால் விளங்குகின்றது. இன்ன காலத்திற் பாடியருளினாரென்ப தொருவகையாலுந் தெரிய வில்லை. தெரியாமைக்குக் காரணம் பண்டைத் தமிழ் நூலாசிரியர்கள் தாம் பாடிய காலத்தைக் கணக்கிட்டுக் கூறும் பெரு வழக்கமின்மையே யாம். தமிழ்நாடாகிய தென்னாட்டிலுள்ள சாதாரண வித்துவான்கள் வாக்குகளும் மோனை, எதுகை, கற்பனை, யமகம், திரிபு, சிலேடை யாதிய வளங்களமையப்பெற்றுள்ளனவானால் திருவருள்பெற்ற இந்நூ

லாசிரியரது வாக்குகளவ்விசேடங்க ளமையப்பெறுதலோ ரரியதன்று. இவருடைய அற்புதசரிதம் சிறப்புப் பாயிரத்துள்ளே நன்கு விளங்குதலா லிங்கு விரித்துக் கூறவில்லை.

இவ்வருமை பெருமையுடைய இப்புராணம் (18) சருக்கங்களும் (899) செய்யுட்களுந் தனக்கங்கமாகக் கொண்டிருக்கின்றது. இப்புத்தகம் நீண்டநாளைக்குமுன் அச்சிற் பதிப்பிக்கப்பெற்றதால் இப்போது படிப்பவர்கட்குக் கிடைப்ப தரிதா யிருக்கின்றதை யுத்தேசித்துத் தமிழபிமானமுந் தெய்வ பத்தியு மிக்க மதுரைப் புதுமண்டபம் புத்தகக்கடை மகா-ா-ா-ஸ்ரீ இ. ராம. குருசாமிக் கோனா ரவர்கள் தமது ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் பிரசில் இரண்டாம் பதிப்பாகப் பதிப்பிக்கத் தொடங்கி, கற்பவருக் கெளிதிலே பொருள் விளங்கும்பொருட்டு, அரும்பதவுரை யெழுதித் தரல் வேண்டுமென்று, என்னை வேண்டிக் கொண்டனர். அவ்வேண்டுகோளுக் கிணங்கி, முன் பதிப்பித்த புத்தகத்தையும் பழைய ஓலைச்சுவடிகளையும் பார்வையிட்டு நல்ல பாடங்களைக் கைக்கொண்டு, அரும்பதவுரை யென்னறிவிற் கெட்டியமட்டுமாராய்ந் தெழுதிக் கொடுத்தனன். முற்றக் கற்றவருக்குச் சாமானியமாகத் தோன்றும் பதங்களெல்லாம் ஏனையருக்குத் தமிழ்ப்பயிற்சி சுருங்கிய இக்காலத்தி லரும்பதங்களாகக் காணப்படுதலா லவைகட்கும் உரையெழுதியுள்ளேன். பரோபகார தருமமாகத் திருச்செந்தூர்ப் புராணத்தை யிங்ஙனம் அச்சிட்டுதவிய நமது கோனாரவர்களுக்குக் கலியுக வரதராகிய குமாரக்கடவுளது திருவருளாற் சகல சம்பத்துந் தழைத்தோங்குக. சுபம்! சுபம்!! சுபம்!!!

இங்ஙனம்
மதுரைத்தமிழ்ச்சங்க வித்துவான்
மு. ரா. அருணாசலக்கவிராயர்.

முகவுரை அநுபந்தம்.

முகவுரையிற் கூறியவாறு திருச்செந்தூர்ப்புராணமும் அரும்பதவுரையும் பதிப்பித்து முடிந்தபின்னர், அன்புமிக்க நமது கனந்தங்கிய புத்தகக்கடை இ. ராம. குருசாமிக்கோனா ரவர்கள் திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ், திருச்செந்தி னிரோட்டகயமகவந்தாதி, திருச்செந்திற் கலம்பகம், திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா, திருச்செந்தூர்த் திருப்புகழாகிய இப்பிரபந்தங்களையும் திருச்செந்தூர்ப் புராணத்துடன் ஒன்றுசேர்த்து அச்சிற் பதிப்பிக்க வேண்டுமெனவெண்ணி இவைகளுக்கும் அரும்பதவுரை யெழுதித்தரல்வேண்டுமென்று கேட்டனர். அவர்களுடைய நல்லெண்ணத்தைக்கண்டு பெருமகிழ்ச்சியுற்று, அவ்வாறே தெரிந்தமட்டும் அரும்பதவுரை எழுதிக் கொடுத்தனன்.

இவற்றோடு கந்தவருக்கச் சந்தவெண்பா வென்னு நூலினருமையை நோக்கி அதனையும் இப்பிரபந்தத் திரட்டுடன் சேர்க்கவேண்டுமென்று அதற்கும் அரும்பதவுரை யெழுதுவித்து, அந்தந்த நூலாசிரியர் சரித்திரத்தையு மந்தந்த நூலினிறுதியிலே சேர்த்து, திருச்செந்தூர்ப் பிரபந்தத் திரட்டெனப் பெயரிட்டு, அச்சிற் பதிப்பித்து முடித்தனர். இவரது முயற்சி "பெரியவர் கேண்மை பிறைபோல நாளும், வரிசை வரிசையா நந்தும்" என்றதற் கிலக்கியமாக மேன்மேலும் வளர்ந்து வளம்பெறமுடிந்தது நம்பெருமானாகிய குமாரக்கடவுள் திருவருளென்றே கொள்ளல்வேண்டும்.

திருச்செந்தூர்ப்புராண நூலாசிரியர் சரித்திரம் பாயிரத்துள்ளே தெளிவாகக் கூறியிருத்தலால் நூலிறுதியிலெழுதிச் சேர்க்கவில்லை.

இப்புத்தகம் டிம்மி 420 பக்கங்கொண்ட 52½ பாரம் ஆகஇருந்தும், இக்காலத்தில் தமிழருமையறிந்த வித்துவான்களும் பிரபுக்களும் ஆங்காங்குச் சிற்சிலராயிருத்தலால் அவர்களன்றி யேனையர்களும் தக்கவிலை கொடுத்து வாங்கிப் படிப்பதற்குப் பின்னிடுவாரென்று

முகவுரை அநுபந்தம்.

இலாபத்தைக் கருதாது காகிதவிலையும் அச்சுக்கூலி முதலியவையுங் கிடைத்தாற்போதுமென்று புஸ்தகம் 1-க்கு விலை ரூ. 1—8—0 ஆக ஏற்படுத்தியிருக்கின்றனர்.

புத்தக வியாபாரஞ் செய்வாருள் நமது கோனாரவர்களைப்போலும் உலகோபகாரம் செய்பவர் யாரையுங் காணேம். இவருக்குத் தமிழபிமானிகளாகிய நாமெல்லாரும் நன்றிபாராட்டுங் கடமையுற்றுள்ளோமாக. சுபம்! சுபம்!! சுபம்!!!

இங்ஙனம்
மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான்,
மு. ரா. அருணாசலக் கவிராயர்.

குமரன் துணை.

சிறப்புப்பாயிரம்.

திருநெல்வேலியிலிருக்கும் தச்சநல்லூர்
மகா-ள-ள-ஸ்ரீ
வன்னியப்பபிள்ளையவர்கள் குமாரர்
அழகிய சொக்கநாத பிள்ளையவர்கள்
இயற்றியது.

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பொன்னகர்க் கிறையோ னாதிய வானோர் புகழ்தரு செயந்திமா புரத்தன், மன்னுசெங் கதிர்வேற் பன்னிரு தடந்தோள் வள்ளலார்க் கற்புத மாக, மின்னவிர் கோயின் மடைத்தொழில் புரியும் விப்பிரன் முப்புரி நூலார், வன்னமற் புயத்தா னவன்பெயர் வென்றிமாலையென் றுலகெலாம் வழுத்தும். (௧)

உவமையி லவ்வே தியன்மடைத் தொழில்செய் தொழுகுநாட் டெய்வவே தியனோர், திவசத்திற் சற்றே பூசைக்கு நைவேத் தியம்வைக்க நேரஞ்சென் றிடலா, லவனைமுன் வருத்தியின் றுபூசைகளுன் னலட்டிப் பட்டதிவ் வாறு, தவறுதலிழைத்த தென்கொலாமென்று தண்டித்தார் தானத்தார் தலத்தார். (௨)

அப்படி யவர்தண் டித்ததி லய்ய னவ்வடி பொறுக்கமாட் டாமல், இப்படி யயிறு வளர்ப்பதை விடநா மிறப்பதே நலமென வெண்ணி, மைப்படி நெடுங்கண் வள்ளிதெய் வானை மணாளனை மனத்தகம் வைத்துத், துப்படி யிமைக்குங் கடலில்வீழ்ந் திறக்கத் துணிந்துவந் திறுத்திடு மெல்லை. (௩)

கந்தவே ளோடி வந்தவே தியனைக் கைப்பிடித் தொன்றுக்கு மஞ்சே, ஸ்கந்தனா வவுணர் குலத்தையே யறுத்தே யமரரைப் புரந்துசெந் தாரா, ம்பித்தமா தலத்தை யுற்றன மதனால் வித்தல மகிமையாம் வட்டால், செந்தமி ழாலுஞ் சிறக்கநீ யினிது செப்புவா யென்றுரை செய்தான். (௪)

தேடரும் பொருளே சிந்தித்த வடிவே சிறியனேற் களிவந் தாய் கொஞ்சல், கூடரா னெழுதப்படிக்கறி யேனுன் கோயிலின் மடைத்தொழில் புரிந்தேன், பாடவாக் கெனினும் படைத்திலேன் சத்தப் பாமருவுருகா வுன்ற, னாடலை யெவ்வா றறைந்திடத் தனிவே லையவென் றடிபணிந் தனனால். (௫)

இவ்வணங் கவின்ற வென்றிமா லையைப்பார்த் திறையவ னறைகுவா னுதி, சைவர்தங் குலத்தி லுதித்துள வொருவன் சகலசாஸ் திரத்திலும் வல்லோன், செல்வலன் வலதூர் பெயர்கிருஷ்ட்ண சாஸ்திரி திருத்தகு மித்தலமதனை, யவ்வள வுந்தேர்ந் தவனம்பா னண்ப னன்னவன் றன்னைநீ யடைந்தால், (௬)

முறையுட னுனக்கு விளங்கிடத் தமிழின் மொழிபெயர்த் தின்னமு தென்ன, வறைகுவான் கதியை யளிக்குநங் காதை யாதியோ டந்தமா யந்த, மறையவன் வாக்காற் கேட்டமாத் திரத்தில் வாக்குண் டா மதனைநீ கொண்டு, குறைவிலித் தலமான் மியம்வழுத் தென்று கூறியே யின்னவேற் குமரன். (௭)

சேயுரை தலைமேற் கொண்டன னுடனே செல்வலிற் கிருஷ்ட் ணசாஸ் திரியாற், போயுரி மையுடன் வணங்கியே முருகன் புகன்றவை லாமெடுத் துரைத்துத், தீயுறை மெழுகி னுருகியென் குருவே செயந்தியம் பதியின்மான் மியத்தை, நீயுரை செய்ய வேண்டுமென் றிறைஞ்சி நின்றிரந் தனன்வென்றி மாலை. (௮)

தடையற யாவுந் தெளிந்ததோர் கிருஷ்ட்ண சாஸ்திரி மகிழ்ந்தனன் கதிர்வே, லுடையவன் றன்பான் மொழிக்கயாற் றமூகன் கொத்திருப் பதுகண்டு வியந்தே, யிடைவிடா திருந்து செந்தின்மான் மியத்தை யியம்பியே முடித்தபின் கடலின், மடைதிறந் திட்ட வெள்ளம் போல் வென்றி மாலைக்கு வந்தன வாக்கு. (௯)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

கலவமயி லேறியசெந் தூர்க்குமரன் மீதளவில் கவித்த பாடல், சொலவதுகண் டியர்கிருஷ்ட்ண சாஸ்திரியு மகிழ்ந்துசிரந் துளக்கி நீயே, வெலவரிய செந்தமிழ்க்கு வேந்தனென மிகவாழ்த்த வென்றி மாலைப், புலவர்சிகா மணியதனைக் கேட்டவுட னனைத்தப் புணரி யாழ்ந்து. (௰)

வரிபுரங்க ளோவிடுந்தன் னடைக்கறலோன் றமித்காட்டொள்ப்ரி சிதோழுள், புரிபுண்ணி யப்பலனோ வெனப்புலம்பி கடித்தருவி போனுங் கண்ணீர், சொரிபுநின்று தொழுதேத்தி செக்குசெக்கா மனதுருகித் தோத்திரத்தால், விரிபுனலார் கலித்கரைவாழ் செந்திலான் கருணையினை வியந்து போற்றி. (௰௧)

பாலுந்தே னுங்கலந்த பாகமோ வடித்தெழும் பாகோ வென்றெக், காலுந்தே டுஞ்சுவையிற் சொற்சுவையும் பொருட்சுவையுங் கனிந்து பாரின், மேலுந்தே சொன்றம்மைவேற் குமரர்திரு விளையாட்டை விளக்கிச் செய்யு, நூலுந்தே ரும்புலவோர் தஞ்செவிக்கா ரமுதாகி நலம்பெற் றோங்க. (௰௨)

சந்தவரைக் குகன்றிருவாய் மலர்ந்தவண்ணந் திருச்செந்தூர்த் தலபுராணந், செந்தமிழாற் பாடிமுடித் தரங்கேற்ற வருகின்ற செய்திகேளா, வந்தனையில் லாத்தொழில்செய் மடைப்பள்ளி காறனுக்கென் மதியீதென்றே, நிந்தனைசெய் தார்பெருமைத் திரிசுதந்த ரத்தரெனு நீர்மை யோரே. (௰௩)

இன்னகுறிப் புணர்ந்தபெரி தாகுலித்து மனவருத்த மெய்த லோடு, முன்னருமவ் வேடதனை யலைகடலில் வீசியெறிந் தோடிப் போனான், பின்னரவ்வே டலையோதுக்குண் டழுந்துத் துறைசேரப் பெற்ற தந்த, நன்னகரு ளாளொருவன் கண்டவுடன் கைக்கொண்டில் லந்நண்ணி னானால். (௰௪)

ஏடுவந்து சேர்ந்திடுமந் நகர்க்குட்சக் கரன்வாச மெழும்பி யேயாட்
பாடுவந்து சேர்ந்திடுதல் பெருவழக்க மாகியிருப் பதிலவ் வேடோர்
வீடுவந்து சேர்ந்திடுநாண் முதலாக வுலவையந்த வீடார் வீதி
யூடுவந்து சேர்ந்திடுதன் மாத்திரமில் லாமைகண்டா ருறுநா ளாரே. ()

பூரணமா வூர்முழுதும் புகுங்காற்றீண் டம்மறுகு புகாமை யென்ன
காரணமென் றலமரும்போ தயில்வேல வல்லூரர் கனவிற் றோன்றி
யாரணநந் தலபுரா ணந்தனைப்பூ சியுங்கள்சுக மடைவீ ரென்று
தாரணமா வேடுறைபு மறுகுமதன் வரன்முறையுஞ் சாற்றிப்போனான்.

புலர்ந்தபின்வே லன்றிருவாய் மலர்ந்தபடி யம்மறுகிற் புராணந்தன்னை
யலர்ந்தமல ராலருச்சித் திம்மவனில் லந்தனிற்கண் டதிசயித்தா
ருலர்ந்தவா யமுதூற முகமனல னுக்களித்தா ருருகி யுள்ள
மலர்ந்தனரவ் வூராரை யுடனெழுதிப் பூசைசெய்து வாழுற் றாரே.

நாமத்தை யணிந்தன்றோர் பூசிக்கப் பெற்றசொக்கர்க் கலப்புராணம், வாமத்தை யுறநகரோர் தொல்லைவெக்காற் றலமியா மாண்புஞ் செவ்வை, ஞாமத்தை பொருக்காறு மறவாமெய்ப் பத்திமையு நல்கி நாளுந், சேமத்தை நனியருளிப் புகலத்தான் முதன்மைபதாய்ச் சிறந்த தன்றே. (௰அ)

கேள்வியிலே வாய்பாடோர் நூலெழுதி யவனேட்டைக் கெடுத்தானென்று, நீள்வசன மிப்புராணத் திறாஞ்சில் வடிகுறைந்தவேண்டும் போத, நாள்வழியாய்ப் பற்பலர்பா விளங்கேர்ந்தி டாதெழுதா நனையா ஆற்ற, கோள்விலக்கி யிதனையச்சுப் புத்தகமாச் செயவுளத்திற் குறிப்புக் கொண்டே. (௰கூ)

படத்தினர வணிந்தசெல்லை நாதருக்குங் கார்த்திமதித் தாய்க்கும் மார்மேற், றடத்தினிமிர் கற்பகப்பைந் தாருவா கனக்கமலா சனம்வெண் பொன்னாற், றிடத்தினினி தமைத்தவரு டாவருடன் தொழுமிரண்டாந் திருவி ழாவை, நடத்திவரு வோன்கவிஞர் பெருமான்சுக் காமூர்த்தி நாவ லோனே. (௨௰)

எத்திக்கும் புகழ்பெருகு மித்தகையோன் மெய்த்தவமெ னன்னவந்த, முத்தக்கு மாரகவா மிக்கவிரா சன்றவத்தின் முளைத்த பாலன், வித்தைதக்குங் களஞ்சியமாய் முன்னோர்தம் புகழ்ச்சீரை விளக்குஞ் சீலன், மத்தக்குஞ் சாமனையான் மருப்பொடியுந் தன்குவளை மாலை மார்பன். (௨௰க)

கல்விதனைக் கரைகண்ட வித்தகனாம் பலவாணக் கவிஞன் றம்பி
செல்வியல்வா திருக்குமுகவசியன் சல்லைக்குல திலக மானோன்
பல்விளைவி லக்குமுதற் காரணமா முயர்மேழிப் பதாகை யுள்ளான்
வில்விசய னெழிற்றிருசெல் வேலிகர் மேலரத வீதி வாழ்வோன். ()

சரபமதாய் நரமடங்கற் றடிந்தவர னருள்குமரர் சரணம் போற்றும்
பிரபலவான் கவிராச செல்லையப்ப மகிபனெனும் பெயர்பெற் றோனு
மரபணியு மாலைகொடி மற்றைபசிர் முற்கூறும் வண்ண முள்ளா
னரபதிக்க ணமிசானி தெய்வபத்தி மிற்சிறந்த நம்பி றனே. (௨௰௩)

செய்ங்கொடிரு செல்லோவலி தனில்வடுகக் குடிமுதிக்குந் தெருவில் வாழ்வோர், வயங்கொள்வச னச்சொறைய வன்னெறியே யகவாத நாடுகின்றோன், வயங்கொள்சிவ பூசைபுரிந் தருணலஞ்சேர் பழனிக்கு மாறு மைந்தன், சயங்கொளருவி வாகரன்சுப் பிரமணிய னென்னும் பெயர்கொள் கனம்பெற் றோனும். (௨௰௪)

நேசித்தா ரணியருள்செய் தார்க்குகவேட் கன்புவனர் கெறியா லன்னோன்
மாசித்தா ரணிபெருகுந் தலமகிமை தலங்கவிரு வருமாக் கூடிப்
பேசித்தா ரணியிலெழு தாவெழுத்தி னமைந்திடவுட் பிரிய முற்று
லோசித்தா ரணியிகவா விலக்கணத்தின் வழுவதனி லாற்றி டாதே. ()

உரவோன்முன் கடல்பருகு மொருமுனிவின் றமிழ்க்கடலை யுறிஞ்சுங் கொண்மூ, கரவோடர் வேறுவன நாதருக்கும் வடிவாட்குங் கன்ன பாகர், தரவோதி காடோறஞ் சாரங்கிப் பணிவிடைசெய் சாலி வாமட, சுரவோது வாமூர்த்தி யெனுமருமைத் திருநாமஞ் சூடி னோனால். (௨௰௬)

எதிர்கொள்பல பிரதிநனைக் கொண்டிருந் திப்பார்வை யிட்டதற்பி, னிதிபதியை யனையசெல்வர் மூவர்களா னடாத்திவரு நிலைசேர் செல்லைப், பதியுறையு முத்தமிழா காவச்சுக் கூடமதிற் பதித்தல் செய்து, மதிபரிதி யுள்ளவரை மாநிலமேற் புகழ்ப்பயிரை வளர்த்தா ரன்றே. (௨௰௭)

குமரன் றுணை.

முற்றிற்று.

சிவமயம்.

குமரகுருபரன்றுணை.

திருச்செந்தூர்த்தலபுராணம்.

காப்பு.

ஊற்றெ டுத்துவண் டோலிடு மும்மதத்
தாற்றொ ழுக்கி னருவியஞ் சாரல்வா
யேற்று கைக்கு மிறைவற்கு முந்திய
மாற்றி லாக்களி யானையை வாழ்த்துவாம்.

கடவுள் வாழ்த்து.

சிவபெருமான்.

வேறு.

இருப்பதப் பிரணவத் தியல்பென் றுலமே
சருப்பதச் செய்கைய தாக்கித் தங்கவான்
பருப்பதச் சிலைக்கரப் பாமன் றுமரைத்
திருப்பதத் துணைமலர் சென்னி சேர்த்துவாம். (௧)

பார்வதி.

வேறு.

ஊடலி னுடைந்த சங்க மொளிர்சடைப் பிறைவென் றேற்றின்
மாடுறப் பொருத்தும் போழ்து மகிழ்நருட் குறித்து நோக்க
வேடுறு தளவப் போதி னிளநிலா முறுவல் பூத்துப்
பீடுறு மதியிற் செய்த பெண்ணடி வணக்கஞ் செய்வாம். (௨)

விநாயகக்கடவுள்.

எழுத்துஞ் சொல்லும் பொருளு மிணைக்குற
வழுத்துஞ் சீர்ச்செயந் திப்பதி மான்மியம்
விழுத்த குந்தமி ழாற்சொல வேதமே
பழுத்த குஞ்சரன் பாதங்கள் போற்றுவாம். (௩)

வயிரவர்.

கிஞ்சு கந்தரு வாய்க்கலைக் கிள்ளையா
னஞ்சு கம்பிலோன் றற்றிடக் கிள்ளியே
மிஞ்சு கந்தொறு மிக்குறுங் கார்நிறக்
கஞ்சு கன்பொற் கழலிணை போற்றுவாம். (௪)

வீரபத்திரர்.

ஆறு டைத்தனி யாதியை நீத்தொரு
வேள்வி முற்ற விரும்பிய தக்கனார்
நீள்சி ரத்தை நிலத்திடை வீட்டிய
வாள்ப டைத்த மதலையைப் போற்றுவாம். (௫)

சுப்பிரமணியக் கடவுள்.

வேறு.

வண்டடை கிடந்தின் னிசைமுரன் றெழுதேன் வாய்மடுத்
துண்டுகா துழக்க, விண்டுடைந் தலருங் கடம்பணி தடந்தோள் வெற்
பெலாம் பொற்புலாஞ் சுடர்வேற், கெண்டையந் தடங்கட் குறக்கொடி
களபக் கிளரொளி முலைவனப் பெழுதக், கண்டுகண் டுள்ளங் களிப்ப
ருச் செந்தூர்க் கந்தனை வந்தனை புரிவாம். (௬)

வேலாயுதம்.

வேறு.

†அரம டங்கலுந் தழைசெல மூலமே லாயுத்
தரம டங்கலும் பொருவுசூர் மாமுத றடிந்தே
நரம டங்கலுந் துதிப்பருங் குமரனுட் கமலக்
கரம டங்கலுங் கலஞ்செய்வே லென்கவிக் கருத்து. (௭)

ஐயனார்.

வேறு.

அரிய பூரணை புட்கலை யாமிரு
தெரிவை மார்முலைச் செங்கள பத்தொளி
விரவு சுந்தர மேருவொப் பாம்புயக்
குரிசி றண்டைக் குரைகழல் போற்றுவாம். (௮)

வீரவாகுமூர்த்தி.

வேறு.

வடுத்தமா விருபிள வாகச் சோதிவேல்
விடுத்தவ னவனடி விடாது போற்றியே
யடுத்தவா னவர்சிறை யகற்றச் செம்மணி
கொடுத்தவிர் வீரவா குவைவ ழுத்துவாம்.

திருஞானசம்பந்த மூர்த்திநாயனார்.

வேறு.

அறுகா வொழுக்கச் சிறுமுசைத்தே னூறு பாயுஞ் சோணாட்டி
லாறுகா ழியில்வந் தவதரித்தெ னுள்ளத் திருந்து சமணரெனுங் [ஞ்
குறுகார் தமைக்கட் டழித்துமையாள் கோமான் சரணந் தனைப்போற்
சிறுகான் முனைபி னிருசரணச் செந்தா மரைவந் தனைபுரிவாம்.

திருநாவுக்கரசுநாயனார்.

கலக மிடும்பொய்ச் சமணர்குழாங் கட்டிக் கடலி னிடைப்புகுத்த
வுலகம் பரவ விசித்தகல்லே யுயரும் புணையாக் கரையேறி
யிலவ விதழோர் பங்கமைந்த வெம்மான் கமலத் தாள்பழிச்சுஞ்
சொலவின் புணையாப் பவக்கடலுங் கடந்தான் சரணந் துணைதுதிப்பாம். ()

சுந்தரமூர்த்திநாயனார்.

அரவக் கடலி னிடைப்பாம்பி னமளி படுத்த வமரர்முதலும்
விரைகொப் புளிக்குஞ் செழுங்கமல விட்டுக் கிறைவு மீயுங்காணு
விருபொற் சரணஞ் சிவப்பூர விரவிற் பரவைக் கிருந்தூது
பரவப் பணித்த தம்பிரான்றன் பாத மெமது தலைக்கொள்வாம். (௧௨)

மாணிக்கவாசக சுவாமிகள்.

வேறு.

கொள்ளைவண் டிருந்து விருந்துணச் செழுந்தேன் கொப்புளிந்
தலர்ந்தபூங் கொன்றை, துள்ளுதெண் டிரைநீர் முடித்தசெஞ் சடிலச்
சோதிசெங் கரம்பிடித் தெழுதத், தெள்ளுசெந் தமிழிற் கோவைநா
னூறுஞ் செப்பிய நற்கவி ராசப், பிள்ளைசெஞ் சரணக் கிரணவா ரீசப்
பிரசநாண் மலரிணை துதிப்பாம். (௧௩)

சரசுவதி.

வேறு,

ஒருதனித் திகிரிக் கதிர்கிறங் கவின வொளிர்செய்பொன் னுடை
மருங் கிலங்கக், குருமணி யொளி யிலகியில் விளைமப்பக் குறுநகை மு
றுவலொளிர் தரும்ப, மருமலர்க் கமுநீர் புந்நகம் வரத மணிவட மலர்க்
கரம் வயங்கத், திருவரு ணிறைந்தென் னுளங்குடி புகுந்த செல்வி
பொற் சேவடி பணிவாம். (௧௪)

கடவுள்வாழ்த்து முற்றிற்று.

ஆகதிருவிருத்தம்—௧௪,

பதிகம்.

‡ நயிமிசா ரணியவனஞ் சூதமுனி சென்றதுவு நவையில் சூதன்
வியல்பினுன் முனிவர்முகம் பார்த்துயர்வி யாதமுனி யினிமை சார்ந்
த, வுயர்வினு லருஞ்சுகற்குள் ளன்பொழுகக் கங்கைநதி யோங்கு மூல
த், தயர்வுறு திருந்துசிந்து புரவளமை யனைத்தினையு மடைவிற் கூ
றூர். (௧)

முறையினுற் சுகமுனிக்கு வியாதமுனி யுபதேச மொழிந்த வா
று, மறையுலாஞ் செயந்திபுர வைபவமுன் சொற்றதுவும் வைவேற்
கந்தன், பிறையுலாஞ் சடைக்கடவுள் கவுரியுடன் றேய்ந்தபெரும்
போகந் தன்னி, னிறைவினு லவதரித்துக் கடவுளர்தம் முகநோக்கி
நிகரி லாத. (௨)

பாரதகண் டத்தினிடை மலைவளனு நதிச்சிறப்பும் பரம்புந் தெ
ண்ணீர், வாரிதியின் பெருவளனும் பெற்றநக ரொன்று நம்முன் வகுப்
பீ ரென்ன, வாரருளி னிறைகேட்ட வந்நகர முன்னமெமக் கலக்க
ணீந்த, சூரனுயிர் குடிக்கருளா லிருந்தசிந்து புரமெனமுன் சொற்ற
வாறும். (௩)

தண்ணளியிற் குமரேசன் செயந்திபுரம் போந்துலகந் தழைக்க
மாயோன், கண்ணிடத்துத் தோன்றுமிரு கன்னியர்பா லினிதிருக்கு
ங் காலை யானைப், பெண்ணமுதை மானளித்த பேதையிகழ்ந் திருந்தத
னைப் பிரானு ளோர்ந்து, மண்ணளந்தான் டடன்காத்த மாதவன்றன்
வலக்கணவ தரித்து வந்தாள். (௪)

தன்னையெதி ருறவழைத்து நீயிடப்பா லிருக்குமருந் தார மான
மின்னையவ மதித்திருந்த செய்கையினுற் கொடுஞ்சாப மேற்கொண்
டோர்மான், மன்னுதரத் துற்பவித்து வேடரிடத் திருத்தியவண்
மறையின் வாய்ப்ப, வுன்னையழல் சான்றாக யாம்வதுவை யாற்றுவமெ
ன் றுரைத்த வாறும். (௫)

உரைத்தகொடு மொழிதாங்கி மானிடத்திற் பிறந்தெயின ரொ
ருவா லிந்தை, வரைப்புனத்தி லிருந்துதினை காத்ததுவு மம்மலையில்
வயங்கும் கூர்வேற், கரத்திறைவன் கண்டதுவும் வேடன்முனம்
போயுனது கன்னி தன்பால், விரைத்தொடையல் யான்சூட்ட வேண்
டுமெனக் கருணையுடன் விளம்பு மாறும். (௬)

‡ நைமிசாரணியம்-நயிமிசாரணியமெனப்போலியாயிற்று.

காளவருக் கரசனவ னுடன்படா திருந்ததுவுங் கன்னி முன
போய், வானளவுந் தருவாகி நின்றதுவுங் கானவர்கோன் மலைப்பா
லன்பிற், போனதுவு மிந்தருநம் புனத்தினிடை வரலாறு புதுமைத்
தாகு, மானதருக் குறையினெனச் சொற்றதுவுஞ் சொற்றதுகேட்
டைய னுங்கே. (எ)

தாருவுருக் கரந்துதுணைக் குஞ்சரத்தி னிருசரணந் தாழ நோக்கி
வாரணத்தி னுருவாகி மாதினிடஞ் சென்றதுவு மாது சோர்ந்து, வேரி
மலர்க் கடம்பமணி மார்பிறுகப் புல்லியதும் விருப்பாய் வேடன்
சிறுருளிற் கன்னிகையை யுனக்களிப்ப னென்றுரைத்துச் சென்ற
வாறும். (அ)

குறவனிடத் தமரர்தொழுங் குமரேசன் சென்றதுவுங் குறவன்
வாஞ்சைப், பிறைநுதலை யளித்ததுவு முருகேசன் வேட்டுமனப்
பெட்பி னோடு, நறவமலர்த் தேரேறிச் செயந்திபுரத் தற்றதுவு
நலவயி லாத, பொறைபடைத்த யானைமக ளெதிர்போந்து பாவலவ
ன் பொருந்து மாறும். (கூ)

பொருந்தியவன் குமரேச னிருந்துழிநான் முகம்படைத்த புத்
தேள் போற்றி, வரந்தனைப்பெற் றிடுமாறுந் திரிசுதந்தி ரத்தரெனு
மறைவல் லோரா, மருந்தவத்தர் வரலாறும் பன்னிருமா தப்பூசை
யவைவ மா.து, திருந்துறச்செய் திடுமாறுங் குமரன்விழா திச்செயலு
ஞ் சிறப்பு வாய்ந்த. (௰)

வியம்புனையுந் தோள்வீர வாகுவுக்காத் திருக்கோல வாய்ப்புக்
காட்டி, நயம்பெறவாங் குறித்ததுவு மச்செயலை நாரதன்போய் நறை
த்து மாய்சூழ், புயஞ்சிறந்தார்க் குரைத்ததுவு முரைத்தமுனி புலத்
தேறப் புயல்போன் மேனிச், சுயம்பிரகா சக்கடவுள் குமரேசன்,
சிந்தைத்துஞ் சொற்ற வாறும். (௰க)

இந்திரனைத் தாங்கயிரா வதப்பகடு நாரதன்மு னிறைஞ்சி யேத்
த, வந்தமுனி வரனியானைக் குபதேசப் பொருள்சிறக்க வளித்த வா
றுஞ், சிந்துபுரச் சிறப்பதனை விதிமுறையா ராய்ந்தயிற்கைச் செவ்
வேளன்பாய், வந்தநம னுளந்தேறக் கருணையுட னுங்கவன்பால் வரு
த்த வாறும். (௰உ)

கடவுளர்க ளியாவருக்கு மெண்ணிறந்த முனிவரர்க்குங் கமலப்
புத்தே, ளுடனிருந்து செயந்திபுரச் செயலதனை யுரைத்ததுவு
முடற்று மாயைத், தொடரகற்றுஞ் சுகமுனிவன் சிந்துபுரந் தனிற்
போந்து சுடர்வேற் செங்கை, விடலைதுணைத் தாள்போற்றி யற்புத
வான் கடன்மூழ்கி வியந்த வாறும். (௰௩)

வெண்டிரைப்பாற் கடலிடத்துக் கருங்கடல்போற் றுயினெடு
மால் வியப்பெவ் வாது, பண்டெனற் குமரனுக்குப் பகர்கதை யத்
காதைப் பண்பு வேத. முண்டுபடுத் தியசித்தி வியாதமுனி சுகமுனி
வற் குரைத்த காதை, யெண்டகைய சூதமுனி நயிமிசா ரணியர்தமக்
கிசைத்த காதை. (௰௪)

விரிதருசீர்ப் புகழ்ச்செல்வற் கிருட்டிணசாஸ் திரியெனுநால் வே
தன் வேதங், கருதரிய வடகலையை யாராய்ந்து சொலவதனைக் கருதிச்
செவ்வேள், சரிதையென வுணர்ந்துணராப் புல்லறிவி னுவினிய
தமிழே போலத், தெரிதரத்தென் செயந்திபுர மான்மியமா மெனவு
லகிற் செப்பி னேனால். (௰௫)

வேறு.

நறைகமழுஞ் செயந்திபுரத் தலபுராண நால்வேதம் பயில்கிரு
ட்ண சாஸ்த்ரி கூறப், பொறையினொடு தமிழிசையாற் புலவர் கேட்
கப் புத்தமுதஞ் செவிக்கென்னப் புனைதல் செய்தா, னிறைவட நூற்
கடலையெல்லாந் தாமே நீந்தி நின்றளவி னெஞ்சகத்தி னிலையே கண்
ட, மறையவர்க டிலகனெங்கள் செந்தூர் வென்றி மாலைகவி ராஜகலை
வாணி யானே. (௰௬)

கடலளறு படப்பருகு மெழிலி போலுங் கனபிரபந்த மழை
சொரியுங் கவிதை மேகம், வடவரையொப் பெனுமதுர கவிஞன் வெ
ன்றி மாலைகல்விக் கடலினிறை மதியால் வந்த, திடமுறயாங் கவிசெ
ழுந்தே னொழுகு பாடற் செந்தமிழி னமுதையுண்டு தேவ லோகத்
திடமுடைய புலவர்தமக் கிணையாய் ஞாலத் திருப்பவரும் புலவர்க
ளா யிருக்கின் றாரே. (௰௭)

பதிகமுற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் ௲௧.

முதலாவது: நைமிசாரணியத்திற் சூதமுனிசென்ற அத்தியாயம்.

கோதமன் வசிட்டன் மங்கணன் மலையக் குறுமுனி சத்தியன் வேத, வாதிய ருபத் தம்பன்மால் டவியன் வாமதே வன்விரு பாக்ஷ ன், காதிசெய் பிருகு சருக்ஷரன் சரபங் கன்காத்தி யாயனன் கற்க னேதிலாக் கவண்டன் றாம்பிர * வணிமாண் டவியனென் றிருந்தவ முனிவன். (௧)

வசுமனு மௌன போசனன் புன்னு சனன்மதங் கசன்பரா சரன் சீர், வசுதவு மியன்க ணாதிபன் பரத்து வாசனுங் கிரதன் சிலாத னிசைதரு ருசிய சிருங்கன்சா பாலி யத்திரி வித்துவா னெழில்சேர் சுசிநிக ராஞ்ச மதக்கினி சனியார்க் குவதன்கா சிபனெனுந் தொல் லோன். (௨)

திருந்துமா ணுக்க ரந்தமா ணுக்கர் சிரடி பரவுமா ணுக்க, ரருந்த திக் கற்பின் பன்னியர் தெக்க ணக்கினி முதலமுத் தீகள், விருந்தினர் தங்கள் மரபினி லுதித்த மேலவர் நான்மலற்க் கிழவர், பொருந்து மன் பினர்கள் சூழ்வர ஞானம் பூத்துயர் முனிவர ரடைந்தார். (௩)

அரியமா தவத்து முனிவரர் வரவு மவர்தமைக் காண்டலு மன் பு, பெருகிமா தவர்க்கு மேன்மைசான் மறைகள் பேசிய சவுனக னெ ன்பான், வரிசையான் முகம னெடுத்தெடுத் துரைத்து வாலிய தருப் பையா சனத்தி, ஸிருமென விருத்தி யருக்கிய முதல வினிதளித் தரு ளுமேல் லவையினில். (௪)

கண்டிகை நீறு மெய்யிடைக் கவினக் கட்டுசெஞ் சடையொளி வாய்ப்பப், பண்டருஞ் சுருதிக் கடலெலாங் கடந்த பராசரன் மதலை தாட் கமலத், தொண்டரின் றலைமைச் சூதனென் றோதுந் தோமறு புராணவா லயமாய், விண்டுவின் வடிவாய் வந்தவற் பழிச்சி மெய்ம்ம யிர் புளகுற நின்றான். (௫)

வேறு.

நின்ற சூதமா முனிவனைக் கண்டெழுஞ் சகத்தி
லொன்று மன்பினு ளருக்கிய முதலன வுதவித்
துன்று காதலின் முனிவர ரியாவருந் தொடர்பா
லின்று நீவரப் பெற்றன மினிதென விசைத்தார். (௬)

† அணியாண்டவியன்-ஆணிமாண்டவியனென்பதன் குறுக்கல்விகாரம்.

உரைத்த பின்னரு முவறு புராணத்தி னூடு
பரித்த மான்மியத் தலங்களு மலனூறு பலவும்
விரித்த தீர்த்தத்தி னுண்மையு மேன்மையும் விளம்பத்
தரித்து ளோமின்னும் வேண்டுவ துளதுசாற் றுதுமால். (௭)

சொற்ற காதையிற் றுருக னேடெழுஞ் சூலைச்
செற்ற தன்மையுஞ் செயந்திரன் னகரிடைச் சேயோ
னுற்ற செய்கையுங் கந்தமா தனப்பெய ருடைய
பொற்றை யவ்விடைப் போந்ததுந் தொகைப்படப் புகன்றாய். ()

என்ன மும்மலக் குறும்பெறி சூதனு மெழுந்து
பன்னி ரண்டுகைக் குருபரன் றனைப்பதம் பழிச்சித்
தன்னி ரண்டக னுடமா னந்தநீர் ததும்பச்
சென்னி மேற்கரங் குவித்தன னன்றெனத் தெளிந்தான். (௯)

வேறு.

பொலன்மலைத் தலைநீ டருவிநீர் படிந்து புழைக்கையான் பசுந் தழு மென்றே, யுலகளித் தவள்போங் காலையி விறைவ னுவந்தவட் புணர்தலு நீற்ற, நிலவினிற் கபோல வாடியிற் றிகழு நிழலினைக் கண் டெஞ் சீறி, முலைசுவைத் துயிர்ப்பு வீங்குறும் மதத்துக் கரிமால் யா னைதா டொழுதே. (௰)

வேறு.

தோகைநிழற் குடைக்கவிப்பும் பசுஞ்சுட்டின் மணிக்கொடியுந் துண்டத் தேந்து, நாகமணிச் சுடர்விளக்கு முடன்விளக்கு மரகதப் பொன் னுக மானுங், கேகயத்திற் கதிர்விரிக்கு மிளம்பரிதி போற்குல வுங் கிரண வேல்வி, சாகனகத் தியற்குரைச்கு மொருகுமர னிருசர ணந் தலைக்கொண் டேத்தி. (௰௧)

வேறு.

சூதமா முனிவ னைமிசா ரணியத் தொன்முனி வரர்முக நோக்கி
யாதரம் பெருக விருகையுங் குவித்துள் ளன்பொடு செயந்திரன் னகர
மேதகுங் காதை சுகமுனி வினவ வியாதன்முன் புகன்றது நங்கட்
கோதுவன் கவற்சி வேறிலா தனைவரு மென்றனம்புலப்படவுரைப்பான்

நைமிசாரணியத்திற் சூதமுனிசென்ற
வத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௪௩.

இரண்டாவது: வியாதர் சுகருக்குபதேசித்த அத்தியாயம்.

—❖—

மரகதத் தனித் தாபர நீற்றொளி வயங்கப்
புரிசடைக் குலம் விழுதென வெரிங்கடைப் பொலிய
விருவி னைத்தொடர் பகற்றிய வியாதனென் றிசைக்கு
மொருவன் மெய்க்கதிக் கங்கைமூ லத்தலத் துற்றான். (௧)

நலமயங்கிய வேதங்க டம்மைநான் காக
நிலைமை பெற்றிடப் பதஞ்சடைக் கிரமந்தி னெறியா
வுலக மேழுக்கு நிறந்நியே யுபாபதி சரணக்
கலைபயிற்சியா வியாவையு மகத்திடைக் காண்பான். (௨)

அன்ன வன்சர ணத்தினை யஞ்சலி செலுத்தித்
துன்னு நான்மறைச் சுகனெனுந் தவமுனி தொழுது
சென்னி மேற்கரங் குவித்துமுன் பொருநையின் றென்பால்
மன்னு கின்றதோர் செயந்திநன் னகரென வகுத்தாய். (௩)

சிந்து நன்னகரத்துள சீர்மையுஞ் செவ்வேள்
வந்த தன்மையுந் தொகைப்பட வுணர்ந்திலன் மதலைக்
கெந்தை நின்சொலி னாமு தத்தினை யினிதா
வுய்ந்தி டும்படி செப்புதி யாலென வுரைப்பான். (௪)

குற்ற † முன்றகற் றியசுக முனிவனைக் குறிப்பா
லுற்று நோக்கிநின் னெண்ணநன் றுலெனவொளிகூர்
கற்றை யஞ்சுடர் வேலவன் காதைக ளனைத்து
முற்ற வோதுவன் சோர்வற வுணர்குதி முறையால். (௫)

ஞான வீட்டுக்கோர் திறவுகோல் கடாவுடை நடுவன்
மான சோத்திரக் கதவெட்டி யோகத்தின் மதிப்பா
ரான நெஞ்சகத் திருஞ்சுடர் விளக்கதா மமரர்
சேனை காவலற் குரியதாஞ் செயந்திநன் னகரம். (௬)

உடைந்த தெண்டிரை முகாரம்ப தீர்த்தத்தோர் பொழுது
படிந்து மும்முறை குமரநா யகன்பதம் பணிவார்
மிடைந்த தேவரு முனிவரரியாவரும் விரைவி
னடைந்தன் னார்பதம் பரவிநற் றிருந்தருள் புரிவார். (௭)

† ஐயம் - திரிபு - அறியாமை.

மூன்று வைகலின் முகாரம்ப மூழ்கிவேன் முருகற்
காள்பசோடச விதியினு லருச்சிக்கு மவர்கள்
கான்ற மும்மத வெண்களிற் றிந்திரக் கடவு
ளென்று வந்தனை புரிந்திட வினிதுவீற் றிருப்பார். (௮)

பரியின் வேள்வியி லாயிர கோடியின் பலமு
முரிய நான்முறை யுறுநற்றமெய்க் கதிகளு முலவா
வரிய மாதவப் பயன்களும் வேதவா கமத்துச்
சுருதி யாய்ந்திடு கடவுளர் தருங்கதித் தொகையும். (௯)

சங்கை யேமுத லாகிய நதிகளின் கதியுந்
திங்க ளஞ்சடை யரன்கயி லாயத்தின் சிறப்பும்
பொங்கு மந்திர நிலைதருங் கதிகளும் போய்வே
லங்கை யானெழுத் தாறிலொன் றோத்திட வலமயும். (௰)

வேறு.

மறைகொழிக்குஞ் செயந்திபுரத் தெல்லைநீங் காதிருந்து வாழு மாந்தர், குறைவிறவச் செயலாள ரவர்புரியுந் தருமமொன்று கோடியாமா, லறுமுகனைச் சேவைசெயுங் கண்ணுடையார் கண்ணுடையா ரன்னோன் சீர்த்தி, முறையுரைக்கு நன்னாவே நன்னாவென் றேசுருதி மொழியு மாதோ. (௰௧)

வேறு.

வேதாவுமவ் வேதாவினை வியனுயியி னமைத்த
தாதார்பசுந் துளவத்தனுந் தவத்தோர்களுஞ் சுரருங்
காதார்விழி யுமையாடரு கந்தன்சிந்து புரத்தோ
ரோதார்நமை யென்றேவியத் துரைப்பாரிவை யுணர்நீ. (௰௨)

எவராகினுஞ் செனனம்முத லீருமள வும்மா
தவமாற்றினுஞ் சருகாதினுந் தானம்பல செயினு
முவமானமில் செயந்திப்பதி யொருநாளுப வசியார்க்
கவமாமவர் செனனம்பசு வாமாமிவை யறிநீ. (௰௩)

உரைக்குஞ்சிந்து புரமேயம ருலகம்மவ ணுறவோர்
பரிக்குஞ்சுர ரவரோடுரை பகர்வார்த்தைக ளனைத்து
மிருக்கின்பெரு மிதமந்திர மவரோடினி திருக்கிற்
பெருக்குங்கதி பெறுகின்றதிற பெரிதாமிவை யுணர்நீ. (௰௪)

நாராயணன் முனமேமுன ரவைநிர்சனற் குமர
ராவமு நெனவேசிந்து புராமான்மிய மனைத்தும்
பேராதர வுடன்பேசிய பெருங்காதையி னுட்பஞ்
சோராதுனக் குரைக்கேனிது துணிவாகவுந் துணிநீ. (௰௫)

‡ இருமூவகைக் களைவேரறத் தின்பம்பெற வேண்டி
னொருமூலவகன் முருகேசனை யுள்ளன்பொடு பரவித்
திரையார்வரு ஞரம்பமெ னுந்தீர்த்தமும் படிந்து
கரையேறுதி பெருநான்மறை கரைகண்டியர் கருத்தாய். (௰௬)

உனக்கேசொலும் பொருளாமிந்த வுண்மைச்சரித் திரத்தை
நினைத்தேட்டினி லெழுதிந்தினம் படிப்போர்க்கு கில்லா
மனத்தேசர வனைத்தெம்பிறை வாழ்வாளெனச் சுகற்குக்
கனைத்தோலிடு மறைகான்றெனக் கண்டான்முனம் விண்டான்.

வியாதர் சுகருக் குபதேசித்த வத்தியாயம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௬௰.

செயந்திபுரவைபவமுரைத்த அத்தியாயம்.

ஆங்காரக் குறும்பகற்றி யாதிவே தாகமத்திற் காதியான, வோ
ங்காரத் திருவடிவாங் குமரேசன் செயந்திபுரத் துற்ற காதை, நீங்கா
தைம் புலனுமொன்றாய்ப் பரபோகத் துண்மையென நினைத்து நீயெ
ன், பாங்காக வுணர்தியென வியாதமுனி சுகன்கேட்பப் பகர்ந்தான
மாதோ. (௧)

சிந்துபுர மெப்புரத்துஞ் சிரபுரமா யப்புரத்திற் சிறந்த தீர்த்த
முந்துநதி பலகோடி யவற்றினுக்கு மேலாகு முநியோர் வைகு, மந்த
நக ரிடையிருந்து தனித்தொருமர் திரஞ்செபிக்கி னலகி லாத, மந்திர
த்தின் கதியுதவு மனைத்துயிர்க்கும் போகமுத்தி வழங்கு மாதோ. (௨)

‡ காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம்.

காசியினிற் புனன்மூழ்கிக் களித்தகொல்லா புரியிருந்து காசி யா
ச, மாசில்செபஞ் செபித்தனவு மாகுநியி லாக்கமற்ற வானோர் வை
குந், தேசமுழு வனங்குலவிச் *சயத்தினுற்ற தெத்தாத்தி ரேயன்
றன்பா, னேசமுடன் றினந்தோறு மிவ்வாறு விட்டுதொழுது கிகரின்
மேலோர். (௩)

கருதுகந்த ளேந்திரர்கோ ரக்கர்கொங்க ணேந்திரர்வெவ் காமங்
நீந்த, பெருமையினு கார்ச்சுனர்மச் சேந்திரர்மா தவநிலைமைப் பிர
ாாத, ரருணகிரி நாதரும் புசங்ககுரு நாயகர்பே ராதி நாத, ருரிமை
நவ நாதசித்தர் வானவர்கள் முனிவரர்க ளொழுக்க மிக்கார். (௪)

வேறு.

அருந்திதரு மியமநிய மம்பி ராணு யாமஞ்சிர வணமனன மன
க்கொணுக, நிருத்தியா சனந்தியா னஞ்சமாதி நெறியுணர்ந்து சிவன்
பாத நேசித் தேத்திப், பொருந்துமணி மாமகிமா லகிமா ஞானம்
பூத்தகிரி மாவீசத் துவமே பூண்டு, திருத்வசித்வம் பிராத்திபிரா காமி
யம்மாந் தேர்ந்தவட்ட சித்திபெறுந் திறத்து வாய்ந்த. (௫)

சாற்றரிய சனகர்சனந் தனர்மெய்ஞ் ஞானந் தழுவுசனு தனர்மு
திய சனற்கு மாரர், போற்றுசனச் சுசாதரிவர் முதலா யுள்ள பொரு
வரிய முனிவரர்கள் புணரி சூழ்ந்த, நாற்றிசையா மெண்டிசையின்
வைகும் வேத நான்கினெறி யுளஞ்சேர்த்தி நவையி லாது, கூற்றயி
ருண் டருள்பரமற் பணிந்து நித்தங் கூறரிதாஞ் செயந்திபுரத் தென்
றும் வாழ்வார். (௬)

வேறு.

சொல்லு தற்கரி தானவஞ் ஞானவேர் சூழ்ந்து
கல்லு மட்டறு காமமுன் னறென்றாய்க் கலந்து
மல்ல லஞ்சிந்து புரத்துளோர் தம்முடன் மாறாய்ச்
செல்ல வெண்ணினும் பரிதிமுன் பனியெனச் சிதையும். (௭)

தாக்கு மோகவா காமியஞ் சஞ்சிதக் கட்டு
நீக்கு நீக்கமில் லாவுயிர்த் தொகைதொறு நிறைந்து
தேக்கு மானந்தச் செயந்திநன் னகரெனச் சிறந்தார்க்
காக்க மேல்வருஞ் சனனமு மில்லையா மளக்கின். (௮)

* சயம் - சையம் என்பதன் போலி

தழைத்த கங்கையில் வாழ்திரி வேணிசங் கமத்தி
னுழைத்த நல்வினை செயந்திநன் னகரென வொருக்காற்
குழைத்த வன்பினிற் சொல்லுமக் கதிக்கெதிர் கூறி
யழைக்க வேபதி னறிலொன் றில்லைநா னன்றே. (௯)

வாச பேயமோ ராயிரம் வாம்பரி மகநூ
றூசி லாதுசெய் குநர்பெறு மருங்கதி யனைத்தாம்
வீசு தெண்டிரைச் செயந்திநன் னகர்வயின் மேவ
நேசம் வைத்தவர் தங்கள்பா னித்தமுந் தருமால். (௰)

செயந்தி நன்னக ரிருந்தறந் தினைத்துணை செயின்
வியந்த முன்னுவா மதியெனா நாடொறும் விளங்கும்
பயந்த தீவினை பின்னுவா மதியெனப் பாரிற்
கயந்த ருங்கொலா மியாதெனப் புகலுவன் கருத்தால். (௰௧)

காமு கந்தரு ‡ சங்கிலி காரணமுங் கருத்திற்
பேணுந் தந்திடு § மாலினி காரணமும் பெற்ற
மாமை யொண்கணார் தங்கள்பால் வைத்திடு மனமு
மூழி னுற்பெற்ற பெண்கள்பால் வேட்கையுற் றனவும். (௰௨)

பாலர் வேட்டவப் பன்னியர்க் கிச்சையாம் பண்பு
மால வெம்பத்தி கீயமு மப்பத்தி கீய
மேனு றுதசா திப்பிருங் கிசகர மென்னுஞ்
சீல மில்லதோ ரளவிலாப் பாவத்தின் செயலும். (௰௩)

சிந்து நன்னக ரத்தினி லன்புடன் சென்று
கந்த வேள்சர ணத்துணைக் கமலமுங் கண்டு
முந்து மன்பினிற் றெரிசிக்கச் சடரவன் முன்னம்
வந்த தண்பனிக் குறும்பெனத் தொலைந்திடு மாதோ. (௰௪)

தரும மோமமா தானநற் றமஞ்சமம் வேள்வி
கரும மந்திர மிவைதருங் கதிகளுஞ் செயந்தி
புரமி ருந்துளார் பெறுங்கதி யதற்கிணை புகலி
னுரிய கோடியி னொன்றிலை யெனமறை யுரைக்கும். (௰௫)

‡ இயல்புக்குவிரோதமானபுணர்ச்சி.
§ கவபாதகத்தொன்று.

ஆய நல்குர வாலத்தி யாசன மருந்தல்
மேய வன்பினற் போயதி பானமே விருப்ப
றாய தாங்குற வன்மனை யார்பவஞ் சுருதி
மாயு மென்றிடுஞ் செயந்திநன் னகர்வதி தவர்க்கே. (௰௬)

கரு வாளினு மேவத னாம்பத் தெறிநீர்
வாரி யிற்படிந் தாதெழுந் தையுமன மதித்து
வீர வேற்றடக் காத்தனைத் தெரிசிக்கின் வெற்பி
னாரி பாகனுக் குரியவான் கயிலைநன் னுலவரால். (௰௭)

விலங்க தாயினு மாக்களே யென்னினும் விரிநீ
ரலங்கு சிந்துரன் னகர்வயி னுடலம்விட் டகன்றார்
மலங்கு பாவவெங் குறும்பற மாய்த்துவாட் டிறலோன்
குலங்க ளோடினி திருந்துவே ளன்பரிற் குழைவார். (௰௮)

செல்லு மார்க்கங்க டவறுறச் செயந்திநன் னகரத்
தெல்லை சென்றுளா ரியாவருங் குமரவே ளிருதாள்
மல்ல லஞ்சிறப் பெய்துவ ரெய்துவர் வாய்மைச்
சொல்லி னொன்றனன் சகனுக்கு வியாதனுந் தொல்லோன். (௰௯)

காசி காஞ்சிபொன் னம்பலங் காளத்தி கமலை
தேசு லாவன லக்கிரி செயந்திநன் னகர
மாசி லாலைக்கா வன்புரு டோத்தமா நகர
மோசை மாக்கட லுடுத்தபா ரிடத்திதொன் பதுவும். (௨௰)

அருங்கு ரோசமோ ரைந்துள வவ்வயி னடைந்து
சுருங்கு கூபமும் வாவியுங் குளனும்வான் சுருங்கா
திரங்கும் யாறுமாம் புண்ணிய தீர்த்தத்தி னிறையிற்
பரம்பு மந்நகர் தருங்கதி யாவரே பகர்வார். (௨௰௧)

அளவையின் மிக்குறுஞ் செயந்திநன் னகரிடத் தடைந்த
புவன மியாவையுங் கூப்பிடு மெல்லையிற் புகுந்து
தலவு டம்புவிட் டொழிகுநர் குமரன்சா ரூப
முவமை யின்றெனப் பெறுகுவ ரெனமறை யுரைக்கும். (௨௰௨)

அன்பு தித்திடச் செயந்திநன் னகர்வயி னடைந்து
தென்புலத்தினோர்க் கருத்தியோ டிட்டபி சிராத்த
முன்பு ணர்த்திய § கயைச்சிராத் தத்துமுக் கியத்தி
னின்பு டைச்சத மடங்கென வேதநின் றிசைக்கும். (௨௰௩)

§ ஓர் புண்ணிய க்ஷேத்திரம்.

கடவுளர்க்கரி தாகிய கந்தபுட் கரணித்
தடம லம்புதென் னீர்படிந் தவ்விடைத் தாபி
னுடனி ருந்ததென் புலத்தினோர்க் கூட்டுக வுறுதே
விடுகொள் மாகினும் பிண்டமே யாயினு மீக. (௨௪)

இல்லை யென்றிடி னெள்ளுடன் புனல்கையா லிறைக்க
வல்ல வம்பெறு தாயினு மாவினை மாத்தப்
புல்ல தாயினும் போடுக வில்வகைப் புணர்ப்பா
லல்ல லுற்றிடு பிதிர்க்கள்வே தாவுல கடைவார். (௨௫)

பிரம லோகத்து முன்புள பிதிர்க்களாம் பெரியோ
ருரிய முத்திபெற் றிருப்பரா லவர்குலத் துற்றோ
ரரிய புத்திர ரில்லரே யாயினு மனாத
மரண முற்றன லின்றியே யிடந்துமா யினுமே. (௨௬)

சிந்து தீர்த்தத்துக் கந்தபுட் கரணியாந் தீர்த்தத்
துந்து மன்பொடு படிந்தெள்ளி னிறைத்தவ வசிக்கி
லந்த முற்றவ ரியாவரு மடற்களி றுகைக்கு
மிந்தி ரப்பதம் பெறுகுல ரெனமறை யிசைக்கும். (௨௭)

முத்தி நல்கிய கந்தபுட் கரணிநீர் மூழ்கிப்
பத்தி மைச்செய லார்குமரேசனைப் பரவி
நித்த நித்தமு மாறெழுத் துண்மையை நினைத்துச்
சித்தி பெற்றதென் புலத்துளோ ரியாருஞ்சிந் தித்து. (௨௮)

நமது தொல்குலத் துதித்தவ ரொருவரா னாலுங்
குமர நாயகன் செயந்திநன் னகரிடைக் குறுகி
யமரர் போற்றிய கந்தபுட் கரணிநீ ராடிக்
கமையு டன்றில மிட்டெறி நீர்க்கடன் கழித்தால். (௨௯)

யாமெ லாஞ்சுரர் நாட்டுள விண்ணமு தருந்திக்
காமர் பெற்றித மாயிரப் பொன்னலர்க் காலைப்
பூம ணாறெதிர் புகுந்தடி வணங்கலோர் போந்து
நாம நீடய னவைக்கணெய் துவமென நவில்வார். (௩௰)

நிரய முற்றுளார் தங்கள்வான் முகத்தைநோர் நோக்கி
யுருமெ னத்தெழித் தழலெனச் சீறியுள் ளுடைந்து
கரத லம்புடைத் தந்தகன் முறையுங் கனிய
விரைவி னுலவர் தம்முட னிருந்திது வினவும். (௩௧)

மோன மோடுபோய்க் கந்தபுட் கரணிநீர் மூழ்கி
வான நாடர சளித்தவேள் சரணமே வணங்கி
ஞான காரணச் செயந்திநன் னகரநன் னாம
லீன மாஞ்சன னச்சுமை சுமந்ததென் னென்றா. (௩௨)

மோது தெண்டிரை நீர்வரு நாரம்ப மூழ்கிச்
சீத நீர்க்கந்த புட்கர ணியும்பரி சிக்கச்
சோதி வேற்குமரேசனைத் தெரிசிக்கத் தொன்னூன்
மாத வஞ்சிறி தியற்றுநர் பெறுகுவர் மாதோ. (௩௩)

சிந்து நன்னக ரத்திலே பிறக்கினுஞ் சிறந்த
சிந்து நன்னக ரத்தையே தெரிசனை செயினுஞ்
சிந்து நன்னக ரத்திலே யிறக்கினுந் தெய்வச்
சிந்து நன்னக ரென்னினு முத்திசேர்ந் திருப்பர். (௩௪)

உரைத்த நால்வகைச் செய்கையி னொன்றுபெற் றாலும்
வருத்த மின்றியே முத்திசென் றெய்துவர் வடிவேற்
கரத்த னாணையே பாரத கண்டத்திற் கதிக்கே
பரித்த வேழுநன் னகருள வவற்றின்பேர் பகர்வாம். (௩௫)

திருவ யோத்திமா மதுரைமா யாபுரி தேவர்க்
குரிய காசிமெய்க் காஞ்சியே யவந்திவா னுரைக்க
விரிது வாரகை முத்தியை யளித்திடும் வேதப்
பரிதி வேலவ னுறைந்தருள் செயந்தியம் பதியே. (௩௬)

என்னு தற்கரி தாகிய முத்திபெற் றிருக்க
நன்னு வித்திடு மென்பது சொல்லவென் ஞானப்
புண்ணி யத்திருச் செயந்திமா புரம்புகா தவமாய்
மண்ணா கத்தினிற் பாவகா ரியரென வதிந்தீர். (௩௭)

என்று கூற்றுவ னிரயத்தார் தங்களுக் கிசைய
வொன்று மன்பினொ டுரைத்தசொல் லவர்செவி யுறலாற்
கன்று மாநிர யத்தினை யகந்துமேற் கதிக்கே
சென்று ளாரெனச் சுகனுக்கு வியாதன்செப் பினனால். (௩௮)

ஆதலாற்சிந்து புரமெலா நகர்க்குமே லாமா
லோது மந்நகர்த் தீர்த்தமெத் தீர்த்தத்து முயர்ச்சி
மேத குஞ்சுரர் தங்களிற் குமரவேள் மேலாஞ்
சோதி வானவ னுமென நான்மறை துதிக்கும். (௩௯)

பருவ நாற்மா கப்புனல் காசியிற் படியும்
பெருமை யாதகைப் பதிசிந்து புரமெனப் பேசி
யொருத ரங்கந்த புட்கர ணிப்புன லாடி
மருவி மூழ்குநர்க் கந்தமா தலக்கதி யெழங்கும். (௪௰)

பிறந்த நான்முத லீறுற மனைவையும் பிரியா
துறைந்து தெய்வப்ர யாகையின் மாகமா டேர்க்குஞ்
சிறந்த வான்றிரைக் கந்தபுட் கரணியிற் றிளைத்து
நிறைந்த மூன்றுநா ளாடுநர்க் குங்கதி கிடைக்கும். (௪௧)

முன்னு வோருக்கு முன்னுவோர் தங்கண்முன் னுக
மன்னு வோருக்குந் தினந்தினம் படியுமா தவர்க்கு
நன்ன லந்தரு தீர்த்தங்க ளிருபத்து நான்குஞ்
சென்னி யாறுளார்க் கினியகா யத்திரிச் செல்வி. (௪௨)

எழுந்தொ ராறுநான் கானவுஞ் சுரர்பணிந் திறைஞ்சி
வழுத்து காட்கும நேசன்முன் புண்ணிய வடிவா
யழுத்து தீர்த்தமோ ரெழுந்தகா யாதிநீர்க் கயலின்
விழுத்த கும்பெயர் வேறுகொண் டிருத்தல்வேண் டினனியான்.

என்று நின்றகா யத்திரிச் செல்விவாக் கெடுத்துக்
குன்றெ றிந்தவே லாயுமா முகத்தன்முன் கூற
நன்று ளத்தொடு கூறினை நாமுள மகிழ்ந்தா
மன்ற நிற்குதி யென்னநின் றுண்மறை மாதா. (௪௪)

வேறு.

கந்தன்முன் னுகந்த முகாரம்ப தீர்த்தங் களித்திளம் பிடியரு டீர்த்தங், கொந்தலர்க் கமல விட்டுணா டீர்த்தங் கூறருஞ் சித்தர்தந் தீர்த்த, முந்திய திக்கு வேந்தர்தந் தீர்த்த முறியகா யத்திரி தீர்த்த, மிந்திரப் பவனிக் கேதுவ தாக்கு மினியசா வித்திரி தீர்த்தம். (௪௫)

மேயவெண் கமலத் தரசிதன் றீர்த்தம் வெள்ளைவா ரணத்தருந் தீர்த்தந், தூயமுச் சுடலக் காரிதன் றீர்த்தந் தோமறு குறக்கொடி தீர்த்த, மாய்விலா துயர்ந்த துர்க்கைதன் றீர்த்தம் வயங்கொளி ஞானவா ன் றீர்த்தம், பாவொளி பரந்த சத்திய தீர்த்தம் பகர்தருந் தருமத்தி ன் றீர்த்தம். (௪௬)

முனிவர்க டீர்த்தந் தேவர்க டீர்த்த முபல்பவ நாசன தீர்த்தங் கனியுமா னந்தக் கந்தபுட் கரணி கம்பலே யருதவான் சேது நனிமுழக் கறுத பத்தெனும் கங்கை நான்மறைக் கந்தமா தனத்தின் புனிதமாந் தீர்த்த மாதரு தீர்த்தம் போற்றுசெல் புலத்தனார் தீர்த்தம். ()

வேறு.

அன்ன தீர்த்தமுந் தீர்த்தத்தின் மகிமையு மவண்போய்த்
துன்னி மூழ்குறு முறைமையு மம்முறைத் தொடர்பாற்
பன்ன ருஞ்சிறப் பெய்திய பான்மையும் பரிவாச்
சொன்ன லம்பெற வியாதன்முன் சொற்றவா சொல்வாம். (௪௮)

இந்த மாநிலத் துயர்ந்தவான் றீர்த்தங்க ளியாவும்
வந்த சிந்துரன் னகர்வயின் மரகத மயூரச்
சந்த ரச்சுடர்ப் பரிதிவை வேலொடுந் தோன்றுங்
கந்த வேடிருக் கருணையாங் கதியளிப் பதுவே. (௪௯)

அறந்தி றம்பினோர் தங்கட்கு மறத்துளோர் தமக்கு
நிறைந்த தேவர்க்கு மூவர்க்கு மியாவர்க்கு நெறியா
லுறைந்த வாறுமா முகத்தவ னாவொலா மொன்றாய்ச்
சிறந்தி ருந்தது மாவத ளாரம்ப தீர்த்தம். (௫௰)

வேறு.

எவ்வமில் கவுரி கங்கை யமுனைகா விரிநீர்த் தோயை
கவ்வையோ டிரங்குந் தெண்ணீர்க் கவுசிகை வித்தை யாற்றி
னவ்விடைப் படிந்து ளோர்சே ரரும்பெற லாக்க நல்குஞ்
செவ்விநான் மறைக்கு மேலாந் தேவகுஞ் சரமான் றீர்த்தம். ()

மாதவக் குமரி தோகை வந்தனை பூத பாவை
வேதநற் சுருதி துங்க பத்திரை வியாத பூவை
காதலிற் பலகான் மூழ்குங் கதிதனைக் காட்டுந் தோட்டுச்
சீதளக் கமல வீட்டுத் திருமக டீர்த்த மாதோ. (௫௨)

வாலுவா கினிவி பாதை வைகைதே வகிமெய்ஞ் ஞானங்
கோலிய கண்ண வேணி கோதைதகன் டகையாந் தீர்த்த
நாலுள முறையின் மூழ்கி னோர்க்குள கதியைக் காட்டுஞ்
சீலமா மறைக்கு மேலாய்ச் சிறந்துள சித்தர் தீர்த்தம். (௫௩)

தக்கதோ ருவதி பம்பை தாமசி சரயு நாதந்
தொக்கநீர்க் கம்பை துர்க்கை சுசோபனை பிலற்றி னூடு
மிக்கவான் கதியைக் காட்டும் வேதத்தின் மரபாய் நின்று
திக்கெலாஞ் சிறந்து காக்குந் தேவர்க டீர்த்த மாதோ. (௫௪)

திருமதை தெசரனை வாய்ந்த திருவிக்கை தரபி யாதிக்
கருமகா சினியி னுடங் கதிதரும் கயல விட்டி
னருமறைக் கடவுள் போற்று மாறுமா முகத்துச் செவ்வே
டிருமுனஞ் சிறந்த காயத் திரியெனுந் தீர்த்த மாதோ. (ருரு)

பொன்மய முகரி கோதா விரிபெண்ணை பொருவில் சோதி
வின்மணி தரங்கந் தூற்றும் வேத்திர வதியி னூடு
நன்மைய தனைத்துங் காட்டு நான்மறை முடிவின் மேலாஞ்
சின்மயத் துருவாஞ் சாவித் திரியெனுந் தீர்த்த மாதோ. (ருசு)

விதிசைவ தரணி மந்தா கினிசிலா தலிய வேக
வதிவிரே பதிப லாகை வழங்குவான் கதிக ளெல்லாந்
துதியுட னளிக்கு ஞானச் சுவேதப்பூப் போலென் னெஞ்சப்
பதியினீங் காது மேவும் பாரதி தீர்த்த மன்றே. (ருஎ)

சந்திர பதாகை பன்னு சையுலோ கிதைவி பாதி
சிந்துவா ருதையின் மூழ்குந் திறன்வழா தென்று நல்கு
முந்துமான் முகனைக் குட்டு மோதிரச் செங்கை யான்முன்
வந்தர நாதற் றுங்க யிராவத தீர்த்த மம்மா. (ருஅ)

சரசோதி சோணை யாற்றிற் றண்புனன் மூத்தங் காறும்
பொருநைபூங் கம்பை யாற்றிற் புகுந்துளோர்க் களிக்குங் காட்சி
விரைவுட னுதவுங் கஞ்ச விட்டுளா னகந்தை நீக்கி
யொருதலைக் கபால மேந்து மொருவன்மா தீர்த்த மாதோ. (ருகூ)

அம்பிகை தலங்கண் மூன்று மருள்பொழி கண்ணின் பேராய்ப்
பம்பிய தலமோர் மூன்றும் பரவினர்க் குரிய ஞான
நம்புற வளிக்கும் வேற்கை நாயகன் புயமி ராறுங்
கொம்பினிற் படரு மானின் குறக்கொடி தீர்த்த மன்றே. சுய

வேறு.

இகத்தி லேசெயு மிடும்பை நீக்கியே
மகத்து வப்பரம் வழங்கு மாறுமா
முகத்தன் முன்னரே முழங்கிக் காட்டிவான்
சுகத்தை யீந்திடுந் துர்க்கை தீர்த்தமே. (சுக)

பரவு வார்க்குமுட் பரவ னெஞ்சகங்
கருது வார்க்குநற் கதியைக் காட்டுமாற்
சுரர்வ ணங்குதாட் டோகை யான்முன
நரலை வாய்த்திரு ஞான தீர்த்தமே. (சுஉ)

அல்ல லெபாவையு மகற்றி நீக்கருந்
தொல்லை நூழறத் தொலைந்து வேதநூற்
கல்வி காட்டிச்செங் கமலத் தாளருட்
செல்வங் காட்டுஞ்சத் தியத்தின் தீர்த்தமே. (சுஙு)

தொடர்ந்த மும்மலத் துருசு நீக்குவா
னடங்க லும்படிந் தாடி னோர்க்குறுந்
திடப்பெ றத்தருஞ் செயந்தி யம்பதித்
தடங்கொள் வாரிவாய்த் தரும தீர்த்தமே. (சுச)

இருவினைத் தொட ரிரும்பு தேய்த்திடற்
கரமெ னச்சிறந் தாறு மாமுகக்
குருப ரற்குமுன் குலவிக் காட்டுநான்
முரற ரும்பல முனிவர் தீர்த்தமே. (சுரு)

காம மேமுத லாறுங் காய்ந்துநற்
சோம சேகரச் சுருதி யான்பதப்
பூம லர்க்குளாப் புகுத்த ஞானத்தின்
சேம மாம்பல தேவர் தீர்த்தமே. (சுசு)

கோப மாய்த்தவக் கோதி லார்சொலுஞ்
சாப மியாவுக்குந் தாப மாகியே
நீப மாலையா னிறைந்த சந்நிதிப்
பாப நாசமாய்ப் பரம்பு தீர்த்தமே. (சுஎ)

ஈட்டுந் தீவினைக் கிலக்க மாகவே
மூட்டுஞ் சஞ்சித முடித்து மேலினீர்
சூட்டு வான்பதஞ் சூட்ட மேற்கதி
காட்டுங் கந்தபுட் கரணி யானதே. (சுஅ)

வைய மியாவுக்கு மலினந் தீர்த்தவே
லையன் பாதமா மம்பு யத்துணை
கையி னெல்லிபோற் காட்டு மாதவச்
செய்யு ளாய்வருஞ் சேது தீர்த்தமே. (சுகூ)

முத்திக் கின்பமு விகையு மாய்த்தெரி
சித்துப் போற்றுவார் செனன மாகுமா
வத்துக் காக்கலா னமுத மாகுமாற்
பத்துப் பேரினுற் பரம்பு கங்கையே. (எய)

இந்த்ர சாலமா யெடுத்த மாவிடர்க்
கந்த மாதியில் லாத வாதியான்
சந்த நாண்மலர்ச் சரணங் காட்டுமாற்
கந்த மாதனக் கருணைத் தீர்த்தமே. (௭௧)

கோதி லாததங் குலத்து ளோர்கதிக்
கேது வாகநீ ரெள்ளி றைத்திடு
நீதி யார்க்கெலா நெறியைக் காட்டுமான்
மாதுர் தீர்த்தமாய் வயங்குந் தண் புனல். (௭௨)

ஒருத ரம்படிந் துள்ளங் கையினீர்
மருவு மெள்ளுடன் மறித்து விட்டுளா
ரிருமை யுஞ்சிறந் திருக்க வீசன்று
ளருளுந் தென்புலத் தார்க டீர்த்தமே. (௭௩)

காட்டுந் தீர்த்தமோ ராறு நான்கையும்
பாட்டி னூற்றினம் பகர மூழ்கநீ
டேட்டி லூட்டிக்கொண் டெழுதிப் பூசிக்க
மூட்டு வார்க்குமெய்க் கதியை மூட்டுமே. (௭௪)

சேயந்திபுர வைபவமுரைத்த வத்தியாயம் முற்றிற்று.
ஆ. திருவிருத்தம் ௱௩௪.

நான்காவது: திருவவதார வத்தியாயம்.

சுரும்ப ரின்னிசை முரன்றபண் பாடுதன் டுளவக்
கரும்பு யற்படி வத்திருச் செங்கணுங் கனகத்
தரும்பி தழ்க்கம லாசனத் தன்னல்வா னரசு
விரும்பு வச்சிர பாணிமற் றுள்ளவான் விபுதர். (௧)

அருந்த வங்களு மறைகளு மவரவ ரரசு
மிருந்த மானமு மவுணர்தந் தீமையா லிழந்து
முருந்தின் வானகைக் கவுரியோர் பங்குடை முதல்வன்
பொருந்து வெள்ளிமால் வரைபுகுந் தவனடி போற்ற. (௨)

அன்ன பான்மையை யுணர்ந்திமை யத்தரு சனித்த
கன்னி வார்முலைக் களபமாற் புயந்தொறுங் கமழத்
தன்ன தாலயந் தனைப்பிலா னனந்தொடுந் தழுவிப்
பன்னெ டும்பக லிருந்தனன் யாவர்க்கும் பகவன். (௩)

நெற்றி நாட்டத்த னிந்தவா றமைந்தரு ணெறியை
முற்று நாடிய வமரர்க ளியாவரு முறையிட்
டற்ற மில்லதோர் புணர்ப்பினுண் டாகிய போகத்
துற்ற தன்மையெத் தன்மையோ யாமிவ ணுரைக்கின். (௪)

பரைய நீயுமுண் டாக்கிய போகத்தின் பாரந்
தரைம டந்தையும் பரிப்பரி தாமெனத் தளர்வா
ளுரைசெ யும்பொழு தேழையேம் பையுளுற் றுழைவேம்
விரைய நீக்குதி யெனச்சுரர் குழாங்கொடு விளம்ப. (௫)

மூர லூர்திரு வுள்ளமுங் கனியமுக் கண்ண
னாரருட்கொடு சயனத்தை நீத்தன மாதி
யரி யப்பொறி நம்வயி னீங்கின வெற்றி
யூரி பக்கமும் வைத்தில மதற்கிட னவில்வீர். (௬)

என்று ரைத்தசொற் கேட்டுணர் கின்றவா னிமையோ
ருன்ற னக்குள மூர்த்திக ளெட்டுள வவையிற்
றுன்று கின்றதோர் பார்மக ளாகுமத் தொடர்பான்
மன்ற வைத்தெமைக் காத்தரு ளெனச்சிவன் மகிழ்ந்து. (௭)

நிலம டந்தைபால் வீரியஞ் சேர்த்தனு நிலமான்
பெலமொ டுங்கிவெப் படையவி ரியவழற் பிழம்பைப்
புலன டுங்குற வெயர்ப்பெழ வுடலம்வெய் துயிர்த்துச்
? சுலன னைக்கொளத் தேவர்க ளறைந்திடச் சுமந்தான். (௮)

வெய்ய செந்தழ லுங்கமாட் டாதுள மெலிந்துற்
றைய கோவெனக் கங்கையிற் சேர்த்தனு மவடான்
மொய்யி னூற்பனி மால்வரை யொருபுடை முளரிச்
செய்ய பூஞ்சர வணத்திடப் பெருமிதஞ் சிறந்து. (௯)

விளங்கும் வீரிய காந்தியி னூற்சுடர் மேய
களங்க றுத்தவோ ரெட்டெனு முருவத்திற் கவின்று
வளங்கொ டெண்டிரை பரம்புநீர்ப் புணரிசூழ் வைப்பிற்
றுளங்கி யெங்குமவ் வான்பொரு ளெனத்துலங் கினவால். (௰)

விள்ளு தற்கரி தாகிய வீரிய வெற்புப்
பொள்ளெ னக்கதி ராயிர கோடியிற் பொலிந்து
நள்ளி ருட்பர சமயவோர் நாமற வீட்ட
வள்ளி லைச்சுடர் வேலிறை யாயவ தரிக்க. (௰௧)

? அக்கினி

இரண்டு மூன்றிடத் தூற்றதாற் கந்தனென் றிசைத்துத்
திரண்ட வானவர் கார்த்திகை யாந்தெரி வையரைச்
சுருண்ட குஞ்சியஞ் சேய்க்குறாம் வரைத்துணை முலைப்பா
லருண்டி டாதுநீ ரூட்டுமி னென்றறைந் தவரால். (௰௨)

அந்த வேலையி லறுபத்து நாற்கலை யளித்து
முந்து தோன்றிட வுணர்ந்தொன்பான் மணியின்மொய்ம் பினர்தாம்
வந்து மொய்த்திட வள்ளியை மணஞ்செய்து வரத்தால்
வெந்தி றற்கொடுஞ் சூரராம் வேலிறல் வென்று. (௰௩)

சுரர்க ளியாவருந் துதித்திடச் சுந்தரத் தோகை
திரும ணச்செயல் புரிந்தபின் றேவர்கோன் முதலா
விரவு தேவர்க ளியாரையு முருகவேள் விளித்துக்
கருணை கூர்ந்தவர் தங்கள்பா லின்னவை கழறும். (௰௪)

சிந்து தீரமு மடுக்கலு நதிகளுஞ் சிறப்புங்
கொந்த லர்க்கம லாசனந் திருவருட் குறிப்புஞ்
சுந்த ரம்பெறு மோரிடங் வேலைநீர் சூழ்ந்த
வந்த முற்றசீர்ப் பாரத கண்டத்தி னுறைவீர். (௰௫)

இன்ன செய்கைபெற் றிருக்குமோ ரிடத்தினி திருந்து
மன்னு கின்றமா முனிவர்க்குந் தேவர்க்கும் வையத்
துன்னு மாக்கடங் குழுவுக்கு மருண்மழை சொரிந்து
நன்ன லம்பெற வீற்றிருப் பாமென நவில. (௰௬)

தெரிந்த வானவ ரியாவரு மம்முறை தெளிந்து
விரிந்த போதத்தா லடியரேம் விரும்பினே மேனாட்
புரிந்த மாதவப் புணர்ப்பினு லிதுநீ புகன்று
யருந்த வந்தரு செயந்திநன் னகரின் னருள்போல். (௰௭)

புணரி வான்றிரைத் தரங்கமும் பொற்றையும் பொருப்பின்
மணிவ ரன்றிய சாகர சங்கம வளத்தி
னணிவி ளங்கிய பொருநையுந் திருமக ளன்பின்
குணமு முள்ள செயந்திநன் னகரங்கூ றுறுமால். (௰௮)

திருவவதாரவத்தியாயம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௱௮.

ஐந்தாவது:

செயந்திபுர அத்தியாயம்.

கந்த மாதனப் பிறங்கலின் கனிகளுங் கனிதேன்
சிந்து தென்பொரு நைத்திரு நதிச்சிறப் பனைத்து
முந்து மாதவச் செயந்தியம் பதிவளன் முழுது
மெந்தை கேளென வமரர்க ளிறைஞ்சினின் றிசைத்தார். (௧)

காந்த ளுங்குர வுங்குர வந்தரு கடம்புஞ்
சாந்த முந்தெய்வத் தன்மையும் வல்லியுந் தழுவி
வாய்ந்த பன்மணிக் குவைகளுந் தாங்கிய மரபாற்
சேந்த னொத்தது முத்தமிழ்ச் சந்தனச் சிலம்பு. (௨)

குரவுங் கொன்றையுங் கூவிளந் தணியுங்கூ ரெயிற்ற
வரவுந் திங்களுங் கங்கையுந் தரித்துவா னகிலம்
பரவுந் தன்மையும் பெற்றுல கத்துயிர்ப் பயிரின்
விரவுஞ் சங்கர னொத்தது சந்தன வெற்பு. (௩)

சொல்லு மாழியா னின்றிறைஞ் சப்படுந் தொடர்பா
லெல்லை யின்றள விடற்கரி தாகியீ தெழுந்து
பல்வ ளத்தொடை யானனஞ் சிறந்துபைங் கொடியும்
புல்ல லாற்சிவ னொத்தது சந்தனப் பொருப்பு. (௪)

அறுகும் வன்னியுஞ் சிகரமீ தாதரித் தயில்வே
லுறுகு மாரநா யகன்றனைத் தன்வயி னுடைத்தாய்க்
குறுகு மாரியை யிடனமைத் தும்பர்கைக் கொளலாற்
பிறையின் வேணியா னொத்தது சந்தனப் பிறங்கல். (௫)

சாரு மாதவக் குழுக்களும் விழுத்தகு துணர்ப்பூந்
தருவுஞ் சுந்தர வரம்பையும் வேழமுஞ் சசியும்
பொருவின் மேனகை யும்புடை தலங்கலாற் பொன்னாட்
டரசன் பேரவை போன்றது சந்தன வடுக்கல். (௬)

இரவு நண்பக லும்விழி யிமைப்பிலா திருந்து
கருத ரும்பல வருத்தமு மேதினங் கவர்ந்து
பரவும் வானகக் குறியையமேற் காட்டிப்பண் பில்லா
விரக மங்கையர் போன்றது சந்தன வெற்பு. (௭)

திகழ்கொள் சாந்தமு நானமும் பலபல நிறத்த
பணித ருங்கரி யானைவெண் கோடும்பன் மணியுங்
கனித மின்மருத் தானமுந் தனதுகைக் கொள்ளலால்
வனித மாக்களை நிகர்த்தது சந்தன மலையே.

மறைக்கண் விரிந்நிறைத் தருஞ்சினைக் கையின்மல ரேந்திக்
குழைந்த தாதகத் தடக்கியோர் நிலைமையிற் குறுகி
யழுத்து பேரளி பொழிசெய்லே டளியருச் சிக்கத்
தழைத்த மாதவர் போன்றது கந்தமா தனமே. (௯)

தூங்க லோசையுஞ் செப்பலி னோசையுந் துள்ள
ருங்கு நீர்மைமி னோசையுங் கனியுந்தண் பூவு
மோங்கு காயுந்தே மாவுங்கூ விளமுமொன் றமிழ்ச்சீர்
தேங்கு செந்தமிழ் போன்றது சந்தனச் சிலம்பு. (௰)

மாலி னுந்தியின் விளங்கிரான் மறைமுன்ற வருத்துங்
கோல நான்முக மாகியென் னையுமேற் கொண்டு
பாலி னன்கலை மானையும் பரித்துப்பங் கயத்தோன்
போல நின்றது தென்றலஞ் சந்தனப் பொருப்பு. (௰௧)

கந்த மாதனச் செய்கையைத் தேவருங் கருத்தின்
வந்த வாறனக் குரைத்தன மிகுசிறக் மலர்த்தேன்
சிந்து தென்பொரு னைத்திரு நதிச்சிறப் பினைத்து
முந்து மார்வத்தா லறைகுதுங் கேளென மொழிந்தார். (௰௨)

விரைத்த மான்மத மாமதத் தானமேற் கோலிக்
கரைத்து முக்கனி யவலொடு கட்டியுங் கலந்து
திரைத்து வான்மருப் புடனெடுத் திமைத்தலாற் செயந்தி
புரத்து நான்மறைக் குஞ்சரம் போன்றது பொருநை. (௰௩)

கூன வெண்பிறை சங்கெனக் குரன்டவான் சினையிற்
பேன மின்றரக் கால்பல சடையினிற் பிறங்க
வான வம்புயக் கபாலமா வாய்க்கர மமைத்துப்
போன கம்பெறப் போந்தவர் போன்றது பொருநை. (௰௪)

அரவர் தாங்கிவன் றேமெடுத் தம்பர விடமார்ந்
திரும ருங்குநால் வேதபா ரகர்படிந் திறைஞ்சச்
சாரும் வந்தனை புரிதர யாவருந் தொழுப்
புரமெ ரித்தகண் ணுதற்பரன் போன்றது பொருநை. (௰௫)

செங்க டம்பெடுத் தங்குறிஞ் சித்திணை திரிந்துஞ்
சங்க முந்தியுஞ் சிரலை வாய்க்கரை சார்ந்து
மெங்கு மாசுர மொழித்தலாற் குமரவே ளென்னப்
பொங்கு கின்றது மன்றலந் தென்றலார் பொருநை. (௰௬)

விரவு பூந்துணர் சிந்துசெந் தாதின்மெய் சிவந்து
மருவு கந்தர நுழைந்துவந் தமரர்வாழ்த் தெடுப்பப்
பரவை யேனடந் தொற்றெனச் சூரன்முன் பகர்ந்து
பொருத வீரவா குவைநிக ரானது பொருநை. (௰௭)

வரையி னிற்பிறந் தீசர்தம் மேனியு மாகித்
தரைம கட்குமே லாய்ச்சரா சரமுந் தழைத்துங்
கருவு யிர்ப்பதற் கின்னருண் முழுவதுங் காட்டிப்
பொருவில் கற்புடைக் கவுரிபோ லானது பொருநை. (௰௮)

சங்க மேந்தியுஞ் சக்கரந் தரித்துமா தரையுந்
துங்க முற்றசெம் பொன்னொடு தழுவியுந் துளைப்பூங்
கொம்பு யிர்த்தமா மருதொடித் தகிலமுங் கொளலாற்
புங்க வர்க்கமு தளித்தமா லொத்தது பொருநை. (௰௯)

மலர்ப ரித்தன மேற்கொண்டு சதுமறை வகுத்தில்
வுலக னைத்துமுன் டாக்கிய மாதவத் தொருங்காய்ப்
பலக லைத்திரு நாமிசை பழகலாற் படைத்தோன்
பொலிவு பெற்றது கற்றமா தவர்தொழும் பொருநை. (௨௰)

பலத ருக்களும் வெள்ளைவா ரணமுந்தன் பாலிற்
செலசி றைத்தெழு மீனினங் கண்களிற் றிகழத்
தலைமை பெற்றிமை யோர்தினந் தாழ்ந்திறைஞ் சுதலாற்
பொலனி லத்திறை போன்றதா லான்றநீர்ப் பொருநை. (௨௧)

ஆசின் மிக்குமென் மதுரமாய்ச் சித்திரத் தளவி
யோசை பெற்றுவித் தாரமா யைந்திணை யுடன்று
காச நாண்மலர் பிறப்புடன் காட்டிமெய்க் கலசப்
பூச ரன்றமி ழொத்தது வித்தகப் பொருநை. (௨௨)

மன்னு வெங்கா டங்கவிழ் தேறன்மா றூது
சென்னி யம்புலி மேற்றலை கொண்டுதென் னரங்கத்
துன்னி வானவர் முனிவரர் தினந்தினந் தொழலாற்
பொன்னி நன்னதி யன்னது துன்னுநீர்ப் பொருநை. (௨௩)

வாய்ந்த மங்கையர் மஞ்சளும் வாள்விழி மையுந்
தேய்ந்த பாலொடும் படிகலின் மும்மையுஞ் சிறந்து
ளோங்கும் வாணியும் யமுனையுங் கங்கையி னியல்பும்
பூத்து வெம்பவங் காய்த்தருள் கவிந்தது பொருநை. (௨௪)

தூங்க லின்கவி யானைமேற் கொண்டுகா னுற்றுப்
பாங்கின் முல்லைய சோகமா நீலம்பங் கயப்பூத்
தாங்கி வான்படை விட்டிளஞ் சோலைசார் தனினூற்
பூங்க ழைச்சிலை மன்மதன் போன்றது பொருநை. (௨௫)

கரைக டந்துளங் கலங்கிவான் பொருளெலாங் கவர்ந்து
விரைக லந்தமென் மலருஞ்செந் தாதுடன் விளங்கி
புரனெ டும்பல வணைதொறும் படுத்துல கத்திற்
பொருண்ம டைந்தைய ரொத்தது தத்துநீர்ப் பொருநை. (௨௬)

மணிவ ரன்றிய கடலினாய் மணிமுத்த நதியுந்
திணிகொள் சந்தனச் சித்திர நதியுஞ்செம் பவளம்
பணில முந்திய பச்சைமா நதியும்பாய் பேராய்ப்
புணரி யாடுவான் போவது போன்றது பொருநை. (௨௭)

பொருநை மாநதிப் பெருமிதஞ் சிலசில புகன்றே
முருக வேளெனுங் கடவுளு ருச்சிமேன் முகிழ்த்த
கரத லத்துடன் செயந்திபம் பதிவளன் கந்தன்
றிருவு ளங்களி தரானி மகிழ்ந்துசெப் பினரால். (௨௮)

வேறு.

வரியரவு மணியிமைக்கும் பானருக்கும் வானருக்கு மழையே போல, வரியரவ மணியிலுடன் பாலனமுந் தினங்கொடுத்து மகிழ்வின் ருரு, மிரவலருங் கைந்தருப்போற் றினந்தினமுங் கொடுத்துமகிழ்ந் திருக்கின் ருரு, மிரவலருக் குடைந்துமடந் தையரிடந்தா டொடர்ந்துபடிந் திறைஞ்சு வாரும். (௨௯)

கதிர்வரவு தனைப்பார்த்துக் கொண்டுழவர் பலராடு களஞ்செய் வாருங், கதிர்வரவு தனைப்பார்த்து வாளுழவர் பலராடு களஞ்செய் வாரும், பதிகமுடன் றிருமுறைபார்த் தங்கங்கே படித்தருத்தம் பகர்வின் ருரும், பதிகமுடன் கலைக்குலனை கலையுமெனப் பள்ளிடம் பகர்வின் ருரும். (௩௰)

வேறு.

தளவம் புயந்து மடந்தையெனத் தழைப்பார் தலைவ ருடனாடித், தளவம் புயந்தி னிடையேத் தண்டே னொழுகும் பெருக்காற்றிற், களபந் திமிரம் புயப்பாகர் கருத்துக் கடங்காக் கறைபடிப்போர்க், களபந் திமிரக் குருளைபெனக் களிக்கு மளிக்கா வகமெல்லாம். ()

வேறு.

கரும்புருவச் சிலைமடவார் கந்துகநின் றுடலுயர் களின்செய் மாடங், கரும்புருவச் செலுமதன்மேற் கற்பகப்பூந் தேன்சாய்க்குங் காமர்வீதி, கரும்புருவக் குரிசிலன்னோர் வளர்க்கவளர் கங்குனிறங் கடுக்குங் காழ்த்த, கரும்புருவை செம்மையும்போ ராட்டோதை யெவ்வயினுங் கனைப்ப ருதால். (௩௨)

வேறு.

தானத் தோடு தழுவுமவ் வாரணந்
தானத் தோடு தழுவுமவ் வாரணம்
வானத் தோடு மலையும் வலம்புரி
வானத் தோடு மலையும் வலம்புரி (௩௩)

செல்லு மீனுந் திகழ்தரு மாசினி
செல்லு மீனுந் திகழ்தரு மாசினி
யெல்லை நீக்கு மிருஞ்சுனை யாரமே
யெல்லை நீக்கு மிருஞ்சுனை யாரமே. (௩௪)

காலுந் தேறல் கழனியின் கன்னெலாங்
காலுந் தேறல் கரும்புறு கன்னெலாஞ்
சாலி யூடு செலுந்திரட் சங்கமே
சாலி யூடு செலுந்தருச் சங்கமே. (௩௫)

ஓடை காட்டு மொளிர்வனப் போதக
மோடை காட்டு மொளிர்வனப் போதகங்
கோடு காட்டுங் குளிர்ந்ததண் ணாரமே
கோடு காட்டுங் குளிர்ந்ததண் ணாரமே. (௩௬)

வாலி பத்தின் மதர்ப்புமிக் காகிய
வாலி பத்தினை யொப்பவர் வைத்துள
மூல மட்டுறு முட்கனி யின்பலா
மூல மட்டுறு மொய்ப்பள வண்டெலாம். (௩௭)

வான ரம்பை வுளவயற் கோடெலாம்
வான ரம்பையி னும்மரக் கோடெலாம்
பான லத்திடை பாயுஞ்செந் தேன்களே
பான லத்திடை பாயுஞ்செந் தேன்களே. (௩௮)

வேறு.

வாழ்த்தலை மதகு தோறு மடுத்தலை கொழித்துத் தெண்ணீர்
வீழ்த்தலை நோக்கி நாரை மிசைத்தலை விரும்பி வாளைக்
காழ்த்தலை மூரிவாய் குத்தக் கதிர்த்தலை சாய்த்துத் தண்சாய்க்
கீழ்த்தலைப் பதுங்கி மீண்டு கிளர்த்தலை புனலிற் பாயும். (௩௯)

காரெனத் திரண்டு பால்வாய்க் கன்றுள்ளிக் கனைத்து லாவு
நீரிடைப் படிந்த மேதி நெரிமருப் பூர்ந்த சங்க
மாரமுத் தகுப்பத் திங்க ளமுதவான் முளை யென்னக்
கூரிதழ்ப் பசந்தாள் வாச்க் குவளைவாய் மலரு மாதோ. (௪௰)

வண்டலை யிழைக்கும் வாட்கண் மகளிர்பூங் காமரோதி
கொண்டலென் றயிர்த்துத் தோகைக் குலஞ்சிறை விரிப்ப வாசத்
தண்டலை கிடந்த மேகந் தண்புனல் சொரியுந் தோறும்
விண்டலை யளப்பச் சாலி வேலிமீக் கிளரு மாதோ. (௪௧)

விதியின் மறையோ ரோதும் வேள்விக்கா ரிசைநூல் கேட்டுப்
போதுகொய் கிளியும் பாடற் பூவையு மிழற்றுஞ் சொற்
கேதமின் முனிவர் தேவீர் கேட்டவி நமக்குண் டாமென்
றேதிலாப் பொதும்ப ரெல்லா மிமைப்பிலா திருப்பர் மாதோ. (௪௨)

அம்புரு வங்கோ டாம லயில்விழி யிமையா டாமற்
றம்புரு மூவே மான தானத்திற் கான மூட்டிக்
கம்புருக் களம்விம் மாமற் கனிபவர் பாடுந் தோறுந்
தம்புரு முதலோர் கேட்டுச் சடாமுடி துளக்கு வாரால். (௪௩)

வாளொளி மதியுந் தங்கள் வதனமும் பதண மாதர்
கேளுட னிருந்து செங்கைக் கிசலயக் கவின்செய் யாடி
நீளொளி முழுது நோக்கி நிழன்மதி களங்க மென்று
சாளரங் கதவு சார்த்தித் திங்களைத் தடைசெய் வாரால். (௪௪)

ஒருதலைக் காமத் துற்றோ ரோவியத் தலைமை பூண்டோர்
வருதலைக் குறித்து நோக்கி மாறுருக் கிழியிற் கோட்டித்
தருதலைப் புரிதி ராயிற் றனதனைப் பாக்கு வோமென்
றிருதலைப் பேரி னூரு மிரங்கிநொந் தழுங்கு வாரால். (௪௫)

சுருதியிற் பொருது வென்றோர் தோற்றவர் நிதியம் வாங்கி
விதியிற் குவித்த நேர்ந்து வெள்கிய தன்மை யாலோ
காதகிச் சடையான் றோழன் றன்மையு மாக மேனிக்
கேதமுற் றியக்கர் வேடத் திருந்தன ளளகைக் கோமான். (௪௬)

ஆறெனு மங்கத் தாற்றி லேந்துமா மகத்தின் செய்கை
தேறுநான் மறையோ ரெல்லாஞ் சிறந்துழப் போது மாற்றிக்
கூறிரு வினைக ணீக்கிக் குமரநா யகன்று ளொன்றே
பேறென விதயத் தெண்ணிப் பெருமிதத் தடைவ ரம்மா. (௪௭)

மைந்தர்தஞ் சிறுபொற் றேரும் வாம்பரி மகநூன் முற்றி
யந்தணர் வருந்தின் டேரு மரசர்மாக் கடவு தேரு
மிந்திரன் முதலாந் தேவ ரேறுபொற் கொடிஞ்சித் தேருஞ்
சந்தத மளவ ளாவித் தலைமயக் குற்ற வீதி. (௪௮)

வேறு.

ஏர்க்காலின் றலைபிடிப்பா ரிணைக்காலி லெழுந்தகய லினமார்த் தாண்டன், றேர்க்காலின் வெடிதாவிச் செருக்காற்றிங் களினமுதச் சேறா டாடிப், போர்க்காலிற் போய்வானப் புதுக்காலிற் குடைந்தா டிப் பொழியு மேக, நீர்க்காலின் மீண்டிறங்கி நெடுங்காலின் றலையுல வி நிகழு மாதோ. (௪௯)

வேறு.

மதுநவ பானஞ் செய்யு மாதர்கண் மாட மேற்போய்
மிதுனமல் யாமென் றெண்ணி விண்ணிடைக் கரங்க ணீட்டக்
கதுமெனச் சேடி மார்கள் கல்லென நகைத்துத் தங்கைப்
பதுமயாழ் கொடுத்து முன்னர்ப் பண்பினை யமைத்தல் செய்வார். ()

வேறு.

பழமறை முறைமுறை தெரிதொனியும் பலசுரு தியினிசை பயி றொனியும், விழைவுறு வதுவையின் முழவொலியும் விகலமின் மனு நெறி பயிறொனியு, மழல்விழி மதகய முரறொனியு மயில்விழி யினர் நடமிடுமொலியு, மழையென வுதவினர் தமதொலியு மறிகட லினு மொலி தருமறுகு. (௫௧)

தாளவெண் மணிபல தாமிடுவார் தயரெதி ரெதிர்தலை விலைபகர் வார், பருமணி வயிரமி தென்மறைவார் பவளமி தொளியில தென விகழ்வார், விரைகமழ் பரிமள கலதெனவே பிருதிலை மிதுபண வெ டை மிறுமே, மரிதென விலைபக ரினொருர்கள்கூ றுமலைகள் கடல்பொ ருமணிமறுகே. (௫௨)

பரிதிரை விலையொடு கழிதெரிவார் பணிமணி யொருவயின் விலையிடுவார், கரிநிரை யொருபுடை விலைபகர்வார் கதிர்திகழ் கனகம குரையிடுவார், மருமலி மலையக நிலதெரிவார் வடகலை தமிழுரை முறையறைவார், விரிகலை பலபல விலைதெரிவார் மிருநிக ளளவில தெருவிரையே. (௫௩)

விரிதரு கொடைபொழி வியன்முரசம் வியனுறு வதுவையி னதிர்முரசு, மருவல ரடன்முடி கொளுமுரசு மறையவர் மகமுறை தருமுரசு, மருவிமு மதகய மறைபுனறுய்ய் னைமதியி னடிபடு கடி முரசு, மிரவொடு பகலுமன் மதன்முரசி னிகல்புரி வனசில சிலம றுகு. (௫௪)

சுளுகுகள் விலரமொ டுரையிடுவார் சுடர்விடு மணிமுடி விலையிடு வா, ரொளிவிலா மணிபல தரயிடுவா ருறையிடு சரிகைசெய் துவரிடு வா, ரவியொடு மிரவல ரெதிரெதிர்கூஉ பயணவை தருமச னமுமிடு வார், கனியின ரெழுதிய கிழிபெறுரே கரியொடு திரிபவ ரளவிலரே.

மலர்மக ளரியுடன் வருவதென மணிகெழு சிவிகையி னிடை வருவா, ரிலைதனிர் மலர்சில னடியிடவே யிரவிலின் னெழுமுன ம னைதெரிவார், பலகலை தெரிகுர வரினிடையே பணிவிடை முழுவது முறைபுரிவார், கலைப்பு சதுர்மறை முறைமுறையோ துபர்பெரு கியதெரு வளவிலவே. (௫௬)

வேறு.

இனைய தாகிய செயந்திகன் னகரென விளையோர்
முனைவை வேலவன் முன்னவின் றெடுத்துரை மொழிய
வனைய செய்கையை யாறுமா முகப்பிரா னறிந்தே
யினைய மோர்ந்துபோர் வீரவா குவுக்கினை விளம்பும். (௫௭)

வீர வாகுநீ கேளினை யாவர்க்கு மேலோன்
பேர வாவுறு நின்க்கினை யார்தமைப் பெரிதாம்
பாரி டத்தொகை யவர்தமைப் பதாதியார் தலைவர்
யாரை யும்மிவண் கொணருதி யாலென விசைத்தான். (௫௮)

இசைசெய் வாசக மினைத்தையுங் கருத்திறு லென்லி
னிசைப மொய்ம்பனும் பாரிடத் தொகையையு மேலா
மசைவில் பூதசே னதிப ரினத்தையு மடங்காத்
திசைதொ ழும்பிரோர் தம்மையும் விளித்தனன் சிறந்தான். ()

விளித்த காலையிற் பூதங்க ளியாவுமுள் வியந்து
களித்து வானமும் வையமு மொன்றெனக் கலந்து
அளிக்கும் வல்லிடச் சேடனும் பனமுடி துளக்கி
நெளிக்க நின்றுகூத் தாடின வயங்கொடு நிரம்பி. (௬௰)

வந்த காலையின் மாருதத் தலைவரீ மனத்தின்
முந்து தேரினைக் கடவுதி யாலென மொழிந்தே
யிந்தி ரன்மகன் மான்மக ளொடுங்கடி தெழுந்து
சிந்து ரப்பகைப் பீடமின் றெருவினன் சேயோன். (௬௧)

சீய மெல்லணைப் புறத்தனை நீங்கிச்செங் கதிரின்
பாயொ ளிச்சுடர்ப் பாதுகை மேற்பதஞ் சேர்த்தி
நாய கன்பெருங் கோபுர வாயினி னண்ணி
வாயு வுக்கிறை கொணர்ந்ததே ரேறினன் மகிழ்ந்தே. (௬௨)

தேரி னேறிய வெல்லையிற் செம்பொனி னடைப்பை
மார னேர்தினன் களாசியை வருணனின் றெடுத்தான்
கோர வீரவாள் கூற்றுவன் றனதுகைக் கொண்டா
னேரு லாவிய சாமரை யிந்திர னெடுத்தான். (௬௩)

ஆத வத்தனிக் கடவுளு மமுதவான் றுரைச்
சீத வெண்மதிக் கடவுளுங் கொடையுடன் செல்ல
நாத மிக்கெழு தந்திரி நகங்கொடு தடவி
மாத வத்துயர் தும்புரு நாரதர் வணங்க. (௬௪)

கால மேழுடைக் கடவுளு வர்த்திகை தாங்கிப்
பாலின் வந்திட நிருதியுங் குபேரனும் பரவி
யால வட்டமும் விசிறியுங் கைக்கொள வலராக்
கோல நான்மலர் மாரிதூஉய்க் கடவுளர் குழும. (௬௫)

ஆயி ரக்கம லாசனத் திறையவ னன்னத்
தூய புட்கொடு புறஞ்செலச் சுடர்மணிக் கிரணப்
பாயொ ளிப்பணிப் பாயலான் படரிருஞ் சிறைய
நாய கத்தனிக் கருடன்மீ தேறின னடப்ப. (௬௬)

சுபர்க ளார்த்தனர் முனிவர்க ளார்த்தனர் தொழுதே
நபர்க ளார்த்தன ரார்த்தன மறையொரு நான்குந்
தனையின் மேயபி றறஞ்சிறந் தார்த்தன தரங்கப்
பரவை யார்த்தென வார்த்தன பாரிடப் படையே (௬௭)

தாடிமு முங்கின பேரிகை முழங்கின சொரிகா
ளிடிமு முங்கின போலவான் றந்துபி யிரைத்த
படக மெங்கின பகலைகள் பரம்பின பம்புங்
கடன்முழ முங்கின போலொலி பரந்தா களமே. (௬௮)

வேறு

விண்ணவர் பெருமான் வந்தான் வேனெடும் படையான் வந்தான்
பண்ணவர் மகுடந் தேய்க்கும் பதாம்புயக் கடவுள் வந்தா
னெண்ணலங் குமரன் வந்தா னறுமா முகத்தன் வந்தான்
றண்ணற வொழுகு நீபத் தாமவேள் வந்தான் வந்தான். (௬௯)

கழுமலத் துதித்த ஞானக் கான்முளை வந்தான் வந்தான்
மழையெனக் கருணை யெம்பால் வழங்கிய செவ்வேள் வந்தான்
றழைபுமுச் சங்கத் தேறுந் தலைமைப்பா வலவன் வந்தான்
செழுமறைப் பெருமான் வந்தா னென்றன சின்ன மெல்லாம். (௭௰)

ஆறுமா முகத்துப் புத்தே ளணிகொழு தேரி னீங்கிக்
கூறுநான் மறையு மொன்றுங் கோயிலிற் குறமான் யானைப்
பேறதாந் தெய்வ யானைப் பெண்ணொடு மடியர் வாழ்த்த
மாறிலாக் குமர மூர்த்தி மகிழ்ந்தயிற் றிருந்தான் மாதோ. (௭௧)

வீற்றிருந் தருளி னோடும் வேதற்கும் விளங்குஞ் சோதி
யாற்றலந் திகிரி யாற்கு மமரர்க்கும் விடைமுன் னீந்து
தேற்றுநான் மறைவல் லோரந் திரிசுதந் திரத்தர் வாழ்த்திப்
போற்றவேற் கரத்துப் புத்தேள் புவனிகாத் தளிக்கு நாளில். (௭௨)

செயந்திபுரவத்தியாயம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௨௨௭.

ஆறாவது:
வள்ளியம்மைதிருவவதார
அத்தியாயம்.

அகில மியாவுக்கு மங்கரு வானிபோ
னிகரி லாதுயர் நீடுபொற் குன்றின்வா
யிகலுஞ் செற்றமு நீக்கிய வேமனூர்
தகைமை சேர்ந்த தவமுனி யென்றுளான். (௧)

சங்கு சக்கரந் தாங்கு தடக்கையும்
பங்க யத்திருப் பாரப்ப டரப்பொற்
கொங்கை வெற்பிற் குளிர்ந்த பசுந்துழாய்த்
தொங்க லுக்கிசைந் தோங்குதிண் டோள்களும். (௨)

கண்ணி யுள்ளத் திருத்திமெய் நாசியிற்
கண்ணி ரண்டுங் கவிழ்தர நோக்கியே
விண்ண வர்க்கும் வியப்புற யோகத்து
நண்ணு கின்ற துணர்ந்தன னாகர்கோன். (௩)

கான யாழிசைக் கந்தரு வந்தரும்
வான நாடக மாதரும் வம்மினென்
றூன சொல்லொன் றுணர்த்தல வன்னது
தானு ளத்திற் றரிக்குநிர் நீரென. (௪)

பொருளின் மேற்படு பொற்றுறையிற் போய்த்தவத்
தெருளி னேமத் திருமுனி யென்பவ
னருளின் வைகின னங்கவ னெஞ்சக
மருள நீர்மெய் மாற்றுமென் றேதலும். (௫)

சொற்ற வாசகங் கேட்டிசை தும்புருக்
கற்று ணர்ந்துள கந்தரு வத்தரும்
பற்று நாடகப் பைந்தொடி யார்களு
முற்று ணர்ந்த முனிவன்முன் போயினார். (௬)

கையினி யாழிற் கனிந்தபண் டேறது
மைய நுண்ணிடை யாரடி பேர்த்திடுஞ்
செய்ய தாளச் செயனடந் தேறலு
மையி லாமுனி வன்செவி யார்தலும். (௭)

யோகு விட்டு முனிவர ருள்ளத்தின்
மோக மிக்க மனத்தொடு முன்னர்வான்
றோகை யொத்த சுரிகுழ லாரையும்
பாகி சைத்தவர் தம்மையும் பார்த்துளான். (௮)

நீக்க ரியவொரு நிகரறு யோகத்தின்
பாங்கர் வந்து பரிபவஞ் செய்ததாற்
றீங்கொ டுஞ்சொலிற் சிறிய வெம்மொழி
தாங்கி வேடுவத் தன்மைசென் றெய்துவீர். (௯)

உங்கள் பால்வந்த வொண்டொடி மாதரு
மங்கண் மாநிலத் தற்றமி லாவரைத்
துங்க வேடுவத் தோகைய ராகவு
மிங்கி சைத்தனம் போமின்க ளென்றனன். (௰)

அந்த வெம்மொழி கேட்டது மன்னவர்
சிந்தை நொந்து நெருமந்து மாழ்கியே
மைந்தர் குற்ற மனங்கொடு வல்விடந்
தன்னை யூட்டிற் றனையர்க்குச் சார்வுண்டோ. (௰௧)

ஆபி லுங்கொடுஞ் சாபம் கன்றுமுன்
மேப தொல்வடி வங்கொடு மேவவு
நீயி ரங்கி நிகழ்த்துதி யென்றனுந்
தூய மாதவ னஃதெனச் சொல்லுவான். (௰௨)

கால மூன்று முளங்கொடு காண்பவன்
சீல முன்னித் திகைத்தருள் சிந்தியா
மூல மின்றி முனைந்துக் கயிலையிற்
கோலங் கொண்டிருந் தாளடி கும்பிட்டு. (௰௩)

தாது குத்த கடுக்கையுந் தாதவிப்
போது மொய்த்த புரிசடை யான்றருஞ்
சோதி வேற்கைச் சுருதிபம் பண்ணவன்
காதல் கூர்ந்துல கத்தைக் களிப்பினால். (௰௪)

காக்க வேண்டிக் கடுந்தொழிற் சூர்கிளை
நீக்கி மாதவ னேத்திரத் துற்றுள
மாக்க யத்திரு வள்ளி மணந்தருட்
டேக்கொ டுஞ்சிறந் தான்செயந் திப்பதி. (௰௫)

அரும றைக்கம லாசனத் தந்தனன்
மரும லர்த்துள வத்திரு மான்மகக்
குரிசின் மற்றுள தேவருங் கும்பிடத்
திருவின் வைகிச் சிறந்தருள் காலையில். (௰௬)

OFFICE OF THE REGISTRAR OF C... REGISTERED 20 JUL 1911 MADRAS

யாவ ருந்தொழு தேத்த விருந்துள
மூவி ரண்டு முகத்தவன் மால்விழித்
தேவி மாருடன் சேர்ந்து கருணையின்
மேவி யன்பின் வியக்குமவ் வேலையின். (௰௭)

முருக வேளுக்கு முந்திய தாரமாய்
மருவு கின்ற மதர்ப்பினின் வாய்த்தபே
ருருவ மெய்து முவப்பிற்செவ் வேள்புணர்
பெருமி தத்தி லகந்தை பிடித்துளாள். (௰௮)

இந்தி ரன்மக டன்னை யிழிவொடு
நிந்த னைச்செய்கை யானுண் ணினைந்துவேற்
கந்த னுக்குள காமவி டாய்தணித்
தந்த மில்பக லாற்றினள் போகமே. (௰௯)

அரிவ லக்க ணவதரித் தாடன்மேற்
கருணை வைத்தவை வேற்கரக் கந்தவே
டுருவு ளத்திற் குறிதுணர்ந் தன்னவ
ளிருவ ருள்ளத்தி னெண்ணமுந் தேர்ந்துளான். (௨௰)

விண்டு வின்வலக் கண்ணிடை மேவிய
தொண்டை யந்துவர் வாய்மடத் தோகையைக்
கண்டு மெல்லக் கலங்க முகமனு
னுண்டு காரிய மொன்றிவண் கேட்டிநீ. (௨௰௧)

மாறு மீக்கொண்டு வாரணப் பாவையைச்
சீறி நிந்தனை செய்தனை யன்னதாற்
கூறு கின்ற கொடுமொழிச் சாபத்தி
னூறு சென்றவ ணுற்றிட வேண்டுநீ. (௨௰௨)

தார மாயிரு வோருந் தழுவினீர்
வார முன்வயின் வைத்தன மாதலா
லீர மின்றி யிழிவுரைத் தாயதன்
கார ணத்தைக் கருத்து ளடக்கினான். (௨௰௩)

அன்ன பான்மை யுணர்ந்தன மாதலா
லுன்னி டத்தி லுறுபவ மியாவையும்
பன்னெ டும்பக லாற்றுதல் பண்பெனச்
சொன்னி லைச்சுடர் வேலவன் கூறுவான் (உச)

அலகி லாப்பொறை யாற்றிய மாதர்பா
லுலகெ லாந்தொழு தேத்தவு மும்பர்தாந்
தலைவ னெய்துந் தலைமையு மெய்துவார்
நிலைமை யென்று மறையு நிகழ்த்துமால். (உரு)

இந்த வேலைக்குரித் தாகிய நீயும்வ
சுந்த ரைக்கட் சலாயும் விலங்கின்பான்
மூர்த்தி நித்து முனிச்சிலை வேடர்பால்
வந்து ளச்சிறப் போடும் வளர்தியால். (உசு)

இழிவின் முன்ன ரியற்றுங் கொடும்பவ
மொழியும் பாவ மொழியுமக் காலைநா
மழன்முன் னாக வமரரொ டேகியே
விழுமி தாக மகிழ்ந்துனை வேட்குதும். (உஎ)

என்னு மாற்ற மிசையவன் விளம்பலுங்
கன்னி யுள்ளங் கவலுழந் தோவெனச்
சென்னி தாழ்ந்தனள் சிந்தித்து வைகினள்
மன்னு மானின் வரன்முறை செப்புவாம். (உஅ)

வேறு.

காஞ்சனை யென்னுந் தெய்வக் கன்னிகை கவுரிக் குள்ளம்
வாஞ்சையின் சேடி யாகி மன்னுதல் வேட்டு விந்தைப்
பூஞ்சிலம் படித்து மானிற் பொலிவுறுங் குழவி யாகித்
தேஞ்சுரும் பரற்றுங் கூந்தற் றெரிவைவர் துதிக்கு மப்பால் (உகூ)

வளனுற வெடுத்து நீங்கள் வளர்ப்புறு மெல்லை நோக்கி
யளவறு முவப்பாற் செவ்வே ளவ்வவ டன்னை வேடர்
கிளையுட னளிக்கு நீராற் கிடைத்தநுஞ் சாப நீங்கு
முளமகிழ் பூத்துத் தொன்மை போலவுற் றிருத்தி ரென்று. (ஙம)

முனிவரை யுரைத்து முன்போல் மோனத்தா ரிருப்ப வன்னோ
ரனைவரு முணர்ச்சி நீங்கி யரிவையர் மருங்கிற் செல்ல
வினையுளாந் தவல மெய்தி விந்தையஞ் சாரற் பாங்கர்
கனைகுரல் வேட ராகக் கறுமெனப் போந்தா ரன்றே. (ஙக)

கந்தன தருளாற் றெய்வக் காஞ்சனை வனப்பு வாய்ந்த
சுந்தரச் சிறுமா னாகத் துங்கலாத் தவழுங் கோட்டு
விந்தையஞ் சார லுற்ற வேலைமால் விழியிற் றோன்று
மந்தமா னருண மானி னையின்வயி றுற்ற தன்றே. (ஙஉ)

கருப்பத்தின் முதிர்ச்சி காட்டிக் காறளர்ந் துடலம் வீங்கப்
பொருப்பகத் துடைந்து பாரம் பொறுக்கலா துழன்று வாடி
மருப்புயர் பகங்காச் சுற்றி மலைச்சிறு குறவ ரியாரு
மிருப்புறுஞ் சீறூர்ப் பாங்க ரீற்றுளைந் திட்ட மாதோ. (ஙங)

சென்றமான் சுழன்று பார்க்குஞ் செய்கையுங் கருப்பந் தாங்கி
யொன்றிய வயர்வுநோக்கி யுயர்தவான் சிலைவி டாத
குன்றுறை வேட ரியாருங் கொம்மென வெழுந்து மானுக்
கின்றுணை யாகப் போற்று மென்றன ரதனைச் சூழ்ந்தார் (ஙச)

எழுமெழுந் தரற்றுங் காலொன் றெடுத்தடி பெயர்க்கு மீள
விழுமிருந் திசையைப் பார்க்கும் வெருண்டுதன் மேனி நாக்கொண்
டுழுநெடு மூச்சு வீங்கு முலப்புறு தரற்றுஞ் சோலைப்
பழுமர மூட்டிற் சாயும் பரிவுறும் படுக்கு மாதோ. (ஙரு)

அருணமா னிவ்வா றுள்ளத் தயர்வுகொண் டிரங்கி ஞானத்
தருணவில் வீச வீங்குஞ் சராசர மனைத்து மீன்ற
பொருணவில் வேதம் பூத்துப் பொருவருங் கற்பு வாய்ந்த
குருமணி யதனை வல்லிக் கொம்பென வீன்ற தம்மா. (ஙசு)

மானிடைப் பிறந்த தெய்வ மணியினைக் கண்டு விந்தைக்
கானவர் குழாங்கொண் டுள்ளக் களிப்பெனும் புணரி மூழ்க
வானவப் போழ்து மானு மரிவைகாஞ் சனையும் மானைத்
தானனித் திருந்து ஞானத் தண்ணளி பெற்ற வாற்றால். (ஙஎ)

எண்ணிய வெண்ணி யாங்கே யாவர்க்கு முதவும் வேதப்
புண்ணியக் கவுரி வைகும் பொற்புறு புவனந் தன்னி
னண்ணினள் கவுரிக் குள்ள நாடருஞ் சேடி யாகி
விண்ணவர் முனிவர் வாழ்த்த விருந்தன டவத்தின் மிக்காள். (ஙஅ)

அடுக்கலிற் சொரதர் கூட்டத் தனைவரு மன்பு மீதூர்ந்
தெடுத்துடன் கொடுபோய் விந்தைக் கிறைவனைத் தொழுது வேண்டிக்
கொடுத்தன ரன்னான் வாங்கிக் கொண்டனன் சுற்றத் தோடுந்
தொடுத்தபே ரன்பின் மூழ்கிச் சொல்லரு முவகை பூத்தான். (ஙகூ)

மனமகிழ் சிறந்து வேடர்க் கிறைமகிழ்ந் திருந்த மான
முனிவரெழுந் திலங்கை வேடர் முகமலர்ந் தன்பு கூறத்
தனிமகிழ் வின்றித் தோன்றுந் தார்க்குழுங் கூந்தற் செவ்வாய்க்
கனிமொழி யனைப்பின் செல்வி கவ்விறற் றிகழினர் சொல்வான். (௪௰)

உருவத்தின் வனப்பு வாய்ந்த வொண்டொடி கலைக்கு மூத்த
திருவெற்பின் களபக் கொங்கை மின்னலம் பருகத் தக்கான்
றருமத்தின் றலைமை யாய்மூ தண்டத்தி னுயிர்கட் கெல்லாங்
கருமத்தின் செயலாய் நின்று காக்குமோர் கடவு ளாமால். (௪௧)

இவ்வணை முரைத்து வேடர்க் கிறையவ னிரங்குந் தெள்ளியிர்ப்
பல்வளி மடித்த பாலின் பரப்பும்வா னகமும் போற்றுஞ்
செல்வவா யமுதத் தீஞ்சொற் கோற்றொடிக் கினிய நாமஞ்
செவ்விதின் கமைந்த வள்ளி யென்றனன் சிறப்பின் மிக்கான். (௪௨)

செய்யதோர் நாமஞ் சூட்டித் தெரிவையைத் தனது வேடத்
தையறன் கரத்தி லுய்ப்பத் தன்மனை சிறப்ப வாங்கிக்
கொய்ம்மயிர்க் கவரி மேய்த்த குடிலிடைக் கொடுபோய்ச் சூழ்ந்த
வையக மளிக்குந் தாயை மகவென வளர்க்கின் றாளால். (௪௩)

கடவுளர்க் கமுத மன்ன கனிமொழிப் பவளச் செவ்வாய்
மடவரல் வசந்த கால மென்னுமோர் மடந்தை யாண்டாச்
சுடர்மணி விளக்கம் போலத் தோமறு வடிவம் வாய்ந்து
முடிவிலா மறைகட் கெட்டா முதல்வியா யிருந்தான் மன்றே. ()

கொல்லையங் குறிஞ்சிக் கோட்டுக் குறவர்தங் குடிசி றப்பன்
மல்லலஞ் சிறப்பின் மேலாம் வள்ளியுஞ் சரற்கா லத்துச்
சொல்லுமுற் பக்கத் தற்ற சுடர்மதி போன்று நன்று
வில்லிடை மலரின் மாரி யிரவுமண் பகலுந் தூற்ற. (௪௫)

அண்டர்தம் முரசி னார்ப்பு மருவிநீர் சொரிபு மார்ப்புந்
தொண்டக முழவி னார்ப்புஞ் சூழ்தரும் வரைப்பா லுற்ற
தெண்டையந் தடங்கட் செவ்வாய்ப் பின்னையைப் பிள்ளை யென்று
ஒண்டரு திதியம் வாய்த்த திருவில விளக்கம் போன்றாள். (௪௬)

பெண்ணலங் கனியப் பேதை பெதும்பையுங் கடந்து வேற்கைப்
பண்ணவர்க் கினிய மங்கைப் பருவம்வந் தடையுங் காறும்
வண்ணவிற் கிரதர் வேந்தன் மைந்தரில் லாத சோகத்
தெண்ணமுள் ளொழித்து மாதை யினிதுடன் மகிழ்ந்து காத்தான்.

அனைத்துல களிக்குந் தாயை யன்புடன் வளர்க்குமெல்லைத்
தினைப்புனங் காக்கு மற்றச் சேடிய ரிவளோ வாவென்
றினக்கிளி கடியப் போது மென்றன ரிவளு மேனற்
புனத்திளங் கிளிக ளோச்சப் போந்தனள் பொருவி லாதாள். (௪௮)

மாதரு மிவளு மேனல் வனத்திடை யிருத்தல் கண்டு
காதலி னரம்பு பாடுங் கந்திரு வத்த ரிம்மான்
பாதபங் கயத்தி னாலே பருப்பத முன்செய் துள்ள
நிதகன் றளவி லாத சிறப்பினைப் பெற்ற தென்றார். (௪௯)

அண்டகோ டிகட்குந் தாயா மணங்கினை மகளாக் கொண்ட
வண்டிருங் குழற்கி ராத மடந்தைமா தவத்தை யெம்மால்
விண்டிடற் கெளிமை யன்றால் வேடருக் கரசன் வாழ்க்கை
கொண்டபே றன்றி யுள்ள குலமெலா முயர்ந்த வம்மா. (௫௰)

கொன்னிலை நெடுவேற் செங்கைக் கொற்றவ னரிது நோன்பிற்
பன்னெடுங் கால மாற்றப் பண்புறு தவத்தின் பான்மை
மின்னெனும் வடிவந் தாங்கி வேடர்தம் மரபி லுற்று
லன்னவர் தவத்தை யெம்மா லறையலாந் தகைமைத் தன்றே. (௫௧)

என்றுளம் வியப்ப மீதூர்ந் தெடுத்தெடுத் துரைத்து வான்றோய்
குன்றிடத் திருந்த ஞானக் குருமணி விளக்கைக் காம
வன்றனை யறுத்த மூத்த முனிவரர் வழுத்தி னாளுஞ்
சென்றவ ணிருப்ப மாதுஞ் சிறப்பின்வீற் றிருந்தா ளன்றே. (௫௨)

வள்ளியம்மை திருவவதாரவத்தியாயம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௨௱௬.

ஏழாவது

சுவாமிவள்ளியம்மையிடத்திற்சென்றஅத்தியாயம்.

முதிருந் தினைமொய்த் தயர்கொல் லையெலாங்
கதிர்கண் டுகவன் கொடுகென் னியர்தா
மிதனின் றபுளி யானைவு மின்குரலா
லதிரும் படியோச் சினரவ் வரையின். (௧)

தினைகாத் துளசே டியரோ டெளியேன்
வினைநீக் கியவேள் புணர்மின் னனையாள்
மனைநீத் துமடந் தையரோ டுசெலா
நனிவேட் கையினு டினளே னலையே. (௨)

புள்ளம் பொடுமோர் பெயபொற் றொடியார்
கள்ளன் பொடுபோ யிகனு டிமனத்
துள்ளன் பொடுகூ டியுறைத் துசெல்வாய்
விள்ளுந் செயலா லயம்மே யினளால். (௩)

அக்கா லையிலத் தரவா னெறியான்
மைக்கார் முகிலா மயில்வா கனவேள்
புக்கா னதுபோர்ந் துபுனத் திடையே
மிக்கா மொழியெய் துதளேங் கினளால். (௪)

பிறைபா நுதலா ளியபே ரழகு
மறைவா னிளைபோர் சொலும்வா சகமு
நறையார் மலரோ தியுநான் மலரும்
கறைபா ரயில்வே ளிறைகண் டனனே. (௫)

கருணைக் கடலா மெகன் னிரையு
மருணத் திருமே னியுமா றுமுகத்
தருணத் தலர்தா மரைநான் மலரின்
வருணத் தையுநோக் கினன்மான் விழியாள். (௬)

பிடிபோ னடைபெற் றவளென் னமுதை
வடிவே லிறைகண் டுமகிழ்ச் சியினாற்
படைவேள் கணைபாய் தொறுமா விரகக்
கடன்மூழ் கியிருந் தயர்கை யுறவே. (௭)

அல்லோ குழலோ வதியேன் மதவேள்
வில்லோ நுதலோ விரகந் தருவாள்
சொல்லோ கனியோ வமுதோ விதழோ
பல்லோ தளவோ வுவமிப் பதுவே. (௮)

மானோ கடுவோ வடுவோ கயலத்
தானோ மதனன் சரமோ கருமைத்
தேனோ குவளைத் திருநான் மலரோ
மீனோ விவள்வாள் விழியே யிணையே. (௯)

புருவத் தினையோ பொருவேள் சிலையோ
விருவெற் பனையோ வணைவார் முலையோ
வுருவத் தியலோ மயிலோ வுழைமேன்
விரகத் துறமூட் டியமெல் லியலே. (௰)

என்று மமுகே சனிரும் பனியார்
குன்று னதிழிந் தருளிர்ந் தநுறு
மென்று தகுசோ லையின்மெல் லியன்முன்
னின்று னவளோ டுநிகழ்த் திடுவான். (௰௧)

வேயார் வரைமீ துபுனத் திலுளா
ரீயா ரிடமே தகிளைப் பெறுமோர்
தாயா ரருட்டந் தையரார் பவள
வாயா ரமுதே வறியேற் குரையாய். (௰௨)

கொன்னே குறமா தர்குழூஉ வாறு
னென்னே புனைவேட் டுளனியாண் டுளனோ
நன்னே யமொடென் முனவிற் றுதியாற்
பொன்னே யிலதாய் பொருவேள் கணையே. (௰௩)

வாளா வொருகன் னிகைமா தரெனிற்
கேளா யிவணீ கிரணத் தருபொற்
றோளா திருசுந் தரமால் வரைமே
னாளார் தொடைசூட் டுவனன் குறவே. (௰௪)

மன்றற் றொடைசூட் டுதிமான் மகனீ
யென்றற் புதமோ டுசெவ்வே ளிசையக்
குன்றக் குறமான் குமரன் புயமே
லொன்றக் கணிரண் டுமுறக் கவிழா. (௰௫)

உள்ளத் தினில்வே ளொருநாற் படையு
மெள்ளச் செலவிட் டனன்மெய் வியராத்
தள்ளற் கருநா ணொடுதா னகையா
வள்ளத் துணைவார் முலைவாய் திறவா. (௰௬)

விந்தைக் கிரிவேல் தனளித் தருள்வோ
னந்தக் கிரியா யிழையா ளருடாய்
சிந்தைக் குரியீர் சிறியேன் பதியோ
சந்தப் பொழில்சூழ் தருதாள் வரையே. (௰௭)

அடியேன் சிறுகன் னிகையா குமெனத்
தொடிவாய்த் தகைசொற் றலுமன் னவள்பாற்
கடிவாய்த் தகடம் பன்மிகுந் துயரா
லுடன்வாஞ் சையிநோக் கினனென் றுதலே. (௰௮)

அன்பா லறுமா முகவே ளருண
யின்பால் விழிவைத் ததைமீட் பரிதா
யுன்பா லருள்வைத் தனையொன் றுதனி
யென்பால் வருவைக் கிசைவா யினியே. (௰௯)

எனவா றுமுகே சனியம் புதலுங்
கனிவாய் மொழியின் பொருகோ தவியாத்
தனிநா யகரே தருமந் தவறு
முனியா தருள்வீ ரெனவே மொழிவாள். (௨௰)

குறவேர் களனித் திடுகோள் கையினால்
வரைவா ருடன்வாழ் வழுவே மரபாங்
கரவா லொருகா ளையர்கை யுறலாற்
றரைமீ துயர்கள் ளிசையுந் தவறும். (௨௧)

வேறு.

எனையரு டந்தை தாய ரிவ்வருள் பெற்றோர் தம்பால்
வினவுதி யுனது தோற்றம் வியப்புற நோக்குங் காலை
யனையவ ருதகத் தோடு மனிபனை யமுல்சான் றுதக்
கனமுற சோதை யார்ப்பக் கடிமணம் புரிவிப் பாரால். (௨௨)

அற்புட வினைய வாற்று லருண்மணம் புரிதி யாயிற்
கற்பினின் முதன்மைத் தாய கன்னியு மியானே தந்தோர்
பொற்புறு குலங்க ளெல்லாம் புனிதமா மெனுஞ்சொற் கேட்டுச்
சிற்பர குமர மூர்த்தி திருவுள மகிழ்ச்சி பூத்தான். (௨௩)

கன்னியுங் கயிறுங் கும்புங் கவண்வலை முதல யாவும்
வண்ணவிற் றழும்புங் காட்டும் புயமலை வானோர் வேந்தன்
றிண்ணிய குறவர்க் கெல்லாஞ் செய்வினை காட்டுங் காலை
யெண்ணினுக் கடங்கா வேற்கை யெம்பிரான் சென்று கண்டான். ()

சுவாமிவள்ளியம்மையிடத்திற் சேன்றவத்தியாயம் முற்றிற்று.

ஆகதிருவிருத்தம், ௩௰.

எட்டாவது.

வள்ளியம்மை திருக்கலியாண அத்தியாயம்.

பலக்குறும் பெறியும் வியாதனை நோக்கிப் பலகலைச் சுருதியா ராய்ந்த, தவக்கட லனைய சுகமுனி யுள்ளந் தண்ணளி சுரப்பவிற் றிருந்து, சுவைத்தமிழ் முனிவற் குரைத்தவச் சுடர்வேற் சோதியா னுவன்கதை யனைத்துஞ், செவிக்கினி தமிர்தா மெந்தைகே ளடியேன் செப்புவ துண்டுசாற் றுவனால். (௧)

கந்தநின் வதனத் தாமரை மலரத் ததும்புபே ரானந்த வெள்ளஞ், சிந்தனைச் சனன மரணவே ரறுத்துச் செங்கண்மால் பங்கயன் காணு, மந்திரப் பொருளாஞ் சிவனிரு சரண வாரிச மென்னுமோர் வீட்டின், முந்துறச் செலுத்து மென்றபான் மையினுன் முத்தலை யிருதலை வேலோன். (௨)

வேடருக் கரசன் முன்குமரேசன் மேவிய தன்மையுங் கோதற் றுடுதற் கரிதாங் குமரவேள் முன்ன நவின்றது நகைமுகத் தவர்வாய், மாடகத் திவவி யாழ்மொழிக் களப வனமுலை மகளையீந் ததுவுஞ், சூடகத் தளிர்க்கை மாலைசூட் டியது மெந்தைநீ சொல்லுக வென்றான். (௩)

என்றலும் வியாதன் சகன்முக நோக்கி யிம்பரு மும்பரும் வணங்கக், குன்றகம் பிளந்த நெட்டிலைச் சுடர்வேல் கொண்டவன் காதையி னன்பு, சென்றுள தனக்கிங் காதலாற் குமரன் சீர்த்தியைப் புகன்றவ ரியார்க்கு, நன்றுணர் தருமம் பொருளின்ப மோட்ச நன்று மா லினிதுகே ளவில்வாம். (௪)

முகில்வயி றடையக் கூழுடற் கருங்கான் முசுக்கலை புலவுமால் வரையிற், றகைகெடுஞ் சிலைக்கை வேடர்கோ மகன்பாற் சுழமறை முறைபிடு மிருதாட், குகன்முக மாறும் புயங்களீ றாறின் கோலமுங் கரந்துமா னுடன்போ, லகமகிழ் சிறப்பச் சென்றுதின் றெறிவினர்க் கரசனே யொன்றுரைக் கலுறவாம். (௫)

உன்னிடத் துதித்த மகள்வயி னார்வ முற்றன மளிக்குதி யென்ன, வன்னவிற் கரத்துப் புளிஞர்கோ னுழன்று மகிழ்சிறந் தெம்மலை காக்குங், கொன்னிலைச் சுடர்வேள் முருகனுக் கிவளைக் கொடுப்பதை யன்றிமுத் தேவ, ரென்னிடத் திரந்து கேட்பினுங் கொடுப்ப தில்லைநீ போவென விசைத்தான். (௬)

அந்தவா சகத்தே ழிரு செவிக்கு மமுதமுற் றவமெத்தன வந்தநாட், கந்தவேள் மகிழ்ந்து மானிடைப் பிறந்த கன்னிகை மேவ லம் புனைந்தநாட், சிந்தையின் விரைந்து சென்றில னரவர் தெரிகுற மெய்வளந் தேற்றி, யிந்திர சாலம் போலொரு தருவா யிராமதே ரெப்பிரா னின்றான். (௭)

தாருவின் றோற்றங் கண்டபான் பயந்த தன்னைமு வொழுகுபுங் கூந்த, ஞரியும் பெரியாச் சேடியர் தாமு ணாடரு முனைத்திலற் புதமாய்க், காரிருட் படலங் கவித்தகற் பகத்திற் கவிஞ்செறி நிழலிடை யினிது, வேரியத் தென்ற றையர வுள்ளம் வியப்புறத் துயிறுமேல் வையியில். (௮)

குறவரும் குறவர்க் கிறைவநு மினிய தொள்ளைய ராகமோ வளித்த, விறைவிநங் குறிஞ்சி விட்டகன் றேன விளம்புனத் தினி தமிற் றிருந்தா, ளுறையிடந் தேடி நாடியு மெய்ன வுற்றன ரற்ற மின் றயர்ந்த, கறைமலர் பொழுதுந் தாருவின் றோற்ற காடியின் றெறினர்கோ வில்லான். (௯)

கதிரவன் றடந்தேர்க் கவினமா விலகக் கற்பகத் தாருவி னயர் ந்து, முதலவரை யிடத்து வந்தா ரணார முன்னுறின் மாயமா மென் றே, பதிர்குரல் வேடர் தங்கோ னோக்கி யருந்தருக் குறைபுயி னென் று, சதிருட னுறைப்ப வம்மொழி கேட்டுச் சண்முகன் றருவுருக் கரந்தான். (௰)

மாமுக நடந்து வான்றரு வளர வாய்மெய வடிவெடு வேலோன், றுயமென் குமுந்தா மைந்தனைப் பகைத்தத் தாறுமோர் மராமு வெடுத்தும், காமுற வளர்ந்து கானவர்க் கொளிப்பக் கானவர்க் கரசன் றன் மகளைத், தோமறு குறிஞ்சிப் புறக்குடி லகத்துச் சுமக்கொடு கடந்துசென் றிருந்தான். (௰௧)

இருந்தபின் றொருநா ளேனலம் புனத்து னிர்க்கவித் துவசி தம் மடந்தை, கருந்தட் மெடுங்கட் சேடிய ரோடுங் கானிடைச் சென்றுாய் கண்ட, பெருந்தன்மா மரம்போன் முதலவரை யகத் துட் கண்டில மென்றுபே துற்று, வருந்தினர் போலத் திரிந்துதன் புனத்து வைகினள் வைகுமேல் வையினில். (௰௨)

மரனுருக் கரந்து குருபரன் புனத்து மான்மக டனக்குள மயங் கிச், சரமெடுத் தெறியு மதனனுக் குடைந்து சஞ்சலித் தென்னாம் வேமுரப், பொருவருங் கரடக் குஞ்சர முகத்துப் புங்கவற் றொழு தனின் றிரந்து, பருவரற் கெடவெ மேழையேற் குனது பார்வையி னருடர வேண்டும். (௰௩)

என்றலுங் கடவுட் குஞ்சர வதனத் தெய்வதங் கணிமுக நோக்கி, யுன்றன துள்ளத் தெண்ணமியா தென்றே யுரைத்தலுங் குமரவே ளிசைப்பான், குன்றவர் தலைவன் புதல்வியே லன்பு கொண்டதாற் றெண்டிரைக் கடலுந், தென்றலுங் கன்றுங் காமவேள் கணையுந் தெண்ணிலா வம்பகைத் தனவால். (௰௪)

யாவர்தம் மிடத்து முறுகுறை யகற்று மெம்பிரா னகற்று வை யிகாய, சேவக னிளமான் கன்றிலுக் குடைத நீர்ப்பதற் கெவ் ளினை யாகி, மரவடிப் புரையுங் கண்ணியுள் வெருவ மத்தமா விபமே யின் வடிவாய், மூலக்கைக் கடங்கான் றன்னவன் முன்னர் முழக்கொடு வருதல்வேண் டினனால். (௰௫)

அன்னமென் னடைமுன் வந்தனை யாயி னவ்விடை யளியனு மடைந்து, துன்னுவ தனது தோற்றத்தில் வெருவித் தோகையு மவ்வயிற் பொருந்தும், வன்னமென் முலையு மார்பகந் தழுந்து வாயமிர் தந்துளி யருந்திக், கன்னிபொன் னுடலம் புணர்ந்துவிற் கழைப்போர்க் காமனு டகமுமா டுவனால். (௰௬)

காமனாற் பயிற்சி நடந்தபின் வேதக் காரிகை யைத்தமல் சான் றுந், தாமரைத் தலைமீ திருந்தனான் முகனுந் தண்டுழாய்ப் படலை குவ னென்று, பூமல ருச்சித் தைங்கரத் தொழுது போந்தருள் புரி கென விடுத்தான். (௰௭)

கற்றையஞ் சுடர்வேற் றுணைவனுக் கடங்காக் காதல்கள் டைங்கரக் கடவு, ளற்றமின் றனத்தி லார்வமீ தூர வடுக்கலிற் குறச் சிறு மடந்தை, சுற்றுறு மடவா ருடன்வினை யாடுந் தூமலிற் கரு வரை கடுப்பக், கொற்றவெங் கரடக் கெழ்புரிக் கோட்டுக் குஞ்சர வடி வொடுஞ் சென்றான். (௰௮)

நின்ற மாமக ளெஞ்சக் குறிப்பினால்
வென்றி வேட்டுவர் வேந்த னுணர்ந்துதான்
கன்று மாமொழிக் குள்ளக் கவலொரீஇ
யொன்று மன்பி னுளத்துடன் சொல்லுவான். (௩௫)

நமது தொல்குல நாயக னும்பிற்
குமர வேளென வுள்ளக் குறிப்பினு
லமைய நோக்குமுன் னுறலிக் கான்புனா
ருமைகு மார னுருவங்கண் டானரோ. (௩௬)

வேறு.

கார்வரை யிடத்துக் கதிர்வரை புதயங் காட்டுதல் போற்களி மயில்மேற், சூர்வரை யுடைய பன்னிரு புயமுஞ் சந்தன வரைந்திட மார்புஞ், சூர்வளை யறுத்த சுடர்வடி வேலுந் துகிர்வரை மேனியு மாய்ச்சி, மார்வரை யரசன் விழிக்கெதிர் நின்று முயர்வரைச் சரவணத் துதித்தோன். (௩௭)

சந்தநான் மறையு முறையிடு மிருதாட் சரவணோற் பவன்றிரு வடிவம், விந்தைமால் வரையிற் காவலர்க் கரசன் விழியினாற் பருகு வான் போலச், சிந்தையாற் களித்து நோக்கியே யியான்முன் செய்த வப் பேறென நினைந்து, கந்தவார் குழல டங்கைமார் பணைத்துக் கட்டின னுச்சிமோந் தனனால். (௩௮)

மட்டறு முவகை பூத்தவே லெர்கோன் மயூரவா கனத்துயர் செவ்வேள், கட்டமு கலந்து நோக்கின னிதயங் களித்தனன் றுதிக்குநாக் குழறித், தொட்டமெய் மயிர்க்கூச் செறிதர விழியிற் றூயவா னந்தநீர் சொரியச், சிட்டரு ளடங்கி நான்மறைக் கடங்காச் சேயினை வழுத்துவ தானான். (௩௯)

வேறு.

உலகத்தின் முதலாய் நின்ற வொருதனிப் பொருளே போற்றி
கலைகட்கு முணர் வொண்ணாக் கருணைவா ரிதியே போற்றி
மலைவிற்கைப் பெருமான் கண்ணின் வந்தமா மணியே போற்றி
புலமைக்குந் தலைமை யான புண்ணியா போற்றி போற்றி. (௪௰)

பேரமு துடைய தெய்வப் பிடிபுணர் களிறே போற்றி
கோரவெஞ் சிலைக்கை வேடர் குலமுய்ய வந்தாய் போற்றி
யாரமு தனைய வெய்யா னருளுமான் கணவா போற்றி
சூருடற் குருதி மாறுஞ் சோதிவேற் கடம்பா போற்றி. (௪௧)

என்றடி வணங்கி வேடர்க் கிறைவனும் பகர்வா னெங்கள்
குன்றகத் தன்னிற் போந்து குறமகளொடு விபுதர் வாழ்த்த
வென்றிவேற் கன்னி ருனை வேதத்தின் முறையே நீயு
மன்றலந் தொடையல் சூட்ட வருதியா லைய வென்றா. (௪௨)

தந்திவேள் கோட்டுக் காலிற் சந்தனச் சட்டஞ் சேர்த்திச்
சுந்தரப் புயல்சூழ் வேங்கைத் தனைப்பகர் கொம்பர் சாய்த்து
விந்தையிற் றோகைப் பீலி யேய்ந்தவெண் கவரி நாற்றிப்
பந்தரச் சுதலின் முள்ள பங்கயன் சபைபோற் செய்தான். (௪௩)

தேவரு முனிவர் தாமுஞ் சித்தரு முத்த ராயு
யாவரு மிறைஞ்சி யேத்த வெம்பிரான் பந்தர்ப் போந்தா
னிவு மனத்து மெட்டா நாரணன் மயனக் கீன்ற
காவியங் கண்ணி னாளைக் கடிமணக் கோல மாக. (௪௪)

கேசமே யாதி யாகக் கேள்கிளர் சரணங் காறுங்
காசுலாம் பணிக ளாகக் கவினுறத் திருத்திக் காதற்
பூசலார் விழிக்குச் சந்தப் பூந்தழை யுடுத்து வேடர்க்
கீசனும் வேடன் றனமுன் விடுத்தன னிதயத் தன்பால். (௪௫)

வன்னவிற் குனிக்கும் வேடர் மன்னவன் வனப்பு வாய்ந்த
பெண்ணினுக் கரசின் செங்கை பிடித்துவேல் பிடிக்குஞ் செங்கை
யண்ணறன் முகம்பார்த் தெங்க ளருங்குல முறைமை யீதாற்
றண்ணளி சுரப்ப யானுந் தருகுவ னென்று தானே. (௪௬)

பொன்னொடு புனலுஞ் செங்கைப் போதினி லேந்தி மானின்
கன்னியைக் குமர மூர்த்தி கையினிற் கொடுத்த காலைத்
துன்னிய மலரின் மாரி தூர்த்தனர் தோமி லாத
வன்னவான் முரச மியாவும் வான்முழக் கென்ன வார்த்த. (௪௭)

அப்பொழு தயில மீன்ற வன்னையு மலரின் மாதுஞ்
செப்பருங் கலையின் மாதுஞ் சேடியர் தாமும் போந்து
தப்பிதழ்க் குறப்பெண் பூண்ட தோமுறு மணிக ளிக்கிச்
செப்புதற் கெளிய வாக மணியினாற் சிறப்பித் தாரால். (௪௮)

கங்குலின் வனப்பு வாய்ந்த கூந்தலைக் கவினக் கோதித்
தொங்கலை விருக வாரிச் சொருகினான் பட்டஞ் சேர்த்த
மங்கல முறைமை வான முகிலினை வளைந்து வானிற்
றங்குமிந் திரவில் லென்னச் சாற்றலாந் தகைமைத் தம்மா. (௪௯)

நானமெய்த் தடவுங் கூந்த லொப்பவி னென்று வாய்ப்ப
வானவிற் கட்டி யோடி வயங்குரா மேவுஞ் சேர்த்தல்
சோலையின் முகிலின் பாங்கர்ச் சுடரிமைத் தழியா மின்னொன்
றானதுண் டாயி லம்மா வதற்கிணை யாக்க லாமால். (௫௰)

அலகிலா மறைகள் சாற்று மருணமா முதல்வி தூடு
நிலவுகின் றிமைத்தன் மானத் திங்களோ மடைந்து மேயெல்
குலமகன் முகத்தில் வட்டங் கொள்ளுநி லவ மாயா
வில்லவ னென்று தொன்னூ லிகழ்ந்ததுசம் மதிய தாமால். (௫௧)

அருமறைக் குதலைச் செவ்வா யமுதமென் மூலையி னூடன்
திருமுகத் தழகுஞ் சோதிச் செய்கிறக் குந்தி முந்து
முருவகப் படத்தில் வானத் துமோதியை மதிப மேத்தி
மருவிமுத் தாட்டு மாறு வழுத்தலாஞ் சிறிது மாதோ. (௫௨)

சொல்லுதற் கரிய வாய சுருதியுங் கருதா மாவின்
வல்லியின் கண்க ளூடு மைவரைத் தெழுதல் ஞானத்
தெல்லையில் கடற்குக் கூல மிட்டதோ கண்ணோ ருகப்
புல்லிய கருப்புக் காட்டி வைத்ததோ புகலினம்மா. (௫௩)

வண்டென மிழற்றுந் தீஞ்சொல் மானிளஞ் செல்வி யாய
வொண்டொடி கபோலச் செவ்வி போலிமக் கொல்லன் வாழ்த்தி
யண்டர்தம் பெருமான் செய்ய வாயுமா முகத்தின் சோதி
கண்டுகண் களிக்க வைத்த கஞ்சனம் போலுமாதோ. (௫௪)

கருமுகில் விளர்ப்ப வுள்ளங் கருத்தபூங் காம ரோதி
யிருகுழைக் கிணங்கச் சாத்து மிணைமயிர்த் தோட்டின் செவ்வி
பெருமையி னன்பர் ஞானம் பிறங்கவோக் குதற்கு வைத்த
திருவினிற் பொலியுஞ் சோதிச் சிவக்கண் ணாடி யாமால். (௫௫)

பூவைபோ னிறந்த மாயன் புதல்விசெவ் விதழி னூடு
பாவக மெழுதுங் காம ரெம்மனோர்க் கிசைக்கற் பாற்றோ
மாவகம் பிளந்த வேற்கை வரன்கொளிக் கமுத மூறுங்
கோவையங் கனியே யென்னக் கூறலாஞ் சிறிது மாதோ. (௫௬)

சுந்தரக் கவினு மானின் ரேகையார்க் கோதை காட்டுங்
கந்தர வனப்பும் பூகங் காமுகிற் கவினு மம்மா
முந்துசே கத்தி னூடு முழங்குவெண் சங்கம் போலு
மிந்தவா றுரைப்ப தல்லா லியாதெனப் பகர்வன் மாதோ. (௫௭)

நாரணன் புதல்வி மார்பி னளினகரல் முகையின் வாய்ந்த
வாரண மருப்பின் றொல்லை மதர்ப்பும்பூண் வனப்பும் பார்க்கிற்
கருணை மில்லா வேலோன் காமப்பேய் தணிப்பான் சாற்றிப்
பூரண கும்பம் வைத்தல் போலுமென் றுரைக்க லாமால். (௫௮)

ஆரமு தனைய மாதுக் கம்பொனி னுடைசாத்தல்
சூரிய கிரணம் வாரிச் சுடர்ப்பக லாயசேடி.
மேருவுக் காடை யாக வுடுக்குமெய் யழகு நோக்குஞ்
சீரிய சிறப்பு மானச் செப்பலாம் புலவர்க் கம்மா. (௫௯)

மயிலிளஞ் சாயல் காட்டு மானிளஞ் செல்வி யாக்கு
மொயில்விரி மணியிற் செய்த மேகலை வயங்கச் சேர்த்த
லயறுறு முலைதாங் காது நையுநு ணிடைக்குச் செம்பொன்
பயில்வுறு பூண்சேர்த் தன்பிற் பாதுகாத் திடுதல் போலாம். (௬௰)

கவினுறு மகலில் வெள்ளிக் கடகமுங் குழைக்கு மேய
வளிர்கரு வளையு மாணி னணங்கினுக் கிணங்கச் சேர்த்த
லுவமையி றேவர் மூவர்க் குரைகுண மூன்று நல்கு
மிவள்கரம் பிடித்த தாமென் றிசைக்கலாந் தகைமைத் தம்மா. (௬௧)

மாயவன் மலக்கண் பாங்கர் வந்தவ தரித்த மானின்
மேவனை விரல்க ளோடும் விளங்குமோ திரங்கள் சேர்த்தல்
பாவமென் வசந்த காலப் பாவைகற் பகப்பூங் கொம்பிற்
றூயதாண் மலர்கள் பூப்பத் துலங்குதல் போலு மாதோ. (௬௨)

கொண்டலைப் பழித்த கூந்தற் குறக்கொடி கமலத் தாளிற்
றண்டையுஞ் சிலம்பும் வெள்ளிச் சதங்கையுந் தயங்கச் சேர்த்தன்
முண்டகத் தவிமத் தன்ன முட்டையிட் டதனைக் காத்து
விண்டறற் றுதலா மென்ன விளம்பலா முளங்கொண் டம்மா. (௬௩)

செய்யமா னளிக்க வந்த செல்விசெங் கமலத் தாளுங்
கையும்வாய்ச் செம்பஞ் சூட்டுங் கதிர்வனப் பொலிய வைவே
லையனு திருக ளில மழுத்தக்கிக வணைந்துச் செய்த
தையசெம் மெழுகுக் கொப்பச் சொல்லலாம் புலவர்க் கம்மா. (௬௪)

இவ்வணை முறைமை யாரு மிசைப்பயிர்ங் கமல மாதுங்
கொவ்வைவாய்க் கலையின் மாதுங் குறக்கொடி தனக்குக் கோலச்
செவ்வியின் வாய்ப்பச் செய்த செய்கையை யெடுவே லண்ணல்
லெவ்வமில் கருணைக் கண்க ளிரண்டினு மள்ளம் வைத்தான். (௬௫)

வீரவேற் றடக்கை யண்ணல் மெல்லியல் வளப்ப தான
வாரியிற் படிந்து காம வயாவொழிந் தளவி லாத
பேரருள் சிறந்த காலைப் பெயர்த்திரி சுதந்தி ரத்தர்
காரிகைச் சடங்கு காட்டக் கணித்தவ ணடைந்தார் மன்றே: (௬௬)

திரிசுதர் திரத்த ரியாருஞ் சிறந்துய ரிரண்டாம் வேதச்
சுருதியி விபதிக் குள்ள தோமமு பவமுன் னியப்
பொருவரு மணியிற் பொன்னிற் புரிபுமண் டபத்திற் போந்தே
யரியணைப் பீடத் தெங்க ளையனைத் திருத்தல் செய்தான். (௬௭)

காதலிற் குறங்கோ மட்டி கரகநீர் வார்ப்பச் செவ்வேள்
பாதமெய்த் தணையை வேடர் பார்த்திபன் விளக்கிப் பின்னர்க்
கோதிலா சமன நீருங் கொடுத்தருக் கியமு நல்கி
மாதவன் மருகன் கையின் மதுபருக் கமுமீந் தானால். (௬௮)

அந்தண ரிரண்டாம் வேத வாகம மரபின் மிக்க
செந்தழ லதனை மூட்டிச் செய்வினைச் சமிதை யெல்லா
முந்திய முறையா லோம முடித்ததற் பின்பு ஞானக்
கந்தன்முன் னிணை யீன்ற கன்னியைக் கொடுவந் தாய்த்தார். (௬௯)

வலதுசெங் கையினாற் பொன்னின் மங்கல நாணை வாங்கிக்
கலைமகள் கையி னீந்து வள்ளிகந் தரத்துச் செவ்வே
ளலதுறப் புனைவித் தைய நன்பொரி தூவி வேதச்
சுலனனை வலம தாக மும்முறை சூழ்ந்த பின்னர். (௭௰)

மான்மகள் வலக்கால் பற்றி வஞ்சனேன் மனமா மம்மி
நான்முறை மிதிப்பித் துள்ள நோன்மைபெற் றுயர்வான் சாலி
மீன்விழி பார்த்துப் பின்னு மிக்குபர் கரும முற்றிக்
கானவரைக் குறவ னீன்ற கன்னியை மணஞ்செய் தானால். (௭௧)

மணவினை காண்பான் வேதன் மாலரன் றேவர் கோமா
னிணையறு முனிவர் கான மிசைத்தகர் இருவர் சூழ்ந்தார்
பணைமுர சோதை யார்த்த பைந்தரு மலரின் மாரி
கணமழை போலத் தூர்த்த கந்தனு மகிழ்ச்சி பூத்தான். (௭௨)

மன்றலந் தொடையல் சூட்டும் வதுவைநோக் குற்ற வானோர்
நின்றவ ரியாருந் தந்த நீள்பதி யடைந்தார் விந்தைக்
குன்றவர் சாப நீங்கிக் குமரவே ளுலகம் புக்கார்
மின்றிகழ் மருங்குன் மாதும் விசாகனு மகிழ்ச்சி பூத்தார். (௭௩)

ஆருயிர் குடித்த வொள்வேற் றோகையெம் பெருமான் வேட
மாரமு தனையா ளோடு மணிமணிச் சிறப்பு வாய்ந்த
தேரின்மேற் கொண்டு ஞானச் செயந்தியம் பதியில் வானக்
காருலா வியதண் சாரற் கந்தமா தனத்திற் புக்கான். (௭௪)

காடிகை பேரி தாளங் காகளம் பதலை பம்பை
முருடுதூந் துபித டாரி முரசுசல் லிகைகி சாளம்
வரிவிர லேறு கோடு மத்தளம் படகந் தக்கை
பரணையி னார்ப்பத் தேவர் பனிமலர் மாரி தூர்த்தார். (௭௫)

விந்தைமால் வரையிற் கந்தன் வேள்வியின் பொருட்டாற் சென்ற
வந்நாட் டொட்டுத் தெய்வ வாரணத் தனைக்கு நோற்றுக்
கந்தமா தனத்தி லுற்றுள் கண்ணுதற் பரனன் றுன்முன்
னிந்திரா திபரும் போற்ற விலிங்கத்தின் வடிவங் கொண்டான். (௭௬)

கான்றமாக் கலுழி நால்வாய்க் களிறுலாங் குன்றந் தன்னிற்
றோன்றிய விலிங்க முன்னஞ் சுந்தரி யடியே னெஞ்சத்
தான்றபே ரன்னைத் தாது மன்பினென் கேள்வ னெஞ்சத்
தேன்றவெண் ணமுமே நன்று மிறைமுடித் தருள்வா யென்றும். ()

எம்மிறை வேட்ட மாது மியாதுமோ ருள்ள மாகச்
செம்மையை யருள்வா யென்றுஞ் சிந்தனை செய்ய வந்தக்
கொம்மைவெம் முலையாண் முன்னங் கோதிலா விலிங்கந் தன்னின்
மைம்மலி மிடற்றுப் புத்தேள் வந்தனன் மறைக ளார்ப்ப. (௭௮)

கயிலையெம் பெருமான் கந்த மாதனத் திலிங்கத் தூடு
வெயில்விரித் துலவுங் கோலம் வெள்ளிவா ரணன்கு மாரி
புயலினைக் கண்ட தோகை போலுளங் களித்தா ளந்தக்
குயின்மொழிக் குள்ளத் தூற்ற குறிப்பெலாம் பரனு மீந்தான். (௭௯)

ஈந்தவப் பொழுது தெய்வ யானையு மகிழ்ந்து வேற்கைச்
சேந்தனுக் கத்த னென்றுஞ் செகத்துள நாத னென்றும்
காந்தளங் கரத்துச் சூலி காதல னென்று நீங்கா
வாய்ந்தபே ரன்பி னாலே வணங்கினள் வழுத்தி நின்றாள். (௮௰)

வழுத்திய தெய்வ யானை மாமனுக் கடவுள் பாத
முழுத்துதன் னளியிற் பின்னர் முப்புர மெரித்த மூர்த்தி
தொழுந்தகு மிலிங்கத் தண்டச் சூழலுள் ளளவு நீயே
தழைத்தசிந் தையினான் ஞானத் தன்னளி சாத்தல் வேண்டும் ()

ஐபீ புனலு செய்க்குஞ் சேய்க்கருந் தார மாருந்
தையலா ரிருவ ருக்குந் தயவுடன் பரவி யேத்தும்
வைபகத் தெவர்க்கு மன்பு மறைபெயரச் சுரந்து காத்தல்
செய்பவன் சருளே வேண்டி மென்றனை டெய்ப வாகோ. (௪௨)

கன்றுாத லதவேக் கேளாக் கடவுளார்க் காச வின்று
பெண்வமு தனையா புள்ளம் பேதுற நவிர்தி யீபு
மெய்வலிய வென்வலி யாய்கே யாமருள் புரிவோ மீது
தின்னாகம் மானே யென்று செப்பின ரெப்பி லாதான். (௪௩)

பொங்கைதேன் பளிப்ப வின்று குஞ்சித சரணம் பேர்த்து
மன்றிலி னடிக்கும் பொற்றுள் வாசயன் சத்தி யே
குன்றகர் தன்னி லியாருங் கும்பிடப் பரிதி யேத
வின்றுவு சுப்ப மெல்லா நிறைந்தில விருப்போ மென்ற. (௪௪)

போருவிலெங்கத் தாடி பிராவுடன் மறைந்தாய் தெய்வ
வாரணா மடந்தை மீண்டும் வணங்கின ளிருக்குங் காலைத்
தேரிடை யரின மீன்ற செல்வியுங் குமர வேளு
மேருவி னுயர்ந்த சுந்த மாதனை லெற்பிற்போந்தார். (௪௫)

உமைதருங் கொடியுஞ் செவ்வே லொருவனும் பொற்றேர் மீது
விரைவுடன் வருத லேத்தி வேழமான் மகிழ்ச்சி கூர்ந்து
குழையொடும் போந்து செங்கை குவித்தன ளருட்க வியா
மழைகொடு விங்குஞ் செம்பொன் வார்க்குடம் விளங்கி னாள்.(௪௬)

கடவுதேர் நிறுத்தி வள்ளி காங்களால் வலக்கை தாக்க
விடமுகை தாக்கிக் கந்த வெடுத்தன ளியாவோ யாமுந்
தடவெரிர்த் தேரி னேறிச் சண்முக விடப்பா கத்தி
லுடனிருத் தருளுங் கோல முவமையா லுரைக்கற் பாற்றே. (௪௭)

மாதர்க ளிரண்டு பேரும் வானர சனித்த வேற்கைச்
சோதியுந் துலங்கு தோற்றஞ் சுடர்வயப் பரிதி யேத்துஞ்
சீதரன் றிருவும் பூமி தேவியுஞ் செம்பொற் றேரிற்
போதுமா றெப்ப தென்றே புகலலாம் புலவர்க் கம்மா. (௪௮)

தூய்பொற் றேரி னிங்கிச் சோதிவே லுடைய காளை
யாயிழை மார்க ளோடு மாலய மதனிற் போந்து
மேயபே ரழகு வாய்ப்ப வேழத்தின் பலகை தாய
சேயவான் பீடத் தெங்கோன் சிறப்புவீற் றிருந்தா னன்றே. (௪௯)

ஞானசத் தியினுல் வைகு நவையறு சிவஞா னத்தி
னுமேபோ ரிச்சா சத்தி யரியதோர் கிரியா சத்தி
யூனமின் றாக்கி மொன்று முயர்வுடை யிருத்தல் போல
மானவேற் படையான் சிந்து மாநகர் வதித்தா னன்றோ. (௫௰)

இந்திரன் மாதுக்காக விசெய்கமாம் கெழுந்த செய்கை
சிந்தவே ருணர்ந்து வேட்ட காதலிக் காக வந்த
தந்தையா மென்றென் னுள்ளந் தன்னையி சிறந்து ஞானச்
சிந்தையாற் றுதை பூசை செய்தருள் புரிந்தான் சேயோன். (௫௧)

தர்மமா யிரண்டு பேருந் தாரகத் துருவ மான
வீரவேற் றடக்கை யண்ணல் மேருவிற் குழைந்தான் பொற்று
ளாரரு ளோடு பூசை யாற்றினர் சனக ராதி
சீரிய முனிவர் தாமுந் திரிசுதந் திரரும் போற்ற. (௫௨)

சனகனே யாதி யான தாபதர் தமக்கு மோன
வினியபோ கத்தி னுண்மை யிசையமா திலத்து ளோர்க்கு
நனியருள் புரிந்து வேத நாயக னருஞ் செவ்வேள்
சினகரத் திருந்தான் ஞானச் செயந்தியம் பதியி லென்றுன். (௫௩)

வள்ளியம்மைதிருக்கலியாணவத்தியாயம் முற்றிற்று.

ஆ—திருவிருத்தம்—௫௩.

ஒன்பதாவது
பிரமாவுக்கு வரங்கொடுத்தஅத்தியாயம்.

வேதமொரு நான்கென விதித்துள வியாதன்
பாதமலர் மெய்த்துவே பணிந்துசுக வின்று
காதலொடு நீடுகம லாசனன் வணங்க
வாதிதரு சேயுதவு மாறறைதி யென்றான்.

குருபரன் விமானமுயர் கோயிலி லிருந்தே
யருநிரி சுதந்திர மெய்ம் மாமறையி னோர்கா
ளொருவசன முண்டது வழாதில துரைப்பாந்
கருதியொடு நம்மடி துதித்தரு ளிருப்பீர்.

என்றுமுல கேழுதொழு மெம்பதி யிருந்தே
நன்றியுட னம்மடியி னுண்மல மெடுத்தே
மன்றவனி விர்கதி வழங்குவது தென்கா
னின்றலவு சிந்துபுர மேயென நினைப்பீர். (௩)

நம்மையு நலம்பெருந மாதரையு நாடுஞ்
செம்மைதரு கோயிலுள சீரியன யாவுஞ்
சும்மைகொடு காப்பது தொழிற்குரிய தென்று
னிம்மையுட னம்மையு மெனக்குதவு செல்வேள். (௪)

ஆயிர மிரட்டியுள வந்தணர்க ளீவிர்
மேயவதி னுமொருவ னென்றுரை விளம்பித்
தாயினு மிரங்கிபெரி யோன்றனை யளித்துந்
சேயுள மகிழ்ந்துதிரு லாய்மலர்வ தானான். (௫)

வந்துதெரி சித்துநமை வாழ்த்துநர் பெருஞ்சீர்
சந்ததமு றாக்கலை யடைந்தவர்கள் சாவா
சிந்தமட மாதரிரு வோருட னியாமிச்
சிந்துபுரம் வந்துதெரி சித்திவி திருந்தாம். (௬)

ஞானமில ராய்விடினு நம்மையு நவிற்று
நீனமுறு பாதக மிழைத்துளர்க ளேது
மானமொடு சிந்துபுரம் வந்தடை பவர்க்கே
மேனிலை யளித்தருள்வம் வேண்டிய விருப்பால். (௭)

என்னவுரை செய்தரும ரேசனிரு போதாம்
பொன்னடி வணக்கமுறு பூசுரர்க ளியாரு
மன்னபரி சேயுன தடிக்கமலம் விடே
மன்னுதொழி லாயினும் வழுத்துவதொன் றுண்டால். (௮)

நித்தனு மிறைஞ்சியிவ ணையமொடு மூழ்கச்
சித்திவிழை மானுடர்க டேவர்பிறர் மூழ்கப்
புத்திர பவுத்திரர்கள் புண்ணிய மருந்த
முத்திதரு மத்தகய மூலமும தாகி. (௯)

கல்குரவு வெம்பிணி யொழித்திவிய நாவின்
மெல்லமுத மொத்தசுவை மேன்மையுள தாகிக்
கல்விபெரு ஞானமொடு காட்டியெமை யாளச்
செல்வமுள தீர்த்தம்வர நீயருள்செய் வாயால். (௰)

வேலையிடை மூழ்குதின மேலவர் விதித்தார்
சீலமுட னேழையர் தினந்தினமு மூழ்க
வாலியளின் மாநதியின் வாய்த்தொரு தீர்த்த
மூலமிடை யீறின்முதல் வாவருள்க வென்றார். (௰௧)

கலைபயிலும் வேதியர்சொல் கட்டுரை வினவி
மலைமக ளளித்தருளு மைந்தனு மகிழ்ந்தே
சிலையினிரு நூறளவு தென்றிசையின் வென்றி
யிலைகொணெடு வேலினை யெடுத்தினிது விட்டான். (௰௨)

விட்டவயில் சேடன்முடி மீதினு மளாவித்
தொட்டவழி கங்கைவரு மாறுசெய்து தூவேன்
மட்டலர் கடம்பமணி மாலைபுனை செவ்வேள்
கட்டழகு பெற்றகையின் வந்தது களித்தே. (௰௩)

வேறு.

வேலொடு வேலையக் கரையின் மீமிசை
வாலிய கங்கைநீர் வரவு கண்டுள
மூலமின் றுயர்ந்தவேள் முருகன் முந்துறச்
சீலநான் மறையினாற் சென்று மூழ்கினான். (௰௪)

முந்துறக் குமரவேண் மூழ்குந் தன்மையா
லந்தமுற் றொளிரும்வே லளித்த பான்மையா
லிந்திரப் பெருவள வின்பத் தாய்த்தலாற்
கந்தபுட் கரிணியாய்க் கவின்சி றந்ததே. (௰௫)

வருதிரி சுதந்திர மறைவல் லோர்களு
மருமறை முறையினா லதனின் மூழ்கினார்
திரிபுவ னங்களுந் தினமு மூழ்கிடப்
பெரிதிது நன்றென மகிழ்ந்து பேசினார். (௰௬)

தாவறு கந்தபுட் கரிணித் தண்புனன்
மூவிரு முகத்தினா னருளின் முன்புநச்
சேவையின் மிக்குயர் திரிசு தந்திரர்க்
கேவரும் புகழிதி காசங் காட்டுமால். (௰௭)

திரைவத னாரம்பத் தீர்த்தத் தன்மையால்
வருதினந் தினந்தொறும் வழாது நான்மறைச்
சுருதியின் மூழ்குநர் தொல்லை வான்கதி
விரைவொடு மடைந்துளார் மேன்மை கேண்மினோ. (௰௮)

கலைமுழுக் கவிழ்ந்தது கலியின் விட்டொரான்
முன்முனை கற்பத்தின் முராரி பெய்பவன்
பன்னகாப் பள்ளியில் பரிக்கு நீந்துவான்
தன்னொடு பிரமவை தந்த தற்பரன். (௰௯)

செற்றமொ டிலங்கையிற் சேரி ராவணன்
கொற்றம தகற்றுவான் குரிசி லாகவ
வற்றிய வம்முனை மாறி சேதுவைக்
குற்றமின் றுயர் தரக் கோலி னானரோ. (௨௰)

காதலிற் சீதையைக் காக்க வேண்டியே
மாதவன் முன்றவ தாப மாகிய
ஞாதியிற் சேதுவை யமைத்த பான்மையின்
பூதலத் தமரராய்ப் புனித முற்றனர். (௨௧)

நல்லொடு தவத்தினா நமது சந்நிதிச்
செல்லலிற் றினத்தினந் தினைத்து மூழ்கவா
மித்தவர் கதையகா லியாமு மெண்ணியேத்
சத்தயா தனம்வரும் காதை சாற்றுவாம். (௨௨)

கருமுகில் படிந்துகள் பெரியந் சந்தனப்
பெருவரை மேருவாம் பிறங்க வேடுவெந்
செருமுயன் றன்னமுந் தேம்பி யாடகத்
திருவரை தானென வாக வேண்டியே. (௨௩)

மாற்றருந் தவத்தினால் வருந்தி நம்வயி
னேற்றவு நோக்கினே னென்னை யாவயர்
காற்றினின் முக்கலைக் கவினி நந்தமை
வாற்றல்சால் பொன்வரை யாக வேண்டினீ. (௨௪)

பன்னிய மாதவப் பண்பு நோக்கினேந்
தன்னனி சிறந்தருந் சந்தன் சாரலி
புன்னியச் செயத்தியம் பரிதிற் பொற்றையாய்
நன்றுறு தசிற்றுறி நம்மை நாவினால். (௨௫)

நடந்தன பிரமதம் பத்தி னுமெல்லாம்
கடந்துபின் வருமயன் கற்பந் தென்றிசை
யிடைக்கடொ றெல் மேருவாய் விளங்கு லாபெனத்
தொடர்ந்திடா னன்பினுற் றவனியு செப்பினேம். (௨௬)

ஆதலா னமதுசந் நிதிய டைந்தலை
மோதுதென் கடலிடைத் தினமு மூழ்கிநம்
பாதவா ரிசங்களும் பணிந்து நம்மையுங்
கோதிலாத் தன்னகங் கொண்டி ருந்ததால். (௨௭)

தருக்கினுற் கந்தமா தனத்தன் சாரனு
மிருக்கினுற் றினந்தின மினிது மூழ்கலாற்
பெருக்குமா நிலத்துளோ ரெவரும் பெட்புறக்
குருக்குநா டொறுந்தொறுங் குளிக்க லாகுமால். (௨௮)

இன்னுமோர் காதையுன் டெடுத்துக் காட்டுதுந்
துன்றுநான் மறைத்திரி சுதந்தி ரத்தர்கா
ளன்னவா கனத்தய னகர்மை யான்மவரிப்
பன்னகா பரணனைப் பழித்து வைகினன். (௨௯)

என்றலை யீசனு மெண்ணிக் காரிகீ
கன்றலை நூற்றிதழ்க் கமலக் கோயிலான்
றன்றலை யைந்திலோர் தலையைச் சோரிநீர்
நின்றலை பெறிதர வுகிரி னீக்குவாய். (௩௰)

என்றலுங் கபாலங்கை யேந்து காரியு
நன்றென வணங்கிப்பூ நளினத் தான்வயிற்
சென்றனன் செயிர்த்தனன் சிரங்க ளைந்தினி
லொன்றற விடக்கையி லுகிரி னீக்கினன். (௩௧)

சார்ந்தபின் கமலத்தோ னிரங்கி வைகுண்டஞ்
சார்ந்துதன் றந்தைபொற் சரணந் தாழ்ந்துளஞ்
சோர்ந்தனன் சோர்ந்துள சுதனைத் தேற்றவுந்
தேர்ந்தனன் றனஞ்சயன் றேரின் பாகனே. (௩௨)

பெண்மையி லீசனைப் பேது றச்செய்தோர்
மண்மையின் மயங்கிய மாலும் வான்முகிற்
றன்மையிற் சரவணேற் பவன்ற னுறெழுத்
துண்மையை யெண்மகற் கோது வேலென. (௩௩)

ஆர்வமீ தூர்ந்திட வம்பு யக்கனோ
சார்வுறு தனயனைத் தழுவித் தாங்கிநீ
யோர்வுற வாறெழுத் துண்மை யோதுவாஞ்
சோர்வறக் கேளெனச் சொற்றன் மேயினன். (௩௪)

ஒருதலை போயுள துளைய சென்னிமேல்
வருதலை வேண்டினையாயின் மாமுதற்
பொருதலை வாரிதிற் புலவு காட்டிய
விருதலை பொருசெவ்வே லிறைவன் மந்திரம். (௩௫)

குருமுறை யாசயாங் கூற வாமறை
மருவுமா றெக்கரின் மயிற் கேட்டிநீ
யுருவகத் தேற்றென வுளங்கொளம் போதிருள்
கருமுகிற் படிவமார் கமலக் கண்ணனே. (௩௬)

அந்தவா றெழுத்தையு மம்பு யாசனன்
சிந்தையார் வந்துடன் பிரவித் தான்றவ
முந்நகைங் கயமுகன் முகந்த நீபுள
கொந்துமா தவஞ்செய்து கோப்ப தேசனே. (௩௭)

உரைத்தவா சகத்தினை யுணர்ந்து வேதமுந்
திரத்திலேத் தொன்றியான் சேதிப் பாகனை
வருத்தமுற் றேயுகோ கோற்ற லாறெனக்
கருந்தமிழ்த் தனனெனக் கழறிப் பின்னரும். (௩௮)

விழுந்தடி வணங்கினன் விழியி னீர்மழை
பொழிந்தன னகத்தையாம் பொருமல் போக்கிநெஞ்
சழிந்தன னளவிலா வன்பி னெற்றெழு
தெழுந்தனன் றுதியினு மின்ன சாற்றுவான். (௩௯)

வேறு.

கயிலையி லீசன் போற்றுங் கடவுளே கடவுட் டெய்வ
மயிலுடன் குறமான் றேயு மாமறைக் கடலே மேருப்
புயம்விழி யீரா றென புங்கவா மதமா முக்கு
கயமுறு முகமா றென நாதனே போற்றி போற்றி. (௪௰)

கனகமா முடியிற் றுக்குங் கவின்பெறு மணியா லன்பர்
மனவிரு ளகற்றுயும் பானு வடிவமே கவுரி யீச
னினியபேர் வாஞ்சை யாகு மிவமணி யிருக்கச் சேர்த்த
கிளிவிரு நகம தாக விளங்குபெட் டகமே போற்றி. (௪௧)

திருவரு ளுறுவார் தேவர் மூவரிற் சிறப்பு வாய்ப்ப
வருகுதல் காத்தன் மீட்டு மழித்திடல் புரிவாய் போற்றி
மருளுமவேள் கணைக ளிக்கு மாதவ ரிதயப் போதிற்
பரிதிபோல் விளங்கு ஞானப் பன்னிரு புயத்தாய் போற்றி. (௪௨)

தரைபுனல் செந்தீ காற்றுத் தாவறு வெளிய தான
வுரைதரு பூத மைந்தோ டெண்மகத் துவமாங் காரம்
விரவுதத் துவப்பூத் தோட்டான் மேயதோ ரண்ட மொன்று
பிரவுநான் படைக்கு மண்டப் பான்மையா மியு போலாம். (௪௩)

அளவிலா வண்ட மெல்லா மையமீ பிட மாக
வளனுற விருக்கு நின்சீர் மறைகளு முடிவு தேறு
வெளியனேற் குரைக்கற் பாற்றே யாவர்க்குங் குருவா னோர்க்குங்
களிமகிழ் சிறப்பளிக்குங் கருணையாங் குருவே போற்றி. (௪௪)

சொல்லுமுன் றியான மாகுஞ் சூரண வசியத் தாற்பூ
மெல்லியல் வாணி நான்கு வேதவா கமங்கள் வல்லா
ளெல்லையின் ஞான மூன்று ளிறைந்தவோர்க் கெய்துங் கில்லாப்
புல்லறி வுடையே னெக்கன் றேர்குவல் பொருந்தாள் போற்றி ()

தலைமையே றுலக மூன்றுக் கருதற்கோர் கமலை போலாங்
கலையெலா முதவ வெள்ளைக் கமலையாங் களிக்கு ஞான
நிலைமைசா ரதற்கு வாய்மை நிறைதரு குருவாந் தியான
மலைவற வருளு நின்றுள் வாரிசம் போற்றி போற்றி. (௪௬)

தத்துவத் தரங்க மோதித் தணப்பிலா மோக மாய
வித்தெனு மிடங்க ரோடு வெண்மதி யாசை கண்டு
கத்துமிச் சனன வேலை கடப்பத்தா றுவாய் நல்கு
முத்தனே கருணை மாறு மூவிரு முகத்தாய் போற்றி. (௪௭)

விரவா சனத்துச் சிய மெல்லனை பொருந்தி லாமச்
சிருறுங் கரத்தை வாமத் திருமுழங் காலிற் சேர்த்திச்
சாருறும் வலக்கை ஞான முத்திரை தரித்து காஷி
யூருவா மதிய மேய்ப்ப வொளிதிகழ் வடிவ மாகி. (௪௮)

மாலய ஞானா ஞான வானவற் குபதே சிக்குங்
கோலமு கினைந்து நெஞ்சிற் குவித்தமே லவரை யெல்லாந்
சீலநான் மறையுந் தேறுஞ் சிவகுரு வாக்கு ஞான
மூலமே யெங்க ளாறு முகத்தனே போற்றி போற்றி. (௪௯)

உன்னரு ளமுத வாரி குளித்தனோர் பிரம லோகந்
தன்னுள சிறு மானி பொஞ்சரி தத்தி னாடு
துன்னலங் காரம் போல நோக்கவுந் துவளிலுந் தேற்று
முன்னவர் கருணை யாறு முகத்தனே போற்றி போற்றி. (௫௰)

தேறலாங் கனிமு வீத்து விடமுண்பார் செய்கை போல
வேறுமோர் *தேவ னெண்ணி வெகுவுறு மடியர்க் கெல்லா
மாறுமா முகத்தி யசைந்த தமிர்திறுத் துளிர்ச்சி காட்டு
மீறிலா முதலே வேற்கை யிறைவனே போற்றி போற்றி. (௫௧)

வள்ளியங் கொடிக்கு வாய்த்த வான்றருக் கொம்பே போற்றி
தள்ளருங் கருணை காட்டுஞ் சண்முகத் தெந்தாய் போற்றி
வெள்ளியங் கிரியின் ஞான மேருவின் மணியே போற்றி
யுள்ளமெக் குருகு மெய்யா லுகவுவாய் போற்றி யென்று. (௫௨)

தோட்டலர் கமல விட்டுச் சுருதியா லுரைத்த வேதப்
பாட்டுரைத் திடுவோ ருக்கும் பகர்ந்துளார் பக்க மாகக்
கேட்டுளார் தமக்கு மேலாங் கேடிலா வாழ்க்கை நல்கித்
தாட்டுணைக் கமல வீடு கொடுப்பது சரத மென்று. (௫௩)

பிரமனை நோக்கி நெஞ்சம் பேதுறேல் கருத்தில் வேட்ட
வரமுனர்ப் பகர்தி யாமும் வழங்குது மென்ன முன்னம்
புரமெரித் தானை யெள்ளல் புரிந்தனை யதனா லீங்குஞ்
சிரமிலொன் றிழந்தேன் மீளத் திருவரு ளிரங்க வென்றான். (௫௪)

முனிவர்கா ணுமப் போது முராரிகா லலனுன் னேற்ற
வனிபகிழ்ந் தெய்து காலங் காடியோங் காரந் தன்னால்
கனியுமைக் கொழுத்தி யுண்மை கழறியோ பறிவுங் காமர்ப்
பனிமலர்க் கமலத் தான்முன் பகர்ந்தவா பகர்வன் கேண்மின். (௫௫)

வாமமார் களிற்றின் மாது வயாவுற கோற்றற் காகக்
காமர்கு மிளிக்கத் தன்மை காட்டிய வகில நாத
ஞமமா மிரமு நாவி னவிற்றியைக் கெழுக்கின் மூல
மோமென வழுத்திக் கங்கு ஐம்பகுத் தாது மேத்தி. (௫௬)

இடைவிடா தொழுகு நீரா விளியமைக் கெழுத்திற் பூசை
யடைவினு லியற்று வாயென் றறைந்தன மயனுஞ் சூலப்
படையினன் பாத நாலா யிரயுகம் பணிந்தான் முன்னர்த்
தடைபடா திலிங்கத் தூடு தோன்றினன் றமக்கட் பெம்மான். (௫௭)

தோன்றிய முக்கட் சோதி தொழுங்கம லத்தோ யாதுக்
கான்றமா தவத்தான் மேனிக் கவர்வுகொண் டிருந்த தெம்முன்

* தெய்வம்.

னேன்றுரை பகர்தி யாமுந் தருகுவ மென்ன வேதன்
றான்றனீர் கண்கள் சோர வுரைப்பது கருத்துட் கொண்டான். (௫௮)

கருத்தினின் மகிழ்ச்சி கூர்ந்து கரதல முச்சி கூப்பி
யருத்தியிற் கண்ணீ ராரு மானந்த வாரி மூழ்கித்
திருத்துமாக் குழற நின்று தெண்ணிலா வேணி யானைப்
பொருத்துபே ரன்பின் வேதன் றொழுதனன் புகழ்வ தானான். (௫௯)

வேறு.

உலகை யீன்றெழு முமையின் பாகமா
யலகு ஞானமா னந்த வாரியாய்த்
திலகமய வாஞ்சையிற் சிறப்ப நல்கிடு
நலவயி லாச்சக நாத போற்றியே. (௬௰)

துதிவெண் பூதியும் புலியின் றோலுமாய்க்
கதிரின் மேனியிற் கனிப் போர்த்துளாய்
மதியும் பாம்பும்வான் சடையி னீடுமா
நதியுஞ் சூழ்சக நாத போற்றியே. (௬௧)

ஆல காலத்தா லரிய கண்டத்தோர்
கோல மாக்கிய கொள்கை யாய்புரத்
தேல வேதகைத் தெரிவைத் தாய்மறை
நாலுஞ் சொல்சக நாத போற்றியே. (௬௨)

காமன் மேனியைக் கனற்றும் பார்வையாய்
தாம வார்குழற் றோகை பாதியாஞ்
சாமகானனே தகைய வாயிர
நாம மாஞ்சக நாத போற்றியே. (௬௩)

என்னுந் தாருவு மினிய தேனுவும்
பன்ன வைத்தமா மணியும் பண்டின
துன்னி னோர்க்குதவி ஞானத்தே
நின்னு வாய்சக நாத போற்றியே. (௬௪)

உன்னை யெவ்வெலா முரைத்த தன்மையாற்
சென்னி யொன்றுபோய்த் தேம்பி னேனது
மன்னு காரண மாக வந்தனை
பன்னி னேனெனப் பகர்தன் மேயினான். (௬௫)

வேதன் சொன்னீனை விசனிச் குலிலை
ருதன் கூறுவா ருகி எய்தலி
போதி மத்தமிழ் குலைர்த்து வாமுனத்
தாத நத்திரு வகத்துறட் கோடிரீ. (சுக)

வேறு.

போற்றிய சிந்து புரத்தனி லன்பு புரிந்தாரய்ச்
சாற்று திபான மருச்சனை மிக்க தலத்தாலே
பேற்ற முறும்பெரி யோர்பெரி யோர்க ளியாதேது
மாற்று மிலாது சிவைக்குமுன் முன்னர் வருந்தாரே. (சுள)

அன்னமு ரூறு முகக்குமரேச னினைத்தாறு
லன்னவன் மேவிய வாலய வாயி லமைத்தான
சன்னிதி வாரி நினைந்தின மூழ்கு தனைப்பின்றிப்
பொன்னரின் வியான வுநக்கொடு போற்றுதி பெறற்பாமால். ()

விமானம தாகி விளங்குதி வேத வியப்பானங்
குமார சுவாமி விமானம தான குறிப்பாலே
யமானத வாவியு மாய்தலை பைத்து மளிப்பாமே
னமானை யுனக்குள கற்ப மகன்றிடு நன்றுமே. (சுகூ)

தன்னானி யாவியு தக்தன கம்முள சாருபங்
கன்னானி ருலய மேவுதி கந்த வரைக்கன்றோர்
புண்ணிய சிந்து விளிற்றின மூழ்கு பொருங்கொள்றே
யென்னிய வெண்ணிய வெய்துயி துன்னை யிசைத்தேமால். ()

தலைமை புரிந்திட நாமருள் செய்துள சாருப
நிலைமை யடைந்திடி லைத்தலை புன்றலை நேரமாய்
மகிசடர் வேலவன் வாயிலின் முத்தம் வழக்குற்றீ
ரலைமலி யாழிபி னித்தமு மூழ்குத லாமென்பீர். (எக)

நீதலை யெய்துமங் காளா வுங்குக னோரகும்
வாயிலின் வாரி நினைந்தின மூழ்க வழக்காரு
மாயனி ராமவ தாரமொர் மூன்றில் வருந்தோயுச்
சேப்முன ராதிச் சேதுவி தாகவுஞ் செய்தாறல். (எஉ)

வேறு.

மிடைந்த தென்றிரைச் சேதுவும் கண்டிடம் வியப்புற மிருதானே
யடைந்து பூசனை விதிமுறை புரிந்தன ருதவி னயன்கேள்மோ

படிந்து நீரிலன் வைகுறி புன்றலைப் பான்மையின் றவத்தாலே
தொடர்ந்த பேர்வுத ரூாப்ப மாமெனச் சொல்லுதன் மரபாமால். ()

தொட்ட வாரிதி யுடுத்தமா நிலத்துள ராயான் னதியாய
மட்டி லாதவான் றீர்த்தமுற் றுடிய மாதவக் கதியெல்லாங்
கட்டு நான்மறைக் கடவுளி முகாரம்பக் கடலொரு தினமூழ்கக்
ஆவிபோம் பொழுதியம படர்பாச மெடுத்தழுந்தக் கட்டிக் கால, னேவலா லங்கங்குவிட விருபத் தெட்டாக வியற்றுங் கோடி, பாவமா கியநிரயத் தாடழுந்திப் பின்வழுதிப் பாண்டி நாட்டிற், றுவருக் கொடுங்குரல்வாய் வாலேய மாய்மீண்டுஞ் சனித்தான் மாதோ. (௭௧)

யாவருக்கு மருவருக்கும் வாலேய வுருத்தாங்கி யிருந்த காலத்
தோவறமுன் குருமுகமாய் வேதமதி கரித்ததவத் துயர்ச்சியாலே
நாவலந்தீ வுக்கணியாஞ் சிந்துபுரந் தனிலடைந்து நவையின் மூத்து
மேவருமச் சடச்சுமமைப் பெரும்பாரந் தனைநீத்து விழுந்த தன்றே.

சிந்துபுரந் தனிலாவி விட்டொழிந்த தன்மையினாற் சிறந்த ஞானக், கந்தனரு ளான்ஞானக் கருத்தடைந்து வருங்காம தேனுத் தாரு, முந்துமரம் பையர்சூழத் தேரேறிக் கொண்டுவண்டு மொய் த்து டாடுங், கந்தமல ராசனத்தா னுலகடைந்திந் நாளளவுங் களிப்பா ஆய்ந்தான். (௭௩)

அருந்தவத்துக் கொருநாஞ்சி லாகியதென் செயந்திபுரத் தமர்ந் து வேதம், பொருந்தவுரைத் தாறுமுகப் பெருமான்ற னிருசரணப் போது போற்றி, யிருந்தெவர்க்கும் பசியாம லனங்கொடுத்துப் பின் னுடலத் திடும்பை நீத்த, பெருந்தவத்தர் பெரும்பேறறை யெம்ம னோர்க் கெடுத்தெடுத்துப் பேசொ ணாதால். (௭௪)

பலகதையுரைத்தவத்தியாயம் முற்றிற்று.

ஆ—திருவிருத்தம்—௭௪.

பதினாறாவது:

இயமனுக்குச்சிந்துபுரவைபவமுரைத்தவத்தியாயம்.

அருந்தவ நெடுங்கட லனைத்துணர் வியாதன்
றிருந்துசுக மாமுனிவ செப்புவது கேளொன்
றிருந்துணர்வி னுலக மேழினுயர் சிந்து
புரந்தனை யடைந்தவர் புகும்பரி சுரைப்பான். (க)

சங்கமெறி வாரிதி தனிற்பொருளை நாடி
வங்கமொடு சென்றுபல வாணிக முயன்றே
கங்குல்பக லுந்துயில கன்றுகட லூடே
பொங்குபல மீனொடு புலாலினிது தின்பான். (உ)

கற்றுணர்வி லாதுளமி லேச்சனது காலை
யற்றமது சேனையுட னூழியிடை நாவா
யுற்றபல வாணிகர்க ளுள்ளநிதி யாவுஞ்
செற்றமொ டெடுத்தவர்கள் சென்னிதுணி விப்பான். (௩)

தீமைபுரி வித்துமறை செல்வழி நடாத்து
மோமமறை வாணர்சிலை யோடுறு பசுக்கூ
டாமற வொறுத்துள தசைக்கறி சமைத்தே
காமுற நுகர்ந்துகிளை கட்குநுகர் விப்பான். (௪)

தன்னுள புலைச்சமய மேசமய மென்றென்
றுன்னிநிக ரின்றியவ ருற்றசம யத்தோர்
சென்னியற வெட்டிய செருக்கினொடு பாவந்
துன்னுமுட லச்சுமை சுமந்துபல காலம். (ரு)

திரிந்துழியொர் காலமுயர் சிந்துபுர நண்ணி
யருந்தவர் வணங்குறுபொன் னாலயமுன் னாகி
விரைந்திவிட மேதென வினாவியுள் வெருண்டே
புரந்தர னிறைஞ்சவளர் கோயிலிடை போனான். (௬)

போனபொழு தாறுமுக புங்கவனை யேத்தி
மோனமொடு நான்மறைசொல் முப்புவன வைப்புந்
தானமெனு மந்தணர்க ளம்மையெதிர் நோக்கி
யானவுரு வேதெனவு மந்தணர்கள் சொல்வார். (௭)

சங்கர னுதற்கண்வரு சண்முகவ னாமால்
வெங்கய முகாசுரனை வென்றமர ரெல்லா
மெங்கள்குழு வுக்கரச னென்னவொரு பேருந்
துங்கமொடு பெற்றுள சுவாமியிவ னாமால். (௮)

போற்றமெளி யோர்களிடர் போக்கியருள் ஞான
மாற்றரிய சீரொடு வழங்கவுள வாஞ்சை
யாற்றலொ டிருந்தபொரு ளாகுமென முன்னாஞ்
சாற்றுமறை யோருரை தடுத்துமுரை சாற்றும். (௯)

அரனெவ னவன்பெறுவ தாகவரும் வேற்கை
முருகனெவ னென்றுள முனிந்துநெடு வாளாஞ்
கரிகையொடு சீறின னடந்துசுடர் வேலோ
னருகுசெல வோடிவிழுந் தாவியு மழிந்தான். (௰)

ஆவியழி போதுவிழு மவ்வளவி லாதி
மூவிரு முகத்தனடி முன்னமுடி யாத
பாவிதர முன்புவிழு பான்மையணி வோரின்
மேவர விருந்தெழு மேதினி நடுங்க. (௰க)

பாசமொடு காலபடர் பற்றவரும் வேலை
யீசன்மக னைத்தொழு திருந்தகண நாதர்
மாசறு குமாரனடி வாழ்வுபெறு வோனை
நீசர்விடு மென்றவரை நீக்கினர்கண் மாதோ. (௰உ)

அன்னவர்க டென்றிசையி னானைகொடு போற்று
மன்னனை வணங்கவா லாறுபுகல் வீரா
லன்னமுறை கூறவளி யேற்றமுகில் போலாய்ச்
சென்னியு நடுங்கவுயர் சிந்துபுர முற்றான். (௰௩)

உற்றபொழு தாறுமுக முள்ளகும ரேசன்
பற்றினொடு வாழ்திரி சுதந்திரர் பராவ
முற்றவுணர் கும்பமுனி மோனமுனி வோர்கள்
சுற்றசன காதியர் களித்துடன் வணங்க. (௰௪)

மானருண் மடக்கொடியும் வானரச னீன்ற
வேனகு கருங்கண்மத வேழமட மாதுந்
தான்மொ டிரண்டுபுற முந்தழுவ வேல்வேன்
ஞானமுறு முத்திரையி னன்குற விருந்தான். (௰ரு)

நன்றியுடனாறுமுக நாயகனிரங்கி
மன்றன்மல ராஞ்சரண வாரிசமு னைகத்
தென்றிசை புரக்குமிறை செளனியணிக் கேத்தி
நின்றருமரேசனடி நேர்கொடு துதித்தான். (௧௬)

தேவரிடர் தீர்த்தவுணர் தேயியர் கழுத்தின்
மேவுகல னீக்கிமறை மிக்கவுரை காநாத
மூவிரு முகக்கடவுள் முண்டக மலர்த்தாட்
பூவென வியந்துதரு மன்புகல்ய நாளுன். (௧௭)

இம்முறையர்க ளாயிடினு மெக்குறைசரணத்தே
தொழுமவரை நான்மறை துதித்தமுநி யோரும்
வழிபட வியற்றிய மநுவரை மாதின்
குழவியென வாழ்த்தியுயர் கூற்றிறை துதித்தான். (௧௮)

காடரிய தேவர்சே னாபதியு மாகப்
பீடுபெறு நிற்கொடு பெரும்பகை யொழித்தே
கேடமர் வாலிலைமை நிற்கவருள் செய்த
வாடகமுரு காவெனவு மந்தக னிறைந்தான். (௧௯)

பசுவதி தருங்குக பராவருமை ஞான
வசுவிரு வகற்றமரு வேறுதயசொ லாறு
முககுரு பராவுனது முண்டக மலர்த்தாள்
புகலெனவு மியாமிய புலத்திறை பணிந்தான். (௨௰)

தன்னனரிய லாதகொடுந் தானவர்க ளாய
புன்மையொடு மழுக்கபுல வர்க்கரு மருந்தாம்
பன்னவ கயம்பரம மென்றனை பராவி
யெண்ணரிய கூற்றுவ னிறைஞ்சியவ ரிலுறுன். (௨௧)

நின்றுகம ஜீனக்குமர னீடருளி னோக்கி
யுன்றனியி ளைம அளங்கனி சிறக்க
மின்றவர லாறுபகர் வாயென வியம்பத்
தென்றிசை புரக்குமிறை செப்புத லுவந்தான். (௨௨)

பிறைமுடி யானது பெருங்கருணை யாலே
யறமொடு கொடும்பவ மடைந்தவர்க ளியாரு
நிறைதரு சுவர்க்கநிர யம்படர வீரே
ழுறுகதியு முக்கவுர வித்திடல்செய் வேறல். (௨௩)

இந்தமுறை தானுமியல் வேதியரு முன்னூல்
விந்தைபுணர் வின்றமனு வேந்தரு மருங்கே
வந்துட னிருப்பமதி மாலைபுனை வோர்க்கெவ்
சிந்தனை வெருண்டவர் வினைச்செய லுணர்ந்தே. (௨௪)

நீதிபுரி தன்மையுடை யேனெறியி னில்லாப்
பூதக னியற்றியிடு பாதக முணர்ந்தே
யேதமொ டிவன்றனை யழைத்திடு மெனாமுன்
றூதரை விடுத்தனன் விடுத்தவர் தொடாமுன். (௨௫)

நின்னருகு நின்றவா நெருங்குகண நாத
ரென்னுடைய தூதரை யிடித்தொரு மிலேச்சன்
றன்னையு னடிக்கமல விடுதழு விப்ப
தென்னென நமன்புகலு மின்சொலது கேளா. (௨௬)

ஞானமுள ராயிடினு ஞானமில ரேனு
மானின்விழி யார்மிசை மயங்கினர்க ளேனு
மேனைய வழுக்கின்முறை நாடினர்க ளேனு
மானத மியற்றெருழி லடைந்திலர்க ளேனும். (௨௭)

முந்துபவ மும்முறை முயன்றுளர்க ளேனுஞ்
சுந்தர மறைத்திரி சுதந்திரர்கள் சூழ்ந்து
வந்துதொழு நம்முக மலர்ச்சியது நோக்கிற்
சிந்துபுரம் வந்தினி திருக்குமவர் செய்த. (௨௮)

தீவினை யொழித்தினிய செம்மையின ராகி
யாவலொடு நந்தம தடிக்கமல நீழன்
மேவர விருப்பரிவன் மேபமுக மாறுந்
தாவற விழித்தவுடன் சாய்ந்துயிர் விடுத்தான். (௨௯)

வருதிரி சுதந்திரர்முன் வாயுரை புகன்றுன்
விரைவினுயர் நம்முகம் விருப்பினொடு பார்த்தான்
பரிபவ மொழித்துமறை பண்பினி னிறைஞ்சு
மிருசரண தாமரை யிருங்கதி யடைந்தான். (௩௰)

ஆணைநம தாணையென வாறுமுக வேலோ
னேனுடைய கூற்றின்முக மின்னருளி னோக்கித்
தானுவின் மகன்றனைய தண்ணளி சுரப்ப
வாணிதிக ரானமணி நாவினின் மகிழ்ந்தே. (௩௧)

அந்தகனை நோக்கிமுரு கேசனறி விப்பான்
சிந்துபுர மானது சிறப்பினொரு மூவர்
முந்துறு தவத்தரொடு நாலு முறையாக
விந்தையுடன் வாய்த்ததி விளம்பபதி யாமால். (௯௨)

வேறு.

என்று பன்னிரு தடம்புயக் குமரவே ளோதிராய்
நின்ற கூற்றுவ னுணர்தரக் கூறின னிலையார்
தென்றி சைக்கணா றுமுகன் சேவடித் துணையை
நன்றி பெற்றகை யுச்சிமேற் கூப்பின னடந்தான். (௯௩)

ஆய தன்மையாற் சுகமுனி யறிதர வியாதன்
பாய தெண்டிரைப் புணரிசூழ் செயந்தியம் பதிதான்
சேயின் மிக்கசா யுச்சியத் திருநெடும் பதியா
மேய சத்தியஞ் சத்திய மெனவுரை விடுத்தான். (௯௪)

இயமனுக்குச்சிந்துபுரவைபவமுரைத்தவத்தியாயம் முற்றிற்று.
ஆ—திருவிருத்தம்...௭௯௪.

பதினேழாவது:
பிரமன்றேவர்கட்குபதேசித்த அத்தியாயம்.

விரிந்த மாமறை நான்கெனத் தொகுத்தசீர் வியாதன்
தெரிந்த மேலவர் புகழ்சுக முனிவனுட் டெளியப்
பரிந்த மாதவச் செயந்தியம் பதியின்மான் மியமே
பொருந்து காதையொன் றுணர்த்துவன் கேளெனப் புகல்வான்

பாவகாரியாய் வணிகர்தங் குலத்தினுற் பவித்து
மூவர் தம்மையும் பூசுரர் தம்மையு முழுபார்
மேவு மாதிரத் திறையவர் தம்மையு மேலா
மேவர் தம்மையு நிந்தனை புரிந்துழன் றிருந்தான். (௨)

வாணி கத்தினிற் சோரகா ணிகமனை மதித்துத்
தூணி விற்பவர் முன்னதிற் பாதியுஞ் சுருக்கிப்
பேணி விற்பவன் ருய்தரு மாப்பொனிற் பிரித்துக்
காணி கைக்கொளச் செட்டியா பாரமுஞ் சுற்றான் (௩)

தாறு பீலில னீருநர் தம்மையுந் தடுக்கு
மீனன் புண்ணிய பாவமா யுள்ளன விரண்டு
மாநிலத்திடைப் பொய்யெனப் புகன்றபேழ் வாயான்
ஞான மானதூ றறிவரி தியவங்கொடு நடப்பான். (௪)

வருணா நான்கையு மொன்றெனா நின்றவ மதிக்கு
மிருணா யந்தனோ றுணர்விலன் வருணமான் கினிலும்
பொருணா யந்தனோன் றின்றுநால் வகையெனப் பூண்டோர்
தருணா மோர்ந்துகூத் தாடுவோர் வேட்கையின் றகைமை. (௫)

பெரிய வான்சிலை யுருவமும் பிறங்குதாம் பிரத்தி
ஞாரிய சீருரு வதனையுந் தெய்வமென் றுரைக்கி
னரர்க டம்மொடு நவிற்றுத லில்லையா னரலைப்
பரவை மாநிலத் தியல்புள ரென்பது படிறே. (௬)

தாய ராவனுந் தந்தைய ராவனுந் தவத்திற்
சேய ராவனுஞ் சுற்றம தாவனுஞ் சிறப்பின்
மேய தேவர்க ளாவனுந் தேவரின் மேலாந்
தூய மாதவ ராவது மாய்விலாச் சொன்னம். (௭)

என்ன நெஞ்சத்து ளியாரையும் யாவையு மிகழ்ந்து
பன்ன கப்பிட ராற்றிய படிவிக்கோர் பரமாய்
மன்ன லத்துட னிருந்தன னிருந்தநாட் பலபோய்ப்
பொன்னி னிச்சையாற் கப்பலிற் புணரிநீந் தினனால். (௮)

புணரி சூழ்ந்தநி வாந்தரத் திடமெலாம் புகுந்து
வணிகர் தன்மையிற் பலபொரு ளியாவையு மாறிக்
கணித மில்பொரு டேடிநீள் கப்பலி னேற்றித்
தணிவ ருங்களி கொண்டுதன் கடனடுச் சார்ந்தான். (௯)

வங்க நீரிடைச் செல்லுழி மழையுமோ வாது
பொங்க மாருதச் சூறையு மெறிதரப் புணரி
தங்கு தோணியுந் தகர்ந்தது நிதியமுஞ் சலதி
யங்கு வீழ்தர வணிகனும் புணரியு டாழ்ந்தான். (௰)

வீழ்ந்த செட்டியு நீந்தினன் மிதந்தனன் விரிநீர்
சூழ்ந்த தெண்டிரைத் தரங்கமீ ரிர்த்திடச் சுரர்தாந்
தாழ்ந்த சீர்வத ஞாம்பகச் சந்நிதி சார
வாழ்ந்த பேருணர் வொழிதரச் சென்றது வாழ்நாள். (௰௧)

உயிரொ ழிந்திடு மியாக்கையை யவ்விடத் துறைவோ
ரியல்பி னாலெடுத் தீமத்தி னுய்கனுக் கேற்ற
நயனு ணர்ந்தமுற் கருமமு மாற்றினர் நன்னூற்
பயனு ணர்ந்துள சுகமுனி கேளினிப் பகர்வான். (௰௨)

செட்டி செய்தவெம் பவமெலாஞ் சிறுகுழி யிடத்து
மட்டு றம்புன லிரவிசெங் கதிரினால் வறந்து
விட்ட பான்மைபோல் வேனொரு வாவற வின்றே.
நிட்ட தேர்மிசைக் களித்துட் னேறினி னிருந்தான். (௰௩)

தேரி னேறினன் பரிதியின் காந்தியிற் சிறந்து
மேரு வில்லுடைப் பரமன்சா ரூபமாய் விளங்கிக்
காரி னேர்தரு கண்டமுஞ் சந்திர கலையு
மேரு டன்றரித் தருக்கணத் தவரொடு மிருந்தான். (௰௪)

வரையி லாதுசெய் பவத்தினன் மூத்தவோர் வணிக
னரிய தாயசா ருபத்தை யுற்றன னென்று
லரிய மாதவர் செயந்தியம் பதியிடந் தடைந்து
னரிய மெய்திடிற் கதியெவன் சொல்வது மணிந்தே. (௰௫)

பகர்வ தற்கரி தாகிய செயந்தியம் பதிக்கு
நிகரெ னப்பல தலங்களை யுவமித்து நிகழ்த்தாக
தகவி னோர்களுங் கோடிப்பவச் சலதியிற் ருழ்ந்து
மிகைய டைத்தகூற் றுவன்புரந் தன்னின்மே லுவரால். (௰௬)

சடமெ டுத்துளோ ரியாரையும் பரகதி தன்னி
லுடனி ருத்திய செயந்தியம் பதிக்குவ மானங்
கடனி லத்தில்வே றெண்ணினோர் காலனீள் கண்ணும்
வடவை பற்றிய புனவிருந் தென்னவும் வதிவார். (௰௭)

புண்ணி யத்தலச் செய்கையை யுந்திபூத் துடையான்
விண்ண கத்துள விந்திர னாதியாம் வியன்சீர்ப்
பண்ண வர்க்கெலாம் பகர்ந்திடு மனைவயிற் பரிவா
யென்று தற்கரி தாஞ்சிந்து புரமென விசைத்தான். (௰௮)

எடுத்த நான்முகன் காசினீ டியற்சக நாதந்
தொடுத்த மாதவத் தவாரகை தோட்டலர் விரிஞ்சத்
கடுத்த மாபுர மைந்திவிங் கத்தல மாங்க
மடற்பு டார்ச்சன புரிகழை கழையுமா வனமே. (௰௯)

பச்சை மாநதி சூழ்தசோ ராடவிப் பருவாய்
நச்சு மிழ்ந்திடு நாகவீரச் சயனமா நகரா
மிச்சை கொண்டவந் நகர்க்கெலா மேலதா மினிய
முச்ச கந்தொழுஞ் செயந்தியம் பதியதே முதன்மை. (௨௰)

என்ற டிக்கடி நான்முக னெடுத்தெடுத் திசைத்தான்
றென்றி சைச்செல்வோர் செயந்தியம் பதியெனத் தேரு
ரன்றி வெற்பெறி வேலினன் செயந்திபு மலர்ப்பூங்
கொன்றை சுற்றிய வேணியா னிதயகோ கனகம். (௨)

வேறு.

திங்க டோறுந் நிகழ்திருக் கார்த்திகைத்
துங்க வேற்கைச் சுவாமியைப் போற்றுவார்
பங்க மாம்பவ பாச மறுத்துயர்
சங்க ரன்பதத் தாமரை சார்வரால். (௨௨)

மாத முப்பது மாகங் கருதிவே
லாதி முன்வரு ஞாயிறு மாடுவா
ரோதி லாப்புன லெத்தல மூழ்கினும்
போது தற்கரி தாம்பவம் போக்குவார். (௨௩)

வெள்ளி நாளும் விதிமுறை பாற்றிய
நீள்க திக்கெதி ராக நிகழ்த்திடின்
மூனு மாக முகாரம்பங் கோடியாச்
சூளு மைக்கும் பலனைச் சுருதியே. (௨௪)

சிறந்த கார்த்திகைக் கார்த்திகைத் தீபத்தா
னிறைந்த வாறு நிலாமுக மண்டலம்
பிறந்து சாமுன் னொருதரம் பெட்புற
வுறைந்து போற்றுநர்க் கோபிறப் பில்லையே. (௨௫)

வேறு.

சிந்துரன் னகர மல்லாற் சிறந்தவூ ரிருந்தா னெய்யாத்
கந்தன்முன் றீப மேற்றக் கற்பிக்கு முதியோர் தாமு
முந்துவான் பரியின் வேள்வி முற்றினோர் கதியை யன்னோர்
சிந்தையாற் பெறுவ ரென்றே வேதமோ யாது சாற்றும். (௨௬)

அற்றைநாட் கந்தன் மேவு மாலய முறுதுஞ் சோதி
பெற்றவான் றீபம் பார்க்கும் பெட்பினோர் தங்கட் கெல்லா
மற்றுமோர் சனன மின்றால் வானுளீர் விரிப்ப தென்னே
கற்றுளோ ரேனுங் கல்லாக் கடையிலர் தாற்று ரேனும். (௨௭)

சென்னியா றுடைய வையன் செயந்தியம் பதியி னீங்கா
தன்னிலை பொருந்து மேலோ ரடங்கலுங் கயிலை யீசன்
பொன்னடி பெறுவ ரீது புகன்றது வாய்மை யென்னப்
பன்னினன் கடவு ளோர்க்குப் பதுமப்பூந் தவிசக் கோமான். ()

ஒன்றிரண் டொருநான் றான வுயர்தினத் தோறு மன்பாய்ச்
சென்றிருந் தாலுந் தீமை செயத்துணிந் தார்க ளேனு
நன்றுணர்ந் திருந்தா ரேனு நான்மறைச் செயந்தி யுற்றோர்
கன்றிய பாவ நீங்கிக் கடவுளர்க் குரிய ராவார். (௨௮)

கருதரு மேலை வீட்டுக் கேறுதற் காக வைத்த
பொருவரு மேணி சிந்து புரமெனப் பிரமன் விண்ணோர்
தெரிதர துட்ப மாகத் தேற்றின னனைவி யாதன்
பரிவுடன் சுகற்குத் தேறப் பகுத்தனன் றெருத்து மாதோ. ()

பிரமன்றேவர்கட்குபதேசித்தவத்தியாயம் முற்றிற்று.

ஆ—திருவிருத்தம்—௭௩௯.

பதினெட்டாவது:
சுகப்பிரமரிஷிபூசைபண்ணின அத்தியாயம்.

நாடருந் தவத்தின் வைப்பா நைமிசா ரணியத் துற்ற
பீடுறு முனிவர் கேட்பப் பெருமறைச் சூத னென்பா
னீடருள் சுரப்ப நோக்கி நெடுநிலா வெண்ணி பொற்றான்
சூடிமற் றவர்முன் னுகச் சொல்லுதற் குள்ளம் வைத்தான். (௧)

நவையிலா மறையின் மூர்த்தி நாரண வடிவர் தாங்கு
முவமையீர் வியாதன் றந்த விறுசுக முனிவன் கேட்பச்
சிவனருள் குமர மூர்த்தி செயந்தியம் பதியிற் காதை
யவையுப தேச மாக வறிவொருங் குணர்த்து கின்றான். (௨)

பாரதங் கண்டத் தாடு பகர்தரு மூவா றான
சீரிடங் குமர மூர்த்தி திருவருள் போலா யுற்ற
பேரினைப் புலரிக் காலைப் பேசின ரியாரு முள்ளத்
தாருள ளடைந்து பாவத் தருக்கனை யகற்று வாரால். (௩)

எழுமுகிற் படலை தூங்கு மிமையமால் வரையின் பாங்க
ரழகினுக் கழகு செய்யு மாடியின் சிறப்பு வாய்த்துச்
செழுமைபெற் றுயர்ந்த ஞானச் செய்யவிற் றிரளி லப்போ
தழுவிமுத் தேவர் காக்குந் தகையபட் டினமொன் றுண்டால்

அந்தமா நகரிற் றேவ ரியாவருந் திரண்டன் பாக
முந்துமோர் தேவர் சேனு பதியென முருக வேட்குச்
சிந்தையார் வத்தி னோடுந் திருமலி மவுலி சூட்டிச்
சந்தரான் மறையின் வாழ்த்தித் தன்மலர் மாரி தூற்றி. (௫)

அன்றுதொட் டின்று காறு மாதரு ளபிஷே கப்பே
ரொன்றிய குமர னென்ன வும்பர்கள் வணங்கி யேத்த
வென்றிவே லண்ணல் போற்றி வேண்டினர் வேண்டி யாங்கே
நன்றருள் புரிந்து வேத நகிற்றவிற் றிருந்தான் மாதோ. (௬)

கங்கையின் கரையி னோர்சார் கனகல மென்னுந் தீரத்
தங்கினி தமர்ந்து தாமே யளித்தன ளகில மெல்லா
மங்கல மரபி னோர்ந்து மறைகளுக் கெட்டாச் செவ்வேள்
பங்கமில் சிவமா னுக்க னெனப்பெயர் பரித்தா னம்மா. (௭)

மலையத்தின் மேல்பான் முத்தி வழங்குமர் தரங்க மான
நிலயத்திற் குமர தாரை நீணதிக் கரையின் பாங்கர்க்
கலைமுற்று முணர்ந்த வேத வாரிடர் கண்ணே யாகித்
தலைமைத்தாம் வேத பாடந் தணப்பிலா தவர்கள் கூட. (௮)

இருந்தருச் சொல்லிக் கொண்டி யாவர்க்கு மிறைவ னாகிக்
கருந்தட நெடுங்கட் செவ்வாய்க் கவுரிவார் முலைப்பான் ஞானத்
தருந்திவெஞ் சமணை மாய்த்த வாறுமா முகங்கொண் டேற
பெருந்தகை யாங்கு மாப் பிரமசா ரிப்பேர் பெற்றான். (௯)

பனிமுகிற் படலை நீங்காப் பழநியஞ் சார லுப்பட்
டனிமுத லாகி மூத்த தன்கிழக் கோலங் காட்டி
முனிவரர் நால்வர்க் குண்மை முற்றொருங் குணர்த்தி யாங்குச்
சினகரத் திருந்து ஞான தேசிக னெனும்பேர் பெற்றான். (௰)

தொன்மறை முடிவு மூத்த சுவாமிமால் வரையின் ஞானஞ்
சின்மயத் தந்தை யுள்ளந் தெளிதர வோங்கா ரத்தின்
றன்மைமுற் கூறி யீசன் றன்குரு வடிவா யார்க்கு
நன்மைசார்ந் துயர்சு வாமி நாதனென் றொருபேர் பெற்றான். ()

விந்தையின் கிரியி னேர்சார் விராடபட் டணத்தி லியானை
தந்நாள மானை வேட்டுத் தன்னனி சரந்து வானத்
திந்திரன் முதல தேவ ரிறைஞ்சமுன் வருவைக் கோலச்
சுந்தர வடிவ மென்னத் துலங்கினன் குமர மூர்த்தி. (௰௨)

தினகரன் மரபிற் றோன்ற லுஞ் சித்திய சேன னென்றோர்
முனிநெறிக் கடர்மே லன்னான் முதியரா தலத்தின் ஞானத்
தனிவரை யதனிற் றோற்றுந் தன்மைமே னிவிய கந்த
னனிமகிழ் சிறந்த வேட்ட தேசிக னெனவ தானான். (௰௩)

கூடலி னினிதா யுள்ள கோலமோ ரறுபா னுன்கா
யாடின நடன மியாவு மனியனே னினிது காண
நாடகச் சுருதி யாக நடித்திடல் காட்ட வேண்டித்
தேடின னென்று கூறத் திருவுளஞ் சிறப்ப நோக்கி. (௰௪)

கூறரு மறுபா னுன்காங் கோலத்தின் செய்கை யெல்லாம்
வேறுவே றுகக் கந்த வேடிரு நடனங் காட்டி
யூறுதே னருவி கால வுயர்ந்தவன் பரங்குன் றத்தி
னேறுசீர் நடன நாத னெனவொரு பெயர்பெற் றானால். (௰௫)

தேறலி னருவி தாழ்வுந் தென்மலை யந்தத் தென்பா
லாறுடையைந்த தான வரன்பதி யனையின் மேற்பால்
வீறுமங் கலப்பொற் சாரல் வீற்றிருந் தமல நல்கு
நாறுபூங் கமல வீட்டு நான்முகன் வணங்கிப் போற்ற, (௰௬)

வேதனுக் குலக மியாவும் விதித்திடு செயலு ஞானப்
போதனைச் செயலு முள்ளம் பொற்புற வுபதே சித்துக்
காதலிற் சிறந்த வேற்கைக் காங்கேயன் கருணை காட்டித்
தீதறும் போக மோட்சந் தியாகியென் றிருந்தா னன்றே. ()

பொருநைச்சங் கமத்தின் தென்பாற் பொலன்குவ டுயர்ந்த சந்த
வரையினில் விர வாகு வழுத்தற் காக வேண்டிக்
கருணையின் விசுவ ரூபம் காட்டியெஞ் ஞான்று நீங்கா
தருட்டரும் விசுவ ரூப னென்றரும் பெயர்கொண் டானால். (௰௮)

தெண்டக வனத்துக் கோதா வரிநதித் தென்பாற் சீதை
பொன்னொடி. பிரிந்து காமத் தொள்ளழல் பொருதி ராமக்
கொண்டலெனுஞ் சகமுன் றேறக் கோதில்வாக் கியமோர் நான்கு
பண்டுரைத் தருளி ராம னெனப்பெயர் பரித்தாங் குற்றான். ()

கொண்டுறும் மகேந்தி ரத்திற் குருங்கத்திற் றெங்கீழ்ப் பாங்க
ரண்டுதற் கரிய கூர்மச் சிலையிடை யணிகொள் சோதி
மண்டபத் திரண்டு மாக ருடியும் புணர்த்தும் வானோர்
கண்டடி வணங்கக் காமக் கடவுளென் றொருபேர் பெற்றான். (௨௰)

வானுயர் சையச் சித்த மல்குமேகத் திரத்துச் சித்த
ருனமில் சனக ராதி யோகியர்க் குண்மை யான
மேனியிர் குளிகா சித்தி பாதுகா சித்தி மிக்க
ஞானமாம் பிராண யாம சித்தியு நன்க தாக, (௨௧)

முந்துற வுபதே சித்து முடிவிலா யோகி யோக
சுந்தரர் யோக நாதர் தூயயோ கேசர் வேத
மந்திர வடிவாம் யோக வல்லபென் றரைந்தா னந்த
நந்தலி னுமந் தாங்கிக் குமரவே ளண்ணி னானால். (௨௨)

திரிகூடா சலத்தி சான திக்கினி லிலஞ்சி யான
புரியினிற் கபில ராதி யோகியர் புகழ்ந்து கேட்ப
வரியமுத் தேவர் மூவ ராவது நாமே யென்று
சுருதியின் வரதராசத் தொல்பெயர் சூட்டிக் கொண்டான். (௨௩)

விந்தைமால் வரைக்கு மேல்சார் வெய்யல னெடுந்தேர் தட்டக்
கொந்துலாங் கவடு போக்குங் குமாரமா வனத்தி னுப்ப
னந்தகோ பாலர் தம்பி னுகிளங் கதிர்போ லுற்ற
முந்துசீ கரப்பேர் கொண்ட முதல கேத்தன கோமான். (௨௪)

கண்ணனுற் பத்தி யான காரண முதலா யன்று
ளெண்ணுதற் கரிய தாய வைகுண்ட மெய்துங் காறு
நண்ணிய தினயோர் பத்தி னுடகத் தியற்கை யாகத்
தண்ணளி சிறப்ப வாடிக் காட்டடை வணங்கித் தாழ்ந்தான். (௨௫)

கோகுலத் தாயன் வேட்ட குறிப்பெலா நடித்துப் பின்ன
ரோகையிற் கண்ண னென வுயர்திருக் கோலங் காட்டி
வாகுறு கண்ணன் சாயுச் சியத்தையும் வழங்கிச் செவ்வேள்
சீகரக் கடவு ளென்றோர் திருப்பெயர் சூட்டிக் கொண்டான். (௨௬)

கங்கையின் வடபாற் சிங்கி பேரிபட் டினத்திற் காமர்
தங்கெழிற் சிலைவி ராமன் றனைத்திரு பானித்து வாழுந்
துங்கமா குகற்கி ராமன் சொல்கதை யனைத்துஞ் சோரா
தங்குறா டகக்கூத் தாக வருளொடு நடித்துக் காட்டி. (௨௭)

சுந்தரச் சிலையி ராமன் றேற்றமுங் காட்டி ஞான
முந்திய பிரமா னந்த முத்தியுங் கொடுத்து வேத
மந்திரக் குகச்சு வாமி யென்னவும் வாய்த்து பேரா
னந்தநா யகனென் றேது நாமமுங் குமரன் பெற்றான். (௨௮)

திருமுது கிரியி லீசன் றிருமுன்பு பொன்ன னீன்ற
கருதரும் புதல்வ னென வசன்றனக் ககார மூன்று
மருவிய வகாரமூன்று வகைபட வுபதே சித்துக்
குருபர னுபர்ந்த மாயா மயக்குமா ரப்பேர் கொண்டான். (௨௯)

புகலுதற் கரிய மூகாம் புரியினிற் கபில யோகிக்
ககமகிழ் சிறந்த கால ஞானையைக் கடக்க வேண்டித்
தனகபமர் திரஞ்சொல் வாய்ந்த தந்திரப் பசும்பூ டாதித்
தொகைசொலிச் சகல லோக குருப்பெயர் சூட்டிக் கொண்டான். ()

பரம்பிப தரங்கத் துங்க பத்திரை வடபா லாக
வருந்தவத் துயர்ந்த கோசி கப்பெய ரந்த ணாளன்
றிருந்துற ஞான மெல்லாந் தெளிதர வுணர்த்தி ஞானம்
பொருந்துதே சிகப்பேர் சூட்டிக் கொண்டனன் போர்வே லண்ணல்.

ஆரிடர் கேண்மோ மூவா றனனன் னகரந் தோறுஞ்
சீருட னிருக்குந் தோற்றஞ் செயந்தியம் பதியிற் சந்தச்
சாரலின் வீர வாகின் றனையபே ரன்புக் காகக்
கூரிலை வேலோன் காட்ட வுளங்கொடு குறிப்பிற் சொற்றான். (௩௨)

சொற்றிடுஞ் செய்கை யெல்லாஞ் சூநரம் விளங்க வேற்கைக்
கொற்றவ னினிமுன் னதுங் கோகன கத்துள் ளானுக்
குற்றநற் கற்பத் தெல்லை யும்பர்வான் முனிவர் போற்ற
வற்புட னடிக்கு மென்ன வழிவொருங் குணர்த்தி னானால். (௩௩)

ஒருங்குற வுணர்த்திப் பின்ன ருலகெலாந் தானே யாக
வருங்குகன் சரணச் செந்தா மரைமல ருள்ளத் தேத்தி
யருங்குளி ரிமயச் சார லரித்துவா ரத்தை நீங்கித்
தருங்கதி மூல மான வதிரிகாச் சிரமஞ் சார்ந்தான். (௩௪)

அழிவிலாச் சிவன் முத்த னஞ்சுக முனிவ னென்பான்
கழிபெருங் காதல் கூர்ந்து கடவுளர்க் குரிய ஞானம்
பொழிதருங் கருணைச் சிந்து புரந்திய றந்தை செவ்வாய்
வழிமது செவிச்செவ் வாயான் மாந்தின்ன மகிழ்வும் பூத்தான் (௩௫)

உயிரினுக் குயிராங் கந்த னுபயதா மரைப்பொற் பாதம்
பயிலுநெஞ் சகத்த னாகிப் பனிவரைச் சாரற் றாங்கும்
வியனுடை யரித்து வாரந் தன்னில்வீற் றிருந்து வேதத்
தியலுணர் கருத்து மீதூர்ந் தெண்ணின னெண்ணி யாங்கே. (௩௬)

விழிதுயில் வாரைப் போல மிக்குயர் பிராண யாமத்
தழிவிலா யோக முற்றி யைந்தெனும் பிராண மாவைக்
குழுவினை யொன்ற தாகக் கூட்டமிட் டவையை மேலைச்
சுழுமுனை யதனிற் கூட்டித் தொடர்வினை யகற்றுந் தூயோன். (௩௭)

அந்தரத் திடையா றுக வாறுமா முகத்துப் புத்தேள்
சிந்துரன் னகரம் போற்றச் செல்லுழித் திரும்பி நின்று
முந்துமா லரித்து வார முதுபனி யிமயச் சாரல்
புந்தியால் வணங்கி மீண்டும் போயினன் போமா றுற்ற. (௩௮)

வேறு.

பனிதாழ்வரைக் கேதாரமும் பழநான்மறை முழுதுந்
தனிபாடிய சோமீசரன் றனையும்வலஞ் சூழ்ந்தான்
வினைதீர்தர வருகாசி விசாலாட்சி யெனும்பூங்
கனிதோய்தரும் பெருமானையுங் கண்டான்வினை காணான். (௩௯)

பெரிதாங்கதி வடிவாம்பிர யாகைத்திரு நதியுந்
தலைமீதுய ரடலக்ஷய வடமுந்தழை தென்பாற்
குரியார்க்கருங் கதிகாட்டிய கெயையும்மல னுறசீ
ரரிபாதமுந் தொழுதானகத் தரன்றாளிணை தொழுதான். (௪௰)

சகநாத மெனும்புண்ணிய தலஞ்சூழ்ந் தொருமுனிவன்
மகளாகிய கோதாவரி வானாறு படிந்து
தகவுர்தரு கோகன்னமுந் தெழுதேதிருப் பதியுங்
குகனேரியின் சிருங்கரங் குவித்தானேர்ந்து மவித்தான். (௪௧)

கச்சிப்பெரு மானைப்புடை களிக்குஞ்சிறு மானை
யச்சத்தொரு மானைத்தொட ரம்மானெனு மறைவாய்ப்
பச்சைப்பெரு மானைப்புணர் பதுமத்திரு மானை
பிச்சைப்படி தொழுதான்புக ழிறவான்வயின் பிறவான். (௪௨)

சொலகோபல நரசிங்கமத் தூமங்கல கிரிவாழ்
வலகீணர சிங்கர்புகழ் வலநாடு சுவாலைப்
பெலமாரா சிங்கத்தனைப் பிரமாம்பிகை பெட்பார்
பலமாதல மொருமாதவப் படிவத்தினன் பணிந்தான் (௪௩)

திருவட்டவ ராகத்திரு மாலைத்திக ழிலங்கைத்
தருவைத்தன வாதேயவன் டாழ்வார்க்குயர் வாக்கி
வருமச்சுத னாராயணன் மலர்த்தாளிணை வணங்கித்
திணைமுத்தின நிலவார்நரு மதையா றுடன் சிறந்த. (௪௪)

தரங்கத்திரை பணிலத்திரை தருதுங்கபத் திரைநீர்
பரம்பத்திரை சிரிசோணபத் திரைகண்டகி பவமா
யிரும்புக்கரம் போலாங்கவு சிகைபாநிவை யைந்தாங்
கரம்பற்றற வெடுத்தாகமுங் கவினத்தெளித் தனனால். (௪௫)

நீடேந்தவ நேமிப்பெயர் செடிமாவன மிருப்பார்
பிடொன்றிய விருதாண்மலர் பிடித்தான்சிர முடித்தான்
கோடும்பிறை முடித்தேமுறு குன்றந்தனிற் குன்றா
தாடுங்குழ கன்றாளிணை யடைந்தான்றுய ரடையான். (௪௬)

சுருதிக்கலை யண்ணாமலை தொழுதான்சுரர் போற்று
மருமைத்திருக் காளத்திசென் றடைந்தானன வரதம்
பாதத்துட ஞடுஞ்சபை பணிந்தான்பணி மீதே
மருவித்துயில் கோவிந்தனை மதித்தன்பொடு துதித்தான். (௪௭)

முத்தாங்கனி நாவற்கடை முளைத்தானைக்கை முகிழ்த்தான்
சித்தாமல கத்தாடவித் தெத்தாந்திரே யன்றான்
மெய்த்தாமரை விரைப்போதினை மேவிப்பணிந் தேதன்
கைத்தாமரை குவித்தான்றிரைக் காவேரியி னிறங்கி. (௪௮)

அரங்கத்தர வணைமேற்றுயி லாழிப்புய விருதட்
டரங்கைக்கொடு தாழ்ந்தானெறி தரங்கத்திரைப் பொன்னி
வரப்பெற்றதன் னதிப்பாலிரு கரைவாழ்பதி யனைத்தும்
விரும்பித்துதித் திடப்பக்கிரி மீதாயனை வியந்தான். (௪௯)

எட்டாகிய வெட்டாடவி னியைக்தேவினை யாடு
மட்டார்புனற் பிறைதாங்கிய மதுராபுரிக் கரசாங்
கட்டாகிய கடம்பாடவிக் காமாரிநற் சரணத்
தொட்டாடிக்கொண் டாடிக்கனி யுளங்கத்துதித் தார்த்தான். (௫௰)

பொதியாசலத் துயர்மாதவன் பூந்தாமரைச் சரணம்
விதியாலுடன் றுதித்தான்விதி வேதாகமப் பொருநை
நதியாடின னதியின்கரை யிருபாலுள நவைதீர்
பதியாமிரு வோர்வாழ்பதி பலவுந்தொழு தனனால். (௫௧)

பொருநைத்திரு நதிச்சங்கமப் புணரிப்புனன் மூழ்கி
யருமைக்கள கண்டத்தின ராற்றாரரை வணங்கி
மருமைக்குழற் கோதாவரி மகிழ்பூப்பச் சென்றாடித்
திருவுக்கணி மலர்போல்வளர் செயந்திப்பதி புகுந்தான். (௫௨)

மீதாறின விருந்தேகந்த வெற்புஞ் சிந்துபுரமு
மோதாதுணர் வான்றாளிணை யுளங்கொண்டுடன் றாழ்ந்தான்
றாதான்மயங் காப்பூசுரர் தமைபஞ்சவி செலுத்திக்
கோதாமத நீத்தைந்து குரோசத்தெல்லை சூழ்ந்து. (௫௩)

இரவித்தடந் தேர்தோய்ந்தெழு மிரவிப்பெயர்ச் சந்த
வரையிற்கடி திழிந்தவ்வழி வளர்பூசுரர் வணங்கு
மருமைச்சுரு தியின்வாய்ந்துள வானாவருக் கியமும்
பருவத்துடன் வாங்கித்திரை வதனாரம்பம் படிந்தான். (௫௪)

கங்கைக்கெழு மடங்காங்கடற் கரைக்கந்தபுட் கரிணி
சங்கற்ப விகற்பத்தொடு தாழ்ந்தான்றவத் துயர்ந்தா
னங்கற்புக நிறைதீர்த்தமொ ராறானகையும் படிந்தான்
திங்கட்பிள வளவுஞ்சடைச் சிவன்றாள்சிரம் புனைந்தான். (௫௫)

போராவினை முகத்தானடிப் போதாகம விதியிற்
பேராதரத் தாயாதனைப் பெரும்பூசனை புரிந்தா
னாராவமு தடித்தாமரை யணிநூபுர மணியிற்
சீராலுறு நவவீரர்க டிருத்தாண்மலர் துதித்தான். (௫௬)

அயிராவதந் தருமாதினை யடித்தாமரைப் போதுங்
குயில்வாய்மொழிக் குறக்கோமளக் கொடித்தாமரை யடியுந்
துயின்மாலையு முவணத்தனையுஞ் சூழ்தேவர்க டமையுஞ்
செயிர்தீர்மனு விதியான்மல ரிறைத்தேசிரங் குவித்தான். (௫௭)

பொன்னீடு விமானத்துருப் போலாந்திரை முகனை
நன்னேயமுற் றுலச்சகந் நாதச்சிவக் கொழுந்தைத்
தன்னேரிலம் முனிபுங்கவன் றகுசோடச விதியா
லின்னேயருள் விரென்றல ரிறைத்தான்வினை குறைத்தான். (௫௮)

சூர்மாதவர் முறைசூழ்தரத் தளவோனருள் மடவா
ரிருபானுற நெடுவேலொடு மிகற்சூர்ப்பகை தவிர்ப்பான்
வருகாரண மாய்முக்குணங் கடந்தானந்த மயமா
முருகேசனை யிமையாதுள மோனத்தொடு பார்த்தான். (௫௯)

பார்த்தான்பதி னாறும்விதிப் படிபூசனை பரிவிற்
கூர்த்தாறுமு கேசன்பதக் கொழுங்கோகன கம்பூத்
தூர்த்தான்விழிப் புனன்மாமழை சொரிந்தான்மயிர் கூச்சப்
போர்த்தான்கரங் குவித்தஞ்சலி புரிந்தாலயிற் புகழ்வான். (௬௰)

வேறு.

பன்னிரு கரத்தாய் போற்றி பசும்பொன்மா மயிலாய் போற்றி
முன்னிய கருணை யாறு முகப்பரம் பொருளே போற்றி
கன்னிய ரிருவர் நீங்காக் கருணைவா ரிதியே போற்றி
யென்னிரு கண்ணே கண்ணு ளிருக்குமா மணியே போற்றி. (௬௧)

கருணைமா றாதுள் ளூறுங் கண்கள்பன் னிரண்டி னாலே
யிருவினை களைந்த மேலோர்க் கினியவா னந்த மெல்லாம்
வரன்முறை பெருக்கி யன்னார் மனமெனுங் கோயிற் றாண்டாத்
திருவிளக் கொளியாம் வைவேற் செயந்தியம் பதியாய் போற்றி. (௬௨)

அருஞ்சகந் நாதா செம்பொ னாழியங் கடவுள் வேதன்
பொருஞ்சமர் வீர வாகு பொருதலைத் தெரியுந் தெண்ணீர்க்
கருங்கடல் வணங்கு நோன்றாட் கலவமா மயிலாய் தேவி
தருஞ்சிறு குருந்தே வானோர் தமக்கெலாங் குருவே போற்றி. (௬௩)

கருதரு ஞான மாய கருத்தினை விளக்கும் வானப்
பரிதியின் கதிரின் மூன்றுப் படிவம்போ லளவை யாறு
மிருசுட ரவையு மொன்று மியற்றியோர் பிரம மாகக்
குருவடி வாகி வந்த குமரனே போற்றி போற்றி. (௬௪)

இருமையி னுண்மை மூவா விளமைசேர் ஞானி யோர்தம்
விரிதரு தியான மேவி மெய்யிந் திரியத் தானுந்
தெரிதரற் கரிதா யார்க்குந் தேற்றரு நட்ப மாகுஞ்
சரவணத் தளியஞ் சாருஞ் சண்முகத் திறையே போற்றி (௬௫)

காமமே முதல வாறுங் களிதரும் பருவ மாறு
மோமெனும் பொருண்முன் னூன வுயர்மய கோச மாறுந்
தோமறு சுவைக ளாறுஞ் சூத்திர மாறு மாகத்
தாமொரு வடிவ மான சண்முக சரணம் போற்றி. (௬௬)

வின்னுதற் கரிய வாறு விதத்தொடு பகவ னாகித்
தென்னுமுக் குணங்க டந்து சேடியர் சிறப்பி னேந்தக்
கொள்ளுமுத் தேவர் தம்மாற் குவலயம் புரப்பச் செய்து
வள்ளியோர் பங்கில் வைத்த வானவ சரணம் போற்றி. (௬௭)

மறையவர் மகத்தி னீட்டு மாகுதி வழங்கக் கூவு
நிறையுமந் திரமுள் ளோர்ந்து நீடருங் கதியன் னோர்க்கு
முறைபுரிந் தருளு மாறு முகமுரு கேச பூந்தா
ணறைமலர் கமலப் போது நம்பினேன் போற்றி போற்றி. (௬௮)

குகமெனு நட்ப மாகிக் குகையெனு மிதய வீட்டிற்
குகைவரை யிருப்பார் தங்கள் குகையெனு மிதயப் போதி
லகமகிழ்ந் தன்னம் போல வருளுட னிருக்கு மாறு
முகவிகத் தெனையாட் கொண்ட முளரிப்பூஞ் சரணம் போற்றி. (௬௯)

பரஞ்சிகை தருமன் சென்னி பதுமத்தன் மேல்வாய் வேள்வி
யுரந்தரு கீழ்வாய் கண்ண னுளமுயர் வருடங் கோச
நிரந்தவச் சுவினிப் புத்தே னீண்முன்கா லுதர நாப்பண்
புரிந்தவத் திரியோ டாமித் திரன்பின்கால் புனலின் வேந்தே. (௭௰)

வாற்கனு வனலி ரண்டாம் வான்கனு மகவான் மூன்றும்
பாற்கனுப் பிரமர் பதனுப் பகர்தரு நான்காய் நீண்ட
மேற்கனு வயயத் தெய்வ மேயவோர் சிஞ்சு மாரத்
தேற்புறப் புடவி காக்கு மின்னருட் கடம்பா போற்றி. (௭௧)

வேறு.

ஓர்வடிவ மரமிரண்டு வினைக்கவடு மலமூன் றுயர்வேர்வைத் தறமாதி
நான்குபழம் பழுத்தே, யார்பூத மஞ்சசிறு கப்பாகி யாறு மருங்
காம முதற்றழைவைத் தெழுகாது தோலா, யேர்புரியட் டகமாய
வெண்பூக்கொண் டொன்பா னெனுமாவாயிற் கனுவைத்துத் திசை
பத்து நிழலாஞ், சீர்பெருகு பலமரங்கள் பயிராக்கி வளர்க்குஞ் சித்து
புரக் குமராவுன் செஞ்சரணம் போற்றி. (௭௨)

சாற்றியகம் மொளியாகிக் கம்மெனுமிந் திரியந் தயக்கரிதாய்ச்
சுகமென்னுஞ் சுரர்சனத்தின் பதியாய்ப், போற்றுசுகம யிலைகத்துக்
கம்மெனுமின் புருவாய்ப் புகல்கமெனிந் திரியவனி பூண்பவனு மாகி
யாற்றலுறு கம்மான வாகாயந் தனக்கு மாதிநடு முடிவாகி யடியேனுக்
கிருதா, ளேற்றமுள்ள கதிகாட்டிப் பெனையாண்ட சுடர்வே லேந்து
கரச் சிந்துபுரத் திறைபோற்றி போற்றி. (௭௩)

கோவான வினைஞாகிக் கோணைபுனைக் குழவிலை நடத்தி யந்தக்
கோவானதுறக்கக், கோவாகிக் கோவான பசுபதியு மாகிக் குகையான
விதயமெனுங் கூடாகி வாக்காங், கோவானும் விழியான கோவானும்
புவன கோடியினுண் டானசரா சரமனைத் திலையுங், கோவாகிப் புரந்
தளிய வுளக்கமலத் துள்ளே குடியிருக்கு மருக்கடம்பக் குமரனடி
போற்றி. (௭௪)

ஞானவடி வாகிமுது ஞானவிதை யாகு நன்றுநலின் முலைப்பமுதுக்
கின்குழவி யாகி, ஞானமெனும் பாற்கடலி னடுச்சுழிய தாகி ஞான
நிமலசம்பெரியர் நன்கிடமு மாகி, ஞானநிறை கதிராகி ஞானியர்க்கு
மெட்டா ஞானவிரு சத்தியுட னிருந்தெவையுங் காத்து, ஞானமொடு
வடநிழலி னிருப்பார்க்கும் விருப்பா ஞானவுரை விரித்தகுரு நாத
னடி போற்றி. (௭௫)

விரிக்குமிளங் கதிராகி மேவியந்தச் சுடரை விளக்குவிக்கு மவ
னாகி விளங்குமிளங் கதிராற், பெருக்குமயன் மாலீசன் போற்படைத்
துங் காத்தும் பின்றுடைத்துஞ் சிவனிதயப் பேரிடத்து நிறைவாய்,
செருக்கியவுற் பவமுதல வாறாகும் பருவ நிறைபு மந்த வடிவகன்று
நினைவார்க ளுளத்தே, யிருக்குமிருக் கரியாத பரம்பொருளு மாகி
யென்னுளத்திற் குடியிருக்குங் குமரனடி போற்றி. (௭௬)

பக்கமென லாங்கருணை வெண்மையின வாங்கார்ப பாசவிரு
நூல்கொண்டு பாய்சராடாக்கி, மிக்கவதி லேமூன்று நூற்றறுபத்
தைந்தா மேவுதின மணிக்குவைகள் கோணவணிசெய்த, தக்கவட
மொன்றலபல் கோடியுகக் கோறுஞ் சாத்தியிரு சத்தியிரு சாருமுற
வைத்தோன், கொக்குவரை யோடுணை குருகுவரை பெயரக் கூர்
வேற்கை யேந்திய குமாரனடி போற்றி. (௭௭)

திங்களிரண் டறுபதிதழ்ச் செங்கமலப் போதாந் திகழ்பருவ
மாறுசெறி வருடமொரு கொத்தாந், தங்குவரு டக்குலைக ளறுபதென
நீள்செந் தாமரைத்தண் மலர்மாலை தன்னிலள விறந்த, கொங்குயிர்த்த
பலகோடி புனைந்தபொரு சூரன் குடர்மாலை யுடன்வாகை மணமாலை
புனையுந், துங்கநெடுஞ் சுடர்விரிந்த விரண்டுமுனைக் கதிர்வேற் சூல
மெடுத் தோன்றிரணத் துணைச்சரணம் போற்றி. (௭௮)

தாரவிரு சத்திகளுஞ் சாருமொரு சத்தி தரித்தருமந் திரசத்தி
யுற்சாக சத்தி, சீரியநற் பிரபுசத்தி யிம்மூன்றிற் சிறந்து செய்யுமறம்
பொருள்காமஞ் செவ்விதுறவுதவு, மாரருளின் வாய்ந்துபதத் தம்
புயம்ப ராவு மன்னோர்க்கன் னையர்தந்தை குரவரின்ன் புற்றே
பேரருளின் சீர்காட்டுந் துணைக்கடம்ப மாலைப் பெருமான்ற னிருசர
ணப் பிரசமலர் போற்றி. (௭௯)

ஆகமனம் வாக்கென்னு மவைமூன்றின் கரும மாறுகும் வினைய
கற்றி யரியபத்தி யோடுஞ், சேகறுமுக் கரணமுற வந்தனைசெய்
வோரைத் திருக்கருணை காட்டிமலத் திரயாதி நீக்கிக் கோகனதத்
தாளான கோயிலர சளித்துக் கும்போத யற்குமுறை கூறியெனை
யாளுங், கேகயப்புள் ளரசேறு சோதிவடி வேலோன் கிரணவரு
ணச்சரண விணைப்போது போற்றி. (௮௰)

வேறு.

வருணமாச் சிரம நான்காய் வாழ்பவர் பரவ வன்னோர்
விரியுநாற் றிசையிற் கீர்த்தி விளக்குவித் தறமுன் னான்கும்
பொருளொரு நான்குஞ் சேரப் புரந்தருள் குமர மூர்த்தி
திருவடித் துணைய தாகுஞ் செழுமலர்க் கமலம் போற்றி. (௮௧)

பன்னோரிந் திரியற் கெட்டாப் பரமவா னந்த மாகி
மன்னுயிந் தியக்கோ வாகி வான்செப வடக்தி னூலே
துன்னருஞ் சிறப்பு வாய்த்துச் சூழ்ந்தவிந் திரிய நீக்கு
முன்னவ ரருச்சித் தேத்து மூவிரு முகத்தாய் போற்றி. (௮௨)

சிவனுக் கான்மா வாகிச் சிறந்தபூ ரணமென் றன்னுந்
தாவறு முதியோர் தங்க டியானத்தாற் றன்னைக் காட்டி
மேவர வுலகுக் கெல்லாம் வியன்குரு வாகி யாண்ட
மூவிரு முகத்துப் புத்தேள் முண்டகத் துணைத்தாள் போற்றி (௮௩)

மகத்தினி லிரண்டு, நான்கு மற்றவோ ரிரண்டும் பின்னர்த்
தொகுத்தவோ ரைந்தி ரண்டு சூழ்ந்திடு மெழுத்தா யோம
வகத்துமந் திரமு மாகி யாகுதி யனைத்தும் போற்றிப்
புகத்தவாக் கதிமுன் காட்டும் பூங்கடம் பத்தாய் போற்றி. (௮௪)

பொன்னலர் கமலந் தன்னல் புவனமே யாதி யாக
மன்னுமெய் புவன வாழ்வும் வறிதெனக் குமர மூர்த்தி
தன்னருட் சலதி மூழ்கத் தாழ்விலாக் கருணை காட்டி
யென்னிடத் தன்பு பூத்த விணையடிக் கமலம் போற்றி. (௮௫)

கதியெனு முதிய வீட்டின் கண்ணினே தென்றன் னெண்ணித்
துதிதரு முனது கீர்த்தித் தோத்திரம் புராண மான
மதுரவா ரிதியி னீந்த மகிழ்ந்தருள் சுரந்தன் னூர்க
ளிதயதா மரைப்பூங் கோயி லிலங்குநல் விளக்கே போற்றி. (௮௬)

உடைந்தவான் கும்பம் போல வுள்ளொடு புறமு மொன்று
யுடைந்தவா ரிதியின் மூழ்குங் குடம்புற மகமு மொன்றாய்
மிடைந்தவாரியினுள் ளாகி வெளியுமாய் விளங்கிச் சூர்மாக்
குடைந்தநெட் டிலைவேல்கொண்ட குமரனே போற்றி போற்றி (௮௭)

தத்துவ மிருபத் தஞ்சாச் சாற்றுநர் தமக்கு மந்தத்
தத்துவ மிருபத் தாறாய் நினைத்துளோர் தமக்கு மீளத்
தத்துவ மிருபத் தேழு தானென்பார் தமக்கு மந்தத்
தத்துவத் தியல்பாய் நின்ற சண்முகத் திறையே போற்றி. (௮௮)

செய்யதொம் பதம தான சீடற்குத் திருந்து மேன்மைத்
துய்யதற் பதம தான பிரமத்தைத் தொடர்பாற் காட்டிப்
பையவே யசிய தென்னும் பதத்தினு லொன்ற தாக்கு
மெய்யுணர் குருவாஞ் சோதி வேற்படைக் குமரா போற்றி. (௮௯)

அயனெனப் பிராகை மூழ்கு மையனே யிலந்தைக் கானி
னயனுறு செபத்தின் வாய்ந்த நாரண வடிவே ஞாலத்
துயர்சகந் நாதந் தன்னி லுணருந் தரியே வானப்
புயனிறக் கண்ண னாகித் துவாரகை புரப்பாய் போற்றி. (௯௰)

தாண்டவக் கூத்துத் தில்லை தனிற்பரா சத்தி யோடு
மூண்டிருந் தகில வாழ்க்கை முற்றறக் கயிலை னீதி
யாண்டிருந் தளப்போய் கூட லணிநகர்ச் சித்த ராகி
வேண்டிய விநோத மாற்றும் வேளெனும் படையாய் போற்றி. (௯௧)

வாரண வாசி யான மன்றத்துக் கன்ன தானக்
காரண வுமைபோற் காக்குங் கடவுளே காஞ்சி தன்னிற்
பூரணக் கம்பை நோற்கும் பூவையா யரங்கந் தன்னி
னாரண வடிவாய்த் துஞ்சு நான்மறைக் கடம்பா போற்றி. (௯௨)

விளம்பிய விவையல் லாது விராட்பெரு வடிவ மாகி
யுளங்களி சிறப்ப யாவு மொன்றென நிறைந்து மாயக்
களங்கறுத் திடுவோ ருள்ளக் கமலப்பூஞ் சுரும்பே வேத
மளந்தறி யாத செவ்வே ளையனே போற்றி போற்றி. (௯௩)

சொல்லரு ஞான வீட்டுச் சுடர்விளக் குலக மான
செல்விவான் றிலக மேலாய்ச் சிறந்தவா னந்த சார
மல்லறீர்த் தெனையாட் கொண்ட வற்புத வடிவே யின்றுன்
மெல்லடிப் போது சூட்ட விருப்பமுற் றடைந்தே னென்றான். (௯௪)

அஞ்சலி செலுத்தி வேற்கை யாறுமா முகத்துப் புத்தேள்
செஞ்சிலம் பலம்புந் தண்டைச் சீறடிக் கமல மீது
நெஞ்சகங் குழையச் சென்னி நிலமிசை தாழா நின்ற
வெஞ்சலில் சுகனைக் கையா லெடுத்தனன் குமர மூர்த்தி. (௯௫)

கையினு லெடுத்துக் கந்தன் கடம்பமார் பிறுகப் புல்லித்
துய்யமா தவத்தின் மேலாஞ் சுகமுனி வேத சார
மெய்யினுற் றுகித்த வெல்லாம் விருப்பமிக் கடைந்தோ மென்று
வையமீன் றளித்தா ளீன்ற மைந்தனன் குறைப்ப தானான். (௯௬)

சொற்றருந் தவத்தின் மேலாஞ் சுகமுனி சொற்ற தெல்லாங்
கற்றுவந் துரைப்போர்க் கெல்லாங் கருத்தினி லெண்ணி யாங்கு
வெற்றியம் புயத்து வீர வாகுவே யருள்வா னென்றே
முற்றெருங் குணர்வோர்க் கெட்டா மூவிரு முகத்தன் சொன்னான். ()

வேறு.

வந்தனையாய் நமைத்துதிக்குஞ் சுகனே கேண்மோ வையகத்துக் குணதுதெரி சனத்தால் வாக்காற், சிந்தனையாற் பரிசத்தா லறமுன் னுன்குந் சிறந்துதவி யுயர்சிவன் முத்த னாக, முந்துநிலத் திருத்தியெ னக் குமரப் புத்தேண் முகமனெடுத் துரைத்துவிடை கொடுப்பப் போற்றிச், சுந்தமறைச் சுகமுனிதன் கரங்கள் கூப்பித் தணவாத விடையென்றே தணந்தான் மாதோ. (௯௮)

குற்றமொரு மூன்றகற்று முனிவீர் கேண்மின் குறைவிறவச் சுகற்குவிடை கொடுத்துச் செவ்வேள், பற்றொடுதன் செயந்திபுரத்

நின்று காரும் பலிக்தவர்க்கெல் லாங்கருணை பாலித் திற்றுன், பெற் றமுறைத் தான்மகனைப் பணியும் பூசை பெரிதியற்றுங் கீர்த்தனங்கள் பேச தம்பா, அற்றுரைத்த சரித்திரமே கதியுண் டாக்கு முண்மையு ண்மை யென்றவர்பா லிசைத்துப் பின்னும். (௬௯)

உரைத்தகதை வியாதமுனி சுதற்குச் சொன்ன துங்களிடத் துரைத்தன னியா னுமையேசய் காதற், சரித்தி ரத்தைக் கருத்திறு டன் கேட்டின் றூர்க்குத் தருபமுத லொருநான்கு மாமிற் சாரும் விரித்தபுரா ணத்தியலே யெழுதித் தானம் விதிமரபிற் கொடுப்பவர் தாம் வேலை ஞால, மருத்திபுடன் கொடுத்தபல னடைவார் வாங்கு மன்னவரு மன்கதி யடைவர் மாதோ. (௭௰)

புத்தகத்தைக் குமரன்வடி வாகப் பூசை புரிந்தியற்றும் பெரி யோர்க்கும் போர்வேற் செங்கை, யத்தனரு டருமுகமா யிருந்தன் னருக் கறமுதனுங் கையுமளிப்ப னவன்பு ரான, வித்தகப்புத் தகமி ருக்கு மில்லந் தோறும் விரைக்கமலத் திருமடந்தை கமலப்போதுங் கைத்தலத்தில் வளையாழி தாங்குங் கண்ணன் கதிர்மணிமார் பும்போ லக் களிக்கு மாதோ. (௭௧)

சிந்துபுர மான்மியத்தைத் தினஞ்சொல் வோர்கள் சிறந்தநிதி மக்களுட னெடிது வாழ்வார், முந்துகதை சந்நிதியிற் குருமுன் ஞக முற்றவுந்தி யாயமொன்று கேட்போ ரெல்லாஞ், சுந்தரவாம் புரவி மகக் கதியிற் சார்வார் தாயகதை சந்நிதியின் முக்காற்கேட்போ ரெந் தமல டாறுறு மகப்பெற் றய்ந்தே யிருநிலத்தி லளகையர்கோ னென்ன வாழ்வார். (௭௨)

நாலாறு குகதீர்த்தந் தன்னை வேத நாடுசகந் நாதர்தமைத் திருமா றன்னை, மேலான குருபரனை வீரர் தம்மை மின்னுரைத் தோகைத னைச் செல்வே றன்னைப், பாலான நெடுஞ்சிகரந் தன்னைச் சந்தப் பருப் பதத்தைத் திரிசுதந்தி ரத்தர் தம்மை, நாலாரு முனிவீர்கா ளாண்டு தோறுஞ் சென்றேத்து மெனச்சூத னுவன்றுன் மாதோ. (௭௩)

மயில்வாழி நகர்வாழி சேவல் வாழி மனுவனைய திரிசுதந்தி ரத் தர் வாழி, குயில்வாழு மொழித்தெய்வ யானை வாழி குறவர்குலக் கொடிவாழி கொடுஞ்சூர் மாய்ந்த, வயில்வாழி செயந்திபுரத் தமர்ந்தோர் வாழி யாறுமுகப் பெருமான்றன் கருணை வாழி, பயில்வான்மை முகில் வாழி புராணங் கேட்போர் படிப்போர்கள் யாவர்களெல்லாம் வாழி மாதோ. (௭௪)

சுகப்பிரமரிஷி பூசைபண்ணினவத்தியாயம் முற்றிற்று.

ஆ அத்தியாயம் ௰அ க்கு. திருவிருத்தம். அ௬௮.

காப்புத்திருவிருத்தம் க. ஆகத்திருவிருத்தம். அ௬௯.

திருச்செந்தூர்த் தலபுராணம்

முற்றிற்று.

குமரன் துணை.

திருச்செந்தூர்த்தலபுராணம்

அரும்பதவுரை.

காப்பு.

ஊற்று-ஊற்றுகின்ற மதநீர். ஒழுத்து-உண்டு. துவலை-முழங்கும். சால்-மலைப்பக்கங்கள். வாய் ஊற்று - இடங்களாகக்கொண்டு. உடைகர்க்கும் (சமரு மயில்வாகனனை) கடாக்களும். முந்திய-முன்னுதித்த. மாழ-பகை. முமதத்தைக் கனியானை யென்க கட்டுக.

கடவுள் வாழ்த்து.

1. இருப்பது - நிலையுள்ளதாகிய. அந்த. இயல்பு - இயற்கைவடிவத்து. என்று-பொருந்தி. அலம்-விடத்தை. சருப்பசம் (இருபெயரொட்டு). உனை - நிலை. விச் - என்று என்னும் எச்சம் ஆகியென்பது ஏறுமுடிந்த து. என்றென்-அது முதல்குறுகியது.

2. சங்கம்-சங்கநிலையவின் ... டம். மாடு-பக்கம். பிடு-பெருமை. மதியின்-சந்திரனைப்போல்.

3. இணைக்குது - (சுற்றவரைவக் குப்) பொருந்தி. விழு-சிறப்பு. வேதம்-வேதத்திலிடத்து. பழுத்த - (பழமாகப்) பழுத்த.

4. இந்தகம்-(ஆகுபெயர்) முருகக் கடவுள். சரு - சேர்ந்த. கலைத்தினை. காரிறக்குஞ் சாகவதி. கம் - தலை. சடையைனிந்த வைச கன்-தரியநிறச் சடையணிந்த ... ஒன்றியென்பது - மிக்கு ... மென்பதறேறு முடிந்தது. மிக்கு நல்-(யாரினும்) மேற்பட்டிருந்தவ.

5. வேள்வி-யாகம். வீட்டிய - வெட்டித்தள்ளிய. மதலை-வீரபத்திரர்.

6. மூன்று-ஒலித்து; பாடி. உழக்க-மிதிக்க. விண்டு-வாய்விளத்து. உடைத்து-கட்டுவிட்டு.

7. ஆரம்-பத்தாரம். அடங்கலும்-எங்கும். தழை - தளிர்கள். செல்வ-வி யாபிக்க. மூலம்-வேர். மேலாய்-மேற் போக. உத்தாமடங்கலும் - உயர்ந்தி ... யையும். பொருவு-ஒத்த. சூர்மா - சூரனுகியமாமரத்தை. ... இருபெயரொட்டு.

8. செங்களபம்-செஞ்சந்தனம். குழை-முழங்குகின்ற.

9. வடுத்த-வடுப்பட்ட. செம்மணி-சிவந்தமாணிக்கம்; அது - பார்வதி திருவடிச் சிலம்பிலுள்ளது.

10. அறுகால் - வண்டு. முகை-அரும்பு. குயவார் - பகைவர். சுட்டுநிந்து-நிலைகுலைந்து.

11. புகை - தெய்வம்; தோர ணி. சொல் - (ஆகுபெயர்) தேவாரப்பாக்கள். அவ்-அவைகள். இன் - இனிய.

12. அரவம்-ஒலி. சிலம்பு - சிலம்பு நிறம்பொருந்த. பாவைக்கு - பாவையாரிடத்து. ஆறு - ஆதரகப்போம்படி. பணித்த-கற்பித்த. கவிராசன் - கவிசிரேட்டர்; சுந்தரமூர்த்திநாயனர்.

13. கொளலா-தெருதி. ஏற் கவி-ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்பவைகள். ... பிரசம்-தேன்.

14. ஒருதனி-(இருபெயரொட்டு) ஒப்பில்லாத ... கவின் - அழகு ... திறம். (போல்வும்) ... குரு-நிறம். மெளலி-முடி. விட்டு ... ப்ப-ஒளியைத்தர. முறுவல்-பல். முத்து அரும்ப-முத்துக்கள். (போலத்) தோன்ற. மரு-வாசனை. கழுநீர்-செங்கழுநீர்மலர்.

பதிகம்.

1. நவை-குற்றம். ஒழுக-வெளிப்பட. கங்கை நதி மூலம்-கங்கா நதியின் அடிப்பக்கம். ஒழுங்கு - (செய்யாவென்னும் வாய்பாட்டு வினையெச்சம்) ஆலோசித்து.

2. முறையினால் - கிரமமாக. மறை - வேதம். வைபவம் - மான்மியம். கூர்மை. நிறைவின் - (எல்லாக் குணங்களுங்) நிறைவோடு

3. பரம்பும் - நிறையும். இறை - குமாரக்கடவுள். சிந்துபுரம்-திருச்செந்தூர்.

4. செயந்திபுரம் - திருச்செந்தூர்.

5. உதரம்-வயிறு. இருந்தி-இருப்பாய். மறையின் வாய்ப்ப-வேதவிதிப்படி பொருந்த.

6. மானிடம்-மனிதப்பிறவி. எயினர்-வேடர். விந்தை வரை-விந்தமலை.

7. தரு - (வேங்கை) மரம். குறையின்-வெட்டுங்கள்.

8. தாருவுருக்கரந்து - மரவடிவமறைத்து. தூலக்குஞ்சரம் - சகோதரராகிய யானைமுக விநாயகர். வாரணத்திருவுருவாகி (விநாயகர்) யானைவடிவெடுத்து.

9. வாஞ்சை-ஆசை. வேட்டு-விவாகஞ்செய்து. பெட்பு - விருப்பம் நறவமலர்த்தேர்-தேனிறைந்த புட்ப விமானம். யானைமகள் - தெய்வயானையம்மை.

10. திரிசுந்திரத்தர் -முக்காணிப்பிராமணர். விபூதி-சொரூபம்.

11. வயம்-வெற்றி. வாய்ப்பு-சிறப்பு. உதித்தது-தோன்றியது. புலம்-அறிவு. புயல்போன்மேனி - மேகம்போலுந்திருமேனியுடைய திருமால். மேனி - வினைமுதற் பொருளுணர்த்தும் இ, விகுதி புணர்ந்த குன்றியதாம் பெயர். சுயம்பிரகாசக் கடவுள் - தானே பிரகாசிக்குங் கடவுள் (ஆகிய).

12. பகடு-யானை.

13. உடற்றும்-வருத்தும். மாயைத்தொடர்-மாயாமலங்களின் றொடர்ச்சி. அற்புதம்-ஆச்சரியம்.

14. ஒவ்வாது-சமானமில்லாமல். (ஒவாதென்றும் பாடம்) உண்பெருந்திய - உய்பெண்ணிய. எண்தலகயமற்கும் ததியை யுடைய.

15. செவ்வல் - திருச்செல்வேலிக்குச் சமீபமாயுள்ள ஒரு கிராமம்.

16. இசை - சொல். வாணியாள் - சரசுவதியருளுடையவன்.

17. அளறு-சேறு. ஆம்-சாரிகை. கனி-கனிந்த. புலவர்-தேவர்.

1. நைமிசாரண்யத்திற் சூதமுனி சென்ற அத்தியாயம்.

1. காதிசேய் - விசுவாமித்திரன். என்றிருந்தவமுனிவன்-என்ற பெரிய தவத்தையுடைய முனிவன். என்ற என்பதில் அகரந்தொகுத்தல்.

2. சிர்வசு - ஸ்ரீவசு. வித்துவான்-ஒரு முனிவன். சுசி-அக்கினி.

3. மாணாக்கர் - (மேற்செய்யுள்களிற் குறிக்கப்பட்டாது) சீடர். பன்னியர்-அவ்விருடிகளுடைய பத்தினிமார்கள். தெக்கணாக்கினி-முதலமுத்தீகள்- (தாந்தாங்கொண்ட) தெக்கணாக்கினி, ஆகவநீயம், காருகபத்திய மாகினி, ஆகவநீயம், காருகபத்திய மாகிய மூன்று நெருப்புக்கள். அடைந்தார் - (நைமிசாரணியத்தில்) வந்தார்கள். கிழவர்-உரியவர்.

4. முகமன்-உபசாரவார்த்தை. வாசிய-பரிசுத்தமாகிய. அருக்கியமுதல - அருக்கியம், பாத்தியம், ஆசமனம்; இவை; முனிவர்களுக்குச் செய்யுமரியாதை. எல்லை-சமயம்.

5. கவின்-பிரகாசிக்க. பண்-சுரம், இசை. பராசரன்மதலை-வியாசமுனிவர். சேரும் - சூற்றார். விண்டுவின் வடிவாய் வந்தவன் - திருமாலதிசமாயுள்ள (அவ்) வியாசமுனிவர்.

6. தொடர்பு - (நல்வினை) சம்பந்தத்தால்.

7. மாண்புயர்பரித்த - மகத்துவந்தங்கிய. தரித்தனோம் - (மனத்தில்) தாங்கிக்கொண்டிருக்கின்றோம்

8. சொற்ற - சொல்லிய. சூர்-அசுரர். சேயோன் - குமாரக் கடவுள். பொற்றை - சிறுமலை.

9. மும்மலக் குறும்பு - ஆணவம், மாயை, கன்மங்களின் சேட்டை. எறி-முறிக்கின்ற. சரங்குவித்தனன் - கைகூப்பியவனாகி. குணிந்தான்-(அம்முனிவனெண்ணப்படி விரித்துச்சொல்லத்) தொடங்கினன்.

10. பொலன்-பொன். புழைக்கையான்-விநாயகக்கடவுள். கபோலஆடி-கன்னமாகிய கண்ணாடி. உயிர்ப்புவீங்கும் - பெருமூச்செறியும்.

11. தோகை-பீலி, மயிற்றோகை. சூட்டின் மணிக்கொடி-தலைப்பூவாகிய இரத்நத்துலாசம் - கோழிக்கொடி. துணடம் - மூக்கு. உடன் விளக்கும் - ஒன்றாகப் பிரகாசிக்கச்செய்யும். மரகதப்பொன் நாகம் - மரகதமணியாலாகியமலை. விசாகன்-முருகக்கடவுள்.

12. தொல் - பழைய. மேதகும் - மேன்மைதங்கிய. கலற்றி - கவலையும். வேறு - பிறமனவிகாரங்களும். புலப்பட - தெளிய.

2. வியாதர் சுகருக் குபதேசித்த அத்தியாயம்.

1. மரகதச் சனித்தாவரம் - மரகதமணிபோலும் ஒப்பற்ற திருமேனி. வெரிக்-முதுகு. இருவினைத் தொடர்பு-நல்வினை தீவினைகளின் சம்பந்தம். கங்கைமூலம் - கங்காநதியின் அடிவாரம்.

2. தலைமயங்கிய - (ஒருகாலத்திலே) தலைதடுமாறிய. வருத்துடா-வருத்து. நெறி-முறை. ஆய் - (பிறவினை விகுதி தொக்கது) ஆக்கி. நிறுத்தி - நிலை நிறுத்தி. காண்பான் - (எல்லாவற்றையுந் தன்மனத்தின்கட்) காணுமவ்வியாத முனிவன்.

3. அன்னவன் - அத்தன்மையனான வியாசமுனிவன். பொருணை-தாம்பிரவன்னி நதி.

4. சீர்மை - சிறப்பு. மதலைக்கு (உமது) புத்திரனாகிய அடியேனுக்கு; இது: இட வழுவமைதி. செப்புதி - (விரித்துச்) சொல்வாய்.

5. கற்றை - திரட்சி. சோர்பு - தளர்வு.

6. கடா-எருமைக்கடாவாகனம். நடுவன்-யமன். மாணசோத்திரம்-யமனுடைய பட்டணம். கதவு-(அந்நகரத்திற்புகாமற் றடுக்குங்) கதவு. எட்டு யோகத்தின்-எண்வகை யோகத்தினாலே. மதிப்பார்-தியானிப்பார். சுடர்-ஒளி. அமரர்சேனை காவலன்-முருகக்கடவுள்.

7. உடைந்த - (விகாரம்) கரைகளையுடைத்த. மூகாரம்பதீர்த்தம்-இருபத்துநான்கு தீர்த்தங்களுளொன்று; அது: சந்நிதிக்கு நேரிலுள்ள சமுத்திர தீர்த்தம். வதனாரம்பமென்பதும்இது. படிந்து-மூழ்கி. அன்னார் - தேவர்முதலாயினோர். அருள்புரிவார் - அத்தேவர் முதலாயினோர்க்குக் கிருபைசெய்வர். இதற்கு, எழுவாய் பதம்பணிவார்.

8. வைகல்-தினம். ஆன்ற-நிறைந்த. சோடசம்-பதினாறு. விதி-உபசாரம். கான்ற - கக்கிய. வன்று - பொருந்தி.

9. பரியின் வேள்வி-அசுவமேதம். உருற்றும் செய்யுட். உலவா-கெடாத. கவித்தொகை - பதவிக் கூட்டம்.

10. கதி-பயன். அமையும்-கிடைக்கும். பொங்கு-மிகுந்த. எழுத்தாறு-நமகுமாராய என்னுமக்கிரம்; இதைச் சரவணபவ எனச்சிலர் கூறுவர். திருமுருகாற்றுப்படையில், ஆறெழுத்தடக்கிய என்பதற்கு-நமகுமாராய என்று ஆசிரியர் நச்சினார்க்கினியார் கூறியதுங் காண்க.

11. சொலிக்கும்-தெரித்து விளக்கும். சேவை-தரிசனம்.

12. வியன்-பெருமை. அமைத்த-பெற்ற. நமைஞ்சார்-நம்போன்ற இருடிகளை (ஒருபொருளாக மதித்துப்) பேசார்.

13. ஈறு-மரணம். சருகு ஆகிறும்-இலைகளைப் புசித்தாலும். பகவாம்-விலங்கின் பிறப்பாம்.

14. பரிக்கும்-தாங்கும், காக்கும். சுரர்-தேவர். பெருமிதம்-உயர்ச்சி. கதி-மோக்ஷம்.

15. நேசவு-அன்பு. நுட்பம்-நுண்ணறிவு. சோர்வு-சோர்வில்லாது. உரைக்கேன்-சொல்லுவேன். துணிவு-நிச்சயமாக. உம்-அசை.

16. நான்மறை கரைகண்டோர். கருத்தாய் என்றதற்கேற்ப, வசனரும் பதிர்த்தாறும் படித்து கரை யேறுதி யென்றார்.

17. சுரோத்ர ஒலிகம்-(இருபெயரொட்டு) முறங்கும். கண்டான்-செய்தவியாதமுனிவன். விண்டான்-சொல்லினான்.

3. செயந்திபுர வைபவமுரைத்த அத்தியாயம்.

1. ஓங்காரம்-அகங்காரம். ஆதி-மூலம். ஓங்காரம்-பிரணவம். ஐம்புலன்-பஞ்சேந்திரியங்களும். ஒன்றாய்-ஒருவழிப்பட்டு. பரபோகத்துணைமை-பரமானந்தத்தின் மெய்ம்மை:

2. சிரபுரம்-தலைநகரம். முந்து-முற்பட்ட. முதியோர்-பெரியோர். அலகு-எண். கதி-பயன். போகம்-அநுபவிக்கும் பொருள்கள்.

3. களித்த-மகிழ்ந்த. சொல்லாபுரி-செபஞ்செய்யுமிடங்களிலொன்று. காரியாசம்-கைவிரலாற் றொட்டுச் செய்யுங் கிரியை. உணவு-தேவருண்டி. ஆகுதியில்-யாகத்தில் பூரணாகுதியிலிட்டது. ஆக்கி (தேவர்கட்கு) உண்டுபண்ணி. சையம்-ஸ்ரீசயிலம். தெத்தாத்திரேயன்-ஒருமுனி சிரேட்டன்.

4. கருது-(யாவரும்) மதிக்கப்படுகின்ற. நவநாதசித்தர்-ஒன்பது வகைச் சித்தர்.

5. அருத்தி-ஆசை. இயமம்-மெய்மை, கொல்லாமை முதலியவை. நியமம்-சந்தியாவந்தன முதலியவை. பிராணாயாமம்-வாயுவையடக்கி மந்திரஞ்செய்தல். சிரவணம்-மெய்ப் பொருளைச் சற்குருவினிடங்கேட்டல். மனனம்-(அங்ஙனங் கேட்ட வற்றை) மனத்திற்பதித்தல். நிருத்தியாசனம்-(பதித்தவற்றை) ஆராய்ச்சி செய்தல். சமாதி-தியானம்-ஏகாக்கிரசிந்தனை. பூரணமாக (தியான முதிர்ச்சியினால் பூரணமாக நிட்டை) மனத்திற் பதித்தல்; நிட்காசனை) மனத்திற் பதித்தல்; இவற்றை எண்வகையோகமென்பர். அணிமா-மிகச்சிறுத்தல். லகிமா-மிக மகிமா-மிகப்பெருத்தல். கரிமா-மிகத் திட்பமாதல். ஈசத்துவம்-சகலமும் ஆளும்வன்மையாதல். வசித்துவம்-எல்லாந் தன் வயமுடைமை. பிராத்தி-வேண்டியவற்றையடைதல். பிராகாமியம்-எல்லா இடங்களிலுந் தடையின்றிச் செல்லுதல்; இவற்றை அட்டமாசித்தி யென்பர்.

6. நாற்றிசையாம் எண்டிசை-நான்குபெருந்திசையும் அசனுவடங்கிய நான்கு கோணத் திசையும், இவற்றைத் திக்கு, விதிக்கு என்பர்.

7. அஞ்ஞானம்-அழகிய ஞானம். வேர்-மூலம். சூழ்ந்து-சுற்றி, கல்லும்-தோண்டுகின்ற. காமமூன்று-காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம். மாறும்-விரோதமாகி. சிதையும்-அழியும்.

8. மோக ஆகாமியம்-மயக்கத்தைச் செய்யும் ஆகாமியவினை. சஞ்சிதக்கட்டு-(இருபெயரொட்டு) கட்டுப்பட்டு நிற்கின்றவினை. தேக்கும்-நிரப்பும். சிறந்தார்க்கு-சிறப்பாகத் தெளிந்தவர்க்கு. ஆக்கம்-செல்வம். இடத்தினிசழ் பொருளின் றொழிலை யிடத்தின்மேல் வைத்துத் தாக்கும் நீக்குமென வுபசரித்துக் கூறினார்.

9. திரிவேணி சங்கம்-கங்கையும், சரசுவதியும், யமுனையுங் கூடுமிடம். உழைத்த நல்வினை-(மேற்சொல்லப்பட்ட இடங்களில் மூழ்குதலாற்) பெறப்பட்ட புண்ணியம். குழைத்த-(விகாரம்) நெகிழ்ந்த. அக்கதிர்க்கு-அப்பயனுக்கு. எதிர்கூறி-ஒப்பாகச் சொல்லி. அழைக்க-வருவிக்க.

10. வாசபேயம்-யாகத்திலொன்று. கதியவை-பயன்களை. வயின்-இடம். நித்தமும்-நாள்தோறும்.

11. முன்னுவாமதி-பூருவ பக்கத்துப் பிறைச்சந்திரன். பயந்த-(தாம்) பெற்ற. தீவினை-பாவம். பின்னுவாமதி-அபரபக்கத்துச் சந்திரன். சயந்தரும்-அழிவையடையும். யாதெனை-(இங்ஙனமாதற்குக் காரணம்) எது வென்று. கொல் ஆம்-அசைகள்.

12. காழ் அகம்-கடின சித்தம். பிழை-துன்பம். பெற்றமாழையான் களூர். (காம) ஈன்ற புத்திரிகள். வழிநால்பெற்ற-முறையினாலே. (பிறர்) அடைந்த.

13. பாலர் வேட்டஅப்பன்னியர்-(கம்) பிரமசாரிகள் செய்த அந்தப் பத்தினிகள். பண்பு-(பாவக்) குணம்.

14. பனி-பனியினது. குறும்பு-(குளிர்ச்சியாகிய) சேட்டை.

15. ஓமம்-யாகம். தமம்-புறஇந்திரிய அடக்கம். சமம்-அகஇந்திரிய அடக்கம். கதி-பயன்.

16. நல்குரவால்-தரித்திரத்தால். அத்தியாசனம் அருந்தல்-(கிடைத்த இடத்து) மிக்கபோசனத்தையுண்ணுதல். அதிபானம்-மிகக்குடித்தல். குரவன் மனையார்பவம்-ஆசாரியன் மனைவியை யநுபவித்தபாவம்.

17. எறிநீர்-(அலையை) வீசுகின்ற சலம். தடம்-பெருமை.

18. மலங்கு-மயங்குகின்ற. வாட்டிறலான்-வாளாயுதத்தைக் கொண்ட வெற்றியை யுடைய வீரவாகு தேவர். குலங்களோடு-கூட்டத்தாருடன். வேணன்றில்-குசத்தார்களோடு. குழைவார்-(மனங்) குழைந்திருப்பார்.

19. மார்க்கம்-வழி. தவறற-தப்பிப்போக. மல்லல்-வளம். (துணிவுபற்றி) எய்துவசெய்துவ ரென்றார்.

20. கமலை-திருவாரூர். அனலக்கிரி-அருணாசலம். புருடோத்தமாநகரம்-துவாரகை. ஒன்பதினும்-ஒன்பது நகரத்தினுள்ளும்.

21. குரோசம்-கூப்பிடுதூரம். அவ்வயின்-அந்தச் செயந்திநகரத்தினிடமானது. அடைந்து-சார்ந்து. சுருங்கு (காலாந்தரத்தில்) சுருங்கிய. கூபமும்-கிணறும். வான்-பெருமையோடு. சுருங்காதிரங்கும்-மிகமுழங்கும். ஆம்-ஆகிய. புண்ணிய தீர்த்தத்தின்-புண்ணிய தீர்த்தத்தினாலும். இறையின்-மூர்த்தியினாலும். பாமபும் (எங்கும்) பிரசித்தியுடைத்தாம். அந்நகர்-அந்தச் செயந்திபுரம். எனவே தலம், தீர்த்தம், மூர்த்தியென்னு மூன்றுஞ் சிறப்புள்ளமை காண்க.

22. அவை-20ம் பாடலிற் கூறியனபதி தலம். அடைந்த - அடைந்தன்ன: தவ உடம்பு விட்டொழிகுநர் - (செயந்தி நகரில்) தவத்தினையுடைய சரீரத்தைவிட்டிறப்பவர்கள்.

23. சொத்தம் - சிரசதையோடு செய்யப்பட்ட கிரியை. முன்புணர்த்திய-முதன்மையாகச் சொல்லப்பட்ட. கயை - கங்காநதியிற் பிண்டமிடும் விசேடமாகிய இடம். முக்கியம் - விசேடம். சதம்-நூறு.

24. கடவுளர் - தேவர். கந்தபுட்கரிணி-ஒரு தீர்த்தம். அலம்பு - ஒலிக்கின்ற. இன் - தவிர்வதிலக்த காரியை. தெனபுலத்திறோர் - பிதிர் தேவதைகள். இடிகொண்மா-இடித்துக்கொள்ளப்பட்டமா.

25. இல்லையென்றிடில்-கூடாததின். வல்லபம்-வல்லமை; சத்தி. ஆவினம்-பசுக்கூட்டம். போகெ-போகடலென்பது போடலென மருவிப் போகெ என்றாயிற்று. புணர்ப்பு-செய்கை. வேதாவுலகு-சத்தியலோகம்.

26. அவர்குலம்-கந்தபுட்கரிணியிற் பிண்டமிடுவோர்குலம். அநாதமரணம்-துணையின்றித் தனியேயிறக்துவிடக்குஞ்சாவு. அனலின்றி - (அவருடல் சுடுதற்கு) அக்கினியில்லாமல். மாயினும்-கெட்டாலும்.

27. சிந்து தீர்த்தம் - வருணாம்ப தீர்த்தம். என்னீர் - என்னும் சலமும். உபவசிக்கிச்-பட்டினிவிரதமிருக்கால். அந்தமுற்றவா-(மேலேசொல்லியபடி) மரணமடைந்தவர்.

28. இதுமுதல்-30வரை குளகம். தித்தித்தமுற - தினந்தோறும். மூழ்கார், பரவார், நினையார். இம்மூன்றும் எச்சப்பொருள்கள். நினையா-நினைத்து.

29. கமை - பொறுமை. இலம் - என். நீர்க்கடன் கழித்தால் - நீர்க்கடனைச்செய்தால்.

30. காமர்-அழகு. பூமினோர்-சரசுவதி இலக்குமி. மாமம்-பெருமை.

31. இதுமுதல்40வரைஒருமுடிபு. நியம்-நரகம். உருவம்-இடி. செறித்து-முழங்கி. உள் உடைந்து - மனம்வருந்தி. கரதலம்புடைத்து - கையோடு கைதட்டி. முறுவல் - பற்கள். கனியவெளிப்பட-அவர் - (மேற்கூறிய) நரகத்துள்ளவர். வினவும் - கேட்பன.

32. மோனம்-மௌனம். ஈனம்-குற்றம். ஜனனம்-பிறவி.

33. பரிசிக்க - தீண்ட. தொன்னுன்-பூருவகாலம். இயற்றுநர் - செய்தவர்.

35. பாரதகண்டம் - பரதனென்னும் அரசனு லாளப்பட்ட இப்பூமி. கதிக்கே-மோக்ஷத்திற்காகவே. பரித்த-அமைத்த.

36. வான்உரைக்க - தேவர்களும் புகழ. (வான்-ஆகுபெயர்)விரி - (புகழ்) விரிக்க. துவாரகை - துவாரகை (மூலவிரிக்க.) முத்தியையளிக்கும்-மோக்ஷத்மாக.) முத்தியையளிக்கும்-மோக்ஷத்தைக் கொடுக்கும். வேதப்பரிதி-(ஆகுபெயர்) மறை வடிவாகிய ஒளி. மேற்கூறிய ஏழு தலங்கட்கும் சிவகலை கொடுப்பவர் திருச் செந்தூர்க்குமாரக்கடவுளென்ற சமஸ்கிருதபுராணத்துட் கூறலா லிங்ஙனம்பொருள் கூறப்பட்டது.

37. பாவகாரியர் - பாவமே தொழிலாகக் கொண்டவர். என - என்று சொல்ல. வதிந்தீர்-தங்கினீர்.

38. கன்றும்-வருந்தும். இதந்து-நீங்கி. மேற்கதிக்கே-மேலாகிய மோக்ஷத்திணிடத்தே.

39. மேதகும்-மேன்மைதங்கிய.

40. தூறு பருவம் - ஆறுவருடம். மாகப்புனல்-மாசியாதத்துநீர்; மாகஸ்நானம். காசியில்-காசிக் கங்கையின் கண். படியும் - மூழ்கும். அந்தக்கதி-அந்த மோக்ஷத்தை.

41. ஈறு-மரணம். பிரயாகை-கங்கையிலே விசேடமாகிய ஓரிடம். மாகம் ஆடுகர் - மாகஸ்நானஞ்செய்பவர். இளைத்து-படிந்து.

42. முன்னுவோர் (தம்மை) நினைப்போர். முன்னாக-எதிரே. மன்னுவோர்-இருப்போர். சென்னி-தலை. காயத்திரிச்செல்வி-காயத்திரி மந்திர தேவதை. ஆம் என்னும் பயனிலைவருவித்துக் கொள்க.

43. எழுத்து (என்னுடைய) அக்ஷரங்கள். குமரேச - குமாரக் கடவுளே. முன் (உமக்கு) எதிரே. அழுத்து - மூழ்கச்செய்யும். அயலின்-பக்கத்தில். விழுத்தகும் - சிறப்புத்தங்கிய. வேறு பெயர்கொண்டு. (வெவ்) வேறு பெயர்களைத் தாங்கி.

44. வாக்கெடுத்து - வாக்கானுயர்த்தி. மன்ற நிற்குதியென்ன - (முருகக்கடவுள்) நிலைபெறுற நிற்பாயென்றருளிச் செய்ய. மறைமாது - (காயத்திரி) மந்திர மகளியதாய். நின்றுள்-அவ்வாறு நிற்கச் செய்தாள். நின்றுளென்பதிற் பிறவினைப் பொருள் தரும், பி. விகுதிதொக்கது. 43, 44 இவ்விரண்டுமொரு தொடர்.

45. கந்தன்முன் - குமாரக் கடவுளுக்கெதிரே. உகந்த (அவர்) மகிழப்பட்ட தீர்த்தங்களாவன. களிற்றினம் பிடியருள் தீர்த்தம்-தெய்வயானை தீர்த்தம். கொந்து-கொத்து இந்திரபவனிக்கு-தேவேந்திரன் போலுலாவருதற்கு.

46. வெள்ளைவாரணத்துத் தீர்த்தம் - அயிராவத தீர்த்தம். முச்சூலக்காரி தீர்த்தம் - முத்தலைச் சூலமேந்திய வயிரவ தீர்த்தம். குறக்கொடி தீர்த்தம்-வள்ளியம்மை தீர்த்தம். பாவொளிபாந்த-பரவிய காந்தி நிறைந்த.

47. பவநாசனு தீர்த்தம் - பாவநாச தீர்த்தம். கம்பலை - முழக்கம். சேது-சேது தீர்த்தம். நனி-மிக. பத்தெனுங் கங்கை-தசகங்கை தீர்த்தம்.

48. அவண்-அவ்விடத்து. தொடர்பு-சம்பந்தம். பான்மை-தன்மை. பரிவு-அன்பு. சொற்றவா-சொன்னவிதம்

49. மரகத மயூரம்-மரகத மணி போலும்பசியநிறமுள்ளமயில். பரிதி-சூரியனைப் போலப் பிரகாசிக்கின்ற.

50. திறம்பினோர் - தவறினோர். மூவர் - திரிமூர்த்திகள். நெறியில் - முறையோடு.

51 எவ்வம் - துன்பம். கவுரி, கங்கை, யமுனை, காவிரி, காதோயை, கவுசிகை, வித்தை, இவ்வனைத்தும் ஒவ்வொரு நதிகள். கவ்வையோடிரங்கும்-மிகமுழங்கும். இதில், ஓடு-ஓடு என்பதின் விகாரம். ஓடு என்பது - இசைநிறைச் சொல்.

52. குமரி, தோகை, வந்தனை, தூதபாவை, வேதம், சுருதி, துங்கபத்திரை, விபாசை, பூவை, இவையும் நதிகள்.

53. வானுவாகினி, விலாசை, குமரி, தோகை, வந்தனை, வைகை, தேவகி, கன்னவேணி, கோதை, கண்டகை, இவையும் நதிகள். கோலியவளைந்த.

54. மாபாய் - கிரமமாகி.

55. நிருமதை, தசானை, கிருமிந்தை, தாபி, கருமநாசனி, இவையுந் தீர்த்தங்கள்.

56. பொன்முகரி, கோதாவரி, பெண்ணை, வேத்திரவதி, சாவித்திரி,

57. விதிசை, வைதாணி, மந்தகினி, சிலாசலி, வேகவதி, விரேபதி, பலாகை. இவையும் நதிகள். சுவேதப்பூ-வெண்டாமரைமலர். செஞ்சப்பதி-மனமாகிய நகரம். பாரதி-சரசுவதி.

58. சந்திரபதாகை, பன்றுனை, உலோகிதை, விபாசை, சிந்து, வாகுதை. இவையும்நதிகள். திறன்வழாது-உறுதிவழுவாது. முந்து-பூருவத்தில். முன்-எதிரேயிருக்கின்ற. அந்தரநாதன்-இந்திரன்.

59. சரசோதி - சரசுவதி. பொருவை - தாம்பிரவன்னி. கம்பை - கம்பாநதி. ஒருதலைக் கபாலமேந்து மொருவன் - (பிரமாவினுடைய) ஒருதலையோட்டைத் தாங்கிய வைரவக்கடவுள்.

60. அம்பிகைதலங்கள்மூன்றும் - உமா தேவியாருக்குச் சொந்தமாகிய மூன்றுகோயில்களும். அருள்பொழி - கிருபையைத் தருகின்ற. கண்ணின் பேராய் - நேத்திரத்தின்பெயரையுடையனவாய். (விசாலாக்ஷி, காமாக்ஷி, மீனாக்ஷிகோயில்க ளென்னப் பட்டனவாகி) பம்பிய - நிறைந்த. தலமூன்றும் - (முறையே காசி, காஞ்சி, மதுரை என்னும்) மூன்று தலங்களும். அகஷம் - கண். நம்புற - நம்பிக்கை பொருந்த. குறக்கொடி யென்றதற் கேற்பப்பு மிமாறுங்கொம்பென்றூர்.

61. இகம் - இம்மை. மகத்துவம் - மேன்மை. பரம் - முத்தி.

62. தோகையான் - மயில்வாகனத்தையுடைய குமாரக்கடவுள். மனம் - எதிரிலுள்ள. கரலை - சமுத்திரம்.

63. தொல்லைவாழ் - பழையவினைத்தொகுதி.

64. துரிசு - குற்றம். அடங்கலும் - (பிறதீர்த்தங்கள்) முழுதும்.

65. குலவி - விளங்கி. மூரல்தரும் - முழங்கும், கூறும். பலம் - பலனை.

66. காய்ந்த - கெடுத்த. சோமசேகரம் - சந்திரனையணிந்ததலை, சுருதியான் - வேத சொரூபமாகிய சிவபிரான். பதப்பூமலர்க்குளாம் - திருவடித்தாமரைக்குள்ளாக. சேமம் - வைப்பு. பலம் - வலிமை.

67. கோபமாய் - சினமுடையவராய. தாபம் - காட்டுத்தீ. நீபம் - கடம்பமலர்.

68. இலக்கம் தீவினை. அநேகபாவம். மூட்டும் - (காலக்கிரமத்தி) லநுபவிக்கச்செய்யும். சஞ்சிதம் - கட்டுப்பட்டவினை. மோலி - முடி. பதஞ்சூட்ட - (மூழ்குவார்கள்) திருவடியைத் (தமது) சிரத்திற்றரித்துக்கொள்ள.

69. மலினம் - (துட்டநிக்கிரகத்கால்) துன்பம். மாதவச்செய்யுள் ஆய்வு அரும - முனிவர்களுடைய, பாடலாராயப்படும் அருமையான.

70. முத்திக்கு - மோக்ஷத்தைப் பெறுதற்கு. மூலிகை - மருந்து. ஆவத்துக்காக்க - ஆபத்தினின்றும் பிரித்துக்காப்பதற்கு. பத்துப்பேரிருல்பாம்பு கங்கை - பத்துநாமங்களால் நிறையப்பெற்ற கங்காதீர்த்தம்.

71. இந்திரசாலம் - அத்தியற்புதம். ஆய் - ஆக. இது, எச்சத்திரிபு.

72. கதிக்கு ஏதுவாக - மோக்ஷமடைதற்குக் காரணமாக. நெறி - (நல்) வழி. மாதுர்தீர்த்தம் - மாதுருதீர்த்தம்.

73. மறித்து - (கைகளை) மடக்கி.

74. பகர - சொல்ல. மூழ்க - (யாட்டாற் படித்துணர்ந்தி) ஸ்நானஞ்செய்ய. நீடு - நீண்ட. எட்டில் - எட்டினிடத்து. நாட்டிக்கொண்டு - நிலை நிறுத்தி வைத்துக் கொண்டு. மூட்டுவார்க்கு - பிறர்க்குப் போதிப்பார்க்கு. மூட்டும் (அத்தீர்த்தங்கள்) அடைவிக்கும்.

4. திருவவதார அத்தியாயம்.

1. சுரும்பர் - வண்டுகள். மூரன்று - ஒலித்து. வச்சிரபாணி - இந்திரன். விபுதர் - தேவர்.

2. தானம் - இருப்பிடமாகியவுலகம். அவுணர் - அசுரர். முருந்தின் - மயிறகினடிமுட்போலும்.

3. பான்மை - தன்மை. களபம் - கலவைச்சந்தனம் தணப்பிலாது - நீங்காது. தழுவி - (அவ்வுமாதேவியாரைக்) கலந்து.

4. நெறிமை - முறைமையினை. முற்றும் - முழுதும். முறையிட்டு (எமதுகுறைகளை) வரிசையாக்கி. அற்றம் - சோர்வு. புணர்ச்சி - சம்பந்தம். போகம் - சுகம்.

5. போகத்தின்பாராய் - போகத்திலுலாகுங் கனட்; அஃதாவது: பிரபஞ்சவிருத்தி. பரிப் பரிதாம் - தாங்குதற்குக் கூடாததாகும். பையுள் - துன்பம். உழைவேம - வருந்துவோம் நீக்குதி - (அப்போது) நீக்கியருளவேண்டும்.

6. மூரல் - புன்சிரிப்பு. உள்ளம் - (ஆகுபெயர்) மனமகிழ்ச்சி. கனிய - முதிர. சயனத்தலை - புணர்ச்சியை - நீத்தனம் - விடுத்தோம். ஆதிவீரியப்பொறி - முதன்மையுடைய சுக்கிலமாகிய (நெருப்புப்) பொறி. அதற்கு - அப்பொறிக்கு. இடம் - (இருப்) பிடக்கை. நம்வயினீங்கின வீரியப்பொறி யெனக்கூட்டுக நீங்கின - பெயரெச்சம்.

7. மூர்த்திகள் - வடிவங்கள். அவையில் - அவற்றுள். தூன்றுகின்றது - நெருங்குகின்றதாகிய. ஓர் - ஒப்பற்ற. பார் - பூமி. மகள் - (ஒரு) பெண். ஆகும் - ஆவள். மன்ற - (அவளிடத்து) நிலைபெற.

8. வெலம் ஒடுங்கி - வலியடங்கி. வெப்படைய - வெப்பமடைதலும் - (அவெப்பத்தைக்கண்டு) அவ்வீரியப்பிழம்பைத்தேவர்கள் சுலனனைக் கொள அறைந்திட (அவன்) புலனடுங்குற வுடலம் வெயர்ப்பெழ வெய்துயிர்த்துச் சுமந்தானெனக் கூட்டிமுடிக்க. சுலனன் - அக்கினி.

9. ஐயகோ - ஐயோ. மொய்பினால் - (தன்) வலிமையால். ஒருபுடை - ஒருபக்கத்திலுள்ள, சரவணத்திடை - சரவணப்பொய்கையிற் சேர்க்க. பெருமிதம் - மகத்துவம்.

10. சுடர் - (அவ்) வக்கினிப்பிழம்பானது. அமேய - அளவிடப்படாத. களங்கு அறுத்த - குற்றத்தைக் கெடுத்த. எட்டெனுமுருவத்திற்கவின்று - அட்டமூர்த்தவடிவத்தோடு பிரகாசித்து. துளங்கி - (நீரசைவினால்) அசைந்து. அவ்வான்பொருளென - அந்தப்பிரமப் பொருளைப்போல.

11. வீரியவெற்பு - மலைபோலெழுந்த வீரியத்திரட்சி. கதிராயிர கோடியின் - ஆயிரங்கோடி சூரியனைப்போல. நல்இருள் - கடுஇராத்திரி போன்ற. வேர் - மூலம். நாம் - பெயர். வீட்ட - வெட்ட. நாம் - நாமமென்பதன் விகாரம்.

12. இரண்டு மூன்று இடம் - சிவபிரான், பூமி, அக்கினி, கங்கை, சரவணப் பொய்கை. கந்தனென் றிசைத்து - கந்தனென்னுந்திருநாமஞ்சூட்டி. இங்கே - ஐந்திடத்துற்றதனாலே கந்தனென் பதைக் கந்தபுராணத்திலே சரவணப் படலம் 21ம் பாட்டில் ஆறுவடிவமுமொன் றாதாற்கந்த னென்று பெயராயிற் றென்று கூறப்பட்டிருத்தல் காண்க. அரண்டிடாது - பயப்படாமல்.

13. ஒன்பான் மணி - (பார்வதிதேவியார் திருவடிச் சிலம்பிலுள்ள) நவரத்நம். மொய்ம்பினர் - பலமுள்ள வீரவாகுதேவர் முதலினோர். வயத்தால் - வெற்றியுடன். சூர் - சூரன்.

14. சுந்தரித்தோகை - (கனக) சுந்தரியென்னும் (பழைய) பெயரையுடைய தெய்வயானை யம்மை. விரவு - கலந்த. விளித்து - அழைத்து.

15. சிந்துதீரமும் - சமுத்திரக்கரையும். நதிதருஞ் சிறப்பும் - ஆறுதாத்தக்க வளமும். திரு அருட்குறிப்பும் - இலக்ஷ்மி கடாக்ஷமும்.

16. மாக்கள் - மனிதர்கள்.

17. அம்முறை - அந்தக் குணங்களை. புணர்ப்பு - சம்பந்தத்தால்.

18. வான்றிய - தொழித்த. சாகரசங்கமம் - சமுத்திரக் கலப்பு. பொருநை - தாம்பிரபர்ணிநதி.

5. செயந்திபுர அந்தியாயம்.

1. பிறங்கல் - மலை. எந்தை - எங்கள் பிதாவாகிய குமாரக்கடவுளை.

2. காந்தள் - கார்த்திகைமலர். குரவு - குராமலர். குரவம் - வாசனை. சாந்தம் - சந்தனம். வல்லி - கொடி (வள்ளியம்மை). சந்தனச்சிலம்பு - சந்தனாலமென்னும் பொதியமலை.

3. கூவிளத்தணி - வில்வத்தாலாகிய, அழகு. சூர்எயிற்ற - கூரியபற்களையுடைய. வான் - விண்ணுலகம். அகிலம் - மண்ணுலகம். உலகத்துயிர்ப்பரிப்பின் - பூமியிலுள்ள உயிர்களைத் தாங்குந் தன்மையினாலே.

4. அரியான் - திருமால். கன்று - கன்றுமையாக. எல்லை அளவிடற்கரிதாகின்ற - அளவு அளத்தற்கு அருமையுடைத்தாயின்ற. ஐயானனம் - சிங்கம் (ஐந்து முகம்). பைங்கொடி - பசிய கொடி (பார்வதி).

5. அறுகு - யானையாளியென்றுமிருகம் (அறுகம்புல்). வள்ளி - கிளி (வள்ளிமலர்). குறுகுமாரியை - அணுகுமேகதத்தை (கிட்டிய வுமாதேவியை). உம்பர்கைக்கொளல் - தேவர்கள் பற்றிக் கொள்ளல்.

6. விழுத்தரு - சிறப்புத்தங்கிய. பூந்துணர் - பூங்கொத்து. தருவும் - மரங்களும் (பஞ்ச தருக்களும்). அரம்பையும் - வாழைகளும் (தெய்வப்பெண்களும்). வேழமும் - யானையும் (அயிராவதமும்). சசியும் - சந்திரனும் (இந்திராணியும்). மேனகையும் - மேலான பிரகாசமும் (மேனகையென்னுந் தெய்வப் பெண்ணும்).

7. நண்பகல் - பொருந்திய பகல். விழியிமைப் பிலாதிருந்து - (தனது ஒளிச்சிறப்பினாலே பார்ப்பவருடைய) கண்களுக்கு விளங்குதல் இல்லாதிருந்து (சித்திரையில்லாமலிருந்து). பல வருத்தமுங் கவர்ந்து - (தன்னையடைந்தவர்பாலுள்ள) அநேகவருத்தங்களைக்கெடுத்து (அநேக திரவியங்களைக் கெடுத்து). வானகக் குறியை மேற்காட்டி - சுவர்க்கவுலகத்தின் குறிப்பைக் (நாலுயர்த் திருத்தலாற்) காண்பித்து (வெற்றிய நகத் தழும்புகளை உடலிலே காண்பித்து). விரகமங்கையர் - பரத்தையர்.

8. தினி - பலம். நானம் - கஸ்தூரி. பணி - பாம்பு (ஆபரணம்).

9. மழுக்கனீர் - மூசிகனிடத்தில் உள்ள சலம் (தளிர்த்த அனந்தக் கண்ணீர்). கிடா - மாக்கினை. கை - இகண்ணீர்). குழைத்த தாது - கலந்தபொன்டம் (செகிழப்பட்ட சுக்கிலம்).

10. ஆமகலோசை - யானையின்முழக்கம். செப்பல்தேனை - (ஒருவரோடொருவர்) பேசுதலா லுண்டாகு முழக்கம். தூள்ளல் தாங்குநீர் மையீரேனை - குழித்தலைக்கொண்ட நீரையுடைய மேகமுழக்கமும். இனி, பாட்டுக்களின் «» றனைவேறுபாடு பற்றிய தாங்கல், செப்பல், துள்ள லென்னும் ஓசையுங் கொள்க. கனி முதற் கூவிளையிறுதியாகிய பொருள்கள் மலைக்கும், அசைவிகற்பங்களுக்குக் காட்டிய சனிமுதலிய உதாரணங்களாகிய வாய்பாடுகளுக்குஞ் சிலேடைகாண்க.

11. மாலின் - மேகத்தினும். உட்டிநிமின் - காட்டாற்றினும் (விட்டுணுவின் நாபிக் கமலத்தினும்). நான்மறை முறைவகுத்து - (கள்ளிடநான்குவேதங்களை முந்திருப்பவர்) நான்குவேதங்களை முறையாகப் பிரித்தோதப்பட்டு (நான்குவேதங்களைக் கிரமமாகச் செய்து). கோலம் நான் முகமாகி - (அருவி) நீரோட்டம் நான்குபக்கத்தினும்(உடையது) ஆகி (அழகாகிய நான்கு முகங்களுண்டாகி). எண்கை - காடிகளை (எட்டுக்கை). பாலின் நன்கலை மானையும் பரித்து - பக்கங்களிலே நல்ல கலைமான்களையுந் தாங்கி (வெண்மையுடைய சரசுவதியையு (நாவிற்) சுமந்து).

12. தேவ - முருகக்கடவுளே. ஆர்வம் - ஆசை.

13. விரைத்த - மணஞ்செய்த. மான்மதம் - கஸ்தூரி. மா மதம் - யானைமதமுள்ள. தனைமேற்கோலி - இடங்களிலுடைத்தவனைந்து. விநாயகருக்குச் சொல்லுமிடத்து கஸ்தூரி, கரியமதம் ஒழுதுந்தானமாகிய கன்னத்திற் பூசப்பட்டு என்க. முக்கனி கவைத்து - வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழங்களையும் பிதிர்த்து. அவல், கடல் - நீர்நிலை, சமுத்திரம் (அவலுங்கடலையும்) கலந்து - சேர்ந்து (கலந்துண்டு). திரைத்து - அலைகளையாக்கி (தோல்சுரித்து). வான்மருப்பு - பெரிய (மரக்) கொம்பு (வெள்ளிய(ஒரு)கொம்பு). நான்மறைக்குஞ்சரம் - நான்கு வேதங்கட்குந் தெய்வமாகிய யானை; விநாயகக்கடவுள்.

14. கூன - வளைந்த. பிறையின் - சந்திரன்போன்ற. வளை - சங்கு. குரண்டம் - கொக்கு. சிறையின் - இறகு போல. பேனம் - நுரை. பின்றா - விளங்க. பலகால் - (பிரிந்துசெல்லும்) அநேகம் வாய்க்கால்கள். கபாலம்சேர் - (பிரமன்) தலையோட்டுக்கு ஒப்பாக. போனகம்பெற - (தாருகாவனத்து முனிவர் பத்தினிகளிடத்துப் பிச்சை) அன்னம் வாங்க. போந்தவர் - வந்தசிவபிரான்.

15. அரவம் - ஓசை (சர்ப்பம்). தோல் - யானை (யானைபுலியின்றோல்). அம்பரவிடமார்ந்து - கடலிடத்துச்சேர் (கடல் விஷத்தையுண்டு). வேதத்து (கடல் விஷத்தையுண்டு). வேதபாரகர் - வேத பாராயணஞ் செய்யு முனிவர்.

16. கடம்பு - கடம்பின்மலர். குறிஞ்சிநிலை - குறிஞ்சிநிலம். சங்கமும் - சங்குகளைத்தள்ளியும் (மதுரையும் - தமிழ்ச் சங்கத்திலே முற்பட்டிருந்த தமிழும்). சீர்அலைவாய்க்கரை - சிறந்த கடற்கரையுள்ளகரை (சிறந்த திருச்செந்தூர்). எங்கு மாசுமொழித்தல் - எவ்விடத்தும் பெரிய (வெப்பமுள்ள) பாலைநிலத்தைக் கெடுத்தல். (அசுர சம்பந்தம்). பொங்குகின்றது - பொலிகின்றது.

17. செக்கரின் - சிவந்த மகரந்தத்தால் (சுவர்ணத்தைப்போல). கந்தரம் - மலைக்குகை (கிரவுஞ்சகிரியின் குகை). பாவைமேல் நடந்து - சமுத்திரத்திலிடத்துச் சென்று (சமுத்திரத்தின் மேற்சென்று). ஒற்றென - தூதாக.

18. வரை - பொதிகை (இமயம்). சரம் - சஞ்சரிக்கும் பொருள். தழைத்து - விருத்தியாகி. கருவுயிர்ப்பதற்கு - பெறுவதற்கு. கவுரி - உமாதேவி.

19. சக்கரம் - (ஆகுபெயர்) நீர்ச்சுழி (சக்கராயுதம்). மாதரை - (தன்னிடத்துஸ்நானஞ் செய்யும்) பெண்களை (பெரியபூமிதேவி). பொன் - சுவர்ணம் (இலக்குமி). அகிலமும் - (தன்னிடத்தகப்பட்ட) எல்லாவற்றையும் (பூமியையும்). கொளல் - கைக்கொள்ளல் (உட்கொள்ளல்).

20. மலர் பரித்து - பூக்களைத்தாங்கி (தாமரைப் பூவாற்சுமக்கப்பட்டு). அனம் மேற்கொடு - அம்சப்பறவையைத் (தன்) மேலேகொண்டு (அன்னவாகனத்தின் மேலேறிக்கொண்டு). சதுர்மறை வகுத்து - நான்குவேதங்களாலே பிரித்துச் சொல்லப்பட்டு (நான்குவேதங்களை யுண்டாக்கி). ஒருங்காய் - அடக்கமாகி. பலகலைத்திருநா - பலகல்விகளைக் கற்ற (பெரியோர்) சிறந்தநாக்கு (பலகல்விக்குந் தெய்வமாகிய ஞானச்செல்வியானவள் நாக்கு).

21. பலதருக்கள் - அநேக மரங்கள் (ஐந்து கற்பகவிருக்ஷங்கள்). வெள்ளை வாரணம் - வெண்ணிறமுள்ள சங்கு (ஐராவதயானை). மீனினம் - மீன்கூட்டங்கள். பொலன் - பொலமென்பதன் போலி.

22. ஆசு - விரைவு. மதுரம் - இனிமை. சித்திரம் - அழகு. வித்தாரம் - விரிவாய். ஓசை - ஒலி. (ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரமென்னும் நால்வகைப் பாட்டினும் [இன்] ஓசையும்). ஐந்திணை - ஐந்நிலம். உடன்று - பொருந்தி.

காக - இரத்தம். நாண்மலர்-அன்றலர்ந்தபூ. பிறப்புடன் காட்டி-(அவை) தோன்றியவிடத்தடனே காண்பித்து (காசுமுதலாகச்சொல்லப்பட்ட வுதாரணங்களைக்காண்பித்து). மெய்க்கலசப் பூசுரன் - உண்மையாகிய கும்பத்திற்பிறந்த அகத்தியமுனிவர். வித்தகம்-மேன்மை.

23. வெம் - விருப்பமுடைய. காடம் (விநாயகராகிய) காக்கை. கவிழ்-(அகத்தியர் கமண்டலத்திலிருந்து) கவிழ்க்கப்பட்டு. தேறல்-தெளிவு. மாறாது - நீங்காமல் சென்னி-சோழருடைய. அம்-அழகிய. புவிமேல் தலைக்கொண்டு - பூமியின் மேலிடத்தைத் (தனக்கிடமாகப்) பெற்று. தென்-அழகிய. அரங்கத்தன்னி - சேங்கத்தில் பெருகி எனப் பொன்னி நதிக்கும், வெங்கடம்-கொடிய யானை மதமும். கவிழ் - கவிழ்ந்துவரும். தேறல்-தேனும். மாறாது - நீங்காமல். சென்னி - (வெள்ளத்திலிறந்த வுடலின்) தலைகளை - அம் - நீரானது. புவிமேல் தலைக்கொண்டு. பூமியின்மேல் முதன்மையாகக் கொண்டு. சென்னர் - பாண்டியராசாக்கள். அங்கம்-சரீரம் தன்னில்-(ஸ்நானஞ் செய்யும்போது) நெருங்கப்பட்டு. எனப்பொருனைநதிக்குஞ்சிலேடைகாண்க. தொழல் - தொழப்படுதல். பொன்னி-காவிரி.

24. படிதலால் - மூழ்குதலால். மும்மை - சிவப்பு, கறுப்பு, வெண்மையாகிய மூன்றுநிறத்தாலும் விளங்கி. வாணி யமுனைகங்கையி னியல்பும்புத்து-சரசுவதி,யமுனை,கங்கைநதிகளின் தன்மையுந் தோன்றப்பட்டு. வெம்பவம்-கொடிய பிறவி. காய்த்து-கெடுத்து. அருள்கனிதந்து - கருணைமுதிர்ந்து. சரசுவதிக்குச் செந்நிறமுடைமை தியானம் வல்லார்வாய்க்கேட்டுணர்க.

25. ஓங்கலின் களியானை-மலையினன்ன களிப்பையுடைய யானை (உயர்ச்சியோடு களிக்கின்ற [இருளாகிய] யானை. கால்-காற்று (தென்றல்). கழைச்சிலை-கருப்புவில்.

26. நரை - நீர்க்கரை (அளவு). செக்சாது-சிவக்க புக்சாது (பொன்). அலை-செய்கரை (மெத்தை). பொருண்மடந்தையர்-பரத்தையர்.

27. வான்றிய - வாரிய. கடனை - கடனாகி. பணிவட்-சங்கு. உந்திய-செலுத்திய. பச்சைநதி-பச்சாறு. பாங்கியர - (தன் பக்கங்களிலுடன் வருமாற்றுல்) தோழிப் பெண்களாக. பொருனை போவது - தாம்பிரபருணி நதிபோதல்.

28. கடவுளர்-தேவர்கள். முகிழ்த்தகரதலம்-கூப்பியகைகள்.

29. வரி அம் அரமணி. இசைக்கும் பாணருக்கும் - இற்றுக்களையுடைய அழகிய சிவபிரானது உருத்திராக்கம் பொருத்தியணியும் இசைப் புலவருக்கும். வாணருக்கும்-(வனைய) வித்துவான்களுக்கும். வரிஅரவமணி - இரேகைகளையுடைய நாகரத்தம். இரவலர்-யாசகர். இரவு-இராத்திரி. அலர்-(மன்மதன் பாணமாகிய) பூ.

30. கதிர்வரவு-நெற்கதிர் விளைந்துவருதல். சூடு - நெற்போர். கதிர்வரவு-சூரியனுதித்தல். வாள் உழவர் - வாள்வித்தை கற்றவீரர். ஆடுகளம் - விளையாடு போர்க்களம். பதிகம்-பாயிரம் திருமுறை, தேவார திருவாசகம் முதலியவைகள். பதிகம்-பாளி. களைக்குவளை-களையாக முளைத்த நீலோற்பலம். பதி-திருச்செந்தூர்.

31. தனம் - இதழ். தழைப்பார் - விருத்தியாகின்ற பெண்கள். ஊடித்தன - ஊடலைச்செய்து தள்ள. நீபம்-கடம்புமலர். களபம்திமிர் - கலவைச்சந்தனம் பூசுகின்ற. கறைஅடி-உரல்போன்ற கால்களையுடைய. களபம்-யானைக்கன்றுகள். திமிரக்குருளை-இருட்குட்டிகள். ஆற்றில் காவகமெல்லாம் களித்துவிளையாடுமெனக்கூட்டுக. காவகம்-சோலையினிடம்.

32. கரும்புருவச்சிலை-கரிய புருவமாகிய வில். கந்துகம்-பந்து. கரும்பு உருவ-புனர்பூசநக்ஷத்திரத்தையூடுருவும்படி.

சாய்க்கும் - ஒழிக்கும். உருவக்கரும்புக்குனிசில்-வடிவத்தோடு கூடிய கருப்புவில்லையுடைய மன்மதன். கருகல்-இருள். கடுக்கும்-ஒக்கும். காழ்-வயிரம்பொருந்திய. தகரும்-ஆடுகளும். செம்மைப்புருவையும்-செம்மறியாடுகளும். போராட்டு - யுத்தஞ்செய்யும் விளையாட்டு. ஓதை-ஓசை. ஓசையாகிய கனைப்பொலிக்கூட்டுக. கனைப்பு-முழக்கம்.

33. தானத்தோடு தழுவும் அவ்வாரணம் (செயந்தி நகரத்து உள்ளார் செய்யும்) கொடையோடு தழுவிய அந்த வேத வோசைகளும். வலம்புரிசங்கினோசைகளும். வானத்துறும்-வானுலகத்தில் விரைந்து செல்லும். வானத்தலையும் - சுற்றித் திரியும். வானத்தோடு-மேகங்களோடு. மலையும்-மலைகளையும். வலம்புரி-வெற்றியைச் செய்கின்ற. அவ்வாரணம்-அந்தயானைகள். தானத்தோடு தழுவும் - மதநீரோடு பொருந்தும்.

34. திகழ்தரும் - விளங்குகின்ற. ஆசினி-ஈரப்பலாக்கள். செல்லும்-மேகமும். மீனும்-நக்ஷத்திரங்களும். திகழ்தரும் ஆசினி செல்லும் - பிரகாசத்தைக்கொடுக்கும் ஆகாயத்திற்போகும். ஈனும் - (அங்ஙனம்போய்க்) காய்க்கும். எல்லை (சூரிய) கிரணவெப்பத்தை-சுனைஆர் அம். சுனைகளிலே நிறைந்த நீர். எல்லை-சூரியனை. சினை-கிளைகள். ஆரம்-சந்தனவிருக்ஷங்கள். நீக்கும் - (போக வொட்டாது) விலக்கும்.

35. கழனியின்கண்நெல் - வயல்களில் நெற்பயிர்கள். சால் உந்து எறில் ஆம் - வாயு மண்டலத்தைத் தள்ளி (அதன்மேல்) ஏறி வளர்தலாகும். சாலி-நெற்பயிர். சங்கம்-சங்குகள். சாலி-அருந்ததி பதவி. தருச்சங்கம் - மரக்கூட்டங்கள்.

36. ஓடை அகம் - தடாகங்களிலிடங்கள். ஒளிர்வனப்போது-பிரகாசிக்கின்ற நிறமுள்ள பூக்கள். ஓடை-நெற்றிப்பட்டம். வனப்போதகம்-அழகிய யானைக்கன்றுகள். கோடு-நீர்க்கரைகள். குளிர்ந்தன்-(இருபெயரொட்டு) குளிர்ச்சி. நாரம்-நீர். கோடு-அந்நீரிலுள்ள) சங்கங்கள். ஆரம்-முத்துக்கள்.

37. வாலியம்-சிறுபருவம். மதர்ப்பு-களிப்பு. வால்இபம்-பரிசுத்தமாகிய யானை. வைத்த- (வளர்த்து) வைத்திருக்கப்பட்ட. மூலம் மட்டு உறு -மூலநக்ஷத்திரத்தினளவு (உயர்ந்து) பொருந்திய. பலாமுட்கனி-பலா மரத்தின் முட்கள் நிறைந்தபழம். மூலம் மட்டு உறும்-வேரினிடத்துத் தேனிறையும். மூலமட்டுறும் முட்கனி [illegible]டும் பலாவெனக்கூட்டுக. வேரினுங் கனியுண்டென்பதனை "படிக்குளிரப் பலாப்பழுத்து,, என்னும்பிரபுலிங்கலீலைச்செய்யுளானுமறிக.

38. வான் அரம்பை - பெருமை பொருந்திய வாழைமரங்கள். கோடு-கரை. வானரம்-குரங்கு. மரக்கோடு-மரக்கிளை. பானல் - நீலோற்பலம். செந்தேன்கள்-செம்மையாகிய வண்டுகள். பாநலத்திடை-பாட்டுக்களினழகிய இடத்தில். பாயும்-பரவும். செந்தேன்கள்-(சுவைப் பொருள்களாகிய) சிவந்த தேன்கள்.

39. தலைவாழ்மதகு - (குளங்களி) லிடத்து நிலைபெற்ற மதகு. மடுத்து-கலந்து. வீழ்த்தலை- (மீன்களை) விழச்செய்கலை. மைத்தலைநோக்கி-மேலிடத்திருந்து பார்த்து. வாளைக் காழ்தலை-வாளைமீன்களின் வயிரம்பொருந்திய தலையில். குத்த-கொத்த. கதிர்த்தலைசாய்த்து - (அம்மீன்க ளகப்படாமையால் (அந்நாரைப்பறவைகள் தமது) ஒளிபொருந்திய தலைகளைச்சாய்த்து. சாய்க்கீழ்தலை - பஞ்சாய்க்கோரைப்புல்லின் கீழிடத்து. மீண்டெகினர்ந்து-திரும்பியெழுந்து.

40. திரண்டு-கூடி. உள்ளி-நினைத்து. களைந்து-ஒலித்து. மேதிகளி

மருப்பு வளர்த்த சங்கம் - எருமைகளின் முறுக்குடைய கொம்புகளிலேறி யூர்ந்து திரியுஞ் சங்குகள். ஆர்-நிறைய. சாரை யென்ன - ஒழுங்கென்று நினைந்து.

41. வண்டல்-மகளிர்விளையாட்டு. தண்டலை-சோலை. விண்தலை-ஆகாயத்தினிடம். சாலி-நெற்கதிர்கள். வேலி-பூமியினிடத்தினின்றும். மீதுஉரும்-மேலோங்கி வளரும்.

42. வேள்விக்கு-யாகத்தின்கண். ஓதும் ஆர் இசை - ஓதப்படும் அரிய (சுர) வோசை. நால்-வேதம். கேதம்-துன்பம். அவி-உணவு. ஏது-குற்றம்; ஏதத்தின்கடைக்குறை. பொதும்பர்-சோலை.

43. கோடாமல்-கோணாமல். தம்புரு-ஓரிசைக்கருவி. கானம் மூட்டி-இசையை யமைத்து. கம்பு - சங்கம். புடையாமல்-விம்மாமல். தும்புரு-கானத்தில் வல்ல கந்தருவன்.

44. பகணம்-மதிலுள்மேடை. நிசலயம்-தளிர். ஆடி-கண்ணாடி. சாளரம்-பலகணிவாயில்.

45. ஒருதலைக் காமத்தாற்றோர்-பிரிந்த துணையை நினைந்து வருந்தியிருக்கும் நாயகன் நாயகிகள். ஓவியத்தலைமை-சித்திரமெழுதலிலேமுதன்மை. வருதல்-வரவு. மாண்உரு-மாட்சிமை தங்கியவடிவம். கிழி-படம். கோட்டி-தருதல், கொடுத்தல். ஒருதலைக்காமத் தாற்றோர்-ஒருதலைப் பேரிற்றோரெனக் கூட்டுக.

46. வீதியிற் குவித்தல் - (வீடுநிறைந்தவுடன்) தெருவிலே குவித்தல். வெள்கிய-வெட்கமுற்ற. சாதகி-ஆத்திமலர். தோழத்தன்மை-தோழனாந்தன்மை. ஆக-ஆகவும். உடம்பிற்கு-சரீரத்தின்கண். ஏதம்-குற்றம். அளகைக்கோமான்-குபேரன்.

47. ஆறெனுமங்கம்-ஓதல் முதலிய ஆறு தொழிலாகிய அங்கம். ஆற்றின் வனைந்து-(வைதிக)மார்க்கத்திற்பொருந்தி. மாமகம்-பெரியவேள்வி. மூப்போறாம் ஆற்றி-திரிகால (ஜபங்கள்) செய்து. பெருகிதம்-பெருமை.

48 பரிமகம்-அசுவமேதம். நால் முற்றி - சாத்திர விதிப்படி முடித்து. மாக்கடவுள்தேர்-குதிரைகளாற் செலுத்தப்பட்ட இரதம். கொடிஞ்சி-மேன்மொட்டு; தலையலங்காரம். சந்தம்-எப்போதும். தலைமயக்குற்ற-இடமயக்கங்களுற்றன.

49 ஏர்க்கால்-மேழி தலை-உச்சி. கயலினம் - கயல் மீன் கூட்டங்கள். மார்த்தாண்டன் - சூரியன். தேர்க்கால்-தேர்ச்சக்கரம். வெடி-அச்சத்துடன். செருக்கால்-களிப்பால். ஓடாடி-பயந்து. பேர்க்கால்- பொருதலையுடைய காற்றைப்போல. வானப்புதுக்கால் - ஆகாயகங்கை. குடைந்து-படிந்து. ஆடி-விளையாடி. மேகநீர்க்கால்-மழைத்தாரை. நெடுங்கால்-நதி. தலை - இடம்.

50. மதுகவயானம் - கள்ளைப்புதிதாகக்குடித்தல். சிதுவைப்-சிதுவாரசியை-யாழென்று (வடிவொறுமையால்) நினையென்று. கல் என-கல்லென்று. கைப்பதுமம் - கைத்தாமரை. முன்னர்ப்பன்பு-சிதுவாரசியை யாழென்று கைநீட்டியகுணம். அமைதல்-அடக்குதல்.

51. முறை முறை-வரிசைவரிசையாக. தொனி-முழக்கம். சுருதியினிசை-(வேத) சுரத்தினோசை. விழைவு-விருப்பம். மூழ்வு-மிருதங்கம். விகலம்-குறைவு. மூரல்-ஒழிக்கின்ற. நடனம். மழையென - மேகம்போல. மறி-சுழல்கின்ற. ஒலிதரும் - முழங்கும். மறுகு-வீதிகளில்.

52. தாயிடுவார்-தாம் பிரித்தாராய்வார். தமது-தம்முடைய பொருளை. எதிரெதிர்-(வாங்குவோருக்கு) நேரே நேரே. தலைவிலைபகர்வார்-முதற்சொன்னவிலைக்கு விற்பார். பொய்ம்மையாக விலையைக் கூட்டிச் சொல்லாரென்றபடி. பரிமளம் - கலவைச்சந்தனம். இது பண்டவெடையின் மிகுதியிலே அரிது என விலை பகரினாரெனக்கூட்டி முடிக்க. இலை என்பதில், இகரந்தொக்கது. அமலைகள்-பேரொலிகள். மறுகு-கடைவீதியில்.

53. பரி திரை - குதிரை வரிசை. பணிமணி-நாகரத்நம். விலையிடுவார்-விலைமதிப்பார். கதிர்-காந்தி. உரையிடுவார்-உரைகல்லில் உரைத்துப்பார்ப்பார். மலையசிலை - சந்தனக்கட்டையினியல்பு முறையறைவார்- புத்தகம்படிப்பார். விரிகலை - விரிந்தவஸ்திரம். மிருதிகள்-பெருக்கங்கள்.

54. வியன் முரசு - பெரிய முரசு. வதுவை-கலியாணம். முடிகொளும்-கிரீடத்தைப் பறிக்கும். முரசம்-(வெற்றி)முரசும். மகம்-யாகத்தில். தரும்-கொடுக்கும்; முழங்கச்செய்யும். அறைபுனல்உண் - ஒலிக்கின்ற நீருண்ணுகின்ற. அமைதி-சமயத்தில். கடிமுரசு-காவல்முரசு. மன்மதன் முரசின் -கடலோடு. இசல்புரிவன - மாறுகொண்டொலிப்பன.

55. சுளுகு-உபாயம். வளை-சவுக்கு குரிகை-உடைவாளுக்கு. நெய்துவரிடுவார்-நெய்பூசுவார். இரவலர் - யாசகர். அசனம்-சோறு. களியினர்-களிப்பையுடையவராய். எழுதியகிழியெதிரே-(தங்கள் தங்களால விரும்பப்பட்டாரை) எழுதிவைத்திருக்கப்பட்ட படத்துக்கு நேரே. திரிபவர்-செல்வார்.

56. அரி- திருமால். மணிகெழு-இரத்நங்கள்பதித்த. அவை-அவற்றை. குரவர்-ஆசிரியர். துலையறு-சமானமற்ற. ஓதுநர்-ஓதுவார்.

57. மூளை-நுனி. வை -கூர்மை. வினையம் ஓர்ந்து போர்-உபாயத்தையுணர்ந்து பொருதலைச்செய்கின்ற.

58. பேர் அவாவுறும் - பெருமை விரும்பும். மினக்கிளையார் - உடன்றம்பிமார் (இலக்கத்தொன்பதின்மர்). பாரிடத்தொகையவர்-பூதக்கூட்டத்தவர்.

59. விசையமொய்ம்பன் - வீரவாகுதேவர். அடங்கா - (வலிமை) ஒடுங்காத. பிறோர்-தம்பிமார். விளித்தனன் - அழைத்தனர். விசையமொய்ம்பனாகிய சிறந்தானெனக்கூட்டுக.

60. வியந்து களித்து - (இருபெயரொட்டு, மிகமகிழ்ந்து. கலந்து-வியாபித்து. பணம் - படம். துளக்கி-அசைத்து. வயம்- வெற்றி. திரம்பி - நிறைந்து. பூதாதியர் யாரும் சேடனும் திரம்பியெனக்கூட்டுக.

61. மாருதத் தலைவ - வாயுதேவனே. மனத்தின் - மனத்தைப்பார்க்கினும். முந்து-முற்பட்டு. கடவுதி - செலுத்துவாய். மான்மகள்-வள்ளிநாயகி. சிந்துரப் பகைப்பீடம் - சிங்காதனம், (சிந்துரம்-யானை. பகை - அதன் விரோதியாகியசிங்கம். பீடம்-ஆதனம்.) ஒருவினன்-நீங்கினான்.

62. பாய் ஒளி - பரந்தகிரணம். சுடர்-பொன். பாதுகை-பாதகுறடு.

63. எல்லை - சமயம் அடைப்பை-வெற்றிலைப்பை. மாரன் - மன்மதன். களாசி-படிக்கம். கோரம்-பயம்.

64. தந்திரி - (வீணையிலுள்ள) எழுநரம்புகள். நகங்கொடுதடவி - நகத்தால் தடவி வாசித்து.

65. சாலம்-நாக்கு. தீவர்த்தி-தீவட்டி. பாலின்-பக்கத்தில். ஆலவட்டம்-பெரிய விசிறி. விசிறி - சிற்றாலவட்டம். அலராநாண்மலர் - வாய்விரியும்பருவத்தையுடைய புதுமலர். தாய்-தாவி. குழுமு-கூட.

66. ஆயிரக்கமலாசனம்-ஆயிரயிதழ்களுடனே கூடிய தாமரையாசனம். பணிப்பாயலான் - சர்ப்ப சயனத்தையுடைய திருமால். படர் இரும் சிறைய - விரிந்த பெரிய சிறகுகளையுடைய.

67. ஆர்த்தென - முழங்கினாற்போல.

68. துடி-உடுக்கை. துந்துபி-தேவவாத்தியம். ஒலித்த - முழங்கின. படகம்- பெரும்பேரிகை. பதலை - ஒருகட்பறை. பம்பும்-நெருங்கும். காகளம்-சின்னம்.

69. நீபத்தாமம்-கடப்பமாலை.

70. சான்றோரோ-பில்லோ.

71. அணிசெழு-அலங்காரம்பொருந்திய. யானைப்பேறதாம்-(ஐராவத) யானை பெறுதலையுடையதாகி. மாறு-பகை. வீற்றிருந்தான்-வேறுபெருந்தருளியிருந்தான்.

72. ஆற்றல்-வலி.

6. வள்ளியம்மை திருவவதார அத்தியாயம்.

1. அகிலம்-பூமி. ஆருஅணி-அசையாநிலையைச்செய்யும் ஆணி. பொற்குன்று-மாமேரு. செற்றம்-கோபம். சகைமை-தகுதி. ஏமன்-ஒருமுனிவன்; இன்பத்தைச் செய்வோனென்றதனால் வந்தபெயர்.

2. பமரம்-சந்தனம். வெற்பின்-மலைகளோடு.

3. கவிழ்தர-கவிழ்ந்து பார்க்க. நாகர்கோன்-தேவேந்திரன்.

4. கானம்-இராகம். இசை-பாடுகின்ற. நாடகமாதர்-நாட்டியப்பெண்கள். வம்மின்-வாருங்கள். அன்னது-அச்சொல். தரிக்குதிர்-கொள்ளுங்கள்.

5. பொருளின்-பொன்னுலகத்துள். பொற்கிறை-மேருமலை. நீவிர்-நீங்கள். மெய்-(ஆகுபெயர்) மெய்யறிவை.

6. தும்புரு-யாழ் வாசித்தலிற்சிறந்த ஒரு கந்தருவனை. கற்று-(அவனிடம்) படித்து.

7. பண் தேறும்-இசைப்பாட்டாகிய தேனும். ஐயம்-சந்தேகம். தாளச்செயல்-தாளத்தி னோசையுடன் கூடிய. நடத்தேறல்-நடனச்செய்கையொலியாகிய தேனும். ஆர்தல்-நிறைதல்.

8. யோகு-யோகம். முனிவரன்-முனிசிரேட்டனாகிய ஏமன். காண்-பெருமை. தோகை-மயில். பாகு இசைத்தவர்-(தேன்) பாகுபோலஇசைபாடிய கந்தருவர். உள்ளத்தின்யோகம் விட்டதைக் கூட்டிமுடிக்க.

9. பாங்கர்-பக்கம். பரிபவம்-அவமானம். தீம் கொடுஞ்சொல்லின்-தீய கொடிய சொல்லால். எம்மொழி-எமது (சாபமாகிய) வார்த்தையை. வேடுவத் தன்மை-வேடர் வேடிச்சியின் செயல்.

10. உங்கள்பால்-(கந்தருவரே) உங்கள் பக்கம். அற்றம்-சோர்வு. வேடுவர்-வேடர்.

11. செறுமந்து-சுழன்று. மாழ்கி-மயங்கி. தனையர்-மக்கள். சார்பு-சகம்.

13. சீலம் உன்னி-(அச்சாபநீக்குதற்கு வாய்ப்பாகிய) இயல்பை நினைத்து. மூலம்-(அதற்கொரு) காரணம். கோலம்-திருவுரு.

14. தாது-மகரந்தம். உருத்த-சொரிந்த. தாதகி-ஆத்தி. போது-பூ. புரி-முறுக்காகிய. சுருதியும் பன்னவன்-வேதகீதங்களை யுடையானாகிய அழகிய குமாரக்கடவுள்.

15. சூர்-சூரன். இனை-(அவன்) கூட்டத்தார். மாதவன்-விஷ்ணு. நேத்திரத்துற்றன-கண்களினின்றும் பிறந்த. மா-பெருமை. சயந்திரு-தெய்வயானையம்மை. வள்ளி-வள்ளியம்மை. தேக்கு-நிறைவு. இறுத்தான்-நிறைப்புற்றிருந்தான்.

16. மகக் குரிசில்-அறுபாதகஞ் செய்தவனாகிய இந்திரன். திரு-(திருவருட்) செல்வம்.

17. மால்வழித்தேவிமார்-விஷ்ணுவின்கண்களினின்றும் பிறந்த தெய்வயானையம்மை, வள்ளியம்மை.

18. மதர்ப்பு-களிப்பு. பேருருவம்-பேரழகு. பெருமிதம்-கருவம்.

19. சிந்தனைச்செய்கை-சிந்திக்குஞ்செய்கை. அல்-அசை. ஆற்றினன்-செய்தனன். (வள்ளியம்மை)

20. திவ்வியக் கண்ணின்-ஞானக் கண்ணால்.

21. தொண்டை-கொவ்வைக்கனி. தோகை-வள்ளிநாயகி. கலங்கா-கலங்காதவிதமாக-முகமனால்-உபசாரவார்த்தையினால்.

22. மாறு மீக்கொண்டு-பகைமேற்கொண்டு. வாரணப்பாவை-தெய்வயானை. சாபத்தின் ஆறு-சாபத்தின் வழி. அவண்-(குறிக்கப்பட்ட) அவ்விடம். ஆற்றிட-பரிகரிக்க.

23. வாரம்-அன்பு. ஈரம்-அன்பு. அடக்கினள்-பொறுத்துக் கொண்டாள் (தெய்வயானை).

24. அன்னபான்மை-அப்படிப்பட்ட தன்மை. பவம்-பாவம். ஆற்றுதல்-(நாயினிச் சொல்லும் விதம்) பரிகரித்தல். தொன்-பெருமை. இலை-இலை வடிவமான.

25. பொறையாற்றிய-பொறுமைசெய்த. ஏத்தவும்-துதிக்கவும். தலைமையும்-முதன்மையும். நிலைமை-உண்மை.

26. வசுந்தரை-பூமி. சுலாவும்-சுற்றித்திரியும். விலங்கு-மிருகம். முந்து-முற்பட்டு. உவச்சிறப்பு-மனமகிழ்ச்சி.

27. முன்னர்-இனிமேல். இயற்றும்-பொருந்தச்செய்யும். அக்கொடும் பவம்-அந்தக் கொடியசன்மத்திலே. இழிவின்-இழிவால். மொழியும்பாவம்-(நீ தெய்வயானையை) நிந்திக்கும் பாவம்-ஒழியும்-கெடும். அழன்முன்னாக-அக்கினி சாட்சியாக. விழுமிது ஆக-சிறப்பாக. வேட்குதும்-விவாகஞ்செய்வோம்.

28. இளையன்-குமாரக் கடவுள். கவல் உழந்து-கவலையினால் வருந்தி. ஓவென-ஐயோவென்று. உளம் சிந்தித்து-(மேனடக்குங் காரியத்தை) மனத்திற்கருதி. மானின்வரல் முறை-(இனிமேல் வள்ளியம்மை) மானவயிற்றிற்றோன்றுதலின் கிரமம்.

29. தெய்வக்கன்னிகை-தெய்வப்பெண். கவுரி-உமாதேவி. வாஞ்சை-இச்சை. சேடி-தோழி. விந்தை-ஒருமலை. மானிற் பொலிவுறும்-மான்வடிவத்தோடு விளங்குவள். தெரிவை-வள்ளியம்மை. தெரிவை குழவியாகியெனக் கூட்டுக. உதிக்கும்-தோன்றுவள்.

30. அன்னவள்-அத்தன்மையுடையவள்ளியம்மை. வேட்டு-மணந்து. இளையுடன்-(உங்கள்) சுற்றத்தாரோடு. கிடைத்த-(என்பாற்) பெற்ற. நீங்க-(அப்போது) அகல. தொன்மைபோல-முன்னிலைமையைப் போல (தேவசொரூபம் பெற்று). இருத்திர்-இருப்பீர்.

31. முனிவரன்-மெய்முனிவன். மோனத்தாறு-யோகவழியில். அன்னோர்-கந்தருவர். அரிவையர்-தேவநாட்டியப் பெண்கள். வினை-தீவினையால். உழந்து-வருந்தி. கனைகுரல்-மிக்கவொலி. கதுமென-விரைவாக.

32. தூ-பரிசுத்தம். கோட்டு-உச்சியையுடைய. வேலை-சமயத்தில். அக்குமான்-அந்தவள்ளியம்மை. அருணம்-செந்நிறம். அணி-அழகு.

33. காதளர்ந்து-கால்சோர்ந்து. வீங்கி-பருத்து. பொறுக்கலாது-தாங்கமாட்டாது. மருப்பு-மாக்கொம்பு. சுற்றி-சூழ்ந்துதிரிந்து. சிறார்-சிற்றார். பாங்கர்-பக்கத்தில். ஈற்றுளைந்து-பிள்ளைப் பேற்றுக்கு வருந்தி.

34. சுழன்று (மனங்) கலங்கி. அயர்வு-வருத்தம். சிலைவிடாத-(கையில்) வில்லைநீங்காத. கொம்மென-விரைவாக. போற்றும்-பாதுகாப்பீர். என்றனர்-என்றுசொல்லிக் கொண்டவராகி.

35. ஆற்றும்-அழும். இரும் திசை-பெரியதிக்கு. வெருண்டு-பயந்து. மேனிநாக் கொண்டு உழும்-(தன்) உடலை நாவால் நக்கும். உலப்பு-வருத்தம். பழுமரம்-ஆலமரம். மூட்டில்-அடியில். பரிவு-அன்பு.

36. இரங்கி - வருந்தி. தருணவில்-இளங்கிரணம். பொருள் கவில்-அருச்சந்து சொல்லப்படும். வேதம்பூத்த-வேதமாகிய பூவை மலர்த்தி. குருமணி-நிறமுள்ள இரத்தம்போல் வாளாகிய வள்ளியம்மையை. வல்லிக்கொம்பனை - பூங்கொம்பென்று சொல்ல.

37. வித்தைக் கானவர் - வித்தைமலையிலுள்ள வேடர். அம்மானை-அந்த வள்ளிநாயகியை. தன் அளி-குளிர்ந்த கிருபை. பெற்ற ஆற்றல் - அடைந்த தன்மையால்.

38. எண்ணிய - நினைத்தவற்றை - எண்ணி ஆங்கு. நினைத்தபோல.

39. அதிக்கவில் (வித்தை) மலையில். நிரதர்-வேடர். இறைவன் - வேடராசன்.

40. கனிமொழி- வள்ளியம்மையாகிய குழந்தை. செல்வி-சிறப்பு.

41. பருகத்தக்கால் - அநுபவிக்கத்தக்கவை. மூதண்டம் - பழைய அண்டங்கள். கருமத்தின் செயலாய் - விளையின் செயலைகவழிகளாகி.

42. பவ்வம் - சமுத்திரம். பரப்பு-விசாலமான இடம். நாமம் - பெயர். செவ்வினன்கு-அழகு நன்றாக. வேடர்க்கிறைவனாகிய சிறப்பினிக்கவனைக்கூட்டுக.

43. வேடத்தையல் (கன்மனைவியாகிய) வேடிச்சி. உய்ப்ப - கொடுக்க. கவரிமயிர் - கவரிமானின் உரோமம். குழல்-சிறுவிரல். சூழ்த்த - (கடலால்) சூழப்பட்ட.

44. போலவென்பதனை மடந்தையென்பதனோடு கூட்டுக.

45. சொல்லை - முல்லை நிலத்தை யழித்த. குறிஞ்சி - குறிஞ்சிநிலத்திலுள்ள. சோட்டுக் குறவர் - மலைவாசிகளாகிய குறவர். நாப்பண் - நடுவிடம். மல்லல்-வளம். சரற்காலம்-கூதிர்க்காலம். சுடர்-பிரகாசம். மதி - பிறைச்சந்திரன். அன்னாள் - வள்ளியம்மை. நாற்றும்போலியப்படும்.

46. ஆர்ப்பு - ஒலி. சொண்டகம்-குறிஞ்சிநிலப்பறை. கின்னா - வள்ளியம்மையை. பின்னையென்றான் - புத்திரியென்று வளர்த்த வேடராசன்மனைவி. விளக்கம் போன்றாள் - விளக்குப்போலப் பிரகாசித்தனள்.

47. பொன்னலம் - நலம், மடார், அச்சம், பயிர்ப்பு என்று நாற்குணங்கள். பேதை - எழுவயதுப் பருவம். பெதும்பை-பதினொருவயதுப் பருவம்.

48. சேடியர் - தோழிப்பெண்கள். இனம் - கூட்டம். கடிய - ஓட்ட. போதும்-போவோம். எனல்-தினை. ஒச்சு-ஓட்ட.

49. காப்பு-(ஆகுபெயர்) யாழ். கந்தருவத்தர்-கந்தருவசாதியார்.

50. கிராதமடந்தை - வேடராசன் மனைவி. எளிமை-இலேசு.

51. கொன்-பெருமை. சோன்பு-தவம். தவத்தின் பான்மை-(அத) தவப்பயன்.

52. மீதார்ந்து - மிகுந்து மூத்த-முதிர்ந்த. சென்று - போய். அவண் - (சமதிருப்பிடமாகிய) அவ்விடம்.

7. சுவாமி வள்ளியம்மையிடத்திற் சென்ற அத்தியாயம்

1. கொல்லை - புனம். இதண் - பரண்.

2. வேள்புனர் - முருகக்கடவுள் சோரப்பட்ட. செலர - சென்று. வேட்கை-ஆசை. எனல் - (ஆகுபெயர்) தினைப்புனம்.

3. மன்-நடு. செவ்வாய் - செவ்வையாக.

4. அத்தரவால் செறியால் - ஆகாயமாகிய சுத்தமுள்ள மார்க்கத்தால். முகிலாமயில்-மேகம்போன்ற மயில்.

5. மறைவாணி-வேதவார்க்கு.

6. நிரை-வரிசை. அருணம் -சிவப்பு. தருணம் - இளமை. காண்மலர் - (உருவகம்) முகம். வருணம்-பிரகாசம்.

7. கையுற - (தம்முள்ளத்தி)னிடத்திற் பொருந்த.

8. தளவு-முல்லையரும்பு.

9. நடு-விடம். வடு - மாவடு. கருமை-கருநிறம். தேன்-வண்டு.

10. இயல் - சாயல். மெல்லியல் - மிருதுவான தன்மையை யுடையாளுக்கு.

11. குன்று-மலையைவிட்டு. இழிந்து-(கீழே) இறங்கி.

12. வழியேற்கு - சிறியேனுக்கு. வறுமை-சிறுமைப்பாலது.

13. கொன்னே-வீணே (நீ). குழுஉ-கூட்டத்தில். வேட்டேன் - (விவாகஞ் செய்தலை) விரும்பியுள்ளவன். கவிற்றுதி - சொல்வாய். (அங்ஙனஞ் சொல்லாயாயின்) பொருவேன்கணை விலகாய் - போர்செய்த மன்மதன் பாணைத்தடுக்கத் தப்பமாட்டாய்.

14. வாளா - (விவாகமில்லாமல்) சும்மாவிருக்கின்ற. மாதர் என்பதில் அர் சாரியை. ஆயமாதர்பேர் பொன்னனையாளென்ப என்னுந் திருவிளையாடற் செய்யுளானுமுணர்க. நாள்-(நப) தினத்தில். ஆர்-பொருந்திய.

15. இசைய - சொல்ல. உறக்கவிழா-நிகத் (தலை) குனிந்து.

16. படை-பாணம். வியா-வியர்த்து. நகையா - புன்சிரிப்புச் செய்து. வார்முலை - (அன்மொழித் தொகை) வள்ளியம்மை. திறவா-திறந்து.

17. அளித்தருள்வோரன் - பிதா. ஆயிழையாள் - வேடராசன் மனைவி. வரைதாள் மலையினடிப் பக்கம் (சிற்றூரென்றபடி)

18. தொடிவயக்கை - (அன்மொழித் தொகை) வளைய லணிந்த கைகளையுடைய வள்ளியம்மை. கடி-வாசனை. வாஞ்சை-இச்சை.

19. அருணமின் - மான்பெற்ற வள்ளியம்மை. மீட்பு - திருப்புதல். இசைவாய்-சம்மதிப்பாய்.

20. கனிவாய்மொழி - (அன்மொழித்தொகை) வள்ளியம்மை. சாதலியா-விருப்பமுற்று. தவறு - தவறுதவிதம்.

21. குரவோர் - தாய் தந்தையர். வரைவார்-விவாகஞ் செய்பவர். மரபு-முறைமை. தவறும் - குற்றமுடையவளாவள்.

22. அருள்பெற்றோர் -பெரியவர். தோற்றம் - காட்சி. உதகம் (தண்) சலம். அழல்-அக்கினி.

23. அற்பு-அன்பு.

24. மலைவாணர்-மலையிலே வசிக்கும் வேடர். செய்வினைசாட்டும்-செய்தொழிலைப் பயிற்றிக் கொண்டிருக்கும்.

8. வள்ளியம்மை திருக்கலியாண அத்தியாயம்.

1. பலக்குறும்பு - பிறவிப்பகை. இனிது - இனிமையுடையதாகிய. சந்தை-சங்கள்பிதாவே. உண்டு-இருக்கிறது.

2. முத்தலையிருதலை வேலோன் - மூன்றுதலையை யுடைய சூலத்தையும், இரண்டுதலையை யுடைய வேலையுமுடைய குமாரக்கடவுள், எனவே சிவபிரானுங் குமாரக்கடவுளும் வேறல்லவென்பதாயிற்று. போராணந்த வெள்ளம் சிந்தனை என்ற யான்மையின் வீட்டில் வேலோன் செலுத்தமெனக் கூட்டிமுடிக்க. போராணந்த வெள்ளமாவது, குமாரக்கடவுள் சரிதமாகிய போராணந்தப் பெருக்கு. சிந்தனை (அடியேன்) மனத்தில்.

3. கிராதன்-வேடன். வனமுலை-(அன்மொழித் தொகை) வேடராசன் மனைவி. தரிக்கை - தரிப்போனுங் காங்களால். நூடகம்-(வள்ளியம்மை). கையிலணியுமோ ராபரணம்.

4. இம்பர் - இவ்வுலகத்தவர். மோக்கம்-மோக்ஷம்.

5. முசுக்கலை - ஆண்குரங்கு. தகை-அழகு முறையிடும்-குறைபாடு கூறித்துதிக்கும். எயினர்-வேடர்.

6. ஆர்வம்-ஆசை. வன்னம்-நிறம். புளினர்-வேடர் அழன்று-கோபித்து. சொடுப்பதை-இதில் ஐ-சாரியை.

7. சிந்தையின் - மனத்தைப்பார்க்கினும். தெரிக்குதும் - தெளிவிப்போம். இந்திரசாலம்-பொய்யை மெய்யாகக் காட்டுவோர் வித்தை.

8. தாரு - (வேங்கை) விருக்ஷம். நாரி-வள்ளியம்மை. அற்புதம் - அதிசயம். படலம் - கூட்டம். கற்பகத்தின்-கற்பகவிருக்ஷம்போல. வேரி-வாசனை. தைவர-(மேலே) பட. எல்லை-சமயத்தில்.

9. குறைவு அரும் - குறைவற்ற. (அருங்கேடனென்றாற்போல). இன்னல்-துன்பம். குறிச்சி-சிற்றூர். நாடுதும்-ஆராய்வோம். அற்றம் - தளர்ச்சி. நினையா-நினைத்து.

10. கலினம் - கடிவாளம். மா-குதிரை. தாருவின்-மரம்போல. மாயம்-வஞ்சகம். அறையா-சொல்லி. குறைப்பன்-வெட்டுவேன். பரசு-மழுவாயுதம். கரந்தான்-மறைந்தான்.

11. மாமுதல் - மாமர வடிவாகிய சூரபன்மன். காமமென்குழற்காக-மாலையணிந்த மெல்லிய கூந்தலையுடைய வள்ளியம்மைக்காக. மைத்துனற் பகைத்து - (மன்மதனுகிய) மைத்துனனால் வருந்தி. காம்-காமம். ஒளிப்ப-மறைய. புற்குடில் - புல்லால்மேய்ந்த வீடு. சுறுக்கொடு-விரைவாக.

12. மடந்தை-வள்ளியம்மை. பேதுற்று-மயங்கி.

13. உடைந்து-தோற்று. கடாம்-மதம். புங்கவன் - விநாயகக்கடவுள். பருவரல்-துன்பம்.

14. முனைவன்-தம்பியாகிய முருகக்கடவுள். தென்றலங்கன்று-இளந் தென்றற்காற்று.

15. இளைய சேவகன்-தம்பியாகிய அடியேன். என்னனிலையாளி - நினைத்து. உள்வெருவ-மனம் அஞ்ச. மத்தம்-வெறி. மால் - பெரிய. கடாக்கான்று-மதத்தைக்கக்கி.

16. அன்னமென்னடை - (அன்மொழித்தொகை) வள்ளியம்மை. அனையன் - அன்னை யுடைய அடியேன். தோற்றம்-காட்சி. வெருவி - பயந்து. காமனுடகம்-மன்மதன் கூத்து.

17. தலை - இடம். படலை-மாலை. மோலி-மீதுடம். போந்து-வந்து. இரந்தான்-யாசித்தான்.

18. சற்றை-நீராட்சி. இன்று-இல்லாமல். மடந்தை - வள்ளியம்மை. குழல்-இடம். கொற்றம் - வெற்றி. நிம்புரி-தந்தத்திலணியும் பூண்.

19. கொம்பு-(ஆகுபெயர்) வள்ளியம்மை. வெம்பு-வாடுகின்ற. தஞ்சம்-பற்றுக் கோடு. இன்று - இன்றைத் தினம். சஞ்சலித்து - துன்ப முற்று. பயோதரம்-கொங்கை. சும்மை-சுமை. வஞ்சியின்-வஞ்சி. ஆற்றாது-பொறாமல். வஞ்சியின்-வஞ்சிக்கொடிபோல். துவண்டு தள்ளாட-அசைந்துதளர.

20. வேளை - மன்மதனை. இந்த வேளை - இந்தச் சமயம் வந்தவேள் - வந்துநின்ற முருகக்கடவுள்.

22. வெருண்டவேழம்-பயப்படுதற்கேதுவாகிய யானை. வீங்கல் - பருத்து. இருமாந்து-கருவமுற்று. இளமுலை வேழத்துக்கு - இளங் கொங்கைகளாகிய யானைகளுக்கு. ஓ-அசை.

23. வாகைப்போதின் - வாகைமலர்போல. முத்தம் -(உருவகம்); பல். செவ்வாம்பல்-(உருவகம்) சிவந்த வாயிதழ். சிறுகாற்று-தென்றல்.

24. மால்-மேகம்போலும். மால்-மயக்கம்.

25. ஆய்-ஆராயப்பட்ட. மயிலாட்கு - மயில்போலும் வள்ளிநாயகிக்கு. உயிர்ப்பன்னி-பிராண நாயகி.

26. இளையன் - குமாரக்கடவுள், கன்று-பிள்ளை, வள்ளிநாயகி. ஒன்றும்-பொருந்தும்.

27. மூக்கின் ஒட-நாசியினுனியிற் செல்ல. முகிழ்த்து - (சிறிது) மூடி. வேள் - முருகக்கடவுளை. நோன்மையர்-தவசிகள். வாக்கினூடு-வாக்கினுவிலும். பெருக்கு - பெருகுதல். தேக்கும்-நிறையும். தேறல்-தேன்.

28. அன்பினர்க்கும் - அன்பினரிடத்தும். செலாது உளம்பேதுறும்-போகமாட்டாது மனமயங்கும். ஆறும்-என்பதில்-உம்- அசை.

29. தாயின்-இதில் இன்சாரியை. தோன்றுகை - தோன்றுதல். பாயும்-பாந்த. பூதங்களாதி மூலப்பகுதியின் றோற்றங்கட் கேதுவாமெனக் கூட்டுக. மூலப்பகுதி-மூலப் பிரகிருதி.

30. ஓம்புதற்கு - பேணுதற் பொருட்டு. அயர்ந்து - செய்து. ஐயனும்-குமாரக்கடவுளும். கலவி வேட்பது-போகத்தைவிரும்பியது.

31. செய்கை-செய்தி. நாடி-ஆராய்ந்து. கதிர்-சூரியனும். கடவா - கடந்துசெல்லக்கூடாத.

32. ஓங்கல் - மலை. மதத்தோங்கல்-மதத்தையுடையயானை. தேங்கு-நிறைகின்ற. தெய்வதம் - தெய்வம். திரு-(இங்கே) வள்ளியம்மை.

33. ஆலம்-விடம். அழன்று-கோபித்து. மொய்த்த-கூடிய. கேள் - சுற்றம்.

34. கூசி - நாணி. கவிழ்ந்தாள்-தலைகுனிந்தவளாகி.

35. கவல் ஒரீஇ-கவலை நீங்கி.

36. அமைய-பொருந்த. ஆறணிந்தான்-சிவபெருமான்.

37. உதயங்காட்டுதல்-உதித்தல். துகிர்வரை-பவளமலை. வரைச் சோராசன்-மலைப்பக்கத்துள்ள சிற்றார்வேடராசன். உயர் வரை-உயர்ந்த இமயமலை.

38. பருகுவான்போல - உண்பவனைப்போல. குழலாள்-கூந்தலையுடைய வள்ளியம்மை.

39. மட்டு-அளவு. மயூரம் - மயில். கட்டழகு-பொழுது. மயிர்க்கூச்சு-மயிர்ச்சிலிர்ப்பு. எதிர - (ஒளியை) வீச. சிட்டருள் - ஞானிகளிருதயம். சேய்-குமாரக்கடவுள்.

40. புலமை-அறிவு.

41. கோரம்-அச்சம். சூர் - சூரன். குருதி-இரத்தம்.

42. குழுஉக்கொடு - கூட்டங்கொண்டு. முறை - விதி. மன்றல்-விவாகம். வருதி-வருவாய். ஆல்-அசை.

43. தந்தி-யானை. கோட்டுக்கால்-கொம்பாகிய கால்கள். துணர் - பூங்கொத்து. கொம்பர் சாய்த்து - கொம்புக்களை வளைத்து. விந்தை-விந்தைமலை. தோகைப்பிலிவேய்ந்து-மயிற்றோகைகளாலே மேய்ந்து. பந்தர் - பந்தல்கள்.

44. ஆக்க-ஆக்கும்பொருட்டு. ஆக்கப் போந்தானெனக் கூட்டுக.

45. கேசம்-கூந்தல். கேழ் கிளர்-நிறம் விளங்குகின்ற. கவின் திருத்தி-திருத்தமாகப் புனைந்து. காதிற்பூசலார்-காதுகளோடு போர்செய்கின்ற. சந்தம்-சந்தனமரம். தழையுடுத்தி-இலையைச் சூழச்செருகி. ஈசன்-முதன்மையானவன.

46. குனிக்கும் - வளைக்கும். குலமுறைமை-குலத்தின் வழக்கம். தருகுவன்-கொடுப்பன். தருகுவன் என்பதில்-கு-சாரியை.

47. வன்னவான்-அழகிய பெரிய.

48. போந்து - வந்து. தோமறும் அணிகள் - குற்றம்பொருந்திய ஆபரணங்கள்.

49. சங்குலின் - இருள்போலும். கவினை-அழகுபெற. மங்கலம்-நன்மை.

50. நானம் - கஸ்தூரி. காப்பணிந்த. வானவிற்சுட்டி - இந்திர தனுசு போன்ற நெற்றிச் சுட்டி. சங்கிலி-மயிர்மாட்டி. சேர்த்த - சேர்க்கப் பட்டன. உண்டாலது உண்டாமெல் - இருக்கது உளதானால். அதற்கு - அம்மின்னலுக்கு. இணை - (அச்சுட்டி சங்கிலிகளை) உவமானம்.

51. மான் அத்திங்களை -(சந்திரனிடத்துள்ள) மானுள்ள அச்சந்திரனை. கொன்று - கொள்ளுவதாக. இலகமாய் - பொட்டாகி. கலவுவன்-பிரகாசிப்பேன். தொல்நாள்-பண்டைக்காலம் உற்றிடுதல்-(அவ்வாறு) வந்திருத்தல்.

52. உருவகப்படுத்தின் - (தனைமுதலியவற்றால்) ஒன்றை யொன்றாகச் சொல்லப் புகுந்தால். உரோணியை-உரோகணி நட்சத்திரத்தை. மதியம் எதிர் முத்தாடும் ஆறும் - சந்திரன் தாங்கி முத்தமிடு முறையாக. ஆகவென்பது. ஆமெனத் திரிந்தது.

53. சுருதியுஞ் சருதா - வேதங்களாலும் கினைத்தற்குக் கூடாத. கூலம்-கரை. கலனேறு - திட்டி தோஷம். ஆம-நீர்.

54. வண்டென-வண்டின் (இசை) எனறுசொல்ல. கபோலச் செவ்வி - கன்னத்தின்அழகு. ஒதிமக் கொல்லன்-அன்னவாகனத்தையுடையகம்மியன், பிரமன். கஞ்சனம்-கண்ணாடி.

55. விளர்ப்ப-வெளுக்க. உள்ளம்-அகம். காமர்நுதி - அழகிய கூந்தலையுடைய வள்ளியம்மை. குழை - காது. மணித்தோடு-இரத்தினமிழைக்கப்பட்ட தோடு. இருவிசுமிற்பொலியும் - இரப்போடு விளங்கும்.

56. பூவை-காயாமலர். இசழ்-அதரம். யாவகம்-செம்பஞ்சு. எழுதும்-இட்டுக்கு. கோவைக்கனி - கோவையின் கனி (அவ்விதழுக்கு) கோவைப் பழம் ஒப்பென்று.

57. ஒதை-ஒலி. அக்கரம்-எழுத்து. பூகம் (அக்கழுத்தில்) பூசப்படும் காம் அதிற்கவினின்-வயிரமுள்ள அதற்குழம்பினழகால். மூர்த்த - முற்பட்ட சேசகம்-சேறு.

58. முனையின்-அரும்புபோலும். மருப்பின்-கொம்புபோலும். மதர்ப்பு-செருக்கு. தணிப்பான்-நீக்குதற் பொருட்டு.

59. வாரி-அன்னரி பகலாயசேடிபசற்காலமாகிய பாங்கி. மேரு - மகாமேருமலை

60. வெயில் - பிரகாசம். மேகலை-மேகலாபரணம். பொன்பயில்வது - பொன்னாற் பற்றுகலூர்ற. பூணசேர்த்து-பூணபிடித்து.

61. நுகிர்-பவளம். தேவர்மூவர்-திரிமூர்த்திகள். உளகுணம் (அவருக்கு)ள்ள நிறங்கள். மூன்று-வெண்மை, செம்மை, கருமை.

62. வசந்தகாலப் பாவை - வசந்தகாலமாகிய பெண்ணினுடைய. பூங்கொம்பில்-பூங்கொம்பாகிய (கைவிரல்களில்). பூப்ப-பொலிவாக

63. முண்டகம்-தாமரை. தளிமம்-சோபில. அன்னம் - அன்னப்பறவை. விண்டு-வாய்திறந்து. ஆற்றுதல் - ஒலித்தல்.

64. வான்-பெருமை. கதிர்வனப்பு-ஒளியழகால். ஒளிய-பிரகாசமுடைய. நீலம்-நீலமணிகளை. அழுத்த - பதிக்கு. த்தற்கு. தேவரம்-மணிகள் பதிக்குங்குளி.

65. வாய்ப்பச்செய்த கோலச்செவ்வியின் செய்கையை னைக் கூட்டுக. எவ்வம்-துன்பம். உள்ளம்வைத்தான்-உட்கொண்டான்.

66. வாரி-கடல். வயா-வருத்தம். பெயர் - பெருமை. திரிசுதந்திரத்தர்-மூச்காணிப் பிராமணர்கள். காரிகைச்சடங்கு-அழகிய (கலியாணக்) கிரியை. காட்ட - (காரியவர்) செய்ய.

67. இருகியம் - இருக்கிருத்திய மடங்கிய நூல். சுருதி - விதி. நியதி-நியமம்.

68. குறக்கோமாட்டி - வேடராசன்மனைவி. ஆசமனம், அருக்கியம்-பெரியவருக்குச் செய்யுமுபசாரம் (பூசாவிதியிற்காண்க). மாதவன்-பெருந்தவத்தையுடையவேடராசன். மதுபருக்கம்-பால் பழம் தேன் சருக்கரை கலந்து பிசைந்த வுணவு.

69. இருகியத்தின் - இருக்கிருத்தியநூலின். ஆசமமரபின் - சிவாகம முறையின். செய்வினைச் சமிதை - செய்தொழிற்கு வேண்டுஞ் சமித்துக்கள். அரிணம்-மான்.

70. கந்தரம் - கழுத்து. புனைவித்து-பூட்டுவித்து. ஐய-அழகிய. சுலனன் - அக்கினி.

71. மனமாம்-மனம்போலும். நான்முறை - சாஸ்திர விதிப்படி. உள்ளம-மனம். நோன்மை-வலிமை. வான்-ஆகாயத்தில். சால்-அருந்ததி. பார்த்து-(பிறவினை) பார்க்கச் செய்து.

72. பணை - குழல். ஒதை - ஒசை. ஆர்த்த-நிறைந்தன. கணம்-கூட்டம். ஆர்த்த-சொரிந்தன.

73. விந்தைக்குன்றவர் - விந்தமலைவேடர். சாபம்நீங்கி -(தங்களுக்கு எமமுனிவனாற்கொடுக்கப்பட்ட) சாபத்தைவிடுத்து. வேளுலகம் - கந்தலோகம் மருங்கு-இடை. விசாகன் - குமாரக்கடவுள்.

74. தோகை-மயில். சாரல்-மலைப்பக்கம். கந்தமாதனம்-செயந்தி நகரத்திலுள்ள கந்தகிரிசலம்.

75. காடி தக்கை - இவையினைத்தும் பலவாத்தியங்கள். பாவையின் - கடல்போல.

76. வேள்வி-விவாகம். தெய்வவாரணத்தணங்கு - தெய்வயானையம்மை. நோற்று - தவஞ்செய்து. அன்னூள்முன் - அத்தன்மையான அவளுக்கு எதிரே. கொண்டான்-கொண்டிருந்தான்.

77. சுலழி கான்றநால்வாய்-மதசலத்தைக் கக்கிய தொங்கிய வாயையுடைய. களிறு-யானை. சுந்தரி - தெய்வயானையம்மை. ஆன்ற - நிறைந்த. வன்ற-பொருந்திய.

78. மாது - வள்ளிநாயகி. செம்மை - ஒழுங்கு. சிந்தனைசெய்ய - தியானிக்க. புத்தேள்-கடவுள்.

79. கோலம்-அழகு. வெள்ளைவாரணன் குமாரி - தெய்வயானையம்மை. உளங்களித்தாள் - மனத்திற் (கண்டு) மகிழ்ந்தாள். குறிப்பு - எண்ணத்தின் பாற்படும் விஷயங்கள்.

80. அத்தன்-பிதா. நாதன் - கடவுள். குவ்-பார்வதி. காதலன்-நாயகன்.

81. முழுத்த - பூரணமாகிய. மூர்த்தி-மூர்த்தியே இலிங்கத்து - இந்த இலிங்கத்தினிடமாக விருந்து. அண்டச் சூழல் - அண்டத்தினிடங்களில். உள்ள அளவும்-உள்ள உயிர்களனைத்தையும்.

82. சேய் - பிள்ளையாகிய குமாரக்கடவுள்.

83. கேளா - கேட்டு. பேதுறல் தவிர்தி - வருந்துதல் நீங்குவாய். திண்ணம்-உறுதி.

84. குஞ்சிதசாணம் - தூக்கியபாதம். சந்தம்-சந்தனவிருக்ஷம்.

85. மேருவின் - மேருமலையைப் போலும்.

86. உமை-மான். விழைவு-விருப்பம். வேழமான்-தெய்வயானையம்மை. குழைவு - உருக்கம். குவித்தவள்-குவித்தனளாகி.

87. கடவு-செலுத்திய. வலக்கை-(தெய்வயானை யம்மை) வலப் பக்கத்துக்கையை. இடது - இடப்பக்கத்து-கோலம்- அழகியதோற்றம்.

88. வான்-அரசு. சுவர்க்க இராச்சியம் - அளித்த-(இந்திரனுக்குக்) கொடுத்த. போதும் ஆறு-வருமுறை.

89. சீயம் - சிங்கம். சோதிவேலுடையானை எங்கோன் எனக்கூட்டுக.

90. ஞானசத்தியின் - (விட்டுநீங் காத) ஞானமாகிய சத்தியோடு. நவை-குற்றம். பாகம் - (இரண்டு) பக்கம். வேற்படை - வேலாயுதமாகிய ஞான சத்தி. வள்ளிநாயகியுந் தெய்வானைநாயகியும் - இச்சாசத்தி, கிரியாசத்திகளென்க.

91. வேட்டகாதலி (யான்) மணந்தநாயகி. ஞானச்சிந்தை - ஞானம்பொருந்திய மனம்.

92. தாரகம் - பிரணவம். குழைத்தான் - வளைத்த சிவபெருமான். அருளோடு-அருள் விரும்பதலுடன்.

93. தாபதர் - முனிவர். மோனயோகம்-ஞானயோகம். இசைய - பொருந்த. நிகாம்-கோயில்.

9. பிரமாவுக்கு வரங்கொடுத்த அத்தியாயம்.

1. நான்கெனவிதித்துள-நான்காகவகுத்த. ஆதி - சிவபிரான். உதவும்-(வரம்) - கொடுக்கும். சுகன்அறைதியென்றுனென்க.

2. பரன்குரு - சிவபிரானுக்குக் குருவாகிய குமாரக்கடவுள். வழாது-தவறாது. சுருதியொடு-வேத(விதி)யுடன். அருகு (சமது) பக்கம்.

3. என்றும்-எக்காலமும். மன்றமிக. தென்கால்-தென்றற்காற்று. உலவும்-சஞ்சரிக்கும்.

4. நல் நம்பொருளும்-நல்ல நம்முடைய திரவியங்களையும். மாதரையும்-பெரிய நிலங்களையும். சீரியன - சிறப்பாயுள்ள (பிற) பொருள்கள். சுமைகொடு-பாரமாகக்கொண்டு. (அஃதாவது: கடமையாக வெண்ணிக் கொண்டு என்றபடி. தொழிற்கு-(திரிசுதந்திரர்களாயுங்கள்) வேலைக்கு. உரியது - உரிமையுடையது. இம்மை-இப்பிறப்பின்பம். அம்மை - வருபிறப்பின்பம்.

5. அதில்-அவ்விரண்டாயிரத்துள்.

6. சந்ததமும்-எப்பொழுதும். தரிசித்து-பார்த்து.

7. உள் நலிற்று - மனத்திலேதியானியாமல். ஏனம் - குற்றம். மானம்-அன்பு. மேனிலை-மோக்ஷம்.

8. பரிசு-தன்மை. வீடேம்-(விகாரம்) விடேம். மன்னுதொழில் - நிலைபெற்ற (வழிபாட்டுச்) செய்கை. வீடேமாயினுமெனக் கூட்டுக.

9. நித்தமும்-தினந்தோறும். மூழ்க- (யாங்கள்) ஸ்நானஞ் செய்யவும். சித்தி - இட்டசித்திகள். விழை - விரும்புகின்ற. பவுத்திரர்கள்-பேரர். புண்ணியம் அருத்தம் - அறம் பொருள். அத்தகைய-அந்தத்தகுதியையுடைய. மூலமும் - காரணமும். அது-பகுதிப்பொருள் விகுதி.

10. நல்குரவு-தரித்திரம். ஞானம்-அறிவு. காட்டி - விளக்கி. செல்வம்-ஆக்கம். வர தீர்த்தம்-சிரேட்டமுள்ள தீர்த்தம்.

11. வேலை-(இங்குள்ள) சமுத்திரம். விதித்தார்-(ஒவ்வொரு புண்ணிய காலங்களை) விதித்தனர். (ஆதலால்) ஏழையர்-அறிவிலிகளாகிய யாங்கள். வாலிய - வெள்ளிய. மூலம் - ஆதி. இடை-மத்தி. ஈறு-அந்தம்.

12. கட்டுரை-உறுதிமொழி. சிலையின்-வில்லால். இருநூறு அளவு-இருநூறு இடையிட்ட தூரத்தில். இலைகொள்-இலைவடிவுகொண்ட. விட்டான்-செலுத்தினான்.

13. அளாவி - கலந்து. தொட்டவழி - தோண்டிச் சென்ற மார்க்கம். கங்கை-(திரிசுதந்திரர் கேட்டுக்கொண்ட) தீர்த்தம்.

14. வேலைகளை-சமுத்திரக்கரை. மீமிசை - மேலும் மேலும். வாலிய - வெள்ளிய. மூலம் இன்று-(தனக்கொரு) காரணமில்லாமல். முந்துற-முதலாவது.

15. இந்திரப் பெருவள இன்பத்து உய்த்தலால் - (தன்கண்மூழ்குவாரை) இந்திரனது பெரிய செல்வத்தோடு கூடிய சுகபதவியிற் செலுத்துதலால். கந்தபுட்கரிணி - கந்தபுட்கரிணியென்னும் பெயருடைய தாகி.

16. திரிபுவனங்கள்-திரிலோகங்களிலுமுள்ளவர்கள்.

17. முன் அருளி-முன்பு உண்டாக்கிக்கொடுத்து. பதசேவை - திருவடிவழிபாடு. எவரும்-எல்லாரும். இதிகாசம் - பண்டைக்கதை. கூறுவான் (பின்பு) சொல்லத்தொடங்கினான்.

18. திரை-அலை. தீர்த்தத்து-தீர்த்தத்தில். வழாது-வழுவாது. மறைச்சுருதி-(இருபெயரொட்டு) வேதவிதிப்படி.

19. களைமுறுக்கு - பூ அரும்பின் கட்டு. அவிழ்தரு-விரிகின்ற. முனம் உவகற்பம்-பழைய கற்ப காலத்தில். முராரி-விஷ்ணு. பனகாப்பணி-ஆதிசேடனுமேல். நீத்து - விட்டு. வான் தனு-பெரிய வில்.

20. செற்றம்-கோபம். சொற்றம்-வெற்றி. அற்றம்-அழிவு. ஆதிசேது - முதல்அணை. கோலினன்-வளைத்துக் கட்டினான்.

21. மாதவன்-ஸ்ரீராமன். மூன்று-மூன்று கற்பாந்தங்களில். (இது தொகைக்குறிப்பு). இவண்-இவ்விடத்தில். ஆதியில் - முதலிலே. பூதலத்தமரர் - பூசுரர், திரிசுதந்திரர்.

22. சந்திச் சிந்து - சந்திதிமுன்னேயிருக்கப்பட்ட கடலில். அலால்-அல்லாமல்.

23. சந்தன வரை - கந்த மாதன மலை. செரு - யுத்தம். பிறங்கல் - மலை. முயன்று-முயற்சியாற் செய்து. தேம்பி-இளைத்து. ஆடகத்து அருவரை - (அந்தப்) பொன்மயமாகிய அரியமலை. ஆக-(தான்) ஆக.

24. தவத்தினால்- தவத்தாலாகிய சோகவெப்பத்தால். வயின் - இடம். நோற்றலும் - தவஞ்செய்திருத்தலும். நோன்மை - வலிமை. காற்றினின் - வாயுதேவனால். முத்தலைக்கவின் - மூன்றுசிகரத்தின் அழகு. ஆற்றல்சால்-பலமிகுந்த. வாயுவினால் சிகரமிழந்த கதை கந்தபுராணத்துட் காண்க.

25. சந்தச்சாரல் - (அவ்வண்மைவிளி) சந்தனசைலமே. பொற்றலையாய்-சிறந்தமலையாகி. கவிற்றுதி-வாழ்த்துவாயாக.

26. நடந்துள-நிகழ்கின்ற. மிடைந்த-நெருங்கிய. துணிவு-உறுதி.

27. வாரிசம்-தாமரை.

28. தருக்கு-மகிழ்ச்சி. சால் - மலையும். இருக்கினால் - வேதவிதிப்படி. பெட்பு-ஆசை. சுருக்கும்-உண்டாகும்.

29. அகந்தை-கருவம். பன்னகம்-பாம்பு. பழித்து-நிந்தித்து.

30. என்றலை - என்றிங்ஙனமாதலை. காரி - (வயிரவரை நோக்கி) வைரவனே. கன்றலை - கோபமுடையையாகி. சோரிநீர்-இரத்தசலம். கின்று-(தலையில்) னின்று. உகிரின் நீக்குவாய் - நகத்தாற் கிள்ளியெறிவாய்.

31. நளினப்பூ - தாமரைப்பூ. சென்றனன் செயிர்த்தனன் - (முற்றெச்சங்கள்) சென்று கோபித்து.

32. ஈர்த்தபின் - (வயிரவர்பிரமன் றலையைக்) கிழித்தெறிந்தபின். சுதனைத்தேற்றப் பாகன்றேர்ந்தனனெனக் கூட்டுக. தேர்ந்தனன் - ஆராய்ந்தான்.

33. பெண்மையில் (மோகினியாகிய) பெண் தன்மையினாலே. பேதுற-மயங்க. ஓர் - ஒப்பற்ற. மண்மயில்-பூமிதேவியாகிய மயிலிடத்து. வான் முகில் - பெரியமேகம்போலும். தண் மயில் - குளிர்ந்தமயில் வாகனத்தையுடைய. ஓதுவேனென-உபதேசிப்பேனெனநினைத்து.

34. ஆர்வம் - அன்பு. அம்புயக்கனை-தாமரை மலரிடத்தே. ஓர்வுறுடனர.

35. ஒருதலை - உறுதியாக. போயுளது - போனதாகிய. உனதுசென்னி-உன்னுடையதலை. வருதலை - வரவை. மாமுதல் - மாமரமாகிய சூரனை. புலவு-புலால் நாற்றத்தை. இருதலை-இரண்டுபக்கமுந் தலைகளையுடைய. (இதனை முருகக்கடவுள் வேலுக்குச் சிறப்புப்பெயரென்பாருமுளர்) "இருதலை படைத்த வெஃகம்" என்னுங் கந்தபுராணம் சூரபன்மன் வதைப்படலத்துட் காண்க.

36. மரபின்-முறையாக. உரு அகத்துஎற்று-பலதரம் மனத்தில் எண்ணித் தியானிப்பாய்.

37. தியானித்தான் தவம் - (அங்ஙனம்) தியானித்த பிரமாவின் தவத்தை. நோற்பது எனை - தவஞ்செய்வது என்னையென்று கேட்க.

38. சேதிப்பாகலின் - அறுபட்டமையினாலே, யான் வருத்தமுற்றேனெனக்கூட்டுக. நோற்றது-தவஞ்செய்ததனால். என - வேண்டாகூறலால், அசையாக்குக.

39. நெஞ்சு அழிந்தனென் - மனநிலை கெட்டவனாகிய. எற்றொழுது-என்னைவணங்கி.

40. மேருபுயம் - மகாமேரு மலைபோலுந் தோள்கள்.

41. கவுரியீசன் - உமாமகேசுரர். இனியபேர் வாஞ்சையணி - இனிமையுள்ள பெரிய ஆசையாகிய இரத்நம். வினையில் - நல்வினை தீவினையென்பவையில்லாதொழிதற்கு. தாரகமாக - மூலமாகியபிரணவசொரூபமாக. பேடகம்-பெட்டி.

42. திருவருளனுவால் - சிறந்த திருவருளால். மூவரில் - (நான்முதலிய) திரிமூர்த்திகளாலே. ஞானம் - அறிவு வடிவம்.

43. வெளி-ஆகாயம். மகத்தவம் ஆங்காரம்-மான், அகங்காரமென்னுந் தத்துவங்கள். பூந்தோடு - பூவினிதழ்களால். அண்டம்-முட்டைவடிவமுள்ள உலக (மாகிய மலர்கள்). ஒன்று-(அவற்றுள்) ஒன்று. நான் - (பிரமனாகிய) நான். பான்மை ஆம் - பகுப்புண்மையாம். ஈதுபோலாம் - இதுபோலாகும்.

44. ஐயன்நீ-குருவாகியநீ. பீடம்-ஆசனம். முடிவுதேறு - அளவு அறியமாட்டா. யாவர்க்குங் குருவானோர்-சிவபிரான்.

45. உன் - உன்னுடைய. வசிய சூரணத்தால் - வசிய மந்திரத்தினால். வல்லாள்-வல்லமையுடையாளானவள்.

46. மூன்றும் - மூன்றுலகத்தாருக்கும். தருதற்கு - (ஐசுவரியத்தைக்) கொடுப்பதற்கு.

கமலை - இலக்குமி. நிபானம் - (வேறுவேறாகச்) சிந்தித்தவர்க்ளுக்: மலைவற-மாறுபாடு இல்லாமல்.

47. தத்துவத்தரங்கம் - (தொண்ணூற்றாறு) தத்துவங்களாகிய அலை. தளைப்பு - பிரிவு. மோகம் - ஆணவம். மாயம்-மாயை. வித்து-கன்மம். இடங்கர்-முதலை. வேள்மதி - மன்மதனாகிய சந்திரனை. ஆசைகண்டு - ஆசையுடன் பார்த்து. நாவாய்-தோணி.

48. வீர ஆசனம் - யோகாசனத்திலொன்று. வாமம்-இடப்பக்கம். ஞானமுத்திரை-சின்முத்திரை. உவமதி-பூரணசந்திரன். வடிவமாய்-திருவுருக்கொண்டு.

49. காணலன்-சிவபிரான். குறித்தமேலவர் (தன்னைமனத்திலே) தியானித்த உயர்ந்தோர். சிவகுரு-சிவாசாரியார். மூலம்-காரணப்பொருளே.

50. சரீரம்-பிணம். துன்-(அப்பிணத்தினிடத்து) நெருங்கிய. நோக்கவும் - (அருவருத்துப்) பார்க்கவும். துணிவு - துணதலை. தேற்றம் - (தாற்பரியம்) ஆக்கும்.

51. தேறலாம்-தேறுண்டாகும். இபவன் - கடவுள். தியானத்துஎன்பதில்-அத்து-தவிர்வழிவந்த சாரியை. குளிர்ச்சி-(பிறவிவெப்பம் நீங்குந்) திருவருள்.

52. நெக்கு-நெகிழ்ந்து.

53. கொடுப்பது - (நாம்) தருவது.

54. பேதுறேல்-மயங்காதே. வேட்ட-விரும்பிய. முனர் - முன்னர். மீள-(அது) மீண்டெய்த. அருள்-கருணையால். இரங்குக-இரக்கஞ் செய்வாயாக.

55. முராரி - விஷ்ணு. காதலன்-மைந்தன். எய்துகாலம் (சிரசு) வருங்காலத்தை. ஓங்காரம்-பிரணவத்தோடு. ஓர்-உணரப்பட்ட. அறிவும் கழறி-ஞானத்தையும் போதித்து. காமர்-அழகு, ஆசையுமாம். பகர்ந்தவா (முருகக்கடவுள்) அருளிச்செய்த விதம். தன் ஆல்-அசைகள்.

56. வரமம்-அழகு. வயா - ஆசை. நோற்றற்கு-தவஞ்செய்தற்கு. மூலம்-முதலாகிய. ஓம்-பிரணவம்.

57. அடைவினால் - முறைப்படி. முன்னம்-(அப்பிரமன்) எதிரே.

58. ஆன்ற-அமைந்த. அயர்வு - தளர்ச்சி. எம்முன் கொண்டிருந்த தெனக்கூட்டுக. ஏன்ற உரை-பொருந்திய வார்த்தை. கான்ற-கக்கிய. சோர-ஒழுக.

59. அருத்தியின் - ஆசையோடு. திருத்து, பொருத்து - வீகாரமொழிகள்.

60. அவிரும்-விளங்கும். செவனும்-பொருந்தும். சிறப்ப-விசேடமாக.

61. ஆய் - ஆராயப்படும். கதிரின்-பிரகாசத்தையுடைய. பாம்பொடுமதியும் நதியுமெனக்கூட்டுக.

62. ஆலகாலம்-விடம். ஓர்கோலம்-ஒப்பற்ற அழகு. கொள்கை-குணம். புரத்து - (திரி) புரத்தில். எல - பொருந்த.

63. கனற்றும்-சுடும். தூபம்-(வாசனைப்) புகையுண்ட. சாமகானனே - சாமவேத கீதத்தையுடையவரே. தகைய-தகுதியுடைய.

64. தரு - கற்பகம். தேனு - காமதேனு. பண்-சீர். மணி - சிந்தாமணி., இவைகள் கேட்டவற்றைக் கொடுக்கும் பொருள்கள்.

65. எள்ளல்-இகழ்ச்சி. சென்னி-தலை. தேம்பினேன் - வாடினேன். அதுவுமன்னி-அத்தலைபெற்று. பண்ணினேன், இனவெதுகை.

66. நாகுஇளம் - (இருபெயரொட்டு)-மிக இளைய. கோடி-கொள்வாய்.

67. செந்துபுரம் - திருச்செந்தூர். ஏற்றம்-உயர்வு மாற்றம்-மாறுபாடு.

68. என்ன - என்று முன் - முதலில். ஆறுமுகக் குமரேசன்-ஆறுமுகங்களையுடைய குமாரக் கடவுளுக்குப் பிதாவாகிய சிவபிரான். (பின்) அன்னவன்-அத்தன்மையுடைய குமாரக்கடவுள். தணப்பு-நீக்கம். விமானவுரு-விமானவடிவம்.

69. வேத-பிரமனே. அம்மானதவாவியுளாய்-அந்தமான தடாகத்தையுடையவனே. உனக்குளகற்பும்-பிரமகற்பம். மேல்நின்றெனக் கூட்டுக.

70. நம்முள சாரூபம் (அக்காலத்தில்) மேவுதிஎனக் கூட்டுக. கள்நளினஆலய-தேனொழுகுகின்ற தாமரைக் கோயிலையுடையபிரமனே. கந்தவரை-கந்தமாதனமலை. பொருக்கென்று - விரைவாக.

71. தலைமை புரிந்திட- (நம்முதவியின்படி சமுத்திர ஸ்நானஞ்செய்து விமானவடிவா யிருக்கும்) முதன்மையைச் செய்ய. சாரூப நிலைமை யடைந்திடில்- (நாமுற்கூறியபடி) சாரூபத்தன்மையை (நீ) அடைந்தால், உன்தலை-உன்னிடத்தில். நோரம் - நோக்கவந்து பொருந்தும். ஆழியில் நித்தமும்-(விதிவிலக்கு நோக்காது சந்நிதிச்) சமுத்திரத்தில் தினந்தோறும்.

72. மாயன் - விஷ்ணு. இராமாவதாரமூன்று-பரசுராமாவதாரம், பலராமாவதாரம், தசரதராமாவதாரம். இது-இச்சேது.

73. திரை - கடலில். சேதுவும்-அணையும். கண்டு - உண்டாக்கி. புரிந்தனன் - (அவ்விஷ்ணு) செய்தான். அயன் - பிரமனே. தலைப்பாதன்மை - தலைமை விரும்பிச்செய்யும் தன்மையான. வதனாரம்பம்-(சந்நிதியிலுள்ள கடலாகிய) முகாரம்பம். முகத்துக்குந் தலைக்கும் வேற்றுமையின்மையுணர்க.

74. முற்று-முழுவதும்.

75. தோற்றிய - (செய்யியவென்னும் வினையெச்சம்) (இட்டகாமியங்களின் பிரயோசனம்) தோன்றும்பொருட்டு.

76. தரு-கற்பகவிருக்ஷத்தை. குவடென-உணவென்று. படைப-பருத்த. புடை-இடம். கலுழி-(மதமாகிய) கலங்கல் நீரை. தமிழ்ச்சாரல் - பொதியமலைப்பக்கம்.

77. மூலம் - அடிவாரத்தில். ஆடுவான் - ஸ்நானஞ்செய்யும் பொருட்டு. மாதவனாகிய அயக்கிரீவனெனக் கூட்டுக. (இவர்விஷ்ணுவினவதாரமானவர்) பாரா-பார்த்து. தெரிவை - கனகசுந்தரி. பரிமுகமாகென - குதிரைமுகமாகப்பிறப்பாய் என்று.

78. தவிர்பகல்-நீங்குங்காலம். மாதவனுபி யுதித்துளான் - பிரமன். போந்தலை - (முன்னாளிலே) இறந்துபோனதலை. வருதலை-வாவைப்(பெற).

79. உளது - உள்ளதாகிய. அவ்வரைக்கண் - அவ்வெல்லையினிடத்து. இடை - சமீபக்கமாக. மந்திரத்தின்-கோயிலின். முந்து-எதிரே. நீர்தியின்-சமுத்திரத்தில். மொய்குழல்-கனகசுந்தரியே. போய்-(வருஞ்சனனத்தில் நீ) போக. போய்-நீங்க. அந்தமுகம்-பண்டைய முகம். போய் இரண்டும், எச்சத்திரிபுகள்.

80. சனனச்சுமை-பிறவிச் சுமை. மேனி-சரீரத்தால். முகம்பரி போனறு ஆயினள்-முகம் குதிரையையொத்து (உள்ளாள்) ஆனாள். (குதிரைமுகத்தோடு பிறந்தாளென்றபடி).

81. அந்தரவாணி-அசரீரி. சுதைமகள். மா-குதிரை. ஆனனம்- முகம். நல்முகன்-நல்லமுகம். ஆக-ஆவதற்கு.

82. மரபின்வழி - வம்சத்தின் பரம்பரை. சுழிமறியும் - நீர்ச்சுழிகளை வீசும்.

83. தாரகம்-பிரமப்பொருள். சங்கமவேலை - நதியுங் கடலுஞ் சந்திக்குமிடம்,

84. வதனாரம்பம் (சந்நிதியிலுள்ள) சமுத்திர தீர்த்தம். கோடகம் - குதிரை. உவாமதி-பூரணசந்திரன். உளம் துளங்கினள் - (தாற்பரியம்). மனம் சிறப்புற்றாள்.

85. மடவரல்-அங்கசுந்தரி. மூழ்கி-(மீட்டும்) ஸ்நானஞ்செய்து. ஒற்றர்-தூதர். கடிது - விரைவில். உய்த்தார்-அனுப்பினான். பஞ்சவர்கோன்-உக்கிரப்பெருவழுதி.

86. கவுரியர்-பாண்டியன். உவரி-வதனாரம்பக்கடல்.

87. வாஞ்சா தீர்த்தம் - வாஞ்சை தீர்த்தம். (நினைத்தவற்றைக் கொடுக்குந் தீர்த்தமென்றபடி).

10. திரிசுதந்திரர் வரலாறுரைத்த அத்தியாயம்.

1. பற்று-அன்பு

2. சுகமுனி-சுகமுனிவனே. ஒன்றாக - ஒற்றுமையுடையவராக. முகமன்-உபசாரம். மோனத்தண்மை-மௌனத்தாற் பெறப்படும் ஞானம்.

3. முதுக்குறை - பேரறிவு. முனிவர்குழு - முனிவர் கூட்டங்கள். தாம்-அசை. மகி-பூமி.

4. ஆறெனுங் கருமம் - ஓதல்முதலிய அறுவகைத்தொழில். ஆற்றுவார்-செய்வாராய். உளர் இவர் மும்மையார்க்கு-உள்ளாராகிய இத்தமூவகையார்க்கு. ஆய்ந்திடா-ஆய்ந்து.

5. வான்பிரமசரியத்தால்-பெரிய பிரமசரிய நிலையில். வேட்பு - ஆசை. கருமம் ஆற்றுவார் - (அப்போதப்போது செய்யவேண்டிய) தொழில்களைச் செய்வார். ஆர்வம்-அன்போடு. ஊட்டுவார்-(அவர்களை) உண்பிப்பார். வரு-(தாங்கள் இல்லறத்தையடைந்து அதனால்) பெற்ற. சுதரைக் கொண்டு-பிள்ளைகளைக்கொண்டு. அவாசிக்கண் உள்ளார் - தென்றிசையிடத்துள்ளாராகிய பிதிரர்கள்.

6. தருமம் - (சிராத்தாதி) புண்ணியங்களை. அக்குரம்பு-அந்தப்பகை. செய் - செய்ய. கமலத்தனோற்றும்-பிரமதேவனை (நோக்கித்) தவஞ்செய்யும்.

7. புகழ்ச்சி-வழிபாடு. தேவன் இறைவனெனக் கூட்டுக.

8. தஞ்சம்-பற்றுக்கோடாக. விஞ்ஞையாய்-அறிவையுடையவனே.

9. புடவி-பூமி. சுவர்க்கம்-பொன்னுலகம். மின்னுலகம்-சத்தியலோகம். காமுற்றோம்-விரும்பினோம். அவண் இடைதோறும்-அவ்விடங்கடோறும். சுதந்திரம்-சுவதந்திரம், பிறரவேவப்படாதிருத்தல். அருளென- அருளென்றுகேட்க.

10. அக்கினி வெம்பும் அவர் (யாகாக்கினியை விரும்பும் அம்முனிவர். வேட்டமூவரம்- (பிரமாவினிடத்தில்) விரும்பிய (அந்த) மூன்றுவரங்களையும். சூலபாணியும் அளித்தனனெனக் கூட்டுக.

11. உளம் கூட்டுற-மனம்பொருந்த.

12. முப்புவனம்-பூமி, சுவர்க்கம், சத்தியலோகம். பொருநையங்கரை-தாம்பிரபருணி நதிதீரத்தில்.

13. இலக்கம்-தொகை.

14. முதுகுன்று - விருத்தாசலம். சூழ்-சூழ்ந்த. வினைக்கருமலம் - வினையாகிய கரிய (மாயா) மலம். இருமை-இரண்டு.

15. தறுகண்-அஞ்சாமை. யானை-(விநாயகராகிய) யானை. தாரம்-வள்ளிநாயகியாகிய மனைவி.

16. பத்திமை - பத்தித்தன்மை. வித்தகர் - (அந்தச்) சதுர்ப்பாட்டையுடைய திரிசுதந்திரர்.

17. புண்டரீகம் - வியாக்கிரபாதமுனிவர். புண்டரீகப்புரம் - புலியூர்; சிதம்பரம். பொதுவில்-திருஅம்பலத்தில். புண்டரீகத்தடி - தாமரைப்பூப்போலுந் திருவடி. செய்திடா-செய்து

18. மும்மை-மூன்று. வேள்வியில்-(ஞான)யாகத்தால். தியானம்-யோகம். தம்மை - (அத்) திரிசுதந்திரர்களை.

19. தளம்-இதழ். கமலாசனபுரம்-பிரமபுரம்; இது: விஷ்ணுக்ஷேத்திரம். மாதவனை-விஷ்ணுவை.

20. அல்லுறழ் - இருளையொத்த. அருணவெற்பு-அருணாசலம். மல்லல்-வளம்.

21. புவிக்கடவுளர்-பூதேவர்; திரிசுதந்திரர். பிரசத்தும்பி - தேனைவிரும்பும்வண்டு.

22. வாழிய - (உலகெல்லாம்) வாழும் பொருட்டு. வேதத்தன்மை-சுருதிவிதி. மாதொருபாக னென்றதும், எழையோர்பாகனென்றதும். ஒன்று

23. கூடல் - மதுரை. பீடு-பெருமை. வடுஅவிழ்-இதழ்கள் விரிந்த.

24. தண்டகவனம் - தண்டகாரணியம். அவண்-அவ்விடத்தில்

25. கோகுலம்-பிருந்தாவனத்தில். உழுவலன்பு-எழுமையுந் தொடர்ந்த அன்பு.

26. வதரிகாச்சிரமம் - இலந்தைமரங்களாற் சூழப்பட்டதலம். ஐந்துடன் குறிக்குமாறு - பதினைந்து.

27. அதிகருட்-பழப்படும். முகிலுரு-மேகமுழக்கம் நீங்காத. சுவாமிமாமலைப்பதி - திருவேரகம். விதி-பிரமன். முடிக்கொடு-உச்சியிற்கொண்டு.

28. அளவு - (கூடிய) தொகை. தனிரியல்-பூமிதேவி. மல்குற - வளம்பெற.

29. பாவனை-தியானம். தாழிய-வணங்கினரும். மூவர்க்கும் - திரிமூர்த்திகட்கும். சிறப்புச் செய்துளார்-வழிபாடு செய்தவர்களாவார்.

11. மாதபூசை விதியுரைத்த அத்தியாயம்.

1. பொறி-இந்திரியம்; மெய்வாய்கண் மூக்கு செவி. புலன்-அறிவு. குறித்து-கருதி.

2. குழுவோர்-கூட்டத்தார். அம்-அழகிய. புலம-அறிவு. அங்கம்-வேதாங்கம்.

3. மகத்தின் கருமம் முற்றும் - யாககாரியங்களை முடிக்கும். இது - படித்த. பற்று இகல்-விருப்பு வெறுப்பு. முத்தேவர்-பிரமவிஷ்ணுருத்திரர்.

4. சுக்கிலம் - சுக்கிலபக்கம்; பூருவபக்ஷம். சுப்பிரபக்கம் - பூர்வபக்ஷம். சுவேதபக்கம் - பூர்வபக்ஷம் புராதி-மேற்கூறிய நான்கு மதிகளிற் கூறிய பக்கங்கள் (நான்கு). நான் மூன்றுபன்னிரண்டு. பூர்ணமி-பூரணை; பௌர்ணமி.

5. மனு-மேற்கூறிய பூரணை பன்னிரண்டு, தைமாதத்தில் வரும் ஏழு, பதினொன்றாகிய பக்கங்களென்னும் பதினொன்கு. பிற்பக்கம் - அபரபக்ஷம். தொட்டு - தொடங்கி. சுவேதபக்கம் முன் - பூர்வபக்கத்துக்கு முந்தி. ஆதமாவாயமை - ஆகிய பதினைந்து. காணாதிய மாவாயபக்ஷம். பிற்பக்க உவா-அமாவாசை. சங்கிரமம்-சங்கிராந்தி. பொழுது - காலம். வைதிருதி, விதிபாதம்; இவ்விரண்டும் ஒவ்வொருயோகங்கள். நாவாறு மூன்று. இருபத்தேழு; இவற்றுள். வைதிருதி பதினேழு விதிபாதம் பதின்மூன்று.

6. தனு-மார்கழி. மகரம்-தை. குடம்-மாசி. மீனம் - பங்குனி. சத்தமி-எழாந்திதியும். சார் - அடுத்த. நவமி-ஒன்பதாம் பக்கமுமாகிய. அனுவெனும் அட்டகை - அனு அட்டகை. இவை-மேற்கூறிய சத்தமி நவமி. ஈவைரும் அட்டமி-நடுவேவரும் எட்டாந்திதி; இந்நான்கு அட்டமியும் மகாட்டகை. இடை-செய்யும். சிராத்தம்-சிரத்தையோடு செய்யுங் கிரியை. வழங்கும்-செய்யும்.

7. சுவாகாசாரம் (இறுதியில்) சுவாகா வென்னும் வடிவுடைய மந்திரம். சுதாகாரம்-சுதாவென்னும் வடிவுடைய மந்திரம். வவுஷட்காரம்-வவுஷடுவடிவுடைய மந்திரம். இறுதியிலென்பதனை யிம்மூன்றிற்குங் கூட்டுக. ஆகாரம்-வடிவு. மிக்க- (ஒன்றைவேறுபட்டால் ஒன்றற்கொன்ற) உயர்ந்த. ஆயவிதி-

ஆதியக்கிரமம். மந்திரம் (எனை) மந்திரங்களினும். கொடி - காக்கை. அதிதியர்-விருந்தினர். வவுஷடாகாரமென்பது - வவுஷ்ட்காரமென விகாரமாயிற்று.

8. இருக்கால் - இரண்டுதரம். காலும்-வீசும். ஒருக்கால் (மன) வொருமைப் பாட்டால். இருக்காலும் ஒருக்கால் உண்ணினைப் பவனை யெனக்கூட்டுக. உலப்புஇன்று - வரையறையில்லை.

9. காட்சி - தோற்றம். சார்ந்துசார்ந்து-சென்று சென்று. கவளம் - ஒருதிரளை; உண்டை. சிறுங்கைநீர் - ஒருஉள்ளங்கைக்குள் அடங்கிய சலம். கலற்சி-கவலை.

10. பூசுரர் வத்திரசதனம்-(இந்தத் திரிசுதந்திரரது) பிராமணர்களுடையமுகமாகிய தாமரையை. குத்திரம்-வஞ்சகம். முளரி-தாமரை.

11. இடுக்கண்-துன்பம். வெருவுருட்-பயங்கரமாகிய. சேதகம்-சிவப்பு.

12. வந்தனை-வந்தித்தலையுடைய. உள்அகம் - மனத்தினுள்ளே. சிந்தை-அவமதிப்பு.

13. சதசனம் - நூறுஇதழ். செஞ்சுடர்விளக்கு - சிவந்தஒளியையுடைய தீபம்போன்ற பிரபன்.

14. தாமரை-தாமரைப் பூவாகிய. செந்தி-திருச்செந்தூர்.

16. முதல் - முதலிய. ஒண் பொருள்-ஒள்ளியதிரவியத்துள். எத்தனை-எவ்வளவு (சிறியதென்றபடி).

17. உலப்பு இன்று - (அளவுள்ளடங்கி) முடிவுறுதல் இல்லை. சீர்-(சாற்பரியம்) திருவருள். இசைவித்த-கூட்டுவித்த.

18. கார்த்திகைக் கார்த்திகை - கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நட்சத்திரம். புணரி-சமுத்திரம்.

19. பரவுவார் - (முருகக்கடவுளையுந் திரிசுதந்திரர்களையும்) துதிப்பவர். இருமை - அறம், இன்பம். அம்மை-மறுமை. புரை-ஒத்த.

20. திங்கள்-மாதம் அன்னநாள்-அத்தன்மையாகிய தினம். பன்னகப்பகை-பாம்புக்குவிரோதம். பகவன் - குமாரக்கடவுள்.

21. மாசம்-மாசி. திங்கள்-மாதம். ஓகை-மகிழ்ச்சி. போகம் - (தரிசனமாகிய) ஆனந்தம். உண்டார் - நுகர்ந்தவர்.

22. முத்தர் - பிரியமுள்ளவர். முருகன்முத்தி-முருகக்கடவுளாற் கொடுக்கப்படுமோக்ஷம்.

23. மாகநாள் - மாசிமாதத்தினம். முன்னர் - முதன்மையானவர். வந்து - (அவர்முன்பு) வந்து. மாமுகத்தினால் அம்சாவது: பெருமை தங்கிய காட்சியினால். மலினம்- (தமது) பாவம்.

24. வேள்மைத்துனர் - மன்மதனுக்கு மைத்துனராகிய குமாரக்கடவுள். வாசபேயம் - ஓர் யாகம்.

25. சங்கிரமம்-சங்கிராந்தி.

26. ஓதனம்-சோறு. அமுதுசெய்வித்தோர் - நிவேதித்தவர். மகம் - யாகம்.

27. ததி-தயிர். கோடல்-செங்காந்தள்.

28. ஒவு - நீக்கம். எச்சம் - யாகம். தா-கேடு.

29. கன்னியின் - புரட்டாசி மாதத்தில், காமுறு - விருப்பமுற்று. ஆற்றுவார்-செய்வார். ஆற்றுவார் குலப்பிதிர்களெனக்கூட்டுக.

30. துலை-ஐப்பசி. திங்கள் - மாதம்.

31. ததி ஓதனம் - தயிர்ச்சாதம். உவப்பித்து-மகிழும்படி நிவேதித்து. மதுகுதனன்-விஷ்ணு. பதம் - பதவி. குழ்ந்து - குழ; இது: எச்சத்திரிபு.

32. மகரம்-தைமாதம். மூப்பது-முப்பதுநாளிலும். மணிபொன் - இரத்நம், சுவர்ணம். அயம்-(சந்தனங்கலந்த) நீர்; சந்தனக்குழம்பு. அகருவின் தூபம்-அகிற்கட்டைப்புகை. (இவற்றால்) அமைத்து-அலங்காரஞ்செய்து. குலங்கொடு - கூட்டங்கொண்டு. தகைய - தகுதியையுடைய. வான் - பெருமையாகிய. சிவன்பதம்-சிவலோகம்.

33. சேய்-குமாரக்கடவுள். மான்மகள்-வள்ளியம்மை.

34. மெய்ப்படும் ஆவினெய்-உண்மையாகிய பசுவினெய்.

35. ஆரல் - கார்த்திகை நட்சத்திரம். போர்த்த - பொதிர்த. புண்டரீகம்-தாமரை. ஆர்த்திடு நிரயத்தாடு அட்டையிற்படு குழிக்கண் எனக்கூட்டுக. ஆர்த்தல்-ஒலித்தல். நிரயம் - நரகம். அட்டை-ஒருவகைக்கிருமி. குழி-பள்ளம்.

36. நிலை - உறுதி. இலைகொடு - இலையால். இறைத்தனோர் - அருச்சனைசெய்தவர். மகம்-யாகம்.

37. காதை-கதை.

12. விபூதி அத்தியாயம். விபூதி: சோரூபம்.

1. ஒருங்கு - ஒருப்பாடு. சொல்தரு - கீர்த்தியைத்தருகின்ற. தகைய - தகுதியையுடைய. மறைமூலம் - பிரணவம். வருதி-வருவாய்.

2. சூர்-சூரபன்மன். அறம்மறை - தருமமும் வேதமும். இகல்-வலி. மானின் இடை-மானிடத்தில். இன்-தவிர்வழிவந்தசாரியை. தேனே-தேன்போன்ற வள்ளியம்மையை.

3. பெருமிதம் - கௌரவம். மிற்பட - கழிய. பருமிதம் - இறுமாப்பு. பரிவாரம் - (தன்னைச்) சூழவிருக்குந்தேவதைகள். திரு - சிறப்பு. நாப்பண்-நடு. இதம்-நன்மை. மதத்திறல் - (இருபெயரொட்டு). மிக்கவலி. வாகு-வீரவாகுதேவர்.

4. மாணம்-வலி. கூண - வலோவுடைய. புலைச்சிய-அணிந்த. மோனம்-மௌனம். திருக்கோலம்-திருமேனி.

5. எங்கும் - எல்லா உலகினிடத்தும். ஆக - உண்டாக. இயற்றுதற்கு-செய்தற்கு. அருட்கோலத்தங்கை - திருவருட்டிருமேனியினளவு.

6. நம்விபூதி - நம்முடைய சொரூபம். வானம் பொருந்தும் - ஆகாயத்தையளாவும். அருநிழல் - அரியநிழலிடத்து. யோக ஆசனம ஆடு - யோகாசனத்திலிருந்து. அருத்தி-ஆசை. ஞான முத்திரை - சின்முத்திரை. பொருந்தும்-விகாரம்.

7. வலவயின் - வலப்பக்கம். சேரும் - பொருந்தும். வடிவிலா (இயற்கையில்) சொரூபமில்லாத. நின்மலப்பொருள் - மலரகிதவஸ்து. அருள்கொடு - திருவருளால். பொருளாகுந்தாதைக்கு எனக்கூட்டுக.

8. கருமம்-செயல். முதற்றொழில்-சிருட்டி. அத்திரி-மலை.

9. பொன்னவன் - வியாழன். மாதவி-இந்திரன தேர்ச்சாரதி. புட்பகம்-சித்திரவிமானம். காணம்-இசை.

10. களக்கு (விகாரம்) குற்றம். கலையனை-கலைகள். வளம்செழு - மாண்புபொருந்திய. பிரசூனை-உயர்ந்தஓர்சுரம்.

11. எழுத்து அவை - அஷ்டாக்கூட்டங்கள். அழுந்தம் - பதிதல். விழுச்சிறப்பு. முழுத்த-பூரணமான.

12. புரியவை - நகரங்கள். பனிவரை-இமயமலை. சிருட்டிதனில்-சிருட்டித்தொழிலால். இரணியகருப்பன்-பிரமன்.

13. காலத்திக்கடவுள் - காலாக்கினிருத்திரன். மிடல்-வன்மை. வடிவு-அழகு.

14. வேதநூரிடர்-பிரமருஷிகள்.

15. கடவுளர்-தேவர். படவரவம்-படத்தையுடையபாம்பு; ஆதிசேடன். பரிக்கும்-சுமக்கும். மதமா-யானை. சாருவபௌமம்-வடதிசையானை. செருத்தல்-முலைமடி. சுரபி-காமதேனு.

16. எழுநாம வாம்புரவி - எழென்னும் பெயரையுடைய பெரிய குதிரை; சூரியன் குதிரை. கேசரி - சிங்கம். பீடு - பெருமை. சரபம் - எண்காற்பறவை.

17. பாதலம் - பாதாளம். மாதர் - ஆசை. ஓடை-தடாகம். போதம்-அறிவு. பேதம்-பலவிதம். பிப்பலம்-அரசமரம்.

18. சுசி - சுத்தம். மாருதி - அநுமன். சிலைவலி - வில்லின் வலிமையுடையார்.

19. மல் உற்ற-மல்யுத்தம்பொருந்திய. அற்றம்-சோர்வு. பரியின்வேள்வி-அசுவமேதம்.

20. வியப்பு-மகிழ்ச்சி. தமனியம்-பொன். நயப்பு-விருப்பம். அபயதானம்-பயத்தைநீக்குந்தானம். யதுகுலம்-யதுவென்னும் அரசவமிசம். கண்ணன்-கிருஷ்ணன்.

21. வாக்கு - சத்தியம். தேக்கு - நிறைந்த. தசகங்கை-பத்துவிதகங்காநதி. வாரிதி-கடல். தரங்கம் - அலை. மீ-மேலே. கிளர்-விளங்குகின்ற. தாரகை-நட்சத்திரம்,

22. இருது - பருவம். வசந்தன்-இளவேனிற்காலம். மோகனம் - மயக்கம். தவத்தினில்-தவத்துக் குரியவற்றுள். பிராணாயாமத்து இயல்-பிராணாயாமஇலக்ஷணம். பரவை-சமுத்திரம்.

23. ஆவரணம் - உடை. வனப்பாருங்கலை - பீதாம்பரம். பிதிரர் - பிதிர்தேவதை. அரியமா - ஒருயர்ந்தபிதிர்தேவதை.

24. வனம்-சோலை. சயித்திரதம்-ஒருசோலை. ஒன்னொளியில் - மிக்கவொளிப் பொருள்களில். வித்தை - கல்வி. இந்தியம் - இந்திரியம். எது-(இந்திரியங்களை யியக்குதற்குக்) காரணம்.

25 புரவலன்-அரசன். அற்புதத்து - அன்பை உறச்செய்யும். மணிகர்ணிகை-ஒரு தீர்த்தகட்டம். எல்-ஒளி. நிவப்பு-உயர்வுப் பொருள்கள்.

26. தெறு-வருத்துகின்ற. பவநாசனம் - பாவங்களை அழிப்பனவாகிய தீர்த்தம். விறல்-வெற்றி. விது-சந்திரன்.

27. அவத்தை - துன்பம். யௌவநம்-வாலிபம். மானசம்-மனத்தாற்செய்யும் பூசை.

28. சாடாத்தீ - உதாரக்கினி கீதை-சிவகீதை.

29. வாகவி - தெய்வப்புலமையாளர். நயனமானவைகட்கு வாலுரிய அணிகெழுபொருள்களெனக் கூட்டுக. கண்களுக்கு விடயமாக வரும் அலங்காரம்பொருந்திய பொருள்களெல்லாமென்பது பொருள். புரிகுதி-செய்வாய். சிரம்-தலை.

30. விபூதியியல் - சொரூபலக்ஷணம். அமர-இருக்க. கணத்தலைமை-கணங்களுக்குண்முதன்மை. வித்தகமை - சதுரப்பாட்டின்றன்மை. வீரன்-வீரவாகு. நின்புலன் அருத்த-உன்மனம் உட்கொள்ள.

13. விசுவரூப அத்தியாயம்.

1. சதுர்மறை-நான்குவேதம். கலபம்-மயிற்றோகை. ஓங்காரம்-பிரணவம்.

2. எந்தல்-வீரவாகுதேவர். வாகை-வெற்றி. மன்றல்-வாசனை. வாரீசம்-தாமரை. சொலும்-(நீர்) சொல்லிய.

3. பொருளென-பொரு (ளாக) வென்று. நான்கும் ஆறு-பத்துநாற்கூறும்விதம். மாணுக்கரிற் பூண்ட நின்பொற் புறந்தோற்றப் பேருருவாய்-சிறுவர்போலக் (குமாரப்பருவ) கொண்ட உனது அழகுபொருந்திய காட்சியாகிய பெரியவடிவாய்.

4. தோற்றமாம்-காட்டுவிலாரும். உள்ளம்வைத்தேனை-மனம் வைத்த சிறியேனை. வான்-பெருமை.

5. சொல்-சொல்லால். கருதற்கு-(காரியம்) பேசுதற்கு. தோற்றம்-(விசுவரூப) வடிவம்.

6. உட்படாது-தோன்றாது. சருதும்-கொடுப்போம். மானம்-வலிமை. காண்டி-காண்பாய்.

7. பயனும்-பிரயோசனமும்.

8. இருவிழி-இரண்டு கண்களின். கு-சாரியை. ஆறு-வழியே. அருவிநீர்-அருவிபோலும் (ஆனந்த) நீர் சோரென-இரண்டு நதிபோல. களி-மகிழ்ச்சி.

9. கொத்து-கூட்டம். ஒத்த-(ஒருவருக்கொருவர்) சமானமாகிய. உளர்-உள்ளவர்.

10. எழு-எழுந்த. மால்-பெரிய. வரைகளும்-எட்டுப் பருவதங்களும், அட்டகுலாசலங்களும். எமவான்குன்றம்-பொன்மயமாகிய மகாமேருமலை. மால்சூழும்-பெருமை பொதிந்த. கோடியாம்-பலவாம். கரந்து-தெய்வத்தன்மையுள்ளியாது. ஈசுரியான்-சிவபெருமான்.

11. ஆற்றல்-வலி. திகிரி-சக்கராயுதம்.

12. வசிட்டனை-ஐ, சாரியை. இருடி-ரிஷிகள்.

13. மனுவின்-மனுநீதியால். பூரணத்து-நிறைவினால். நதி-(சிற்) றாறு. வரைத்தலை-மலையிடம். கடற்றலைவரை-கடலிடம் அளவு (உள்ள). தொகுதி-கூட்டம். இனநதி-பெரிய ஆறுகளின். கு-உருபுமயக்கம்.

14. போர்-யுத்தகளம். செரு-யுத்தம். பொருவரு-ஒப்பற்ற. வான்புவனம்-(வீர) சொர்க்கம்.

15. கதிர்க்கு-சூரியனுக்கு. குலமுக்குண்டல வெயிற்சுடரின் சோதிகுரியர்களெனக் கூட்டுக. குழை-காது.

16. மதனஆகாரம்-மன்மதன்போலும் உருவம். ஒளிகள்-சூரியர்கள். ஒள்அழல்-ஒள்ளியபிரகாசத்தை. கொளவும்-(தன்னிடத்து) அகப்படுத்தும். ஆர் அழலெலாம்-அரிய அக்கினியெல்லாம். யனமாம்-கண்களிடத்தாகும். சிவபிரான் றிருவுருவாதலால், அவர்கண்கள்போலக் குமாரக்கடவுள் கண்களிடத்தும் அக்கினியுண்டாமென்றபடி. உள்ளோ-இருக்கிறாய்.

17. கோரம்-அச்சம் விண்டவாய்திறந்து பேசிய. இடிக்கண்ண ஆம்-இடியினிடத்தவாம (இடிமுழக்கம் போலுமென்றபடி).

18. செற்றினை-செருக்கினை. பற்று-விருப்பு. இகல்-வெறுப்பு. மூலம்-ஆதி. நடு-மத்தியம். மூர்த்தமே-மூர்த்தியே.

19. ஆனனம்-முகம். குழை-காது. வடிவு-உருவம். நாடுஅரிது-ஆராயதற்குமுடியாது முடியாதென்னும் பயனிலைக்கு, முகமுதலிய தனித்தனி யெழுவாய்கள்.

20. புண்டரீகம்-தாமரை. தலைவ-ஆணை செய்யப் படுவனவாகிய. அழலினில் நகைள் எழு-அக்கினிப்பொறிபறக்க. பல்லின்வீழ்சொனி-பற்களினின்றும் உண்டாம் ஒலி.

21. கோரம்-பயம் மீக்கிளர்தாமேற்பட. ஆணை யென்பதில்-ஐ, சாரியை.

22. பிரபஞ்சம்-உலகம். தனு-வடிவம்.

23. குறிக்கொள்-கருதிக்கொள்வாய். வெருக்கொடு-பயங்கொண்டு.

24. செழுமி-பொருந்தி.

25. எங்கும்-கலங்கும். வாய்மை (யும்)-சொல்லும் சற்சலமாம்-(தடுமாறித்) துன்பப்படும். விதிக்கரு (ஒருவரால்) உண்டாக்குதற்கரிய. ஆறு குணங்களால்-(முற்றறிவு, வரம்பிலின்பம், இயற்கையுணர்வு, சுதந்திரமுடைமை, அழிவிலாற்றல், வரம்பிலாற்றல் என்னும்) ஆறு குணங்களால்; மெய்க்கு-திருமேனிக்கு. அலங்காரமாக-அழகுண்டாக.

26. சராசரம்-சரம் அசரம் என்னும் நிலையியற்பொருளும், இயங்கியற் பொருளும். பராபர இயற்கை-பதிப்பொருளாந் தன்மை. விராவிய-கலந்த. மெய்யின் தோற்றம்-(விசுவ) ரூபத்தின் காட்சி. மாமலர்-கடம்பமலர்.

27. வயம்-வெற்றிமாலை. பொருநர்-போர்த்தலைவர். வில்லோர்-வில்வித்தையிலுயர்ந்தோர். யானென்று-நான்(சிறந்தவ)னென்று. சூர்த்தானை-சூரபன்மன் சேனை.

28. உளம்-மனத்தில். மேம்பாடு-பெருமை. புல்லுணர்வு-சிற்றறிவு. வாளா-வீணே. குழைய-செகிழ. காணு-ரணப்படாத. நீத்து-விட்டு.

29. மையுள்-துன்பம். மோலி-முடி. தெண்டமிட்டு-தண்டஞ்செய்து; வணக்கஞ்செய்து.

30. ஒளிதிகழ்-பிரகாசம் விளங்குகின்ற. நிரை-வரிசை. குழை-காது. முன்னரின் வடிவாம்-முன் புள்ள இனிய திருமேனி களிமகிழ்சிறந்து-மிக்கமகிழ்ச்சியாற் சிறப்புற்று.

31. நளக்கி-அசைத்து. மொழிதும்-சொல்வோம்.

32. முற்று ஒருங்க-முழுதும் ஒற்றுமைப்பட. இந்தக்கோலத்தை-இந்த விசுவ ரூபத்தினழகை.

33. இனியதோற்றத்தின் னலம்-இனிமையாகிய (விசுவரூபக்) காட்சியின்றன்மை. இனி-இனிமேல். முன்முற்படும். ஆதியுகத்தினில்-முதல்யுகத்தில். (அவருக்குங் காட்டுதற்காக) கொள்-பெருமை. வேண்டினம்-விரும்பினோமாகி. மிக்கால்-மிகுதியால்.

34. எவ்வம்-குற்றம். வடிவம்-(விசுவ) ரூபம். கவ்வை-துன்பம். தோற்றம்-(விசுவ ரூபக்) காட்சி.

35. எடுத்தனம்-கொண்டோம். படைத்தி-படைத்தாய்.

36. எழுத்துஆறு-சடாக்ஷரமந்திரம் அற்புதத்து-ஆச்சரியத்துடன். அழுத்தி-(மனத்தில்) பதித்து. மெய்த்தியானம்-(நமது) விசுவரூபத்தின் தியானத்தை. ஓதுதி-ஓதுவாய். ஆவா-இட்டகாமியங்களை. முடித்தி-முடிப்பாய்.

37. அந்தத்தில்-இறுதியில். தளம்-இதழ். வீடு-மோக்ஷம். நுளம்-நெற்றி.

38. விபூதி-சொரூபலக்ஷணம். சததளம்-நூற்றிதழ்த்தாமரை. அற்புதப்புணரி-ஆச்சரியக்கடலில்.

39. கோரம்-அச்சம். பவம்-பாவம் நீண்டு-கிழித்து.

40. வஞ்சனை-(பிறர் செய்யும்) வஞ்சகத்தாலும். தீ நீர்-அக்கினியாலும் சலத்தாலும். அலமிருத்து-துன்மாணங்களாலும். கேட்போர்-(குமாரக்கடவுள் விசுவசொரூபச்சிறப்பைக்) கேட்பவரும். விஞ்ஞை-அறிவு.

41. முற்ற-சித்திக்க. ஒருங்கு-ஒருமிக்க. முற்றஎன்பதில்-அகரங்கெட்டது. தாணுதி-செலுத்துவாய்.

14. சுவாமியின் மந்திர மகிமையுரைத்த அத்தியாயம்.

1. மகமாயை ஆதிமலம்-மூலமல முதலிய (வினைய) மலங்களின். மூடு-வேர். காதை-கதை. குகன் ஆன-முருகக்கடவுள் (கொண்ட) தாகிய. முத்திவடிவாயது-மோக்ஷரூபமாகிய ஸ்வரூபமானது. பரவ-வியாபிக்க. அருத்தி-ஆசை.

2. தாபதர்க்கு ஆதியான் - முனிவர்களுக்குள் தலைவன். ஆறுத-நீங்காத. வாறுறு-ஆசாயகங்கை. அரும்ப-சிலிர்ப்ப. புகழால்-தோத்திரத்தோடு. தான் ஆன - தனக்குத் தானே சமானமாகிய. ஆனந்தஞானம்-இன்பமும் அறிவும். பெருக்கு ஆழி-பெருகுகின்ற சமுத்திரம்: பெருக்கு-விகாரம்.

3. சரற்காலம்-கூதிர்ப்பருவத்து. நிலவ - பிரகாசிக்க. பீடு-பெருமை. தரங்கம்-அலை. உந்த-தள்ள. வானமுனிவன்-நாரதமுனிவன். மூடும்-மொய்க்கும். பிரான் விண்டு - கடவுளாகிய விஷ்ணு. பாடு-பெருமை. பரிவு-அன்பு அடைந்தனன்-சேர்ந்தான்.

4. சுவேதச்செழுந்தீவு-சுவேதமென்னும் வளந்தங்கிய தீவு (உள்ளது). தீவினிடை - (அந்தத்) தீவின்மத்தியில். மூலாகமக் கோயில் - ஆதியாகமவிதிப்படி அமைக்கப்பட்ட ஆலயங்கள். அவையூடு-அவற்றினூடே. படிகத்தின்-பளிங்குக் கற்களால். களிந்த ஆன்பயத்தின் நுரைபோல் - முதிர்ந்தபசுவம்பாலின் நுரைபோல. களிந்தனன்பதில்-அகரங்கெட்டது.

5. மெலிது-மிருது. சேடபரியங்கம் - ஆதி சேடனாகிய சயனத்தின். மிசை-மேல். இருபாலின்நிலவு - இரண்டுபக்கமும்பிரகாசிக்க. அனுசந்தர்கிரமமாகச் சிந்திப்பவர்.

6. மலினம்-குற்றம். ஆதரம்-விருப்பம்.

7. அருக்கியம் - முனிவர்கட்குச் செய்யுமுபசாரத்தொன்று. இருக்கொடு-வேதமந்திரத்துடன். கனகம்-பொன். மேதகையமணி-மேன்மைதங்கிய தகுதியையுடைய ரத்னம். விழைந்த - விரும்பிய.

8. அரிணவொண்டொடி - மான் மகளாகிய வள்ளியம்மையையும். யானைமகள் - தெய்வயானையம்மையையும். கமை-பொறுமை. கொண்டு-(பிறவினை) கொள்வித்து. ஆணந்து-(விகாரம்) சேர்த்து. வைப்பு-நிலம். அமைவின்று- அடங்குதலிலாமல். சிமையம்-சிகரம். சாரல் - மலைப்பக்கம். உறையா-தங்கி.

9. கொற்றம் - வெற்றி. வான் - அந்த வடிவம். பெரியஅளவினையுடைய ரூபத்தின்கண்-உற்றுகின்றெழுவடிவம்-பொருந்திநின்று தோன்றுகின்ற (பிரபஞ்சங்களின்) உருவங்களெல்லாம். மற்று-அசை. உரைப்பான்பொருட்டு-சொல்லுதல காரணமாக.

10. தனஞ்சயன் - அருச்சுனன். பாலித்தவடிவு - கொண்ட விசுவரூபம். சூர்-அச்சம். மாதவன்-மாதவனாகிய உன்னுடைய. தோழற்கு-சிநேகிதனாகிய அருச்சுனனுக்கு. திருக்கோலம்-(விசுவரூபத்தைக்)சிறப்புக்காட்டி. அச்சுற-பயப்பட. வதரிகாச்சிரமம்-இலந்தைவனம். நாரணர்-கிருஷ்ணன் அருச்சுனன்.

11. காலாக்கினிக்கடவுள்-காலாக்கினிருத்திரர். பிரியாது - நீங்காது. பிரமன் தொழிற்கூட - பிரமதேவன் சிருட்டித்தொழில்தெரியும் பொருட்டு. ஒருவாது-நீங்காது.

12. இது-இதனை. அண்டினேன்-அடுத்தேன்.

13. முழங்கி - ஆரவாரஞ்செய்து. நிலவு-பிரகாசம். கருப்பூரவெள்ளை - கருப்பூரம்போலும் சுண்ணச் சாந்தால். புதுக்கினன்-புதுப்பித்தனன்.

14. விழியின்கத்தூரியால் - கண்ணாகிய கஸ்தூரியினால். மேனிக்கு-(வெள்ளிய) திருமேனியிடத்தில். இலேபனம்அப்பி - பூச்சுப்பூசி. (உற்றுநோக்கி யென்றபடி) திருவிருந்தின்-இலக்குமி (நாடோறும்) புதிதுபோலும். விண்டான்-திறந்தான்.

15. தத்துவக்கடல்- பிரபஞ்சசாகரம். தகைமை - (தாற்பரியம்) சன்மார்க்கம் வித்தகம் - சதுரப் பாட்டினையுடைய. (சதுரப்பாடு-விநோதம்.)

16. துயிலும் - (பாற்கடலி) லுறங்கும். ஒன்றாகி-ஒன்றுபட்டு. குகனுருப்பயிலும் - குமாரக்கடவுள் வடிவம் பொருந்தும். பசுபதி-சிவபிரான்.

17. மட்டு - தேன். நறை - நல்ல மணம். மூந்நான்கதாம் - (குமாரக்கடவுளுக்குப் புயங்கள்) பன்னிரண்டாகும். அம்புயம்-(அவ் விறைவராகியசிவபிரான்) அழகிய புயத்தில். பொறைகொள் ஆழி-(நம்முடைய) பொறுமைகொண்ட சக்கராயுதமும். சத்தியாய்-வேலாயுதமாகி.

18. ஏகமாக-ஒன்றாக. இருதலைச்சூலமேயாகும் - இரண்டு தலையையுடைய சூலம்போலாகும். கலையாகிய-அமிசமாகிய. சுடராய் - சூரியனாகி. பாகமாகி-பக்குவப்பட்டு.இவ்வெச்சம், உற்றனவென்பதனோடு முடியும். எழும்-(சிருட்டியிலே) வரும்.

19. விட்சேபத்து -(பாசங்களைக்) கெடுத்தலால். உயர்-உயர்ந்த. சத்தி - (விட்சேப) சத்தியே. விண்டு-ஆகாயத்தில். இன் - இனிய. எண்தரும் - எண்ணப்படுகின்ற. சந்திரகலை-சந்திரனுடைய அமிசம். என்பதாய்-என்று சொல்லப்படுவதாகி.

20. இயவுள் ஆய் - (மேற் கூறிய சந்திரகலையே) சிவ (கலை) ஆகி. இடக்கண் எனும் - (நமது) இடப்பக்கத்து நேத்திர(த்திலுண்டாதலால்) மென்று சொல்லப்படும். பரிபூரண உயர்வு-வியாத்தியின் உயர்ச்சியை. உள்-உள்ளதை. ஆவரணம் - மறைத்தலால். பெயர் - (அப்) பெயர். உயர்வு ஆகிய சத்தி - உயர்ச்சியாகிய (திரோதான) சத்தி.

21. தெய்வகுஞ்சரமாது - தெய்வயானையம்மை. மாறு - உவமானம். அந்தமாதரே - அவ்விரு பெண்களே. இருசத்தியும் - இச்சாசத்தி, கிரியாசத்தியும் (ஆவர்). வேறு இலாது - (சிவபிரானோடு) வேறுபாடில்லாமல். பிரமம் - பரப்பிரமப் பொருளாகிய குமாரக்கடவுள்.

22. பதமூன்று-சொற்கள்மூன்று. அரும்பதம்-அரிய (பிரமனென்னுஞ்) சொல். ஈற்றின் மெய்ப்பதம் - இறுதியிலுள்ள உண்மைச்சொல்லாகிய யவ்வென்னும் விகுதி. சிவனையேத்தும் விண்டுவின் வடிவாம்-(அதுவே) சிவபிரானைத் துதிக்கும் (நாமாகிய) விஷ்ணுவின் ரூபமாகும். முன்னஞ்செப்புறு-முதலிலேசொல்லுதலுறும். பதம்-சொல்; (சு). இரண்டு பதங்களைச் சேர்த்துக்காட்டி-பிரமங்ய, என்னும் இரண்டு சொற்களையுமியைத்து விளக்கி. சு. பிரமங், ய. என்பது. வடமொழிவிதிப்படி புணரும்போது சுப்பிரமணிய என்றாயிற்று.

23. ஐக்கம்-ஒற்றுமை. மூலம்-ஆதி. முடிவு-அந்தம். சுப்பிரமணியனாக-சுப்பிரமணியக்கடவுளாக.

24. சலம்-நாரம், நீர். வநம் - வநமென்பது இருப்பிடம். அரிது-அரியதாகிய. பார்க்கில் - (சேர்த்து) - அன்மொழித் தொகையாக்கிப்பார்த்தால். அருத்தம்-பொருள். நாரயணன்-என்பதற்குச் சலத்தில் வாசஞ் செய்பவனென்பதாம். வநம் - அயமென்றாகி

காரமென்பது சேர வடமொழிவிதிப்படி நாராயணனென்றாகும்.

25. மயல்-மயக்கம். ஆறெழுத்து-சரவணபவ என்னும்ஆறுஅக்ஷரங்கள். பயன் - (இவ்வக்ஷரங்களின்) பிரயோசனம். சிவனது ஆய-சிவபிரானுடையதாகி. சுயவடிவு-சொரூபம்.

26. குகன்மலர்தானம் ஆவ-முருகக் கடவுளுடைய விரிந்த இடங்கள் ஆவன. சுக்குப்பாறை - பாற்பாறை. குலம் அவை- கூட்டமாகிய அந்நான்கு. நிலன் - நிலசம்பந்தமாகிய இடங்கள். நாம்-நமது வடிவம். பருப்பதம் - மலைகளினிடங்கள். ஆகாரம்-வடிவம். இடன்-இடங்கள். அது-பகுதிப்பொருள் விகுதி. பால்-ஒருவிதக்கல்.

28. வேங்கடவரை-திருவேங்கடமலை. அசலத்தாடு - (அம்) மலையினிடே. மூர்த்தி-திருவுருக்கொண்டிருக்குந் தெய்வம். பன்னிருபுயனும்-முருகக்கடவுளும். யானும்-நானாகிய விஷ்ணுவும். ஆய் - ஆகி. சிறந்துளோம் - சிறப்புற்றிருக்கின்றோம்.

29. நெருப்பு-கார்த்திகை நட்சத்திரத்தை. உறு-பொருந்திய. முன் - மூன்று கலை - முதலாவது மூன்று அம்சங்களும். நிலமகள் கமலை நீவி - பூமிதேவி, இலக்குமி, பார்வதி. ஆவது-ஆகிய பின் மூன்று அம்சங்களும். முறை-கிரமமாக. உருத்திரன் ஈசன் சிவன்-உருத்திரன், அநந்தேசன், சிவபிரானும். இவ்வாறு-இந்தவிதம். கார்த்திகை - கார்த்திகை நட்சத்திரம். சிவனும் மால்வடிவும் - சிவவிஷ்ணுரூபமும்.

30. ஆரல் நாளில்-கார்த்திகைநட்சத்திரத்தில். சேயினுக்கு - முருகக்கடவுளுக்கு.

31. அகாரம், உகாரம், மகாரம், ஆகிய இம்மூன்றும் (முறையே.) எகினவாகனன் - பிரமன். நாம் - விஷ்ணு. ஈசன்-சிவபிரான்.

32. உரைதரும்-சொல்லத்தகும். எழுத்து மூன்றும்-அகர, உகர, மகரமாகிய மூன்றக்ஷரங்களும். பிரணவவடிவாம் - பிரணவமந்திர சொரூபமாகும். ஒன்றாய்த்தனித்தது-ஒன்றுபட்டுத் தனித்திருந்தது. ஓங்காரமாகும் - (அப்) பிரணவ மந்திரமாகும்.

33. நாரணன் -விஷ்ணு. முனிவன்-நாரதமுனிவன். தாரகன் - தாரகாசுரன். தடிந்த-கொன்ற. சரிதம்-(அற்புதச்) செய்கை. காருடம்-கருடன்.

34. முறை - (மாமனென்னும்) கிரமம். பிறழாது - வழுவாமல். குருபரன் - (பரமா) சாரியனாகிய குமாரக் கடவுள்.

35. விமானமாக-விமான வடிவாக. விளங்கிய-பிரகாசிக்கின்ற. சிமயம் - உச்சி. கந்தமாதனத்திருந்தான் - கந்தமாதனமலையில் (முன்னரே) இருந்தான். சக்கரதமூர்த்தி-உலகநாதராகிய சிவபெருமான். ஆதரத்து-அன்புடன். அளித்தான்-(அங்கிருந்து) காத்தான். புக்கான்-புகுந்திருந்தான்.

36. அச்சாரல்- அந்தமலைப்பக்கத்தில். விசையம்-வெற்றி. கண்அகல்-இடமகன்ற. பாங்கர்-பக்கத்தில்.

37. ஆற்ற-செய்தலால்.

38. தந்தை-பிதாவாகியவிடாசன்

15. பலகதையுபதேசித்த அத்தியாயம்.

1. குருக்குமதி - இளஞ்சந்திரன். (தருத்தல்-முளைத்தல்.) கோடீரம்-சடை. உளம்பிடித்தான் - மனங்கொண்டான்.

2. துண்டமதி- பிறைச்சந்திரன். மாது-(ஒரு) பெண்.

3. சதமகத்தன் - நூறுயாகஞ்செய்த இந்திரன். அயிராவதம் - இந்திரனுடைய வெள்ளையானை. எருத்தம்-பிடரி. உம்பர்முனி - மேலாகிய துருவாசமுனி. பாலானைமத்தகம் - வெள்ளையானையின்பிடரி. பதித்தான்-வைத்தான்.

4. உகைக்கும் - செலுத்தும். புஷ்ப-தாமம். குழங்கல்மாலை - (இருபொரொட்டு) பூமாலை (அணிந்த). அழல் - குறைபடுத்த-அழிவுபடுத்த. (கோ) பாக்கினி. சினந்திருக-கோபக்குறிதோன்ற.

5. அகந்தை-செருக்கு. பொறையாக - பாரமாக. பூண்டு - பொருந்தி. அவுணர்-அசுரர். தணவாது-நீங்காது. கவர - கிரகிக்க. அலமந்து - சுழன்று. சிறியோரில்-சிறியவர்களைப்போல.

6. குலிசம்-வச்சிராயுதம். போல், ஆம். அசைகள்-கிறிபிறழ்ந்து - பொய்யாகப் பிறழ்ச்சியுற்று. கீழ்மைபுரிதது-அவமதித்தது. மதிப்பார்-கடைவார். கமலை - இலக்குமி. உளவாய் - உள்ளனவாக. ஆய் - ஆகஎன்பதின்றிரிவு.

8. சுரபி - காமதேனு. புலோமசை-இந்திராணி. செரு - யுத்தம். வெகுவ்அவுணர் - கொடியஅசுரர். மறுகி - சுழன்று.

9. பாலுததி-பாற்கடல். மதிப்படைய. தோடு-பூவிதழ். கிடைத்து-கவரப்பெற்று.

10. அத்தகைமை- (இந்திரன்சபமேற்றமையாகிய) அந்தத் தன்மையை. வெண்களிற்றரசு - வெண்ணிறயானைகளுக்குத் தலைமையாகிய அயிராவதம். அஞ்சலம் - துன்பம். எறிந்ததனில்- எறிந்ததனாலே. நாகம்-விண்ணுலகம். அத்தன்-(எனது) தலைவனாகியஅவன். வெருவி-பயந்து. வரம்பின்பு மெனக்கூட்டுக.

11. வையம் - உலகம். கையெடுத்த- (துருவாசமுனிவர் கொடுத்த மாலையைக்) கரத்தாற்றாக்கிய.

12. உணர்ந்தன - அறிந்திருக்கிற. ஒன்றும்-பொருந்தும்.

13. கிளர்ந்து-விளங்கி. காழ்த்த-முதிர்ந்த. கவல்-கவலை. வீழ்த்த-சொரிந்த.

14. குரோசம்-கூப்பிடுதூரம். மந்தாகினி-கங்காநீர்த்தம். பயந்த-தோற்றுவித்த.

15. அருச்சித்திடா - அருச்சித்து. போதனை - தாமரைப்பூவிலுள்ள பிரமாவை. மோது-குட்டிய. போதகம் - யானை.

16. வைகல்-நாள். தந்தி-யானை. தணந்து-நீங்கி. மொய்ம்பு - வலிமை.

17. கேதம் - துன்பம்.

18. அருத்திமுற்ற- ஆசைமுதிர. ஆற்றினல் - வழியால். பொருத்து - (விகாரம்)பொருந்திய. பூசை - பூசனை (செய்யப்பட்டு). மகிழ்பூப்பது - மகிழ்ச்சியைத்தருவதாம்.

19. சீலர் - நல்லொழுக்க முள்ளோர். சீரிய-சிறந்த. பாலர் - பகுப்புடையவர். ஆற்றினர்-செய்தவர்.

20. முதற்காலம்-முதற்சாமம். மூகை-உண்டாகின்ற. கமலன்-பிரமன். திக்கிறைவர் - திக்குப்பாலகர். மகவான்-இந்திரன். பரிந்த-அன்புற்ற.

21. ஐந்தாங்காலம் - (இராத்திரியின் முதற்காலமாகிய) ஐந்தாஞ்சாமம். அவுணர்-அசுரர். பணி - பாம்பு. கண்ணன்-விஷ்ணு.

22. காலம் - சாமமும். (உம்மை விகாரத்தாற்றொக்கது) கண்ணீர்விட்டு - (ஆனந்தக்) கண்ணீர்சொரிந்து. கோகனதம்-தாமரை. வீடு - கோயில். கட்டாரி-வாளாயுதம். முட்டாத-முட்டுப்பாடில்லாத.

23. வேதம் முறைவிதித்த-வேதத்தை வரிசைப்படுத்திய. கவுதமன்-கவுதமமுனிவன்.

24. புலியூர் - சிதம்பரம். பொது-திருவம்பலம். தண்டல்-நீங்கல். புண்டரிகம் - புலி. தாள்-கால். முனிவன்-கவுதமன். கவற்சி-கவலை.

25. சதி-தாளவொற்று வகிர்-பிளவு. கடவுட்கதி-தெய்வத்தன்மையுள்ள ஆறு. பாணிமுகிழ்த்து - கைகுவித்து.

26. அன்னபரிசு - அத்தன்மை. வியாக்கிரத்தாள்-புலிக்கால். பன்னு - சொல்லுகின்ற. வேலை - சமுத்திரம். முகில்தளைபடுத்து-மேகத்தைச்சிறைப்படுத்திய. நாடி-தேடி. ஆடி-ஸ்நானஞ்செய்து.

27. சோமாரணியம் - ஒரு சிவஸ்தலம். சிந்து-கடலானது. மணி-இரத்தினங்களை.

28. ஐந்துகூப்பிடு - அஞ்சுகூப்பிடுதூரம். (கூப்பிடு-விகாரம்.) சந்தல்-குறைதல். வேள்வி-யாகம். மிகூர-அதிகப்பட. செறி-நெருங்கிய. நடுப்புடைநடுப்பக்கம். வைப்பின்-இடத்தில்.

29. வேள்விச் சாலை - யாகசாலை. பணித்து-அமைத்து. ஆரிடர்-முனிவர். கவின்-அழகுற. வலனுயர்த்த-வலப்பக்கத்தில் உயர்த்தப்பட்ட. வில்வடிவு - தநுரூபமும். முக்கோணவடிவு-மூன்றுகோணரூபமும். மனுதால். குண்டம்-ஓமத்தீவளர்க்குமிடங்கு.

30. சோதா - ஹோதா: இருக்குவேதஞானி. உற்காதா - சாமவேதம் வல்லான். பெயர்பார - புகழ்பாக்கியானன் - ஒருவாயு. பிரமா-யாகபுரோகிதனுகிய பிரமனும். அத்வரியு-யசுர்வேதப்பயிற்சியிற்றெளிந்தோன். யசமானன்-யாககருத்தா.

31. கோதாவரி மாநதியாஞ் சுருதிமாது எனக்கூட்டுக. திருத்தாலை-சிறப்புற்ற(னது)பிதாவாகியகவுதம முனிவன். அளியின்-அன்புடன் புரிவித்தான்-செய்வித்தான். அவபிருதகானம்-யாகம் நிறைவேறியபின் முடிவில் செய்யும் ஸ்நானம். ஆறு - நதி. போதும்-போவோம். மகசாலை-யாகசாலை.

32. மாபு - முறைப்படி. பெண் - புத்திரி. சீர்த்தி - புகழுடன். ஓங்க - உயர்க.

33. வேதமாது-வைதிகப்பெண். அருந்தி - ஆசை. துணைவி - தங்கை. திரு-செல்வம். தகுநற்சிறப்பு-தகுந்த நல்லமேன்மை. ஆக-உண்டாக. பொருத்தி - சேர்ப்பித்து; சமர்ப்பித்து. கிரணம்-பிரகாசம்.

34. நிமலம் - சுத்தம். ஓங்காரம் - பிரணவம். சிவகலை-சிவாம்சம். வைப்பு-இடம். அவண்-அவ்விடம்; பொன்னம்பலம். பரபோகபதம் - பேரின்பவீடு.

35. சங்கம்-சங்கமதீர்த்தம். சோமவாவி - சோமாரணியத்துள்ள தீர்த்தம். அரிது-அரியதாகிய.

36. சுத - மைந்தனே. அகப்பூங்கமலம் - இருதயமாகிய பொலிவுற்ற தாமரை. ஆதாத்தின் - விருப்பத்துடன். பகுத்த-விரிந்த.

37. மாயை காதல்-மாயையாகிய மனைவியின் ஆசை. வேதத்தில்-வேதப்பயிற்சியிலே. கூனல்-வளைவு. பிறை-பிளவு.

38. நாட்பூ - அன்றலர்ந்த மலர். இயலும்-பொருந்தும் இயல்பு-தன்மை. முறை-கிரமம் மூலம்-காரணம்.

39. பெற்ற - (திருச்செந்தூரையடையப்) பெற்ற. பெயர்வு - நீக்கம். சுற்றும்-சூழும். தரங்கம்-அலை. தாற்றும்-வீசுகின்ற முற்றும் -முதிர்விக்கும்.

40. உவமை யில்லாச் சுடர்கொண்ட எனக்கூட்டுக. துண்டமதி - பிறைச்சந்திரன். கோடீரன் - சடையையுடையவன்.

41. பேசல் பாவர்-பேசுதலையுடைய பாவிகள். உபவசித்தில்-பட்டினிவிரதமிருந்தால். வேதம் வரையறுக்கும்-வேதங்களால் அளவுபடுத்திச் சொல்லும்.

42. பலவும் - பலவற்றையும். கடற்பாலின்-கடற்பகுப்பின். எடைப்பார்க்கில்-நிறுத்தால். இதில் பகரவொற்று விரித்தல்.

43. காழும்-அளவும். பிரயாகை-கங்கையிலோர்ஸ்நான விசேஷவிடம். ஆடி-மூழ்குதலால். வான்கதி-பெரிய பயன். ஆர்கலி-சமுத்திரம்.

44. பருவம் - வருடம். மணிகன்னிகை-ஸ்நானவிசேடமுள்ள கங்கையிலோரிடம். நீர்மை - பயன். விரிவு-விரிவாக. தழும்ப-தழும்புபட.

45. மழைதிறம்ப - (வான) மழை பெய்யாதுமாறுபட. அறம் திறம்பி-தருமமும் பிறழ்ந்து. வரம்பு - அளவு. உள்ளாக-(தன்) ளுள்ளடங்க. தழையும்-வளரும். வரையாமல் - நீங்காமல். உழைமகள் - மான்மகள்; வள்ளி. திவசம்-நாள்.

46. கோலிய-சுற்றிய. மோனம் - மௌனம். பருவம் - வருடம். இமப்பொருப்பு-இமயமலை. புகழ்-பயன்.

47. வியப்பு உறத்த - விம்பிதம் அடையப்பட்ட. மிக்கா - மிகுதியாக. நயப்பு-நற்பயன். அயக்கடவுள் - பிரமதேவன்.

48. அரித்துவாரம் (விஷ்ணுக்ஷேத்திரத்திலுயர்ந்த) ஒருதலம். தேசவன்மூன்-விஷ்ணுவுக்குளதிரே. மாகம்-மாசிமாதத்தில். வேல் துளைக்க-(குமாரக்கடவுள்) வேலாயும் துளைத்தலால்.

49. பின்னவர் - ருத்திரர். வாஞ்சை-விருப்பம். அளவளாவுறும்-கலந்தோயும். கைம்மையர்-விதவைகள். புருணகத்தி-கருச்சிதைத்தல். உணர்வுரைத்த-ஞானோபதேசஞ்செய்த.

50. இருப்பால் - வசித்தலினால். பாவவினை - (மேலேசொல்லப்பட்ட) பாவங்களாகிய வினை. பாகதிவானகம் திருந்து-மோக்ஷமாகிய பெரியவுலகம் (போலத்) திருந்திய.

51. பொற்பு - அழகு. போற்றுதுறியாத. கற்பினர் - கல்விமான்கள். வற்பு-வலிமை. வேசரி-கழுதை.

52. வாலேயம் - கழுதை. மூத்த-முதிர்ந்த. வேதவிழுத்தகுமெய்ப்பொருளான காதையினும் பகர்வனெனக் கூட்டுக.

53. சந்தான விரதமெனப் போராங்கதை யொன்று அருவேபோலாந்தொடர்ந்து கேளெனக்கூட்டுக. இம்பர்-இவ்வுலகத்தவர். இணங்க-பொருத்தமாக.

54. மைந்தர் - பிள்ளைகள். சிறுரில்-பிள்ளைகளுக்குள்.

55. தந்திரி-நரம்பு. சந்தான விரதம்-புத்திரரைப்பெறும் விரதம்.

56. பெட்பு-ஆசை. திங்கள் - மாதம். பூரணை - பௌர்ணமி. விட்புலவர் - தேவர். கௌமாரி - உமாதேவி. குமார-புத்திரனே. கட்பொதி-தேன் பொதிந்த. ஆக - (பிரீதி) யாக. பருவம்-வருடம்.

57. மறை - மந்திரம். அறைகூஉய்-வலிந்தழைத்து. மன்னி-பொருந்தி. மாப்பாடு - சூரசங்காரம் செய்த இடம்.

58. அறுநிகையில்-ஆழிவிசலால். குடபாலின்-மேல்பக்கத்தில். சுதரிசனம்-சக்கரம். மூச்சூலம்-திரிசூலம். கடு-நடுப்பக்கத்தில். சத்தி-வேலாயுதம். இவ்வாறு-இவ்விசவடிவங்கள். முப்பால் தலையில்-(மேற்கூறிய) மூன்றுவகுப்பாகிய நிலத்தில். நீட்டி-எழுதி. சேக்கு அருளின்-நிறைந்தகருணையால். மிடறு-கண்டம். அறைகூஉய-பெருமுழக்கிட்டழைத்து.

59. சூர்-சூரன். அவ்வயின்-அவ்விடத்து.

60. குருமுகமாக-ஆசாரியன்முன்னாக.

61. உணர்வித்து-புசிப்பித்து. உபவசித்து-உபவாசவிரதமிருந்து. கழித்து-(அற்றைநாளைப்) போக்கி. பாரணை-விரதமுடிக்கும் உணவு. முற்ற-முடிய. போற்று-அனுட்டித்து.

62. விருச்சிகத்திங்கள்-கார்த்திகைமாதம். சோ-பக போற்றவர்கள்-விரதமனுட்டித்து முடித்தவர்கள்.

63. ஒலேலைக்கு-கவர்பொருளுக்கு. ஒவ்வாத-இணையாத. கலை-நூல். (என்வே தெளிவாகியசாத்திரங்களென்பதாயிற்று). சந்தானம்-புத்திரப்பேறு. மை-கரிய. வாரி-சமுத்திரம். செவ்வாம்-செவ்வையாகும். மன்னிலை-இராச்சியநிலைமை. அஃதாவது: செங்கோல்.

64. களிவு அரு-குறைவற்ற. வளம்-செல்வம். அதிதி-காசிபமுனிவர்மனைவி. நாரதமாமுனி ஆசிரியனாக வெனக்கூட்டுக.

65. நோன்பு-விரதம். திருவின்-செல்வத்துடன். சோர்வு-தளர்ச்சி. உற்றுழி-(தற்பரியர்) வாழ்ந்தாள். அயிலாற்கு-வேலாயுதத்தையுடைய முருகக்கடவுளுக்கு. தாள்வீடு-திருவடிமோக்ஷம்.

66. அங்கம்-வேதாங்கம். ஒருவ்கு-முழுவதும் ஆக்கி-அமைத்து. வியப்புமேலாய்ப் புகழ்நிறுவினனக் கூட்டுக.

67. வதிந்து-(அவ்வேதியன் அவ்வாறுவாழ்ந்து) இருந்து. பவத்தின்-(பூருவத்திற்செய்த) பாவத்தால். மூத்து-முதிர்ந்து.

68. இவ்வாறு சொற்றிடு மனைத்தாமெனக் கூட்டுக. சித்தனையே-சிந்தித்தலையே. என்று-பொருந்தி. கண்பால் உற்றன-பிரத்தியக்ஷத்திற் கண்டபொருள்கள். சாருறு பொருள்-சார்ந்துள்ள பொருந்தியபதார்த்தங்கள். அரு-அருமைபாகிய. சிராமநகரம். அவண-அவ்விடங்கள்; சோ. க்ஷேத்திரங்கள். இவண்-இவ்வுலகிடம். சகத்தெரிய-உலகறிய.

69. தன்-தன்னுடைய-வேதமுறைதிறம்பி-வைதிகவொழுங்கு வழுவி. மூத்து-முதிர்ந்து. வாழ்முற்ற-வாழ்வினைமுடிக்க. வினையுழன்று-வினையால்வருந்தி. சுழன்ற-சுற்றிவருகின்ற. கறங்கு-காற்றாடி.

70. இயமபடர்-இயமதூதர். பாசம்-கயிறு. காலன்-இயமன். தாவ்-கேடு. குரல்-ஒலி. வாலேயர்-சுழுதை.

71. ஒலவுற்றவிலது வில்லாமல். வேதம் அதிகரித்த-வேதர்(ஓதற்கு) அதிகாரம்பெற்ற. காவலக்கீல-சம்புத்தீவு. அணித்து-சமீபம். மேவரும்-பொருந்தும். சும்மை-ஓசை.

72. சாரு-சற்பகர். ஒளடாவிர்-உள்ளேவிளையாடும். உய்த்தான்-வாழ்ந்திருந்தான்.

73. நாஞ்சில்-கோட்டை. இடும்பை-துன்பம்.

16. இயமனுக்குச் சிந்துபுரவைபவம் உரைத்த அத்தியாயம்.

1. புகும்பரிசு-அடையுந்தன்மை.

2. வங்கம்-மரக்கலம். வாணிகம்-வியாபாரம். புலால்-(ஊனே) மாமிசம்.

3. உள-இருந்த. மிலேச்சன்-(ஒரு) வேடன். அந்தகாலை-அக்காலம். உள்ள-இருந்த. செற்றம்-கோபம் துணிவிப்பான்-அறுக்கச் செய்விப்பவன்.

4. நடாத்தும்-நடத்தப்படும். மறைவாணர்-வேதியர். தசை-மாமிசங்களை. கறி-கறியாக. காமுற-விருப்பம்பொருந்த. கிளை-சுற்றம். நுகர்விப்பான்-உண்பிப்பவன்.

5. தன்னுள-தனக்குள்ள. புலைச்சமயர்-இழிமையாகிய கொள்கை. சமயத்தோர்-(கற்)சமயத்தவர். செருக்கு-சருவம்.

6. இவிடம்-இத்த இடம். முப்புவனவைப்புத்தானம்-மூன்றுலகத்தினிடம். அந்தணர்-(அம்மூன்றிடங்களையுமுடைய) பிரமணர்; இரிசுதந்திரர்.

7. ஆன் உரு-ஆகிய (இங்குள்ள) வடிவம்.

8. குழுவுக்கு-கூட்டத்துக்கு. அரசன்-பதி; தேவசேனாபதி. துங்கம்-உயர்வு.

9. உளவாசை-மனவிருப்பம். நிறுத்தும்-தடைசெய்யும். சாற்றும்-(அவ்வேடன்) சொல்லுவான்.

10. சீறினன்-கோபித்தவனுகி.

11. முடியாதபாவி-கெடாதபாவமுடையவேடன். தாம் உன்பு-(தன்) வலிமையை நினைந்து. உன்பு, செய்பு என்றும் வாய்பாட்டு வினையெச்சம். பணிவோரின்-நமஸ்காரஞ் செய்பவரைப்போல. மேவர-பொருந்த.

12. பாசம்-கயிறு. யமபடர்-யமதூதர். வாழ்வுபெறுவோன்-வாழ்வு அடைவோனுகிய இவ்வேடன். நீசர்-இழிந்தோர்களே.

13. அன்னவர்-அந்த யமதூதர். ஆணை-(சிவபிரான்) ஆஞ்ஞை. கொடுமைக்கொண்டு. போற்றும்-காக்கும். முறைகூற-(அத்தூதர் நடந்தவற்றை) வரிசையாகச்சொல்ல. வளி எற்ற-காற்றிலெதிர்ப்பட்ட. முகில்-மேகம்.

14. பற்று-அன்பு.

15. வேல் கரு-வேலாயுதம்போல் விளங்குகின்ற. வேழம்-அயிராவதயானைவளர்க்கப் பட்ட. மாது-பெண்; தெய்வயானை. தானம்-வலி. ஞானமுத்திரையின்-சின்முத்திரையுடன்.

16. மன்றல்-மணம். வாரிசம்-தாமரை.

17. கலன்-(தாலியாகிய) ஆபரணம். நீக்குங் கட்வள் தாட்பு மறையுரைகாருவெனன் வியந்தானனக் கூட்டுக. மறையுரை-வேதவசனமாகிய வாக்கு. தருமன்-யமன்.

18. இழுதையர்-அறிவில்லாதவர். எந்தை-எங்கள்பிதாவே. துதித்த-துதிக்கப்பட்ட. முதியோர்-பெரியோரும். வழிபட (அவ் இழுதையரை) வணங்க. இயற்றிய-செய்த. மயூர-மயில் வாகனத்தையுடையாய். கூற்றிறை-யமராசன்.

19. தேவசேனாபதி ஆக-தேவசேனாபதி (என்னும்) பெயரும் (உமக்கு) உண்டாக. நிற்கொடு-உம்மால். ஆடல்-வெற்றி.

20. பகவதி-பார்வதி. ஞானம்-ஞானத்தால். அருணோதய-சூரியோதயம்போன்றவரே. சொல்-புகழப்படும். புகல்-அடைக்கலம். யாமியம்-தென்திசை. புலம்-இடம்.

21. தானவர்கள் ஆய-அசுரர்களாகிய. புலவர்-தேவர். சயம்-தெய்வயானை. பரம-நாயகனே.

22. வாலாறு-(நீ) வந்தவிதம்; வந்தகாரியம்.

23. மௌலி-சடை. நிரயம்-நரகம். படர-செல்ல. ஈரேழ்-பதினாலு (மனுக்கள்). கரியாக-சாட்சியாக. உறவித்திடல-சேர்ப்பித்திடுதல்.

24. முறை-(எனது) நீதி. மநுவேந்தர்-பதினான்குமனுக்கள். மதிமாலைபுனைவோர்-சிவபிரான். சிந்தை மருண்டு-மனம்அஞ்சி. வினைச்செயல்-(உயிர்களுடைய) நல்வினை தீவினைச் செய்கைகள். உணர்ந்து-அறிந்து (நடத்தப்படும்).

25. பாதகன்-(இந்தப்) பாவியாகிய மிலேச்சன். எனு-என்று. விடுத்தனன்-அனுப்பினேன். விடுத்தவர்-அனுப்பப்பட்ட தூதர்.

26. இடித்து-தள்ளி. தழுவிப்பது-தழுவும்படி செய்விப்பது. கோள-(முருகக்கடவுள்) கேட்டு.

27. அழுக்கின்முறை-அசுத்தமார்க்கம். தம்-தங்கள் தங்களுடைய. இயற்றொழில்-சாதியாசாரச்செய்கை.

28. முந்துபவம்-முற்பட்டபாவங்கள். ஊழ்முறை-ஊழின்கிரமப்படி. நோக்கின்-தரிசித்தால்.

29. மேவா-பொருந்த. முகம்ஆறும்-(நம்முடைய) ஆறுமுகங்களையும். தாஅற-குற்றமில்லாமல். விழித்தவுடன்-தரிசித்தவுடனே.

30. பரிபவம்-இழிவு.

31. எண்-வலிமை. தாணுவின்மகன் ஆறுமுகவேலோனெனக் கூட்டுக. தாணு-சிவபிரான். மணிக்கோரம்-கொப்பாகிய வாணி-இரத்தினக் கொப்பாகிய (குமாரக்கடவுளது) திருவாக்கு.

32. மூவர்-திரிமூர்த்திகள். தவத்தர்-முனிவர். விந்தை-ஆச்சரியம்.

33. நிலையார்-நிலைத்திருக்கின்ற.

34. சேயின்-முருகக்கடவுளுடைய.

17. பிரமன் தேவர்கட்கு உபதேசித்த அத்தியாயம்.

1. பரிந்த-விரும்பப்பட்ட.

2. பாவகாரி-பாவஞ்செய்பவன். மூவர்-திரிமூர்த்திகள். மாதிரத்திறையவர்-திக்குப்பாலகர். மூத்து-விருத்தனாய்.

3. வாணிகம்-வியாபாரம். சோரம்-களவு. காணி-ஓரளவு. ஆய்-தாய். மா-ஒரு சிற்றெண். காணி-ஒருமாவில் ஐந்திலொரு பாகம். செட்டு-இலாபம்.

4. பேழ்வாயன்-பிளந்தவாயையுடையவன்; (பெருவாயனென்றபடி). ஒரீஇ-நீங்கி. அவம்-தீமை.

5. வருணம்-குலம். இருள்-மயக்கம். நயந்து-விரும்பியதாகிய. பொருள்-(விசேடித்த) அர்த்தம். இன்று-இல்லை. நால்வகை என-நான்கு பிரிவாக (வெவ்வேறு அபிப் பிராயத்தை). பூண்டோர்-தரித்தோர். சருணம்-சமயம். வேடத்தின் தகைமை-(வெவ்வேறு) வேஷத்தின் றன்மை (யுடையாராய்). கூத்தாடுவோர்-நாடகமாடுவோர் (ஆவர்).

6. பெரியவான்சிலை-மிகப்பெரிய கல்லின். உருவமும்-விக்கிரகமும். தாமிரம்-செம்பு. விற்றுதல்-(அவைகள்) பேசுதல். நாலைபாவை-(இருபெயரொட்டு) சமுத்திரம். இயல்பு-உண்மையால். உள ரென்பது-(அவர் தெய்வமாக) உள்ளவரென்பது. படிறு-பொய்யே.

7. சேயர்-பிள்ளைகள். மாதவர்-(சித்த) இருடிகள். மாசு இலா-அழிவற்ற. சொன்னம்-பொன்.

8. யாரையும்-(மேற்கூறியவரல்லாத) எல்லாரையும். யாவையும்-எல்லாப் பொருள்களையும். பன்னகம்-ஆதிசேடன். ஆற்றிய-சுமந்த. படவி-பூமி. பரம்-பாரம். புணரி-கடல்.

9. தீபாந்தரத்திடம்-தீவுகளின் இடம். கணிதம்-அளவு.

10. வங்கம்-கப்பல். ஓவாது-நீங்காது. சூறைமாருதம்-சூறாவளி. எறிதர-வீச. தோணி-கப்பல். சலதி அங்கு-சமுத்திரத்தின் அவ்விடத்தில்.

11. ஈர்த்திட-இழுக்க. தாழ்ந்த-வணங்கப்பட்ட. வதனாம்ப சந்நிதி-வதனாம்ப தீர்த்தத்தின (சுவாமி) சந்நிதானம்.

12. ஈமம்-சுடுகாடு. நாய்களுக்கு செட்டிக்கு. அழற்கருமம்-அக்கினி காரியம்.

13. மட்டு-அளவு. வறந்து-வற்றி. இட்ட-(கொண்டுவந்து) தந்த.

14. காந்தியின்-கிரணத்தைப் போல. காரின்-மேகத்தைப்போலும்.

15. வரை-அளவு. பவம்-பாவம். மூத்தவோர்வணிகன்-முதிர்ந்த ஒரு செட்டி. துரியம் எய்திடில்-மரணமடைந்தால்.

16. உவமித்து-ஒப்பாக்கி. தகவினோர்-இயல்பினோர். சலதி-சமுத்திரம். மிகை-துன்பம்.

17. சடமெடுத்தனோர்-(தன்னிடத்து) உடலெடுத்தவர்; தோன்றினவர். எண்ணியோர்-நினைத்தவர். வடவை-வடவாமுகாக்கினி. வதிவார்-தங்குவார்.

18. செய்கை-வரலாறு. பரிவாய் இசைத்தான் எனக்கூட்டுக. பரிவு-அன்பு.

19. பிரமபுரம்-சீகாழி. அடல்-வலி. புடார்ச்சனம்-திருக்குற்றாலம். கழைவனம்-திருநெல்வேலி. சோராடவி-களாவனம்; கருவைநல்லூர். தலை-முதன்மை.

20. தென்றிசைச் செல்வோர்-யமபட்டணத்துக்குப் போவோர். செயந்தி-திருச்செந்தூர். அம்பதி-அழகியதலம். அன்றி-அல்லாமலும். இதயகோகனதம்-இருதயதாமரை (யாகும்).

21. திங்கள்-மாதம்.

22. மாசமாதமுப்பது. மெனக்கூட்டுக. மாகம்-மாசிமாதம். ஏதிலா-குற்றமில்லாத. ஏத்தலம்-எந்தத்தலத்தில். போதற்கு-நீங்குதற்கு. அரிதாம்-கூடாததாகிய.

23. வேள்வி-யாகம். விதிமரபு-விதிமுறை. நீள்கதிக்கு-உயர்ந்தபயனுக்கு. மாகமுசாரம்பம்-மாசிமாதம் வதனாம்ப (ஸ்நானத்திறுலாகும்). பலனை-பயனை. கோடி-கோடி (மடங்கதிக) யாகச். சூள்-சபதம்.

24. ஆறுநிலாமுகமண்டலம்-(குமாரக் கடவுளுடைய) ஆறு சந்திரன்போன்றமுகமண்டலங்களை. பெட்பு-ஆசை. உறைந்து-(செயந்திப்பதியில்) தங்கி.

25. மல்லால்-வளத்தால். ஆன்-பசு. வான்பரிவேள்வி-பெரிய அசுவமேதம். விந்தையால்-உபாயத்தால்.

26. அற்றைநாள்-அந்தக்கார்த்திகைதினத்தில். தீபம்பார்க்கும்-விளக்கு (ஏற்றி) த்தரிசிக்கும். கடைநிலம்-கீழ்த்தரம்.

27. அம்நிலை-அழகிய (பத்தி) நிலைமையை. கடவுளோர்-தேவர். பதுமம்-தாமரை. தளிமம்-கோயில். கோமான்-பிரமன்.

28. கன்றிய-வருந்திய.

29. கருதரு-நினைத்தற்கரிய. மேலைவீடு-மோக்ஷவீடு. தேற்றினன்-தெளிவித்தான். பரிவு-அன்பு. தொகுத்துப்பகுத்தனன்-சுருக்கிக்கூறினன்.

18. சுகப்பிரமரிஷி பூசைசெய்த அத்தியாயம்.

1. நாட்டரு - ஆராய்தற்கரிய. சுரப்ப-பெருக. நிலாவேணி-சந்திரனைத் தரித்தசடையையுடையசிவபிரான். உள்ளம்வைத்தான - மனங்கொண்டான்.

2. நவை-குற்றம். மூத்து - முதிர்ந்து நாரண வடிவம் - விஷ்ணு அம்சம். காதை அவை - கதையாகிய அவைகளை. அறிவுபதேசம் - ஞானோபதேசம். ஒருங்கு-முழுதும்.

3. உற்ற-பொருந்தின. பேரினை-(அத்தலங்களின்) நாமங்களை. புலரிக்காலை-விடியற்காலத்தில்.

4. படலை-கூட்டம். தூங்கும்-தங்கும். ஆடியின்-கண்ணாடியைப்போல.

5. ஆர்வம்-அன்பு.

6. நவிற்ற-துதிக்க.

7. கனகலதிரம் - ஒருநகர். தாதை-பிதாவாகிய சிவபிரான். மங்கலமரபின்-நல்லமுறையாக.

8. மலையம்-பொதியமலை. மேல்பால் - மேல்பக்கம். நிலையம்- இடம். வேதஆரிடர்-வேதமுனிவருக்கு.

9. உருச்சொல்லி-பாடஞ்சொல்லி. பெருந்தகை-பெரியதகுதியுடையான்.

10. பனி-குளிர்ச்சி. படலை-கூட்டம். சாரல்-மலைப்பக்கம். நாப்பண்-நடுவிடம். சினகரம்-கோயில்.

11. தொல் - பழைய. மறைமுடிவு-வேதாந்தம். மூத்த-முதிர்ந்த. சின்மயம்-ஞானசொரூபம். ஓங்காரம்-பிரணவம்.

12. வேட்டு-விவாகஞ்செய்து.

13. தினகரன்மரபு - சூரியகுலம். அண்ணல்-அரசன். ஞானவரை-திருப்பரங்குன்றம். நோற்கும்-தவஞ்செய்யும். வேட்டு - இச்சித்து. நவில்வதானான்-(அவ்வரசன்) கூறத்தொடங்கினன்.

14. (சிவபெருமான்) அறுபானான்காயாடின நடனக்கோலமெனக்கூட்டுக. நாடகச்சுருதியாக - நாடகநூலின்படி. (நீர்) காட்ட - (பிறர்க்கு) அறிவிக்க.

15. கூறரு - சொல்லுதற்கரிய. காவ-காக்க.

16. தேறல் - தேன். ஆறுடனைந்து-பதினொன்று. ஆரண்பதி-சிவஸ்தலம். மங்கலச்சாரல் - மங்கலமலைப்பக்கம். அகிலம்-உலகம்.

17. போதனம்-போதித்தல்.

18. பொருநைச்சங்கமம்-தாம்பிரபருணி நதிகூடுமிடம். பொலன்குவடு-பொன்மயமாகியசிகரம். சந்தவரை-சந்தனாசலம். எஞ்ஞான்றும் - எக்காலும்.

19. பிரிந்து - நீங்கப்பட்டு. ஒள்-ஒளி. நால்வாக்கியம்-நான்கு வேதத்திலுண்மை. பரித்து-தாங்கி.

20. தாழ் - தங்கிய. மகேந்திரம் - மகேந்திரமலை. குருங்கம்-ஒரூர். கூர்மச்சிலை-ஆமைவடிவமானபாறை. இரண்டுமாதர் - தெய்வயானை, வள்ளியம்மையார்.

21. சையம்-சையமலை. சித்தக்ஷேத்திரம் - சித்தக்ஷேத்திரம். சித்தர் - (ஞானிய) சித்தர். மேல் கிரி-மேமேலெழும். குளிகாசித்தி, பாதுகாசித்தி, பிராணாயாமசித்தி, இம்மூன்றையும் யோகநூலிற் காண்க.

22. என்றறைந்த-என்றுசொல்லப்பட்ட. நந்தல்-கெடுதல். அறைந்தவெனபதனிறுதியில் அகரங்கெட்டது.

23. முத்தேவர் - திரிமூர்த்திகளிடத்தும். மூவர்ஆவதும்-மூன்றுதொழிலுடையவரா யிருப்பதும். சுருதியின்-வேதங்களைப் போதித்தால்.

24. சட்ட - சடைசெய்ய. கொந்து-பூங்கொத்து. கவடு-கொம்புகளை. போக்கும் - வளர்க்கும். சந்தகோபாலர்-இடையர். கதிர்-சூரியன். கோமான்-தலைவன்.

25. நாடகத்தியற்கை - நாடகமுறை.

26. கோகுலம்-பசுக்கூட்டத்தையுடைய. ஆயன்-(மேலேகூறிய) இடையர்தலைவன். ஓகையின்-மகிழ்ச்சியால். கண்ணன் - கிருஷ்ணன். சாயுச்சியம்-மோக்ஷம்.

27. குகற்கு-குகனென்னும் பேருடையவனுக்கு. சோராது - சோர்விலாது.

28. வாய்ந்து-பொருந்தி.

29. முதுகிரி-விருத்தாசலம். பொன்னன்-வியாளபகவான். அகாரமூன்றும்-ஆகருடணம், அதிரிச்சியம், அஞ்சனம் என்னுமந்திரவித்தை கண்மூன்றையும். வகாரமூன்று - வசியம், வாதம், வயத்தம்பம் என்னு மந்திரவித்தைகண் மூன்றையும். வகைபட-முறையாக. குருபரன்-குமாரக்கடவுள்.

30. காலன்-யமனுடைய. ஆணை-ஆஞ்ஞையை. தகைய-தகுதியுடைய. சொல்வாய்ந்த-பதஞ்சிறந்த. தந்திரம்-சாஸ்திரம். பசும்பூடு-பசியபுல். ஆதித்தொகை - முதல்ய (பிரபஞ்சத்) தொகுதியை. சொல்லி-உபதேசித்து.

31. பாம்பிய-பரந்த. தரங்கம்-அலை.

32. ஆரியர் - முனிவர்களே. மூவாறுன - (மேற்கூறிய) பதினெட்டாகிய. சந்தசாரல்-சந்தனாசலமலைப்பக்கம். தகைய - அழகுடைய. சாட்டல்-சாட்டுதலை. உளங்கொடு-உள்ளத்திற்கொண்டு. குறிப்பால்சொற்றான் - (வியாசமுனிவர் சுகமுனிவருக்குத்தமது மனக்)குறிப்பினாலே கூறியருளினர்.

33. சூர்-சூரபன்மன். உரம் - மார்பு. வை-கூர்மை. இனி மூன்றும் கற்பத்தெனக் கூட்டுக. கோகனதம்-தாமரை. அற்புடன்-அன்போடு. நடிக்கும்-நடித்துக்காட்டுவன். என்ன - என்று. அறிவு-(திருச்செந்தூர் விஷயமாகிய) ஞானத்தை. ஒருங்கு-முழுதும். உணர்த்தினன் - (வியாசமுனிவர் சுகமுனிவருக்குக்) கூறியருளினர்.

34. வதரிகாச்சிரமம் - இலந்தைக்காட்டிலுள்ள இடம். இது முனிவர்கள் வசிக்கும் பெரியதானம்.

35. கழி-மிக்க. கடவுளர்க்கு-தேவர்களுக்கு. தந்தை-பிதாவாகிய வியாசமுனிவர். மாற்றினன்-உண்டவராகி. மகிழ்வுபூத்தான் - (சுகமுனிவர்) சந்தோஷித்தார். இயலாகிய மதுவெனக்கூட்டுக.

36. பனிவரை - இமயமலை. தூங்கும்-தங்கும். மீதூர்ந்து - அதிகமாக. எண்ணியாங்கே-நினைத்தபடியே.

37. பிராணாயாமம் - பிராணவாயுவை இரேசகபூரக கும்பகஞ்செய்தல்; இஃது அட்டாங்கயோகத்தொன்று. பிராணம் - இந்திரியங்களாகிய. மாயை-வஞ்சகத்தையுடைய. குழுவினை-கூட்டங்களை. ஒன்றதாக - ஒருவழிப்பட - கூட்டமிட்டு. சேர்த்து. அவையை-அவற்றை. மேலை - மேலுள்ளதாகிய. சுழுமுனை-நாடியில். கூட்டி-நடப்பித்தலைச்செய்து; இங்ஙனஞ்செய்தலைப்பிரத்தியாகாரமென்பர். தொடர்வினை - மேல்வரும் தீமையை. தூயோன்-பரிசுத்தமுள்ள சுகமுனிவர்.

38. அந்தரத்திடை-ஆகாயத்தினிடம் ஆறு-வழி. செல்வுழி-போகுமிடத்து. முந்து - பழைய. ஆற்றின் - வழியில்.

39. தாழ்-தங்கிய. வரை-மலையைச்சார்ந்த.

40. அடல் - வலி. அட்சயவடம் - ஒருதலம். தென்பார்க்குரியார்-தென் புலத்தார்; பிதிரர். தழைகதியெனக் கூட்டுக. கயை-கயாதீர்த்தம். அரி பாதம்-விஷ்ணு திருவடி.

41. முனிவன்-கௌதமமுனிவர். வான்-பெரிய. அகள்-குற்றம். தீர்த்த ரு-நீங்கிய. குகனேரி - திருப்பதியிலு ள்ள ஒரு தீர்த்தம். ஐந்து - பஞ்சேந் திரியம்.

42. புடை-பக்கத்தில். அச்சத்து- பயத்தையுடைய. ஒருமானை - (மாரீச னாகிய) ஒருமானை. அம்மான்- அந்தப் பெரியோனாகிய. பதுமத்திருமான் - தாமரையிலிருக்குமிலக்குமி. வயின் - வயிற்றில். பிறவான்- (இனி)ச்சன்மமி ல்லாதவராகிய சுகமுனிவர்.

43. சொல் - சொல்லப்பட்ட. அ சோபலம் - ஒருவிஷ்ணுதலம். அ- அந் த. தூ-புனிதமுள்ள. வல-வலியுடைய. புகழ்வலம்காடு - புகழின் வெற்றியினை விரும்புகின்ற. சுவாலை-ஒரு விஷ்ணு க்ஷேத்திரம். பிரமஅம்பிகை- சிவமும் பராசத்தியும். பெட்பார்-ஆசையுடனி றைந்திருக்கின்ற.

44. திருமுட்டம் - ஒரு விஷ்ணு தலம். வராகத்திருமால் - பன்றிவடிவ மாகிய விஷ்ணு. இலர்ஹைதத்ரு- வத ரியாச்சிரமம். அச்சுதன் - திருமாலா கிய. திரை-அலைகளிலுள்ள.

45. தரங்கத்து - அலைகளினிடத் து. இரை-ஒலியையும். பணிலத்து - சங்குகளின். பரம்ப - நிறைய. பவம்- சனனம். கவின-சிறப்ப.

46. நேமிப்பெயர்வனம் - நைமிசா ரணியம். பீடு-பெருமை. சோடும் -வ ளையும். முதுகுன்றம் - விருத்தாசலம். குழகன்-பேரழகுடையவன.

47. அன்னமைலச் சுருதித் தலை யெனக்கூட்டுக. சுருதித்தலை-வேதத் தலைவன். அனவரதம் - எப்போதும். பணி-பாமபு.

48. முத்தாங் கனி - வெண்ணிற முள்ள பழம். காவல்-காவல்மரம். வக முகிழ்த்தான் - கும்பிட்டான். அடவி- காடு. தெத்தாத்திரேயன் - ஒரு முனி வர். விரை-மணம்.

49. அழிப்புயல் - சக்கரத்தைத்தா ங்கிய மேகம்போலுந்திருமால். தாம்- தகுதியாகிய. எறி-வீசுகின்ற. சாங்க த்திரை - (இருபெய ரொட்டு) அலை. பொன்னரி-காவிரியாகிய. இடபகிரி- இடபமலை. ஆயன்-விஷ்ணு.

50. கடம்பாடவி - கடம்பவனம். காமாரி - காமனை யெரித்த சிவபெரு மான். களி-மகிழ்ச்சி. துணங்க-விளங் க.

51. விதியால் - முறைப்படி. வே தாகமவிதியெனக்கூட்டுக. நவைதீர் - குற்றநீங்கிய.

52. சங்கமம் - கூட்டம். பணரி - கடல். களம்-விடம். மரு-வாசனை.

53. மீதுஆறினன்-(ஆகாயத்தின்) மேல்வழியிலேயுள்ள சுகமுனிவர். இருந்து - (திருச்செந்தூரெல்லையிலே கீழிறங்கி) இருந்து. கந்தவெற்பு-கந்த சைலம். ஓதாதுணர்வான்-தாமேயெ லாமறிபவராகிய வியாச முனிவர். உளங்கொண்டு -மனத்திலே தியானி த்து. தாதால் - பொன்னால். பூசார்- திரிசுதந்திரர். கோது-குற்றம். மதம்- கருவம்.

54. தோய்ந்து - கலந்து. சந்தஇ விலரை யெனக் கூட்டிச் சந்தனாசல மென்னுமலையெனப்பொருள்கொள்க. இரவி-மலை. கடிது-சீக்கிரம். இழிந் து-இறங்கி. அவ்வழி - அவ்விடத்து. ஆறு-நீங்காத.

55. விகற்பம் - வேறுபாடாகிய வகை. திக்கட்பிளவு-அர்த்தசந்திரன். அளவும்-கலக்கும்.

56. பேர்-பெரிய. ஆதரம் - ஆசை. ஆராதனை-பூசை. ஆராஅமுது - உண் ணக்கூடாத அமுதம்போன்ற உமா தேவியார்.

57. துயில்மாலை- நித்திரையிலிரு க்கிற விஷ்ணுவை. சூழ்தேவர்-பரிவா ரதேவதைகள். செயிர்-குற்றம். மனு- மந்திரம்.

58. நீடு பொன்விமானம் எனக் கூட்டுக. நல்நேயம் - நல்லன்புக்குரிய. சகந்நாத-உலககருத்தாவாகிய. சோட சவிதி-பதினாறு உபசாரம். அலர்-மல ர்களை. இறைத்தான் - வீசியருச்சனை செய்தான்.

59. தணிப்பான்-தணிக்கும் பொரு ட்டு. மோனம்-மௌனம்.

60. பதினாறும்விதி-சோடசோப சாரம். பரிவின்-அன்போடு. கூர்த்து- மிகச்செய்து. கோகனதம் - தாமரை. மயிர்க்கூச்சுப் போர்த்தல்-மயிர்க்கால் தேகமெங்குந் தடித்தல்.

61. பொன்-அழகு.

62. இருவினை-நல்வினை, தீவினை. வான்முறை-கிரமப்படி.

63. அலைத்து-கரைத்து. நோன்- வலிமை. தேவி - பார்வதி. சிறுகுருந் தே-சிறுபிள்ளையே.

64. வானப்பரிதியின்-(சித்) ஆகா யத்தில் விளங்குஞ் சூரியனாகிய சிவ பெருமானுடைய. அம் கதிரின் மூத் து-(அருளாகிய) அழகியபிரகாசத்தில் முதிர்ந்து. படிவம் அளவையாப்போ ம்மூ இருசுடர் அவையும் - (அளவுப டாத) உருவம் அளவுபடும்படி வெளி வரும் ஆறு அக்கினிப் பொறிகளையும். ஒன்றாயமற்றி-ஒன்றாகச்செய்து. ஓர்- ஒப்பில்லாத. பரம் - மேலான. மகா- பெரிய. பரமமகா என்பது, செய்யுள் பற்றிப் பரமமாக என்றாயிற்று.

65. இருமையில் - இருவினையுமி ல்லாத. அணைமைமூவா-(மதி) நானுக் கம் கெடாத. மேய இந்திரியத்தால்- (மற்றையோர்) பொருந்திய பஞ்சேந் திரியங்களால். தேற்றாஅரு-தெளித ற்கரிய. நட்பம் - நுண்பொருளாகிய. தளிமம்-கோயில்.

66. காமமே முதல - காமம், கு ரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம். பருவம் ஆறு - உற்பத்தி, பாலியம், யௌவனம், வயோதிகம், வி ருத்தம், மரணம். ஓமெனும்பொருள்- பிரணவம். மூன்றன-(அது) முதலா கிய. கோசம் ஆறு - பிரணவகோசம், அன்னமயகோசம், பிராணமயகோச ம், மனோமயகோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமயகோசம்; இவைத் ளைக் கட்டளைக் கொத்திற் றெளிவா கக் காணலாம். கோம்-குற்றம். சுவை களாறு - தித்தித்தல் முதலியவை. சூத்திரம் ஆறு - (ஆபத்தம்பர்முதலிய ஆறுமுனிவர்கள் கருமகாண்டம் பற் றிக்கூறிய) விதிநூல் ஆறு. ஆக-உண் டாக.

67. ஆறுவிதம்-(ஐசுவரியம், வீரியம், திரு, ஞானம், புகழ், வைராக்கியம். ஆகிய) ஆறுவகை; இவற்றை முற்றறி வுமுதலிய ஆறென்பாருமுளர். முக் குணம் - இராசதம், தாமதம், சாத்து விகம்.

68. மகம்-யாகம். ஈட்டும் - சம்பா தித்துக்கொண்ட. அகுதி - அவிப்பா கம். அன்னார்க்கு-அம்மறையவருக்கு. நறை-மணம். மலர்-விரிந்த.

69. குகைஎனும் இதயவீடு - (பிர மாண்டசரீரத்தின்) இருதயஸ்தா னத்தில். குகம் - இரகசியம். குகைவ ரை-குகையுடைய மலைகளில்.

70. பரன்-சிவபிரான். குமிழ-நக் கி. வேள்வி-யாகம் உரம்-வலி. கிரந்த- லைத்திய ரிருவர். நாப்பண் -நடு, இ டை. புரிந்த-விரும்பிய.

71. வாற்கணு - வாலியன்ன (மு தலாங்) கணு. அனல் - அக்கினி. வா ன்-பெரிய. பால் - பகுப்புடைய. பத் தப்பிரமர் எனக்கூட்டுக. மேல் - மே லாகிய. அபயத்தெய்வம் - அபயதேவ தை. மேய - (ஆக) மேவிய. சிஞ்சுமார த்து-முதலைவடிவோடிருந்து. நற்புற-

பொருந்துமாறு. புடவி - பூமியை. முதலைவடிவாயிருந்து பூமிகாத்தல் முதல்நூலிலில்லை.

72. ஓர் வடிவமரம்-ஒருடம்பாகிய மரம். ஆர் - நிறைந்த. காமரு-தலாருந்தழையெனக்கூட்டுக. எழுதாது - இரத்தம்; உதிரம், என்பு, தோல், இறைச்சி, மூளை, சுக்கிலம். (ஆகிய) தோல்-மரவுரி. ஏர் - அழகிய. புரியட்டகம்-சூக்குமதேகம். வண்பூ - வாட்டுவிதமலர்; பூசாவிதியிற்காண்க. வாயில்-துவாரங்களாகிய. கணு-கணுக்கள். கிழவாம்-கிழலைச்செய்வதாம். இனைசீர்பெருக்கு எனக்கூட்டுக. இன-இவ்வியல்புடைய.

73. கம்ஒளியாகி - கம்மென்னுஞ்சூரியனாகி. ககம் - பறவையாகிய. புகல்-(கற்பித்துச்) சொல்லப்பட்ட. ஆற்றல்-வலிமை.

74. இனன்-சூரியன். குழு - கூட்டம். கடந்து-பிரேரித்து. கோவாகித்தலைவனாகி. கூடாகி - கூடுதலாகி; கூடு. கோவரகி-நாயகனாகி. அரியன்-அன்புடைய அடியேன்.

75. நன்னுதல் - நல்லநெற்றியையுடைய உமாதேவி. ஞானம் - ஞானநூல். பெரியர் ஞானத்தழலா யெனக்கூட்டுக. ஞான - அறிவுடைய. இருசத்தி - தெய்வயானையம்மை, வள்ளியம்மை. வடம் - (கல்) லாலவிருக்ஷம்.

76. கதிர்-சூரியன். சுடரை - சூரியனை. விளக்குவிக்கும் அவனாகி-(கலந்து) பிரகாசம் படுத்தும் அக்கடவுளாகி. கதிரால் - பிரகாசத்துடனே. உற்பவமுதல ஆறும் பருவம் - 66-ஆம் பாட்டினையிற் காண்க. இருக்கு-வேதம்.

77. பக்கம்-(பூர்வ, அபர) பக்ஷம். காரப்பாசம்-பருத்தி. இருநூல் - (வெண்மை கறுப்பு என்னும்) இரண்டுநூல். அதிலே-அந்தச்சாட்டிலே. இனமணிக்குவை-நாட்களாகிய இரத்நக்கூட்டங்கள். கோவை-கோத்தல். ஒன்றல-ஒன்றேயன்றி. சாத்தி-புனைந்து. சாரும் - பக்கமும். கொக்குவரை - மலைபோலும் மாமரவடிவமாகிய சூரபன்மனை. துணை - தம்பியாகிய தாரகாசுரன். குருகுவரை-கிரௌஞ்சமலை. பெயர-நிலைகுலைந்தழிய.

78. அறுபதுஇசழ் - அறுபது (எனாகிய) இதழ். திங்களிரண்டாகிய பருவமெனக்கூட்டுக. அறுபது-அறுபதுவருடம். கொங்கு-வாசனை. உயிர்த்த-தந்த. வாகை-வெற்றி. இரண்டுமுனை-இரண்டுபக்கமுங்கூர்மை; இதுபற்றியே முன்பல இடங்களிலுந்தலைவேலெனக் கூறினர். வேர்சூலம்-வேலாகிய சூலம். சூலமும் வேலும் வடிவத்தானுஞ் சொல்லானும் வேறெனினும் பொருளாலொன்றெனக.

79. தார இருசத்தி-மனைவிகளாகிய இரண்டுசேதநம். ஒருசத்தி-ஒப்பற்றவேல். செவ்விதுற - செவ்வையாக. உதவும்-கொடுக்கும். வாய்ந்து-பொருந்தி. குரவரின் - ஆசாரியரைப்போல. பிரசம்-தேன்.

80. ஆகம்-சரீரம். கருமம்-தொழில். ஆறு-காமாதிமுதலியவை. வினை-தீவினை. சேகு-வயிரம்; கடினம். மூகரணம்-மனம், வாக்கு, காயம். மலரித்திரயம்-ஆணவம், மாயை, கன்மம். தாள்-திருவடி. கும்போதயன்-அகத்தியமுனிவர். உரைகூறி - ஞானோபதேசஞ்செய்து. கேகயப்புள்-மயிலாகிய பறவை. ஒளிர்-விளங்குகின்ற. அருணம்-சிவப்பு.

81. வருணம் - சாதி. ஆச்சிரமம்-நிலை. விரியுங்கீர்த்தி சாற்றினையினும் விளக்கு வித்தலெனக்கூட்டுக. உறுமுன் ஞான்றும்-தருமார்த்தகாமமோக்ஷமும். பொருள்-(அவற்றின்) பயனை சேரக்கூட்ட.

82. பஞ்ஞேந்திரியன் - மனம், ஞானேந்திரியம்ஐந்து, கன்மேந்திரியமைந்துடைய சீவன். மன்னும் - நிலைபெறும்; புறம்போகாமல் அடங்கிகிற்கும். இந்தியக்கோ ஆகி - இந்திரியங்கட்குத் தலைவனாகி. வான் - பெரிய. செபவடம்-செபமாலை. சூழ்ந்த-(விடயங்களிற்) பற்றிய. முன்னவர் - முதன்மையாகிய முனிவர்.

83. பூரணம்-நிறைபொருள். தாகேடு. தன்னை - சுயம்பிரகாசவடிவை. வியன்-பெருமை. புத்தேள்-தேவன். முண்டகம்-தாமரை.

84. மகத்தினில் - யாகங்களிலே. (பிரயோகிக்கும்) இரண்டு நான்கு ஓரிரண்டு ஐந்தும்—, சூழ்ந்திடும் - ஆராய்ந்தெண்ணப்படும். எழுத்தாய்-(பதினெ) தெழுத்தாகி., பஞ்சதசாக்ஷர மந்திரமாகி. ஓம அகத்து - ஓமங்களிடத்து. மந்திரமும் - (ஏனை) மந்திரங்களும். ஆகுதி-(மேற்கூறிய யாககர்த்தர்கள்கொடுக்கும்) அவிப்பாகம். போற்றி- பாதுகாத்து. புக-சேரும்படி. தவா-கெடாத. முன்-சேரே.

85. புவனம்-உலகம். வறிது-அற்பம்.

86. வீட்டின் - மோக்ஷத் துக்கு. கண்-கருதுகின்ற. இன்-இனிய. ஏது-காரணம. துதிதரும் - துதிக்கப்படும். வாரிதி-கடல். அன்னோ - மேற்கூறிய கடலை நீந்தினோர். நீந்துதலாவது: எல்லாங்கைவந்து தெளிதல்.

87. உடைந்த கும்பம் - உடைந்த குடத்தின். வான்போல-ஆகாயம்போல. உள்ளொடு புறமுமொன்றாய் - (உடம்பழிய விடத்தும்) உள்ளும்புறமுமொன்றுபட்டு. வாரிதியின்-கடலில. மூழ்கும் - அழுந்தும். வாரியின் - நீர்போல. உள்ளாகி வெளியுமாய் - (உடம்புள்ளவிடத்தும்) அகத்தும புறத்துமாகி. விளங்கி - (ஆன்மாவுடன் கலந்)து பிரகாசித்து. குலைந்த-பிளந்த.

88. தத்துவம் - (பிருதுவி முதலிய) தத்துவங்கள். தத்துவத் தியல்பு-தத்துவ சொரூபம்.

89. செய்ய-செவ்வையாகிய. தொம்பதம்-துவமாகியசொற்குப்பொருள். ஆன-ஆகிய. தற்பதம் - தத்தென்னுஞ்சொற்பொருள். பிரமத்தை-கடவுளை. தொடர்பால் - தொடர்புடன். அசிபதம்-அசியாகிய பதப்பொருள். ஒன்றாக்கும்-ஏகமாகச் செய்யும். துவமெனினுந் தொம்பத மெனினு மொக்கும்-இங்கே கூறிய தத், துவம், அசி; இம்மூன்று வாக்கியமும். மகா வாக்கிய மெனக்கூறுவர். தத்துவமசி யென்பதற்கு-அதுநீயானா யென்பது பொருள்; இது: சித்தாந்தத்தின் முடிவு.

90. பிரயாகம் - பிரயாகை; ஒருநதி. நாரணவடிவே - நாராயணரூபியே. ஊண் அருந்து - உணவையுண்ட. அரியே-விஷ்ணுரூபியே.

91. மூண்டு-முயன்று. முற்றுறசித்திபெற. கலையின்நீதி-நூன்முறைப்படி. ஆண்டு-ஆளுதல்செய்து. அளப்போய்-(உயிர்கள் வினைப்பயன்களை) அளவுசெய்பவனே. சித்தர்-எல்லாம வல்லசித்தர். உலகவாழ்க்கை கலையினீங்கிமூண்டிருந்து முற்றுற்றெனக் கூட்டுக.

92. வாரணவாசி - காசி. அன்னதானகாரணஉமை - அன்னபூரணியம்மை. கம்பை-கம்பாநதியில். நோற்கும்-பூசைத்தவஞ்செய்யும். தூவை-உமாதேவி. அரங்கம்-சிரங்கம்.

93. விராட் - பரமேசுரன். பெருவடிவம்-பெரியரூபம். களங்கு-களங்கம்; கள்ளம்.

94. சுடர்விளக்கு - சோதி விளக்கே. திலக - பொட்டா யுள்ளவரே. சாரம்-தெளிவாயுள்ளவரே. அல்லல்-துன்பம்.

95. அலம்பும் - ஒலிக்கும். தாழா - தாழ்ந்து. மஞ்சமில் - குறைவற்ற.

96. சுகமுனி - சுகமுனிவனே. வேத சாரமெல்லா மெனக் கூட்டுக நன்கு - நன்றாக.

97. சொல் - (ஆகுபெயர்) நூல். தரும் - கூறும். சொற்ற - சொல்லிய. எண்ணியாங்கு - நினைத்தது போல. முற்று ஒருங்குணர்வோர் - பூரண ஞானிகட்கும். [உயர்வு சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது.]

98. வந்தனையாய் - வந்தாயாகி. வையகத்துக்கு - உலகத்தார்க்கு. உணது - உண்ணுடைய. தரிசனம் - காட்சி. வாக்கு - பேச்சு. சிந்தனை - நினைப்பு. பரிசம் - தீண்டுதல். முந்து - முற்பட்ட. முகமன் - உபசாரவார்த்தை. தணவாத - நீங்காத.

99. முனிவிர் - (நைமிசாரணியத்து) இருடிகளே. பற்று - அன்பு. பாலித்து - அருள்செய்து. பெற்றம் - இடபவாகனம். உகைத்தவன் - செலுத்திய சிவபிரான்.

100. உரைத்த - (இங்கேயான்) கூறிய. மரபின் - கிரமப்படி. இயல் - அத்தியாயங்கள். மரபின் - முறைப்படி. வேலைஞாலம் - கடல்சூழ்ந்த வுலகம். அருத்தி - ஆசை. அன்ன - அத்தன்மையாகிய.

101. புரிந்து - விரும்பி. விச்சகம் - நன்மை. வளை - சங்கு. ஆழி - சக்கரம். மணி - சௌந்துவமணியணிந்த. களிக்கும் - மகிழ்ந்திருப்பன்.

102. மான்மியம் - புராணம். நெடிது - நெடுங்காலம். அத்தியாயமுற்றானெக்கூட்டுக. வாம் - தாவுகின்ற. புரவிமகக்கதி - அசுவமேதத்தாலாகும் பயன். அளகையர்கோன் - குபேரன்.

103. காடு - ஆராயப்படும். சகர்த்தர் - உலக காரணராகிய சிவபிரான். வீரர் - நவவீரர். குருபரன் - குமாரக்கடவுள். மின்னார் - தெய்வயானை வள்ளியம்மையார். தோகை - மயில். பால் - உரிமை. சிகரம் - தூவி. சந்தப்பருப்பதம் - சந்தனாசலம்.

104. தசர் - ஆட்டுவாகனம். வான்பயில்வை முகிலெனக் கூட்டுக. வாழி - வாழ்க.

—o—

திருச்செந்தூர்த் தலபுராண அரும்பதவுரை
முற்றிற்று.

பகழிக்கூத்தர்
அருளிச்செய்த
திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ்.
சிறப்புப் பாயிரம்.

நேரிசை வெண்பா.

செந்தமிழ்க்கு வாய்த்ததிருச் செந்திற் பதிவாழுங்
கந்தனுக்குப் பிள்ளைக் கவிசெய்தா — னந்தேர்
திருமாது சேர்மார்பன் நேர்ப்பாகற் கன்பு
தருமால் பகழிக்கூத் தன். (௧)

அவை யடக்கம்.

அத்தனையும் புன்சொல்லே யானாலும் பாவேந்த
ரெத்தனையுங் கண்டுமகிழ்ந் தெய்துவார் — முத்தி
புரக்குமரன் றந்தைகந்தன் பூணணிமுந் நான்கு
கரக்குமரன் பிள்ளைக் கவி. (௨)

நூற்பயன்.

மருநாண் மலர்ப்பொழி லுடுத்ததட மெங்குமலை வாய்கொழித் தெறியுமுத்தை, வண்டலிடு மெக்கர்புடை சூழ்திருச் செந்தில்வரு மயில்வா கனக்கடவுளெங், — குருநாத னொருதெய்வ யானைதன் பாகங் குறக்கொடிக் குந்தழைசிறைக், கோழிக் கொடிக்குங் குமார கம்பீரன் குரும்பிறை முடிக்கும்பிரா, — னிருநாழி நெற்கொண்டு முப்பத் திரண்டறமு மெங்குமுட் டாதளக்கு, மிறைவிதிரு முலையமுத முண்டு ஞானம்பெருகு மெம்பிரா னினியபிள்ளைத், — திருநாம மெழுதுவார் கற்பார் படிப்பார் செகம்பொது வறப்புரந்து, தேவாதி தேவரும் பரவுசா யுச்சியச் சிவபதந் தெய்துவாரே. (௩)

உ

குமரன்றுணை.

திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ்.

காப்புப்பருவம்.

திருமால்.

பூமா திருக்கும் பசுங்களபப் புயபூ தரத்துப் பருகூ நன், போற் றக்ககன வெளிமுகட்டுப் புத்தேள் பரவப் பொதிகைமலைக்,—கோமா முனிக்குத் தமிழுரைத்த குருதே சிகனைக் குரைகடற்குக், குடக்கே குடிகொண் டிருந்தசெந்திற் குமரப் பெருமான் றனைக்காக்க,—தேமா மலர்ப்பொற் செழும்பொகுட்டுச் செந்தா மரையில் வீற்றிருக்குந், தேவைப் படைத்துப் படைக்குமுதல் சேரப் படைத்துப் படைக்கு முயி,—ராமா றளவுக் களவாகி யனைத்துந் தழைக்கும் படிகருதி, யளிக்கும் படிக்குத் தனியேசங் காழி படைத்த பெருமானே. (க)

சிவபெருமான்.

உடல்வளை குழவி மதியமு நதியு முரகமு மொழுகு செஞ்ச டைக் காட்டின, ருமைமுலை குழைய மருவிய புனித ருரைகொடு பரவு தொண்டரைக் காத்தவ, ருமிழ்திரை மகர சலதியில் விளையு முறுவிட வடவை கண்டமட் டேற்றின, ருடைமணி கனக பரிபுர முரல வொருமுறை பவுரி கொண்டமெய்க் கூத்தினர்,—வடவரை முறுகு நெளிநெளி நெளிய வரிசிலை யெனவொ ரம்பினைக் கோத்தவர், மறுவறு மழுவெ ணிலவெழு முறுவல் வளரொளி யிருள்வ னங்கெடப் பூத்தவர், மருவிய சகள வடிவின ரரிய வடகலை தமிழ்வ ளம்பெறச் சேர்த்தவர், மதுரையி லிறைவ ரிரசத பொதுவர் மணமலி பதயு கங் களைப் போற்றது,—மிடலிய மதுர வரியளி குமுறி யிடறிய களப குங்குமத் தாட்பொதி, யிமசல மொழுகு கனதன விரக மெழுகுற வணிதரு சிந்தையிற் சேர்ப்பனை, யிடிபடு முரசு முழவுட னதிர வெதிர்பொரு நிருதர் தம்படைப் போர்க்கள, மிடமற முதிய கழுதுக ணடன மிடவடல் புரியு மொய்ம்பனைத் தூற்றிய,—கடகட வழுவை முகமுள கடவுள் கருணையின் முதிய தம்பியைப் பாப்பதி, காமல ரணையில் விழிதுயின் மருவு களிபெறு குதலை மைந்தனைப் பூப்பயில், கடிகமழ் தருவி னிலைறமகள் புதிய கலவியின் முழுகு கொண்கனைப் போற்றிசெய், கலைமகள் பரவு குமரனை மதுர கவிதரு குரிசில் கந்தனைக் காக்கவே. (உ)

காப்புப்பருவம்-பாட்டுடைத் தலைவரைத் திருமால் முதலியோரால் காவல்புரிவிக்கும் பருவம்.

உமையவள்.

அரிபிரமர் சந்ததம் புகழ்ந்திடு பரசடைய நம்பர்பங் கின்மென் கொடி யகிலலோகமு மாதரத்தாற் படைத்தவ, ளரிவைமட மங்கை மென் கனங்குழை திரிபுரைய னங்குசங் கையம்பிகை யகளமாயனு பூதியிற்பூத் தபொற்கொடி, யபினவைமு குந்தர்தங் கைசுந்தரி பரக பண பகிகொண்டகங்கணி யமுதமூறிய பாடலுக்கேற் றசொற்குயி லறுசமய முங்கலந் தநின்றவண் மறவிபர வம்பரசண் டசங்கரி யமு கெலாமிது தானெனப்போற் றுசித்திர,—முரிபுருவ வஞ்சிதிங் கட ங்கிய திருமுகம லர்ந்தபைங் கருங்கிளி முதல்விபூரணி ஞானவித்தாய்க் கிளைத்தவண், முருகுவிரி கொந்தளம் பிறங்கிய மணிமவுலி மண்டலங் கொள் செஞ்சடை முடிமனோன்மணி வாலைவற்றுக் குணக்கடன், முகின்முலைசு மந்தொரு தசைந்திற மிறமெனம ருங்கிரங் கவின்புது முறுவலாடிய கோமளத்தாற் பெருத்தவள், முறைமுறைமு ழங்கு கின் றகிண்கிணி பரிபுரம லம்புசெம் பதம்புரை முளரிநாண்மலர் வாழ்வெனப்போற் றிநிற்குது,—முரியபதி னெண்கணங் களுநேசத்து மறைமுனிவ ரும்பரிந் துநின்கழ லுறுதிதானென நாவெடுத்தேத் திசித்தனு, முளமிகம கிழ்ந்துசெங் கரங்களின் மலர்கொடுவ ணங்கி யஞ் சலென்றமை யுடைமையாயரு ளீயெனக்காத் தநடப்பனே; யுடு முகட திர்ந்துவின் டலங்களு மரியபகி ரண்டமுமம்பி ளந்திட வுததூ தோகைம யூரனைத்தோற் றமுற்றெழு; முபரிட்ட மந்தரத் திரந்தனி லசைபயில டங்குமைம் புலன்களி லுவகைகூருமனோகரக்கூத் தனைப் பொரு,—தரியவர்நெ ருங்குசெங் களம்புகு நிசாசரர்து ணிந்தவேர்ப் பறந்தலை தழுவுபாடல்வி சாகனைப்பாற் கடற்றரு, தாளகசை செங் கருங் கனிந்திரை குறமகண்ம ணம்புணர்ந்த நின்புய சயிலமோகன மார்பனைத்தோட் டிதழ்ப்பொதி, தழைமுகைபு டைந்துவிண் டரும் பிய புதுநறவு சிந்துபைங் கடம்பணி தருணசீதள வாசனைக்கோட் டகத்துயர், சரவணபி லங்கவந் தகந்தனை முருகனைவி ளங்குசெந் தில் வந்திடு சமரமோகன வேலனைக்காத் தளிக்கவே. (3)

கணபதி.

கருணையின் வழிபடு முதியவ டனையுயர் கயிலையி னொருமறை யுய்த்த விதத்தினர், கனவட கிரிமிசை குருகுல மரபினர் கதைதனை யெழுதிமு டித்த கருத்தினர், கலைமதி யினையிரு பிளவுசெய் தொரு புடை கதிரெழ நிறுவிய வொற்றை மருப்பினர், கடுநகர் பரபனை கல

முறை கொடுங்கிறை களைகவர் வீரருள புத்தி யிருத்தவர்,—பொருவரு
மிமகிரி மருவிய பிடிபெற பொருகளி றெனமிரு பொற்பு விளைத்தவர்,
பொதியவிழ் நறுமலர் ரணைமிசை தமதுடல் புளகம் தெழுவொரு சத்தி
தரித்தவர், பொருவற விடுசுடர் முழுமணி யொளிவிடு பொலிவெழு
பவளம திர்த்த நிறத்தினர், புகர்முக முடையவர் குடவயி றுடையவர்
புகழிருசெவியினி றத்தி வழுத்துது,—யிருமையு முதவிய சிவபர
சமயமு மிமையவ ருலகுமளித்த களிப்பனை, யிசைமுரல் மதுகர
முறைமுறை பெடையுட னிடறிய முகைவிரி செச்சை வனப்பனை,
யிளகிய புளகித மலைமுலை யரமக ளிகலிய புலவிய கற்று மழுப்பனை,
யிகல்புரி பரசிசு சர்குல கலகனை யெனவழி யடிமைய டைக்கிடு
நட்பனை,—யருமறை யுரைதரு பிரமனை யமரரு மடிதொழ விடுசிறை
விட்டிரு நத்தனை, யடிவயர் கொடுவினை யகல்பட நட்பிடு மழுவிய
சரணம ளித்த வரத்தனை, யளவறு கலவியின் முழுகிய குறமக ளழ
கினி லொழுகியி ருக்கு மயக்கனை, மலையெறி திருநகர் மருவிய குமரனை
யறுமுக முருகனை நித்தல் புரக்கவே. (௪)

கலைமகள்.

அவனி பருகிய மாதிரு வுந்தியி லமரு மொருபிர மாவெனு மந்
தணன், னரிய சதுமறை நாவினி ருந்தவ ளைவில் பலகலை யோதிய ணர்ந்
தவ—டவள முளரியில் வாழ்வுபு ரிந்தவ டவள மணிவட மாலைபு னைந்
தவ, டவள வடிவுள வாணிசு மங்கலி தனது பரிபுர பாதமி றைஞ்
சுது,—ருவரி முதுதிடர் பாயவி டம்பொதி யுரகன் மணிமுடி தாள்
பட மந்தர, முலைய வெறிகமழ் மாருத மெங்கணு முதறு சிறைமயில்
வாகன னின்புற,—கவரில் வரிவளை சூல்கொடு தங்கிய கமட முது
கினி லேறமெ டுந்திரை, கதறு கடலலை வாய்முரு கன்பெறு கருணை
தருகவி மாலைவி ளங்கவே.

அரிகரபுத்திரன்.

வரியு நீள்சடை த்திடை மருட ராசித ரித்தவர், வளையு மீடுகருப்
புவின் மதுர வாளிதொ டுத்தவ,—ரரிய பூரணை புட்கலை யரிவை மாரி
ருபக்கமு, மெழுரு கூறும் கெழ்ச்சிய ரடிவி டாமல்வ ழுத்தது,—முரிய
நான்மறை நித்தது முறறி யாகவ ருத்திய, வுலகை யாசக வித்துறை
புதவு நாவலன் முற்றிய,—பரிய வாளைகு தித்தெழு பாலை சூழநகர்
க்கிறை, பழநி வேல வனைப்புகழ் பனுவன் மாலைத ழைக்கவே. (௬)

பகவதி.

விளையுஞ் செழுந்தே னுடைந்துமுகை விண்டொழுகு வெள்
ளா மரைப்பொருட்டு, வேதா முடித்தலை முடிக்குஞ் சடாடவியள்
வெங்கொலை மடங்கலேறி,—வளையும் பணிப்பிறை மருப்புக் குறங்க
ணொடு மகிடாசு ரன்சிரத்தில், வலியகட மிடுகுமரி பகவதிச ரோருக
மலர்த்தாள் வணக்கமுறுவா,—முளையுந் தடந்திரைத் திமிரதம ரக்
குழி புவாய்பரு மகரவேலை, யொலியிடுங் குண்டகழி சுவறிமே டாக
வே யுள்நறை கழித்ததிருதக்,—களையுங் களைந்துகல னணிபுலோ
மசைதன்மங் கலநா ணளித்தபெருமான், கடியமயில் வாகனப் பெரு
மா னுவந்தெனது கவிமாலை கொண்டருளவே. (௭)

காளி.

காயுங் கொடும்பகைத் தாருக விநாசனி கபாலிகங் காளிநீலி,
காளிமுக் கண்ணியெண் டோளியா தாவிரி சுவரிகலை யூர்திகன்னி,—
பாயுந் தழற்புகைப் பாலைக் கிழத்திவெம் பன்னாம் பணத்திமோடி,
பரசுதர னுடனட மிடுசூலி சாமுண்டி பாதார விந்தநினைவா,—மா
யும் பெரும்பனுவ லாசுகவி மதுரகவி யரியசித் திரகவிதைவித், தார
கவி யிடுமுடிப் புக்குள மயங்காம லடியவர்க் கருள்குருபரன்,—தேயும்
பணிப்பிறைத் திருநுதற் கடன்மகளிர் தெண்ணிலத் திலங்கொழித்துச்
சிற்றில்விளை யாடல்புரி யுந்திருச் செந்தில்வரு சேவகன் புகழ்பா
டவே. (௮)

ஆதித்தர்.

வெள்ளைப் பெருந்துளி யிறைக்கும் பெருங்காற்று வெண்டிரை
யின் மூழ்கியெழு, வெம்புரவி யொற்றையாழித்தடந் தேரேறி வேத
பா ரகரிறைஞ்சப்,—பள்ளக் கடற்றிரை கலக்கியூழியினிருட் படல
முழு துந்துடைத்துப், படர்சுடர் விரித்துவரு பன்னிரு பதங்கர்
பொற் பாதமலர் சென்னிவைப்பா,—முள்ளக் களிப்புறு வரிவண்டு
பண்பாட வோதிம நடிக்கமுள்வா, யுட்குடக் கூன்வலம் புரிமுத்த
முமிழுநீ ரோடையிற் குருகுகாணக்,—கள்ளக் கருங்கட் சிவந்தவாய்
வெண்ணகைக் கடைசியர் றுளைச்சியருளங், களிகூரு மல்வா யுகந்
தவே லனையெங்கள் கந்தனைக் காக்கவென்றே. (௯)

முப்பத்துமுக்கோடி தேவர்கள்.

பொருவி லாடு மக்கற்கு நீடு பொருளை யோதி யொப்பித்த சிலர்
புணரி தோய்க கர்க்குச்ச காயர் புலமை நீதி யொப்பற்ற கேள்வர்
குதலை வாய்மொ ழிச்சத்தி பாலர் குருதி பாய்க திர்க்கொற்ற வேலர்
குறவர் பாவை சொற்சுத்தின் மோகர் குமரர் காவ லுக்கொத்த கால
மதுர கீத விற்பத்தி வாணர் மருட வேணி முத்தூத்த ரிகர் [ன்
மவுன மோன பத்திக லாபர் மனையில் வாழ்வு வைப்புற்ற நேயர்
முதுமை யான சொற்பெற்ற நாவர் முனிவர் வேள்வி யிச்சிக்கு மூணர்
முடிவி லாத கற்பத்தி லூழி முதல்வர் தேவர் முப்பத்து மூவரே. ()

காப்புப்பருவம் முற்றிற்று.

இரண்டாவது: செங்கீரைப்பருவம்.

வெங்காள கூடவிட மொழுகுபற் பகுவாய் விரித்துமா சுணமு
மிழிந்த, வெங்கதிர் மணிக்கற்றை யூழியிரு ளைப்பருக வேய்முத்
துதிர்ந்துசொரியக்,—கங்காளர் முடிவைத்த கங்கா நதிக்கதிர் கடுப்
பக் குறுங்கவைக்காற், கவரியின் பருமுலைக் கன்றிறர் தொழுகுபால்
கதிர்வெயிற் படமுரிந்து,—மங்காம விரசதத் தகடெனச் சுடர்விட
மலைக்குறவர் கண்டெடுத்து, வண்டினைக் கெருவிடுஞ் சாரலிற் கரிய
குற மதனிருந மூசலாடச்,—செங்காவி விழிபருகு பன்னிருகை
மேகமே செங்கீரை யாடியருளே, திரையெறியு மலைவா யுகந்தவடி
வேலனே செங்கீரை யாடியருளே. (௧)

கறைகொண்ட முள்ளெயிற் றுத்துத்தி வரியுடற் கட்செவிப் பஃ
றலைநெடுங், காகோ தரச்சிர நெருக்கவட பூதரங் கால்சாய மகரமெ
ழியுந்,—துறைகொண்ட குண்டகழ்ச் சலராசி யேழுஞ் சுருக்கெழ
முறுக்கெயிற்றுச், சூரன் பயங்கொளச் சந்தரூ ரியர்கள்செந் தூளி
யின் மறைக்கிடத்தின்,—பொறைகொண்ட சுராமருவு மண்டகோ
ளகைமுகடு பொதிரொழிய திருக ருட்கப், பூச்சக்ர வாளகிரி நெடுநெ
டென வச்சிரப் புருகூதன் வெருவிவெண்டுக்,—திறைகொண் டளக்க
வரு மயிலேறு சேவகா செங்கீரை யாடியருளே, திரையெறியு மலைவா
யுகந்தவடி வேலனே செங்கீரை யாடியருளே. (௨)

ஏர்கொண்ட பொய்கைதனி னிற்குமொரு பேரசி னிலைகீழ்
விழிற்பறவையா, மிதநிற்க நீர்விழிற் கயலாமி தன்றியோ ரிலையங்கு
மிங்குமாகப்,—பார்கொண்ட பாதியும் பறவைதா னாகவப் பாதியுஞ்
சேலதாகப், பார்கொண் டிழுக்கவது நீர்கொண் டிழுக்கவிப் படிகண்ட
திசயமென,—நீர்கொண்ட வாவிதனி னிற்குமொரு பேழ்வாய்
நெடும்பூத மதுகொண்டுபோய், நீள்வரை யெடுத்தநன் கிழ்வைக்கு
மதாகண்டு நீதிறான் மங்காமலே,—சீர்கொண்ட நக்கீ ரனைச்சிறை
விடுத்தவா செங்கீரை யாடியருளே, திரையெறியு மலைவா யுகந்தவடி
வேலனே செங்கீரை யாடியருளே. (௩)

கந்தமலி நெட்டிதழ்க் குறுமுகைப் பாசடைக் கமலமல ரைக்க
றித்துக், கடைவாய் குதட்டும் புனிற்றெருமை நன்குழக் கன்றுக் கிர
ங்கியோடிக்,—கொந்தவிழ் கருங்குவளை யோடைத் தடாகக்கரம்பைக்
கடந்துசெந்நெற், குலைவளைக் கும்பழக் குலைமடற் கதலிக் குருத்தற
மிதித்துமீளப்,—பந்தரிடு சூலடிப் பலவுதரு முட்குடப் பழமொரா மிட
றிவெள்ளைப், பணிலஞ் சொரிந்தநித் திலமுறுத் தப்பதை பதைத்து
முலை பாலுடைந்து,—சிந்தமக ராழியலை யொடுபொருத செந்தூர
செங்கீரை யாடியருளே, செந்நிறக் குடுமிவெண் சேவற் பதாகையாய்
செங்கீரை யாடியருளே. (௪)

வீறுட வெங்கதிர்ப் புகர்முகக் கூரிலை மிகுத்தவே லுறைகழித்து,
வெவ்வாய் பிளந்துசிறு கட்பே ரிடாகினிகள் விளையாட வெங்கவந்த,—
மாறுட முதுபகட் டுயர்பிடர்க் கரியநிற மறலியிரு கைசலித்து, மன்
முட வுடல்விழிக் குரிசில்கொண் டாடவெடு மாகமுக டிடை வெளிய
றப்,—பாறுட வம்பொற் கிரீடம் பரித்தலகை பந்தாட விந்தாடவிப்,
பாலைக் கிழத்திமுக் கவரிலைச் சூலம் பசுங்கொழுங் குருதிவெள்ளச்,—
சேறுட வென்றுசிறு முறுவலா டுங்குமர செங்கீரை யாடியருளே,
செந்நிறக் குடுமிவெண் சேவற் பதாகையாய் செங்கீரை யாடியருளே.

மகரசல ராசிதனில் வருணன்வந் தடிபரவி வைத்தமணி முத்து
மாலை, வடபூ தரத்தில்விழு மருவியென வுத்தரிக மார்பினூ டாடமன்
னுக்,—தகரமலி ரிதழ்முருகு கொப்புளிக் குஞ்சிகைத் தமனியச் சுட்டி
யாடத், தவளமுழு மதியமுக னிலியெனத் திருமுகத் துரவெயர்
வாடமுழுதும்—பகரவரு மறைமுனிவர் கொண்டாட மழுவாளி
பங்காளி திருமுலைப்பால், பருகக் குழைந்துசிறு பண்டியுந் தண்டை
யும் பாதமும் புழுதியாடச்,— சிகரவரை யரமகளிர் சிறுமுறுவ லாட
நீ செங்கீரை யாடியருளே, செந்நிறக் குடுமிவெண் சேவற் பதாகை
யாய் செங்கீரை யாடியருளே. (௫)

வேறு.

இந்திர னஞ்சலி யம்பர மம்படி யிங்கே வந்தார்கா
ணிந்திரை யுங்கர சங்கமு குந்தனு மிந்தா வந்தார்பா
ரந்தண னுங்கலை மங்கையு நின்சர ணஞ்சேர் கின்றார்போ
யண்டரு டன்பல தொண்டர்ப ணிந்தன ரஞ்சே லென்றாளாய்
முந்துத டந்திரை யுந்துவ லம்புரி மொண்டே கொண்டேக
முன்றிரு சுந்தர னங்கணு மிழ்ந்திட முந்தூர் நந்தாருஞ்
செந்தில்வ ளம்பதி வந்தரு ளுங்குக செங்கோ செங்கீரை
தென்றன்ம ணங்கமழ் குன்றபு ரந்தவ செங்கோ செங்கீரை. (எ)

வரைபொரு புளகித மலைமுலை யரிவையர் வந்தார் பந்தாட
மறிகட லிறைதரு நவமணி வடமது வண்டார் தண்டார்பா
ருரைபொரு கவிஞரு முனிவரு மமரரு முன்போ துண்டோதா
துரையெமர் வழிவழி யடிமையி துளதென வன்பா லன்பானூர்
கரைபொரு கடறிட ரெழுமயின் மிசைவரு கந்தா செந்தூரா
கழிமட வனமொடு முழுகுரு கொருபுடை கண்சாய் தண்கானற்
றிரைபொரு திருநகர் மருவிய குருபர செங்கோ செங்கீரை
செருவினி லெதிர்பொரு நிசிசரர் தினகர செங்கோ செங்கீரை. (அ)

வேறு.

உரைசெய் வளரயர மகளிர் முறைமுறை யுன்பேர் கொண்டாட
வுலகு மிமையவ ருலகு மரகர வென்றோதா மென்றாட
வரைசெய் வனமுலை மகளி ரெழுவரும் வந்தே பண்பாட
மலய முனியொடு பிரம முனிதொழ வந்தார் கண்டாயே
கரையின் மணலிடு கழியி னெடியக லஞ்சே ருஞ்சார்பிற்
கரிய முதுபனை யடியில் வலைஞர்க ளஞ்சூழும் மென்கானிற்
றிரையில் வளைதவழ் நகரில் வருகுக செங்கோ செங்கீரை
செருவி னிசிசர திமிர தினகர செங்கோ செங்கீரை. (கூ)

வேறு.

குரமுகக விண்ட கொட்டிலைத் தாழை யடியில்வி ளைந்த முட்
குடக் காயி லினிய குவளை யோங்டயில் விண்டோ ருந்தேவர், குணா
லைபு ரிந்த கற்பகச் சோலை நிழலிடு பந்த ரிட்டபொற் றாணி லவர்
குடிலில் வாசலி னின்றே டுந்தோணி, குழுவொடு வந்து விட்டிலைப்
பாறு துறைமணல் வண்ட லிட்டுவற் றுத பழைய குமிழி வாயில்

ண்டா னந்தாவுங், குரவிரு ருங்கு மெக்கரிற் கான வழுநர்ப ரம்பி
னெற்குலைத் தாளி லிளைய குமர ரூர்சிறு தின்றோர் மென்காவி,—சிறு
குருகு ரும்பை யொத்தபொற் பார நகிலரி ருந்து வைத்தலைவப் பூச
லருகி லிளைஞ ரூடலில் வண்டார் தண்டாரி, லெவருமம கிழ்ந்த சித்தி
ரச் சாலை நிழன்மணி துன்று தெற்றியிற் றேவர் மகுட மிடறு பூமி
யில் வங்கா ளஞ்சின, மென்மொழி தங்கு மற்புதத் தீவில் வணிகரின்
வந்த மிக்கபட் டாடை வகையி லெறியு மாரவ டம்பூ ணும்பூணி,
விரைகவர் ந்ண்டு முக்குளித் தூறு மளறுவி டங்கில் வித்துவித் தாரத்
தூரவி லெழுமுள் வேலியில் வெங்கா மன்காணூ,—முதுகவி ளைந்து முற்றி
முத் தேறு கரியக ரும்பு சுற்றுசிற் குலை நிலையின் முதிய தாழியில் வெந்
தா றும்பாகின், முடியையவி ளம்பி லைவத்துமுட் டாது கடைசித ருகின்
றகட்டுப் பாளை முதுகின் முளைகொள் சாலியின் மென்பூ கந்தோறு
முருகுது ளும்பு கொத்துடைப் பாளை சிதறியு திர்ந்த பித்திகைப் பீட
மறுகின் முதல்வர் தேவியர் பந்தா டுங்காவின், முனிவர்வி ரும்பு கற்பு
டைப் பான்மை மகளிர்கள் மொண்டெ டுத்தகைச் சாலின் மடுவின்
முழுகு மேதியில் வம்பே செஞ்சேல்பாய்,—செறுவில்வி ளைந்த நெற்
குலைக் காயி னுழவி னுடைந்த கட்டியிற் பார மதகு செறியு மேரியின்
மண்டு கம்பானல், செருமிமு ழுங்கு கற்பிளப் பான புடையின்வி
ழும்பு னற்பெருக் கான தமர திமிர வாவியி லெங்கே யுந்தாவுந், திரை
யில்வ லம்பு ரிக்கணத் தோடு பணிலமு ழங்கு பட்டினக் காவற் றிகிரி
முருக வேலவ செங்கோ செங்கீரை, தினகர ரஞ்ச விட்புலத் தேவர்
மகபதி முன்கு வித்த வித்தார மவுலி திறைகொள் சேவக செங்கோ
செங்கீரை. (௰)

செங்கீரைப் பருவம் முற்றிற்று.

ஆகத்திரு விருத்தம் - உ௰.

செங்கீரைப்பருவம் - செவ்வியமதலைச் சொற்களைப்பேசும் பருவம். கீர் - சொல். இப்பருவத்தின் செயல் - ஒரு காலைமடக்கி ஒரு காலைநீட்டி இரு கைகளையும் நிலத்தி லூன்றித் தலைநிமிர்த்து முகமசைய வாடுதல்.

மூன்றாவது: தாலப்பருவம்.

அடரும் பருவ மணிமுடி யமரரு மமரர்க் கிறைவனுநீ
டளகை ராஜயு மீரோன் பதின்மரு மருமறை முனிவோருஞ்
சுடருந் தருமிரு சுடரும் பரவிய தோகைய ரெழுவருமுந்
தொழின்முக் கடவுளு மவரவர் தங்குறை சொல்லித் துதிசெய்தார்
படருங் கிரணப் பரிதி கெடுங்கதிர் பாயும் பகிரண்டம்
பழுமர மெல்லைப் பனையென நிமிரும் பாழிக் கைநீட்டித்
தடவும் புகர்முக தந்திக் கிளையாய் தாலோ தாலேலோ
சந்த மணங்கமழ் செந்திற் பதியாய் தாலோ தாலேலோ. (௧)

கங்குல் பொருந்திய குவளைக் குழியிற் கழியிற் பழனத்திற்
கரையிற் கரைபொரு திரையில் வளைந்த கலைக்கால் வரிவலவன்
பொங்கு குரம்பரி வாடையி னெந்து பொருதே வெயில்காயும்
புளினத் திடரிற் கவரிற் றரவிற் புன்னை நறுந்தாதிற்
றொங்கு விரிந்த மடற்பொதி தாழைக் குறமுட் கரியபகங்
கோலச் சிறிய குடக்கா யிற்புயல் தொழுதுஞ் செய்குன்றிற்
சங்கு முழங்கிய செந்திற் பதியாய் தாலோ தாலேலோ
சமய விரோதிக டிமிர திவாகர தாலோ தாலேலோ. (௨)

வேறு.

கண்டே றெழுகு மொழிமடவார் காமங் கொழுதிச் சுருண்டிருண்டு
தமரக் களிவண் டடைகிடந்து தழைத்து நெறிந்த குழற்பாரங்
கொண்டே மெலிந்த நல்லாறு குரும்பைக் களப முலைசுமந்து [லைக்
கொடிபோன் மருங்குல் குடிவாங்கக் குழையிற் குதித்த விழிக் கய
கண்டே வெருவிக் கயன்மறுகக் கனக வெயின்மா ளிகையுடுத்துக்
ககனந் தடவுங் கோபுரத்தைக் கருதி வடவெற் பெனக்கதிரோன்
றிண்டேர் மறுகுந் திருச்செந்தூர்ச் செல்வா தாலோ தாலேலோ
தெய்வக் களிற்றை மணம்புணர்ந்த சிறுவா தாலோ தாலேலோ.

தாலப்பருவம் - தாலாட்டுப்பருவம். தாலாட்டு - ஓர்வலையாக நாவசைத்துப் பாடுப்பாட்டு.

பாம்பா லுத்தி தனைக்கடைந்து படருங் கொடுங்கார் சொரிமழைக்கு
பரிய வரையைக் குடைகவித்துப் பசுக்கள் வெருவிப் பதறுமற் [ப்
காம்பா லிசையின் றொனியழைத்துக் சதறுந் தமரக் காளிந்திக்
கரையி னிரைப்பின் னொடந்த கண்ணன் மருகா முகையுடைக்கும்
பூம்பா சடைப்பங் கயத்தடத்திற் புனிற்றுக் கவரி முலைசெரித்துப்
பொழியு மமுதந் தனைக்கண்டு புனலைப் பிரித்துப் பேட்டெகினந்
தீம்பால் பருகுந் திருச்செந்தூர்ச் செல்வா தாலோ தாலேலோ
தெய்வக் களிற்றை மணம்புணர்ந்த சிறுவா தாலோ தாலேலோ.

வேறு.

மங்கல மங்கலநா லெங்குமோ தித்தனர்காண் வானோ ரேனோர்
போய், வந்துவ ணங்கினர்மே லந்தர துந்துபிகேள் வாரு டாடாதே,—
தொங்கைசு மந்திடைநா லஞ்சும ணங்கையார் கூட ஆடாரோ,
கொண்டவ ரந்தருவா யண்டர்பெ ருந்தவமே கோமா னுமாநீ,—செங்
கம லந்தனிலே பைங்குழ லங்களிலே செல்பாய் வானுடா, தென்ற
லு டன்றமிழ்ந்தேர் தெனபொதி யம்பயில்வாழ் தேனூர் தார்மார்பா,—
சங்குவ லம்புரிசூழ் செந்திலவ ளம்பதியாய் தாலோ தாலேலோ, சங்
கரி தன்குமரா மங்கையர் தங்கணவா தாலோ தாலேலோ. (௫)

வேறு.

மரகத வடிவஞ் செங்கதிர் வெயிலால் வாகாய் வாடாதோ
மதிமுக முழுதுந் தண்டுளி தரவே வார்வேர் சோராதோ
கரமல ரணைதந் தின்புறு மடவார் காணு தேபோமோ
கனமணி குலவுங் குண்டல மசைநூ றோடே போனல்லார்
பொருமிய முலைபுந் தந்திட வுடனே தாய்மார் தேடாரோ
புரவல ரெவருங் கண்டடி தொழுவார் போதாய் போதாநீள்
சரவண மருவுந் தண்டமிழ் முருகா தாலோ தாலேலோ
சதுமறை பரவுஞ் செந்திலை யுடையாய் தாலோ தாலேலோ. (௬)

வேறு.

கூருமிகல் சாய்த்த வீரா தீரா தார்மார்பா
கூறுமியல் பார்த்துன் மேலே யாரார் பாடாதார்
மேருவரை நாட்டி வாழ்வார் வானு டாள்வார்போல்
வேலையென மீட்டுன் மேலே வீழ்வார் சூழ்வார்பா
ரருமிரை பார்த்து நீணீ ரூடே தாராமே
யானைகழி நீக்கி மேலே நாவா யோடேசேல்
சேருமலை வாய்க்கு நாதா தாலோ தாலேலோ
தேவர்சிறை மீட்ட தேவா தாலோ தாலேலோ. (௭)

வேறு.

அரைவடமுந் தண்டையு மின்புரை யரைமணியுங் கிங்கிணி யுங்கல ணணியு மாரு வீரர்சீ, ரறுமுகமுந் தொங்கல்சு மந்தபன் னிரு காமுங் குண்டல முங்குழை யழகு மாரார் பாராதார்,—விரைபொரு மென் குஞ்சிய லம்பிய புழுதியுமங் கங்குழை பன்டியு மெவியு மேலே வீழ்வார்பார், வெருவிதமுங் கொண்டுத வழ்ந்திடி லவரவர்தங் கண் களப மெய்மிழை விளையு மேதே னேகாதே,—வரைமணியுந் தங்கமு மொன்றிய கனபரியங் கந்தனி லின்றுகண் வளர வாராய் வாழ்வே நீ, மணிகையுங் கொண்டுறு யின்றிலை விரலமுதங் கொள்ளுகி டந்தனை மதுர மாய்நீ பேசாயோ,—திரைபொருதென் செந்திலவ ளம்பதி வள ரவருங் கந்தசி வன்பெறு சிறுவா தாலோ தாலேலோ, திசைமுகனுஞ் சங்கரி யுஞ்சது மறையுமிறைஞ் சும்பரை யம்பிகை சிறுவா தாலோ தாலேலோ. (அ)

வேறு.

அரவுகிறு பிறையிதழி திரிபதகை பொதிசடிலர் பாலா வேலா தே, ரருணவொளி விரவிசுழ விமகிரியி லரிவைபெறு வாழ்வாய் வாழ் வோனே,—குரவருள் மகிழ்வுயர் குருவடிவு தருபெருமை கோடாய் தாடாளா, குமரகுரு பரமுருக குதலைமொழி தெரியவுரை கூறாய் மாறாதே,—யிரவலரு முனிவர்களு மிமையவரு முனதடிமை யாமே யாமேநீ, யெமைமுனியி லொருதுணையு மிலையடிமை யடிமையென வீழ்வார் சூழ்வார்பார்,—பரசமய குலகலக சிவசமய குலதிலக தாலோ தாலேலோ, பணிலமுமிழ் மணியையலை யெறியுநகர் வரு கடவுள் தாலோ தாலேலோ. (கூ)

வேறு.

பங்கயன் முதலோ ரிந்திர னிமையோர் பாரோ ரேனோர்பார்
பண்புட னுனையே சிந்தையி னினைவார் பானீ மால்கூராய்
வெங்கட கரிரு மெண்டிசை யுறைவார் வீறுள் காறாதே
மின்பரி புரதாள் பொன்புரை முடிவேல் வேய்வார் வீறுலே
செங்கனி மணிவாய் தங்கிய நகைதா தேவா சீறாதே
தெண்டிறன் முருகா தண்டமிழ் விரகா சேரார் போரேறே
சங்கரி மருகா சங்கரி சிறுவா தாலோ தாலேலோ
சந்தத மியறேர் செந்திலை யுடையாய் தாலோ தாலேலோ. (ய)

தாலப்பருவம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௩ய.

நான்காவது: சப்பாணிப் பருவம்.

பரவரிய நவமணி யழுந்துகல னுக்கழகு பாலித்து வீறுபெற்ற, பன்னிரு புயங்குலுங் காமனீள் குழைதொறும் பருவயிர குண்டலங் க,—ளிரவியொளி மட்கநின் றசையாம லுழுதொழுகு மிந்துமுக மண் டலத்தி, லெழுதரிய திருநுதற் புண்டரங் குறுவெயர் விறைக்கச் சிதைந் திடாமற்,—கரகமல மலர்விரல் சிவப்புறு மற்கடக கங்கண மொலித்திடாமற், கழிவண் டலம்புங் கருங்குவளை யோடைசூழ் கழி தொறுங் கன்னலூறுந்,—தரளமுழு மணிநிலவு தருசெந்தில் வேலவா சப்பாணி கொட்டியருளே, சமரமுக ரணவீர பரசமய திமிராரி சப் பாணி கொட்டியருளே. (க)

அண்டர்தந் துயரொழித் தனமென்று கொண்டாடி யாவலங் கொட்டமன்னு, மயிராணி கலவியமு துண்டன மெனத்தேவ ரசிரு கரங்கள்கொட்டத்,—துண்டவெண் பிறைபுரை யெயிற்றவெஞ் சூரு ளந் துண்ணெனப் பறைகொட்ட நீள், சுருதியந் தணரிடந் தொறுமங் கலப்பெருந் தூரியங் கொட்டமுட்டப்,—பண்டரு பெருங்கவிப் புல மைக்கு நீசொன்ன படிதிண்டி மங்கொட்டவெம் பகைநிசா சரர் வளம் பதிமுழுது மெய்தலம் பறைகொட்ட வெள்வளைதருந்,—தண் டரள மலைமொண்டு கொட்டுநக ராதிபா சப்பாணி கொட்டியருளே. சமரமுக ரணவீர பரசமய திமிராரி சப்பாணி கொட்டியருளே. (உ)

பௌவமெறி கடலாடை யுலகிலொரு வேடுவன் பறவைக்கு நிறைபுகுந்த, பார்த்திவன் பாவையு மியற்குலச் சிறையும் பணித் தருள மதுரைக்குத்,—தெவ்வரிடு திருமடத் தெரிசெழிய னுடலுறச் சென்றுபற் றுமெவர்க்குந், தீராத வடவையனல் வெப்புமுது கூனுந் திருத்தியொரு வாதுவென்று,—வெவ்வழலி லெழுதியிடு மேடும் பெருக்காற்று விட்டதமி ழேடுமெதிர் மேகாம லெதிரே குடக்கேற வெங்கழுவில் வெய்யசமண் மூகரேறச்,—சைவநெறி யீடேற வருக வுணி யக்குழவி சப்பாணி கொட்டியருளே, சமரமுக ரணவீர பர சமய திமிராரி சப்பாணி கொட்டியருளே. (ங)

சப்பாணிப்பருவம் - இருகரங்களையும் ஒருங்குசேர்த்துக் கொட் டும்பருவம்.

பைந்தா டமைச்சிறைக் கான்வா ரணமருவு பந்தரிடு முல்லை வேலி, பாயுமுட் பணைமருப் பேறுதழு விபுமுடைப் பாலுறு மேனி மடவார்,—கொந்தார் குரும்பையிள வனமுலை முகக்கோடு குத்தக் குருந்தொசித்துங், குறுங்கழைத் தண்டந் தனிற்சிறு துணைக்கருவி குன்றுருக நின்றழைக்குஞ்;—செந்தா மரைக்கைவிரல் கொடுபுதைத் தஞ்சுருதி தெரியவிரன் முறையில் விட்டுந், தேனுவின் பிறகே திரிந்துங் கவுட்குழி திறந்துமத மாரிசிந்துந்,—தந்தா வளந்தனக் குதவுதிரு மான்மருக சப்பாணி கொட்டியருளே, தரளமெறி கரையில்வளை தவழ்செந்தில் வேலவா சப்பாணி கொட்டியருளே. (௪)

கார்கொண்ட பேரண்ட கூடமோ ரேழுநீ கற்பிக்கு மந்த்ரசாலை, கற்பதா ருவுநின் புயத்தினுக் கணிமாலை கட்டவளர்நந் தனவனஞ்;—சீர்கொண்ட புருகூத னங்கேவர் குழுவுநின் றிருநாம மறவாதபேர், சிகரகன காசலமு முனதுதிரு வாபரண சேர்வைசெய் பேழைகடவீர்,—போர்கொண்ட வேலின் புலால்கழுவு நீரேழு பொழிலுமத் தனைநிவுமோர், பொலிவிலுட னேநின் கலாபமயில் வையாளி யோய்மீளும் வீதியெனவே,—தார்கொண்ட மணிமார்ப செந்தில்வடிவேலனே சப்பாணி கொட்டியருளே, தரளமெறி கரையில்வளை தவழ்செந்தில் வேலவா சப்பாணி கொட்டியருளே. (௫)

கவளமத வெம்புகிலை யுலருபர வப்ரபைகொள் கைத்தா மரைக்கடகபூண், கதிரொளி விரிக்கவளர் சிகையினிடு சுட்டிமிசை கட்டாணி முத்தொளிரவே,—பவளவிதழ் புத்தமுத மொழுகுமத லைக்குதலை * பற்பாதி சொற்றெரியவே, பரிபுர மொலிக்கவரு குறுநகை யெழுப்பியிடு பைச்சேட னுச்சிகுழிபா,—யுவளக மனைத்துமின வரிவளை முழக்கவெடி யுற்றேபெ ருத்தகயல்போ, யொருபுடை குதிக்கவரி யலவனளை யிற்புகுத வுப்பூறு நெட்டகழிதோய்,—தவளமணி முத்தையலை யெறியுநக ருக்கதிப சப்பாணி கொட்டியருளே, சருவிய புறச்சமய விரதியர் குலக்கலக சப்பாணி கொட்டியருளே. (௬)

வேறு.

கருதிய தமனிய மணியரை வடமிடு கட்டுவ டந்தோடுங்
கழலிடு பரிபுர மொலியெழ மணியுமிழ் கைக்கட கப்பூணு
மிருசுட ரொளிபெற மருவிய தளர்நடை யிட்டும திப்பாக
வெழுமதி புரைதிரு முகமலர் குறுவெய ரிட்டுவ ரத்தாமந்

* பப்பாதியெனவும் பாடம்.

சொருகிய நறுமலர் முகையவிழ் சிகையிடு சுட்டிது தற்றுழுந்
தொழுதுனை வழிபடு மடியவ ரிளையவர் சொற்படி தப்பாமற்
குருமணி யலையெறி திருநக ரதிபதி கொட்டுக சப்பாணி
குருபர சரவண பவசிவ மழவிடை கொட்டுக சப்பாணி. (௭)

வரைபுரை புயமிசை யிடுதொடி யணிகலன் மற்றுள முத்தார
மணிமுடி குழையிடு மிருசிகை யழகெழ மைச்சுவ ளைப்போதின்
விரைசெறி குழலியர் செவிலிய ரவரவர் மிக்கவி ருப்பானார்
விபுதரு முனிவரு முனதடி பரவியுன் வெற்றியு ரைப்பார்சி
ரரைமணி யுடைமணி கணகண கணவென வத்திமு கத்தானு
மரிபிர மனுமுமை கணவனு மனமகி ழுற்புவி ளைத்தார்பார்
குரைகட லலையெறி திருநக ரதிபதி கொட்டுக சப்பாணி
குருபர சரவண பவசிவ மழவிடை கொட்டுக சப்பாணி. (௮)

வேறு.

கந்தத் தக்குரு னர விந்தத் தனிக்கடவுள் கற்பாயெனச் சுருதி நூல், கண்டித் துரைத்திடவு மிந்தக் கரத்திலுரை கற்பா லுரைத்தியெனவே,—யந்தப் பொருட்பகுதி யந்தத் தினைப்பகரு மப்போவெ றுத்துமுனிவா, யஞ்சத் திருக்குமய னஞ்சச் சிறைக்குளிடு மப்பா சிறக்குமமலா,—பந்தப் பிறப்பொழிய வந்தித் திருக்குமவர் பற்றுக நிற்கு முதல்வா, பண்டைக் குடத்திலுறு முண்டச் சிறுத்தமுனி பற்றுசை யுற்றுமகிவாழ்,—சந்தப் பொருப்பிறைவ செந்திற் பதிக்குமர சப்பாணி கொட்டியருளே சங்கத் தமிழ்ப்புலவ துங்கக் கொடைக்குமர சப்பாணி கொட்டியருளே. (௯)

வேறு.

புதுமலர் சிதறிம கிழ்ந்து வானவர் பொற்றுளி ளைப்ரவவே, புகலரு மிசைதெரி தும்பு ராதியர் புக்காத ரிக்குவரவே,—மதுகர மிடறிய தொங்கன் மாலிகை மற்பூத ரத்தசையவே, மணியொளி வயிரம லம்பு தோள்வளை மட்டாய்நெ ருக்கமுறவே,—சதுமறை முனிவர்க டங்க ளுயக சப்பாணி கொட்டியருளே, சரவண பவகுக செந்தில் வேலவ சப்பாணி கொட்டியருளே. (௰)

சப்பாணிப் பருவம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் (௪௰)

ஐந்தாவது: முத்தப்பருவம்.

கத்துந் தரங்க மெடுத்தெறியக் கடுஞ்சூ லுளைந்து வலம்புரிகள், கரையிற் றவழ்ந்து வாலுகத்திற் கான்ற மணிக்கு விலையுண்டு,—தத்து ங்கரட விகடதட தந்திப் பிறைக்கூன் மருப்பில்விளை, தரளந் தனக்கு விலையுண்டு தழைத்துக் கழுத்து வளர்ந்தமணிக்,—கொத்துஞ் சுமந்த பசுஞ்சாலிக் குளிர்முத் தினுக்கு விலையுண்டு, கொண்ட றருநித் திலந்தனக்குக் கூறுந் தரமுண் டுன்கனிவாய்,—முத்தந் தனக்கு விலையில்லை முருகா முத்தந் தருகவே, முத்தஞ் சொரியுங் கடலலைவாய் முதல்வா முத்தந் தருகவே. (௧)

வளைக்குந் தமரக் கருங்கடலின் வளைவாய் புகுத்த மணிமுத்தும், வடிவேற் கறைபட் டுடல்கறுத்து மாசுபடைத்த மணிமுத்தந்,—துளைக்குங் கழையிற் படுமுத்தந் துளபத் தொடைமா லிதழ்பருகித், தூற் றுந் திவலை தெறித்தமுத்தஞ் சுரக்கும் புயலிற் சொரிமுத்தந்,—திளைக்குங் கவன மயிற்சிறையிற் சிறுதாட் பொதிந்தூற் றுமுத்தஞ், செந் நென் முத்தங் கடைசியர்கா றேய்த்த முத்தஞ் செழுந்தண்டேன்,—முளைக்குங் குமுதக் கனிவாயான் முருகா முத்தந் தருகவே, முத்தஞ் சொரியுங் கடலலைவாய் முதல்வா முத்தந் தருகவே. (௨)

கலைப்பால் குறைத்த பிறைமுடிக்குங் கடவு ளுடலின் விளைபோ கம், கனலி கரத்தி லளிக்கவந்தக் கனலி பொறுக்க மாட்டாமன்,—மலைப்பால் விளங்குஞ் சரவணத்தில் வந்து புகுத வோராறு, மடவார் வயிறு சூலுளைந்து மைந்த ரறுவர்ப் பயங்கெடுப்பக்—கொலைப்பால் விளங்கும் பரசுதரன் குன்றி லவரைக் கொடுசெல்லக், கூட்டி யணைத்துச் சேரவொரு கோல மாக்கிக் கவுரிதிரு,—முலைப்பால் குடித்த கனிவாயால் முருகா முத்தந் தருகவே, முத்தஞ் சொரியுங் கடலலை வாய் முதல்வா முத்தந் தருகவே. (௩)

கத்துங் கடலி னெடும்படவிற் கழியிற் கழுநீ ரிற்சுழியிற், கான்ற கரையிற் கரைநிகழுங் கைதைப் பொதும்பிற் சுரும்பினங்க,—டத்து ங்கமலப் பசும்பொருட்டிற் சாலிக் குலையிற் சாலடியிற், றழைக்குங் கதலி யடிப்படவிற் றழைவைத் தழுத முதுகுரம்பைக்,—குத்துந் தரங் கப் புனற்கவரிற் குவளைத் தடத்தின் மடைவாயிற், குடக்கூன் சிறு

முட் பணிலமொரு கோடி கோடியீற் றலைந்து,—முத்தஞ் சொரியுங் கடலலைவாய் முதல்வா முத்தந் தருகவே, மொழியுஞ் சமய மனைத்தினுக்கு முதல்வா முத்தந் தருகவே. (௪)

வயலுஞ் செறிந்த கதலிவன மாடஞ் செறிந்த கதலிவனம், மலர்க்கா வெங்குந் தேனினிரை மாலை தோறுந் தேனினிரை,—புயலுஞ் செறிந்த கனகவெயிற் புடையே பரந்த கனகவெயில், பொதும்பர் தோறு மோதிமமென் புளினந் தோறு மோதிமஞ்செங்,—கயலுஞ் செறிந்த கட்கடையார் கலவி தரும்போர் கட்கடையார், கருணை புரியு மடியாருங் காதல் புரியு மடியார்சீர்,—முயலும் படிவாழ் திருச்செந்தூர் முருகா முத்தந் தருகவே, மொழியுஞ் சமய மனைத்தினுக்கு முதல்வா முத்தந் தருகவே. (௫)

தொழுதுந் துதித்துந் துயரகற்றிச் சுருதிக் கிறையுஞ் சுருமுடன், சூழ்ந்த கடம்பா டவியிலுறை சொக்கக் கடவு டனைமூன்று,—பொழுதும் பரவி யெழுத்தஞ்சிற் போலப் பொருளும் புகறியெனப், புகலு மாறஞ் சிரட்டி நினைப் பொருட்குத் திரத்தின் பொருள்பய ங்கா,—தெழுதும் பனுவற் பரணன்முத லேழேழ் பெருமைக் கவிப் புலவர் இதயங் களிக்க விருப்பமுட னிறையோன் பொருட்குப் பொருள்விரித்து,—முழுதும் பகர்ந்த கனிவாயான் முருகா முத்தந் தருகவே, மொழியுஞ் சமய மனைத்தினுக்கு முதல்வா முத்தந் தருகவே. (௬)

வேறு.

கடுந டைச்சிந் துரம ருப்பின் கதிர்கொள் முத்துஞ் சரவைகள், கடல ளிக்கும் பணில முத்துங் கழையின் முத்துங் கரடுவா,—னடு முகட்டம் புயல்க ருக்கொண் டுமிழு முத்தங் கருகதே, ஞெழுகு பொற்பங் கயம டற்றந் தொளிரு முத்தந் திருகல்காண்,—படிக நிரைக்குண் டகழி நத்தின் பரிய முத்தந் தெரியவே, பரவை யெற்றுந் திரைகொ ழிக்கும் படியின் முத்தஞ் சிறுமகார்,—கொடுப ரப்பும் பதிபு ரக்குங் குமர முத்தந் தருகவே, குறமு ளிக்குந் தமிழு ரைக்குங் குழவி முத்தந் தருகவே. (௭)

பருவ முற்றுங் குடவயிற்றொண் பணிலமொய்க்குந் துறையெலா ம், பருமு ரட்செங் கயல்குதிக்கும் பலபடத்தெண் டிரைமுநீர்,—பொருது குத்துந் திடரனைத்தும் புறவு மொய்க்கும் புறவுசேர், புளி னவெற்பெங் கனுமுரைக்கும் புளின மொய்க்குங் குவளையர்,—பரு

டற்கண் டினமெ னச்சென் றளிகண் மொய்க்கும் புதியரூ, லலவன் மொய்க்குங் குழிவ ழிச்சென் றலைகொ ழிக்குங் கரையெலாங்,—குரு கு மொய்க்கும் பதிபு ரக்குங் குமர முத்தந் தருகவே, குறமு னிக்குந் தமிழு ரைக்குங் குழவி முத்தந் தருகவே. (௮)

வேறு.

பையரவி னுச்சிகுழி யப்பொருங் குண்டகட் படகடற் பணில முத்தம், பார்வையா லுஞ்சிறிது பாரோமி தன்றிப் பசுங்கழை வெடி த்தமுத்தஞ்,—செய்யசிந் தையினுமிது வேணுமென் றொருபொழுது சிந்தியோ முதறிவட்டத், திரைமுழுங் கக்கொழுந் திங்கள்வட் டச்சு டைச் செழுநிழற் சப்பராரி,—யெய்புமலர் வாளியை யெடுத்துத் தெ ரிந்துகா ணிறுகப் பிணித்த வல்வில், லீன்றகுளிர் முத்தத்தை முத்த மென் றுறுகோ மிதழ்க்கமல முகைபுடைக்குங்,—தூய்யமணி முத்தந் தனைத்தொடே முன்னுடைய துகிரில்வினை முத்தமருளே, தோகை ‡மே காரவா கனசெந்தி லாயுனது துகிரில்வினை முத்தமருளே. (௯)

இறுகல்கரு குதல்முரி விலட்சுமி புடாயமுள் ளேறல்புகை யே றல்செம்ம, னேறல்வெச் சந்திருகன் மத்தகக் குழிவன்றி யிரவி யொளி யிற்கரத்தன்,—மறுவறு தகட்டிலோ ரத்திறுயர் தூக்கத்தின் மன்னுடையா தளைகவிர்ப், மாந்தளிர் முயற்குருதி செவ்வரத் தங்கோப மருவுமணி வகையளிப்பேர்,—முறுகல்வளி யேறல்கல் லேறல்சிப் பிப் பத்து முரித்திரு குதல்சிவப்பு, முருந்திற் குருத்துச் செருந்தருவி யிடையாடி முரிகுதை வடிவொ துங்க,—றுறுமுகங் கக்கலொளி மட்க ல்கர -டென்னுத துகிரில்வினை முத்தமருளே, தோகைமே காரவா கனசெந்தி லாயுனது துகிரில்வினை முத்தமருளே. (௰)

கோதிவரி வண்டுமது வுண்டுகுடி கொள்ளுமெங் குழலுக் குடை ந்துவிண்ணிற், குடிகொண்ட கொண்டற் குறுந்துளியி னித்திலக் கோவையொரு கால்விரும்பேங்,—காதிலுறும் வள்ளைமக ரக்குழை கடக்குமெங் கண்ணுக் குடைந்துதொல்லைக், கயத்திற் குளித்தசேல் வெண்டரள மென்னிலொரு காலமுங் கருதிகயவேம்,—போதிலுறு பசுமடற் பாளைமென் பூகம் பொருந்துமெங் கந்தரத்தைப், பொருவு று வெள்வலம் புரியார மின்புறேம் பெற்றோ டனக்குடைந்த,—சோ திவேய் முத்தந் தனைத்தொடே நின்னுடைய துகிரில்வினை முத்தம ருளே, தோகைமே காரவா கனசெந்தி லாயுனது துகிரில்வினை முத்த மருளே. (௰௧)

முத்தப்பருவம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம். (௫௧)

---

‡ மேகாரம்-மயில்.

ஆறாவது: வாரானைப் பருவம்.

முரிப் பகட்டு வரிவாளை முழங்கிக் குதிக்கக் கால்சாய்ந்து, முதிர விளைந்து சடையின்றி முடங்கும் பசுங்காய்க் குலைச்செந்நெல்,— சேரிக் கருங்கை மள்ளர்குயக் கிட்டி யரிந்த கொத்தினுக்குத், தெண்முத் தளப்பச் சிறுகுடியிற் சேரக் கொடுபோ யவர்குவிப்ப,—வேரிக் குவ ளைக் குழியில்வரி வெண்சங் கினங்க ளீற்றுளைந்து, மேட்டி லுகுத்த பருமுத்தை வெள்ளோ திமந்தன் முட்டையென,—வாரிக் குவிக்குந் திருச்செந்தூர் வடிவேன் முருகா வருகவே, வளருங் களபக் குரும் பைமுலை வள்ளி கணவா வருகவே. (௧)

† புள்ள மரிந்த கதிர்ச்செந்நெற் போரிற் பகடு தனைநெருங்கப்
பூட்டி யறுத்து வைகளைந்து போதக் குவித்த பொலிக்குவையை
விள்ள வரிய குடகாற்று வீசப் பதடி தனைநீக்கி
வெள்ளிக் கிரிபோற் கனகவட மேரு கிரிபோன் மிகத்தூற்றிக்
கள்ள மெறியுங் கருங்கடைக்கட் கடைசி யிரித்த மணிமுத்தைக்
களத்தி லெறிய வம்முத்தைக் கண்டு குடித்த கட்குவிலை
மள்ள ரளக்குந் திருச்செந்தூர் வடிவேன் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை வள்ளி கணவா வருகவே. (௨)

தேட வரிய மணியரைஞாண் சேர்க்க வருக விரற்காழி
செறிக்க வருக திலகநுத றிட்ட வருக மறுகில்விளை
யாட வருக மடியிலெடுத் தணைக்க வருக புதுப்பனிநீ
ராட்ட வருக நெறித்தமுலை யமுதம் பருக வருகமுத்தஞ்
சூட வருக வுடற்புழுதி துடைக்க வருக வொருமாற்றஞ்
சொல்ல வருக தள்ளிநடை தோன்ற வருக சோதிமணி
மாட நெருங்குந் திருச்செந்தூர் வடிவேன் முருகா வருகவே
வளருங் களபக் குரும்பைமுலை வள்ளி கணவா வருகவே. (௩)

இறுகு மகரா னினிப்பூட்டே னிலங்கு மகர குண்டலத்தை, யெடுத்துக் குழையின் மீதணியே னினியுன் முகத்துக் கேற்கவொ ரு,—சிறுகுந் திலதந் தனைத்திட்டேன் றிருக்கண் மலர்க்கு மையெழு தேன், செம்பொற் சமலச் சிறடிக்குச் சிலம்பு திருத்தே னெறித்தா விம்மி,—முறுகு முலைப்பா லினிதூட்டேன் முகம்பார்த் திருந்து மொ ழிபகரேன், முருகா வருக சிவசமய முதல்வா வருக திரைகொழித் து,—மறுகுமலைவாய்க் கரைசேர்ந்த மழலைச் சிறுவா வருகவே, வளரு ங் களபக் குரும்பைமுலை வள்ளி கணவா வருகவே. (௪)

வாரானைப்பருவம்-வருதலை விரும்பிய பருவம். வாரானை-வருதல்

† புள்ளம்-அரிவாள்.

வள்ளத் தனிவர் தழைபசிக்கு மிரங்கிப் பரந்து பிறைபன்றி, யெக்
கிக் குலமுந்து மணித்தவர்வா யிதழைக் குவித்து விரித்துழுது,—வள்
ளிந் தடித்துப் புடைபெயர்ந்து தொட்டி லுதைத்து பெருவிரலைச்,
சுவைத்துக் கடைவாய் நீரொழுகத் தோளின் மகரக் குழைதவழ,—
மெள்ளத் தவழ்ந்து குறுமுரல் விளைத்து மடியின் மீதிருந்து, விம்மிப்
பொருமி முகம்பார்த்து வேண்டு முலையாள் களபமுலை,—வள்ளத்
தமுதுண் டகமகிழ்ந்த மழலைச் சிறுவா வருகவே, வளரும் களபக்
குரும்பைமுலை வள்ளி கணவா வருகவே. (௫)

வெண்மைச் சிறைப்புள் ளோதிமங்கள் விரைக்கே தகையின்
மடம் பிளந்து, விருந்துங் குருகி யெனமடியின் மீதே யிருந்திக் ||கோ
தாட்டித்,—தின்மைச் சுரிசங் கினிற்குவளைத் தேறன் முகந்து பாலூ
ட்டிச், செழுந்தா மரைநெட் டிதழ்விரித்துச் சேர்த்துத் துயிற்றித் தா
லாட்டிப்,—பெண்மைக் குருகுக் கொருசேவற் பெரியகுருகு தன்வா
யிற், பெய்யு மிரையைக் கூலரு பிளந்து பெட்பி னினிதளிக்கும்,—
வன்மைப் புதுமைத் திருச்செந்தூர் வடிவேன் முருகா வருகவே, வள
ருங் களபக் குரும்பைமுலை வள்ளி கணவா வருகவே. (௬)

ஓடைக் குளிர்தண் ணிப்பனிபா லுடைந்து திரையிற் றவழ்ந்
தேறி, யொளிரும் புளினத் திடையொதுங்கி யுறங்குங் கமடந் தனை
க்கடந்து,—கோடைக் குளிர்காற் றடிக்கவுடல் கொடுகி நடுங்கி யூன்க
ழிந்த, குடக்கூன் பணிலந் தட்புகுந்து குஞ்சுக் கிரங்கி யிரைகொடுக்
கும்,—பேடைக் குருகுக் கொருசேவற் பெரிய குருகின் சிறைப்புறத்
துப், பிள்ளைக் குருகு தனியனைந்துப் பிரச மடற்கே தகைப்பொதும்பி
ன்,—வாடைக் கொதுங்குந் திருச்செந்தூர் வடிவேன் முருகா வருக
வே, வளருங் களபக் குரும்பைமுலை வள்ளி கணவா வருகவே. (௭)

விண்டு மாவின் கனிதடத்தின் மீதே விழக் குருகினங்கள், வெ
ருவி யிரியக் கயல்வெருண்டு வெடிபோய் மீள மண்டுகங்,—கண்டு
பாய வரிவாளை கழிக்கே பாயக் கழிக்கானற், கம்புள் வெருண்டு துன்
னெனக்கட் கடை தான் விழித்துத் தன்பார்ப்பைக்,—கொண்டு போ
யக் கருவாளைக் குலைக்கே பாயக் குடக்கனியின், குறங்காற் பலவு
வேர்சாய்ந்த குழிக்கே கோடி. கோடிவரி,—வண்டொய்யுந் திருச்செ
ந்தூர் வடிவேன் முருகா வருகவே, வளருங் களபக் குரும்பைமுலை வ
ள்ளி கணவா வருகவே. (௮)

|| கோதாட்டல்-பாராட்டல்; அஃதாவது குணத்தையெடுத்துப்பேசுதல்.

பேரா தரிக்கு மடியவர்தம் பிறப்பை யொழித்துப் பெருவாழ்
வும் பேறுங் கொடுக்க வரும்பிள்ளைப் பெருமா னென்னும் பேராளா,—
சேரா நிருதர் குலகலகா சேவற் கொடியாய் திருச்செந்தூர்த், தேவா
தேவர் சிறைமீட்ட செல்வா வென்றுன் றிருமுகத்தைப்—பாரா மகி
ழ்ந்து முலைத்தாயர் பரவிப் புகழ்ந்து விருப்புடனப், பாவா வாவென்
றுனைப்போற்றப் பரிந்து மகிழ்ந்து வரவழைத்தால்,—வாரா திருக்க
வழக்குண்டோ வடிவேன் முருகா வருகவே, வளருங் களபக் குரும்
பைமுலை வள்ளி கணவா வருகவே. (௯)

வேறு.

கலைதெரி புகல் வளமுற மருவு கவுணிய வருக வருகவே
கருணையி னுரிமை யடியவர் கொழு கலிகெட வருக வருகவே
சிலைபொரு புருவ வனிதைய ரறுவர் திருவுள மகிழ வருகவே
சிறுதுளி வெயர்வு குதிகொள வுதித்து திருமுக மலர வருகவே
கொலைபுரி விகட மணிமுடி நிருதர் குலமற வருக வருகவே
குருமணி வயிர மிருசிகை நெடியல் குழைபொர வருக வருகவே
மலைமகள் கவுரி திருமுலை பருகு மழவிடை வருக வருகவே
வளையுமிழ் தரள மலையெறி நகரில் வரபதி வருக வருகவே. (௰)

அணிநெடு மயிலி லெறிசிறு புழுதி யழகுட னொழுக வருகவே
யடியிடு மளவி லரைமணி முரலு மரவொலி பெருக வருகவே
பணிவிடை புரிய வருமட மகளிர் பரவினர் புகழ வருகவே
பலபல முனிவ ரனைவரு முனது பதமலர் பரவ வருகவே
* பிணிமுக முதுகி லரியணை யழகு பெறவரு முருக வருகவே
பிறைபொரு சடிலர் தமதிட மருவு பிடிபெறு களிறு வருகவே
மணியித ழொழுகு மமுதுகு குதலை மழவிடை வருக வருகவே
வளையுமிழ் தரள மலையெறி நகரில் வரபதி வருக வருகவே. (௧௧)

வாராணைப்பருவம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - (௬௨)

* பிணிமுகம்-மயில்.

ஏழாவது: அம்புலிப்பருவம்.

கலையா னிரம்பாத கலையுள் னெக்குநிறை கலையுள் ளடிவன்றனக்குர், களங்கமரு குறைமா னுனக்குண்டு குறைமான் கருத்துமுள் ளவன்றனக்கு,—தொலையாத வளமுண் டுனக்குமப் படிவளத் தொகையுள் ளவன்றனக்குத். தாரியமுற முன்னோக் கிங்குனக்கு மாறாத சொல்லமுஞ் முன்னோக்குக்கு,—கொலையா டராவழிப் பகையுண்டு கடுவிடங் கொப்புளிக் குங்கட்செவிக், கோளரா வைக்கொத்தி யெறியுமே காரமிக் குமரனுக் குண்டெனடா,—மலையாறி ரும்திருச் செந்தில்வடி வேலனுட னம்புலீ யாடவாவே, யரவின்முடி நெளியமயிலி முதுகில்வரு குமரனுட னம்புலீ யாடவாவே. (௧)

மாமேக மண்டல மகற்றியிடி வெள்ளுமுழு மண்டலந் தைத் தொடுத்து, வடவைமுக மண்டலத் தமலா னருக்கியினன் மண்டலத் தாடுபுக்குச்,—சோமோத யக்கிரண மண்டலந் தழுதந் தாளித்தி வலை பருகியுடலைச், சோதிமண் டலமென விளங்குமவ னிவனுடைய தெய்யமுக மண்டலத்தை,—யெமோ கருத்தற விருத்திப் பெரும்பாத் தெல்லைமண் டலமெய்தலா, மென்றுகொள் முடிமண் டலச்சக்ர நிலையா றெழுத்திலி டேறுவருனக்,—காமோ பெருக்கமென் செந்தில் வடி வேலனுட னம்புலீ யாடவாவே, யரவின்முடி நெளியமயின் முதுகில்வரு குமரனுட னம்புலீ யாடவாவே. (௨)

முதிருமிசை வரிவண் டலம்புகம லாலய முகிழ்த்துமிரு நாளிதழ்க்குமுன், முக்கோண நடுவிலொரு வட்டச் சுழிக்குள்மலர் முழுமண் டலத்துவெயிலா,—லெதிருமிரு ளந்தகா ரப்படலை தள்ளிவர் தெழுமிரவி மண்டலத்தி, லின்புற்று நிலவ் தொளிக்குமிட மந்தவா னிரவிமண் டலமுடிக்க,—ஞுதிருமதி செருவில்வவன் வேலைஞ பட்டவ ருகந்தபெரு வெளியாகையா, லொள்ளமு தருத்தமதி னுறைகலை கொள்ளுமுன் னுடலினுங் குறையடாதோ,—மதிருமக ராழிகும் செந்தில்வடி வேலனுட னம்புலீ யாடவாவே, யரவின்முடி நெளியமயின் முதுகில்வரு குமரனுட னம்புலீ யாடவாவே. (௩)

அம்புலிப்பருவம்-சந்திரனை விளையாட அழைக்கும் பருவம்.

வெறியா ரிலைந்தொடைத் தக்கனழல் வேள்வியை வெருண்டு பகல் பல்லுகுத்து, வெள்ளரிவிழி யைக்கெடுத் தயிரா வதப்பாகன் வேருருக் கொடுபறக்கச்,—செறியா டகத்தகட் டிதழ்முளரி நான்முகன் சென்னியைத் திருகிவாரி, செய்யதுண் டந்துண்ட மாக்கியத் தக்கன் சிரத்தையொரு வழிப்படுத்திப்,—பொறியா ரழற்கடவுள் கைத்தல னுன்னுடலையும் புழுதியிற் றேய்த்ததெல்லா,—மறியாத தல்லவே செந்தில்வடி வேலனுட னம்புலீ யாடவாவே, யரவின்முடி நெளியமயின் முதுகில்வரு குமரனுட னம்புலீ யாடவாவே. (௪)

விடமொழுகு துளைமுள் ளெயிற்றுவன் கட்செவி விரிக்கும் பஞ்டவியறு, மென்பொறி யுடற்பெரும், பருவா யராவுமுன் வெம்பசி யெடுத்துவெம்பிக்,—குடதிசைக் கோட்டையைப் பருகிக் குணக்கெழுங் கொண்டலை யருந்திவாடைக், கொழுந்தையுந் தென்றலையு மள்ளிக் குடித்துக் கொழுங்கதிரை யுண்டதின்னியுன்,—னிடமொழிய வேறு ரிலக்கில்லை நீயதற் கெதிர்நிற்க வல்லையல்லை, யிவனுடன் கூடிவிளையாடி நீ யிங்கே யிருக்கலா மிங்குவந்தா,—லடல்புனையு மயிலுண் டுனக்குதவி யாகையா லம்புலீ யாடவாவே, யரவின்முடி நெளியமயின் முதுகில்வரு குமரனுட னம்புலீ யாடவாவே. (௫)

பண்டுபோ லின்னமுத மின்னங் கடைந்திடப் பழையமந் தரமில்லையோ, படர்கடற் குண்டகழி யளறுக வற்றியிப் பாரினிற் றிடரானதோ,—விண்டலத் தமரர்களு மமரேச னுஞ்சோர விடிநீ டந்தகார மேதோ,—விபெழு பகிரண்ட கூடம்வெளி யானதோ விடமொழுகு நெட்டெயிற்ற,—மண்டுவா சுகிதுண்ட மானதோ வின்னமொரு வாலிக்கு வாலில்லையோ, மதியிலா மதியமே யிவனிளந் தாலெத்த வகைசெலா தாகையானீ,—யண்டர்நா யகனெங்கள் செந்தில்வடி வேலனுட னம்புலீ யாடவாவே, யருவரைகள் இடிகிடென மயில்கடவு முருகனுட னம்புலீ யாடவாவே. (௬)

வட்டமா கத்துள்ளொளி வடிவுகொள லாலென்று மானைத் தரித்திடுகையான், மந்தா கினித்தரங் கத்துவள மெய்தலான் மன்னுங் கணஞ்சூழ்தலா,—லிட்டமொடு பேரிரவில் விறல்பெற வுலவுதலலவருந் தகித்திடுதலா, லிரவிகண் ணுறுதலா லிடபத்தி லேறலா லேமமால் வரையெய்தலான்,—முட்டமறை வெள்ளிக் குரித்தாகை யால்

வெய்ய முரியர வுச்சுடைநவான், முக்கத்துமை பங்கனு ரோக்குநீ யென்றுதிரு முகமலர்க் குலையைழத்தா,—லட்டியோ சம்பெறுவை செந்திலவடி வேலனுட னம்புலீ யாடவாவே, யருவரைகள் இடிகிடென மயில்கடவு முருகனுட னம்புலீ யாடவாவே. (எ)

காதரவ வெறிதிரைக் கடன்மகளிர் சிறுமனைச் சுரையிற் குளித்து முற்றங், கருவாய் வலம்புரி யுமிழ்த்தமணி முத்துமுட் கண்டன் மடல் விண்டகன்னைத்,—தாமலர விரைகூட கொடுவருங் கானல் வெண் சங்குகொத் தீற்றலைக்கு, தனியேபருத்தபரு முத்தமுந் தன்னிலே சதகோடி நிலவெறிக்கு,—மீதனி லொருசிறிது மிரவில்லை யெவருக்கு மிரவில்லை நீயுமிங்கே, யெழிறு வானமுடற் கறைதனைத் திடுகலா மென்பதற் கையமில்லை,—யாதலா லீதுபுனை செந்திலவடி வேலனுட னம்புலீ யாடவாவே, யருவரைகள் இடிகிடென மயில்கடவு முருகனுட னம்புலீ யாடவாவே. (அ)

கடியவளி யெறியுந் தலைமச்சிறைக் கருடர்க் கருடவா சகாயபதி சல்கர், கட்டைமுன் னரைகாள கெட்டித முழுந்தபொற் கமலயோனிப்பெருந்து,—கொடியவெவ் கொலைபுரி வராகமென வொருவனெழ குவலைய மிடந்துதேடக், குறித்தொருவ னெனையமயண்டபகி ரண்டமுங் கொழுதிக் குடைந்துதேட,—முடியவிது காரமவர் ரிவரு வணைந்த முழுமுதற் கடவுளடியு, முடியுநீ கண்டனை யெனக்கருதி யின்றுதிரு முகமலர்க் குலையைழத்தா,—லடியவரை வாழ்வித்த செந்திலவடி வேலனுட னம்புலீ யாடவாவே, யருவரைகள் இடிகிடென மயில்கடவு முருகனுட னம்புலீ யாடவாவே. (௯)

பெரியமா கந்துவணி வருவையிவன் வஞ்சகம் பேசுமா கந்துள்வரான், பெருகட் வேலையிற் புகுவா யிவன்பார் பிளக்கவோ வேலைவிட்டா,—துரியமா குணவரையி லுறைவைநீ யிவனன் புருகருணை வரையேயுறு, முடலிலே முழுமறு வுனக்குண் டிவன்றனக் கொருமறுவு மில்லைமீளக்,—கரியமா முகிலிலே மறைவைநீ யிவனெடுங் கரியமா முகிலின் மறையான், கருதிநீ யிவையெலா முணரிவன் பெருமையைக் கண்டுநீ யஞ்சிராதே,—யரியமா தவனெங்கள் செந்திலவடி வேலனுட னம்புலீ யாடவாவே, யருவரைகள் இடிகிடென மயில்கடவு முருகனுட னம்புலீ யாடவாவே. (௰)

பரியதிரு றன்னைச் சுளித்துவெயி லொடுபொருது பாதசங் கிலியையறுப், பாரிசா தத்தருவை யிடுகுள யெனக்கவட் பகுவாய் புகக்குதட்டிக்,—தரியலர் நகர்ப்புறக் கெயிலிடு கபாடந் தனைத்துள் படுத்திய வர்பொற், றருணமணி முடியிடறி முறைமுறை யழைக்குந் தலைழச் செவிப் பிறைமருப்புச்,—சொரியுமத தாரைக் குறுங்கட் பெருங்கொலைத் துடியடிப் புகரொருத்த, னங்கவே ளிவனுடைய முன்றிற் புறத்திற் றுலைக்கா நிமிர்த்தாங்கு,—மரியகரு நாகமென வெருவல்கொல் லிவனுட னம்புலீ யாடவாவே, யருவரைகள் இடிகிடென மயில்கடவு முருகனுட னம்புலீ யாடவாவே. (௰க)

அம்புலிப்பருவம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம். (எ௰)

எட்டாவது: சிறுபறைப்பருவம்.

பொருவாகை குடுமர வக்கொடிக் குருகுலப் பூபாலரோறமந்தப் பூபால னுக்கிளைய மனைவர்நூற் றுவரும்பொ ருபதினெட் டக்குரோணி,—யொருவாய்மை சொற்றபடை வீரருஞ் செருவினி லுருத்தெழவு நீதியைவ, ருடனாக நின்றுபற் குனன்மணித் தேரினுக் குள்ளசா ரதியாகியும்,—மருவார்க டானையிற் பட்டவர்த் தனர்மகுட வர்த்தன ரடங்கலும்போய், மயங்கவொரு நாள்விசைய னுக்குவிசை யம்பெருக மண்ணேழு முண்டுமிழ்ந்த,—திருவாய் வலம்புரி முழக்குதிரு மான் மருக சிறுபறை முழக்கியருளே, செருவிலெதிர் பொருதபர நிருதர்குல கலகனே சிறுபறை முழக்கியருளே. (க)

முருந்தாரு மணிமுறுவ லெய்தனில மகளிரிள முகிழ்முலைத் தனக்குடைந்து, முளரிமுகை நீரிற் குளித்துநின் றொருதாளின் முற்றியதவம்புரியவெவ்,—கருந்தாரை நெட்டிலைப் புகர்வே லெனப்பொருங் கட்கடைக் குள்ளுடைந்து, காவிமலர் பங்கப் படக்கருங் குழல்கண்டு கரியமுகி லுடல்வெளுத்துப்,—பொருந்தாம லோடியந் தரசாரியா யொரு பொருப்பேற வளமையேறும், புகழேற வாழுந் திருச்செந்திலாயுனது பொற்றாள் வணக்கமுற்றுத்,—திருந்தார்க ணெஞ்சம் பெரும்பறை முழக்கநீ சிறுபறை முழக்கியருளே, செருவிலெதிர் பொருதபர நிருதர்குல கலகனே சிறுபறை முழக்கியருளே. (உ)

சிறுபறைப்பருவம்-சிறியதோற்கருவி தட்டி விளையாடும் பருவம்.

கங்கையணி புஞ்சடையில் வைத்தருமை யிப்பிறைக் கடவுளா
லயமளைத்தாங், கங்குற் கருங்கடல் கழிந்துநவ கன்றயிற் கலித்தவால்
வளைமுழக்கும்,—பங்கய மலர்ப்பொகுட் டுநற்வாய் துளிக்கும் பசுந்
தேற லுண்டுமென்னப், பலகோடி சஞ்சரீ கப்பாடலை பெடையொடு
படிந்துபல கான்முழக்கும்,—வெங்கய முடக்கும் புழைக்கர நிமிர்த்து
வெளி யேகநீ ரைக்குடித்து, விதிவாய் நின் றபிளி றித்திகை முழக்கும்
வெறி வெண்டிரைக் குண்டகழியிற்,—செயன் முழக்குந்திருச்செந்
தில் வேலனே சிறுபறை முழக்கியருளே, செருவிலெதிர் பொருதபர
நிருதர்குல கலகனே சிறுபறை முழக்கியருளே. (௩)

காவான பாரிசா தத்தருக் குலவிழும் கடவுளெட்டு வீதிதோறுங்,
கடிமணப் புதுமங் கலத்தொனி முழக்கமுழக கட்டவிழ்த் திதழுடை
க்கும்,—பூவா ரிலைத்தொடைய வாசாபுரேசன் புரந்தொறுங் குளிறு
முரசம், பொம்மென முழக்கமன் மதனுடைய பல்லியப் பொங்கு
தென் றிரைமுழக்கப்,—பாவாணர் மங்கலக் கவிவாழி பாடிப் பரிந்து
இன் டிமமுழக்கப், பரவரிய திருவிழா வென்றுபல பல்லியம் பட்டி
னந் தொறுமுழக்கத்,—தேவாதி தேவருயர் சதுர்மறை முழக்கமீ சிறு
பறை முழக்கியருளே, செருவிலெதிர் பொருதபர நிருதர்குல கலக
னே சிறுபறை முழக்கியருளே. (௪)

வரைவாய் முழக்குங் கடாயானை வெங்கூர் மருப்பில்விளைமுத்து
மிளவேய், மணிமுத்து மபோலை வனசரத்திற்கரு வராகத்தின் முத்து
மண்ட,—நுரைவாய் முழக்கும்பெரும்புறவி லுந்திநந் நாமிழுமணி மு
த்துமின்ன, ரொளியறு மருதவே லிச்செந்நெல் கன்னநறு மொளிமுத்
து மோங்குநெய்தற்,—கரைவாய் முழக்குமுட் கூனல்வெண் பணிலங்
கடுஞ்சூ லுளைந்துகான்ற, கதிர்முத்து மொக்கக் கொழித்துவரு பொரு
நையாய் கழிதொறுங் கயல்குதிக்கத்,—திரைவாய் முழக்குந் திருச்செ
ந்தில் வேலனே சிறுபறை முழக்கியருளே, செருவிலெதிர் பொருதபர
நிருதர்குல கலகனே சிறுபறை முழக்கியருளே. (௫)

முனைவாளை வடிவேலை வடுவைவெங் கடுவையிதழ் முளரியைப்
பிணையை மதவேள், மோகவா ளியையடு சகோரத்தை வென்றுரு
ழை முட்டிமீ ளுங்கண்மடவார்,—நினைவாளை வான்முறுவ லாடியிள
முலையானை நேர்நேர் நிறுத்திசெய்த, வீடுமள காடவி வனத்திற்
பிணித்தவெவ்வ ளித்தில வடங்கெரிந்து,—புனைவாளை தான்முடி

விளம்பிரதி வாளைமென் போதிதுறை வாளையொப்பப், பொமலிவாளை
நின்றுகளை களைவாளை நாடியினை போங்கழி கடந்துமெள்ளச்,—சினை
வாளை பாயுந் திருச்செந்தில் வேலனே சிறுபறை முழக்கியருளே, செ
ருவிலெதிர் பொருதபரநிருதர்குல கலகனே சிறுபறைமுழக்கியருளே.

அறந்தரு புரந்தரா தியருலகி லரமகளி ராடுமணி யூசல்சிற்றி, ல
ம்பலை கழன்றுபல செறியுந் தடஞ்சார லருவிபாய் பரங்கிரிபுறப்,—
புறந்தரு புனிற்றுவெள் வளைகடற் றிரைதொறும் பொருதசீ ரலைவா
யுமென், போதுகமழ் திருவா வினன்குடியு மரியமறை புகலுமே ரக
முமினிமைக்,—குறந்தரு கொடிச்சியர் பெருங்குரவை முறைகுலவு
குன்றுதோ றுமுடனுந்தன், கொண்மூ முழங்குவது கண்டின மெனக்க
ரட குஞ்சரம் பிளிறுமரவஞ்,—சிறந்தபழ முதிர்சோலைமலையும் புரந்த
நீ சிறுபறை முழக்கியருளே, செருவிலெதிர் பொருதபர நிருதர்குல
கலகனே சிறுபறை முழக்கியருளே. (௭)

எழுமிரவி மட்கவொளி கருமணி யழுத்துமுடி யிமையவர் மகிழ்
ச்சிபெறவே, யிருள்கூழை பிடித்தவிழி யரமகளிர் சுற்றிநட மிதுவென
நடித்துவரவே,—வழுவறு தமிழ்ப்பனுவன் முறைமுறை யுரைத்துவெ
கு வரகவிஞ ருட்குழையவே, மகபதியு மிக்கமுனி வரர்களுமு மிச்சை
யுடன் வழியடிமை செப்பியிடவே,—பொழுதுதொறு மொக்கவிதி
முறையுனை யருச்சனைசெய் புனிதசிவ விப்ரருடனே, புகலரிய பத்த
சன மாகர வெனக்குலவு புரவலர் விருப்பமுறவே,—செழுமறை முழ
க்கவரு முருகுகும ரக்கடவுள் சிறுபறை முழக்கியருளே, திரளுமணி
முத்தையலை யெறியுநக ருக்கதிப சிறுபறை முழக்கியருளே. (௮)

தவனனிர தப்புரவி வலமுறையில் வட்டமிடு தருணவட வெற்
பசையவே, தமரதிமி ரத்துமித மெறியுமக ரப்பெரிய சலதியொலி யற்
றயியவே,—புவனமுழு தொக்கமணி முடியிசை யிருத்துபல பொறி
யுரக னச்சமுறவே, புணரியிடை வற்றமொகு மொகுமொகு வெனப்
பருகு புயலுறுமு வெட்கியிடவே,—பவனனு மிசுத்தகடை யுகமுடி
வெனப்பெருமை பரவியடி யிற்பணியவே, படகநிபி† டத்துமுனி யகு
ரர்வெரு விக்கரிய பரியவரை யிற்புகுதவே,—சிவனருண் மதிக்கவரு
முருககும ரக்கடவுள் சிறுபறை முழக்கியருளே, திரளுமணி முத்தை
யலை யெறியுநக ருக்கதிப சிறுபறை முழக்கியருளே. (௯)

† நிபிடம்-நெருக்கம்.

சகரமக ரச்சலதி யுலகுகளி லெப்பொழுது மருவிய புறச்சமயநூ தலையழிய முத்திதரு சிவசமய முத்தர்பெறு நயநெறி தழைத்துவரவே,—மகரமக ரத்தில்லினை பொருளுடைய பத்திபுரு மடியவர் தமக்கருளவே, மமதருல கத்தவரு மெவருமரு விப்பரவி யடியிணை தனைப்பணியவே,—பகரமு கிளைத்திடவு மிதமது சொற்பெருமை பரகதி யளிக்குமெனவே, பலபல முனிக்கணவ ரனைவரு முனைக்கரிய பனிவிடை தனைப்புரியவே,—சிகரபர னெற்றிவரு முருகுகும ரக்கடவுள் சிறுபறை முழக்கியருளே, இரவுபட மணி முத்தெறியலை யெறியுகர ருக்கதிப சிறுபறை முழக்கியருளே. (௰)

சிறுபறைப்பருவம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் (அ௰)

என்பதாவது: சிற்றிற்பருவம்.

பொன்னின் மணக்கும் புதுப்புனலிற் புடைசூழ் பணில முத்தெடுத்துப், புறக்கோட் டகமுமை யக்கிலையிற்றுயத் தாதைக் கலமமைத்துக்,—கன்னி மணக்குங் கமுனியிற்செங் கம்பட் பொருட்டு முகையுடைத்துக், கக்குஞ் செழுந்தே னுலையேற்றிக் கறைமிக் கிலவல் சிலையப்புகட்டிப்,—பன்னி மணக்கும் புதுப்பொழிலிற் பலபூப் பறித்துக் கறிதிருத்திப், பரிந்து சிறுசோ றடுமருமை பாரா யபிராமதப்பாகன்,—சென்னி மணக்குஞ் சேவடியாற் சிறியேஞ் சிற்றில் சிதையேலே, திரைமுத் தெறியுந் திருச்செந்தூர்ச் செல்வா சிற்றில் சிதையேலே. (௧)

தையன் மடவா ரிழைத்தவன்ட தன்னை யழிக்கு மதுக்கல்ல, தரள முறுத்தி புனைபொற்பூந் தவ்வைடத் திருத்தா டடியாதோ,—துய்யதவளப் பிறைமுடிக்குஞ் சோதி யெடுத்து முகத்து மணைத்துத், தோளி லிருத்தும் பொழுதமலைத் தோளிற் புழுதி தோயாதோ,—வையமனைத்து மீன்றெடுத்தும் வயது முதிரா மடப்பாவை, மடியிலிருத்தி முலையூட்டி வதனந் தனைக்கி ழங்கழற்காற்,—செய்ய சிறுதாள் செறியாதோ சிறியேஞ் சிற்றில் சிதையேலே, திரைமுத் தெறியுந் திருச்செந்தூர்ச் செல்வா சிற்றில் சிதையேலே. (௨)

சிற்றிற்பருவம் - மகளிர்கட்டி விளையாடுஞ் சிறுவீட்டை யழிக்குஞ் சிறுகுறும்பு செய்து விளையாடும் பருவம்.

தெளவுங் கரட மடையுடைக்குங் கந்திப் பகடு பிடிபட்டுத், கருவு மழுது மிருநிதியுந் தனியே கொள்ளை போகாம,—லெவ்வ முறவிட் புலத்தமர ரேக்க முறும லயிராணி,—யிடுமங் கலநா ணழியாம லிமையோ ரிறைஞ்சு மரமகளிர்,—பெளவ மெறியுந் துயராழிப் பழுவத் தழுந்தி முழுகாமற், பரக்குஞ் சுருதித் துறைவேள்வி பழுதா காமற் பரவரிய,—தெவ்வர் புரத்தை யடுஞ்சிறுவா சிறியேஞ் சிற்றில் சிதையேலே, திரைமுத் தெறியுந் திருச்செந்தூர்ச் செல்வா சிற்றில் சிதையேலே. (௩)

ஆடுங் கொடித்தே ரெழுபுரவி யருண னடத்து மகலிடத்தை, யடைவே படைக்கும் படைக்கபடி யளித்துந் துடைத்து முத்தொழிலுங்,—கூடும் பெருமை யுனக்குளது கூடார் புரத்தைக் குழாம்பறிக்கக், கொள்ளுங் கருத்து ...ன்கருத்துக் கொங்கை சுமந்து கொடிமருங்குல்,—வாடுங் கலக ...மடவார் மலர்க்கை சிவப்ப மணற்கொழித்து, வண்ட விழைத்... மனையழிக்கை வன்போ சுரரு மகவானுந்,—தேடுங் கமலத் திருத்தாளாற் சிறியேஞ் சிற்றில் சிதையேலே, திரைமுத் தெறியுந் திருச்செந்தூர்ச் செல்வா சிற்றில் சிதையேலே. (௪)

... லரவந் தனைப்புனைந்த புனித ருடனே வீற்றிருக்கப், ... பொலியுங் கிரி வாளகிரிப் பொருப்பை வளர்த்துச் சுவராக்கிச்,—சுற்றில் வளர்ந்த வரையனைத்துஞ் சுவர்க்கா லாக்கிச் சுடரிரவி, தோன்றிமறையுஞ் ‖ சுருப்பைவெளி தொறுந்தோ ரணக்கா லெனநாட்டி,—மற்றி லுவமை யெனுங்கனக வரையைத் துளைத்து வழியாக்கி, மாகமுகிலை விதானமென வகுத்து மடவா ருடன்கூடிச்,—சிற்றி லிழைத்த பெருமாட்டி சிறுவா சிற்றில் சிதையேலே, திரைமுத் தெறியுந் திருச்செந்தூர்ச் செல்வா சிற்றில் சிதையேலே. (௫)

மிஞ்சுங் கனக மணித்தொட்டின் மீதே யிருத்தித் தாலுரைத்து
வேண்டும் படிசப் பாணிகொட்டி யிருப்பாய் முத்தந் தனைக்கேட்டு
நெஞ்சு மகிழ வரவழைத்து நிலவை வருவா யெனப்புகன்று
நித்த லுனது பணிவிடையி னிலைமை குலையே நீயறிவாய்
பிஞ்சு மதியி னொருமருப்புப் பிறங்கு மிருதாட் கவுட்சுவடு
பிழியுங் கட மும்மதத்துப் பெருத்த நால்வாய்த் திருத்தமிகு
மஞ்சு கரக்குஞ் சாத்தனையே யடியேஞ் சிற்றி லழியேலே
யலைமுத் தெறியுந் திருச்செந்தூ ரரசே சிற்றி லழியேலே. (௬)

‖ சுருப்பு - மலை; சுரும்பின்விகாரம்.

ஆன்று திரைக்குண் டகழ்மடுவிற் றூ ணொளிக்கப் பகைநிருதர்
தொல்லைப் பதியு மவிருந்த தாய்த்த வளமுந் தானாக்கி
வென்று செருவிற் பொருதழித்தாய் வேதா விதித்த விதிப்படியை
விலக்கி வெருண்டு மீண்டளித்தாய் வேய்ந்த மடியார் வினையொழித்
தன்று மமனார் கழுவேறக் காழிப் பதியில் வந்துதித்துந் [தாய்
கள்ளப் பரச மயக்குறும்பர் கலக மொழித்துக் கட்டழித்தா
யன்று கொடுத்தன் வழியடிமை யடியேஞ் சிற்றில் சிதையேலே
யலைமுத் தெறியுந் திருச்செந்தூ ரரசே சிற்றில் சிதையேலே. (௭)

கனிப்பா குவினக்கவ் டவரவரே கல்லுறு மனமும் வெருகித், சள்ள னிவனை நம்முடைய காதல் வலைவிற் கட்டுமெனை,—விரிப்பார் விரக மங்குரித்த வேடப் பனிப்பைப் பாரென்று, மெள்ள நகைப்பா ரிவருட னே விளையா டாமல் வெருகித்,—அளிப்பா திரைக்குண் டகழுடுத்த தொல்லைப் பதியும் பகிரண்டத், தொகையுந் தொகையில் பல்லுயிருந் தோற்ற மொடுக்க லிலைபாய்மின்,—றளிப்பா யழிக்கை கடவலக்கா ணடியேஞ் சிற்றி லழியேலே, யலைமுத் தெறியு திருச்செந்தூ ரரசே சிற்றி லழியேலே. (௮)

கூவிப் பரிந்து முலைத்தாயர் கூட்டி மெடுத்து முலையூட்டிக், குடுமி திருத்தி மலர் சொருகிக் கோலம் புனைந்து கொண்டாடிப,— பூவிற் பொலிந்த திருமேனிப் புனிதா வண்டற் புறத்தெயிலிற், புகுந் தா லினியுன் னுடலேறப் புழுதி யிறைந்துப் போகாமற்,—காவிக் குழற்தோட் டிகழ்நெருக்குங் கன்னி தனைக்கொண் டோச்சிவளைத், கானற் றளத் தொடையாறுன் கைத்தா மரையைக் கட்டிவிடோ,— மாவிழ் துணையே வழியடிமை யடியேஞ் சிற்றி லழியேலே, யலைமுந் தெறியுந் திருச்செந்தூ ரரசே சிற்றி லழியேலே. (௯)

பொய்யா வளமை தரும்பெருமைப் பொருநைத் துறையி னீரா ட்டிப், பூட்டுங் கலன்கள் வகைவகையே பூட்டி யெடுத்து முலையூ ட்டி,—மெய்யா லணைத்து மறுகுதனில் விட்டா ரவரை வெருமதி ன்னை, வெறுக்க வேறு கடவுமுண்டோ விரும்பிப் பாலைக் கொழித் தெடுத்துக்,—கையா லிழைத்த சிற்றிலைநின் காலா லழிக்கை கடனா லக்கான், காப்பா னழிக்குந் தொடங்கிலெங்கள் கவலை யெவரோ டினியுரைப்போ,—மையா வுனது வழியடிமை யடியேஞ் சிற்றி லழியேலே, யலைமுத் தெறியுந் திருச்செந்தூ ரரசே சிற்றி லழியேலே. (௰)
(௱)

சிற்றிற்பருவம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் ௯௰.

தண்டே னுடைந் தொழுகு மருமாலை நீண்முடி தரிக்குஞ் சதங் கிருதுசெந், தருணமணி யாசனத் தேறமா தவிசெழுந் தமனியத் தே ருருட்டப்,—பண்டே பழம்பகை நிசாசரர்க ளூட்கப் பரப்புநிலை கெ ட்டதென்று, பரவுங்கு பேரன்வட பூதரம் பொருபுட் பகத்தே ருருட் டவிற,—கொண்டே யுதித்தசெங் கதிரா யிரக்கடவுள் குண்டலத் திருவில்விசக், கோலப்ர பாமண் டலச்சுடர் துளக்குமுட் கோலெடுத் தருணவருணன்,—றிண்டே ருருட்டவளர் செந்தில்வாழ் கந்தனே சிறுதே ருருட்டியருளே, சேவற் பதாகைக் குமாரகம் பிரனே சிறுதே ருருட்டியருளே. (௧)

வாராரு மிளமுலை முடைத்துகிற் பொதுவியர் மனைக்குட் புகு ந்துமெள்ள, வைத்தவெண் டயிருண்டு குடமுருட் டிப்பெருக வாரி வெண் ணெய்யுருட்டிப்,—பாரர்ம வுண்டுசெங் கனிவாய் துடைத் துப் பருஞ்சகடு [illegible] யன்று, பரிபுரத் தாளா லுருட்டிவிளை யாடு மொரு பச்சைமான் மருகபத்தி,—யாராமை கூருமடி யவர்பழ வினைக் குறும் பறவே யுருட்டிமேலை, யண்டபகி ரண்டமு மனைத்துலக முஞ் செல்லு மாணையா ழியையுருட்டிச்,—சேராத சாசரர் சிரக்குவ டுரு ட்டநீ சிறுதே ருருட்டியருளே, சேவற் பதாகைக் குமாரகம் பிரனே சிறுதே ருருட்டியருளே. (௨)

கொந்தவிழ் தடஞ்சாரன் மலயமால் வரைநெடுங் குடுமியில் வள ர்ந்ததெய்வக், கொழுந்தென்ற லங்கன்று மாடகப் பசுநிறங் கொண் டுவிளை யும்பருவரைச்,—சந்தன நெடுந்தரு மலர்ப்பொதும் பருவி யற் றண்பொருநை மாநதியுமத், தண்பொருநை பாயவிளை சாலிநெற் குலையுமச் சாலிநெற் குலைபடர்ந்து,—முந்தவிளை யும்பரு முளிக்கரும் பும்பரு முளிக்கரும் பைக்கறித்து,—முலைநெறிக் கும்புனிற் றெரு மைமவா யுஞ்சிறுவர் மொழியும் பரந்தவழியுஞ்,—செந்தமிழ் மணக்குந் திருச்செந்தில் வேலனே சிறுதே ருருட்டியருளே, சேவற் பதாகைக் குமாரகம் பிரனே சிறுதே ருருட்டியருளே. (௩)

* சிறுதேர்ப்பருவம் - பருவத்துக் கேற்ற கைத்தேருருட்டிவிளை யாடும் பருவம்.

பெருமையுட னீடலத் திருவர்பர சமயமும் பேதம் பிதற்றிவிட்ட, பிறைமருப் புக்கரும் பகடுமுந் நீரிற் பிழைத்துநீள் கரையிலேறப்,—பொருவருஞ் சன்னிதியி லெய்துவது போன்மணி புடைக்குமின நீரிரண்டு, புணரியின் மிதந்துசன் னிதியேற விற்காட் பொருந்தவினை யாடி முன்னு.—னிருதிரையி னிற்சந் தனக்கொடி மரத்தினை யிழுத்துவரு மெருமையேற்றை, யெப்பொழுது முதியகற் பகடாக வுலகத்தி லியாவருங் காணவென்று,—திருவுள மகிழ்ந்துதிரு விளையாடல் கண்டசிறு தே ருருட்டியருளே, சேவற் பதாகைக் குமாரகம் பிரனே சிறுதே ருருட்டியருளே. (௮)

ஆதிநான் மரபாகி யநுதினம் பொருளாகி யல்லவை யனைத்துமாகி, யளவினுக் களவாகி யணுவினுக் கணுவா யனைத்துயிரு மாகியநவின்,—சாதியின் பிரிவாகி வெவ்வேறு சமயங்க டானுநி நானுநிமெய்ச், சாலோக சாமீப சாரூப சாயுச்ய நன்னெறியி லீலையாகி,—யோதிய தனைத்தினு மடங்காமல் வேறாகி யுள்ளும் புறம்புமாகி, யொளியிலொளி யாகிமற் றிரவுபக லற்றவிட மொப்புவித் தெனையிருத்தித்;—தீதினை யகற்றிநின் றிருவருள் புரிந்தவா சிறுதே ருருட்டியருளே, சேவற்ப தாகைக் குமாரகம் பிரனே சிறுதே ருருட்டியருளே. ()

வேறு.

புலமை வித்தக மயூரவா கனவள்ளி போகபூ ஷணசூரன், சலமொ ழித்தவ நிசாசரர் குலாந்தக சடாக்ஷர காங்கேய, குலவு கொற்றவ குமாரகன் டீரவ குருபர புருகூத, னுலக ளித்தவா செந்திவ்வாழ் கந்தனே யுருட்டுக சிறுதேரே,—யுரக நாயகன் பஃறலை பொடிபட வுருட்டுக சிறுதேரே. (௧)

வீதி மங்கல விழாவணி விரும்பிய விண்ணவ ராமாநர், சோதி மங்கல கலசகுங் குமமுலை தோய்ந்தகங் களிகூரச், சாதி மங்கல வலம்புரி யினமெனத் தழைச்சிறை யொடுபுல்லி, யோதி மந்துயில் செந்திவ்வாழ் கந்தனே யுருட்டுக சிறுதேரே,—யுரக நாயகன் பஃறலை பொடிபட வுருட்டுக சிறுதேரே. (௨)

விரைத்த டம்பொழில் வரைமணி யாசனத் திருந்துவிண் ணவர்போற்றி, வரைத்த டம்புரை மழவிடை யெம்பிரான் மனமகிழ்ந் திடவாக்கா, விரைத்த பல்கலைப் பரப்பெலாந் திரட்டிமற் றிதுபொரு ளெனமேனு, முரைத்த தேசிகா செந்திவ்வாழ் கந்தனே யுருட்டுக சிறுதேரே,—யுரக நாயகன் பஃறலை பொடிபட வுருட்டுக சிறுதேரே. (௩)

மாது நாயக மெனவடி யடைபவர் வள்ளிநா யகமென்னவி, மீது நாயக மெனவுமை யன்றியே றென்னநா யகமுமன்றோ, போது நாயகன் புணரியி னாயகன் பொருப்புநா யகன்போற்றி, யோது நாயக செந்திவ்வாழ் கந்தனே யுருட்டுக சிறுதேரே,—யுரக நாயகன் பஃறலை பொடிபட வுருட்டுக சிறுதேரே. (௪)

தக்க பூசனைச் சிவமறை யோர்பெருந் தானநா யகர்தம்பேர்
திக்க னைத்தினு மென்முக விமையோர் தேவர்தந் திருமேனி
மிக்க மாளிகை தருபவ ராடியவர் மின்னனார் சமயத்தோ
ரொக்க வாழ்கின்ற செந்திவ்வாழ் கந்தனே யுருட்டுக சிறுதேரே
யுரக நாயகன் பஃறலை பொடிபட வுருட்டுக சிறுதேரே. (௫)

சிறுதேர்ப்பருவம் முற்றிற்று.

ஆகப்பருவம் ௰-க்குத் திருவிருத்தம். (௱௧)
சிறப்புப்பாயிரவிருத்தம் (௩.)
ஆகத் திரு விருத்தம் (௱௪).
திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ் முற்றிற்று.

வேறுமாதிரியாக்கலை.

ஆண்பாற்பிள்ளைக் கவியி னிலக்கணம். ௪௧

இரண்டா மாதத்திற் காப்புக் கூறுதலும், மூன்றா மாதத்திற் செங்கீரை கூறுதலும், ஆறுமாதத்திற் சொல்லுவதைப்பருகுதலும், எட்டாமாதத்தில் தாலாட்டுதலும், ஒன்பதாமாதத்தில் சப்பாணி கொட்டுதலும், பதினொரா மாதத்தில் முத்தங் கூறுதலும், பன்னிரண்டா மாதத்தில் வாரானை கூறுதலும், பதினெட்டா மாதத்தில் சந்திரனை யழைத்தலும், இரண்டாமாண்டில் சிறுபறை கொட்டலும், மூன்றாமாண்டில் சிற்றில் சிதைத்தலும், நாலாமாண்டில் சிறுதே ருருட்டுதலாம். இவ்வாறு பிங்கலந்தையிற் கூறப்பட்டது.

௧.

குமரன்றுணை.

திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழருளிச்செய்த

பகழிக்கூத்தர் சரித்திரம்.

இவர், சேரமன்னர் அரசாட்சிக்குள்ளாகிய செம்பிகோட்டைச் சேர்ந்த *சன்னுசிக் கிராமத்தில் வைணவப்பிராமண குலத்தினராகிய நர்ப்பாதனரென்னு மறையவரருந்தவத்தால் அவருக்கு மைந்தராகப் பிறந்து வளர்ந்து வேதாங்கங்களை யுணர்ந்து மெய்ப்பொருளை யறிந்த நாபோலவே, தமிழிலக்கிய விலக்கணங்களையும் ஐயந்திரிபறக் கற்று வல்லராய் எல்லாரும் நன்குமதிக்கத்தக்க வித்துவானாக விளங்கியிருந் தனர்.

அங்ஙனமிருக்குங்காலத்தி லொருநாள்வயிற்றுவலி நோயாற் பிடிக்கப்பட்டுப் பெரிதும்வருந்தி, அந்நோய் நீங்குதற்குத் தக்கமருந்து கள் பலவாகவுண்டும் நீங்காமையால் இனி, எம்பெருமானாகிய திருச் செந்தூரிலெழுந்தருளி யிருக்குங் குமாரக்கடவுளைப்பாடி யிந்நோயைத் தீர்த்துக்கொள்ளுவேனென்று நினைத்துப் பிரார்த்தித்து, அக்கடவுள் மீது பிள்ளைத்தமிழ் எனப்பெயரிய இவ்வருமைப் பிரபந்தத்தைப் பாடிமுடித்து நோய் நீக்கம்பெற்று மனமகிழ்ச்சியடைந்து திருவருளை வியந்து திருச்செந்தூருக்குச்சென்று முருகக்கடவுளைத் தரிசனஞ் செய்து அவர்திருச்செவிகளுக்கின்பந்தருமாறு, அவர்சந்நிதியிலே யநே கவித்துவான்களும் அடியார்களும் திரிசுதந்திரர்களுஞ் சூழவிருந்து இது, பிள்ளைத்தமிழாயினும் பெரியதமிழெனப்பிரமிக்க அரங்கேற்றி யானந்த பரவசமடைந்து அவ்வெம்பிரானை யாராதித்தனர்.

பின்னர் சபையிலிருந்த திரிசுதந்திரரும் பிறரும் பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தத்தில் சொற்சுவை, பொருட்சுவை, பற்பலசந்தச் சுவை, கற்பனை, அலங்காரம் முதலிய பல நலமும் பத்திப்பெருக் குங்கேட்டார்ப்பிணிக்குந் தகையவாய் நிரம்பியுள்ளன வென்பதையு ணர்ந்திருந்தும் பகழிக்கூத்தருக்குச்செய்யவேண்டிய மரியாதையொன் றேனும் செய்யாமற் பராமுகமாவிருந்துவிட்டனர். அங்ஙனமிருந்தற் குக் காரணம் இவர் வைணவராயிருந்த தென்று சிலர் கூறுவர்; அது

* சன்னுசிக்கிராமம் இப்போது சதுர்வேதமங்கல மெனவுங் கூறுவர்; இது: காமங்கோட்டைச் சேகரத்தைச் சார்ந்துள்ளது.

நிற்க. பகழிக்கூத்தர் சபையார் செய்யுமரியாதையைப் பொருட்படுத் தாது தமக்கு வயிற்றுநோயைத்தீர்த்த ஞானபண்டிதராகிய குமாரக் கடவுள் திருவருளையே பொருளாகக்கொண்டு தமதிருப்பிடஞ்சென்று நித்திய கன்மானுட்டானஞ்செய்து பேரின்பப் பெருவாழ்விலழுந்தி நித்திரை செய்வாராயினர்.

அப்போது கலியுகவரதராகிய குமாரக்கடவுள் பகழிக்கூத்தரது மெய்யன்பையும் தமிழால் தம்மைப்பாடுவோர்க்குத் தாம் செய்யுந்திரு வருளையும் பிறருக்கறிவிக்கும் பொருட்டுத் தமது திருமார்பில் விசே ஷாலங்காரமாகச் சாத்தப் பெற்றிருந்த விலையுயர்ந்த மாணிக்கப் பதக்கத்தைக்கொண்டு வந்துநித்திரைசெய்து சயனித்திருந்த பகழிக் கூத்தரது மார்பிலணிந்துவிட்டுச் சென்றனர். மறுநாள் திருவனந்தற் பூசை செய்யவந்த பெரியவர்களுங் கோவிலதிகாரிகளுஞ் சுவாமிமார் பிலிருந்த பதக்கத்தைக்காணாமல் மதிமயங்கி யிதைத்திருடிச் சென்ற வன் யாவனென்று ஊரெங்குந்தேடுவாராய் எங்குங்காணாமல் பகழிக் கூத்தர் மார்பிலிருக்கக்கண்டு, இக்காரியஞ்செய்தவன் உயிர்தொறு மொளித்திருந்த நம் குமாரக்கடவுளே யன்றி வேறில்லையென்று முன் னைநாழ் நிகழ்ச்சியாலறிந்து பகழிக்கூத்தரை வணங்கி யும்முடைய பெ ருமையை யறியாதிருந்த எங்கள் அபராதத்தைப் பொறுத்துக்கொள் ளல்வேண்டுமென்று பிரார்த்தித்துப் பல்லக்கிலேற்றி யநேகவிருதுகள் வாத்தியங்கள் சூழ வெகு விநோதமாக நகர்வலஞ் செய்வித்துச் சாமி சந்நிதானத்திற் கொண்டுபோய்த் தீர்த்தம், விபூதி, சந்தனம், மாலை, பரிவட்டம் முதலியவைகளாலுபசரித்தனுப்பினர்.

அன்றுமுதல் இவர் சுப்பிரமணியபத்தியில் சிறந்து திருவருள் பெற்ற அருள்வித்துவானாக மதிக்கப்பட்டுள்ளார்; இவரது திருவாக்கா கியபிள்ளைத்தமிழ் திருச்செந்தூர்க்கோயிலில் குமாரக்கடவுள் பூசை யின் முடிவில் ஓதுவார்களால் திருப்புகழோடு சேர்த்து ஓதப்பட்டுவ ருகின்றது. இவ்வுண்மையை நம்பியின்றுந் தீராநோய்தீர நினைப்பார் இப்பிள்ளைத்தமிழைப் பாராயணஞ்செய்து எத்தனையோபேர் நோய் தீரப்பெற்றுச் சுகமடைகின்றார்கள். நிற்க.

இனி, பகழிக்கூத்தர் அருங்கலை விநோதராகவிருந்து சங்கநூலாராய்ச்சிசெய்து அச்சங்கநூற் பஞ்சகாவியத்துள்ளே தலைமைவாய்ந்த சீவகசிந்தாமணியிலுள்ள அளவிடற்கரிய பெருங்கதைகளைச் சுருக்கிப்பரோபகாரங்கருதிச் சிந்தாமணிச்சுருக்கமெனப் பெயரிட்டு அந்தாதித் தொடராகத் திருத்தக்க தேவராகிய சிந்தாமணி நூலாசிரியர் கருத்துக்களைப் பெரும்பாலுந்தழுவிப்பதினொன்குசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தால் மதுரை மாநகரத்திலிருந்து பாடிமுடித்தனரென்பது இவர் கூறிய அந்நூல் அவை யடக்கத்திலுள்ள வொருபாடலாற் றெரியவருகிறது. அந்நூல் இதுகாறும் வெளிப்படாமலேட்டுச்சுவடியாகச் சிற்சில இடங்களிலேயுள்ளது; இது படிப்பவர்க்கு மிகவினிமையான சுவையுடைத்தென்பது தாலிபுலாக நியாயமாகக் காட்டுதற்குத் திருச்செந்தூர்ப்பிள்ளைத்தமிழிலொரு பாடலே போதும். இன்னும் இவர்பாடிய நூல்கள் இன்னின்னவை யெனத்தெரியவில்லை. யென்னுடைய நூலாராய்ச்சியில் இனித்தெரிந்தாலப்போது வெளியிடுவேனாக. இதுகாறுங் கூறிவந்தவை; கன்னபரம்பரையாலும் மதுரைத்தமிழ்ச்சங்கம் செந்தமிழ்ப்பத்திராசிரியர் ஸ்ரீமாந் மு. ராகவையங்காரவர்கள் பலபிரபல நியாயங்கள்கொண்டு எழுதிய செந்தமிழ் ஆறாந்தொகுதி 131-முதல் 134, முடிவு பக்கங்களிலுள்ள வசனங்களாலுங் கண்டவை.

இவர் காலமின்னதென்பது இவர் பாடியநூல்களாலும் பிறவற்றாலும் பலவழியால் ஊகித்தாலுங் குறிப்பாகக் கூடவிளங்கவில்லை. அறிஞர்களாராய்ச்சி செய்வாராக. சுபம், சுபம், சுபம்.

இங்ஙனம்.
மதுரைத்தமிழ்ச்சங்கம்
வித்துவான்.
மு. ரா. அருணாசலக்கவிராயர்.

உ

குமரன்றுணை.

துறைமங்கலம்
சிவப்பிரகாசசுவாமிகளருளிச்செய்த

திருச்செந்தினிரோட்டகயமகவந்தாதி

மூலமும் அரும்பத உரையும்.

காப்பு.

கொற்ற வருணனை நின்றன் றுழக்கிய கொக்குருவைச்
செற்ற வருணனை யன்னசெவ் வேற்படைச் செந்திலர்க்கு
முற்ற வருணனை யந்தாதி யென்று மொழிமதப்பேர்
பெற்ற வருணனை யானனத் தாதியைப் பேசுவனே. (௧)

நூல்.

யானைக்கண் டங்கரி சென்றேத் தெழிற்செந்தி னின்றனைக்கே
யானைக்கண் டங்கரி யற்கங்க யிலையை யேத்ததகை
யானைக்கண் டங்கரி சேரெண்டிக் காக்கினற் கிசைவிசை
யானைக்கண் டங்கரி தாகிய சீர்க்கதி யெய்தினனே. (௨)

(௧) கொற்றம் - வெற்றி. வருணன்-கடற்கிறைவன். உழக்கிய-வருத்தப்படுத்திய. கொக்குருவை - மாமர வடிவமாகிய சூரபன்மனை. செற்ற - கொன்ற. அருணனை - சூரியகிரணத்தை. முற்ற - முடியும் பொருட்டு. வருணனை - வருணித்தல்; சிறப்பித்துச் சொல்லுதல். மதப்பேர் - மதமென்கிற பெயரை. அருள் - கிருபையில். நனை - தோய்கின்ற. ஆனனத்து - முகத்தையுடைய - ஆதி - விநாயகக்கடவுள்.

(௨) யானைக்கண் (வெள்ளை) யானையின்மேல். அரி - இந்திரன். யான் - நான். ஐ - அழகிய. கண்டம் - கழுத்து. கரியற்கு - கருநிறமுடைய சிவபிரானுக்கு. கயிலையை - கயிலாசமலையை. ஏத்த - ஒத்த. தகை - அழகு. ஆன் - இடபவாகனத்தையுடைய. ஐக்கு - கடவுளுக்கு. கரி-(திக்கு)யானைகள். ஆக்கினற்கு - உண்டாக்கியமுதல்வனுக்கு. ஈ - (பிரணவப்பொருளை) யுபதேசித்த. கண்டு - தரிசித்து. அங்கு - அத்திருச்செந்தூரில்.

தினகர னந்த நனியிலங் காநின்ற செய்யநற்செந்
தினகர னந்த நிதியா யினனடற் சிரயிலேந
தினகர னந்த கனைச்செற்ற தாளர் திகழ்கனகா
தினகர னந்த நடனர் தனயனென் சிந்தையனே. (உ)

சிந்தனை யாகத் திசையந் தணர்க்கிறை சேரகங்க
சிந்தனை யாகத் தரையளித் தாடரை சென்றிரந்த
சிந்தனை யாகத் திடையியைந் தான்றந்த சேயளியாற்
சிந்தனை யாகந்த நற்செந்தி லாய்நினைச் சேர்ந்தனனே. (௩)

தனத்தலங் கார நிறைநா ரியரந் தரத்தசைசே
தனத்தலங் கார நிகழரங் காடச்செய் தன்னினயத்
தனத்தலங் காரத ராயியங் கந்நக்க தண் செந்திற்கந்
தனத்தலங் காரனை யானய னேத்திடத் தங்கினனே. (ச)

(உ) தினகரன் - சூரியகிரணம். நந்த - கெட. நனி - மிக. செந்தில் - திருச்செந்தூரென்னும். நந்தம் - நம்முடைய. நிதி - செல்வம். அடல் - வலிமை. அந்தகன் - யமன். செற்ற - (உதைத்துச்) சயித்த - திகழ் - விளங்குகின்ற. கனம் - மேன்மையுடைய - காதில்,— அனந்த - ஆதிசேடனாகிய (குண்டலத்தையுடைய) நடனர் - நடராசப்பெருமானது. தனயன் - புத்திரன்.

(௩) சிந்தனை - மனம். யாகத்து;— இசை - பொருந்திய. அந்தணர்க்கு - பிராமணர்க்கு. சேர் - பொருந்திய. அகம் - மனம். அனையாக - தாயாக. தரை - பூமியை. அளித்தாள் - தந்த உமாதேவியையும். தரை - பூமியை. இரந்த - (மாவலிச்சக்கிரவர்த்தியிடம்) யாசித்த - சிந்தனை - குள்ளவடிவாகிய விஷ்ணுவை. ஆகத்திடை - (தமது) திருமேனியிடத்தில். இயைந்தான் - (இடப்பக்கத்தும் வலப்பக்கத்துமாகப்) பொருந்திய சிவபிரான். சேய் - முருகக்கடவுளே. அளியால் - கருணையால். சிந்து அனைய - கடல்போன்றவரே.

(ச) தனத்து - முலையினிடத்து. அலங்கு - அசைகின்ற - ஆரம் - முத்தாபரணம். அந்தரத்து - ஆகாயத்தில். கேதனத்து - கொடிகளின். அலங்காரம் - அழகு. அரங்கு - நடனசபையில். செய்தன்னில் - வயல்களில். நயத்த நந்து - நன்மையையுடைய சங்குகள். அலம் கார் - கலப்பைசாலிலுள்ள நீர் - அதரா (நடக்கும்) வழியாக. இயங்கத்தக்க - ஊர்ந்து செல்லத்தக்க. அத்தலம் - அத்திருச்செந்தூரில் - காரனையான் - மேகம்போன்ற விஷ்ணு.

தங்கந் தனங்க ளடையத் தனியெனைத் தள்ளியங்கே
தங்கந் தனங்க டரச்சென் றனரறிந் தாரிலைகா
தங்கந்த னங்க ளலர்காக்க ளூரெழிற் றண்செந்திலார்
தங்கந் தனங்க நிகர்செக்கர் செய்சஞ் சலத்தினையே. (ரு)

சலந்தர னாகந் தரித்தார்தந் தாதன் றனதிடைச்சஞ்
சலந்தர னாகந் தரைநடந் தாலெனச் சார்ந்ததண்டன்
சலந்தர னாகந் தளரச்செற் றார்தன யன்றலைச்
சலந்தர னாகந் தனக்கிறை சேர்செந்தில் சார்ந்திடற்கே. (சா)

சாரங்கஞ் சங்கரி கட்கிச்சித் தேய்ந்தகைச் சங்கரனார்
சாரங்கஞ் சங்கரி தாஞ்சக் கரங்கையிற் றுங்கினன்சேய்
சாரங்கஞ் சங்கரி யாநன்னி னர்க்கந்தத் தந்திரத்தா
சாரங்கஞ் சங்கரி தேயெனச் செய்நின் சரண்டந்ததே. (எ)

(ரு) தங்கம் - பொன்போலுந்தேமல். தனங்கள் - (என்) முலைகள். தங்கு - தரித்திருக்கின்ற - அந்தனங்கள்தா - அழகிய திரவியங்கள் கொண்டு வந்து கொடுப்பதற்கு (பொருள்சம்பாதித்துக்கொண்டு வருதற்கு). காதம் - காததூரம். கந்தம் - வாசனைசெய்கின்ற. நம் - நமது. கள்அலர் - தேனிறைந்த பூக்கள். காக்கண் - சோலையினிடத்து. ஆர் - பொருந்திய. செந்திலார் தம்கந்தன் - திருச்செந்தூரிலுள்ளாருடைய முருகக்கடவுள். அங்கம்-(தமது) திருமேனியை. செக்கர்-செவ்வானம் - சஞ்சலம் - துன்பம். [இது, தலைவி தலைவனைப் பிரிந்து மாலைப்பொழுது கண்டிரங்கல்.]

(சா) சலம் - கங்கை - தாம் - தலைமாலை. நாகம் - பாம்பு - தாதன் - தொண்டனாகிய மார்க்கண்டமுனிவன் - சஞ்சலம் - துன்பம். நாகம் - யானை. தண்டன் - யமனையும் - சலந்தரன் - சலந்தராசுரனையும். ஆகம் - சரீரம் ... சலம்-ற்றார் - கொன்றசிவபிரான். தனயன் புத்திரன். தலம் - இருப்பிடம். நச்சலம் - தலை விரும்பினேனில்லை, தாநாகம் - தகுதியையுடைய மலைகளுக்கு. இல்லை - தலைவராகிய முருகக்கடவுள். தனையனாகிய நாகந்தனக்கிறைசேர் செந்திற்றலை மெனக்கூட்டுக.

(எ) சாரங்கம் - மான். சங்கரிகண் - உமாதேவியின் கண்களுக்கு. இச்சித்து - ஆசைப்பட்டு. எய்ந்த - (வந்திருந்தாற்போலப்) பொருந்திய. சாரங்கம் - வில் - சங்கு;— தாங்கினான் - தரித்தவிஷ்ணு. சேய் - மன்மதனாகியபின்னை. சார் - பொருந்திய. அங்கம் - சரீரத்தை. சங்கரியா - சங்காரஞ்செய்து. நண்ணினர்க்கு - (முன்போல) யோகத்திலிருந்தசிவபிரானுக்கு. தந்திரத்து - (சைவாகம) நூலின். ஆசாரம் - ஒழுக்கத்தை. கஞ்சமலர் - தாமரை மலரை. சரண் - (உமது) திருவடி. 2-அடி. சார்ங்கமென்பது சாரங்கமென்றாயிற்று

தந்தனஞ் சங்கை யணிகார் சேர்க்கத் தடங்கணலை
தந்தனஞ் சங்கை யலரென்செய் யாடங்கச் சற்சனர்நித்
தந்தனஞ் சங்கை யகலறத் திசெந்திற் சார்கதனித்
தந்தனஞ் சங்கை யநக விளையனற் றூடரத்கே. (அ)

தரங்கனந் தார வளிபெற் றெழிற்செந்திற் றங்குநிரந்
தரங்கனந் தாரக நாடினென் றேகினை சந்திரபரந்
தரங்கனந் தார நகரிசர் செய்கிரிந் தையலர்க்கந்
தரங்கனந் தாரள கஞ்சிற் றிடைசல சங்கண்களே. (கூ)

சங்கங் களங்கழ னிக்கரை சேர்செந்திற் றங்கினரஞ்
சங்கங் களங்கர நண்ணரன் சேயெய்தச் சார்ந்தனஞ்சற்
சங்கங் களங்க னியைநிகர் தண்ட தரற்கினிய
சங்கங் களங்க ரெனநின்ற யாங்களெஞ் சங்கணைந்தே. (௰)

(அ) தம்தனம் - தங்களுடைய கொங்கையில். சங்கை - சங்குவளையலே. கார்-கையையுடைய பெண்கள். தடம்கண் -|(அப்பெண்களது) விசாலமாகியகண் (வலையிற்சிக்கி). அலைதந்தனம் - அலைந்தோம் (மனமே). சம்-(அப்பெண்களது) சுகத்தை. கை - வெறுத்துவிடு. (அப்படிச்செய்தாலவரும்) அலர் என் - பழிச்சொல்யாது. செய்யாள் - இலக்குமி. தங்க - வசிக்க. சற்சனர் - சன்மார்க்க முடையபெரியோருக்கு. சங்கை - சந்தேகதசை. அறத்து ஈ-தருமவழியிலே கொடுப்பாய். சார்க-சேர்வாய்-தனித்தந்தன் - ஒற்றைக்கொம்புடையவரும். அஞ்சு அம் கை அநகன் - ஐந்து அழகிய கையையும் பாவமில்லாமையையுமுடைய விநாயகருக்கு. இளையன்- தம்பியாகிய முருகக்கடவுள்.

(கூ) தரங்கம் - கடலலைகள். நந்து - சங்குகளை - ஆரல் மதிலின்மேல். நனி - மிக. எற்று - வீசுகின்ற. நிரந்தரம் - எப்பொழுதும். கனம் - மேன்மை. தாரகம் - பிரணவப்பொருளை - நாடின் ஆராய்ந்தால். என - என்று. அந்தரங்கம் - இரகசியத்தில் (இருதயத்தில்). நந்தார் - கெடாமலிருப்பவர்- அநகர் - பாவமில்லாதவர். சேய் - பிள்ளையாகிய முருகக்கடவுள். கிரித்தையலர்க்கு - மலையிலுள்ள பெண்ணுக்கு. அந்தரம் - ஆகாயமும். கனம் - மேகமும். அளகம் சிற்றிடை - கூந்தலும் சிறிய இடையும் (போலும்). சலசம் - தாமரை மலர் [இது பாங்கனுக்குத்தலைவன் தலைவியயவிடங்கூறுதல்].

(௰) சங்கங்கள்-சங்குகள். கழனிக்கரை-வயல்வரப்பு. கஞ்சம்-விஷமும். கம்-பிரமகபாலமும். களம்-கழுத்திலும். கரம்-கையிலும். சேய்-பிள்ளையாகிய குமாரக்கடவுள். களங்கனி-களாப்பழம். தண்டதரன்-யமன். அசங்கம் - பயப்படமாட்டோம்.

கரந்தரிக் கங்கணங் கட்டர ஞர்நந்த கந்தாழ
கரந்தரிக் கங்கணங் கண்டசெய்ச் செந்திலெங் காங்கெயர்சா
கரந்தரிக் கங்கணங் கட்டய ஞர்க்கெழிற் காசணிசே
கரந்தரிக் கங்கணங் கற்றிடந் தாங்கினர் கைச்சத்தியே. (௰௧)

சத்திக் கரந்த னகச்சேயங் கத்திகைத் தந்தனனற்
சத்திக் கரத்த னகச்சிலை யாளிதன் றூளியைநே
சத்திக் கரத்த னகத்தியைந் தேந்தான் றந்தநிர்ச்
சத்திக் கரத்த னகசெந்தி லாய்நின் சரண்சரணே. (௰௨)

சரிதங்கை யாரக் கலன்றந் தனந்தரித் தார்நரகே
சரிதங்கை யாரக் கரிடந்தி ஞர்தந்த தண்செந்திலே
சரிதங்கை யாரக் கனத்தின்னல் கைத்தல் சரதந்தருசீர்ச்
சரிதங்கை யாரக் ககிந்திசைக் கின்ற தகையினர்க்கே. (௰௩)

---

(௧௧) அரிக்கங்கணம்-பாம்பாகியகங்கணம். அழகர்-அழகையுடையவர். இக்கு-கரும்புகள். அங்கணம் - சேற்றினிடத்து. கண்ட - உண்டாகப்பெற்ற. செய்-வயல். அரிக்கு-விஷ்ணுவுக்கு. கணம் - தேவர்முதலியகணங்கள், காசு - இரத்னமாலை. சேகரம்-தலை. அரிக்கு - இந்திரனுக்கு. அனங்கு- (சூரனுலுண்டாகிய) வருத்தம். காங்கேயரென்பது-செய்யுள் விகாரத்தாற் காங்கெயரென்னப்பட்டது. மேலிங்ஙனம் வருவதுமது.

(௧௨) சத்தி-பலமுடைய.கர-முதலையினது. அக வயிற்றினுள்ளே புகுந்த. சேய்- (பிராமணப்)பிள்ளை. அங்கம் - உடல். நற்சத்தி - நல்லவுமையாளுக்கு. (வலப்பக்கத்திலே) அரத்தன்-சிவப்புநிறமுள்ளவன். நேசத்து-அன்புடைய இக். கர்-கருப்புவில்லையுடைய மன்மதனது. அத்தன்-பிதாவாகியவிஷ்ணு. அனக-பாவமில்லாதவரே. சரண்-அடைக்கலம்.

(௧௩) சரி-வளையலை. தம் கை-தமது கையிலும். ஆரக்கலன்-முத்துமாலையை. தம்தனம்-தமது கொங்கையிலும். நரகேசரி-நரசிங்கமாகியவிஷ்ணு. அக்கர்-சங்குமணியையுடையவர். இன்னல்-துன்பத்தை. கைத்தல்-வெறுத்துநீக்குதல். சரதம்-ஒழுக்கம்பொருந்த. தகையினர்-அழகுடையவர். அக்கர்இடத்திருரென்பதை, இடத்திருர் அக்கர் எனமாற்றிப் பொருள்கொள்க.

இன்னந்தி யங்கி நிகர்த்தசெங் கேழன்கை யீரிரண்டா
யின்னந்தி யங்கிரி யைச்சிலை யாக்கிதன் சேயெழிற்செய்
யின்னந்தி யங்கி யிருங்கஞ்சஞ் சேர்செந்தி லெந்தைதனை
யின்னந்தி யங்கிசை யக்கதி யீந்தன னென்றனக்கே. (௰௪)

தனக்கடங் காரெயில் செற்றகங் காளன் றனயனங்கந்
தனக்கடங் காவிழி தந்திக் கிளையன் றளிரெழிற்சந்
தனக்கடங் காநிறை செந்தியி னற்சேய் சயிலநங்கை
தனக்கடங் காணினச் சாரிலை யண்ணா றரணியிலே. (௰௫)

தரணி யனைய நிறத்தண்ண லாரிரந் தன்றளந்த
தரணி யனைய னிறைஞ்சயி லார்நற் றனிச்சிலையாந்
தரணி யனைய னகனனை யந்தரி தந்திடுகந்
தரணி யனையனெஞ் சேயலர்த் தாள்க டரித்திடுநெஞ்சே. (௰௬)

தரிக்கனந் தங்கலை நீள்சடைக் கைக்கனற் சங்கரனந்
தரிக்கனந் தங்கலை நீதிகள் சாற்றரன் றந்தகற்கந்
தரிக்கனந் தங்கலை நீர்ச்செய்க்க ளூஞ்செந்தி லார்தனையா
தரிக்கனந் தங்கலை நீத்திழந் தேங்கரச் சங்கங்களே. (௰௭)

(௰௪) அந்தி - செவ்வானம் - அங்கி - நெருப்பு. கேழன் - நிறமுடையவன். ஆய் - தாய் - இல் - இல்லாத. நந்தி,— கிரி - (மேரு) மலை - சிலையாக்கி - வில்லாகவளைத்தவர். செய்யில் - வயலில். இரு - பெரிய. கஞ்சம் - தாமரைமலரில். தளையில் - பாசத்தால். நந்தி - கெட்டலைந்த. நான்குகை; அபயம், வரதம், மான், மழு; இந்தநான்குந்தனித்தனியுடைய நான்குகைகள்.

(௰௫) அக்கடம் - அந்தமதம். காதுவிழி - காதினளவும் நீளப்பெற்ற. தந்தி. யானைமுகவிநாயகக்கடவுள். கடம்-காடு. கா - பூஞ்சோலை. சயிலம் - மலையிலிருக்கிற. தனக்கடம் - முலையாகியகுடத்தை. நச்சார் - விரும்பாதவர். அண்ணலே - தலைவனே. [தலைவியி னிலக்கணத்தைத் தலைவன் பாங்கனுக்குக்கூறுதல்].

(௰௬) தரணி - சூரியன். தரணியன் - பூமியையுடைய விஷ்ணு. சிலை - வில். தரணியன் - மலையையுடைய சிவபிரான். ஐ - அழகு. கந்தர் - முருகக்கடவுளே. அணி - நன்மை. அல் - அரணுவர்; (காவலாவர்). தையல் - வருந்தாதே.

(௰௭) தரிக்க. (தன்னைச்) சூடிக்கொள்ள. (உடனே) நந்து - விளங்குகின்ற - அம்கலை - அழகிய சந்திரகலையையுடைய. அந்தரிக்கு - பார்வதிக்கு. இக்கு - கரும்பானது. தனை - (ஆகுபெயர்) மாலையை. நந்தம் - நம்முடைய. சங்கங்கள்- வளையல்கள். [இது முருகக்கடவுள் பவனிகண்டபெண்கள் சொல்லியது].

சங்கரி யக்க நிகர்த்தநின் றுதை தகையதென்னச்
சங்கரி யக்க ரிறைஞ்செழிற் செந்திற் சடானனகஞ்
சங்கரி யக்கதிர் தானிசை கின்ற சரணத்தினூற்
சங்கரி யக்கணத் தேயெற் செறியந் தகற்சினந்தே. (௰௮)

தகர னலங்க நிறைநிறத் தான்செந்திற் றந்தைசங்கேய்ந்
தகர னலங்க னளிறு தனத்தினன் றுமுளகந்
தகர நலங்க டாநின்ற சத்தியன் றுளெனினந்
தகர னலங்கனன் றுலெனச் சிறிடத் தக்கரன்றே. (௰௯)

தக்க னகந்தி னடறணித் தாரயன் றன்கதிசந்
தக்க னகந்தி கிரிக்கர னுக்கங்க டந்தளிக்கத்
தக்க னகத்தி யனையாளி யென்னெஞ்ச தாஞ்சலசந்
தக்க னகந்தி னகரன்றன் செந்திலைச் சந்திக்கினே. (௨௰)

(௰௮) சங்கரி - உமாதேவி. அக்கம் - கண். தகையதென்ன - குணம்போல. சங்குஅரி - சங்கத்தையுடைய விஷ்ணு. இயக்கர் - தேவசாதியிலொரு பிரிவார். சடானன - ஆறுதிருமுகங்களுடையவரே கதிர் - பிரகாசம். சங்கரி - சங்காரஞ்செய்வாயாக. எற்செறி - என்னிடத்தில் நெருங்கும்.

(௧௯) தகரன் - ஆட்டுவாகனத்தையுடையவன். நல் - நல்ல. [illegible]ந்த - பொருந்திய- அலங்கல் - விளங்குதலையுடைய. தாழ் - வணங்குகின்ற [illegible]ளக [illegible] தெய்ம் - கூந்தல் - தகரம் - மயிர்ச்சாந்தின். சத்தியன் - கிரியாசத்தியாகி [illegible] அந்த வயானையம்மையுடையவன். தாளெனின்-திருவடியென்று சொன்னு[illegible] தக[illegible]கர் - யமனூர் - அனலம் - தீ - கனன்றுலென - சுட்டாற்போ[illegible] தக்கவர்.

(௨௰) அகத்தின் அகங்காரத்தின். தணித்தான் - கெடுத்த உருத்திரமூர்த்தி. கதி - பதவி. சந்தம் - அழகு. திகிரி - சக்கரம். ஆக்கம் - செல்வம். தக்கன் - தக்கவன். ஆளி - ஆண்டவன். சலசம் - தாமரையில் - தக்கு- தங்குகின்ற. அனக - பாவமில்லாத. தினகரன் - (ஞான) சூரியனாகிய குமாரக்கடவுள். தங்கு - என்பது எதுகை நோக்கித்தக்கு எனவிகாரப்பட்டது.

சந்தத் தனத்திக டந்திறந் நாசை தலத்திளிச்சை
சந்தத் தனத்தி லைசதி ரடியன் றனதில்சேர்
சந்தத் தனத்தி யதளான் றனய தடக்கயல்கஞ்
சந்தத்த நத்தி னினம்பி ழிமிசெந்திற் றங்கினற்கே. (உக)

தங்கச் சினகர மேராக் கலந்திச் சகமிறைந்தார்
தங்கச் சினகர மேயர் தனயன் றனக்கினிதாந்
தங்கச் சினகர நீள்செந்தி னாட்டிற் றனகரிதந்
தங்கச் சினகர நற்கன மென்னங்க டையலர்க்கே. (உஉ)

அலரி கனத்தலை யாழிகண் டாங்குச் சிகியினிடை
யலரி னனந்த நிகராயி னான்செந்தி லாயிழையை
யலரி னனந்த நினைநிலன் தேர்ந்தநற் கன்றயல
ரலரி னனந்தஞ் சொலற்கிட ஞெகெஞ் சழிகின்றதே. (உங)

(உக) சந்தத் தனத்திகள் - சந்தனமணிந்த கொங்கையுடைய பெண்கள். திறத்து - காரணத்தால் (ஆகும்). தலம் - பூமி. சந்த - நிறம். நசை - ஆசை. நிர் - நீக்கியருளுவாய். அடியன் - தொண்டனாகிய [illegible] நக்ஷத்திராய ஞர் - இல்-மனைவியாகிய பரவைநாச்சியார். இல் - வீட்டில் சந்து - தூதை யுடைய. அத்தி அதள் - யானைத்தோல் - தனய - புத்திரனே. தடக்கயல் - வாவியிலுள்ள கெண்டைமீன்கள். கஞ்சம் - தாமரையில். தத்த - தாவ. நத்தினம் - சங்கத்தின் கூட்டங்கள் - மிழ் இழி - (அப்பூவைவிட்டுச்) சிதையிறங்குகின்ற. தங்கினற்கு - வசித்திருக்கும் அடியேனுக்கு.

(உஉ) அச்சின் - உயிரெழுத்துகளுக்குள்ளே. அகரம் நேரா - அகரவெழுத்தொப்பாக. கச்சிநகரம் - காஞ்சிபுரம். தனயர் - புத்திரன். சினகரம் - ஆலயம். செந்தில் நாட்டில். பாண்டிநாட்டிலே. தன கரி தந்தம் - முலையாகிய யானைக் கொம்பு. கச்சில் நகர - கச்சைவிட்டெப்பி றுங்க. நற்கனம் - நல்ல பாரம். என்-யாதுகாரணத்தாலுண்டாகியது. (பாங்கிபேசிசொல்). [செவிலி [illegible] லவியினது முலையீழுப்பைக்கண்டு சந்தேகமுற்றுப் பாங்கியை வினவு [illegible] ல்]. எல்லாவெழுத்துக்களும் வாய்திறப்பினுலேயே பாகெனாலா [illegible] வாய் திறப்பேவடிவாகிய அகரம் எல்லாவெழுத்துக்களிலுங்கலந்து நிற்பதுகாண்க.

(உங) அலரி - சூரியன். கனத்தலை - நவெடம் - ஆழி - கடல். கண்டாங்கு - தோன்றினாற் போல. சிகி - மயில். அலர் - விளங்குகின்ற. இனன் - [illegible] லனாகிய (முருகக்கடவுள்). அந்தம் - அழகிய. நிகர் - பேரொளியுடைய. ஐ - ஐந்து. அலர் - புட்பபாணங்களின். இனல் - துன்பம் - நந்த - கெட. நிலம் - (இந்) நாட்டில். தேர்ந்தற்கு - தெளிந்து தேடியதற்கு. அயலார் - பக்கத்திலுள்ளவர் - அலரின் - பழிமொழிகளில் - அனந்தம், - இடு - இடமாக. ஆழிகனத்தலையெனக் கூட்டுக.

தேயத் தியங்கி யலகி றலங்களிற் சென்றடிக
டேயத் தியங்கி யலைய திடங்கதி சேர்தலறைந்
தேயத் தியங்கின நித்திலந் தானெறி செந்திலடைந்
தேயத் தியங்கி தரித்தான் றனயற் றெரிசிக்கினே. (உச)

சிக்கத் தனங்க டிறக்கின்ற கன்னியர் சிந்தைகணே
சிக்கத் தனங்க ளளித்தழிந் தேறலெழிற் செந்திறரி
சிக்கத் தனங்க ழலையேத்த நல்கினன் சீர்நிறைகா
சிக்கற்ற னங்க ளகிலேசன் றந்த திறற்கந்தனே. (உரு)

கந்தரங் கானந் தனிற்சென் றடங்கிலென் காசிக்கநே
கந்தரங் கானந்த நண்ணிலென் கன்னியர் கட்டளக
கந்தரங் கானந்த நின்று டெழிற்செந்தில் கண்டிறைஞ்சிக்
கந்தரங் கானந்த நல்கச் சனனங் கடந்திலரே. (உசா)

கடனந்தி னாகத் ததளாடை யாயெனைக் காக்கனிற்கே
கடனந்தி னேர்ணிறத் தாயென நாரணன் கண்டிறைஞ்செங்
கடனந்தி நாதன் றனயனற் செந்திலிற் காரிகையே
கடனந்தி நாயகங் காதலர் தேரிற் கலிக்கின்றதே. (உஎ)

(உச) தேயத்து - தேசங்களில் - இயங்கி - சஞ்சரித்து. அலகு - எண். தலம் - க்ஷேத்திரம். தியங்கி - மயங்கி - அலையல் - அலையாதே (மனமே). அறைந்து - முழங்கி. அத்தி - கடல். அங்கு, - இன நித்திலம் - கூட்டமாகிய முத்துக்களை. ஏய் - பொருந்திய. அத்தி - எலும்பு - அங்கி - அக்கினி. தனயன் - புத்திரனாகிய குமாரக்கடவுளை. மூன்றாவது - அடிமுதலிலிருக்கிற ஏ. - அசை.

(உரு) சிக்க - (கண்டவர்கள்) வசப்பட. அழிந்தேற்கு - கெட்டெனக்கு. தன் - தன்னுடைய. நல்கினன் - அருள்செய்தான் - அகிலேசன் - விசுவேசன்.

(உசா) கந்தரம் - மலைக்குகை. அடங்கிலென் - ஐம்புலன்களை யொடுக்கியிருந்ததனுற் பயன் யாது. கால், - நந்த - வருந்த. அளகக் கந்தரம் - கூந்தலாகிய மேகம். கான் - வாசனை. நந்த - மிக.

(உஎ) கடம் - மதம். நந்து - கெடுதல் இல் - இல்லாத. நாகத்து - யானையின். அதள் - தோல். காக்கல் - காத்தல். கடன் - முறை. அந்தி - செவ்வானம் - நாண் - வெட்கப்படுகிற. நிறத்தாய் - செந்நிறமுடையவனே. நந்திநாதன் - நந்தியென்னும் பெயருடைய சிவபிரான். கடன் - சாரியை. நந்தின் நாயகம் - சங்குகளுக்குத்தலைமையாகி ல் - சமுத்திரத்திற்றோன்றிய, நந்தின் நாயகம் - சங்குகளுக்குத்தலைமையாகிய வலம்புரி. கலிக்கின்றது - முழங்குகின்றது. [பாங்கிவலம்புரி கேட்டுத் தலைவன் வரவைத்தலைவிக்கறிவுறுத்தல்].

கணக்காக நாய்கடின் காய நிலையெனக் கன்னியென்ன
கணக்காக நானலைந் தெய்த்தே னெழிற்செந்திற் கந்தநெற்றிக்
கணக்காக னூர்தந்த நின்றனை யேயினிக் காதலினாற்
கணக்காக னூகர்த் தேயழி யங்கத்தின் காதலற்றே. (௨௰அ)

காதலை யானின் றனக்காத் தினனினிக் காயந்தந்தே
காதலை யானின் றனக்கா ரனனடிக் கஞ்சங்கணிங்
காதலை யானின்ற கங்கரைந் தேத்தான் கன்னியராக்
காதலை யானின்ற சங்கரன் சேய்செந்திற் காங்கெயனே. (௨௰௯)

காயங் கலைய நலியந் தகனனை காலஞ்செய்ய
காயங் கலையத னானில நீரழல் காற்றெழிலா
காயங் கலைய வலரிசித் தாயினன் காதலழ
காயங் கலைய திருஞ்செந்தி லாயென்க கன்றனெஞ்சே. (௩௰)

(௨௰அ) கணம் - கூட்டமாகிய. கன்னி - கருதி. கணக்காக - (தாற்பரியம்) பிரயோசனத்தின் பொருட்டு. அக்கு ஆகனூர் - சங்குமணியைத்திருமேனியிற்றரித்தவர். கண - நினைக்கும்படி. கா - காப்பாய். கண - இடைக்குறை.

(௨௰௯) காதலை - ஆசையை. காயம் - சரீரம். தந்து - ஒருட்டித்து. காதல் - கொல்லாதே. ஐயான் - சூக்குமசொரூபி. இன் - இனிய. தனக்காரணன்-(திருவருட்) செல்வத்துக்குக் காரணமானவன். அலையான் - திருப்பாற்கடலிலுள்ள விஷ்ணு. நின்று,— கன்னி அரா - மாலையாகியபாம்பு. காது - காதில் - அலையானின்ற - அசைகின்ற.

(௩௰) காயம் - சரீரம். கலைய - கெட. நலி - வருத்துகின்ற. செய்யகாயம் - சிவந்ததழும்பு (சாக்கியநாயனூர் கலலாலெறிந்தபுண்). கலை அதன் - கலைமான்றோல். கலையன் - கலைநிறைந்த சந்திரன். அலரி - சூரியன், சித்து - ஆன்மா. ஆயினன் - ஆனசிவபிரானுடைய. காதல்-புத்திரனாகிய முருகக்கடவுளினது. அழகு,— ஆய்-ஆராய்வாய். என் - என்றுசொல்லுவாய். கன்றல் - வருந்தாதே. அழகாய்தல் - திருவுருவத்தைத்தியானித்தல்.

திருச்செந்திலந்தாதி முற்றிற்று.

இவ்வரும்பதவுரை எழுதினவர்

மு.ரா. அருணசலக்கவிராயர்,

மதுரைத் தமிழ்ச்சங்கவித்துவான்.

குமரன்றுணை.

திருச்செந்தில் நிரோட்டக யமகவந்தாதி
யருளிச்செய்த
சிவப்பிரகாச சுவாமிகள் சரித்திரம்.

இவர் சற்றேறக்குறைய முந்நூறு வருடங்களுக்குமுன் குமாரசுவாமி தேசிகரருந்தவப்பேற்றா லவதரித்துச் சிவப்பிரகாச ரென்னுந் திருநாமம்பெற்று வளர்ந்து, "இளமையிற்கல்" லென்ற தெய்வத் தமிழரசி திருவாக்குக்கேற்பச் சிறுபிராயத்திலே செந்தமிழிலக்கிய நூலாராய்ச்சியிற் றிறமையுற்றுத் தித்திக்குந்தேனுந் தெள்ளமுதும்போலச் சிலேடை, கற்பனை, திரிபு, யமகமுதலிய சிறந்த நயங்களெல்லா மமையுஞ் செய்யுள்பாடுந் திறமை மிக்காராய் நல்லொழுக்கத்திலே பழகி, எல்லாருஞ் சிவப்பிரகாச சுவாமிகளெனக் கொண்டாடப் பெற்றுத் * துறைமங்கலத்தில் வாழ்ந்திருந்தனர்.

அக்காலத்தில் துறைமங்கலங் கிராமாதிபதியாயிருந்த அண்ணாமலை ரெட்டியார் சிவப்பிரகாசசுவாமிக ளருமை பெருமைக ளெல்லாவற்றையுந் தெரிந்து அவரிடத்திலே யணுக்கத் தொண்டராய்ச் சன்மார்க்கங்களை விசாரித்தறிந்து வேண்டிய வுதவிசெய்து வந்தனர். அவ்வுதவிகளைப்பெற்று மிகமகிழ்ந்திருக்குஞ் சிவப்பிரகாச சுவாமிகள் செந்தமிழிலக்கண நூலிற் சிறந்த நூல்களையெல்லாந்தெரிந்துகொள்ள வேண்டுமென்று சிந்தித்துத் தமது அபிப்பிராயத்தை ரெட்டியாருக்குச்சொல்லி அவர்கொடுத்துதவிய திரவியத்தைப் பெற்றுக்கொண்டு தமது சகோதரரிருவருடன் பாண்டிநாட்டையடைந்து திருநெல்வேலியில் தாம்பிரபருணி நதித்துறைகளிலொன்றாகிய சிந்துபூந்துறையைச் சார்ந்து ஸ்நானஞ்செய்து நித்தியகன்மானுட்டான முடித்துக்கொண்டு வந்து அவ்விடத்திலிருக்கின்ற தருமபுரவாதீன மடாலயத்தில் வீற்றிருக்கும் வெள்ளியம்பலவாண தம்பிரான் மூர்த்திகளைத் தரிசித்துத் தாமெண்ணிவந்த காரியத்தை விண்ணப்பஞ்செய்தனர்.

---

* துறைமங்கலம் வாலிகண்டபுரத்துக்குத் தென்பாகத்திலுள்ளது.

அந்தம்பிரான் மூர்த்திகள் அதுகேட்டு மகிழ்ந்து இலக்கியப் பயிற்சியைச் சோதிக்கும்பொருட்டு முதலிலும் ஈற்றிலும் கு. எனபது வர இடையிலே ஊருடையா னென்பதை வைத்து ஒரு வெண்பாப் பாடுகென்று கட்டளையிட்டனர். அவர் ஆஞ்ஞையின்படி சிவப்பிரகாச சுவாமிகள்

குடக்கொடு வானெயிறு கொண்டாற்குக் கேழல்
முடக்கொடு முன்னமணி வாற்கு—வடக்கோடு
தேருடையான் றெவ்வுக்குத் தில்லைநோன் மேற்கொள்ள
ஊருடையா னென்னு முலகு.

என்னும்வெண்பாவைப்பாடியருளினர். அப்பாடலைக்கேட்டதம்பிரான் மூர்த்திகள் ஆனந்த பரவசமடைந்து "கூரியதுடனே கொடுத்தம்பழுகுக" என்பதற்கு இலக்கியமாகிய சிவப்பிரகாச சுவாமிகளை மகிழ்ந்து அவருக்கும் அவர் சகோதரரிருவருக்கும் பதினைந்து நாளுக்குள்ளே பஞ்சலக்ஷணங்களையும் பாடஞ்சொல்லியருளினர். இங்ஙனம் போதனா சத்தியிற் சிறந்த ஆசிரியராகிய வெள்ளியம்பலவாண தம்பிரான் மூர்த்திகளை வியந்து சிவப்பிரகாச சுவாமிகள் பத்திபண்ணிக் குருதக்ஷிணையாக முந்நூறு பொன்னை வைத்து உபசரித்து வணங்க, அம்மூர்த்திகள் இத்திரவியம் எமக்குப் பெரிதன்று. உமதன்பே போதும்., ஆயினும் நீர் செய்யவேண்டுவ தொன்று; அஃதாவது: திருச்செந்தூரிலே வித்தியா கருவமுடையவ னொருவனிருக்கிறான் அவனை விவாதத்தால் வென்று நமக்கடிமையாக்குவதே யென்றருளிச்செய்தனர்.

சிவப்பிரகாச சுவாமிகள் அதுகேட்டு நமது திருவருள் வலிமையால் அங்ஙனஞ் செய்வேனென்று விடைபெற்றுத் திருச்செந்தூரை யடைந்து முருகக் கடவுளைத் தரிசனஞ்செய்து தமதெண்ண நிறைவேற்றி யருளவேண்டுமென்று பிரார்த்தித்துப் பின்னர் வித்தியாகருவப் புலவரைக்கண்டு பேசும்போது தமதாசிரியராகிய தம்பிரான் மூர்த்திகளைப் புலவர் தூஷித்தனர். அது பொறுக்கமாட்டாத சிவப்பிரகாசசுவாமிகள் அவரோடு விவாதஞ்செய்து சபையார் முன்னர் நமது குமாரக்கடவுள் மீது † நிரோட்டயமகமாக அந்தாதிக் கலித்துறை முப்பது பாடல் முந்திப்பாடி முடிந்தவருக்குப் பிந்தியுள்ளார் அடிமையாகவேண்டுமென்று வாக்குத்தத்தஞ்செய்து திருவருளால் இந்நூலா

† நிரோட்டம்-இதழோடிதழ் சேராமற் பாடுவது.

கிய திருச்செந்தி னிரோட்டக யமகவந்தாதியைப் பாடி முடித்தனர். ஒரு பாட்டேனும் பாட முடியாமலிருந்த புலவர் அம்முப்பது பாட்டையுங் கேட்டு மகிழ்ந்து தாமே அவையார் சொல்லுதற்கு முன்னரே சுவாமிகளுக்கு நான் அடிமையாயினே னென்றனர்.

உடனே சிவப்பிரகாச சுவாமிகள் தமதடிமையாகிய புலவரைச் சிந்துபூந்துறைக்கு அழைத்துவந்து தமது போதகாசிரியராகிய வெள்ளியம்பலவாண தம்பிரான் மூர்த்திகளுக்கு அடிமையாக்கி மகிழ்வித்து அம்மூர்த்திகளிடம்விடைபெற்றுக்கொண்டு மீண்டுவந்து அவராஞ்ஞையின்படி சிதம்பரத்திலே சிலகாலம் வசித்திருந்தனர். இவர்பாடிய நூல்கள் சீகாளத்திப் புராணம், பிரபுலிங்க லீலை முதலியனவைகளாம். அவைகளின் பெயர்களைச் சிவப்பிரகாச சுவாமிகள் பிரபந்தத்திரட்டு என்னும் நூலிலே கண்டுணர்க. அந்நூலிலே இவர் சரித்திரம் முழுதும் விடாமல் விரித்தெழுதி யிருந்தலால் இங்கே வேண்டியமட்டிற் சுருக்கிக் கூறியுள்ளேன். சுபம்! சுபம்! சுபம்.

இங்ஙனம்,
ஸ்ரீ மு. ரா. அருணாசலக்கவிராயர்
மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான்.

உ

குமரன்றுணை.

திருவாவடுதுறை ஆதீனம்
சுவாமிநாத தேசிக ரருளிச்செய்த
திருச்செந்திற் கலம்பகப்

பாயிரம்.

மதிக்கும் பரிதிக் கடவுளுக்கும் வழங்கும் விழியா னருண்மதலைக்
கொதிக்கும் படங்குங் கலம்பகப்பா விசைக்குந் தமிழா யினிதிசைத்தான்
புதுக்குந் தமிழ்த்தென் கடல்கடக்கப் பொருந்துந் தோணி போலியல்
அதிக்குந் தமிழார் துறைசைநகர்ச் சுவாமி நாத தேசிகனே. [செப்

உ

குமரன்றுணை.

திருவாவடுதுறை ஆதீனம்
சுவாமிநாத தேசிக ரருளிச்செய்த
திருச்செந்திற் கலம்பகம்

விநாயக வணக்கம்.

நிலம்பக விழ்சடை நீறணி வான்மைந்த னீடயிலோன்
கலம்பகஞ் செந்தமிழ்ப் பாமாலை யாற்செந்திற் கண்மருது
சிலம்பக மெல்லடி வல்லபை கேள்வனைத் திங்கள்வெண்கோட்
டிலம்பக யானை முகத்தானை வாழ்த்தி யியம்புவனே.

நூல்.

மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா.

நாலடித்தரவு—உ.

சொல்வாய்மை தருங்கடவுட் சுருதிதரு மியபொருளைப்
பல்சான்ற பெருங்கேள்விப் பனிமலய முனிவினவ
வெம்புயனு மறியாத வறமுதலாந் தமிழ்மூன்றுஞ்
சம்புவுமன் றடனுணரத் தருவோய்நீ முருகோனே
கண்சுருங்க விரித்தபசுங் கலைமயி லெனத்திருமுன்
மண்சுருங்க விரித்தருணை மணியாழி யெழுபரித்தே
ரந்தினக ரனைத்தடுக்கு மணிமணிமா ளிகைப்புரிசைச்
செந்திநகர்ச் சினகரத்துத் திருத்தகவீற் றிருந்தனையால்.

ஈரடித்தாழிசை—கூ.

ஊனாகி யுயிராகி யுணர்வாகி யுணர்வுதரு
கோனாகி வினையளவுங் குணத்தளவுந் தனக்களவாய்

[அரும்பதவுரை.]

பக-பிளக்க. சிலம்பு-பாதசரம். அகம்-உள்ளிடத்தில். மெல்-திருவத்தன்மையுடைய. கேள்வன்-கணவன். இலம்பகம்-நெற்றிப்பட்டம்.

விரவாதி யந்தமிலா வெளியாகித் தெளியாது
பரவாதி யருமறைகள் பாயமொழியுந் தாமறைய
வாக்குமன முங்கடந்து மன்னிறைவின் விடத்தியற்றும்
போக்குவர வொழிந்தொழிப் புலத்துருவ மருவுமாய்
வேதாந்த சித்தாந்தம் விளங்குகலாந் தக்கதெரிந்த
போதாந்த நாதாந்தப் புத்திருமைப் புறம்போகி
புணர்ந்தாரு முணராரு முணராமை யுயிர்க்குயிராய்ப்
புணர்ந்தாலு மாறுபுல னுமுங் கலவாது
நின்றதனிப் பரம்பொருளே நினக்கொருபே ரிலையெனினு
மின்றருக வெனப்பெறுவ தியம்போய்நின் விளையாட்டே.

ஈரடி அராகம்—௪.

அருமறை முறையிட வரைகழல் பறையிட வடியரு ணினைவ தன்னடி
பொருமையி னிருமையு முதவிய மதியென வொளிபொடு ஞிரிவ தன்முகம்
வருமலை யணிதைய திருவரு மயிலின மழையென விழைவ தன்னெழில்
பெருகலை செழுகலி கடலினு மெழுமடி பெருகுவ தருகு மின்னருள்.

பெயர்த்தும் ஈரடித்தாழிசை—௬.

தாயென்றுந் தந்தையென்றுஞ் சுகமென்று கருமனக்குச்
சேயென்று பின்னுமொரு திருநாமம் வருமாறென்?
முந்திலென்றே யடியருள முனிதொறு மிருந்தாய்க்குச்
செந்திலென்றே யுரைக்குமொரு திருப்பதியும் விருப்புளதோ
யாழிலெழு வருங்கால மல்லாணி கொல்லாயோ
மாழிலெற்ற மேதுனக்கு மற்றேற்றம் பெற்றிலையோ?
வோராறு பனிமதியி னொடுபவள வினையினிதைத்
நீராறு தினகரரு மிடையிடையே யுதித்தாய்க்குக்
கருணைபொழி திருமுகமுங் கனமணிக்குண் டலநிரையுந்
திருநெடுந்தோள் கருங்கமலச் சேவடியு நாவடியும்
பாடாது நினையாது பாராத வெனக்குநினை
வீடாத தொண்டரொடுங் கூட்டியுமே காட்டினையால்.

நாற்சீரடி அம்போதரங்கம்—௨.

பிறந்தது மிறந்ததும் பெருமநின் புகழ்
மறந்தது மல்லது வணங்கி லேனினைக்
காமமும் வெகுளியுங் களிமயக்கமுந்
தாமிடை கலந்தெனைத் தலைமயக்கலால்.

நாற்சீரடி அம்போதரங்கம்—௪.

உலப்பறு முடிப்பது முவந்து தேடினேன்
கண்படை கனவினிற் கலங்கி வாடினேன்
துய்த்திற மிதுவென வுணர்வு போயினேன்
செய்திற மிதுவெனுந் தெருளில் போயினேன்.

முச்சீரடி அம்போதரங்கம்—௪.

எவ்வா றெனையுய் யக்கொள்வாய்
பெறுதா மறையின் பிறந்தாள்வாய்
செவ்வா னனையான் திருப்பிள்ளாய்
தெரியா தினியுன் செயலில்லாய்.

இருசீரடி அம்போதரங்கம்—அ.

மெய்யுநீஇ பொய்யுநீஇ விண்ணுநீஇ மண்ணுநீஇ
யையுநீஇ செய்யைநீஇ யாதிநீஇ சோதிநீஇ.

தனிச்சொல்.

எனவாங்கு.

ஆறடிநேரிசையாசிரியப்பா—சுரிதகம்.

மியல இல்லை யாவையு முலக
மற்றவற் றிடையா னவத்தூடற் பொறையொடு
கறங்கெனத் திரியாது பிறங்குசுற வெறியு
நத்தூர் கடற்றுறைச் செந்தூர் பரம்வன்
காமரு தூங்கொடைக் கடம்பனின்
றாமரை மலரடி தருகமா வெனவே. (௧)

நூல்.

(௧) கடவுள்-தெய்வத்தன்மை. சான்ற-உயர்ந்த. கேள்வி - கல்வியறிவு. அறமுதலாந்தமிழ் மூன்று-தருமநூல், பொருள்நூல், இன்பநூல். கலவம்-மயிற்றோகை. ஆழி-கடலில். தினகரனை-சூரியனை. புரிசை-கோட்டை. விரவு-கலந்திருக்கின்ற. பரவாதியர்-அன்னியசமயவாதிகள். உலவா-கெடாத. பாமறை விரித்த வேதம். தாம் அறைய-தாமேமுழங்காநிற்ப. விழிப்புலத்து-கட்புலனுக்கு. கலாந்தம்-சாத்திரமுடிவு. ஆறாறுபுலன்-முப்பத்தாறு தத்துவம். பறையிட-முழங்க. ஒருமையின் - ஒற்றுமையோடு. மழையென - மேகத்தை விரும்பினாற்போல. கலி-ஒலிக்கின்ற. எழுமடி-எழுபங்கு. முந்துஇல்-முதன்மையானவீடு. இருந்தாய்க்கு-இருந்தவுனக்கு. ஏற்றம்-உயர்ச்சி. நிரை-வரிசை. தூ-பரிசுத்தம். காட்டினை-(அத்தொண்டாது நிலைமையினைக்) காண்பித்தாய். தலைமயக்கல் - தடுமாற்றஞ்செய்தல். கண்படை-நித்திரை. கனவு - சாக்கிரம். பிள்ளாய்-பிள்ளையே. கறங்கு-காற்றாடி. சுறவு-சுறாமீன். மா-அசை.

வெண்பா.

¶ எனதே குமரன்செந்தி லேத்துமென தாழி லெவ்வேறேன்
தனதே யெனினுமவன் தன்மை—நினைவின்
மறந்திபனே யன்பு நல் வாழ்வையெலா கெந்நே
குறந்திபனே யன்பு கொள். (உ

கட்டளைக்கலித்துறை.

¶ கொள்ளார் பவப்பிணி யேற்றக்கந் தாரன்பர் கூட்டமல்லா
லெள்ளார் பிணியி னவெவ்வுடலார் தெய்வ நாளுமற்றோன்
றுள்ளார் முருகன்செந் தூர்ப்பதி யாதன யென்றாலகலக்
கள்ளார் விரைமலர்த் தன்னடையத் தாடொழக் கற்றவரே. (ச

ஆசிரியவிருத்தம்.

¶ கற்றாலு நீநிதி கழித்தாலுங் கழியாத கரையில் வாழ்வு
பெற்றாலு முருகனடிக் கன்புபெற தவருலகிற் பிறவி தீரா
நிற்றாலுங் கலிகவிய விரந்தாலும் பேதையரா யெழுந்தா லுள்ளாத்
தற்றாலு மவனிருக்குஞ் செந்திலென்றூர் முத்திலென்ற மடைவர் தாமே. (ச

ஆசிரியப்பா.

தாமரை பயின்ற நான்முகக் கடவு
ளோதா மறைப்பொருட் பழுதாங் குரைப்ப
விற்குமணிக் கடகந் தாங்குநிணி தடக்கை
முன்வருந் தியவா பின்னரும் வருந்த
விரும்பிய தாலைவந் திரும்பிட நற்செய்
பாயிருள் பருகும் பல்கதிர்க் குழவி
ஞாயிறுகத வெறி நான்முரி திரைமுகட்
டெழுவது போல மழைநுழை கலாபச்
செறிமயிர்ச் சிறையார் பொறிமயிற் புறத்துச்
சேயொளிமேனி திகழவிற் றெழுந்தனை
தெய்வயான் கரிணியு மொய்வரை யரிணியுங்
காவலங் கமிழுஞ் சேவலங் கொடியு
மாறு முகமு நீறணி புயங்களும்

(உ). மறந்தி-மறப்பாய். மண்ஆள்-பூமியையாளுகின்ற.
(ச). கள்ளார்-சிநேகியார். கலிவு-வருத்தம். விரை-மணம்.
(ச). கரை-அளவு. இற்றாலும்-கெட்டாலும். கலி-வறுமை. இரந்தாலும்
யாசித்தாலும். எழுத்தாறு-சடாக்ஷரமந்திரம். முத்தில்-முதலாகிய மோக்ஷவீடு.

பண்டைய மறைபுகழ் தன்னடையத் தாள்களுந்
கந்தநின் னுமமுருஞ் செந்திலம் பதியும்
மனங்கது நினைக்கவும் வாழ்த்தது
நினைங்கவிற் பாவினை யென்னினிநித் தகற்கே. (ரு)

வெண்பா.

அதற்கிதற் கென்றுள் ளவம்போக்கி யாக்க
முதற்பொருட்கு மின்றி முயன்றேம்—நுதற்கண்ணான்
சத்தியா னந்த செய்யான்றநுவந்து செந்திலகர்
வந்தநியா னஞ்செய்யா மல். (சா)

புயவகுப்பு-ஆசிரிய வண்ண விருத்தம்.

¶ மலர்தலை ஞாலத் தலகில வாழும் முயிர்களு முந்திக் கண்பயன்டு
தந்தன, மறைபகர் வாய்மைத் திசைமுக னோவற் றிடுமுறைதண்டிக்
கன்றங்கை கன்றின, மகபதி வானத் தரசுவ மாமற் றிருமுடி யன்
பிற் கொண்டும் பூணேந்தன, வழிபடு கீரற் கழிசிறை நிரப் பரிவொடு
முந்நிச் சென்றஞ்ச லென்றன, குலபட மான் மெய்ப் புதல்வியும்
யானைக் குமரியு மொன்றுறத் தின்பங்க வர்ந்தன, குறையுமென் வாய்
மைத் தமிழுக வீடித் தொடையாலு மொன்பொற் சந்தந்த வழ்ந்
தன, குணாகர ஞாடித் தொழுநெறி சேர்கொந் தடியவர் தங்கட்டுன்
பங்க ளொந்தன, குவிமுகை வேலைக் கவிழினர் மாலைத் தடி
தனு மன்றிக் குன்றம்பி எந்தன, வலகுணா ராமுந் தமிழுணர் நீதிக்
குறுமுனி வந்தித் தென்றம்பு கழ்ந்தன, வலைமலி வாகைத் திருவொடு

(ரு) கடகம் - கங்கணம். திணி-பலம். திரும்பிட-அசைய. பருகுந்த-
பருகும்-கெடுக்கும். குழவிஞாயிறு-இளஞ்சூரியன். எறி-வீசுகின்ற. முரி-வளை
வாகிய. மழை-குளிர்ச்சி. கலாபம்-தோகை. செறி-நெருங்கிய. பொறி-புள்ளி.
புறத்து-முதுகில். கரிணி - பெண்யானை. அரிணி - மான்பெற்றவள்ளிநாயகி.
தா-வலன். அலகு-விளங்குகின்ற. இணங்கவின்-இணக்கத்தோடு. விநித்
தற்கு-சிருட்டித்ததனால்.

(சா) அதற்கு-அக்காரியத்தின்பொருட்டு. உள்-மனத்தை. அவம்-வீணா
க. ஆக்கம் - இலாபங்கருதி. முதற்பொருட்கும் - முதற்பொருளிருத்தற்கும்.
இன்றி(இடம்) இல்லாமல். முயன்றேம். 'முயற்சித்தலைந்தோம்.' அஃதாவது:
"ஆக்கங்கருதி முதலிழக்குஞ் செய்வினை" என்றபடி, இருக்கிறமனத்தையு
மிழந்திருத்தல். நுதற்கண் அவன் - நெற்றிக்கண்ணுடைய அச்சிவபிரானது.
சத்தியான்-புத்திரனுமுள்ளவர். அம்-அழகிய. செய்யான் - சிவந்தநிறமுடைய
வர். வந்தது-வந்திருந்தது. தியானஞ்செய்யாமல் (இன்னதற்கென்று) ஆராய்
ந்து நிலையாமல்-வந்ததென்பது, ஏதுகெட்டு வந்தென நின்றது.

வேலிற் சிரமணி தகர்த்துக் கங்கிலையந்தன, வரைமுலை பீர்விட் டோ
கிய பாலுக் கழுநயர் போன்றக் கொய்டங்க ளுறைந்தன, வருசெழு
கோலத் திருமுக குரைக் கிளியொடு மருந்தக் கொன்றாக்கன் வென்
றன, கலவம யூரத் தொகுத பேரிப் புகையிய பெண்டிக் கெங்குந்தி
ரிந்தன, ககால வாகுத் தனவிப கோழிக் கொடியவர் கம்பத் தம்பம்
பொருந்தின, கலிமதி போ ந் திருமுக மென்கட் கடையருள் பொங்
கிச் சிந்துந்தி பம்பின, கடலி வாய்முந் திலவயோமிசைக் கரைபொரு
செந்திற் கந்தன் புயங்களே. (௭)

கட்டளைக் கலித்துறை.

புயமா திரண்டுக்கும் பொய்யானதி யாம்புன்னி மான்மகட்குங்
கயமான் மகளுக்குங் கண்ணிணை யாக்கடுங் கூற்றுவந்தா
லயமாய தொண்டர்க்கு நற்றுணை யாஞ்செந்தி லென்னகர்மே
வியமான் மருகன் திருக்கரத் தேந்திய வேற்படையே. (௮)

கலிவிருத்தம்.

படைக்கணூர் மையனேப் பகிவ நல்லது
கடைக்கணுன் பாகதி காணு மாறன்போ
விடைக்கணு மிபன்றனைக் கொஞ்செசக் தூர்க்கமிழ்த்
தொடைக்கணுன் மயில்புயத் தோகை பாகனே. (௯)

---

(௭) உந்தி-செலுத்தி; படைத்து. பண்டை-முற்காலம். கண் தந்தன-சித்திரஞ்செய்தன; இவைப்பாதியிருக்கன. முறை-விசம். அங்கு-அவ்விடத்து. ஊ அழிந்து தன்றினை-வாடின. மகபதி-இந்திரன். அழி-கெடுதற்கேதுவாகிய. ஒன்றுஒத்து-சேர்சமாக. கவர்ந்தன-கொக்கப்பட்டன. நீடுத்தொடை-கடம்பமாலை. கொத்தடியவர்-குலமுழுதுமடிமையாகவுடையார். முகை-அரும்பு. வேலை-கடலில். கவிழ்ந்து தலைகீழாய்கின்ற. இணர்-பூங்கொத்து. மாவை-சூரனுடைய மாமரத்தை. வாகை-வெற்றி. விதம்-வகை. உந்தின-செலுத்தப்பட்டன. உரு-அச்சம். செழு-பொருந்திய. மயூரத்தாரகம்-மயிலாகிய குதிரை. ககனம்-ஆகாயம். வளாகம்-இடம். தம்பம்-தூண். உந்தி-காட்டாறு. பம்பின-நெருங்கப்பட்டன.

(௮) கயமான்-வெள்ளையானை.

(௯) படை-ஆயுதம்போலும். கணூர்-கண்களையுடைய பெண்கள். கடைக்கண் - இறுதிக்காலத்தில். கான்,—உடை-உடைய. கணநிபன்-விநாயகர். இளம்-இளையவனாகிய. தொடைகள்-மாலைகள். கான்று-தொங்கப்பட்டு. தோகைபாகன்-மயிலூர்தி. தொடைகளென்பது, எதுகைச் சிறப்புநோக்கித் தொடைக்கனென்றாயிற்று.

குறளடிவஞ்சிப்பா.

பாகந்தரு பனிவான்மதி
தாரகையொடு கார்முகிலிடைப்
பொருதெனவளை யுடனிலகிய
நவமணியுமிழ் கலிசெழுபுனற்
றிரைபொருமொலி முரசுடனதிர்
பைந்தமிழ்வளர் செந்திலின்வரு
சேயோன்
றிருந்தடி துணையெனச் சேர்பவர்
பொருந்துவர் யாரும் புகலரு நெறியே. (௰)

கலிப்பா.

¶ நெறிக்குஞ்சித் தலைமறலி நெருங்கியெதிர் வருங்காலஞ்
செறிக்குஞ்சித் திகடருநின் செந்திலுமென் புந்தியதே
பொறிக்குஞ்சித் திரத்திலுடுப் பொரியாகப் புகுந்து கொத்திக்
கொறிக்குஞ்சித் திரச்சரணப் படைச்சேவற் கொடியோனே. (௰௧)

வண்டோச்சி மருங்கணைதல்—ஆசிரியவிருத்தம்.

கொடியாகின் றிடைதேய்ந்து கொழுங்கலவைத் துணைமுலையுங் குழலுந் தாங்கி, யொடியாகின் றுளதின்னு முமக்கு மிரங் காதவுள்ள முளவோ வண்மர், வடியாகின் றிலங்கிலைவேல் வலனேந்தி செந்திலரு மருந்தன் னுடன், முடியாகின் றளியெனுஞ்சொன் முடியாகின் றநுராக முயல்கின் றீரே. (௰௨)

(௰) பாகம்-பாதி. பனி-குளிர்ச்சி. தாரகை-நட்சத்திரங்கள். பொருதென-மோதினாற்போல. வளை-சங்கு. உமிழ்-தருகின்ற. கலி-ஓசை. செழு-பொருந்திய.

(௰௧) நெறி-நெறித்தல். குஞ்சி-குடுமி. செறிக்கும்-(அவனை) நெருக்கும். சித்தி-வலிமை. பொறிக்கும்-எழுதும். உடு-நட்சத்திரத்தை. கொறிக்கும்-கடித்துண்ணும். சரணப்படை-காலாயுதம். சேவல்-கோழி.

(௰௨) கொடியா-கொடிபோல. வடியா-கூர்மையாக. வலன்-வலதுதிருக்கரத்தில். ஏந்தி-தாங்கிய குமாரக்கடவுளது. முடியா-கடந்த (விடத்) தாக. அளி-வண்டு (அன்பு). முடியாகின்று-நிலைசிறத்தலாமலிருந்து. அநுராகம்-காமவின்பம்.

வண்டுவிடுதூது—வெளி விருத்தம்.

ஈர நான்முகை யிளமுலைப் பசப்பொழித் தளியீரே
சூர னுள்விழித் துணையினை கொள்வதற் களியீரே
நார நாளமென் னளினநீர்ச் செந்திலுக் களியீரே
யார னுள்வரு வேங்கையின் மலர்கொணர்ந் தளியீரே. (௧௩)

வஞ்சித்துறை.

¶ அளியாருஞ் சோலை
யொளிசேர்வான் செந்தூர்
தெளிவாயா னெஞ்சே
யழியாவீ டுண்டே. (௧௪)

மேகவிடுதூது—கலித்துறை.

உண்டு வாரிதி பசுஞ்சிறைக் கிளிமயி லுருவாகி
யெண்டிசாமுகம் புதைத்தயி லெனமினி யிரைத்திரேற்
கண்டு நானிரு கண்களு முள்ளமுங் களிகூரக்
கொண்டல் காளினிச் செந்தில்வாழ் குமரனைக் கொணர்வீரே.()

அம்மானை—மடக்குத்தாழிசை.

வீரனெடு வெவ்வேல் வியன்செந்தி லெம்பெருமான்
பாரிலுயி ரெல்லாம் படைத்தனன்கா ணம்மானை
பாரிலுயி ரெல்லாம் படைத்தனனே யாமாகி
லாரணங்க ணான்கு மறிவனோ வம்மானை
யறிந்து சிறையயனுக் காக்கினன்கா ணம்மானை. (௧௬)

---

(௧௩) நான்முகை-மலரும்பருவத்தரும்பு. அளியீரே-வண்டுகளே. சூர்-தெய்வப்பெண்ணை. அனுள்-ஒத்தவிலவின். விழித்துணை-இரண்டுகண்களை. அளியீர்-அன்புடைய நீங்கள். இணைகொள்வதற்கு-ஒப்பாதற்பொருட்டு (ஆவது). நாரம்-(ஆகுபெயர்) குளிர்ச்சி. நாளம்-தாமரைத்தண்டு. நளினம்-தாமரை. ஆரல்நாள்-கார்த்திகை நட்சத்திரத்தில். வரு-பவனிவருகின்ற. வேங்கையின்-வேங்கைமரமாகிய குமாரக்கடவுள். மலர்-(ஆகுபெயர்) கடப்பமாலையை. அளியீர் அளியீர்-கொடுங்கள் கொடுங்கள். எனவே, மாலையைக்கொண்டு வந்து கொடுத்தால் தன் கண்களுக்கு உங்களை ஒப்பாகச்செய்வானென்பதாம்.

(௧௪) ஆரும்-முழங்கும். ஒளி-புகழ்.

(௧௫) திசாமுகம்-திக்கினிடம். புதைத்து-மூடி. மினி-பிரகாசித்து இரைத்திர்-முழங்கியவர்களே. எல்-அசை.

(௧௬) வியன்-பெருமை. ஆரணம்-வேதம். சிறை-சிறைச்சாலை.

இரங்கல்—வஞ்சிவிருத்தம்.

மான்மகள் காதலர் மஞ்சுறுந்
தேன்மலி காவுயர் செந்தூரர்
கான் மண நாறு கடம்பேனும்
யான்மகிழ் கூர விரங்காரே. (௧௭)

ஓரொலி வெண்டுறை.

காரேய் நிறத்தறுகட் கருவுடைக் கடுங்கூற்றங் கலந்த காலை
யாரே விலக்குவா ரந்தோ நமரங்கா ளறிதி ரன்றே
நீரே யுயப்போமா றின்று வலித்திரேற்
கூரேய் வடிவேற் குமரன் குடநாட்டுச்
சீரேய் திருச்செந்தில் சென்று தொழுமினே. (௧௮)

வெண்பா.

தொழுதிரந்து வெம்பசியாற் சோர்ந்திடுவார் கைபார்த்
தழுதலமந் தேங்கி யலைவார்—முழுதும்
பெருகுகனை வாரிமணி பெய்திரைக்குஞ் செந்தில்
வருகுகனை வாழ்த்தாத வர். (௧௯)

கலிப்பா.

¶வரங்கொண்ட வுமைமுலைப்பான் மணங்கொண்ட செவ்வாயும்
பரங்கொண்ட களிமயிலும் பன்னிரண்டு கண்மலருஞ்
சிரங்கொண்ட மறையிறைஞ்சுஞ் சேவடியுஞ் செந்தூரன்
கரங்கொண்ட வேலுமென்றன் கண்ணைவிட்டு நீங்காவே. (௨௰)

பாண்—கலித்துறை.

நீங்காத நேயத்தி னீதைத்த தையலு நின்னையன்றிப்
பாங்காய பாண பிரிந்ததென் றுலுமை பாலன்செந்தில்

---

(௧௭) மஞ்சு-மேகங்கள். கடம்பு-கடப்பமாலை. இரங்கார்-இரக்கஞ்செய்துகொடார்.

(௧௮) ஏய்-ஒத்த. தறுகண்-அஞ்சாமை. நமரங்காள்-நம்மவர்களே. அறிதிர்-தெரிந்துகொள்ளுங்கள். உயப்போமா-பிழைக்கப்போகும்விதம். வலித்திரேல்-நினைத்தீராகில். குடநாடு-மேல்நாடு.

(௧௯) அலமந்து-சுழன்று. கனை-முழக்கத்தையுடைய. வாரி-கடல். இரைக்கும்-ஒலிக்கும்.

(௨௰) பரம்-மெய்.

யாங்கா னலமெனி னெம்மை வினவுதி யேதிலரைத்
தாங்காது நின்மதி தான்றூசி யின்றிறந் தான்பிழைத்தே. (உக)

ஆசிரியவண்ணவிருத்தம்.

¶பிழையாத தொண்டர் சிறிதேசெ யன்பு பெரிதாக நெஞ்ச மகிழ்வா
ருழையீனு மெங்கள் குருமாது கொண்க ருமைபாலர் தங்கு மிடமாம்
புழைவாய் திறந்து வளைகூனு மைந்து பொழியார மிந்து வெளாவே
மழைபோன்முழங்கி யலையாழி சிந்து வளமேவு செந்தி னகரே. (உஉ)

தலைவிகூற்று—வெண்பா.

நகைமதிய மேவடவை நாப்போலிவ் வண்ணந்
தகைமதியா நின்று தழல்வா—யகமகிழ்ந்து
கற்பசலை தந்தார் கடற்செந்தில் வாயமைக்குப்
பொற்பசலை தந்தார்முன் போய். (உங)

கலித்துறை.

போய்வத ளைம்ப மாடார் திருச்செந்தில் புக்குறையார்
சேய்மலர்த் தாளினை சிந்தைசெய் யார்திரு மான்மருகன்
காய்சின வேறு மயிலுமென் னார்கடல் சூழுலகிற்
பேயறி வாளரெவ் வாறுய்ப் பார்தம் பிறப்பினையே. (உச)

(உக) வைத்த-பொருத்தப்படுத்திய. வையலும்-பெண்ணுகிய பரத்தையும். பாண-பாணனே. பிரிந்தென்றல்-(தலைவனைவிட்டுப்) பிரிந்தானாறல். செந்தில்-திருச்செந்தூரில் (காணலம்) (அத்தலைவனைப்) பார்க்கமாட்டோம். எனில்-ஆனல். வினவுதி-(பொருத்தப்படுத்துமாறு) கேட்கின்றாய். நின்மதி-உன்னறிவு (உன்சொல்வழிநிற்பானை). தன்றூசியின் றிறம்-வைத்தல்; அஃதாவது: பொருத்துப்படுத்துதல். பிழைத்து-செய்வதுதவறி. ஏதிலரை-அன்னியாரை. தாங்காது-செய்யாது. இது, தூதுவந்த பாணனுக்குத் தலைவியினை வாயிமைகூறியது. இங்கே இசைபாடுகின்ற பாணனைச் சிலேடைவகையாற் தையற்பாணனுக்கிக் கூறியதுங் காண்க.

(உஉ) பிழையாத-குற்றஞ்செய்யாத. உழை-மான். தொண்கர்-கணவர். புழை-துவாரமாகிய. ஆரம்-முத்து.

(உங) நகை-பிரகாசம். வடவை - வடவாமுகாக்கினியின். நா-நாக்கை. தகை-தகுதியை. மதியா-மதியாமல். தழல்வாய்-சுடுவாய். கற்பு-கலங்காநிலையின். அசல்-உயர்ந்ததாகிய. ஐ-அழகை. பொற்பசலை - பொன்போலும் பசிய நிறம்.

(உச) வதனாரம்பம் - சந்நிதிமுன்னிருக்குந் தீர்த்தம்; அது: கடல். பேயறிவாளர்-மூடர்.

தலைவிநேர்ந்ததோழி யுரைத்தல்—அரித்யாழிசை.

பிறர்வாய் வசையடங்கப் பின்ஞகன்சேய் தின்போ
றைறவார் துணர்க்கடம்பு நாம்பெறுதல் வேண்டிச்
சிறைவான் புனற்செந்தில் சேருதுமா னெஞ்சே
குயில்வா யொலியடங்கக் கூத்தன்சேய் தின்போ
னயமாந் துணர்க்கடம்பு நாம்பெறுதல் வேண்டிச்
செயிர்தீர் புனற்செந்தில் சேருதுமா னெஞ்சே
முந்நீ ரொலியடங்க முக்கணன்சேய் தின்போ
னன்னீர்த் துணர்க்கடம்பு நாம்பெறுதல் வேண்டிச்
செந்நீர் புனற்செந்தில் சேருதுமா னெஞ்சே. (உரு)

கைக்கிளை—மருட்பா.

நெஞ்சே நுதல்வியர்க்கு நீடுருகன் செந்திலன்னுட்
கஞ்சேல் விழிக ளவையிமைக்கும்—பஞ்சே
ரடிநிலந் தோயு மதனுற்
கமழுங் குழலிவள் கடலிடத் தணங்கே. (உசு)

பாங்கிவேலனைப் பழித்தல்—வெண்பா.

அணங்கா மிவளுக் கவிர்மதிய மொன்றோ
வணங்கா வருந்தென்ற லொன்று—வணங்கூ
ரிளமுருகா செந்திநகர் நிற்தாய்வந் தாளா
யுளமுருகா வேயிசையு மொன்று. (உஎ)

தலைவியைவியந்தல்—கலித்துறை.

ஒன்றுடை யான்புலித் தோலுடை யான்மைந்த னைஞ்சுபாரங்
குன்றுடை யான்திருச் செந்திலன் னார்குல வாழையின
மென்றுடை யானடை யாலிடை யால்விழி வேற்கடையா
னின்றுடை யானிற்ப ராலெவ ரேனு நிலைகுலைந்தே. (உஅ)

(உரு) நறவு-தேன். துணர்-பூங்கொத்து. கடம்பு-கடப்பமாலை. சிறை-காவல். சேருதும்-சேர்வோம். கூத்தன்-சிவபிரான். செயிர்-குற்றம். நீர்-குணம். செம்-செம்மை.

(உசு) நுதல்வியர்க்கும் - வேர்க்கும். விழிகளவை-கண்களிரண்டும். கடலிடம்-பூலோகம்.

(உஎ) அணங்காம்-தெய்வப் பெண்ணாகும். அணங்கா-நோயாக. வணம்-(இடைக்குறை) அழகு. கூர்-மிகுந்த. ஆளாய்-ஆள்வாய். வேயிசை-மூங்கிற் குழலோசை.

(உஅ) ஒன்ற-(அன்பரிடத்துப்) பொருந்துதல். அன்னார்-ஒத்தபெண்கள். குலம்-தன்மை. உடையாநிற்பர்-தளர்ந்துநிற்பர்.

மதங்கியார்—கலித்தாழிசை.

குலைகுலுங்கு வாழையின் கோழிலைப் பசுங்கொடைக்
குளிர்நிழற்கண் ணிரவிதேர்க் குரகதங்க ளருவிபா
யலைகுலுங்கு நறவமுண் டயர்வுயிர்த்த காவுசூ
ழங்கணெந்தை செந்தில்பாடி யாடுமோ மதங்கியார்
முலைகுலுங்கு மாகின் மாரன் முடிகுலுங்கு மமுதவாய்
மொழிகுலுங்கு மாகிலாவி பழிகுலுங்கு மல்குலங்
கலைகுலுங்கு மாகினுடு நிலைகுலுங்கு மாமுகக்
கஞ்சமுங் குலுங்குமாகி னெஞ்சமுங் குலுங்குமே. (உ௯)

ஊசல்—இன்னிசை வெண்பா.

குலுங்கு முலைமேற் குளிர்பசலை கண்ணி
லலங்கு மருநாணு மாய்வளையு நீங்கு
மிலங்கிலைவே லோனை யெறிகடற்செந் தூர்வாய்
வலங்கொளமுன் போமட்வார் மாட்டு. (௩௰)

சித்து—ஆசிரியவிருத்தம்.

மாட்டேம் அல்லேஞ் சித்தவித்தை மகனே செந்திற் குகன்பாலுங்
கேட்டே யறிந்த துனைக்குரைப்பக் கேளா யிதுபொ யல்லமெய்யே
வேட்டேம் பசியா துண்ணவின்றி யிங்குங் கஞ்சத் தனிலேபொன்
காட்டே மாகி லீபடைத்த கறியுஞ் சோறும் வேண்டாவே. (௩௧)

ஊசல்—கலித்துறை.

வேண்டின ராகு லானகு வேலர் வியன்செந்தி
லாண்டைகை யானர் மானனை யாரை யகல்வாரோ

(உ௯) குலுங்கு-அசைகின்ற. குரகதம்-குதிரை. அருவி-அருவிபோல. அயர்வுயிர்த்த-சிரமபரிகாரஞ்செய்த. அங்கண்-இழிவுஅடத்தையுடைய. மதங்கி-புகழ்துபாடும்பெண். ஆவி-உயிருக்கு.

(௩௰) பசலை-பசந்தநிறம். அலங்கும்-விளங்கும். அருநாண்-அருமையானநாணம். வலங்கொள-பிரதக்ஷணஞ்செய்ய.

(௩௧) மாட்டேம் அல்லேம்-(சொல்ல) மாட்டாதவரில்லை. மகனே-புத்திரனே. வேட்டேம்-விரும்பினோம். கஞ்சம்-வெண்கலம்(தாமரை). பொன்-தங்கம் (இலக்குமி). வேண்டா-வேண்டுதலில்லை. சித்தர்கள் மனிதரைமகனே யென்றழைப்பது பழையவழக்கு.

கூண்டடல் வில்விட் டம்பு சொரிந்தே கொலைவேடம்
பூண்டு நெருங்கிக் கொண்டன் முழங்கிப் பொழிநாளே. (௩௨)

பனிக்காலம்—வஞ்சித்தாழிசை.

நாள்வனச முகங்கூம்ப நீள்குளிர்செய் பனிக்காலம்
வேள்மருவு செந்திலினெங் கேள்வர்தமை நினையாவே
மகன்றிலொடும் பெடைசேவல் புகன்றணையும் பனிக்காலங்
குகன்றனது செந்திலினெம் மகன்றவரை நினையாவே
தொலைபவர்மெய் குனியமதன் சிலைகுனியும் பனிக்கால
மலைமகன்சேய் செந்திலினெந் தலைவர்தமை நினையாவே. (௩௩)

வெண்டாழிசை.

நினைவு மொன்றே யுரையு மொன்றே
பனவன் செந்தில் பணியு மொன்றே
வினையில வீழ்ந்தவர் பால். (௩௪)

கலிப்பா

¶ பால்வெள்ளை நீற்றானும் பல்லுயிரும் படைத்தானுஞ்
சூல்வெள்ளை மணிப்பணிலஞ் சுமந்ததிருக் கரத்தானுஞ்
சால்பெள்ள லில்லாத தனி வேற் படையானுஞ்
சேல்வெள்ளம் பாய்தலவுந் திருச்செந்தி லிடத்தானே. (௩௫)

(௩௨) வேண்டினர்-விரும்பினர். நகு-விளங்குகின்ற. கூண்டு-கூடி. அடல்-வலி. வில்-இந்திரதநுசு. அம்பு-நீர்(பாணம்). கொண்டல்-மேகம். கொலைவேடமாவது: பிரிந்தாரை வருத்துகின்ற வேஷம்.

(௩௩) நாள்வனசம்-அன்றலர்ந்த தாமரைப்பூ. கூம்ப-வாட. கேள்வர்-கணவர். மகன்றில்-அன்றில். பெடையொடும்-பெண்ணுடன். சேவல்-ஆண். புகன்று-விரும்பி. தொலைபவர்-(நாயகனைப்) பிரிந்தவர். மெய்-(ஆகுபெயர்) தலை. குனிய-வளைய. நினையாவென்பதற்குப் பனிக்காலங்கள் எழுவாய். கணவரை நினைந்தால் அவரையும் வருத்துமென்பது கருத்து.

(௩௪) உரை-சொல். பனவன்-முருகக்கடவுள். ஒன்றேவினையில்-ஒரேவினையில்; தீவினையில். பால்-பக்கம். நினைவுசொல்ஒன்றுவன: ஒருவர் இருத்திறல் இருத்தப்படாதென்பதாம்.

(௩௫) மணி-முத்து. பணிலம்-சங்கு. சால்பு-மாட்சிமை. எள்ளல்-இகழ்தல்.

கலித்துறை.

¶இடத்தான மாறெழுத் தெண்ணக்கண் ணூர்கின் னிணையடிகும்
பிடத்தான மாறும் பிரியா திருக்கப் பெருங்கருணைக்
கடற்கு ளெனக்கருள் வாய்செந்தில் வாய்த்தென் கலைமுழுதுங்
குடத்தான மாதவத் தோதிய ஞானக் குருபரனே. (௱௬)

மடக்கு—ஆசிரியவிருத்தம்.

பரவு வாரி வளையீரே பரவு வாரி வளையீரே
படரு நாக வரும்பீரே படரு நாக வரும்பீரே
யரவப் புணரி மகரமே யரவப் புணரி மகரமே
யவலங் கழிய நந்தனமே யவலங் கழிய நந்தனமே
பிரமாத் தலை டலைப்பு டைத்தான் பிரமாத் தலை டலைப்பு டைத்தான்
பிறவா துழைசெந் தினகரனே பிறவா துழைசெந் தினகரனே
யுரவ ராலே நாவாயே யுரவ ராலே நாவாயே
யோதக் கடனீர்க் குருகீரே யோதக் கடனீர்க் குருகீரே. (௱௭)

(௱௬) தானம்இட-கொலை கொடுக்க. ஆறெழுத்து-சடாக்ஷரமந்திரம். கண்ணூர்-கருதார். (அவர்கிற்க). தானம் ஆறும்-மூலதாரமுதலிய ஆறிடங்களிலும். பிரியாதிருக்க - (விநாயகர் முதலிய ஆறுதெய்வங்களாக நீ) பிரிவில்லாதிருக்க. குடத்து ஆன-கும்பத்திற்றோன்றிய.

(௱௭) பரவு-விரிந்த. வாரி-கடலிலுள்ள. வளையீரே-சங்குகளே. பரவு-புகழப்படு. வாரி-மதில்போல். வளையீர்-(தலைவர்வந்தால்) வளையுங்கள். படு-உண்டாகின்ற. அரு-அரிய. நாக அரும்பீரே-புன்னையரும்புகளே. படரும்,—நாக-இளமையுடைய. பீர்-பசலைநிறம். அரவம்-ஓசை. அரவ-தேய்த்தற்காக. புணர்-(என்னைச்) சேர்கின்ற. இமகரமே-சந்திரகிரணமே. அவல்-நீர்நிலையிலும். அம்-அழகிய. கழிய-கழிநிலத்திலுமுள்ள. நந்து அனமே-மிகுந்த அன்னப்பறவைகளே. அவலம்-துன்பம். கழிய-நீங்கும். நம்-நம்முடைய. தனம்-முலைகள். பிரமா-பிரமனது. தண்-குளிர்ந்த. தலைப்புடைத்தான்-தலையிற் குட்டினவரும். பிரமா - பிரமையைச்செய்யும். தண்டு-(சூரபன்மன்) சேனையின். அலைப்பு-வருத்தத்தை. உடைத்தான்-கெடுத்தவருமாகிய. செந்தினகரன்-செந்திற்றலத்தையுடைய முருகக்கடவுள். உழை - (என்னிடத்து) பிறவான். தோன்றமாட்டார் பிற-அசை. வான் - ஆகாயத்தில். துழை - நுழைந்துசெல்லும். செந்தினகரனே-சிவந்தசூரியனே. உரவராலே-வலியவரால் மீன்களே. நாவாயே-மரக்கலமே. ஓதக்கடல் நீர்க்குருகீரே - ஒலியுடைய கடற்சலத்தின் பக்கமேதிரியும் நாரைப்பறவைகளே. உரவர் ஆலே-(உங்களில்) அறிவுடையவராலே. நாவாய்-நாவாலும் வாயாலும். ஓதக்கடன் - (என்றன்பத்தை). அச்செந்தில் கருடைய குமாரக்கடவுளுக்குச் சொல்லக் கடமைப்பட்டுள்ளீர். நீர்க்கு-(உங்கள்) குணத்துக்காக. உருகீர்-உருகுங்கள்.

தலைவியைவியந்தல்—கலிப்பா.

ரேமவை யோரிரண்டு கிளவிதனக் கிணையாகு
மாரமவை யோரிரண்டு மலர்முலைமே லணியாமாற்
சூரமவை யோரிரண்டுந் தாழுடையான் செந்திலன்ன
கோரமவை யோரிரண்டுங் கொண்டமதர் விழியார்க்கே. (௱௮)

ஊசல்.

ஆர்க்குமது கரமாட மாலை யாட வணிகலையு மேகலையு மிடையுமாட, வார்க்குவிமென் முலையுமணி வடமு மாட மதிமுகமு நுதல்வெயர்வு நகையு மாடத், தார்க்கமல வடிச்சிலம்பு புலம்பி யாடத் தாழ்குழையு நீள்விழியுந் துழுவி யாடக், கூர்க்கதிர்வேற் குகன்செந்தில் பாடி யாடிக் கோகனகத் திருவனையீ ராடி ரூசல். (௱௯)

ஆசிரியவிருத்தம்.

வாச லாட்டெனப் போய்வரு பிறப்பெனு முடற்பொறைச் சிறுவீட்டிற், றேசி லாதபுல் லறிவுடை வாழ்க்கையின் றிறந்திறந் தொழிவேனோ, காசி லாநெடுங் கடலலை வாய்த்தடங் கரைவரி வளையீன்ற, மாசி லாமணி யெய்செந்தின் மேவிய வானவர் பெருமானே. (௱௰)

கலி—விருத்தம்.

பெருமை மாநிலம் வலம் தாய்வரு மயில் மாமயி லூர்தியார்
பிள்ளை யார்வளர் செந்தி லம்பதி யுள்ள மேதகு களியரேம்
பரம ஞோன்மணி புவனி நாரணி பால லோசனி சூலிசாம்
பவிசு காரணி கௌரி பூசனை பண்ணு மூண்மகிழ் வெளியதோ

(௱௮) ஏரம்இரண்டு-பால், இனி, கிளவி-சொல். ஆரம்இரண்டு-சந்தனம், முத்துமாலை. கோரமிரண்டு-பயம், கொடுமை. விழியார்க்கு-கண்களையுடையவாது: செந்திலன்ன விழியார்க்கே யெனக்கூட்டுக. செந்தில்போலச் சுகஞ்செய்பவளென்பது பொருள்.

(௱௯) மதுகரம்-வண்டு. நகை-பல். புலம்பி-ஒலித்து.

(௱௰) பொறை-பாரம். தேசு-அழகு. காசு-குற்றம். வரி-இரேகை. எய்-ந்த.

மருவு சேர்ந்த பிறவ யாவையு மாய வங்கு விருப்பயா
மானி லைக்கை விடாது ருத்திரன் மதிபு நாடொறு முயலுறு
மரிய வேள்வியி லந்த ணாளர்கள் காமி கண்டிடுள் முந்துவா
லாய வோகா ராமி லுர்கமா மருந்த வாமைய ரியாருமே. (சக)

[illegible]வெண்டுறை.

காருமினை யடியனைக்கு வெப்பெருமான்
ஐய்பிறைக் கேயோன செந்திற்
குருடைய சுடர்வடிவேற் புனைக்கடப்பத்
தொடைக்குமரற் றொழுதி லாதார்
விரிநீர் புடைசூழ் வியன்மே தினிமேற்
பரிவா துறுநோய் பலியா லெலியா
யமரி ரபார வருகான் கரியா
யுரியா கொழா வுவர்வோ [illegible]ரிபோ
யெரிவாய் நிரையக் கிடங்கிற் குவரே. (சஉ)

[illegible]லித்துறை.

மூழ்கா நிலைப்புது நீர்வெள்ள மீனமுன் விரைத்துபழம்
தாழ்கால பாழ் துறந்திறந் [illegible]க்கின் மக்னியக்கி
வீழ்கா நமிற்றெய்வக் வேல்[illegible]யுனி யான்மேவி யாதுசெந்தில்
யாழ்கா முறமொழி வள்ளி[illegible]காதலன் விரங்குவையே. (சங)

(சக) [illegible]மியிற்றேனை. [illegible]வரனைத்தையுடையார். உள்ள[illegible]கினைத்தலும். சேதகு-மென்மைத[illegible]. கசியசேம்-கட்குடித்த மகிழ்ச்சி[illegible]புடைய யாக்கள். [illegible]. சேழல்-பன்றி. மதி-சந்திரன். காமி-கள். மும்[illegible]முப்பலேச்சாப்பிக்கைய ([illegible]). [illegible] பெயருடையவர். [illegible]. ஐயனே, [illegible] என்றும் [illegible]. [illegible] அப்பனே யென்று மனிதரை யழைப்பதும் பழைய வழக்கு.

(சஉ) கூர்-அச்சம். தனை-பூங்கொத்து. புடை-பக்கம். பரிவு-துன்பம். கழியா-[illegible]. ஒசியா-தொலைந்தே. வசை-வருத்தப்பட்ட. அயர-சோர்ந்து. [illegible]. கழிந்து. இழா-இழைப்பட்டு. எரி-அக்கினி. நிரையம்-நரகம்.

(சங) மூழ்காநிலை[illegible]. புதுநீர்-புதுவெள்ளம். வேட்டு-விரும்பி(போய்). [illegible]. பழம்-பழமையாகிய. [illegible]. வீழ்-விரும்பப்படும். [illegible]. துறந்து-நீங்கி. இறந்தாய்போல-இறந்ததுபோல.

ஓரங்கல்—இதுவுமது.

இரங்கி மெய்கரிக் திருந்சிறை யடைந்திட ரிடைமூழ்கி
வருந்த ணீரொடு நாணொடு மறுகிய வரிவண்டே
ரருங்கன் வார்முலைக் கொளிசெய் செந்திலிற் கார்கால
மொருங்கு மம்மையு மொழிந்தன ரோவெமை யொழிந்தாரே. (சச)

சிந்தியல் வெண்பா.

ஒழிந்தன அன்ப முவந்தன வுள்ள
மிழிந்தன நம்வினை யெல்லாஞ்—செழும்புனற்
சேந்தன் திருச்செந்தில் சேர்ந்து. (சரு)

ஓரங்கல்—ஆசிரியவிருத்தம்.

சேர்ந்த போது குளிர்ந்து மன்பினர் தீர்ந்த போது கனன்றும்வா
னூர்ந்த கந்த னுகந்த செந்தி லோதுங்கு வெண்பணி லங்கள்போ
லீர்ந்து பொங்கிரு ளுங்கி யெங்களு மெங்க ளங்க நடுங்குமா
ரூர்ந்த வெம்பனி சிந்தி முந்துற வந்து வந்தெழு மிந்துவே. (சசு)

இதுவுமது.

இந்துவு மிரவியு நின்றெனை வலிவிய விம்பரி னெழுவகைபா
வந்துறு பிறவியி னொந்துழ லுடலொரு மங்குத லொழிவேனோ
செந்திலு மெனவிரு கண்[illegible]மடியவர் சிந்தையு மருமறைதா
லந்தமு மகிழ்வொடு சந்த[illegible]முலவிய வம்பிகை திருமகனே. (சஎ)

(சச) இரங்கி-வருந்தி (ஒலித்து). சிறை-காவலிடம் (சிறகு). இடர்-துன்பம் (நெருக்கம்). கணீர்-கண்ணினின்றுவருநீர் (கள்ளாகியநீர்). நாணொடு-வெட்கத்துடன் (மன்மதன்விற்) கயிறுக. மறுகிய-சுழன்ற. ஒழிந்தனரோ-விட்டுநீங்கினரோ.

(சரு) சேந்தன்-குமாரக்கடவுள்.

(சசு) தீர்ந்த-நீங்கிய. கனன்றும்-சுட்டும். பணிலம்-சங்கு. ஈர்ந்து-பி[illegible]ந்து. துங்கி-உண்டு; கெடுத்து. ஆர்ந்த-நிறைந்த. அந்தி-மாலைக்காலத்தில். இந்து-சந்திரன். ஈர்ந்தென்பது-ஈர்ந்தேன்பதனோடு முடியும்.

(சஎ) நின்றெனை-நிலைத்திருந்தாற்போல. உலவிய-சஞ்சரிக்கப்படுகின்ற. இம்பரின்-இவ்விடத்தில். மங்குதல்-கெடுதல். ஒழிவேனோ-நீங்குவேனோ. சந்தம்-எப்பொழுதும்.

கலித்துறை.

மகவா னரசு மழிவற்ற யாக்கையு மம்பதையுஞ்
சுகவாழ்வு மற்றவை யாவும்பொய் யேதமிழ்ச் செந்திற்புரத்
தகவா ரிசமலர்த் தங்கைகள் கூப்பிநின் றாறிரு
முகவா வெனவினைப் பணிவொன்றே மெய் முயல்பவர்க்கே. (௪௮)

கலித்தாழிசை.

முயல்பவர் முயற்சியின் முன்னம் யாவையு
நயவுனர் செந்திலா னல்குமே
நயவுனர் செந்திலா னல்கா னாயி
னயலொரு வானவர்க ளாக்குதற்கு வல்லவரு மல்ல ரன்றே. ()

குறட்டாழிசை.

அன்றல விள்வு மருமெய் யாவர்வேள்
மன்றலஞ் செந்தூர் வாழ்த்தா தாரே. (௫௰)

இரங்கல்—ஈற்றயலடி குறைந்த நேரிசையாசிரியப்பா.

தாரார் சொல்லோ தங்குவிர் தாரே
வாரா ராயின் மானனை யீரே
பாரா ராலோ பணிபடு நாளே
சீரார் செவ்வேள் செந்தா ரவ்வே. (௫௧)

பாங்கிகூற்று—வஞ்சிவிருத்தம்.

அவரு மங்குள ரன்பினு
மிவரு நெஞ்ச மிரங்கினர்
சிவன்ம கன்பயில் செந்தில்வா
யெவரு மென்செய்வ ரின்பமே. (௫௨)

ஆசிரியவண்ண விருத்தம்.

இன்பமுந் துன்பமுஞ் சங்கடங் கொண்டயர்ந் தங்குமிங் குஞ்சு
ழன் றிடுமாயத், துன்பவெங் கும்பியங் கந்தவிர்ந் துன்பெருந் தொண்ட
னென் றயர்ந்துளங் கழிவேனோ, புன்குருந் தாந்திகன் சந்தனஞ் சிந்தி
முன் பொங்கிவெண் சங்கெறிந் தலைவீசித், தண்பொருந் தம்பசும் பொ
ன்சொரிந் தெங்கணுந் தந்தமென் செந்திலெம் பெருமானே. (௫௩)

கார்கண்டு பாகனொடுகூறல்—இதுவுமது.

பெருமான் மதிபொதி சடையா னுடனுறை பிணைமா னுதவிய
செந்தூரன், கருமா மயிலென வுறைவாய் சிதறிய கணமா மழைமுகில்
கண்டாலே, யொருமான் விழிவழி புனலோ வுடல்வழி யுயிரோ விடு
குவ ளந்தோயான், வருமா றறிகில னினிநீ விரைவுடன் வலவா கடவு
தி வன்றேரே. (௫௪)

சிந்தடிவஞ்சிப்பா.

தோராதவன் வழிமறுகிய திரள்சோலை
வாரார்மல ரிடையொழுகிய மதுமாரி
நீரார்வயற் செந்தூரனை நினையாதார், யாரேனு
மெழுவகைப் பிறப்பினு மியங்கி
யழிகுவர் சுறங்கெனு வவலமனி யுழந்தே. (௫௫)

கலித்துறை.

உழவாத மம்மரு முன்னுத நெஞ்சு முறுப்பசப்பு
மிழவாத நாணுமெங் குண்டுவண் டரியல் சேர்குறிஞ்சிக்
கிழவா னவனை யிளையோ னெனுந்தன்மை கேட்கிலராய்த்
தொழுவா ரத்தொடு செந்திற்சென் றேகண்ட தோகையர்க்கே.

(௪௮) மகவான்-இந்திரன். மன்பதை-மக்கட்கூட்டம். அகவாரிசம்-இருதயதாமரை. முயல்பவர்க்கு-முயற்சிசெய்து பிழைப்பவர்க்கு.

(௪௯) முன்னம்-நினைப்பு. அயல்-வேறு.

(௫௰) அருள்-துன்பம். மன்றல்-வாசனை.

(௫௧) தார்-மாலை. ஆல்-அசை.

(௫௨) இவரும்-எழுந்தவரும். என்செய்வர்-யாதுதடைசெய்வர். இன்ப மே-(இனியடைவது) சுகமே.

(௫௩) அங்கும் இங்கும்-அவ்வுலகத்தும் இவ்வுலகத்தும். மாயத்துன் பம்-மயக்கமாகிய வருத்தம். கும்பி-(தாய்மார்) வயிற்றிற்பிறக்கும். அங்கம்-சரீ ரம். கழிவேனோ-மிகுதியடைவேனோ. உந்தி-செலுத்தி. பொருந்தம்-தாமிர பருணிநதி.

(௫௪) பிணைமான்-பெண்மான்போன்றவுமாதேவி. உறை-நீர்த்துளிகள். வாய்-இடந்தோறும். வருமாறு-மேல்விளையும் விதம். வலவா-சாரதியே. கட வுதி-செலுத்துவாய்.

(௫௫) வழிமறுகிய-வழிதெரியாமல் மயங்கிய. வார்-ஒழுங்கு. மதுமாரி-தேன்மழையாகிய. சுறங்கென-காற்றாடிபோல். அவலம்-துன்பத்தால். உழந் து-வருந்தி.

(௫௬) உழவாத-வருந்தாத. உன்னுத-நினையாத. உறு-அடையாத. பசப் பு-பச்சைநிறம். இழவாத-கெடாத. நாணும்-வெட்கமும். குறிஞ்சி-குறிஞ்சி நிலத்து. கிழ-உரிய (விருத்த). ஆதரம்-அன்பு.

வெண்பா.

தோகைமயூ ரர்க்குந் தலைவன்றா ளருமிகையே
ஓகை யகமாக்க வொன்றுங்கோ — பூகமலி
தேங்கடம்பாய் செந்திற் றிருநகரில் வீற்றிருக்கும்
பூங்கடம்பா நின்றாள் புறம். (௩௭)

முடைநியார்—கலிப்பா.

புகலும் வாய்மொழிப் பால்விலை கூறுவார் போனி லாநகை பூத்த செவ் வாய்மலர்ந், தகலும் வாய்மறு கெல்லா மருகச்சென் றுவின் பால்விலை யார்க்கு மிடைச்சியார், தகலு மாகுங் குடமுலைப் பால்விலை தனைய லாற்கிவன் சந்ததி செந்திலா, னிகலு மாவொடுங் கன்னொடு நெஞ்சைப் பிவர்விற் றுவினி யார்விலை கொள்வரே. (௩௮)

தலைவிகூற்று—ஆசிரியவிருத்தம்.

கொள்வா ரங்கே செவிப்புலத்தெங் குலத்தார் வலித்த கொடுங் கடிப்பின், வல்வார் முரசங் கறங்கோதை மணம்பெற் றயரு மனைமு ன்றில், கல்வார் கடப்பந் தொடைச்செந்திற் கந்தன் வேல்போற் காய் கணைபாய், புள்வார் பொருவெங் களந்தோறு கேட்டே யகன்ற போரேறே. (௩௯)

ஆசிரியவிருத்தம்.

வருமிரும் பகலைக் கலவைமான் மதச்சே றெழுதிய வழிமதக் களுழி யிரைத்தெறி காடத் திரடிணி புழைக்கை யிகற்கரி மருப்புறழ் முலை ப்பூ,— வருமிருங் கூந்த லேந்திழையவர்பா லலந்தனைக் கலந்துழன் றவ மே, நாள்கழித் தலைப் படுகுழி கிடச்சு கூர்ந்தரியா னுமா ருனதோ,—

(௩௭) தோகை-மயில்வாகனத்தின். தாளைத்தாள். இரண்டு பாதங்கள். புறம்-வெளியில். ஆக்கும்-சேர்க்கும். ஓகை-மகிழ்ச்சியுடைய. அகம்-உள்ளிடத்தில். பூகம்-கமுகமரத்தில் மலிதேம்-நிறைந்ததேன். கடம்-யானைமதம்போல.

(௩௮) மொழிப்பால்-சொல்லாகிய பால். விலைகூறுவார்-விலைசொல்பவராகிய வேசையர்கள். நிலாநகை-சந்திரனைப்போன்ற சிரிப்பு. அகலும்-விரியும். மறுகு-வீதி. மருக-சுழல. சகல்-பொருந்தலுடைத்தாதல். உம்-அசை. சந்ததி-மைந்தன். இகலும்-பகைக்கும்.

(௩௯) செவிப்புலத்து-காதினிடத்து. வலித்த-வலிந்தடிக்க. கடிப்பின்-குறுந்தடியால். வல்வார்-கட்டியவாரையுடைய. கறங்கு-முழங்கு. ஓதை-ஒலி. வேட்டு-விரும்பி. அயரும்-செய்யும். முன்றில்-முற்றத்தில். புள்-பறவைகள். வார்பொரு-ஒழுங்காக மோதுகின்ற. களம்-யுத்தகளத்தில். போரேறு-ஆண் சிங்கம்போன்ற தலைவர்.

வாறெழுந் துளங்கொண் டைம்புல னடக்கி யவாவறுந் தொருநெறி யருவி, யகந்துழைந் துருகிப் பருகுமன் பினருங் கானந்த நூாலவாரி தியே,— பாறெழுந் திரைக்குந் திரைப்பகங் குருதிப் பரிதியந் தடாரி லை நெடுவேலும், பண்ணவா விரைப்பூந் தண்ணறு மயல்பாய் பைந்தமி ழ்ச் செந்திலவா வையினே. (௪௦)

இதுவுமது.

வானமும் புவியு மாய மாநிலம் பூத மோதி
ஊனுடம் பாத ருயே ஊாழ்வினைப் பகுதி யன்றே
கூனிளம் பிறைதோய் நெற்றிக் கொடிமணி மதில்சூழ் செந்திற்
றேனினந் தொகுதார் மல்கு செஞ்சுடர் வேலி னானே. (௪௧)

கார்காலம்போகநெஞ்சொடுகூறல்—இணைக்குறளாசிரியப்பா.

வேலிற் கிளரொளி மின்றெறிக் குவன்றிச், சூலிற் கடலென முழங்கி மாலிற் கருகிக், காலிற் கடுவிசைத் தெறிந்து, மேலிற் பரந்து, பாலிற் பல்துளி சிதறிக் கோலிற் பொழிந்து, குனிசிலை வளைத்தன வாலோ, வாலிற் சிறந்தோன் மைந்தன், சேலிற் றிகழ்வயற் செந்திலிற் சொன்று, வியங்கு தேரினு முந்துறு மாலோ, சாலிற் கேள்விப்பாக, நகவினி யென்னு மாலோ, தூலிற் சிறந்த நுண்ணிடை தனக்கே. ௪உ

இரங்கல்—ஆசிரியவிருத்தம்.

தனக்கோ ருவமை யில்லாத தத்திக் கிளையான் செந்திலமென்
மனக்கோ யிலுங்கொண் டவனிணைத்தாள் வணங்கா தவரினைங்கார

(௪௦) வருமிரு-மிகப்பெரிய. பகலை-பகலை. எழுதிய-பூச. மதக்களுழி-மதமாகிய காட்டாறு. காடம்-மதமொழுதமடையாளம். திணி-பலம். புழை-துவாரம். உறழ்-ஒத்த. அவலம்-துன்பம். ஒருநெறி-ஒப்பற்ற மோக்ஷவழி. தருவி-தேடி. பருகும்-உண்ணும். பாறு-பருந்துகள். இரைக்கும்-முழங்கும். குருதி-இரத்தம். பரிதி-சூரியன்போன்ற. நறு-தேன்.

(௪௧) மாறு-விரோதம் ஓதில்-சொல்லுமிடத்து. பகுதி-பகுப்பு. நெற்றி-உச்சி. தேன்-வண்டு. மல்கு-பொருந்திய.

(௪௨) துவன்றி-நெருங்கி. மாலின்-விஷ்ணுவைப்போல. காலின்-காற்றைப்போல. விசைத்து-விசைகொண்டு. பாலின்-பால்போல. கோலின்-சோல்போல; நோக. குனிசிலை-வளைக்கலானவில் கொண்மூ-மேகங்கள். பாக-சாரதியே. நகவு-குணம்.

யெனக்கோ ருறுதி யியம்பாம லிதண்கா ளேனல் காள்கிளிகாள்
புனக்கோ டிலங்கா ளெங்கொளித்துப் போனா ரிருந்த மானாரே. (௬௩)

தழை—கலித்துறை.

மானார் விழிமான் மகள்கா தலனார் வாழ்செந்தூ
ரூனார் வடிவே லாரவோ யினிவே றுரையுண்டோ
வானார் விழையுந் தழையோ தந்தா யம்மாநங்
கானார் குழலா ளுயிர்தந் தனைநீ கண்டாயே. (௬௪)

மறம்—ஆசிரியவிருத்தம்.

கண்டாலு மனம்பதைக்குங் கடுங்கூற்று நடுங்கியெமைக் கடல்சூழ் செந்தில், வண்டாருந் தாரர்க்கடம்பன் மலர்ச்சரண மறவாத மறவ ரேயாம் பெண்டாலின் றளமயங்கி யுயிரைவிடத் தூதுவிடும் பெருமான் றன்பாற், றொண்டாலெங் களுக்குரைக்க வருந்தூத வவற்கியம தூத னீயே. (௬௫)

தலைவனைவேண்டல்—வெண்பா.

தூதுசொல வேண்டிச் சுரும்பினையு மானினையு
மாதுசொல விட்டாலு மாட்டாவா—லோதுசெந்திற்
காங்கையா வாறிரண்டு கைத்தலத்தாய் நின்றன்னை
வேங்கையா மென்றே வெறுத்து. (௬௬)

ஊசல்—கலித்துறை.

வெறுப்பா ரவரென்னை மின்னனை யாரெனில் வெம்பிழைபும்
பொறுப்பார் மறந்தும் புறக்கணி யார்புணர்ந் தாவிதந்துண்
ணிறுப்பார் புலவியி னூடல்செய் யார்நினை வார்வினைக
ளறுப்பார் திருச்செந்தில் வாயில ரார்வந் தலைப்பவரே. (௬௭)

(௬௩) இணங்கார்-பகைவர். இதண்காள் - பரண்களே. ஏனல்காள்-தினைப்புனங்களே.

(௬௪) உரவோய்-வலிமையுடைய தலைவனே. அம்மா-ஆச்சரியம். கண்டாய்-வேண்டா கூறலாகிய அசை நிலை.

(௬௫) ஆலும்-முழங்கும். பெண்டு-பெண். உயிரை-(தன்)னுயிரை. அவற்கு-அப்பெருமானுக்கு.

(௬௬) சுரும்பு-வண்டு. வேங்கை-வேங்கைமரம். வள்ளிநாயகியின் பொருட்டு வேங்கைமரமாகிய கதை கந்தபுராணத்துட் காண்க.

(௬௭) வெறுப்பார் - நெருங்குவார். மின் அனையாரெனில் - மின்போலும் பெண்களென்றால், புறக்கணியார்-அலக்ஷியம்செய்யார். நிறுப்பார்-நிறுத்துவார். வினைகளறுப்பார்-குமாரக்கடவுளுடைய.

எழுதரிதேன்வவேந்தலை விலக்கல்—கலித்தாழிசை.

அலைவாய்வள நந்தாரின நிலவாய்விரி செந்தூ
ரடனாட்டிய கதிர்வேலவர் குடநாட்டன மனையான்
முலைதாமெழு துவையேலவை குழையாமுழு மதிபோன்
முகமேரெழு துவையேனவை புரியாதிரு புருவஞ்
சிலைபோலெழு துவையேலவை குனியாவடி தளிர்போற்
றிடமாயெழு துவையேலவை நடவாகிளி துவர்வா
யிலவாயெழு துவையேலது கலவாதிறை யமுத
மெங்கேயெழு துவைநீகிழி செங்கேழயி லவனே. (௬௮)

தலைவியை யாற்றுதல்—வெண்பா.

அயில்வேற்க ணல்லா யனார்கூர்ந் தலமந்
துயிர்வேட்கை வாட்ட மொழிவாய்—பயிலுமதன்
பூங்கைக் கடம்புண்டு போனாற் றரச்செந்தில்
வேங்கைக் கடம்புண்டு மேல். (௬௯)

விலக்கல்—ஆசிரியத்துறை.

மேல்வா னவர்தஞ் சிறையறுத் துயர்ந்த விளங்கிலை நெடுவேற் றளங்கெழிற் குமரன் வியன்செந்திற், சூல்வாய்ப் பணிலஞ் சுறங்கு மலைவாய்த் துறைவா வினியெம் பிறைவா ணுதலின் றுணர்த்தா ரகலம் புணர்ப்போ டேகின், பால்வாய்க் குழவி மறிமான் மறுகும் பகுவாய்ப் புலியின் றொகைவால் புடைப்பப் பணைக்கோட்டு, நால்வா யிரையா வேட்டையா யரவ நவிலும் பாலைத் தெனலாற் கவலை நளிர்நீர்ப் பொருநைத் தெளிநீர் பழன நன்னாட் டகமன்றே. (௭௦)

(௬௮) குடநாடு-மேல்நாடு. அனம்-அன்னப்பக்ஷி. குழையா-மிருதுப்படா. நகைபுரியாது-சிரியாது. குனியா-வளையா. கிளி-கிளிமூக்கும். துவர்-பவளமும்போலும். இலவா-இலவம்பூவாக. கலவா-கலவாது. கிழி-படம். கேழ்-நிறம். கலவா என்பது முற்றிறுதிகெட்டது.

(௬௯) அயில்-கூர்மை. அனர்-துன்பம். வேட்கை-ஆசையால். கைக்கு-கையினிடத்து. அடு அம்பு-கொல்லுகின்ற பாணம். உண்டு,—(இங்கு இல்லாதே). வேங்கை-வேங்கைமரமாகிய முருகக்கடவுளுக்கு. கடம்பு-கடப்பமாலை.

(௭௦) துளங்கு-அசைகின்ற. துறைவா-நெய்தனிலத்தலைவனே. புணர்ப்போடு-சேர்ந்தபடியே. மறுகும்-சுழலும். தொகை-கூட்டம். புடைப்ப-அடிப்ப. பணை - பருத்த. நால்வாய் - யானை. இரையா - உணவாக. நவிலும் - (தாற்பரியம்) செய்யும். பாலைத்து - பாலைநிலமுடையது. கவலை-பய (மூண்டாம்.) தெளி - குழைசேறு. மான்குழவிபெனக்கூட்டுக.

வெண்பா.

அகமன் றலஞ்சலத் தாள்வினையே னன்பாற்
புகமன் றருடிருந்தி பூந்தான்—றகவென்றா
முந்திங்க ளெப்போ லொளிகொண்ட வேற்படையோன்
செந்திலை யெப்போற் சிறந்து. (௭௧)

பிரியேனென்றல்—கலித்துறை.

சிறந்தார் பரவுந் திருச்செந்தி லார்சிவன் றிருநுதற்கட்
பிறந்தா ரிணையடி பேணலர் போலப் பிணிபலித்தார்
புறந்தாழ் குழலி புலம்பே லுன்னையம் பொழிகலந்தி
மிறந்தாவி யான்படி னும்பிரி யேன்பிறப் பேழினுமே. (௭௨)

ஆசிரியவிருத்தம்.

¶ வரமுபர் கடாயானை மேல்வெண் குடைக்கீ ழிளைக்கவரி யெறிய விருபா, லிசைவிய முழங்கபட வென்னங் குழீ இயனைய வேழையர் மருங்கு குழச்,—காழுகி னருங்குற டுறிஞ்சுபூந் தேய்வைதோ கமழ்நடவும் வலையகிமிர் தோட், கண்ணிக் கடம்பசைய வேல்கொண்டு நீவரக் கண்கொண் டுளங்குளிர் வனே,—வாழிமுரி திரைமுகடு கிழியவெழு மெழுபுரவி யருணமிசை சொடிதெடுங் தேர், நாயிரங் கதிரிரவி பாயிரும் பகலுமிருள டையமிடை கிளைவிடு தடங்,—கோழிலை நறும்புன்னை துன்னு நுண் டாதுபடி குவிமுகை மருட்டு முடவுக், குடவளை பணிக்கொருதி நிலவுகாய் செந்தில்வரு குலவமரர் தம்பிரானே. (௭௩)

(௭௧) அகம் - மனத்தில். மன்றல் - வாசனையுடைய. தாள் - திருவடிகள். புக-பொருந்தியிருக்க. மன்தரும்-நிலையுறும். என்றாம் - சூரியன். உந்தினை-செலுத்தினை. காம் - பிரகாசம். வினையேன் அகமெனக்கூட்டுக.

(௭௨) பேணலர் - விரும்பாதவர். பிணி - கட்டு. புறம் - முதுகில். புலம்பேல் - வருந்தாதே. ஆவியிறந்தபடினுமெனக்கூட்டுக.

(௭௩) வழு - எழுமுழம். கடா - மதம். குழீஇயனைய-கூடினாற்போல. காழ் - வயிரம். குறடு - கட்டை. தேய்வை - சந்தனம். கமழ் - வாசனைசெய்ய. நிமிர் - உயர்கின்ற. முரி - வளைகின்ற. அருணம் - செந்நிறம். பகலும்-பகற்காலத்தும். மிடை-நெருங்கிய. கிளை-கிளை. முகை - அரும்பு-மருட்டும்-(தன்னைமுந்தோவென்று) மயங்கச்செய்யும். முடவு - வளைந்த - காய்-பிரகாசிக்கின்ற.

ஆசிரியத்தாழிசை.

¶ தம்பிரான் செந்திலிற் சரணைத் துதித்தோ
ரம்பொனூர் கழலிணை யன்புறப் பணிந்தோ
ரும்பராய் மன்னுவ ருயர்நிலை யடைந்தே. (௭௪)

மாலைமிகுந்தல்—கலித்துறை.

அடைக்கலந் தானிவ ளாறுமு மார்புத் தனிகடம்பத்
தொடைக்கலந் தாருயிர் சோர்குவன் றேதொல் லவுணர்வெம்
மிடைக்கலந் தாவிப் பசியு றுடனுண் டெழுங்கதிர்வேற் [போ
படைக்கலந் தாங்கிய கையாய்தென் செந்திற் பதிக்கந்தனே. (௭௫)

இரங்கல்—வெண்பா.

கந்தமல ராலக் கமழ்கூந்த லேந்திழைமார்
தந்தமல ராலத் தளருமோ—வந்தவினை
போக்குமரன் சேயொளிக்கும் பூம்புனற்செந் தாரமர்ந்த
கோக்குமரன் பூந்தார் குறித்து. (௭௬)

இந்துமதி—ஆசிரியத்துறை.

குறுமுனிவற் கறமுரைத்த குமரன்மா செந்திலினங் கொலையில்வே
சிறுமியைம ணம்புணர்ந்து நீர்ந்திடினு மன்பகத்திற் றீரா ரன்றே[டர்
சிறுமியைம ணம்புணர்ந் தன்பிற்றீர்ந் தாராயிற்
கறிவளர் வரைநாடற் கென்னு மென்னு முணர்ந்த கல்வி யாறே. (௭௭)

வெண்பா.

¶ ஆறுமுக மேன்கண்க ளீரிரண்டு மேனடியேற்
கேறுவினை யொழிப்ப தெல்லாமோ—நீறணிவான்
கன்றே திருச்செந்திற் கற்பகமே நின்னருட்கண்
ணொன்றே யமையாதோ வோது. (௭௮)

(௭௪) செந்திலிற் றம்பிரானெனக்கூட்டுக.

(௭௫) அலந்து - துன்புற்றுத்தேடி. இடை. இடத்தில்.

(௭௬) தந்தம்-தங்கள் தங்களுடைய. அலர்-பழிமொழி. ஆல - (வந்து) அசையாநிற்ப. தளரும் - தளர்ச்சியடைவள். சேய் - புத்திரன். கோ-தலைமையாகிய. வ-அசை.

(௭௭) சிறுமி - சிறுபெண். நீர்ந்திடினும் - பிரிந்தாலும். கறி - மிளகுக்கொடி. ஆறு - மார்க்கம்.

(௭௮) என் - எதற்கு. கன்றே-பிள்ளையே. அமையாதோ - போதாதோ.

இரங்கல்—ஆசிரியவிருத்தம்.

ஓது வார்பொறை யுயிருடற் பொறைமறந் தருமா றயர்ந்தோங்கி
மோது வாரின முகிற்றுயில் வனிதையர் முடிந்திறந் திடுங்காலைக்
காது வார்மணிக் கனங்குழை யுழைமகள் காதலர் திருச்செந்திற்
போது வார்குழ லாய்கல்வி வேட்டெனைப் புல்லுவிட் டகன்றாரே. (எ௯)

இரங்கல்—கலிவிருத்தம்.

அகலுறார் கனவெலா நனவெ லாந்தொடப்
புகலுறா ருளங்குடி புகுந்த காதல
ரிகலுறு வேள்செந்தி லிணங்க லாரின்யா
னகலுறு தாவினின் றாச லாடவே. (அ௰)

கழையாடல்கூறித்தோழிநகைதல்—இதுவுமது.

ஆடு பூஞ்சுனை சந்தனத் தாய்மலர்
சூடி வாய்விளர்ப் புந்தரிற் றோகையாய்
சேடன் வேற்படைச் சேவகன் செந்திலி
லாடி யானுஞ்சென் றுடுவ னனமே. (அக)

தலைவன்கூற்று; இரங்கல்—இதுவுமது.

நானிலமு மெண்டிசையு நன்கிசையு நாளார்
தேனுகு கடம்பருயர் செந்திநகர் போல்வார்
மானுகு கருங்கணிணை வஞ்சவிட மானால்
யானுமுயி ரும்புவியு மென்கொலுய மாறே. (அ௨)

(எ௯) ஓதுவார் - படிப்பார். பொறையுடல்-பாரமாகியசரீரத்தை. மறித்து - மீள. அருமாறு - படைக்கும் விதம். வார்-நீண்ட. உழை-மான். போது-மலர்களணிந்த. வேட்டு - இச்சித்து. புல்லு - தழுவுதல்.

(அ௰) அகலுறார் - நீங்கார். புகலுறார்-பேசமாட்டார். இகல்-பகை. இணங்கலாரின்-பகைவரைப்போல.

(அக) சந்து - சந்தனம் - ஆய் - ஆராய்ந்து. விளர்ப்பு-வெளுப்பு. தோகையாய் - மயில் போல்பவளே. சேடன் - அழகுடையவனாகிய.

(அ௨) நானிலமும் - நான்குநிலத்திலும். நாள்-அன்று. நகு-விளங்குகின்ற. போல்வார் - ஒப்பாராயமாதர். என் - எவ்விதம்.

தோழிகூற்று; இரங்கல்—ஆசிரியவிருத்தம்.

மாறு படுஞ்சூ ரோட முனிந்தார் வாழுயர் செந்தூர்வா
வூறு படும்பே ராசையி னம்பா லூரர் பிரிந்தாரே
நீறு படும்பூ ணாரமு மொன்றோ நேரிழை கண்சோர்நீ
ராறு படுங்கால் யாவ ரறிந்தா ராவி படும்பாடே. (அ௩)

கலித்துறை.

ஸ்ரீ பாடாத நாவும் பணியாத சென்னியும் பாவித்தன்பாய்
நாடாத வுள்ளமு நான்படைத் தானா கெழுஞ்சென்று
கூடா துயர்கதி கூடுவ னேகுன் றெறிந்தவைவேற்
சேடார் மதிற்செந்தி லாயென்கொ லோநின் றிருவருளே. (அ௪)

தலைவிகூற்று—வெண்பா.

அருட்கடல்வாழ் செந்திநக ராய்வளைக்கை நல்லாய்
பொருட்கடல்வேன் மன்னரேன் போனார்—மருட்குவளைக்
கண்பொழிய முத்தங் கனக முலைபொழிய
நண்பொழிய நாமெலியு நாள். (அ௫)

பாங்கிகூற்று—கலிப்பா.

நாணளினந் தளையவிழ்ந்த நறுமலர்ப்பொற் பொகுட்டகட்டுக்
கோணளினந் துறங்குவயற் குமரன்மா செந்திலின்வாய்ப்
பாணளினந் தலராக பாரமுகில் சோரமணிப்
பூணளினந் தனித்தாவி புல்லாது நில்லாதே. (அ௬)

(அ௩) ஊறுபடும் - தழும்புபடும்; அழுத்தமாகிய. ஊரர் - மருதநிலத் தலைவர். நீறுபடும் - சாம்பராகும். ஒன்றோ - (இஃ) தொன்றுதானோ.

(அ௪) பாவித்து - பாவனைசெய்து. கூடாது-சேராது. சேடு அழகு.

(அ௫) அருட்கடல் - கிருபாசமுத்திரமாகிய குமாரக்கடவுள். பொருட்கு - திரவியத்தின் பொருட்டு. அடல்- வலிய. முத்தம் - முத்துப்போலும் நீர்த்துளி. கனகம் - பொன்போலுந்தேமல். நண்பு - சிநேகம்.

(அ௬) நாள்-தினந்தோறும். நளினம் - தாமரை. தளையவிழ்ந்த - கட்டு விட்டலர்ந்த. பொகுட்டு அகடு-கொட்டையினடுவில். கோள்-வலிய. நளி-குளிர்ந்த. நந்து-சங்கு. பாண் அளி-பாடல்வண்டு. நந்து-மிகு. அலர்-பூக்களையணிந்த. மணிப்பூணள்- இரத்தாபரணத்தையுடையவள். இனம்-இன்னமும். தனித்து-தனித்தால்.

வெண்பா.

நில்லாத நீடு நிலைநின்ற வென்றனக்குப்
பொல்லா தனவாம் புலனடக்கிப்—பல்பகலுங்
கார்த்திகையான் செந்திற் கடிநகரைக் கண்ணாரப்
பார்த்திலையா னெஞ்சே பனி. (௮௭)

கலித்துறை.

பணிப்பகை மயிலுஞ் சேவற் பதாகையும் பன்னி ரண்டு
மணிக்குழை களுமோ ராறு வதனமும் வாகை வேலுந்
தணிப்பருங் கடப்பந் தாருந் தண்டையந் தாளு நாளுங்
கணிப்பருஞ் செந்தி லாயென் கருத்தைவிட் டகன்றி டாவே ()

ஒப்பல்—இதுவுமது.

அகன்று லகலும் புணர்ந்தாற் புணருமென் னுயிரம்மா
குகன்று தமிழ்ப்பொழிற் செந்திலின் வாய்ச்சுனிர் மாமதிபோன்
முகன்றுஞ் சனங்குழை முத்தணி மூரன் முகிழ்முலைமான்
மகன்று னெழுதிய வோவியம் போலு மயிலினையே. (௮௯)

தலைவியைவியத்தல்—ஆசிரியவிருத்தம்.

மயில்கடவி யண்டகோள முகட்டிர வம்பொன்மேரு வரைபிதிர
வங்கை நீடே, ரயில்சுழல வெய்பர்வாழ வுலகைவலம் வந்தசோதி யருள்
குமரர் செந்தில் போலியார், குயின்மொழிக ளிக்கபாகு மடமயில்வி
ளங்குசாயல் கொடியிடையது வண்டு வாடுறா, வியலுமாக வித்ரசாப
மிணைவிழிக ளிந்த்ரநீல மிலவிதழ மிந்த்ர கோபமே. (௯௰)

---

(௮௭) நில்லாத - நிலைநில்லாமலெங்குஞ்செல்லுகின்ற. பொல்லா தன-கெடுதலுடையன. புலன்-பஞ்சேந்திரியங்களை. கடி-காவல். பார்த்தி-பார்ப்பாய். கையால்-கைகளால்.

(௮௮) பணி-பாம்பு. பதாகை-கொடி. வாகை-வெற்றி. தணி-குளிர்ந்த. கணிப்பு-அளவிடுதற்கு.

(௮௯) புணர்ந்தால்-சேர்ந்தால். முகன்-முகத்தில். முத்து அணி-முத்துப்போன்ற அழகிய. மூரல்-பல். முகிழ்முலை - அரும்புபோலுமுலையையுடையவளே. மால்மகன்-பிரமன். குகன் அகன்றுவெனக் கூட்டுக.

(௯௰) கடவி-செலுத்தி. பிதிர-பொடியாயுதிர. சுழல-சுற்றிவர. சோதி-சிவபிரான். போலியார்-போன்றமாதர். இயலும்-பொருந்தும். அகல்-தெற்றி. இதழ்-அதரம். இலவு-இலவமலரும். இந்திரகோபம்-பட்டுப்பூச்சியும்.

கார்கண்டிரங்கல்—ஆசிரியவிருத்தம்.

கோப மெழுந்தன மேக முழங்கின கோட லிரம்பினநீள்
சாபம் வளைந்தது தோகை பரந்தன தாரவர் வந்திலரா
னீப மணங்கமழ் மார்பினர் செந்திலி னெறிவழி நெஞ்சிடையே
சோப மலிந்தது வாவி தளர்ந்தது சோர்வன கண்டுளியே. (௯௧)

கலித்துறை.

துளியாது கண்புனல் சோராது மெய்துதி யாதுசொன்னாக்
களியாது நெஞ்சகங் கைகுவி யாதொருக் காலுமறை
தெளியாத வானவர் சேனு பதியைத்தென் செந்திலின்வாய்
வெளியா யெதிர்ந்து தொழார்நர கேழினும் வீழ்பவர்க்கே. (௯௨)

பாங்கியாற்றுதல்—குறள்வெண்பா.

வீழ்வா ரெழார்பொருட்கு விட்டுநமை வெற்பயிலாற்
போழ்வார்செந் தூரடையார் போல். (௯௩)

பிச்சியார்—ஆசிரியவிருத்தம்.

போலிதனக் கென்றுமிலாப் புண்ணியன்கண் ணுதற்கடவுள்
புதல்வன் கோலப், பீலிமயி லியற்செந்தி லியல்வேற்கைக் கொலைவேற்
கட் பிச்சி யாரே, நூலிடையைக் குறைத்துமணிப் பணைமுலையைப்
பெருக்கியென்று நோயே செய்தீர், நீலமுகி லோதிகுழைத் துயிர்
குழைப்ப நோவுமக்கு நீதி தானே. (௯௪)

---

(௯௧) கோபம்-இந்திரகோபம் - பட்டுப்பூச்சி. கோடல் -செங்காந்தள். நீள்சாபம்- இந்திரதநுசு. தோகை-மயில்கள். தாரவர் - மாலையணிந்ததலைவர். நீபம்-கடம்பமலர். சோபம்-சோர்வு. ஆவி-உயிர்.

(௯௨) சோராது-சனராது. மெய்-சரீரம். நா-நாக்கு. ஒருக்காலும்-ஒருதரமும். மறை-வேதங்கள். வெளியாய்-வெளிப்படையாக. தொழார்-வணங்காராய்.

(௯௩) பொருட்கு-திரவியத்தின்பொருட்டாக. வீழ்வார் எழார்-விரும்புவாரையெழுந்து புறஞ்செல்லார். போழ்வார் - பிளப்பாராகிய குமாரக்கடவுள்.

(௯௪) போலி-ஒப்புப்பொருள். பீலி-மயிற்றோகை. இயல்-தன்மையும். செந்தில்-திருச்செந்தூரினிடத்து. கை-கையும். வேற்கை-வேல்போலுங்கண்ணுமுடைய. பிச்சியாரே-பயித்தியமுடையவரே. பெருக்கி-வளரவிட்டு. ஓதி-கூந்தல். (ஞானம்). பிச்சியார்: மொட்டைத்தலையுங்கையில் வேலுமுடையவர்

தலைவி பாங்கிக்குரைத்தல்—கலிவெண்பா.

தானக் குனிகோட்டுந் தந்தியினை யும்விலக்கிக்
கானக் குடிலைருக் கலுழியினிற் காத்தளித்துத்
தேனக்க செச்சையந்தார்ச் செந்திலார்க் கன்பரினென்
னூனைக் குருக வுயிரிற் கலந்தார்க்கு
நானக் கமழ்கூந்த னன்னுதலே வாரலையென்
றியானுற் றுரைப்பதெவ்வா றின்று. (௯௫)

கலிவெண்பா.

இன்றுலகி னல்குரவா லீடுபடுந் தன்மையினு
லின்று மருவினையே னன்றவறஞ் செய்யகிலே
னென்றும் பிறப்பினுமிப் பெற்றியே முற்றுமெனைக்
கன்று மனத்தாற் கவலுழந்து நில்லாது
குன்றெறிந்த செந்திற் குழகாநின் பூங்கழற்கால்
சென்றுதொழு மாறன்பு செய். (௯௬)

தாய்கூற்று—கலித்துறை.

செய்யவ னேயெனுஞ் செந்திலெந் தாயெனுஞ் செவ்வடிவேற்
கையவ னேயெனுங் கங்கைமைந் தாவெனுங் கண்டுளிநீர்
பெய்யவ நேகந் தரமெழும் போய்விழும் பிள்ளைமதி
வெய்யவ னேயெனும் வேறறி யாளென் விளங்கிழையே. (௯௭)

தலைவிகூற்று—ஆசிரியவிருத்தம்.

இழைக்குங் கூடலு மென்னிரு கண்களி னிமைகளு மிரவெல்லா
முழைக்குங் கூடல மந்துமென் செந்திலா யொருகணங் கூடாவான்

(௯௫) தானம்-மதம். குனி-வளைந்த. குடிலைநகலுழி-குடிலையாகிய விளங்கிய. செச்சை-வெட்சிப்பூ. அன்பரின்-அன்பர்போல. நெக்கு-நெகிழ்ந்து. நானம்-கஸ்தூரி. வாரலை-வாராதே.

(௯௬) நல்குரவால்-தரித்திரத்தால். ஈடுபடும்-வருந்தும். அன்ற-உடர்ந்த. காட்டாறு. நக்க-பெற்றி-தன்மை. கன்றும்-வாடும். கவலுழந்து-துன்பமநுபவித்து. குழகா-பேரழகுடையவனே.

(௯௭) செய்யவனே-சிவந்தவனே எனும்-என்றசொல்லுவள். எழும்-எழுவாள். விழும்-விழுவாள். பிள்ளைமதி-(இவையெல்லாம்). சிறுபிள்ளைப் புத்தியாம்.

மழைக்க ணம்பிகை மலர்க்கரங் கோட்டியே வார்முலை பிரோட
வழைக்க நின்றுகூத் தாடிய மணிச்சிலம் பலம்புசே வடியானே. (௯௮)

கலிப்பா.

அடியாரி னுளமுருகன் பறியாத வென்புன்சொன்
முடியாத நக்கிரர் முருகாற்றுப் படையாமோ
தொடியார்பன் னிரண்டுநெடுந் தோளார்க்குத் திருச்செந்தில்
வடிவாய்வள் ளுகிர்ச்சேவல் வலனுயர்த்த கொடியார்க்கே. (௯௯)

வெண்பா.

ஆர்க்குங் கரிவண் டறையும் பொழிற்றிருச்செந்
தூர்க்கன் புடனீசென் றுள்ளமே—கூர்க்கு
மெழுமையினு நீபிறப்பி லெய்தாமற் சேயைத்
தொழுமயினும் வேலுமெனச் சொல். (௱)

(௯௮) கூடலும் இழைக்கும்-கைபொருந்தும் குறியும் பார்ப்பன்-என்யாதுகாரணம்-கூடு-தேகமும்-உழைக்கும்-வருத்தப்படும். அலமந்து-சுழன்று. கணம்-க்ஷணமும். கூடா-பொருந்தா. மழை-குளிர்ச்சி. கோட்டி-வளைத்து. பிரோட பாலொழுக. அலம்பு-முழங்குகின்ற. இமைகளும் கூடா. வெணக்கூட்டுக.

(௯௯) அடியாரின்-தொண்டர்களைப்போல. முடியாத-கெடாத. தொடி-கங்கணம். வடி-கூரிய. வள்-வளம். உகிர்-நகம். வலன்-வலப்பக்கத்தில். உயர்த்த-உயர்த்திய.

(௱) ஆர்க்கும்-கிறைக்கும். அறையும்-முழங்கும். கூர்க்கும்-மிகுக்கும். எழுமை-எழுவகை.

திருச்செந்திற்கலம்பகம்,

அரும்பதவுரையுடன்

முற்றிற்று.

இவ் வரும்பதவுரை யெழுதியவர்

மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான்,

ஸ்ரீ மு. ரா. அருணாசலக்கவிராயர்.

வ.

குமாரன்றனை.

திருச்செந்திற் கலம்பகம் அருளிச்செய்த

சுவாமிநாததேசிகர் சரித்திரம்.

இவர், செந்தமிழ் நாடு மூன்றனுள் இடை நின்றதாயும் செந்தமிழ்ச்சங்கமிருக்கப் பெற்றதாயுமுள்ள பாண்டிவளநாட்டிற் பரம்பரைச்சைவ வேளாளர் குலத்தில் சற்றேறக்குறைய இருநூறு வருடங்கட்குமுன் அவதரித்து வளர்ந்து கல்வியறிவாலுயர்ந்தவராய்த் திருக்கயிலாசபரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்தை யடைந்து, அக்காலம் ஆங்கெழுந்தருளிய ஞானாசாரியராகிய அம்பலவாணதேசிக மூர்த்திகளிடம் சிவதீக்ஷை பெற்றுத் துறவறத்தையடைந்து தவத்தால் மனத்தூயராய தம்பிரானு யிருந்தனர்.

அங்ஙனமிருக்குங் காலத்தில் இவருடைய நற்குண நற்செய்கையுஞ்சிவபத்தி குருபத்தி யடியார்பத்தித் திறத்தையும் பேரறிவையும் ஆங்குத்தரிசனத்துக்கு வந்திருந்த பாண்டிநாட்டின் றிலகமாய் விளங்கும் திருநெல்வேலி மயிலேறும் பெருமாள்பிள்ளை யென்பவர் அறிந்து இத்தகைய கூரிய புத்தியுடையார்க்கன்றோ நாம் கற்ற நூல்களையெல்லாம் போதிக்கவேண்டுமென்று நினைத்து ஞானாசாரியர் ஆஞ்ஞையால் இவரை யழைத்துக்கொண்டுவந்து தமதருமைப்புதல்வரினுமதிகமாக அன்புபாராட்டித் தினந்தோறு முபசரித்துத்தொல்காப்பிய விலக்கணத்தினுரியவுரைகள் நான்கையும் மற்றையிலக்கணங்களையும் திருவள்ளுவர் குறளின் பலவுரைகளையும் திருக்கோவையாருரையையும் சங்கமருவியனவாகிய சீவக சிந்தாமணியாதிய பஞ்சகாவியங்களையும் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலிய பல நூல்களையும் பன்னிரண்டு வருடம் ஐயந்திரிபறக் கற்பித்துப் பின்னர் திருநெல்வேலிக்குக் கீழ்பாலுள்ள செப்பறைப்பதியில் வசிக்கும் கனகசபாபதி சிவாசாரியரால் வடமொழி வியாகரண முதலிய நூல்களையும் நிரம்பக் கற்பிக்குமாறு செய்தனர். இங்ஙனம் தமிழ் வடமொழியிரண்டையுங் கற்றுத் தேர்ச்சியுற்ற தம்பிரானவர் இவ்விரண்டு வித்தியா குருமாரிடத்திலும் பெரிதும் பத்தி பண்ணியிருந்தனரென்பது தாம்கூறிய இலக்கணக்கொத்து என்னும் அரிய நூலில்,

"திருநெல் வேலி யெனுஞ்சிவ புரத்தன்
னுண்டவ மூர்த்தி தந்தசெந் தமிழ்க்கடல்
வாழ்மயி லேறும் பெருமாண் மகிபதி
யிருபத கமல மென்றலை மேற்கொண்
டிலக்கணக் கொத்தெனு நூலியம் புவனே"

"செப்பறைப் பதியில் வாழ்சிவத் துவிசன்
கனக சபாபதி கருது வடநூற்கட
றபோதனர் புகழுஞ் சைவாதி ராச
னுபய பதங்களை யுண்மையொடு பணிவாம்"

என்று சொல்லிய வித்தியா குருவணக்கங்க ளாலே நன்கு விளங்கும். பின்னர் மயிலேறும் பெருமாள் பிள்ளை இவரை அழைத்துக் கொண்டு திருவாவடுதுறைக்குப் போய்த் தமது ஞானசாரியரிடம் ஒப்புவித்தனர். அதன் மேல் இந்நூலாசிரியராகிய இவர் நிருவாண தீக்ஷை பெற்று வீடுபேற்றிற்குரிய ஞானநூல்களை யெல்லாங் கற்றுச் சிந்தித்துத் தெளிந்திருந்தனர். இவரிங்ஙன மிருக்குங்காலத்தி லொருநாள் ஆங்குவந்த இலக்கணவிளக்க நூலாசிரியராகிய வயித்தியநாத நாவலர் இவரைக்கண்டு கலந்துபேசும்போது, இவரது படிப்பின்றிறமையை நோக்கித் தொல்காப்பியமுதலிய நூல்களை யெழுத் தெண்ணிப்படித்த சுவாமிக ளிங்கிருப்பதை யறியாது காலம்போக்கினேனென்று சிலநாளிவருடனிருந்து நூலாராய்ச்சி செய்து வந்தனரே லிவருடைய கல்வியின் பெருக்கத்தை யாவர் சொல்ல வல்லவர்.

சிலநாட் சென்றபின் ஞானாசிரியராகிய அம்பலவாணதேசிகர் இந்நூலாசிரியருக்கு மயிலேறும் பெருமாள்பிள்ளை பிரார்த்தனைப்படி ஆசாரியாபிஷேகஞ் செய்து சுவாமிநாத தேசிகரென்னு மியற்பெயரோடு ஈசான தேசிகரென்னும் அபிஷேகச் சிறப்புப்பெயருந் தந்தருளித் திருநெல்வேலியிலே தமதாதீன மடாலயத்திலிருக்கும்படி கட்டளையிட்டனர்.

அவ்வாறே சுவாமிநாததேசிகர் எழுந்தருளி வந்திருந்தனர். அன்றுமுதல் திருநெல்வேலியிலிருக்கும் மடாலயத்துக்கு ஈசான மடமெனப் பெயருண்டாயிற்று. பின்னர் சுவாமிநாத தேசிகர் தாங்கற்ற இலக்கண நூல்களிலுள்ள அரியவிதிகளை யெல்லாந்திரட்டி இலக்கணக்கொத்தென வொருநூல் நம்மனோர்க்குப்பயன்படும்படி பாடி யருளினதுடன் அதற்கு உரையுமெழுதியருளினர். இவ்வுரை யரியதினுமரியது

பெரியதினும் பெரியது. இம்மட்டோ ஞானசாத்திரங்களி னுட்பக் கருத்துக்களை யெல்லாந் திரட்டித் தசகாரியமென்னு மொரு நூலையும் வேறுபல நூல்களையுஞ் செய்ததுமன்றி, நன்னூலுக்கு விருத்தியுரை செய்த சங்கர நமச்சிவாயப்புலவர் முதலாயினர் பலருக்கும் போதகாசிரியராயு மிருந்தனர். இவர் போல முன்றுசிரியராயுயர்ந்து விளங்கினொரொருவருமில்லை. இவ்வாறு பொழுதுபோக்குங் காலத்தில் சுவாமிநாததேசிகர் புண்ணிய விசேடகாலந் தோறுந் திருச்செந்தூருக்குச் சென்று முருகக்கடவுளைத் தரிசனஞ்செய்து வருவாராய் அக்கடவுண்மீது பலபாக்களுங் கலந்திருக்கு நயம்பற்றிக் கலம்பகமென்னு மிந்நூலைப்பாடி எம்பிரானாகிய குமாரக்கடவுளுக்குச் சமர்ப்பித்தனர். இந்நூல், கற்பவர் மனத்தைக் கவருஞ் செஞ்சொற்களும் செம்பொருளும் பலசந்த நயங்களும் பிறவுமமைந்து பத்திச்சுவை பழுத்துத் தித்திக்கப் பெறுங் கற்பகம் போலிருக்கிறது.

இந்நூலில் (30) தோத்திரச் செய்யுள்களுள்ளன; அவைகளையக்காலத்திலுள்ள அன்பர்களும் அறிஞர்களும் கொண்டாடப்பெற்றுக்குமாரக்கடவுள் பள்ளியறைக் கெழுந்தருளும்போது ஓதுவாமூர்த்திகளாற் படிக்கப்பெற்றுவருவது இன்றும் பிரத்தியக்ஷமாகக் காணலாம். சுவாமிநாததேசிகர் சரித்திர மிவ்விடத்துக்கு வேண்டியமட்டுஞ் சுருக்கிச் சொன்னேன் முழுதுந் தெரியவேண்டுவார் இலக்கணக்கொத்து முகவுரையிலே யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர் எழுதியுள்ளார். அதிலே தெரிந்துகொள்ளக் கடவர். சுபம், சுபம், சுபம்.

‡ 80 செய்யுளாவன: இந்நூலிற் புள்ளியடையாள மிட்டுள்ளவையாம்.

இங்ஙனம்

மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான்,

மு. ரா. அருணாசலக் கவிராயர்.

உ

குமரன்றுணை.

குமாரகுருபரசுவாமிக ளருளிச்செய்த

திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா.

(க) பூமேவு செங்கமலப் புத்தேளுந் தேறரிய
பாமேவு தெய்வப் பழமறையுந்—தேமேவு
நாதமுநா தாந்த முடிவு நவைதீர்ந்த
போதமுங் காணாத போதமா—யாதிநடு
அந்தங் கடந்தநித்தி யானந்த போதமாய்ப்
பந்தந் தணந்த பரஞ்சுடராய்—வந்த
குறியுங் குணமுமொரு கோலமுமற் றெங்குஞ்
செறியும் பரம சிவமா—யறிவுக்

(உ) கனாதியா யைந்தொழிற்கு மப்புறமா யன்றே
மனாதிகளுக் கெட்டா வடிவாய்த்—தனதருளின்
பஞ்சவித ரூப பரசுகமா யெவ்வுயிர்க்குந்
தஞ்சமென நிற்குந் தனிப்பொருளா—யெஞ்சாத
பூரணமாய் நித்தமாய்ப் போக்குவர வும்புணர்வுங்
காரணமு மில்லாக் கதியாகித்—தாரணியி
லிந்திரசா லம்புரிவோன் யாவரையுந் தான்மயக்குந்
தந்திரத்திற் சாராது சார்வதுபோன்—முந்துங்
கருவின்றி நின்ற கருவா யருளே
யுருவின்றி நின்ற வுருவாய்த்—திரிகரணம்

(க) புத்தேள்-கடவுள். தேறு அரிய-தெளிதற் கரிதாகிய. பா-பாவுதல். தேம்-இனிமை. நாதாந்தமுடிவு. சிவதத்துவத் திறுதி. நவைதீர்ந்த-குற்ற நீங்கிய. போதம்-அறிவு. நித்தியானந்தபோதம்-சச்சிதானந்தம். பந்தம்-(மலக்) கட்டு. தணந்த-நீங்கிய. குறி-அடையாளம். செறியும்-நெருங்கும்.

(உ) ஐந்தொழிற்கும்-பஞ்சகிருத்தியங்கட்கும்-மனாதிகள் - மனமுதலிய அந்தக்கரணங்கள். தனது-தன்னுடைய. பஞ்சவிதரூபம்-ஐந்துவகை வடிவம்; சிவமனாதியர் திருமேனி. தஞ்சம்-ஆதாரம். எஞ்சாத-குறையாத. நித்தம்-நித்தியப் பொருள்-போக்கு வரவு. மரணமும் சனனமும். புணர்வு-சம்பந்தம். தந்திரத்திற் சாராது-உபாயத்திற் சேராமல். கரு-மூலம். உரு-வடி (வாகி). இன்றி-(மற்றொன்) றில்லாமல். திரிகரணம்-மனம், வாக்கு, காயம்.

(௰௮) ஆகவரு மிச்சை யறிவியற்ற லாலிலய
போகவதி காரப் பொருளாகி—யேகத்
தருவு மருவு முருவருவு மாகிப்
பருவ வடிவம் பலவா—யிருண்மலத்துண்
மோகமுறும் பல்லுயிர்க்கு முத்தியளித் தற்குமல
பாகமுற வேகடைக்கண் பாலித்துத்—தேகமுறத்
தந்த வருவுருவஞ் சார்ந்தவிந்து மோகினிமான்
பெந்த முறவே பிணிப்பித்து—மந்த்ரமுதல்
ஆறத்து வாவுமண்டத் தார்ந்தவத்து வாக்களுமுற்
கூறத் தகுஞ்சிமிழ்ப்பிற் கூட்டுவித்து—மாறிவரும்.

(௰௯) ஈரிரண்டு தோற்றத் தெழுபிறப்புள் யோனியெண்பா
னூராய்ந்த நான்குநூ றாயிரத்துட்—டீர்வரிய
கன்மத் துக்கீடாய்க் கறங்குஞ் சகடமும்போற்
சென்மித் துழலத் திரோதித்து—வெந்நிரய
சொர்க்காதி போகமெல்லாந் துய்ப்பித்துப் பக்குவத்தா
லற்கா ரணஞ்சிறிது நண்ணுதலுந்—தர்க்கமிடுந்
தொன்னூற் பரசமயந் தோறு மதுவதுவே
நன்னூ லெனத்தெரிந்து நாட்டுவித்து—முன்னூல்
விரதமுத லாயபல மெய்த்தவத்தி னுண்மைச்
சரியைகிரி யாயோகஞ் சார்வித்—தருள்பெருகு.

(௰௮) இச்சை அறிவு இயற்றல் சூல்-இச்சா ஞானக்கிரியை யால். இலயம் ஒன்றையடைதல் - போகம் - அதையநுபவித்தல் - அதிகாரம் - கொணர்ந்து கொடுத்தல். பருவ-பக்குவப்பட்ட. இருண்மலம் ; ஆணவமாயைகன்மமென்னுமும் மலம். உயிர்க்கு - சகலராகிய ஆன்மார்களுக்கு. அளித்தற்கு - கொடுத்தற் பொருட்டு. மலபாகம் - இருவினையொப்பு; அஃதாவது: இன்பமுந் துன்பமுஞ் சமமாக நினைத்தல். விந்து - சுத்தமாயை. மோகினி - அசுத்தமாயை. மான் - பிரகிருதிமாயை. பெந்தம் - கட்டு - பிணிப்பித்து - கட்டச்செய்து. மந்திரமுதலாறு-மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை என்பன. அத்துவா - வழி. அண்டத்து - உலகத்தில். ஆர்ந்த - நிறைந்த. சிமிழ்ப்பில் - கட்டில்.

(௰௯) தீர்வரிய நீங்கமுடியாத. கன்மத்துக்கு - வினைக்கு. கறங்கும் - காற்றாடியும். சகடமும் - பண்டியிற் சக்கரமும். திரோதித்து - மறைத்து. தொன்னூல் - வெந்நிரயம் - கொடியநரகம். துய்ப்பித்து - அநுபவிக்கச்செய்து. தொன்னூல் - பழைய சாத்திரம். பரசமயம் - அந்நியசமயம். நாட்டுவித்து - நாட்டச்செய்து. சார்வித்து - சாரச்செய்து.

(உ௰) சாலோக சாமீப சாரூப மும்புசிப்பித்
தாலோகந் தன்னை யகற்றுவித்து—நால்வகையாஞ்
சத்திநி பாதந் தருதற் கிருவினையு
மொத்துவருங் கால முளவாகிப்—பெத்த
மலபரி பாகம் வருமளவிற் பன்னா
ளலமருதல் கண்ணுற் றருளி—யுலவா
தறிவுக் கறிவாகி யவ்வறிவுக் கெட்டா
நெறியிற் செறிந்தநிலை நீங்கிப்—பிறியாக்
கருணை திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக்
குருபரனென் றோர்திருப்பேர் கொண்டு—திருநோக்கால்.

(உ௧) ஊழ்வினையைப் போக்கி யுடலறுபத் தெட்டுநில
மேழுமத்து வாக்க ளிருமூன்றும்—பாழாக
ஆணவ மான படலங் கிழித்தறிவிற்
காணரிய மெய்ஞ்ஞானக் கண்காட்டிப்—பூணும்
அடிஞானத் தாற்பொருளு மான்மாவுங் காட்டிக்
கடியார் புவனமுற்றுங் காட்டி—முடியாது
தேக்குபர மானந்தத் தெள்ளமுத மாகியெங்கு
நீக்கமற நின்ற நிலைகாட்டிப்—போக்கும்
வரவு நினைப்பு மறப்பும் பகலு
மிரவுங் கடந்துலவா வின்ப—மருவுவித்துக்

(உ௰) புசிப்பித்து-அநுபவிக்கச்செய்து. ஆலோகம் - தெளிந்த அறிவு - அகற்றுவித்து - விரியச்செய்வித்து. நால்வகை-மந்ததரம், மந்தம், தீவிரதரம், தீவிரம். சத்திநிபாதம். திருவருள் பதிதல். உளவாகி - உண்டாகி. பெத்த மலபரிபாகம் - கட்டியமலம் பக்குவப்படுஞ்சமயம். அலமருதல் - சுழன்றிருத்தலை. காசினிக்கு - பூமியினிடத்தில்.

(உ௧) உடலறுபத் தெட்டு - தூல சூக்கும தேகங்களிலுள்ள கருவிகள் அறுபத்தெட்டு; இவற்றுள் தூலதேகமாகிய புறக்கருவிகள் அறுபது. சூக்கு மதேகமாகிய புரியட்டதேகத்தின் கருவி எட்டு; அவை: சத்தபரிச ரூபரசகந்தமும் மனம் புத்தி அகங்காரமும் என்பன, புறக்கருவி அறுபதுங்கட்டளைக் கொத்திற் காண்க. எழ் நிலமும் - மூலதாரமுதலிய ஆறுதாரமும், அதன் மேலோராதாரமு மில்லாத சூனியாகாசமுமாகிய எழிடங்களும். படலம்-இருள். அடிஞானம்-சிவத்தையறியுஞானம். பொருள்-பதி. தேக்கு-நிறைந்த.

(௩௰) கன்மமலத் தார்க்குமலர்க் கண்மூன்றுந் தாழ்சடையும்
வன்மழுவு மானுமுடன் மால்விடைமேன்—மின்னிடத்துப்
பூத்த பவளப் பொருப்பொன்று வெள்ளிவெற்பில்
வாய்த்ததனைய தெய்வ வடிவாகி—மூத்த
சகலமலக் கட்டறுத்துக் கண்ணருள்செய் துண்ணின்
றொருமலத்தார்க் கின்ப முதவிப்—பெருகியெழு
மூன்றவத்தை யுங்கழற்றி முத்தருட னேயிருத்தி
யான்றபர முத்தி யடைவித்துந்—தோன்றவரும்
யானெனதென் றற்ற விடமே திருவடியா
மோனபரா னந்த முடியாக—ஞானந்.

(௩௫) திருவுருவா விச்சை செயலறிவு கண்ணா
யருளதுவே செங்கை யலரா—விருநிலமே
சந்நிதியா நிற்குந் தனிச்சுடரே யெவ்வுயிர்க்கும்
பின்னமற நின்ற பெருமானே—மின்னுருவக்
தோய்ந்தநவ ரத்நச் சுடர்மணியாற் செய்தபைம்பொன்
வாய்ந்த கிரண மணிமுடியுந்—தேய்ந்தபிறைத்
துண்டமிரு மூன்றுநிரை தோன்றப் பதித்தனைய
புண்டரம் பூத்தநுதற் பொட்டழகும்—விண்ட
பருவமலர்ப் புண்டரிகம் பன்னிரண்டு பூத்தாங்
கருள்பொழியுங் கண்மலரீ ராறும்—பரிதி.

(௩௰) கன்மமலத்தார்க்கு - ஆணவமலத்துடன் கன்மமல முடையபிரளயாக லாகிய ஆன்மாக்களுக்கு. மின் - உமாதேவி. இடத்தில் - இடப்பக்கத்தில். பூத்த-தோன்றிய. வாய்த்து. பொருந்தினால். அனைய-ஒத்த. மூத்த-முதிர்ந்த. ஒருமலத்தார்க்கு-ஆணவமல மொன்றேயுடைய விஞ்ஞானகலராகிய ஆன்மாக்களுக்கு. மூன்றவத்தை-கேவலாவத்தை, சகலாவத்தை, சுத்தாவத்தை யென்பன. ஆன்ற - நிறைந்த. பரமுத்தி - திருவடிமோக்ஷம். அற்ற - கெட்ட. இடம் - தானம் - ஆ - ஆக. முடி - தலை.

(௩௫) இச்சை அறிவு செயல் - இச்சா ஞானக் கிரியை. இருநிலமே - பெரியபூமியே. சந்நிதி- ஆலயம். பிறைத்துண்டம். அர்த்தசந்திரன். நிரை - வரிசை. பதித்தனைய - பதித்தாற் போன்ற. புண்டரம். விபூதிக்குறி. பூத்தாங்கு - பூத்ததுபோல. பரிதி - சூரியன்.

(௪௰) பலவு மெழுந்துசுடர் பாலித்தாற் போலக்
குலவு மகரக் குழையு—நிலவுமிழும்
புன்முறுவல் பூத்தலர்ந்த பூங்குமுதச் செவ்வாயுஞ்
சென்மவிடாய் தீர்க்குந் திருமொழியும்—வின்மலிதோள்
வெவ்வசுரர் போற்றிசைக்கும் வெஞ்சூ ரனைத்தடிந்து
தெவ்வருயிர் சிந்துந் திருமுகமு—மெவ்வுயிர்க்கும்
ஊழ்வினையை மாற்றி யுலவாத பேரின்ப
வாழ்வுதருஞ் செய்ய மலர்முகமுஞ்—சூழ்வோர்
வடிக்கும் பழமறைக ளாகமங்க ளியாவு
முடிக்குங் கமல முகமும்—விடுத்தகலாப்

(௪௫) பாச விருடுரந்து பல்கதிரிற் சோதிவிடும்
வாச மலர்வதன மண்டலமு—நேசமுடன்
போகமுறும் வள்ளிக்கும் புத்தேளிர் பூங்கொடிக்கு
மோக மளிக்கு முகமதியுந்—தாகமுடன்
வந்தடியிற் சேர்ந்தோர் மகிழ வரம்பலவுந்
தந்தருளுந் தெய்வமுகத் தாமரையுங்—கொந்தவிழ்ந்த
வேரிக் கடம்பும் விரைக்குரவும் பூத்தலர்ந்த
பாரப் புயசயிலம் பன்னிரண்டு—மாரமுதந்
தேவர்க் குதவுந் திருக்கரமுஞ் சூர்மகளிர்
மேவக் குழைந்தணைந்த மென்கரமு—மோவாது

(௫௰) மாரி பொழிந்த மலர்க்கரமும் பூந்தொடையல்
சேர வணிந்த திருக்கரமு—மார்பகத்தில்
வைத்த கரதலமும் வாமமருங் கிற்கரமு
முய்த்த குறங்கி லொருகரமு—மொய்த்த

(௪௰) பாலித்தால் - கொடுத்தால். நிலவு-சந்திரகிரணம். புன்முறுவல்- சிறியபற்கள். பூத்து-உண்டாகி. குமுதம்-செவ்வல்லிமலர்போன்ற. சென்மவிடாய் - பிறவி வெப்பம். போற்று-தோத்திரம். உலவாத - கெடாத. வடிக்கும் - தெளித்தெடுக்கும் முடிக்கும்-ஆக்கும்.

(௪௫) கதிரின்-சூரியனைப்போல. புத்தேளிர்பூங்கொடி - தெய்வயானை. கொந்து-பூங்கொத்து. வேரி-தேன். விரைக்குரவு-வாசனையுடையகுராமலரும். சூர்மகளிர்-தெய்வப்பெண்கள். ஓவாது-நீங்காமல்.

(௫௰) வாமமருங்கில்-அழகியஇடையில். குறங்கில்உய்த்த-தொடையிற்

சிறுதுடிசேர் கையுமணி சேர்ந்ததடங் கையுங்
கறுவுசம ரங்குசஞ்சேர் கையுந்—தெறுபோர்
அதிகே டகஞ்சுழற்று மங்கைத் தலமுங்
கதிர்வாள் விதிர்க்குங் கரமு—முதிராத
கும்பமுலைச் செவ்வாய்க் கொடியிடையார் வேட்டணைந்த
வம்பொன் மணிப்பூ ணகல்மார்பும்—பைம்பொற்

(௫௫)புரிநூலுங் கண்டிகையும் பூம்பட் டுடையு
மரைஞாணுங் கச்சை யழகுந்—திருவரையு
நாதக் கழலு நகுமணிப்பொற் கிண்கிணியும்
பாதத் தணிந்த பரிபுரமுஞ்—சோதி
யிளம்பரிதி நூறு பிரங்கோடி போல
வளந்தரு தெய்வீக வடிவு—முளந்தனிற்கண்
டாதரிப்போர்க் காருயிரா யன்பரகத் தாமரையின்
மீதிருக்குந் தெய்வ விளக்கொளியே—யோதியவைந்
தோங்காரத் துள்ளொளிக்கு முள்ளொளியா யைந்தொழிற்கு
நீங்காத பேருருவாய் நின்றோனே—தாங்கரிய.

(௬௰)மந்திரமே சோரியா வான்பதமே மாமுடியாத்
தொந்தமுறும் வன்னமே தொக்காகப்—பந்தனையா
லொத்த புவனத் துருவே யுரோமமாத்
தத்துவங்க ளேசத்த தாதுவா—வைத்த
கலையே யவயவமாக் காட்டுமத்து வாவி
னிலையே வடிவமா நின்றோய்—பலகோடி

செலுத்திய. துடி-உடுக்கு. கறுவு-கோபிக்கின்ற. சமர்-யுத்தம். அங்குசம்-தோட்டி. தெறு-வருத்துகின்ற. சுழற்றும்-சுற்றும். விதிர்க்கும்-அசைக்கும்.

(௫௫) புரிநூல்-பூணூல். கழல்-வீரக்கழல். நகு-விளங்குகின்ற. பரிபுரம்-சிலம்பு. தெய்வீகம்-தெய்வத்தன்மை. ஐந்து ஓங்காரத்து - அகாரம், உகாரம், மகாரம், விந்து, நாதம் என்னும் ஐந்துறுப்புகளையுடைய பிரணவ மந்திரத்தின்.

(௬௰) மந்திரம் - மந்திராத்துவா. சோரி-இரத்தம். பதம் - பதாத்துவா. வன்னம்-வன்னாத்துவா. தொக்கு-தோல். பந்தனை-கட்டு. புவனம்-புவனாத்துவா. தத்துவம் - தத்துவாத்துவா. சத்ததாது - எழுவகைத் தாதுக்கள்; அவை:

யண்ட முருவாகி யங்கஞ் சராசரமாய்க்
கண்டசத்தி மூன்றுட் கரணமாய்த்—தொண்டுபடும்
ஆவிப்புலனுக் கறிவளிப்ப வைந்தொழிலும்
ஏவித் தனிநடத்து மெங்கோவே—மேவ.

(௬௫)வருமட்ட மூர்த்தமாம் வாழ்வேமெய்ஞ் ஞானந்
தருமட்ட யோகத் தவமே—பருவத்
தகலாத பேரன் படைந்தோ ரகத்துட்
புகலாகு மின்பப் பொருப்புஞ்—சுகலளிதப்
பேரின்ப வெள்ளப் பெருக்காறு மீதானந்
தேரின்ப நல்குந் திருநாடும்—பாரின்ப
மெல்லாங் கடந்த விருநிலத்துட் போக்குவர
வல்லா துயர்ந்த வணிநகருந்—தொல்லுலகி
லீறு முதலுமகன் றெங்குநிறைந் தைந்தெழுத்தைக்
கூறி நடாத்துங் குரகதமு—மேறுமதந்

(௭௰)தோய்ந்து களித்தோர் துதிக்கையினாற் பஞ்சமலங்
காய்ந்தசிவ ஞானக் கடாக்களிறும்—வாய்ந்தசிவ
பூரணத்துட் பூரணமாம் போதம் புதுமலரா
நாரகத்துட் கட்டு நறுந்தொடையுங்—காரணத்துள்
ஐந்தொழிலு மோவா தளித்துயர்ந்த வான்கொடியும்
வந்தநவ நாத மணிமுரசுஞ்—சந்ததமு

மேலேகூறிய, இரத்தம் தோல்நீக்கிய ஐந்து தாதுக்கள். கலை - கலாத்துவா. அங்கம்-அவயவம். சத்திமூன்று-இச்சாஞானக்கிரியாசத்திகள். உட்கரணம்-அந்தக்கரணங்கள். ஆவி - உயிர்களின். புலனுக்கு - அறிவுக்கு.

(௬௫) அட்டமூர்த்தம - பஞ்சபூதங்கள், சூரியன், சந்திரன், ஆன்மா ஆகிய எட்டு வடிவம். அட்டயோகம்-அட்டாங்கயோகம். இன்பப்பொருப்பு-ஆனந்தமாகியமலை. லளிதம்-அழகு. மீதானம்-பிரமரந்திரம். அணிநகர்-அழகிய நகரம். குரகதம் - குதிரை. கடந்த நகரெனக்கூட்டுக. ஏறுமதம் - உயர்ந்த சிவமதம்.

(௭௰) துதிக்கையினால்-தோத்திரஞ்செய்தலால். பஞ்சமலம்-ஆணவம், மாயை, கன்மம், திரோதானம், மாயேயம் என்பன. இவற்றுள், திரோதனத்தை மூலமலமெனவுங் கூறுவர். கடாக்களிறு-மதயானை. பூரணம் - நிறைவு. புதுமலரா-புதியபூவாக. நார்-அன்பு. தொடை-மாலை. வான்-பெரிய. நாதம்-

நீக்கமின்றி யாடி நிழலசைப்பான் போற்புவன
மாக்கி யசைத்தருளு மாணையுந்—தேக்கமழ்ந்து
வீரம் பனுவல் விபுதர் தனித்தனியே
பேசுந் தசாங்கமெனப் பெற்றோனே—தேசுதிகழ்.

(எ௫) பூங்கயிலை வெற்பிற் புனைமலர்ப்பூங் கோதையிடப்
பாங்குறையு முக்கட் பரஞ்சோதி—யாங்கொருநாள்
வெந்தகுவர்க் காற்றாத விண்ணோர் முறைக்கிரங்கி
யைந்து முகத்தோ டதோமுகமுந்—தந்து
திருமுகங்க ளாறாகிச் செந்தழற்க ணாறு
மொருமுகமாய்த் தீப்பொறியா றுய்ப்ப—விரிபுவன
மெங்கும் பரக்க விமையோர்கண் டஞ்சுதலும்
பொங்கு தழற்பிழம்பைப் பொற்கரத்தா—லங்க
ணெடுத்தமைத்து வாயுவைக்கொண் டேகுதியென் றெம்மான்
கொடுத்தளிப்ப மெல்லக் கொடுபோ—யடுத்ததொரு

(அ௰) பூதத் தலைவகொடு போதியெனத் தீக்கடவுள்
சீதப் பகீரதிக்கே சென்றுய்ப்பப்—போதொருசற்
றன்னவளுங் கொண்டமைதற் காற்றாள் சரவணத்திற்
சென்னியிற்கொண் டுய்ப்பத் திருவுருவாய்—முன்னர்
அறுமீன் முலையுண் டழுது விளையாடி
நறுநீர் முடிக்கணிந்த நாதன்—குறுமுறுவற்
கன்னியொடுஞ் சென்றவட்குக் காதலுருக் காட்டுதலு
மன்னவள்கண் டவ்வுருவ மாறினையுந்—தன்னிரண்டு
கையா லெடுத்தணைத்துக் கந்தனெனப் பேர்புனைந்து
மெய்யா றொன்றாக மேவுவித்துச்—செய்ய

நாதத்துவமாகிய. அடிநிழல்-கண்ணாடி நிழல். தேக்கமழ்ந்து-வாசனைசெய்து. விபுதர்-தேவர். தசாங்கம்-(அரசருக்குரிய) பத்தங்கம்.

(எ௫) தகுவர்க்கு-அசுரருக்கு. ஆற்றாத-இளைத்த. முறை-முறைபாடு. அதோமுகம்-கீழ்நோக்கியமுகம். தந்து-(தாற்பரியம்)சேர்த்து. ஒருமுகமாய்-ஒருவழிப்பட. பிழம்பு-கூட்டம். அடுத்து-(தன்னை) அடுத்ததாகிய.

(அ௰) பூதத்தலைவ-அக்கினிக்குத் தலைவனே. கொடுபோதி-கொண்டு போவாய். பகீரதிக்கு-கங்காநதியினிடத்து. போது-(அப்)போது. ஒரு சற்று-மிகச்சிறிது தூரம். சரவணம்-சரவணப்பொய்கை. அறுமீன்-கார்த்திகை முதலிய ஆறு நட்சத்திரங்களாகிய தாய்மார். கன்னி-உமாதேவி. காதல்-புத்திரன். மெய்யாறும்-ஆறுதிருமேனியும். மேவுவித்து-பொருந்தச்செய்து.

(அ௫) முகத்தி லணைத்துச்சி மோந்து முலைப்பா
லகத்துண் மகிழ்பூத் தளித்துச்—சகத்தளந்த
வெள்ளை விடைமேல் விமலன் கரத்திலளித்
துள்ள முவப்ப வுயர்ந்தோனே—கிள்ளைமொழி
மங்கை சிலம்பின் மணியொன் பதிற்றோன்றுந்
துங்க மடவார் துயர்தீர்ந்து—தங்கள்
விருப்பா லளித்தநவ வீரருக்குண் முன்னோன்
மருப்பாயுந் தார்வீர வாகு—நெருப்பிலுதித்
தங்கட்புவன மனைத்து மழித்துலவுஞ்
செங்கட் கடாவதனைச் சென்றுகொணர்ந்—தெங்கோன்

(௯௰) விடுக்குதியென் றுய்ப்பவதன் மீதிவர்ந்தெண் டிக்கு
நடத்தி விளையாடு நாதா—படைப்போன்
அகந்தை யுரைப்பமறை யாதி யெழுத்தொன்
றுகந்த பிரணவத்தி னுண்மை—புகன்றிலையாற்
சிட்டித் தொழிலதனைச் செய்வதெங்ங னென்றுமுனங்
குட்டிச் சிறையிருத்துங் கோமானே—மட்டவிழும்
பொன்னங் கடுக்கைப் புரிசடையோன் போற்றிசைப்ப
முன்னம் பிரம மொழிந்தோனே—கொன்னெடுவேற்
றாரகனு மாயத் தடங்கிரியுந் தூளாக
வீர வடிவேல் விடுத்தோனே—சீரலைவாய்க்

(அ௫) சகத்து-பூமியை. மங்கை-உமாதேவி. சிலம்பின்-பாதசரத்தின். மடவார்-நவசத்திகள். மரு-வாசனை. நெருப்பில்-(நாரதமுனிவர் யா)காக்கினியில். கடா-ஆட்டுக்கடாவை. எங்கோன்-தலைவனே.

(௯௰) விடுக்குதி-ஏறி நடாத்துவாய். இவர்ந்து-ஏறி. படைப்போன்-பிரமா. மறைஆதி-வேதத்துக்கு முதலாயுள்ள. எழுத்தொன்று-ஓரெழுத்தாகிய. பிரணவத்தின்-பிரணவமந்திரத்தின். புகன்றிலை-சொன்னாயில்லை. சிட்டி-சிருட்டி. மட்டவிழும்-தேன்ஒழுகும். பிரமம்-பிரணவப்பொருளினுண்மை. மாயம்-வஞ்சனையுடைய. கிரி-கிரௌஞ்சமலை.

(௬௫)தெள்ளு திரைகொழிக்குஞ் செந்தூரிற் போய்க்கருணை
வெள்ள மெனத்தவிசின் வீற்றிருந்து—வெள்ளைக்
கயேந்திரனுக் கஞ்ச லளித்துக் கடல்சூழ்
மயேந்திரத்திற் புக்கிமையோர் வாழச்—சயேந்திரனுஞ்
சூரனைச்சோ தித்துவரு கென்றுதடந் தோள்விசய
வீரனைத்தூ தாக விடுத்தோனே—காரவுணன்
வானவரை விட்டு வணங்காமை யாற்கொடிய
தானவர்க ளூற்படையுஞ் சங்கரித்துப்—பானு
பகைவன் முதலாய பாலருடன் சிங்க
முகனைவென்று வாகை முடித்தோய்—சகமுடுத்த

(௭) வாரி தனிற்புதிய மாவாய்க் கிடந்தநெடுஞ்
சூருடலங் கீண்ட சுடர்வேலோய்—போரவுணன்
அங்கமிரு கூறு யடன்மயிலுஞ் சேவலுமாய்த்
துங்கமுட னார்த்தெழுந்து தோன்றுதலு—மங்கவற்றுட்
சீறுமர வைப்பொருத சித்ரமயில் வாகனமா
வேறி நடாத்து மிளையோனே—மாறிவரு
சேவற் பகையைத் திறல்சேர் பதாகையென
மேவத் தனித்துயர்த்த மேலோனே—மூவர்
குறைமுடித்து விண்ணங் குடியேற்றித் தேவர்
சிறைவிடுத்தாட் கொண்டளித்த தேவே—மறைமுடிவாஞ்

(௭௫)சைவக் கொழுந்தே தவக்கடலே வானுதவுந்
தெய்வக் களிற்றைமணஞ் செய்தோனே—பொய்விரவு
காம முனிந்த கலைமுனிவன் கண்ணருளால்
வாமமட மானின் வயிற்றுதித்துப்—பூமருவு

(௬௫) வெள்ளைக்கயம்-வெள்ளையானை. அஞ்சல் - அபயாஸ்தம். மயேந்திரம் - சூரன்பட்டணம். சயேந்திரனும் - வெற்றியிலுயர்ந்தவனுகிய. விட்டு-(சிறை) விடுத்து. தானவர்-அசுரர்கள். நாற்படை - ரதகசதுரகபதாதிகளாகிய சேனை. பானுபகைவன்-பானுகோபன்: சூரன் மகன்.

(௭) மாவாய்-மாமரமாகி. கிடந்த-தலைகீழாய்க்கிடந்த. சூர்-சூரன். கீண்ட-கிழித்த. அடல்-வலிமை. அரவை-பாம்பை. மாறி-உருமாறி. சேவல்-கோழியை. திறல்-வலிமை. பதாகையென-கொடியாக.

(௭௫) தெய்வக்களிறு-தெய்வயானை. முனிவன் - சிவமுனிவர். வாமம் - அழகு. ஏனல்-தினை. பரிந்து-அன்புற்று. ஆறுதிருப்பதி - திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோருடல், பழமுதிர்ச்சோலை. ஆறெழுத்து-சடாக்ஷரமந்திரம் (நமகுமாராய;) இதைப்பிற்காலத்தார் சரவணபவ என்பர்.

கானக் குறவர் களிகூரப் பூங்குயில்போ
லேனற் புனங்காத் தினிதிருந்து—மேன்மைபெறத்
தெள்ளித் தினைமாவுந் தேனும் பரிந்தளித்த
வள்ளிக் கொடியை மணந்தோனே—யுள்ளமுவந்
தாறு திருப்பதிகண் டாறெழுத்து மன்பினுடன்
கூறுமவர் சிந்தைகுடி கொண்டோனே—நாறுமலர்க்

(௮௰)கந்திப் பொதும்பரெழு காரலைக்குஞ் சீரலைவாய்ச்
செந்திற் பதிபுரக்குஞ் செவ்வேளே—சந்ததமும்
பல்கோடி சன்மப் பகையு மவமிருத்தும்
பல்கோடி விக்கினமும் பல்பிணியும்—பல்கோடி
பாதகமுஞ் செய்வினையும் பாம்பும் பிசாசுமடற்
பூதமுந்தீ நீரும் பொருபடையுந்—தீதகலா
வெவ்விடமுந் துட்ட மிருகமுத லாமெவையு
மெவ்விடம்வந் தெம்மை யெதிர்ந்தாலு—மவ்விடத்திற்
பச்சைமயில் வாகனமும் பன்னிரண்டு திண்டோளு
மச்ச மகற்று மயில்வேலுங்—கச்சைத்

(௮௫)திருவரையுஞ் சீறடியுஞ் செங்கையு மீரா
றருள் விழியு மாமுகங்க ளாறும்—விரிகிரணஞ்
சிந்தப் புனைந்த திருமுடிக ளோராறு
மெந்தத் திசையு மெதிர்தோன்ற—வந்திடுக்கண்
எல்லாம் பொடிபடுத்தி யெவ்வரமுந் தந்துபுகுந்
துல்லாச மாக வுளத்திருந்து—பல்விதமாம்
ஆசுமுத னாற்கவியு மட்டாவ தானமுஞ்சீர்ப்
பேசுமியல் பல்காப் பியத்தொகையு—மோசை
யெழுத்துமுத லாமைந் திலக்கணமுந் தோய்ந்து
பழுத்த தமிழ்ப்புலமை பாலித்—தொழுக்கமுடன்

(௮௰) கந்திப்பொதும்பர்-கமுகஞ் சோலையில். அயில்-கூர்மை.

(௮௫) இடுக்கண்-துன்பம். உல்லாசம்-மகிழ்ச்சி. இயல்-தன்மை. ஓசை-கீர்த்தி. பாலித்து-அருளிச்செய்து.

(௱௨௰) இம்மைப் பிறப்பி லிருவா தனையகற்றி
மும்மைப் பெருமலங்கண் மோசித்துத்—தம்மைவிடத்
தாயும் பழைய வடியா ருடன்கூட்டித்
தோயும் பரபோகந் துய்ப்பித்துச்—சேய
கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி யாட்கொண்
டடியேற்கு முன்னின் றருள்.

(௱௨௰) இம்மைப்பிறப்பில்-இந்தச்சனனத்தில். இருவாதனை-அகப்பற்றுத்துன்பம், புறப்பற்றுத்துன்பங்கள். மும்மை-மூன்று. மலங்கள் தம்மை-ஆணவம், மாயை, கன்மங்களை. மோசித்து விடுத்து-துறந்து-நீங்கி. பரபோகம்-சிவபோகம். துய்ப்பித்து-அநுபவிக்கச்செய்து. சேய-சிவந்த. கடி-வாசனை. ஏற்கும்-கொண்டிருக்கும்.

திருச்செந்தூர்க் கந்தர்கலிவெண்பா

முற்றிற்று.

இவ்வரும்பதவுரை யெழுதியவர்

மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான்,

மு. ரா. அருணாசலக் கவிராயர்.

உ

குமரன்றுணை.

திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா

அருளிச்செய்த

குமரகுருபரசுவாமிகள் சரித்திரம்.

செந்தமிழ்ப் பாண்டித் திருநாட்டிற் சிறந்த தெய்வ நதியாகிய தாம்பிரபருணிநதி வடகரையிலிருக்கிற ஸ்ரீ வைகுண்டமென்று வழங்கிவருநங் கைலாச புரத்திலே யிற்றைக்குச் சற்றேறக்குறைய முந்நூற்றிருபது வருடங்களுக்கு முன்னே வேளாளர் குலத்திற் சிவநேசச்செல்வம் வாய்ந்த சண்முகசிகாமணிக்கவிராயரது தவப்பேறாக அவரருமை மனைவியாராகிய அருந்ததியனையகற்பமைந்த சிவகாமசுந்தரியார் திருவயிற்றி லொருபுத்திரரவதரித்தனர்; அவரை யருமைச் செல்வமாக அன்புபாராட்டி வளர்த்துவந்த மாதாபிதாக்களிருவரும் ஐந்து வயசு வரையும் அவர் வாய்பேசாதிருத்தலை நோக்கி மனவருத்தமுற்று, இனியென்செய்வோமென்றேங்கி, திருச்செந்தூரையடைந்து எம்பெருமானாகிய குமாரக்கடவுளை வணங்கிச் சுவாமீ? உமதுதிருவருளாற் கிடைக்கப்பெற்ற இப்புத்திரன் வாய் பேசும்படி திருவருள் புரிந்தருளுக எனப் பிரார்த்தித்து நாற்பதுநாள் விரதாதிகளை யநுட்டித்துச் சடாக்ஷர மந்திரத்தைச் செபஞ் செய்துகொண் டிருந்தனர்.

இப்படியிருந்துங் குழந்தை வாய்பேசா திருத்தலால் இனி, சந்நிதிமுன் னிருக்கின்ற வதனாரம்ப தீர்த்தத்திலே நமது மனைவியுடன் விழுந்து மரணமடைந்து விடுவோம் நாமிருந்தறி லென்னபயனென்று, ஒருநாள் ஆலோசித்து முடிவுசெய்து அன்றிரவிலே சண்முக சிகாமணிக்கவிராயர் நித்திரை செய்தனர்; அவருடைய பத்தியையு மனவுறுதியையுந் தெரிந்து தாயனைய தயாநிதியாகிய நம் சண்முகப் பெருமான் சண்முகக் கவிராயர் விழித்தெழுதற்கு முன்னர் சண்முகவிலாசத்திலே யோரருச்சகர்வடிவங் கொண்டெழுந்தருளிப் புத்திரர் முன்பு போய்க் குமரகுருபரா வென்று தட்டி யெழுப்பி அவருடைய நாவிலே சடாக்ஷர மந்திரத்தை யெழுதிக் குழந்தையே நம்முடைய விசுவரூப தரிசனத்துக்கு வாவென்று கட்டளை யிட்டு மறைந்தருளினர்.

உடனே குமரகுருபர நாமஞ் சூட்டப் பெற்ற குழந்தையார் தமது மாதா பிதாக்களை அம்மே. அப்பா வென்று தட்டி யெழுப்பி நடந்த விஷயங்களைச் சொல்லுதலும் அவ்விருவரு மளவில்லாத மகிழ்ச்சியுற்று நம்பெருமான் றிருவருளை வியந்து நாம் பிழைத்தோம் பிழைத்தோமென் றெழுந்து புத்திரருடன் வதனாம்பு ஸ்நானஞ்செய்து நித்திய கன்மமுடித்துக் கோயிலுக்குட் சென்று குமாரக் கடவுள் விசுவரூப கோலத்தைக் கண் குளிரத் தரிசித்துக் கும்பிட்டு நின்றனர். அப்போது குழந்தையாகிய குமரகுருபரசுவாமிகள் அதிசீக்கிரமாக *கந்தர் கலிவெண்பா என்னும்பிரபந்தத்தைப்பாடி யுடனேயரங்கேற்றி அவ்வெம்பிரான் றிருவருள் பெற்று இனி ஞானாசாரியரை யடைய வேண்டுமென் றெண்ணங்கொண்டு சடாக்ஷர மந்திரத்தைத் தம் நாவிலே தரித்த சண்முகப் பெருமானைப் பிரார்த்தித்தனர். அச்சமயத்தில் அப்பெருமான் கட்டளைப்படி அன்பனே யெந்தயாத்திரை செய்தால் உன்வாக்கு யாவரிடத்திலே தடைபடுமோ? அவரே யுனக்கு ஞானாசாரியராவரென்று, ஓரசரீரி வாக்குண்டாக அதுகேட்டுக் குமரகுருபரசுவாமிகள் தம்மை யாட்கொண்ட பெருமானைத் துதித்து விடைபெற்றுத் தமது தந்தையாருடன் மீண்டு ஸ்ரீவைகுண்டத்தையடைந்து சிலகாலம் வசித்திருந்து ஒருதினம் மதுரைக்குப் போகவேண்டுமென்று தாய்தந்தையரிடம் விடைபெற்றுப் புறப்பட்டு, வரும்போதே மதுரை மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழைப்பாடி முடித்துத் திருப்பரங்குன்றத்திலே வந்து சுப்பிரமணிய சுவாமியைத்தரிசித்து அவ்விடத்திலிருந்தனர்.

இவ்வாறிவ ரிருப்பதை மீனாக்ஷியம்மை திருவருளால் தெரிந்த மதுரைமா நகரத்தை யரசாட்சிசெய்யுந் திருமலைநாயக்கர் சகல விருதுகளுடன் வந்தழைக்கக் குமரகுருபர சுவாமிகள் மதுரைக்குச் சென்று பிள்ளைத்தமிழை மீனாக்ஷியம்மைசந்நிதியி லரங்கேற்றித் தெய்வீகநாட்டுத் திருமலைநாயக்கரால் கனகாபிஷேகஞ்செய்யப் பெற்றுப் பின்னர் அங்கு, சிலநாளிருந்து மீனாக்ஷியம்மை குறம், மீனாக்ஷியம்மை யிரட்டைமணிமாலை, மதுரைக் கலம்பகம், நீதிநெறிவிளக்க மென்னு நான்கு நூல்களையும் பாடிமுடித்து மீண்டு திருவாரூரையடைந்து தியாகராசப் பெருமானைத் தரிசித்து நான்மணிமாலைபாடி யரங்கேற்றி

* கந்தர் கலிவெண்பாவாகிய இத் திருவருட்பிரபந்தத்தை வித்தையில் விருப்பமுடையவர்கள் தினந்தோறும் பாராயணஞ் செய்துவர வேண்டும்: தற்கால அநுபவத்திற் கண்டவிஷயமிது.

யவ்விடம்விட்டுப் புறப்பட்டுத் தருமபுர ஆதீனத்தை யடைந்து அங்கெழுந்தருளியிருந்த ஞானாசிரியராகிய மாசிலாமணிதேசிகரைக் கண்டு கலந்துபேசும்போது "ஐந்து பேரறிவுங் கண்களேகொள்ள" என்னும் பெரியபுராணச் செய்யுளுக்குப் பொருள் விரித்துரைப்பது தடைபட்டவுடனே தம்மைப் பேசுவித்த சரவணோற்பவராகிய குமாரக்கடவுளருளாலெழுந்த அசரீரியை நினைந்து மாசிலாமணி தேசிகருக்கு அடிமையாகி அவரது ஆஞ்ஞைப்பால் சிதம்பர தரிசனத்துக்குப் போம்போது புள்ளிருக்கு வேளூரை அடைந்து சுவாமிதரிசனஞ் செய்து மீண்டனர்.

அப்போது அருச்சகர்வடிவமாக வந்து விபூதிகொடுத்து நம்மைக் குறித்தும் ஒரு பிள்ளைத்தமிழ் பாடுவாய் என்று முத்துக்குமாரசுவாமியாகிய குமாரக்கடவுள் கட்டளையிட்டு மறைதலும் உடனே கட்டளைப்படி முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்பாடி யரங்கேற்றிச் சிதம்பரத்திற் சென்று நடராசப்பெருமானை வணங்கிச் சிதம்பரமும்மணிக்கோவை, சிதம்பரச்செய்யுட் கோவை, சிவகாமியம்மை யிரட்டைமணிமாலை யிவற்றைப்பாடித் திருச் செவிசாற்றித் திருவருள்பெற்றுத் திரும்பித் தருமபுரத்துக்கு வந்து பண்டார மும்மணிக்கோவை யென்னும் பிரபந்தமொன்றுபாடி மாசிலாமணி தேசிகர் திருச்செவிசாற்றினர்.

தேசிகர் திருவுள்ளமகிழ்ந்து குமரகுருபர சுவாமிகளுக்குக் காவிவஸ்திரந்தரிப்பித்து ஞானோபதேசமுஞ் செய்தருளினர். பின்னர் குமர குருபர சுவாமிகள் மதுரையிலே தாம்பெற்ற கனகாபிஷேகப் பொருள்களை ஞானாசாரியர் சந்நிதியிற் கொண்டுவந்து வைக்க இப்பொருள் உமக்குச்சாத்திய நின்மாலியப் பொருள்கள் ஆதலால் நாமங்கீகரிக்கமாட்டோம். இவற்றை, யெடுத்துக்கொண்டு போய்க் காசிக்ஷேத்திரத்திலே தருமஞ் செய்துகொண்டிருக்கக் கடவீரென்று ஞானாசாரியர் கட்டளையிட்டருளினர்.

அவரது ஆணையை மறுத்தற்கஞ்சிக் குமரகுருபர சுவாமிகள் காசிக்ஷேத்திரத்தையடைந்து கங்கையிலே ஸ்நானஞ்செய்து காசிக்கலம்பகம்பாடி விசுவநாதர் சந்நிதியிற்போய்த் தரிசித்து தோத்திரஞ் செய்து சிலகாலமிருந்து சகலகலாவல்லிமாலை பாடி அங்கே யரசனாயிருந்த டில்லிபாதுஷாவைக்கண்டு தருக்கம்பேசிச்சிவபெருமானே தெய்வமென்று மழுவைக்கையிலே தாங்கிச் சைவமத தாபனஞ் செய்தனர்.

அரசன் அதுகண்டு அடங்காத ஆனந்தபரவசனாய்க் கேதாரகட்டத்தில் குமரசாமி மடமெனப் பெயர்வைத்தொரு திருமடத்தைக் கட்டுவித்துப் பெருமிதமாக வேண்டிய திரவியங்களைச்சாதனத்துடன் சுவாமிகளுக்குத்தத்தஞ்செய்தனன். சுவாமிகளன்று முதல் அம்மடத்தி லெழுந்தருளியிருந்து திருமலைநாயக்கர் போலொரு அன்னசத்திரங் கட்டுவித்து அன்ன தானஞ் செய்து மகிழ்ச்சியுற்று மூன்றுமுறை தருமபுரத்துக்குவந்து மாசிலாமணிதேசிகரைத் தரிசித்து நான்காவது முறையில் தேசிகர் கட்டளையிட்டருளியபடியே காசிக்ஷேத்திரத்தைச் சேர்ந்து அங்கே பலநாள் வசித்திருந்து விசுவேசர் திருவடிநீழலிற் கலந்தனர். இவர் சரித்திரத்தைக் குமரகுருபரசுவாமிகள் பிரபந்தத் திரட்டென்ற நூலில் விரிவாக எழுதியிருப்பதா லிங்கே சுருக்கி எழுதினேன். சுபம், சுபம், சுபம்.

இங்ஙனம்
மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான்,
☞ மு. ரா. அருணாசலக் கவிராயர்.

உ

குமரன்றுணை.

அருணகிரிநாதர் அருளிச்செய்த

திருச்செந்தூர்த் திருப்புகழ்.

(க) கமல மாதுட னிந்திரை யுஞ்சரி
சொலவொ ணாதம டந்தையர் சந்தன
களப சீதள கொங்கையி லங்கையி லிருபோதேய்-
களவு நூல்தெரி வஞ்சனை யஞ்சன
விழியில் மோகித கந்தசு கந்தரு
கரிய வோதியி லிந்துமு கந்தனில் மருளாதே;
அமல மாகிய சிந்தைய டைந்தகல்
தொலையி லாதல மும்பொரு ளின்பமு
மடைய வோதியு ணர்ந்துத ணந்தபின் அருள்தானே-
அறியு மாறுபெ றும்படி யன்பினி
னினிய நாதசி லம்புபு லம்பிடு
மருண ஆடக கிண்கிணி தங்கிய அடிதாராய்;
குமரி காளிப யங்கரி சங்கரி
கவுரி நீலிப ரம்பரை யம்பிகை
குடிலை யோகினி சண்டினி குண்டலி யெமதாயி-
குறைவி லாளுமை மந்தரி யந்தரி
வெகுவி தாகம சுந்தரி தந்தருள்
குமர மூஷிக முந்திய ஐங்கர கணராயன்;

(க) கமலமாது-சரசுவதி. இந்திரை-இலக்குமி. இருபோது-தாமரை மலர், காந்தள் மலர். ஏய்-ஒத்த. கையில்.—நூல்-நூலால். மோகித-மோகமுள்ள. கந்த-வாசனையுடைய. அகல் அறம்-விரிந்த தருமம். ஓதி-கற்று. தணந்த பின்-முற்றியபின்னர். நாத-ஒலியையுடைய. புலம்பிடும்-முழங்கும். அருண ஆடக-சிவந்த பொன்னாலாகிய. ஆயி-தாய். மந்தரி-(அடியார்க்கன்பா) மாலையை யுடையவன். மூஷிகம்-பெருச்சாளி வாகனத்தை. உந்திய-செலுத்திய. கணராயன்-கணங்களுட்சிறந்த தலைவன். மம-என்னுடைய. கஞ்சுகி-பாம்பு. விம்பன்-திருமேனி யுடையவன். மவுலி-முடி. பெருமானே-பெருமையையுடையானே; மேலுமிதுவே. இதற்கு விதி, நன்னூல் 257 ஆம் சூத்திரவுரையிற்

மமவி நாயக னஞ்சமிழ் கஞ்சனி
அனிக ஜானன விம்பனொ ரம்புலி
மவுலி யாறுறு சிந்தையு கந்தரு — ளியோனே-

வளரும் வாழையு மஞ்சளு மிஞ்சியும்
இடைவி டாதுநெ ருங்கிய மங்கல
மகிமை மாநகர் செந்திலில் வந்துறை — பெருமாளே.

(உ) அளக பாரம லைந்துகு லைந்திட
வதன வேர்வுது லங்கிந லங்கிட
அசவ மோகம்வி ளைந்ததை ளைந்திட — அணைமீதே-

அருண வாய்நகை சிந்திய சம்ப்ரம
அடர்ந காநுதி பங்கவி தஞ்செய்து
அதரபானம ருந்திமருங்கிற — முலைமேல்வீழ்ந்;

துளமும் வேறுப டும்படி யொன்றிடு
மகளிர் தோதக இன்பின்மு யங்குத
லொழியு மாறு தெளிந்துள மன்பொடு — சிவயோகத்-

துருது ஞானப ரம்பர தந்திர
அறிவி னோர்கரு தங்கொள்சி லம்பணி
யுபய சீதள பங்கய மென்கழல் — தருவாயே;

இளகி டாவளர் சந்தன குங்கும
களப பூரண கொங்கைந லம்புனை
யிரதி வேள்பணி தந்தையும் அந்தண — மறையோனும்;

இனிது றுதெதி ரிந்திர னண்டரும்
அரஹ ராசிவ சங்கர சங்கர
எனமி காவரு நஞ்சினை யுண்டவ — ரருள்பாலா-

காண்க - இஃதன்றி, சந்தநோக்கி வேண்டாத இடத்து ஒற்றெழுத்துக்கள் மிகுதலும் வேண்டுமிடத்துக் குறைதலும் நெடில் குறிலாதலும் பிறவிகாரங்களும் வடசொற்களும் திசைச்சொற்களும் மரூஉமொழிகளும் வருமிடந்தோறும் பொருள் நோக்கிக்கண்டுகொள்.

(உ) அளகம்-கூந்தல். வேர்வு-வேர்வை. நலங்கிட-அழகுசெய்ய. தளைந்திட-கட்ட. அணை-மெத்தை. அருணவாய்-சிவந்தவாய். நகைசிந்திய-புன்சிரிப்பைச்செய்த. சம்ப்ரமம்-மகிழ்ச்சி. நகாநுதி-நகத்தினுனியால். பங்கவிதம்-தழும்புபடும் வகை. மருங்கிற-இடையொடிய. தோதகம்-வஞ்சனை. அம்கொள்-அழகுகொண்ட. இளகிடா-இளகி. பணி-வணங்குகின்ற. தந்தை-பிதாவாகிய

வளர்நி சாசரர் தங்கள்சி ரம்பொடி
படவி ரோதமி டுங்குல சம்ப்ரமன்
மகர வாரிக டைந்த நெடும்புயல் — மருகோனே-

வளரும் வாழையு மஞ்சளு மிஞ்சியும்
இடைவி டாதுநெ ருங்கிய மங்கல
மகிமை மாநகர் செந்திலில் வந்துறை — பெருமாளே.

(ங) பஞ்ச பாதக முறுபிறை யெயிறெரி
குஞ்சி கூர்விட மதர்விழி பிலவக
பங்க வான்முக முடுகிய நெடிகிய — திரிசூலம்-

பந்த பாசமு மருவிய கரதல
மிஞ்சி நீடிய கருமுகி லுருவொடு
பண்பி லாதொரு பகடது முதுகினில் — யமராஜன்;

அஞ்ச வேவரு மலகர மதிலொரு
தஞ்ச மாமயெ வழிவழி யருள்பெறும்
அன்பி னுறுன நடிபுக முடிமையெ — னெதிரேநீ-

அண்ட கோளகை வெடிபட இடிபட
எண்டி சாமுக மடமட நடமிடும்
அந்தமோகர மயிலி னியனுடன் — வரவேணும்;

மஞ்சு போல்வள ரளகமு மிளகிய
ரஞ்சி தாம்ருத வசனமு நிலவென
வந்த தாயவெண் முறுவலு மிருகுழை — யளவோடும்-

விஷ்ணு. அந்தணமறையோன்-பிரமன். இனிது-இன்பம். மிகாவரும்-மிகுந்து கொதித்துவரும். குலம்-நன்மை. சம்ப்ரமன் - மகிழ்ச்சியுடையவன். நகநுதியென்பது, நகாநுதியெனச் சந்தநோக்கி விகாரப்பட்டது. செய்து என்னும் எச்சம் ஒன்றிடுமென்பதனோடு முடியும்.

(ங) பிறையெயிறு - வக்கிரதந்தம். எரிகுஞ்சி-அக்கினிபோன்ற குடுமி. பிலவகம்-குரங்குபோன்ற. பங்க-குற்றத்தையுடைய; அழுகற்ற. முடுகிய-எதிர்க்கப்பட்ட. பந்தபாசம்-கட்டப்பட்ட கயிறு. பகடு-எருமைக்கடா. அவசரம்-சமயம். தஞ்சம்-பற்றுக்கோடு; ஆதாரம். வழிவழி-தொன்றுதொட்டு. மடமட-மடமடவென்றொலிக்க. மோகரம் - உக்கிரம்; மிக்கவீரம். மன்றல் - வாசனை. வாரிசம்-தாமரைபோன்ற. மந்தராசலம்-மந்தரமலை. செஞ்சொல்-தமிழ்ச்சொல்

மன்றல் வாரிச நயனமு மழகிய
    குன்ற வாணர்த மடமகள் நடமுலை
    மந்த ராசல மிசைதுயி லழகிய மணவாளா;
செஞ்சொல் மாதிசை வடதிசை குடதிசை
    விஞ்சு கீழ்திசை சகலமு மிகல்செய்து
    திங்கள் வேணியர் பலதளி தொழுதுயர் மகமேரு-
சென்று மோதின ரரசரு ளதிபதி
    தொண்ட ராதியும் வழிவழி நெறிபெற
    செந்தில் மாநக ரினிதுறை யமரர்கள் பெருமாளே.

(௪) அமுததததி விடமமிழ் செங்கட் டிங்கட்
    பகவினொளிர் வெளிறெயிறு துஞ்சற் குஞ்சித்
    தலைமுடை யவனரவ தண்டச் சண்டச் சமனோலை-
அதுவருகு பிளவினுயி ரங்கிட் டிங்குப்
    பறைதிமிலை திமிர்தமிகு தம்பட் டம்பற்
    கரையவுற வினரலற வுந்திச் சந்தித் தெருவூடே;
எமதுபொரு ளெனுமருளை யின்றிக் குன்றிப்
    பிளவளவு தினையளவு பங்கிட் டுண்கைக்
    கிளையுமுது வசைதவிர இன்றைக் கன்றைக் கெனநாடா-
திகைகடிது தெனுமுணர்வு பொன்றிக் கொண்டிட்
    டுடுடுடுடு டுடுடுடுடு டுண்டிட் டுண்டிட்
    டெனவகலு நெறிகருதி நெஞ்சத் தஞ்சிப் பகிராதோ;

லையுடைய. மாதிசை-பெரிய (தென்) திசை. இகல்-யுத்தம். சென்று-சென்றால். மோதினர்-அடித்தவராகிய. அரசருள் அதிபதி-இராசாக்களுக்குள் தலைவரும். தொண்டர் ஆதியும்-அடியார்களுக்குள் தலைவரும். நெறி-சன்மார்க்கம்.

(௪) அமுததததி - பாற்கடலிலெழும். உமிழ - கக்குகின்ற. பகவின்-பிளப்புப்போல. வெளிறெயிறு-வெள்ளிய வக்கிரதந்தம். துஞ்சல்குஞ்சி-வாடுகின்ற(வெறித்த) குடுமி. அரவம்-பாம்புபோலும். தண்டம்-தண்டாயுதம். சண்டச்சமன்-சண்டனாகிய யமன். அங்கு இட்டு-அவ்விடத்திலேவிட்டு. திமிலைபறை-பம்பைமேளம். திமிர்தம்-பேரொலி. பல்கரைய-பலமுழங்க. உந்தி-(அவ்வுயிரை) செலுத்தி. இன்றி-இல்லாமல். குன்றிப்பிளவு-குன்றிமணியின்பிளப்பு. (ஆவது) பங்கிட்டு-(உன்னைத வந்து யாசித்தவருக்குப்) பங்குவைத்துக்கொடுத்து. இனையும்-வருந்தும். தவிர-நீங்க. இகை-கொடுக்கக் கடவது. கடிது-சீக்கிரம். உணர்வு-அறிவு. பொன்ற-கெட. கொண்டிட்டு-(யமதூதர்) கைக்

குமுதபதி வகிர்முடித்து சிந்தச் சிந்தச்
    சரணபரி புரசுருதி கொஞ்சக் கொஞ்சக்
    குடிலசடை பவுரிகொடு தொங்கப் பங்கிற் கொடியாட-
குலதடினி அசையஇசை பொங்கப் பொங்கக்
    கழலதிர டெகுடெகுட டெங்கட் டெங்கத் [திதோ;
    தொகுகுகுகு தொகுகுகுகு தொங்கத் தொங்கத் தொகு
திமிதமென முழவொலி முழங்கச் செங்கைத்
    தமருகம தகிர்சதியொ டன்பர்க் கின்பத்
    திறமுதவு பாதகுரு வந்திக் குஞ்சற் குருநாதா-
திரளுமணி தரளமுயர் தெங்கிற் றங்கிப்
    புரளவறி திரைமகர சங்கத் தலங்கத்
    திமிரசல நிதிதழுவு செந்திற் கந்தப் பெருமாளே.

(௫) கொடியனைய இடைதுவள அங்கமும் பொங்கவுங்
    குமுதஅமு திதழ்பருகி யின்புறுஞ் சங்கையன்
    குலவியணை முகிலளக முஞ்சரிக் கன்பினின் பண்புளா
கொடியவிரல் நகநுதியில் புண்படுஞ் சஞ்சலன் வக்-
    குனகியவ ருடனினிது சம்ப்ரமங் கொண்டுளங்
    குரலழிய அவசமுறு குங்குமான் கொங்கவிழ்ந் தொன்

கொண்டு. என-என்றுமுழக்கத்துடன் அகலும்-அகன்றுசெல்லும். நெறி-முறைமையை. கருதி-(முன்னமே) ஆராய்ந்து. அஞ்சி-பயந்து. பகிராதோ-(உன்னைப்) பங்கிட்டுக்கொடுக்கு நிலைமைவாராதோ. குமுதபதி - சந்திரனது. வகிர்-பிளப்பு; அஃதாவது: அர்த்த சந்திரன். பரிபுரசுருதி-பாதசரமாகிய வேதங்கள். கொஞ்சக்கொஞ்ச-சந்தோஷித்து மிகமுழங்க. குடிலசடை-குடிலமாகிய சடை. பவுரி-நடனம். கொடி-உமாதேவி. குலம்-நன்மையாகிய. தடினி-கங்காநதி. முழவு-மிருதங்கம். தமருகம்-உடுக்கு. சதி-தாளவொத்து. பாதகுரு-நடனஞ்செய்யும் சிவபிரான். திமிர-முழைப்புடைய. சலதி-கடல்.

(௫) துவள - அசைய. அங்கம்-(மற்றை) அவயவம். பொங்க-பூரிக்க. சங்கையன்-சந்தேகமுடையேன். அணை-மெத்தைமேல். அன்பின்-அன்போடு. இன்பணபு-இனியகுணமாக. நுதியில்-நுனியால். குனகி-சரசஞ்செய்து. சம்ப்ரமம்-மகிழ்ச்சி. உளம்-மனமானது. குரல்-(அப்பெண்கள்கழுத்திலெழும்) ஒலியால். முறுகும்-அதிசப்படும். கொங்கு-மணம். அவிழ்ந்து-விரிந்து. ஒன்று-பொருந்துகின்ற. இன்பு-இன்பத்தில். வினையன்-தீவினையுடையேன். இயல்-தன்மை. மிதம்-(தன்) அளவு. நெறியண்பில்-வழியாகிய குணத்தில்

விடமனைய விழியகளிர் கொங்கையின் பண்புறும் [றாய்மேல்;
வினையனியல் பாவுமுயிர் வெந்தழிந் தங்கழும்
மிதமொழிய அறிவில்நெறி பண்பிலன் றுஞ்சகன் [செநு
வெருக்னக் கொளிருவலும் அந்தமன் செந்திலென் [செநீடும்-
றவிழவுள முருகிவரு மன்பிலன் கந்திலன்
விரவுமிரு சிறுகமல பங்கயந் தந்துகந் தன்புறுதோ;

படமிலகு மாவினுட லங்கழும் பங்கிடந்
துதறமொரு கலபிமிசை வந்தெழுந் தண்டர்தம்
பகையசுர ரனைவருடல்சந்தசந் துங்கதஞ் சிந்தும்வேலா

படியவரு மிமையவரு நின்றிறைஞ் சென்குணன்
பழைய இறை யுருவமிலி யன்பர்பங் கன்பெரும்
பருவரல்செய் புரமெரிய விண்டிடுஞ்செங்கணன் கங்கை

சடிலமிசை யழகுபுனை கொன்றையும் பண்புறுங் [மான்வாழ்;
தருணமதி யினகுறைசெய் துண்டமுஞ்செங்கையொண்
சகலபுவ னமுமொழிக தங்குறுங் கங்கியும் பொங்கிநீடுஞ்

சடமருவு விடையரவர் துங்கஅம் பங்கினின்
றுலகுதரு கவுரியுமை கொங்கைதந் தன்புறுந்
தமிழ்விரக வுயர்பரம சங்கரன் கும்பிடுந் தம்பிரானே.

(௬) அறிவழிய மயல்பெருக வுரையுமற விழிசுழல
அனலவிய மலமொழுக அகலாதே-
அனையுமனை யருகிலுற வெருவியழ வுறவுமழ
அழலினிகர் மறலியெனை யலையாதே;

அண்டும்-நெருங்கும். சகன்-பிரபஞ்ச மயக்கமுடையோன். செம்செம்-திருத்த ஒழுங்கு. மன்-நிலைபெற்ற. அவிழ-விரிய. சந்திலன்-சாஸ்திர ஆராய்ச்சியில் லாதேன். (ஆதலால்) கமலப்பங்கயம்-திருவடித்தாமரை. தந்து- (திருவருள்) கொடுத்து. பங்கு இடந்து-இரண்டாகப்பிளந்து. கலபி-மயில். சந்தசந்து-சிற றுடிபிணக் தங்கித்தும்-கோபத்தைச் செலுத்தும். பழைய இறை-அநாதிக் கில்லாதவும். ததஞ்சிந்தும்-கோபத்தைச் செலுத்தும். பழைய இறை-அநாதிக் கடவுள். பங்கன்-பங்கிலிருப்பவன். பருவரல்-துன்பம். விண்டிடும்-திறக்கும். தருணம்-இளமை. மதியின்-சந்திரனிடத்துள்ள. குறைசெய்துண்டம்-மூன் றாம்பிறை. செங்கை-சிவந்த கையினிடத்து. கதம்-வேகம். குறங்கு-அசைகின் ற. அங்கி-அக்கினி. சடம்-திருமேனி. விரக-ஆசையையுடையவனே.

(௬) உரையும் அற-பேச்சுமடங்க. அனல் அவிய-உதராக்கினிகெட. உறவிச. வெருவி-பயந்து. உறவும்-சுற்றத்தாரும். அழல்-அக்கினி. இன-.

செறியுமிரு வினைகரண மருவுபுல னொழியவுயர்
திருவடியி லணுகவர மருள்வாயே-
சிவனைநிகர் பொதியவரை முநிவனக மகிழஇரு
செவிகுளிர இனியதமிழ் பகர்வோனே;

நெறிதவறி யலரிமதி நடுவன்மக பதிமுளரி
நிருதிநிதி பதிகரிய வனமாலி-
நிலவுமறை யவனிவர்க ளலையஅர சுரிமைபுரி
நிருதனுர மற அயிலை விடுவோனே;

மறிபரசு கரமிலகு பரமனுமை யிருவிழியு
மகிழமடி மிசைவளரு மிளையோனே-
மதலைதவழ் உததியிடை வருதரள மணிபுளின
மறையவுயர் கரையிலுறை பெருமாளே.

(௭) கரிக்கொம்பந் தனித்தங்கம்
குடத்தின்பந் தனத்தின்கண் பொறிதோள்சேர்-
கறுப்புந்தன் சிவப்புஞ்செம்
கனைக்கும்பண் டிழைக்கும்பங்
களிக்கும்பண் பொழிக்குங்கண்
கழுத்துஞ்சங் கொளிக்கும்பொன் குழைபூணச்;

சாரியை. மறலி-யமன். செறியும்-நெருங்கும். கரணம்-அந்தக்கரணங்கள். புலன்-சத்தாதி விடயங்கள். அலரி-சூரியன். நடுவன்-யமன். முளரி-அக்கினி. நிருதி-திக்குப்பாலகரிலொருவன். நிதிபதி-குபேரன். வனமாலி-விஷ்ணு. நிலவும்-விளங்கும். நிருதன்-சூரன். மறி-மான். மதலை-மரக்கலம்; கப்பல். உததி-கடல். புளினம்-மணல்மேடு.

(௭) கரிக்கொம்பு-யானைக்கொம்பினது. அம்-அழகும். இன்பஅம்-இன்பத்தினழகும் (பெற்ற). தனத்தின்கண்-முலைக்காம்புகளின். பொறி-இரு டையாளங்களையுடைய- தோள்-(வீரர்)கைகளில். பண்டு-பழைய. உழைக்கும்-மானுக்கும். பண்பொழிக்கும் பங்கு அளிக்கும்-குணத்தைக்கெடுக்கும் பங்கத் தைக்கொடுக்கும். கண்-கண்களும். சங்கொளிக்கும்-சங்கங்கள் மறைந்துகொ ள்ளும். கழுத்தும்,—பொன்குழை-பொற்குண்டலமும். புடைக்கும் பொன்

சரக்குஞ்சம் புடைக்கும்பொன்
அகிற்றந்தந் தரிக்குந்தன்
சடந்தும் பண் பிலுக்குஞ்சம் பளமாதர்.

சலித்தயப்பின் சிரித்துங்கொண்
டழைத்துஞ்சண் பசப்பும்பெண்
தனத்தன்பந் தவிப்புண்டிங் குழல்வேனோ;

சுரர்ச்சங்கந் துதித்தந்தந்
தெழுத்தின்பங் களித்துண்பண்
சுகந்துய்த்தின் பலர்ச்சிந்தங் கசுரரைத்.

துவைத்தும்பந் தடித்துஞ்சங்
கொலித்துங்குன் றிடித்தும்பண்
சுகித்துங்கண் களிப்புங்கொண் டிடும்வேலா;

சிரப்பண்புங் கரப்பண்புங்
கடப்பந்தொங் கலிற்பண்புந்
சிவப்பண்புந் தவப்பண்புந் தருவோனே.

திணைத்தொந்தங் குறப்பெண்பண்
சசிப்பெண்கொங் கையிற்றஞ்சுந்
செழிக்குஞ்செந் திலிற்றங்கும் பெருமாளே.

(அ) கருப்பந்தங் கிரத்தம்பொங்
கரைப்புண்கொண் டிருக்கும்பெண்
களைக்கண்டங் கவர்ப்பின்சென் றலைவோடே.

குஞ்சம்-பருக்கும் தங்கக்குஞ்சத்தையுடைய காசுமாலையும். (பொன்) அகில்-பீதாம்பரமும். தந்து-கொண்டுவந்து. தரிக்கும்-புனையும். தம்சடந்து-தஞ்சரீரத்து. பண்பிலுக்கும்-ஆடம்பரமாக மற்றவற்றாலலங்கரிக்கும். சம்பளமாதர்-கூலிப்பெண்கள்; வேசையர்கள். கொண்டு - ஒப்புக்கொண்டு. கண்பசப்பும்-கண்களால் மயக்கஞ்செய்யும். பெண்-அம்மாதராகிய பெண்கள். தன்பம்-துன்பத்தால். சுரர்ச்சங்கம்-தேவர்கூட்டம். துதித்து-தோத்திரஞ்செய்து. களித்து-மகிழ்ந்து. உண்-உட்கொண்ட. பண்-பாட்டின். சுகந்துய்த்து-சுகத்தாற்பிழைத்து. இன்பஅலர்-இன்பம் பெருக. சிந்து அங்கு-கடலாகிய அவ்விடத்தில். அசுரரை-அசுரர்களை. துவைத்தும்-மிதித்தும். பந்தடித்தும்-தலைகளையுருட்டியும். பண்-(ஆகுபெயர்) இன்பம். சிரம்-(ஆறு) தலையின். பண்பும்-குணமும். கரம்-(பன்னிரண்டு) கைகளின். தருவோனே-அருளிச்செய்யப்பட்டவனே. தொந்தம்-சம்பந்தமாகி. பண்-ஒழுங்குடைய. சசிப்பெண்-இந்திராணியினது பெண்ணாகிய தெய்வயானை.

கலப்புண்டுஞ் சிலுப்புண்டுந்
துவக்குண்டும் பிணக்குண்டிங்
கலிப்புண்டுஞ் சலிப்புண்டுந் தடுமாறிச்;

செருத்தண்டந் தரித்தண்டம்
புகுதண்டந் தகற்கென்றுந்
திகைத்தந்திண் செகத்தஞ்சுங் கொடுமாயும்.

இயக்கங்கண் டுயக்கொண்டென்
பிறப்பங்கஞ் சிறைப்பங்கஞ்
சிதைத்துன்றன் பதத்தின்பந் தருவாயே;

அருக்கன்சஞ் சரிக்குந்தென்
டிரைக்கண்சென் றரக்கன்பண்
பனைத்தும்பொன் றிடக்கன்றுங் கதிர்வேலா.

அணிச்சங்கங் கொழிக்குந்தண்
டலைப்பண்பெண் டிசைக்குங்கொந்
தளிக்குஞ்செந் திலிற்றங்கும் குமரேசா;

புரக்குஞ்சங் கரிக்குஞ்சங்
கரர்க்குஞ்சங் கரர்க்கின்பம்
புதுக்குங்கங் கையட்குந்தஞ் சுதனாய.

புனக்குன்றந் திளைக்குஞ்செந்
தினைப்பைம்பொன் குறக்கொம்பின்
புறத்தன்கொங் கையிற்றுஞ்சும் பெருமாளே.

(அ) அரைப்புண்கொண்டு - அல்குலினாலே. கலப்புஉண்டும் - கலப்படைந்தும். சிலுப்பு-அசைப்பு. துவக்கு-கட்டு. பிணக்கு-ஊடல். கலிப்பு-முழக்கம். செரு-யுத்தம். தண்டம்-தண்டனை. அ-அந்த. தண்டு-தண்டாயுதத்தையுடைய. திண்செகத்து-வலிய பூமியில். அஞ்சுங்கொடு- பஞ்சேந்திரியங்களாலும். உயக்கொண்டு-பிழைத்தலைச்செய்து. அங்கம்-சரீரத்தின். சிறைப்பங்கம்-(ஆணவமலமாகிய) சிறைச்சாலையைப் பின்ன(மாக). அருக்கன் - சூரியன். கன்றும்-கோபிக்கும். அணி-அழகிய. தண்டு-வரம்பு (கரை) உடைய. அலைப்பண்பு-கடலின்குணம். கொந்தளிக்கும்-வெளிப்படும். புரக்கும்-காக்கும். சங்கரி-உமாதேவி. சங்கரர்-சிவபிரான். சங்கரற்கு-(அச்)சிவபிரானுக்கு. புதுக்கும்-புதிதுபுதிதாகக் கொடுக்கும். சுதன்-புத்திரன். திளைக்கும்-அநுபவிக்கும். பொன்-பொன்னூபரணமணிந்த.

(௯) குழைக்குஞ்சந் தனச்செங்குங்
குமத்தின்சந் தநற்குன்றங்
குலுக்கும்பைங் கொடிக்கென்றிங் — கியலாலே-

குழைக்குங்குண் குமிழ்க்குஞ்செந்
தரைக்குஞ்செங் கயற்கண்கொண்
டழைக்கும்பண் டழைக்குஞ்சிங் — கியராலே;

உழைக்குஞ்சங் கடத்துன்பன்
சுகப்பண்டஞ் சுகித்துண்டுன்
டெற்பிண்டம் பருத்தின்றிங் — குழலாதே-

உதிக்குஞ்செங் கதிர்ச்சிந்தும்
ப்ரபைக்கொன்றுஞ் சிவக்குந்தண்
டுயர்க்குங்கிண் கிணிச்செம்பஞ் — சடிசேராய்;

தழைக்குங்கொன் றையைச்செம்பொன்
சடைக்கண்டங் கியைத்தங்குந்
தரத்தஞ்செம் புயத்தொன்றும் — பெருமானார்-

தனிப்பங்கின் புறத்தின்செம்
பரத்தின்பங் கயத்தின்சஞ்
சரிக்குஞ்சங் கரிக்கென்றும் — பெருவாழ்வே;

கழைக்குங்குஞ் சரக்கொம்புங்
கலைக்கொம்புங் கதித்தென்றுங்
கயற்கண்பண் பளிக்குந்தின் — புயவேலே-

(௯) சந்தம்-அழகிய. குன்றம்-மலைபோலுமுலையானது. கொடிக்கு-கொடிபோன்ற இடையை. குலுக்கும்-அசைத்துவருத்தும். என்று,—இயலாலே-தன்மையாலே. குழைக்கும்-காதுக்கும். குண் - குணமுடைய. குமிழ்க்கும்-குமிழமலர்போலு மூக்குக்கும். கண்கொண்டு-கண்களால். பண்-இசைப்பாட்டு. சிங்கியர் - விடம்போன்ற வேசையர். பிண்டம்- உருவம். கதிர்-சூரியன். சிந்தும்-வீசும். ப்ரபைக்கு-கிரணத்துக்கு. ஒன்றும்-ஒத்துத்தோன்றும். சிவக்கும்-சிவப்புநிறமடைந்திருக்கும். தண்டு-(ஆகுபெயர்) மலர்போலும். உயர்க்கும்-உயர்த்தியணியும். கண்டு-(தாற்பரியம்) தரித்து. அங்கியை-அக்கினியை. தரத்து-மேன்மையுடைய. புயத்து-கையில். பங்கின்புறத்தில்-பாகத்தையுடைய பக்கத்தில். பரத்தின்-மெய்யினையுடைய. பங்கயத்தின்-(அம்பிருதய)தாமரைமலரில். கழைக்கும்-மூங்கில்மரங்களும். என்றும்கதித்த-எப்போதும் சிறந்துவிளங்கிய (இளைப்புனத்தில்.) கயற்கண்-கயல்போலுங்கண்ணையுடையவள்ளிநாயகி. பண்பு-குண(மாக). மலர்போலும் அடியெனக்கூட்டுக. குணம் என்

கழைக்குங்கொண் டலிற்பொங்குங்
கடற்சங்கங் கொழிக்குஞ்செந்
திலிற்கொண்டன் பினிற்றங்கும் — பெருமாளே.

(௰) மனத்தின்பங் கெனத்தங்கைம்
புலத்தன்றன் குணத்தஞ்சிந்
த்ரியத்தம்பந் தனைச்சிந்தும் — படிகாலன்-

மலர்ச்செங்கண் கனற்பொங்குந்
திறத்தின்றண் டெடுத்தண்டங்
கிழித்தின்றிங் குறத்தங்கும் — பலவோரும்;

எனக்கென்றிங் குனக்கென்றங்
கினத்தின்கண் கணக்கென்றென்
றிளைத்தன்புங் கெடுத்தங்கங் — கழிவாமுன்-

இசைக்குஞ்செந் தமிழ்க்கொண்டங்
கிரக்கும்புன் றொழிற்பங்கங்
கெடத்தான்பங் கழித்தின்பந் — தருவாயே;

கனைக்குந்தண் கடற்சங்கார்
கரத்தின்கண் தரித்தெங்குங்
கலக்கஞ்சிந் திடக்கண்டுஞ் — ஸ்ரீமாலும்-

கதித்தொண்டங் கயத்தன்பன்
பனைத்தாங்குந் திடச்சத்தங்
கனிக்குஞ்சம் புவுக்குஞ்செம் — பொருளீவாய்;

பது குண் எனக்குறைந்துநின்றது. செந்திலிற்கொண்டு - திருச்செந்தூரை இடமாகக்கொண்டு. கழைக்கும என்பதில்-கு-சாரியை. கதித்த என்பதின் ஈற்றின் அகரங்கெட்டது.

(௰) பங்கென - பகுப்பாக (வாயில்களாக). தங்கு,— ஐம்புலம்-மெய், வாய், கண், மூக்கு, செவியென்கிற ஐந்திடம். தன் தன் - அதனதனுடைய. குணத்து - குணங்களாகிய. அஞ்ச இந்திரியத்தம்பம் - சத்த, பரிச, ரூப, ரச கந்தங்களாகிய தூண்களை. சிந்தும்படி-சிதறும்படி. பலவோரும்-பலதத்துவக் கூட்டங்களும். இங்கெனக்கென்று,— அங்குனக்கென்று,— இனத்தின்கண் (ஓர்) இனத்தாருக்குள். கணக்கு-கருதப்படும் விதம்(போல). என்றென்று-எப்பொழுதும். இளைத்து-சோராடிவருந்தி. அழிவாமுன்-(அத்தத்துவக்கூட்டங்கள்) கெடுதற்குமுன். கழித்து-போக்கி. கனைக்கும்-முழங்கும். கலக்கஞ் சிந்திட-வருத்தம்நீங்க. கண்டுஞ்சிடும் - (பாற்கடலில் ஆனந்த) நித்திரைசெய்

இனைக்குன்றந் தவிர்ந்தங்குஞ்
சிறப்பெண்குங் குமக்கும்பந்
திருச்செம்பொன் புயத்தென்றும் புணர்வோனே-

செழிக்குங்குன் றகழ்ச்சங்கங்
கொழிக்குஞ்சத் தனத்தின்பைம்
பொழிற்றண்செந் திலிற்றங்கும் பெருமாளே.

(மக) பருத்தந்தத் தினைத்தந்திட்
டிருக்குங்கச் சடர்த்தந்திப்
பரிக்கும்பொற் ப்ரபைக்குன்றத் தனமானார்

பரிக்குஞ்சூற் சரக்கொன்றத்
திளைத்தங்கும் பலப்பன்னப்
பரக்குஞ்சக் கரத்தின்சத் தியையேனும்;

தகைச்செங்கட் கடைக்கொன்றிப்
பெருத்தன்புற் றிளைத்தங்குந்
துணிக்கும்புத் தியைச்சங்கித் தறியேனை-

துணைச்செம்பொற் பதத்தின்புற்
றெனக்கென்றப் பொருட்டங்கத்
தொடுக்குஞ்சொற் றமிழ்த்தந்திப் படியாள்வாய்;

தருக்தங்கப் பொலத்தண்டத்
தினைக்கொண்டச் சமர்க்கஞ்சத்
தடந்தன்பத் தினைத்தந்திட் டெதிர்சூரன்-

யும்: தவித்த-சிறந்த. ஒண்-ஒளிபொருந்திய. சத்தம்-எப்பொழுதும். சிறப்பெண்-சிறியபெண்ணாகிய வள்ளிநாயகி. கும்பம்-குடம்போலுந் தனங்களை. பொன்-அழகிய. குன்று-ஆழமாகிய. அகழ்-(ஆகுபெயர்) கடல். அங்கு இங்கு என்றது-அந்தந்த அந்தவிருக்குமிடங்களை; சந்தம் என்பது-சத்த மென விகாரப்பட்டது. தவித்த என்பது வீற்றாகக்கெட்டது.

(மக) பரு-பெரிய. தந்தத்தினை-(யானைத்) தந்தத்தை. தந்திட்டு-ஒத்து. இறுக்கும்-இறுக்கிக் கட்டும். அடர்த்து-கிழித்து. உந்தி-தள்ளி. ப்ரபை-பிரகாசமுள்ள. பரிக்கும்-தாங்கும். சூற்சரக்கு-கெட்ட சரக்காகிய பலவகை வியாதிகள். ஒன்ற-பொருந்த. திளைத்து-(அம்மாதரை) அநுபவித்து. உற்பலம்-நீலோற்பல மலரின். பரக்கும்-விரிந்த. சத்தி-வலிமை. தகை-உயர்ந்த. கட்கடைக்கு-கடைக்கண்ணிட்டு. ஒன்றி-ஐக்கமாகி. பெருத்து-மிகுத்து. துணிக்கும்-கெடுக்கும். சங்கித்து-சந்தேகப்பட்டு. அறியேனை-தெளியாதவெனனை.

சமர்க்கெஞ்சிப் படத்தஞ்சக்
கதிர்த்தங்கத் தயிற்கொண்டத்
தலத்தும்பர்ப் பதிக்கன்புற் றருள்வோனே;

இருங்கஞ்சத் தனைக்கண்டித்
துறக்கங்குட் டிவிட்டஞ்சற்
சிவற்கன்றப் பொருட்கொஞ்சிப் பகர்வோனே-

செயத்துங்கக் கொடைத்துங்கத்
திருத்தங்கித் தரிக்கும்பொற்
றிருச்செந்திற் பதிக்கந்தப் பெருமாளே.

(மஉ) அவனிபெ றுந்தோட் டம்பொற்
குழையடர் யம்பாற் புண்பட்
டரிவையர் தம்பாற் கொங்கைக் கிடையேசென்-

றவதரு பண்டாட் டங்கற்
றுருகிய கொண்டாட் டம்பெற்
றழிதரு திண்டாட் டஞ்சற் றொழியாதே;

பவமற நெஞ்சாற் சிந்தித்
திலகுக டம்பார்த் தண்டைப்
பதயுக ளம்போற் றுங்கொற் றமுநாளும்-

பதறிய அங்காப் பும்பத்
தியுமறி வும்போய்ச் சங்கைப்
படுதுயர் கண்பார்த் தன்புற் றருளாயோ;

இன்புற்ற,—எனக்கென்று-எனக்கருள வேண்டுமென்று நினைத்து. அ-அந்த. தொடுக்கும்-தொடுத்துவைத்திருக்கும். இப்படி-இப்பூமியில். தரு-கற்பகவிருக்ஷம். அ-அந்த. பொலத்து அண்டத்தின்-பொன்னுலகத்தை. கொண்டு-கைப்பற்றிக்கொண்டு. தடம்-மலைபோலும். சமர்க்கு-யுத்தகளத்திலிடத்து. எஞ்சி-(பிறவினை) குறைத்து. படி-பூமியில். அஞ்ச-இறக்க. அத்தலத்து-அந்த இடத்தில். உம்பர்ப்பதி-இந்திரன். உற-மிக. கம்-தலையில். சன்-நல்ல. பொருள்-பொருளை. துங்கம்-உயர்வு. தங்கித்தரிக்கும்-எப்பொழுதும் நீங்காதிருக்கும்.

(மஉ) அவனி-பூமியை. பெறும்-விலையாக வாங்கும். தோடு-(அணிந்த) குழை-காதுகளை. அடர்-நெருக்குகின்ற. அம்பால்-பாணமாகிய கண்களால். பண்டு ஆட்டம்-பழைய விளையாட்டு. கொண்டாட்டம்-மகிழ்ச்சி. திண்டாட்டம்-வருத்தம். ஆர்-மாலையணிந்த. யுகளம்-இரண்டு. கொற்றமும்-வலிமையும். பதறிய-பதறியழுத. அங்காப்பு-வாய்திறத்தலையும். சங்கைப்படு-சந்தேகப்படுகி

தனிநெறி குன்றாப் பண்பிற்
றறவினை ருக்கோரப் பந்தசத்
தனிமலை சந்தாற் புங்கத் தமராடி
தமிழினி தென்காற் கன்றிற்
றிரிதரு ஆநந்தக் கன்றைத்
தழுவிழ வென்றூர்க் கன்றற் புகமாக;
சிவவடி வங்காட் டிந்தச்
குருபர தென்பாற் சங்கத்
திரள்மணி சிந்தாச் சிந்தும் கரைமோதும்
தினகர தின்டேர்ச் சண்டப்
பரியிட அங்கோட் டுந்நித்
திருவளர் செந்தூர்க் கந்தப் பெருமாளே.

(௰௬) கொடியமன் போற் றங்கப்
படையைவ ளைந்தோட் டித்தாட்
டரையின ருக்கோட் கொங்கைத் திடுமாயத்
துகில்விழ வந்தேசர்த் தங்கத்
துவளிர குந்தூழ்த் தன்டித்
துயர்வினை யுந்தூட் டின்பத் தொடுபாயத்
தொடைகொடு சென்றிட் டும்பொற்
பணியரை மெல்தேற் றங்கற்
றனியன இக்றேட் டென்றற் குமொதாரிக்

ன்று. துயர்-துக்கத்தையும். புங்கத்து-உயர்ச்சியாகிய. அமராடி-யுத்தஞ்செய்த மன்மதனுடைய. தமிழ்இனி-தமிழ்போலுமினிமையைச்செய்யும். தென்காற்கன்றில்-இளந்தென்றற் காற்றில். தந்தா-இறவாத. கன்றை-இளம்பிள்ளையை. தழுவல்-(தாற்பரியம்) சாம்பர். எழ-ஆக. வென்றூர்க்கு-வென்றசிவபிரானுக்கு. சிவவடிவம்-பிரணவசொரூபம். சங்கம்-சங்குகள். சிந்தா-சிந்தி. சிந்துக்கரை-கடற்கரையை. சண்டப்பரி-வேகமாகிய குதிரைகள். கோடு-உச்சியுடைய. இஞ்சி-மதில்கள் சூழ்ந்த.

(௰௬.) தங்கம்-உயர்ச்சி. படையை-(பகைவர்) சேனையை. ஓட்டும்-புறங்காட்டியோடச்செய்யும். தட்டரை-சூரருக்கு. இளகும்-மெலிகாதும். தோட் கொங்கைக்கு - தோளுக்கு முலைக்கும். மாயத்துகில் - மயக்கத்தைச் செய்யும் சேலை. விழுதும்-சரியவும். சேர்த்து-(அதையெடுத்துப்) பொருத்தி. அங்கத்து-சரீரத்தில். உவளா-வருத்துகின்ற. விரகம்-காமத்தை. சூழ்த்து-சூழச்செய்து.

கிளிமையி லொன்றாய்ச் சென்றட்
படுமன முன்றாட் கன்புற்
றியலிசை கொண்டேத் தென்றட் டருவாயே;
நெடுநுத வங்கூர்க் குந்தற்
புருடரு ளைந்தேக் கம்பெற்
றயர்வுற நின்றூர்த் தங்கட் கலையேவும்
நிகரிலம தன்றோர்க் குன்றற்
றெரியில்வி ழுந்தோர்ப் பொன்றச்
சிரிதுகி லைந்தாட் டங்கற் றிடுவார்முன்
நிடமுற மன்பாற் சிந்தைக்
சதிவிட முந்சேர்த் தும்பர்க்
கிடர்களை யும்போர்ச் செங்கைத் திறல்வேலா
இளவரி வண்டார்த் தின்புற்
றிசைகொடு வந்தேத் திந்நித்
திருவளர் செந்தூர்க் கந்தப் பெருமாளே.

(௰௭) சங்குபோல் மென்கழுத் தந்தவாய் தந்தபற்
சந்தமோ கின்பமுத் தெனவானிற்
றங்குகார் பைங்குழற் கொங்கைகள் தன்பொருப்
பென்றுதாழ் வொன்றறத் தலைகோதைத்;

அண்டி-நெருங்கி. (அக்காமத்தால்) துயர்-துன்பம். ருட்டு-பருவத்தில். கொடு சென்று-(அவ்வீரனைக்)கொண்டுபோய். அரை-(ஆகுபெயர்) அல்குலால். வெல்று-சயித்து. ஈட்டும் பொற்பணி-(அவர்)சம்பாதிக்கும்பொன்னுபரணத்தை. ஏற்று-வாங்கி (பின் கொடுப்பதற் கொன்றுமில்லாதபோது) அற்றனை-கைப் பொருளில்லாமற் போயினாய். என - (இவ்விடத்தி) லென்னகாரியம். இன்று போடென-இன்றைக்கே யோடிப்போவாயென. அல்கிடும்-(அன்பு) சுருங்கும். இனிமையால் - இன்பத்தில். உட்படும்-அகப்படும். எத்து-துதித்தல். உள் (ளன்)னிடத்தில். நெடிது-நீண்டதாகிய. கூர்க்கும்-சிருக்கும். ஆர்த்து-முழங்கி. அஞ்கள்-அழகிய தேரெழுதும். தேர்க்குன்று-தேராகிய மலை. ஏர்-அழகு. ஆட்டம்-(நடு) விளையாடல். சற்றிடுவார்-செய்திடுவாராகிய சிவபிரான். அறிவு இடம்-தெளிவுப் பொருள். தினம்-நாடோறும். வரிவண்டு-பாட்ல்வண்டுகள். இசைகொடு-ராகத்தால். உவந்து-மகிழ்ந்து. இஞ்சி-கோட்டைசூழ்ந்த. சந்தோக்கி ஞடென்பது - ஒட்டென்றும். அல்கிடு மென்பது, அற்கிடுமென்றும் ஆயின.

(௰௭) சந்தம் - அழகிய. மோகு-மோகத்தைச் செய்யும். தாழ்வுஒன்று - தாழ்தலாகிய ஒரு செய்கையை. வேள்-மன்மதன். சொற்கொண்டு-சொற்க

துங்கவேள் செங்கைபொற் கொண்டல்நீ யென்றுசொற்
 கொண்டு தாய் நின்றுரைத் துழலாதே-
துன்பநோய் சிந்தநற் கந்தவே ளென்றுனைத்
 தொண்டினு லொன்றுரைக் கருள்வாயே;
வெங்கண்வ்யா ளங்கொதித் தெங்கும்வே மென்றெடுத்
 துண்டுமே லண்டருக் கமுதாக-
விண்டநா தன்றிருக் கொண்டல்பா கன்செருக்
 குண்டுபே ரம்பலத் தினிலாடி;
செங்கண்மால் பங்கயக் கண்பெறா தந்தத்
 திண்கணு டுந்திறற் கதிராழித்-
திங்கள்வா ழுஞ்சடைத் தம்பிரா னன்புறச்
 செந்தில்வாழ் செந்தமிழ்ப் பெருமானே.

(௰௫) நிபங்கமே வும்பிறப் பந்தகா ரந்தனிற்
 பந்தபா சந்தனிற் றடுமாறிப்-
பஞ்சபா வைப்படப் புண்படா வஞ்சகப்
 பண்பிலா டம்பரப் பொதுமாதர்;
தங்களா லிங்கனக் கொங்கையா கம்படச்
 சங்கையால் கொண்டினைத் தயராதே-
தண்டைசூழ் கிண்கிணிப் புண்டரீ கந்தனைத்
 தந்தநீ யன்புளைத் தருள்வாயே;

னால். தாய்-தாவி. ஒன்று-ஒருதோத்திரம். உரைக்க-சொல்ல. வ்யாளம்-(ஆதி பெயர்) நஞ்சு. (இரையன்றுவிட்டால்) எங்கும்வேம்,— மேல்-அதன்மேல் அமுதாக-(விக்கினமில்லாமல்) அமுதுண்ணுதற்காம்படி. விண்ட-திருவாய் மலர்ந்தருளிய. கொண்டல். மேகம்போன்றவிஷ்ணுவை. பாகன்-இடப்பாகத் திலுடையவன். செருக்குஉண்டு-கருவமடைந்து. கண்பெறாது-நித்திரைசெய் யாமல் (அறிதுயிலமர்ந்தென்றபடி). அந்தத்திண்கண் - அண்டங்களினிடங் களை. நாடும்-(காத்தற்கு) ஆராய்ந்துகொண்டிருக்கும். ஆழி-கடலில் தோன்றும். உரைக்கவருள், உரைக்கருளென்றாயிற்று,

(௰௫) பிறப்பு அந்தகாரம் - சனனமாகிய இருள். பரிசு-பரிசு. பண்பில் வஞ்சகம்,—ஆடம்பரம் - வேடிக்கை. ஆலிங்கனம்-தழுவுதல். ஆகம்-மார்பு. சங் கை-சந்தேகம். புண்டரீகம் - தாமரைமலர்போலுந்திருவடி. அண்டவேதண் டம்-ஆகாயத்தையளாவிய கயிலைமலை. உட்பட-உள்ளடங்க (மற்றெல்லாவிடங்

அங்கைவேல் கொண்டரக் கன்ப்ரதா பங்கெடுத்
 தண்டவே தண்டமுட் படவேதான்-
அஞ்சவே நின்றிறற் கொண்டலா கண்டலற்
 கண்டலோ கங்கொடுத் தருள்வோனே;
திங்களார் கொன்றைமந் தந்துழாய் தன்றுபொற்
 செஞ்சடா பஞ்சரத் துறுதோகை-
சிந்தையேய் தென்றிசைத் தென்றல்வீ சும்பொழிற்
 செந்தில்வாழ் செந்தமிழ்ப் பெருமானே.

(௰௬) தண்டே னுண்டே வண்டார் வஞ்சேர்
 தண்டார் மஞ்சக் குழல்மாதர்-
தம்பா லன்பார் நெஞ்சே கொண்டே
 சம்பா வஞ்சொற் றடிநாயேன்;
மண்டோ யந்தீ மென்கால் விண்டோய்
 வண்கா யம்பொய்க் குடில்வேறாய்-
வன்கா னம்போ யண்டா முன்பே
 வந்தே நின்பொற் கழல்தாராய்;
கொண்டா டும்பேர் கொண்டா டுஞ்சூர்
 கொன்றாய் வென்றிக் குமரேசா-
கொங்கார் வண்டார் பண்பா டுஞ்சீர்
 குன்றா மன்றற் கிரியோனே;

நம்). அஞ்ச-பயப்பட. அரக்கன் - இராக்ஷதசமுத்திரமுடைய சூரனது. ப்ர தாபம் - கீர்த்தியை. கொண்டல் ஆகண்டலற்கு - மேகவாகனத்தையுடைய இந்திரனுக்கு. ஆர்-ஆத்தி. மந்தம்-ஊமத்தம்பூ. துன்று-நெருங்குகின்ற. சடா பஞ்சரத்து-சடையாகிய கூட்டினுள்ளிருக்கும். தோகை - மயில்போன்ற சங் கையின். சிந்தை ஏய்-மனத்தையொத்த.

(௰௬) ஆர்வம்-அன்பு. தார் - மாலை. மஞ்சு - மேகம்போன்ற. சம்பாகம் பா-பரவிய. அஞ்சு-பஞ்சேந்திரியங்களில். ஒன்று - பொருந்துகின்ற. அடிநா யேன்-தாழ்ந்தநாய்போன்ற அடியேன். மண்-பிருதுவி. தோயம்-அப்பு. கால்- காற்று. விண்-ஆகாயம். (ஆகியபஞ்சபூதங்களினாலுண்டான) வண்காயம்- வனந்தங்கிய சரீரமாகிய. பொய்க்குடில்-பொய்க்குடிலை(யைவிட்டு). வேறாய்- தனியாக. வன்கானம்-வலியகாடு (மயானம்). அண்டாமுன்பு-நெருங்காததற்கு

கண்டா ரும்பா லுண்டா யண்டார்
கண்டா கந்தப் — புயவேளே.
கந்தா மைந்தா ரக்கோதான் மைந்தா
கந்தா செந்திற் — பெருமாளே.

(௰௭) வெங்கா ளம்பா ணஞ்சேல் கண்பால்
மென்பா கஞ்சொற் — குயில்மாலே.
மென்சே சந்தா னென்றே கொண்டார்
மென்றே யொன்றப் — பொருள்தேடி;
வங்கா ளஞ்சோ னஞ்சீ னம்போய்
வன்பே யுன்பப் — படலாமோ.
மைந்தா ருந்தோள் மைந்தா அந்தா
வந்தே யிந்தப் — பொழுதாள்வாய்;
கொங்கார் பைந்தே னுண்டே வண்டார்
குன்றுள் கொங்கைக் — கினியோனே.
குன்றே யொன்றூ டம்பே யுன்றூ
ரும்போய் மங்கப் — பொருகோபா;
கங்கா ளஞ்சேர் மெய்ப்பா ரன்பார்
கன்றே யம்பர்க் — கொருநாதா.
கம்பூர் சிந்தார் தென்பால் வந்தாய்
கந்தா செந்திற் — பெருமாளே.

முன்னரே. கொண்டாடும்பேர்-புகழ்ந்து பேசுவார். கொங்கு-மணம். ஆர்ந்[..]றைந்த. குன்று-குறையாத. மன்றல் - (வள்ளிநாயகியை) விவாகஞ்செய்த. சீரியோனே-திருத்தணிகைமலையை யுடையவனே. கண்டு ஆரும் - கற்கண்டோ[டு] ஆரும். பால்-(கார்த்திகைமுதலிய ஆறுதாய்மார்களின்) பாலை. அண்டார்-ப[கை]வர். கண்டா-கண்டிக்கப்பட்டவனே. கந்தம்-வாசனை. கந்து - கட்டுத்தறிக்கும்-(நப்)பாகும். மைந்து-வலிமை. மைந்தா-குமாரக்கடவுளே. ஒன்[..] றெ றென விகாரமாயிற்று.

(௰௭) காளம்-விடம். சேல்-கெண்டைமீன். மாலை-இருள். சேசம்-கூட்தல். கொண்டார்-கொண்டபெண்கள். ஒன்ற-பொருந்த. சோனம்-ஐம்பத்தாறுதேசத்திலொன்று. வன்பு-வலிமை. வப்-பொருந்திய. மைந்து-வலிமை. அந்தா-அழகுடையவனே. கொங்கு-மணம். குன்றுள்-மலைப்பெண்ணாகிய வள்ளியம்மை. குன்று-கிரௌஞ்சகிரி. அம்பு - (ஆகுபெயர்) கடல். சூர்-சூரன். கங்காளம்-முழுவெலும்பு. மெய்ப்பார் - தோள்களையுடைய சிவபிரான். கன்றே-பிள்ளையே. கம்பு-சங்கு. சிந்து-கடல்.

(௰௮) விதிபோலு முந்த விழியாலு மிந்து
நுதலாலு மொன்றி — யிளையோர்தம்.
விரிவான சிந்தை யுருவாகி நொந்து
விறல்வேறு சிந்த — வினையாலே;
இதமாகி யின்ப மதுபோத வுண்டு
இனிதாகு மென்று — மொழிமாதர்.
இருளாய துன்ப மருள்மாயை வந்து
எனையீர்வ தென்றும் — ஒழியாதோ;
மதிசூடி யண்டர் பதிவாழ மண்டி
வருமால முண்டு — விடையேறி.
மறவாத சிந்தை யடியார்கள் பங்கில்
வருதேவ சம்பு — தருபாலா;
அதிமாய மொன்றி வருசூரர் பொன்ற
அயில்வேல்கொ டன்று — பொரும்வீரா.
அழகான செம்பொன் மயில்மே லமர்ந்து
அலைவா யுகந்த — பெருமாளே.

(௰௯) விறல்மார னைந்து மலர்வாளி சிந்த
மிகவானி லிந்து — வெயில்காய.
மிதவாடை வந்து தழல்போல வொன்ற
வினைமாதர் தந்தம் — வசைகூற;
குறவாணர் குன்றி லுறைபேதை கொண்ட
கொடிதான துன்ப — மயல்தீர.

(௰௮) விதி-யமன். உந்து-செலுத்துகின்ற. ஒன்றி-ஒற்றுமைப்பட்டு. இளையோர்-யுவர். சிந்தை-மனமானது. உருவாகி-(ஒரு)வடிவெடுத்து விறல்-வலிமை. வேறுசிந்த-வேறாகக்கெடுதலால் போத-மிக. மொழி-சொல்லப்படும். இருள்-கருநிறம். துன்பம்-துன்பத்தைச்செய்யும். ஈர்வது-பிளப்பது. மதிசூடி-சந்திரனைத்தரித்தவர். மண்டி-நெருங்கி. ஆலம்-ஆலகாலவிடம். மாயம்-வஞ்சகம். அயில்-கூர்மை.

(௰௯) விறல்-வெற்றி. இந்து-சந்திரன். வெயில்காய-சுட. மிதம்-(ஆசையின்) அளவு. வினை - வஞ்சகம். குறவாணர் - அனுகூலமாட்டாதவர்களே. மதிமான்;—(இருப்பெயரொட்டு). மதியாளா-அறிவுடையவனே. மலை-கிரௌஞ்.

குளிர்மாலை யின்க ணணிமாலை தந்து
குறைதீர வந்து குறுகாயோ;
மறிமா னுகந்த இறையோன் மகிழ்ந்து
வழிபாடு தந்த மதியாளா-
பலமாவு சிந்த அலைவேலை யஞ்ச
வடிவே லெறிந்த அதிதீரா;
அறிவா லறிந்து னிருதா ளிறைஞ்சு
மடியா ரிடைஞ்சல் களைவோனே-
அழகான செம்பொன் மயில்மே லமர்ந்து
அலைவா யுகந்த பெருமாளே;

(உ௰) சந்தனச வாதுநிறை கர்ப்பூர
குங்குமப டீரவிரை கஸ்தூரி
தண்புழுக வாவுகள பச்சீத வெகுவாச-
சண்பக கலாரவகு ளத்தாம
வம்புதுகி லாரவிர கக்கோவை
தங்கியக டோரதர வித்தார பரிதான;
மந்தரம தானதன மிக்காசை
கொண்டுபொருள் தேடமதி கெட்டிர
வஞ்சகவி சாரஇத யப்பூவை யனையார்கள்-
வந்தியிடு மாயவிர கப்பார்வை
அம்பிலுழாம் வாடுமறி வற்றேனை
வந்தடிமை யாளஇனி யெப்போது நினைவாயோ;
இந்த்ரபுரி காவல்முதன் மைக்கார
சம்ப்ரமம யூரதுர கக்கார
சன்றுமாக லாதஇனி மைக்கார குறமாதின்;

சகிரி. மாவு-மாமரமாகிய சூரன். இடைஞ்சல்-துன்பம். அலைவாய்-திருச்செந் தூர். அனுகமாட்டாதவனோ என்றது - அனுகினவனுதலாலிவனையும் வந்து சேர்வாயாக என்னும் பொருளைத்தந்தது. மாவு, என்பதில்-உகரம் சாரியை.

(உ௰) படீரம்-(ஒருவகைச்) சந்தனம். அளாவு-கலந்த. கலாரம்-செங்குவளை. வகுளத்தாமம்-மகிழம்பூமாலையின் வாசம். கடோரம-கொடுமை. தர-தரித்தவனே. வித்தார-அடிபார்த்த, பரிதானம்-பெரிதாகிய. மந்தரம்-மந்தரமலை. தனம்-கொங்கையில். கிட்டிர-கொடுமையுடைய. வந்தியிடும் - வருத்தத்தைச்

இன்பஅநு போகசர சக்கார
வந்தஅசு ரேசர்கல கக்கார
எங்களுமை சேயெனரு மைக்கார மிகுபாவின்;
செந்தமிழ்சொல் நாலுசவி தைக்கார
குன்றெறியும் வேலின்வலி மைக்கார
செஞ்சொலடி யார்களெளி மைக்கார எழில்மேவும்-
திங்கள்முடி நாதர்சம யக்கார
மந்த்ரவுப தேசமகி மைக்கார
செந்திநகர் வாழுமரு மைத்தேவர் பெருமாளே.

(உக) முந்துதமிழ் மாலை கோடிக் கோடி
சந்தமொடு நீடு பாடிப் பாடி
முஞ்சர்மனை வாசல் தேடித் தேடி யுழலாதே-
முந்தைவினை யேவ ராமற் போக
மங்கையர்கள் காதல் தூரத் தேக
முந்தடிமை யேனை யாளத் தானு முனைமீதே;
திந்திதிமி தோதி தீதித் தீதி
தந்ததன தான தானத் தான
செஞ்செணகு சேகு தாளத் தோடு நடமாடுஞ்-
செஞ்சிறிய கால்வி சாலத் தோகை
துங்கஅநு கூல பார்வைத் தீர
செம்பொன்மயில் மீதி லேயெப் போது வருவாயோ-
அந்தண்மறை வேள்வி காவற் கார
செந்தமிழ்சொல் பாவின் மாலைக் கார
அண்டருப கார சேவற் கார முடிமேலே-

செய்யும். இந்த்ரபுரி-தேவலோகம். முதன்மைக்கார-முதற்றன்மையையுடையவனே. சம்ப்ரம-மகிழ்ச்சியுடைய. துரகம்-குதிரை. சமயம்-சைவசமயம். தேசமென்பது - அறிவற்றேனேயென்பதனோடு முடியும். கலாரம் என்பது கல்லாரமென்பதன் விகாரம்.

(உக) நீடு-நெடுங்காலம். முஞ்சர் - மரணமடைகுவார். முந்தைவினை-பழவினை. மூண்டு-முற்படுகின்ற. முனை-யுத்தகளத்தில். விசாலத்தோகை-விரிவான இறகினிடத்து. பார்வை - கண்களையுடைய. பொன் - அழகிய. காவற்கார-காவலையுடையவனே. அந்தம்-அழகு. வெகு-மிகுதி. சிந்தாமணி-

அஞ்சலிசெய் யோர்கள் நேயக் கார
குன்றுருவ ஏவும் வேலைக் கார
அந்தம்வெகு வான ரூபக் கார — எழிலான;
சிந்துரமின் மேவு போகக் கார
விந்தைகுற மாது வேளைக் கார
செஞ்சொலடி யார்கள் வாரக் கார — எதிரான;
செஞ்சமரை மாயு மாயக் கார
துங்கரண சூர சூறைக் கார
செந்திநகர் வாழு மாண்மைக் கார — பெருமாளே.

(௨௨.) அம்பொத் தவிழித் தந்தக் கலகத்
தந்திக் கமலக் — கலையாலே
அன்றிற் குரலைத் தென்றற் குழலைத்
தந்திப் பொழுதிற் — பிறையாலே;
எம்பொற் கொடிமற் றுன்பக் கலைநற்
றின்பக் கலவித் — துயரானாள்.
என்பெற் றலதிற் பெண்பெற் றவருக்
கின்பப் புலியுற் — றிடலாமோ;
கொம்புக் கரிபட் டஞ்சப் பகழிக்
கொங்கைக் குறவிக் — கினியோனே.
கொன்றைச் சடையற் கொன்றைத் தெரியக்
கொஞ்சித் தமிழைப் — பகர்வோனே;
செம்பொற் சிகரப் பைம்பொற் கிரியைச்
சிந்தக் கறுவிப் — பொருவேலா.
செஞ்சொற் புலவர்க் கன்புற் றுதவுஞ்
செந்திற் குமரப் — பெருமாளே.

தெய்வயானை. வேலை-வசற்றொழில். வாரம்-அன்பு. சூறை-சூறைவிளையாட்டு; சூறைக்காற்றுபோலுஞ் சுற்றிவிளையாடும் விளையாட்டு. ஆண்மை-வீரம். வேலை யென்பதில், ஐகாரிசை.

(௨௨) விழி-கண்களையுடைய பெண்கள். தந்த-(தாற்பரியம்)பழிகூறிய. கலகத்து-சண்டைக்கு. அனல்-அக்கினிபோன்ற. மன்-நிலைபெற்ற. துன்பக் கலன்-துன்பத்தைச் செய்யுமாபரணத்தை. அற்று-கழற்றியெறிந்து. பெற்ற என்-பெற்றதனாலென்னபயன். இன்பப்புலி-காமப்புலி. அ-அந்த. பகழிக் கொங்கை-பாணமாயரும்புபோலுந் தனங்களையுடைய. குறவிக்கு-குறச்சாதிப் பெண்ணாகிய வள்ளிநாயகிக்கு. ஒன்றை-(பிரணவமாகிய) ஒருபொருளை. சிந்த-சிதற. கறுவி-கோபித்து. பெண்பெற்றவருக்குப் பெற்றேனென்னைக் கூட்டிச் சாமத்தைப் புலியென்றது. வருத்துந் தன்மையாலென்க.

(௨௩.) கொங்கைப் பணையிற் செம்பொற் செறிவிற்
கொண்டற் குழலிற் — கொடிதான.
கொன்றைக் கணையொப் பந்தக் கயலிற்
கொஞ்சுக் கிளியுற் — றுறவான;
சங்கத் தொனியிற் சென்றிற் கடையிற்
சந்திப் பவரைச் — சருவாதே.
சந்தப் படியுற் றென்றற் றலையிற்
சந்தப் பதமுந் — தருவாயே;
அங்கப் படைவிட் டன்றைப் பதிகத்
தந்திக் கடலிற் — கடிதோடா.
அந்தப் பொழிலிற் சந்துத் தலையுந்
தஞ்சப் பொருளுற் — றொழியாதே;
செங்கைக் கதிரிற் றுன்றக் கடலிற்
சென்றுற் றவர்தற் — பொருளானாய்.
சிந்தைக் கனிவைத் தந்தப் பொழிலிற்
செந்திற் குமரப் — பெருமாளே.

(௨௩.) பணைகொங்கையில்-பருத்ததனங்களில். பொன்செறிவில்-பொன்னாபரணமிருக்குமிடத்தில். கொண்-அச்சமும். தை-தைத்தலுமுடைய. ஒப்பு-சமானமாகிய. கயலில் கண்ணாகிய சேல்மீனிடத்தில். கொஞ்சு-கொஞ்சப்படு. கிளியில்-கிளிபோன்ற மொழியில். உறவு-நெருக்கம்-சங்கத்தொனியில். சங்கு போன்ற கண்டத்தில் எழுமோசையில். சென்று (மனம்) போய். இற்கடையில்-வீட்டின் தலைவாயிலில். சருவாது-அனுசாமல். சந்தம்-அழகிய. படி-பூமியில். என்தன்-என்னுடைய. சந்தம்-நிறம். அங்கு-அவ்விடத்து. அப்படைவிட்டு-அந்தச்சேனையைநீங்கி. அன்றைப்பதிகைக்கு-அக்காலத்தில். (வெற்றி) புனைதற்பொருட்டு. அந்திக்கடலில்-(திருச்செந்தூருக்கும் மகேந்திரபுரிக்கும் நடுவே) அமைந்திருக்கும் சமுத்திரத்தில். கடிது-விரைந்து. அந்தப்பொழில்-அந்த-(மகேந்திரபுரியென்னும்) பூமியினிடத்து. சந்துத்தலை-தூதாகிய முதன்மையை. உற்று-(தாற்பரியம்) சொல்லி. ஒழியாது-கெடாமல். கை-கிரணங்களையுடைய. கதிர்-சூரியனைப்போல. உற்று-பொருந்தி. ஒன்ற-(தாற்பரியம்) தோன்ற. (மற்றைச்சமுத்திரத்திலும்) சென்று உற்றவர்-போய்வந்தவராகிய வீரவாகுதேவருக்கு. தற்பொருளானாய்-தானே பரம்பொருளாயிருந்தவனே. அப்பொழிலின்-அச்சோலைசூழ்ந்த இனிய.

(உச) காலனார் வெங்கொடுந் தூதர்பா சங்கொடேன்
காலினார் தந்துடன் கொடுபோகக்
காதலார் மைந்தருந் தாயரா ருந்தழுங்
காணமே பின்தொடராந் தலறுமுன்;
சூலம்வாள் தண்டுசெஞ் சேவல்கோ தண்டமுஞ்
சூடுதோ ளுந்தடந் திருமார்பும்
ஆயதாள் தண்டையுங் காணஆர் வஞ்செயுந்
தோகைமேல் கொண்டுமுன் வரவேணும்;
ஆலகா லம்பரன் பாலதா கும்படித்
தேவர்வா முன்றருந் தமுதீயும்
ஆரவா ரஞ்செயும் வேலைமேல் கண்வளர்ந்
தாதிமா யன்றனன் மருகோனே;
சாலிசேர் சங்கினம் வாவிசூழ் பங்கயந்
சாரவார் செந்திலம் பதிவாழ்வே
சாவுசூ ரஞ்சிமுன் சாயவே லம்பெறுந்
தாரைவே லுந்திடும் பெருமாளே.

(உரு) சங்கைதா னொன்றுதா னின்றியே செந்திலே
சஞ்சலா ரம்பமாயன்-
சந்தொடே குன்றுமா லுங்குநா டம்பரா
சம்ப்ரமா நந்தமாயன்;
மங்கையார் கொங்கைசேர் அங்கமே சங்களால்
வம்பிலே தன்புருமே
வந்துகூற நின்றொரு பம்பரா சங்கொடே
வந்துதீ யன்பிலானாய்;

(உச) ஆர்த்தது-கட்டி. காதல்-ஆசை. ஆர்-நிறைந்த. கோதண்டம்-வில். தோள்-கை. ஆர்வம்-அன்பு. பாலது-பக்கத்தில். ஆக-சேர. வாழ்-வாழ்தலை. ஆரவாரம்-பெருமுழக்கம். கண்வளர்ந்த-நித்திரைசெய்த. சாலி-நெற்கதிர். சாரல்-பக்கத்தில். சூர்-சூரன்-தாரை-நேரேசெல்லுகின்ற. ஆர், வளர்ந்த என்பவற்றில் ஈற்றகரங்கள் கெட்டன.

(உரு) சங்கை-சந்தேகம். சஞ்சலம்-துன்பம். ஆரம்பம்-முதலிற்றோன்றுதலுடைய. மாயன்-வஞ்சனையுடையேனுடைய. சந்து-சந்தனம். அடம்பா-மே

கங்கைசூ டும்பிரான் மைந்தனே அந்தனே
கந்தனே விந்தையூரா-
கம்பியா திந்த்ரலோ கங்கள்கா வென்றவா
கண்டலே சன்சொல்வீரா;
செங்கைவேல் வென்றிவேல் கொண்டுசூர் பொன்றவே
சென்றுமோ ரம்ப்ரதாபா-
செங்கண்மால் பங்கசா னன்றொழா னந்தவேள்
செந்தில்வாழ் தம்பிரானே.

(உசு) அங்கை மென்குழ லாய்வார் போலே
சந்தி நின்றய லோடே போவா
ரன்பு கொண்டிட நீரோ போதீ ரறியீரோ-
அன்று வந்தொரு நாள்நீர் போனீர்
பின்பு கண்டறி யோநா மீதே
அன்று மின்றுமொர் போதோ போகா துயில்வாரா;
எங்க ளந்தரம் வேறா ரோர்வார்
பண்டு தந்தது போதா தோமே
லின்று தந்துற வோதா னீதே னிதுபோதா-

டிக்கையில். சம்ப்ரமானந்த-மகிழ்ச்சியாகிய இன்பத்தைப் பொருந்திய. மாயன்-மயக்கத்தையுடையேன். அங்கம்-(அப்பெண்கள்) சரீரத்தின். சொரூபப் பி[illegible]-திருமேனிவிளக்கத்தால். அந்தனே-அழகுள்ளவனே. விந்தையூரா-அறிஞர்கள் நகரத்திலிருப்பவனே. கம்பியாது-நடுங்காது. காவென்று-இரக்ஷிப்பாயென்று. அ-அந்த. ஆகண்டலேசன்-இந்திரன். ப்ரதாபா-கீர்த்தியுடையவனே. பங்கசானன்-தாமரையாசனத்தை யுடைய பிரமன். பங்கசாசனன் என்பதில் சகரங்கெட்டது.

(உசு) அங்கை-அழகியகையால். ஆய்வார்-சிக்கறுப்பார். சந்தி-நாற்சந்தித்தெரு. அயல்-அன்னியர். அன்புகொண்டிட-(நாம்)அன்புற. ஈதே-இம்மட்டே. அன்றும்-அந்நாள்முதல். இன்றும்-இந்நாள்வரையும். ஓர்போது-ஓர்பொழுது. போகா-கழியமாட்டாது வருத்துகின்றது. அந்தரம்-முடிவை. பண்டு-முன்னம். போதாதோ-காணாதோ. மேல்-அதற்குமேல். இன்று-இன்றைக்கும். தந்துறவோ-கொடுத்துச்சேர (வேண்டு)மோ. ஈதேன்-இந்தயோசனை யெதற்கு. இதுபோதாது-இவ்வளவுநேரம்வரை நின்ற இதுகாணாமல் (இன்னமும்). வீடு-வீட்டுக்கு. வாரீர்-வாருங்கள். இணங்கிகள்-இணக்கஞ்செய்யும் வேசையர்கள். இன்ப சிங்கியில்-சுகமாகிய நஞ்சில். மங்குல்-மேகம். தாரைய்-

திங்கு நின்றதென் விடே வாரி
ரென்றி ணங்கிகள் மாயா லீலா
இன்ப சிங்கியில் வீணே வீழா — தருள்வாயே;

மங்கு லின்புறு வானாய் வானா
டன்ற ரும்பிய காலாய் நீள்கால்
மண்டு ழம்புகை நீறு வீறு — எரிதீயாய்-

வந்தி ரைந்தெழு நீராய் நீர்சூழ்
அம்ப ரம்புனை பாராய் பாரேழ்
மண்ட லம்புகழ் நீயாய் நானாய் — மலரோனாய்;

உங்கள் சங்கரர் தாமாய் நாமார்
அண்ட பந்திகள் தாமாய் வானாய்
ஒன்றி னுங்கடை தோயா மாயோன் — மருகோனே-

ஒண்ட டம்பொழில் நீடூர் கோடூர்
செந்தி லம்பதி வாழ்வே வாழ்வோர்
உண்ட நெஞ்சறி தேனே வானோர் — பெருமாளே.

(௨௭) அந்தகன்வ ருந்தினம் பிறகிடச்
சந்ததமும் வந்துகந் தரிவையர்க்
கன்புருகு சங்கதந் தவிரமுக் — குணமாளி-

அங்கிபக லென்றிரண் டையுமொழித்
திந்திரிய சஞ்சலங் களையறுத்
தம்புய பதங்களின் பெருமையைக் — கவிப்-

ஆகாயமாகி. அரும்பிய-தோன்றிய. காலாய்-காற்றாகி. மண்டும்-நெருங்கும். நீறு-(கண்ணிடத்தகப்பட்ட பொருள்) சாம்பராக. வீறாய்-தருக்காய். எரிகின்ற. தீயாய்-அக்கினியாகி. இரைந்து-முழங்கி. நீர்அம்பரம்-கடலாகிய ஆடை. சூழ்புனை-சூழத்தரிக்கின்ற. பாராய்-பூமியாகி. பார்-(அப்) பூமி (யாகே). உங்கள்-உனக்குமுன்னைச் சேர்ந்தவர்க்கும். சங்கரர்-சுகஞ்செய்பவராகிய சிவபிரான். நாம்-அச்சம். அண்டபந்திகள்-வரிசையாகிய அண்டங்கள். ஆய்வாறாய்-ஆராயப்படுவோனாகி. ஒன்றினும்-(இங்கே சொல்லப்பட்ட) ஒருபொருளினும். கடை-முடிவில். தோயா-பற்றாத. நீடு-வெகுதூரம். ஊர்-வளர்கின்ற. கோடு-சங்குகள். ஊர்-ஊர்ந்து திரியும். உண்ட-அநுபவித்த. பேரின்ப வாரா-என்பவற்றின் முதலிலுள்ள து, கெட்டது-தான். தாம்-அசைகள்.

(௨௭) அந்தகன்-யமன். பிறகிட-பிறப்பட்டுப்போக. சந்ததம்-எப்பொழுதும். சங்கதம்-நட்பு. முக்குணம்-இராசதமாதிய மூன்றுகுணங்கள். அங்கி

செந்திலை யுணர்ந்துணர்ந் துணர்வுறக்
கந்தனை யறிந்தறிந் தறிவினிற்
சென்றுசெரு குந்தடந் தெளிதரத் — தணியாத-

சிந்தையு மவிழ்ந்தவிழ்ந் துரையொழித்
தென்செய லழிந்தழிந் தழியமெய்ச்
சிந்தைவர நின்றுநின் தெரிசனைப் — படுவேனோ;

கொந்தவிழ் சரண்சரண் சரணெனக்
கும்பிடு புரந்தரன் பதிபெறக்
குஞ்சரி குயம்புயம் பெறஅரக் — கருமாள-

குன்றிடிய அம்பொனின் திருவரைக்
கிண்கிணி கிணின்கிணின் கிணினெனக்
குண்டல மசைந்திளங் குழைகளிற் — ப்ரபைவீச;

தந்தன தனந்தனந் தனவெனச்
செஞ்சிறு சதங்கைகொஞ் சிடமணித்
தண்டைகள் கலின்கலின் கலினெனத் — திருவான-

சங்கரி மனங்குழைந் துருகமுத்
தந்தர வருஞ்செழுந் தளர்நடைச்
சந்ததி சகந்தொழுஞ் சரவணப் — பெருமாளே.

(௨௮) அருணமணி மேவு பூஷித ம்ருகமத படீர லேபன
அபிநவ விசால பூரண
அம்பொற் கும்பத் — தனமோதி-

அளிகுலவு மாதர் லீலையின் முழுகியபி ஷேகமீதென
அறவுமுற வாடி நீடிய
அங்கைக் கொங்கைக் — கிதமாகி;

பகல்-கேவலசகல நிலைகள். இந்திரிய சஞ்சலங்கள்-பஞ்சேந்திரியங்களாலுண்டாகிய துன்பங்கள். உணர்வு-அறிவு. கந்தனை-குமாரக்கடவுளாகிய உன்னை. செருகும்-நெருங்கும். தடம்-வழி. அவிழ்ந்து-விரிந்து. உரையொழித்து-பேச்சற்று. மெய்ச்சிந்தை-உண்மைக்கருத்து. படுவேன்-அடைவேன். ஓ-அசை. கொந்து அவிழ்-பூவிதழ்மலர்கின்ற. சரண்-திருவடி. சரண்-அடைக்கலம். குஞ்சரி-தெய்வயானை. குயம்-தனம். புயம் (உனது) தோள். குழை-காது. திரு-சிறப்பு. சந்ததி-புத்திரனே.

(௨௮) அருணமணி-சிவந்தமாணிக்கமாலை. பூஷித-புகழப்படுகி. ம்ருகமத-கஸ்தூரிகலந்த. படீரலேபன-சந்தனப்பூச்சுடைய. அபிநவம்-புதுமையாகிய.

இருவினையைய மோதிமாமிகை கருவிபுற வானவேளையி
விளைமுகலைய மாத ரார்வழி
யின்புற் றன்புற் றழியாதின்;
இரவுபகல் மோகமுறுகியெ படியில் மடியாமல் யானுமுன்
இணையடிகள் பாடி வாழவெ
னெஞ்சிற் செஞ்சொற் றருவாயே;
தருணமணி யாட ராவணி குடிலசடி லாதி யோதிய
சதுர்மறையி னாதி யாகிய
சங்கத் துங்கக் குழையாளர்.
தருமுருக மேக சாயலர் தமரமக ராழி சூழ்புவி
தனைமுழு தாம் வயிறி யேயமு
துண்டிட் டண்டர்க் கருள்கூரும்;
செருமுதலி மேவு மாவலி யதிமதக போல மாமலை
தெளிவிநுடன் மூல மேயென
முந்தச் சிந்திக் கருள்மாயன்.
திரன்முருக சூரன் மார்பொடு கிலையுருவ வேலை யேவிய
ஜெயசரவ ணோம னோகர
செந்திற் கந்தப் பெருமாளே.

(௨௬) அனிச்சங் கார்முகம் வீசிட மாசுற
அவட்பஞ் சானத டாகம்வி டாமட
அனந்தின் றாவிகு லாவிய சேறடி மடமாதர்;

ஒதி-கூந்தலில். நீடிய அங்கு-காலநீட்டித்திருக்கும் அவ்விடத்து. கொங்கைக்கு-தனங்களுக்கு. இருவினை,—அம்ஒதி-அழகிய கூந்தலின். மாலிகை-மாலை. சருவி-அணுகி. இழை-(ஆகுபெயர்)சேலை. கலைய-அவிழ. வழி-இடத்தில். அழியா-கெட்டு. தருணம்-புதுமையையுடைய. குடிலசடில ஆதி-வட்டச்சடையுடையசிவபிரானுடைய. ஓதிய-(தாம) சொல்லப்பட்ட. ஆதி-முதற்பொருளாயுள்ள. மேகசாய்-மேகநிறம். அலர்-விரிந்த. தமரம்-பேரொலி. அமுதுண்டிட்டு-போசனஞ்செய்து விட்டு. செருமுதலை-சண்டைசெய்யுமுதலையிடத்து. மாவலி-பெரியவலியும். கபோலம்-கன்னத்தையுமுடைய. மாமலை-பெரியமலைபோலும் யானை. சிலை-மலை. மனோகர-ஆசையுடைய. அருள்கூருமாயனெனக் கூட்டுக.

(௨௬) கார்முகம்-(பஞ்சவெட்டும்) வில். வீசிட-வெட்டிச்சிதற. அவள் பஞ்ச-இலேசாகும் பஞ்சு. அன-அன்ன. தாவி-இறந்து. உலர்விய-(ஒத்த) விளங்

அருக்கன் போலொளி வீசிய மாமர
கதப்பைம் பூணணி வார்முலை மேல்முகம்
அழுத்தும் பாவியை ஆவியி டேறிட நெறிபாராய்;
விளைச்சண் டாளனை வீணனை நீணிதி
தனைக்கண் டாணவ மானதிர் மூடனை
விடக்கன் பாய்நுகர் பாழனை யோர்மொழி பகராதே.
விகற்பங் கூறிடு மோகவி காரனை
அறத்தின் பாலொழு காதமு தேவியை
விளித்துன் பாதுகை நீதர நானருள் பெறுவேனோ;
முனைச்சங் கோலிடு நீலமகோததி
அடைத்தஞ் சாதஇ ராவணன் ஈர்ப்பல
முடிக்கன் றோர்கணை யேவும் இராகவன் மருகோனே.
முளைக்குஞ் சீதநி லாவொட ராவிரி
இரைக்கங் காநதி தாதகி கூவிள
முடிக்குஞ் சேகரர் பேருள ளால்வரு முருகோனே;
தினைச்செங் கானக வேடுவ ரானவர்
திகைத்தந் தோவென வேகணி யாகிய
திறக்கந் தாவளி நாயகி காமுறும் எழில்வேலா.
சிறக்குந் தாமரை யோடையில் மேடையில்
நிறக்குஞ் சூல்வளை பால்மணி வீசிய
திருச்செந் தூர்வரு சேவக னேசுரர் பெருமாளே.

(௩௰) அனைவருமருண்டருண்டு கடிதெனவெ குண்டியம்ப
அமரஅடி பின்தொடர்ந்து பிணநாறு.

விய. பாவியை-பாவியாகிய எனது. ஈடேறிட-பிழைக்க. நெறி-வழி. விடக்கு-மாமிசம். பாழனை-பாழாகியஎன்னை. விகற்பம்-வேறுபாடு. பால்-பக்கத்தும். ஒழுகாத-செல்லாத. விளித்து-அழைத்து. பாதுகை-திருவடி. ஒலிடும்-முழங்கும். மகோததி-பெரியகடல். தாதகி-ஆத்தி. கூவிளம்-வில்வம். சேகரர்-தலையையுடையவர். கணி-வேங்கைமரம். நிறக்கும்-நிறம்பொருந்தியிருக்கும். பால்மணி-முத்து.

(௩௰) அனைவரும்-(வேசையர்)எல்லாரும். அரண்டு-பயந்து. கடிதென-கொடியதாக. வெகுண்டு-கோபித்து. இயம்ப-பேசவும். அமர-(அவருடன்) சேர

மழுகுபிணி கொண்டு விண்டுபுழுவுட னேலும்பலழ்பு
மலலவுட லஞ்சுமக்கு தடுமாறி;
மனைதொறுமி தம்பகர்ந்து வரவரஇ ருந்தருந்தி
மனவழிதி ரிந்துமங்கும் வசைதீர.
மறைச்துர்வி தந்தெரிந்து வகைசிறுச தங்கைகொஞ்சு
மலரடிவ ணங்க என்று பெறுவேனோ;
திசைமிசைசு கங்கடிந்த புண்மயிலி னங்குரும்பை
திகழிருத னம்பு ணர்ந்த திருமார்பா.
ஜெகமுழுது முன்புதும்பி முகவனொடு தந்தைமுன்பு
கிரிவலம் வந்த செம்பொன் மயில்வீரா;
இனியகனி மந்திசிந்தி மலேகிழவ செந்தில்வரு க
இறைவருக கந்த என்று இனையோனே.
எழுகடலு மெண்சிலம்பும் நிசிசரரும் அஞ்சஅஞ்சு
இமையவரை யஞ்ச லென்ற பெருமாளே.

(௩௧) இருகுழையெ றிந்த கெண்டைகள் ஒருகுமிழ டர்ந்து வந்திட
இணைசிலைநெ ரிந்தெ முந்திட அணைமீதே.
இருளளக பந்தி வஞ்சியி லிருகலையு டன்கு லைந்திட
இதழமுத ருந்து சிங்கியின் மனமாய;
முருகொடுக லந்த சந்தன அளறுபடு குங்கு மங்கமழ்
முலைமுகடு கொண்டெ ழுந்தொரு முருகார.

ர்ந்திருக்க. அடியின்-(அலர்) காலைப் பின்பற்றி. விண்டு-விரிந்து. அலம்பும்-அசையும். அவல-துன்பத்தையுடைய. மனைதொறும் (கொடுப்பார்) வீடு தோறும். வரவர-(யாசகப்பொருள்) கிடைக்கக் கிடைக்க. இருந்து—மனவ ழி-மனம்போனவழியில், சதுர்மறை-நான்குவேதங்களின். விதம்-கூறுபாடு. வகை-விதவிதமாகிய. கொஞ்சும்-சிற்றொலிசெய்யும். சுகம்-கிளிகளை. கடிந்த-விரட்டிய. மயில்-மயில்போலும் வள்ளியம்மையின். முன்பு-பண்டைக் காலம். தந்தைமுன்பு-பிதாவாகிய சிவபிரானுக்கு எதிரில். கிரி-மகாமேரு மலையை. மந்தி-குரங்குகள். மலைகிழவ-மலைகளுக்குரியவனே. சிலம்பு-மலை. நிசிசரர்-அரக்கர். அஞ்சல்-அஞ்சாதேயுங்கள்.

(௩௧) குழை-காதுகளில், எறிந்த-(தாற்பரியம்) தாவிய. கெண்டை-கண். குமிழ்-மூக்கு, இணைசிலை-இரண்டுபுருவம். அளகபந்தி-கூந்தல்வரிசை.

முழுமதிபு ரிந்த சிந்துர அரிவையரு டன்க லந்திடு
முகடியுக லம்பி றந்திட அருள்வாயே;
எரிவிடநி மிர்ந்த குஞ்சியி னிலவொடு மெழுந்த கங்கையு
மிதழியொட ணிந்த சங்கரர் களிகூரும்.
இமவரைத ருங்க ருங்குயில் மரகதநி றந்த ருங்கிளி
யெனதுயிரெ னுங்க்ரி யம்பகி பெருவாழ்வே;
அரைவடம லம்பு கிண்கிணி பரிபுரநெ ருங்கு தண்டைக
ளணிமணிச தங்கை கொஞ்சிட மயில்மேலே.
அகமகிழ்வு கொண்டு சந்ததம் வருகுமர முன்றி லின்புறம்
அலைபொருத செந்தில் தங்கிய பெருமாளே.

(௩௨) இருள்விரி குழலை விரித்துத் தூற்றவு
மிறுகிய துகிலை நெகிழ்த்துக் காட்டவு
மிருகவடு விழியு முறுக்கிப் பார்க்கவு மைந்தரோடே.
இலைபிள வதனை நடித்துக் கேட்கவு
மறுமொழி பலவு மிசைத்துச் சாற்றவு
மிடையிடை சிறிது நகைத்துக்காட்டவுமெங்கள்வீடே;
வருகென வொருசொ லுரைத்துப் பூட்டவும்
விரிமல ரமளி யணைத்துச் சேர்க்கவும்
வருபொரு ளளவி லுருக்கித் தேற்றவு நிந்தையாலே.
வனமனை புகுதி லடித்துப் போக்கவு
மொருதலை மருவு புணர்ச்சித் தூர்த்தர்கள்
வசைவிட நினது பதத்தைப் போற்றுவ தெந்தநாளோ;

வஞ்சி-இடை. இரு-பெரிய. அருந்து-உண்கின்ற. அமுதசிங்கியின்-அமுதமா யவிடத்தால். முருகு-வாசனைப்பண்டம். அளறு-சேறு. உருகுதூர-உருகு தல் பொருந்த. மதி-முகம். புரிந்த-விரும்பிய. சிந்தூரம்-பொட்டு. முகடியும்-மூதேவியாகிய அடியேனும். எரிவிட-அக்கினிபோற்பிரகாசிக்க. குஞ்சியின்-சடையில். இதழி-கொன்றைமலர். அரைவடம்-இடையிலேதரிக்கும் சதங் கைமாலை, கொஞ்சிட-சிற்றொலிசெய்ய. முன்றில்-முற்றம். இதில், உவமானப் பொருள்களை யுவமேயமாகக்கூறியது காண்க. மேல்வருமிடங்களிலு மிங்ங னமே.

(௩௨) தூற்றவும்-உதறவும். மைந்தர்-ஆடவர். இலை-வெற்றிலை. பிளவு-பாக்கு. வீடு-வீட்டில். பூட்டவும்-வசப்படுத்தவும். அமளி-மெத்தை. பொருள

குருமணி வயிர மிழைத்துக் கோட்டிய
குழைமட வுருவு வெளுத்துத் தோற்றிய
குளிறிசை யருவி கொழித்துத் தூற்றிய மண்டுநீரூர்-
குழிபடு கலுழி வயிற்றைத் தூர்த்தெழு
திடமணை யிறகு துருத்திக் காப்பொதி
குளிர்நிழ லருவி கலக்கிப் பூப்புனை வண்டலாடா;
முருகவிழ் துணர்க ளுகுத்துச் சாய்த்தினை
விளைகதிர் திரணி விருப்பைக் காட்டிய
முகிழ்முலை யிளைய குறத்திக் காட்படு செந்தில்வாழ்வே-
முளையிள மதியை யெடுத்துச் சாத்திய
சடைமுடி யிறைவர் தமக்குச் சாத்திர
முறையருள் முருக தவத்தைக் காப்பவர் தம்பிரானே.

(௬௩.) உததியறல் மொண்டு சூற்கொள்கரு
முகிலெனஇ ருண்ட நீலமிக
வொளிதிகழு மன்றல் ஓதிநரை பஞ்சுபோலாய்-
உதிரமெழு துங்க வேலவிழி
மிடைகடையொ துங்கு பீளைகளு
முடைதயிர்பி திர்ந்த தோஇதென வெம்புலாலாய்;

வில்-(கொடுத்த) பொருளுக்குத் தக்கபடி. உருக்கி - (அவ்வாடவரை) மன முருகச்செய்து. திக்கையாலே - (அவ்வாடவர் தரித்திரானகாலத்தில்) வசை கூறுதலாலே. வனை - அலங்கரிக்கப்பட்ட. ஒருதலைமருவுபுணர்ச்சி-ஒருபக்கம் பொருந்திய காமத்தையுடைய. தூர்த்தர்கள்-விடபுருடர்களுடைய. வசைவிட்- டிக்கை(யடியேன்)நீங்க. இழித்து-(கற்களென்று) இழிவுபடுத்தித்தள்ளி. கோ டிய-வளைக்கப்பட்ட. குழைமடவுருவு-மூங்கிலின் இளையவடிவம். தோற்றிய- தோற்ற. குளிறு இசை-மிகுந்தஓசையுடைய. கொழித்து-ஒதுக்கி. தூற்ற-வீச- மண்டுநீர்-நெருங்குகின்றநீர். ஊர்-ஊர்ந்து. கலுழி-காட்டாற்றின். வயிற்றை- உள்ளிடத்தை. தூர்த்து-நிரப்பி. திடர்-மேடாகிய. இறகு - நெருங்குகின்ற. துருத்திகா-திட்டிகளிடத்துள்ள சோலையை. நிழல்-நிழலிடத்து. அருவி-(அவ் விடத்துவருகின்ற) அருவிச்சலத்தில். கலக்கி-(மூழ்கிக்)கலக்கச்செய்து. வண் டல் - மகளிர்விளையாட்டு. ஆடா-விளையாடி. முருகு-வாசனை. அவிழ்-விரிந்த. துணர்கள்-பூங்கொத்துக்களை. உகுத்து-உதிர்த்துவிளையாடி. இதணை-பரண். ஆட்படு- அடிமைப்பட்ட. சாத்திய-சூடிய. இழித்துக்கலக்கி ஆடிக்காட்டிய எனமுடிக்க.

மதகரட தந்தி வாயினிடை
சொருகுபிறை தந்த சூதுகளின்
வடிவுதரு கும்ப மோதிவளர் கொங்கைதோலாய்-
வனமழியு மங்கை மாதர்களி
னிலைதனையு ணர்ந்து தாளிலுறு
வழியடிமை யன்பு கூருமது சிந்தியேனோ;
இதழ்பொதிய விழ்ந்த மாமலரின்
மணவறை புகுந்த நான்முகனு
மெறிதிரைய லம்பு பாலுததி நஞ்சராமேல்-
இருவிழிது யின்ற நாரணனு
முமைமருவு சந்த்ர சேகரனு
மிமையவர்வ ணங்கு வாசவனு நின்றுதாழும்;
முதல்வசுக மைந்த பீடிகையி
லகிலசக அண்ட நாயகிதன்
முகிழ்முலைசு ரந்த பாலமுத முண்டவேளே-
முனைமுருகு சங்கு வீசியலை
முடுகிமைத வழ்ந்த வாய்பெருகி
முதல்விவரு செந்தில் வாழ்வுதரு தம்பிரானே.

(௬௪) கட்டமுகு விட்டுத் தளர்ந்தங் கிருந்துமுன
மிட்டபொறி தப்பிப் பிணங்கொண் டதின்சிலர்கள்
கட்டணமெடுத்துச் சுமந்தும் பெரும்பறைகள்முறையோடே-

(௬௩) உததிஅறல் - கடற்சலம். மன்றல் ஓதி- வாசனையுடைய கூந்தல். ஆய்-ஆக. உதிரம்-இரத்தம். மிடை-நெருங்கிய. இதென-இதுவென்றுசொல்ல. புலாலாய்-மாமிசநாற்றமாகி. மதகரடம்-மதமாகிய கரடம். தந்தி-யானையின். பிறைதந்த - பிறைச்சந்திரனையொத்த கொம்பு. சூதுகளின் - சூதாடுகருவிகள் போல. வடிவுதரு- அழகைச்செய்கின்ற. கும்பம் - குடத்தை. வனம்- அழகு. தாளின் - (உனது) திருவடிகளில். பொதியவிழ்ந்த-கட்டுவிரிந்த. மணவறை- வாசனையுள்ள வீட்டில். அலம்பு-முழங்குகின்ற. உததி-கடலில். மைந்த-வலி மையுள்ள. பீடிகை-தாமரைப்பூந்தட்டில் (இருந்து). அகிலசகம்-எல்லாவுலகங் களாகிய. அண்டநாயகி - அண்டங்களுக்கெல்லாம் தலைவியாம் உமாதேவி. முனை-கூரிய. முருகுசங்கு - வலம்புரிச்சங்கு. முடுகி-விரைந்து. மை-மேகம். தவழ்ந்த-தவழப்பட்ட. வாய்-இடந்தோறும். முதல்வி-முதன்மையாகி.

(௬௪) பொறி - அடையாளம். பிணங்கொண்டதின் - பிணமானதன்மேலே.

வெட்டவிட வெட்டக் கிடஞ்சங் கிடஞ்சமென
மக்களொரு மிக்கத் தொடர்ந்தும் புரண்டும்வழி
விட்டுவரு மித்தைத் தவிர்ந்துன் பதங்களுற வுணர்வேனோ;

பட்டுருவி நெட்டைக் கிரௌஞ்சம் பிளந்துகடல்
முற்றுமலை வற்றிக் குழம்பிக் குழம்பமுனை [முடிசாய-
பட்டஅயில் தொட்டுத் திடங்கொண் டெதிர்ந்தவுணர்

தட்டழிய வெட்டிக் [illegible] பெருங்கழுகு
நிர்த்தமிட ரத்தக் குளங்கண் டுமிழ்ந்துமணி
சற்சமைய வித்தைப் பலன்கண்டு செந்திலுறை பெருமாளே

(௩௫) கண்டுமொழி கொம்பு கொங்கை வஞ்சியிடை அம்பு நஞ்சு
கண்கள்குழல் கொண்ட லென்று பலகாலும்-
கண்டுமவ ருந்தி தொந்து மங்கையர்வ சம்புரிந்து
கங்குல்பக லென்று நின்று விதியாலே;

பண்டைவினை கொண்டு முன்று வெந்துவிழு கின்றல் கண்டு
பங்கயப தங்கள் தந்து புகழோதும்-
பண்புடைய சிந்தை யன்பர் தங்களினு டன்க லந்து
பண்புபெற அஞ்ச லஞ்சல் ௦ எனவாராய்;

வண்டுபடு கின்ற தொங்கல் கொண்டறநெ ருங்கி யிண்டு
வம்பினைய டைந்து சந்தின் மிகமூழ்கி-
வஞ்சியைமு னிந்த கொங்கை மென்குற மடந்தை செங்கை
வந்தழகு டன்க லந்த மணிமார்பா;

கட்டணம்-பாடையில். சுமந்தும்-சுமக்கப்பட்டும். பறைகள்-(சாவு) கொட்டுகள். என-என்றுமுழங்க. விட்டு-விடப்பட்டு. இத்தை-இச்செயலை. நெட்டை-நீண்ட. குழம்பும் குழம்ப-குழைசேறாக. தொட்டு-(தாற்பரியம்) எவி. தட்டு-நிலை கலங்கக் கவந்தம்-குறைத்தலைப்பிணம். மணி உமிழ்ந்து-(அசுரரணிந்திருந்த) இரத்தினங்களைச்சிதறி. வித்தைப்பலன்-சாத்திரப்பிரயோசனம்.

(௩௫) கொம்பு-யானைக்கொம்பு. வஞ்சி-வஞ்சிக்கொடி. கண்டு-பார்த்து. புரிந்து-விரும்பி. என்றும்-எக்காலமும். விதி-ஊழ். வெந்துவிழுகின்றல்-(ஏனையர்கள்) சாம்பலாய்ப் போதல். அஞ்சல்-பயப்படாதே. வாராய்-வருவாயாக. அற-மிக. இண்டு-இவ்விடத்து. வம்பு-கச்சு. சந்தின்-சந்தனத்திலே. வஞ்சி-இடையை. தங்கள்-தங்களுடைய. சமர்-போர்க்கோலம். குன்றிடை-திருப்பரங்குன்றில். மணம்-தெய்வயானையம்மைவிவாகம். தந்து அஞ்சலெனக்கூட்டுகின்ற

திண்டிறல்பு னைந்த அண்டர் தங்களப யங்கள் கண்டு
செஞ்சமர்பு னைந்து துங்க மயில்மீதே-
சென்றசுர ரஞ்ச வென்று குன்றிடைம ணம்பு ணர்ந்து
செந்தில்நகர் வந்த மர்ந்த பெருமாளே.

(௩௬) களப மொழுகிய புளகித முலையினர்
கடுவு மமிர்தமு [illegible] விழியினர்
கமழ்வு சரிபுழு கொழுகிய குழலின ரெவரோடும்-
கலக மிடுகய லெறிகுழை விரகியர்
பொருளி லிளைஞரை வழிகொடு மொழிகொடு
தளரவி டுபவர் தெருவினி லெவரையு நகையாடி;

பிளவு பெறிலதி லளவள வொழுகியர்
நடையி னுடையினி லழகொடு திரிபவர்
பெருகு பொருள்பெறி லபரிமி தமொடு குலவோடே-
பிணமு மணைபவர் வெறிதரு புனலுணும்
அவச வனிதையர் முடுகொடு மணைபவர்
பெருமை யுடையவ ருறவினை விடஅருள் புரிவாயே;

அளையி லுறைபுலி பெறுமக வயிறரு
பசுவி னிரைமுலை யமுதுண நிரைமகள்
வசவ னொடுபுலி முலையுண மலைபுட னுருகாநீள்-

ன்குன்றில். மணம்-தெய்வயானையம்மைவிவாகம். தந்து அஞ்சலெனக்கூட்டுகின்று, இங்ஙனம் விகாரப்பட்டது.

(௩௬) களபம்-கூட்டுவர்க்கச் சந்தனம். புளகிதம்-மயிர்ச்சிலிர்ப்பு. கடு-விடம். கமழ்வு-மாசுபோக்கிய. சரிபுழுகு-மற்றை வாசனைப்பண்டங்களுடன் சமானமாகக் கலந்த புழுகு; அஃதாவது-மயிர்ச்சாந்து. கயல்-கண். எறி-தைக்கின்ற. குழை-காதுகளையுடைய. பொருளில்-திரவியமில்லாத. வழிகொடு-வழியிலே கூட்டிக்கொண்டு வந்து. மொழிகொடு-சொல்லால். நகையாடி-சிரித்து. பிளவுபெறில்-பாதிப்பாக்குப் பெற்றாலும். அதின் அளவு அளவு-அப்பாக்கின் அளவுக்குத்தக்கபடி. ஒழுகியர்-(அவரோடொட்புற்று) நடப்பவர். பிணமும்-சவத்தையும். வெறிதருபுனல்-கள். முடுகு-வேகம். அளை-மலைக்குகை. அயில்தரும்-உண்ணப்படும். பெறுமகவு-(தான்) பெற்ற கன்று. நிரை-வரிசையாகிய. அமுது-பாலை. மகள்-பசுவின் பெண்கன்று. வசவன்-ஆண்கன்று. உடன்-உடனே. உருகா-உருக. அடவி-காடு. உலவை-பட்டமரம். களிறுகள் பிடி

அடவி தனிலுள வலைகள் தவிர்விட
மருள மதமொடு களிறுகள் பிடியுடன்
அகல வெளியுயர் பறவைகள் நிலம்வர விறல்சேருங்

கலைகள் விடுகழை விரல்முறை தடவிய
இசைகள் பலபல தொனிதரு கருமுகில்
அருகி லுடையவ நெடியவன் மனமகிழ் மருகோனே-

துணைவ குணதர சரவண பவநிதி
முருக குருபர வளரறு முககுக
அலைவயி லலையெறி திருநக ருறைதரு பெருமாளே.

(௬௭) கனங்கள்கொண்ட குந்தளங் கறுங்குலைந்த லைந்துவிழ்ந்
தகன்கருஞ்சி கந்தயர்ந்து களிகூரக்-

கரங்களுங்கு வித்துவிஞ் சுகங்களுங்க ளித்திடுங்
கறங்குபெண்க ளம்பிறந்து விலைகூறிப்;

பொனின்குடங்க ளுங்கமென் தனங்களும்பு யங்களும்
பொருந்தியன்பு கண்டுபண்பு முடனாகப்-

புணர்ந்துடன்பு லந்துபின் கலந்தகங்கு ழைந்தவம்
புரிந்துசந்த தந்திரிந்து படுவேனோ;

அனங்கனைந்து நைந்துவெந் தழிந்துசிந்த அன்றுகண்
திறந்திருண்ட கண்டர்தந்த அயில்வேலா-

அடர்ந்தடர்ந்தெ திர்ந்துவந் தவஞ்சரஞ்சு வெஞ்சமம்
புரிந்தஅன்ப ரின்பநண்ப உரவோனே;

யுடன் மதமொடுமருள,—அகல-விரிவுடைய. உயர்-உயர்ந்த. வெளி-ஆகாயத்திலுள்ள. விடு-செய்த. விறல்-வல்லமை. கழை-மூங்கிலாலாகியகுழல். விரல்-விரலால். முறை-கிரமமாக. தடவிய-தடவப்பட்ட. இசைகள்-இசைப்பாட்டுகளின். தொனி-ஓசையை. கருமுகில்-கரியமேகம்போன்றவுருவுடைய. நெடியவன்-விஷ்ணு. துணை-எல்லாருக்குந் துணையாயுள்ளவனே. குணதர-குணங்களைத் தரித்திருப்பவனே. உருகவென்பது உருகா என நீட்டல் விகாரம்பெற்றது.

(௬௭) கனங்கள்-மேகங்களை. குந்தளம்-கூந்தல். விஞ்சி-அதிகமாக. கறங்கு-சுழல்கின்ற. பெண்கள்,—பிறந்து - உண்டாகி. விலைகூறி-(தங்களை) விலைசொல்லி. மென்-மிருதுவாகிய. புயங்களும்-(என்னுடைய) தோள்களும். உடனாக-உடனே சேரச்செய்ய. புலந்து-ஊடி. அவம்-வீண் காரியங்கள். புரிந்து;

சினங்கள்கொண்டி லங்கைமன் சிரங்கள்சிந்த வெஞ்சரந்
தெரிந்தவன்ப ரிந்தஇன்ப மருகோனே.

சிவந்தசெஞ்ச தங்கையுஞ் சிலம்புதண்டை யும்புனைந்
துசெந்திலந்த கந்தஎங்கள் பெருமாளே.

(௬௮) கொங்கைகள்கு லுங்கவளை செங்கையில்வி ளங்கஇருள்
கொண்டலையு டைந்தகுழல் வண்டுபாடக்-

கொஞ்சியவ னங்குயில்கள் பஞ்சநல்வ னங்கிளிகள்
கொஞ்சியதெ னுங்குரல்கள் கெந்துபாயும்;

வெங்கயல்மி ரண்டவிழி அம்புலிய டைந்தநுதல்
விஞ்சையர்கள் தங்கள்மயல் கொண்டுமேலாய்-

வெம்பிணியு முன்றபவ சிந்தனையி னைந்துனது
மின்சரண பைங்கழலொ டண்டஆளாய்;

சங்கமுர சந்திமிலை துந்துமிக ளும்பலவொ
டந்தனத னந்தவென வந்தசூரர்-

சங்கைகெட மண்டிதிசை யெங்கிலுமடிந்துவிழ
தண்டபடல்கொ ளுந்தநகை கொண்டவேலா;

சங்கரனு கந்தபரி வின்குருவெ னுஞ்சுருதி
தங்களின்ம கிழ்ந்துருகு மெங்கள்கோவே-

செய்து. படுவேனோ-கெடுவேனோ. உருந்து-பொடியாகி. சிந்த-சிதற. திறந்த-விழித்த. அடர்ந்து-நெருங்கி. சமம்-யுத்தம். உரவோனே-வலிமையுடையவனே. தெரிந்தவன்-ஆராய்ந்த வலிய விஷ்ணுவின். பரிந்த-அன்புற்ற. பெண்களும் என்றதில்-உம்-அசை.

(௬௮) வனம் - சோலையிலுள்ள. வனம்-வன்னம்; நிறம். எனும் - என்று சொல்லப்படும். குரல்கள்-(வார்த்தையின்) ஓசைகள். கெந்துபாயும் -பிறழும் மிரண்ட-பயந்த. அம்புலி-சந்திரன். விஞ்சையர்கள்-(மாய) வித்தையுடைய வேசையர்கள். மேலாய் - அதிகமாக. பவசிந்தனை-பிறவிக் கடலிற் கிடக்கின்ற வேதனை. மின்-பிரகாசிக்கின்ற. அண்ட-நெருங்க. ஆளாய்-ஆளுவாய். தரும்ப-ஒலிக்க. வளை-வளைந்து. என-என்றுமுழங்க. மண்டி-நெருங்கி. கொளுந்த-எரிய. நகை [illegible]ச்சிரிப்புடன். செயல்-ஒழுக்கம். சம்பு-சிவபிரான். வனக்குயில், வனக்கிளி [illegible]னை-மெலித்தல் விகாரம் பெற்றன. கொளுத்த என்பது கொளுந்த என்றும், குறப்பெண்ணென்றது குறம்பெண்ணென்றும் விகாரப்பட்டு வந்தது காண்க.

சந்திரமு கந்தெயல்கொள் சுந்தரகு றம்பெணொடு
சம்புகழ் செந்திலமகிழ் தம்பிரானே.

(௩௯) கொம்பனை யார்காது மோதிரு
கண்களி லாமோத சீதள
குங்கும பாடீர பூஷண நகமேவு-
கொங்கையி னீராவி மேல்வளர்
செங்கழு நீர்மாலை சூடிய
கொண்டையி லாதார சோலையில் மருளாதே;
உம்பர்கள் ஸ்வாமீந மோநம
எம்பெரு மானேந மோநம
ஒண்டொடி மோகாந மோநம எனநாளும்-
உன்புக ழேபாடி நானினி
அன்புட னாசார பூசைசெய்
துய்ந்திட வீணாள் படாதருள் புரிவாயே;
பம்பர மேபோல ஆடிய
சங்கரி வேதாள நாயகி
பங்கய சீபாத நூபுரி கரசூலி-
பங்கமி லாநீலி மோடிப
யங்கரி மாகாளி யோகினி
பண்டசு ராபாத சூரனொ டெதிர்போர்கள்.
வெம்புசல் வாவாழி வாழியெ
னும்படி வீறான வேல்தர
என்றுமு னானேம ஞேகர வயலூரா-
இன்சொல்வி சாகாக்ரு பாகர
செந்திலில் வாழ்வாகி யேயடி
யென்றனை யீடேற வாழ்வருள் பெருமாளே.

---

(௩௯) ஆமோதம்-மிக்கவாசனை. பாடீரம்-சந்தனம். நகமேவு-மலைபோற் பொருந்திய. நீர்ஆவி-நீர்த்தடாகம். ஆதாரசோலை-உடற்பிரகாசம். நமோநம-வணக்கம் வணக்கம். படாது-உண்டாகாமல். வேதாளம்-பூதம். நூபுரம்-காற்சிலம்புடையவள். கரசூலி-கையிலே சூலாயுதமுடையவள். நீலி-நீலநிறமுடையவள். பயங்கரி-பயத்தைத் தக்கவைப்பவள். சுராபானம்-கட்குடித்தல் உடைய. எனும்படி-என்றுசொல்லும் விதம். வீறு-கருவம். ஞானோ-திருப்பவனே. மனோகரம்-மகிழ்ச்சி. அடியென்றனை-அடியேனை. படிமென்பது யாருக்குமென்றுயிர்த்து.

(௪௰) சத்தமிகு மேழுகட லைத்தேனை
யுற்றமுது தோடகனை யைப்போர்கொள்
சத்திதனை மாவின்வடு வைக்காவி தனைமீறு-
தக்கமணம் வீசுகம லப்பூவை
மிக்கவினை வானகடு வைச்சீறு
தத்துகளும் வாளையடு மைப்பாவு விழிமாதர்;
மத்தகிரி போலுமொளிர் வித்தார
முத்துவட மேவுமெழில் மிக்கான
வச்சிரகி ரீடநிகர் செப்பான தனமீதே-
வைத்தகொடி தானமயல் விட்டான
பத்திசெய ஏழையடி மைக்காக
வச்ரமயில் மீதிலினி யெப்போது வருவாயே
சித்ரவடி வேல்பனிரு கைக்கார
பத்திபுரி வோர்கள்பநு வற்கார
திக்கிலுந டாவுபுர விக்கார சுரமாது-
சித்தஅநு ராககல விக்கார
நட்டஅசு ரேசர்கல கக்கார
சிட்டர்பரி பாலலளி தக்கார அடியார்கள்;
முத்திபெற வேசொல்வச னக்கார
தத்தைநிகர் தூயவனி தைக்கார
முச்சகர்ப ராவுசர ணக்கார இனிதான-
முத்தமிழை யாயும்வரி சைக்கார
பச்சைமுகில் தாவுபுரி சைக்கார
முத்தலைவு வேலைகர் முத்தேவர் பெருமாளே.

(௪௰) மது-வண்டு. தோடு-கூட்டமாகிய. சத்தி-வேல். மீறு-உயர்ந்த. கடு-விடம். சீறு-கோபிக்கின்ற. தத்தம்-யுத்தத்தில். துகள்-துள்ளுகின்ற. வாளை-வாளாயுதத்தை. அடும்-ஜெயிக்கும். மைப்பாவு-மைபரந்த. மத்தகம்-மதமுடைய. கிரி-யானை. வச்சிரம்-பசுமை. சித்ரம்-அழகு. பநுவல்-பாட்டு. புரவி-குதிரை. அநுராகம்-ஐக்கப்பிரியம். லளிதம்-அழகு. தத்தை-கிளி. வனிதை-தெய்வயானை. புரிசை-கோட்டை. வேலைநகர்-திருச்செந்தூர். முத்தேவர்-திரிமூர்த்திகளும். உத்தத்து-என்பது உத்தமென்றாயிற்று. உத்தம்: யுத்தம்.

(௪௧) தகரநறை பூண்ட விந்தைக்
குழலியர்கள் தேய்ந்த இன்பத்
தளருமிடை யெய்த்து நங்கத் தனமானார்
தமையமனதில் வாஞ்சை பொங்கச்
சலவியொடு சேர்த்து மந்த்ரச்
சபமெனவு சிந்தை வைத்துப் படிறாகும்
புகலரிய காந்தி சங்கத்
தமிழ்ப்பனுவ லாய்ந்து கொஞ்சிப்
புவியதனில் வாய்ந்து வஞ்சித் துழல்மூடர்
புரிதகிலி மாந்தர் தங்கட்
புகழ்பகர்தல் நீங்கி நின்பொற்
புளகமலர் பூண்டு வந்தித் திடுவேனோ;
தகுடதகு தாந்த தந்தத்
திகுடதிகு தீந்த திந்தித்
தகுகணக நாங்க ணங்கத் தனதான—
தனதனன தாந்த னந்தத்
தெனதடென பாந்த அங்கத்
தனிமயிலை யூர்ந்த சந்தத் திருமார்பா;
திகையசுரர் மாண்ட ழுந்தத்
திறலயிலை வாங்கு செங்கைச்
சிவையவரை யீன்ற மங்கைக் கொருபாலா—
திகழ்வயிர மேந்து கொங்கைக்
குறவனிதை காந்த சந்த்ரச்
சிகரமுகி லோங்கு செந்திற் பெருமாளே.

---

(௪௧) தகரநறை-மயிர்ச்சாந்தின் வாசனை. வாஞ்சை-ஆசை. த்ரிசங்கம்-முதலிடைகடையென்னுமூன்று சங்கம். தமிழ்-தமிழாகிய. பனுவல்-(ஆகுபெயர்) காமநூல். வஞ்சித்து-(பிறரை) வஞ்சகஞ்செய்து. மூடர்-அறிவில்லாதவர். (போல்) புரிதகிலி. பரிசுத்தமில்லாத அடியேன். புளகம்-மகிழ்ச்சியுடைய. திகை-திகைக்கின்ற. வாங்கு-கொண்ட. வயிரம்-வயிரத்தாலாகிய மாலை. காந்த-நாயகனே. சந்த்ரச்சிகரம்-பொன்னாலாகிய உச்சி. தேய்ந்தவென்பதை, இடையிலும். இன்பமென்பதைத் தனத்திலுமொட்டுக.

(௪௨) தண்டையணி வெண்டையங் கிண்கிணிச தங்கையுந்
தண்கழல்சி லம்புடன் கொஞ்சவேநின்—
தந்தையினை முன்பரிந் தின்பவுரி கொண்டுநன்
சந்தொடம ணைந்துநின் றன்புபோலக்;
கண்டுறக டம்புடன் சந்தமகு டங்களுங்
கஞ்சமலர் செங்கையுஞ் சிந்துவேலும்—
கண்களுமு கங்களுஞ் சந்த்ரநி றங்களுங்
கண்குளிர என்றன்முன் சந்தியாவோ;
புண்டரிக ரண்டமுங் கொண்டபகி ரண்டமும்
பொங்கியெழ வெங்களங் கொண்டபோது—
பொன்கிரியெ னஞ்சிறந் தெங்கிலும்வ ளர்ந்துமுன்
புண்டரிகர் தந்தையுஞ் சிந்தைகூர;
கொண்டநட னம்பதஞ் செந்திலிலு மென்றன்முன்
கொஞ்சிநட னங்கொளுங் கந்தவேளே.
கொங்கைகுற மங்கையின் சந்தமண முண்டிடுங்
கும்பமுனி கும்பிடுந் தம்பிரானே.

(௪௩) தெருப்புறத்துத் துவக்கியாய்
முலைக்குவட்டைக் குலுக்கியாய்
சிரித்துருக்கித் தருக்கியே பண்டைகூள மெனவாழ்—

---

(௪௨) வெண்டையம்-சிறுமணிச்சதங்கை. கழல்-பாதத்தில். சிலம்ப-சிற்றோசைசெய்ய. பரிந்து-அன்புற்று. பவுரி-நடனம். சந்தொடம்-மகிழ்ச்சி. நின்று—கண்டு-(என்னைப்)பார்த்து. உற-பொருந்த. சிந்து-வீசுகின்ற. சந்த்ரநிறம்-பொன்னாபரணத்திலொளிகளும். சந்தியாவோ-தரிசனங்கொடுக்கமாட்டாவோ. புண்டரிகர் அண்டம்-பிரமாண்டம். கொண்ட-(தன்னுட) கொண்ட. பகிரண்டமும்-(வெளிப்) பிளவுபட்ட அண்டங்களும். களங்கொண்டபோது-யுத்தகளத்திலெதிர்த்த காலத்தில். பொன்கிரி-மேருமலை. என்-என்றுசொல்ல. அம்-அந்த. முன்-பண்டைநாள். சிந்தைகூர-மனமகிழ. நடனம்கொண்டபதம்-நடனஞ்செய்த திருவடி. முன்-எதிரிலும். மண்டிடும்-அனுபவிக்கும். என என்பதில் அகரங்கெட்டு என் என நின்றது. குறமங்கைகொங்கையின் சந்தனமெனக் கூட்டுக. சந்தொடம், விகாரமொழி. நின்ற என்பதி லீற்றகரங்கெட்டது.

(௪௩) துவக்கியாய்-(காமச்செயலை) ஆரம்பிப்பவளாகி. உருக்கி-இளகச்செய்து. பண்டைகூளமென-(முன்வந்த ஆடவரைப்) பழையகுப்பையென்று

சிறுக்கிரட்சைக் கிதக்கியாய்
மனத்தைவைத்துக் கனத்தபேர்
இயக்கமுற்றுத் தவிக்கவே கண்டுபேசி யுடனே;
யிருப்பகத்துத் தனத்துமேல்
விளக்கெடுத்துப் படுத்துமே
விருத்தியைத்தப் பசப்பியே கொண்டுகாசு தணியா-
திதுக்கதுக்குக் கடப்படா
மெனக்கைக் கக்கக் கழற்றியே
யிளைக்கவிட்டுத் துரத்துவார் தங்கள்சேர்வை தவிராய்;
பொருப்பையொக்கப் பணைத்ததோ
ரிரட்டிபத்துப் புயத்தினுல்
பொருத்தபத்துச் சிரத்தினுல் மண்டுகோப முடனே-
பொரப்பொருப்பிற் கதித்தபோ
ராக்கர்பட்டுப் பதைக்கவே
புடைத்துமுட்டத் தொளைத்தமா லன்புகூரு மருகா;
வரப்பையெட்டிக் குதித்துமே
விடத்தில்வட்டத் தளத்திலே
மதர்த்தமுத்தைக் குவட்டியே நின்றுசெலி லினம்வாழ்-
வயற்புறத்துப் புவிக்குள்நீள்
திருத்தணிக்குட் சிறப்பில்வாழ்
வயத்தநித்தத் துவத்தனே செந்தில்மேவு குகனே.

(கழித்து). ரட்சைக்கு-காப்பதற்கு. இதக்கியாய்-இதஞ்செய்பவள் போன்று. கனத்தபேர்-பொருட்கனமுடையவர். அகத்து-வீட்டின். தனத்துமேல் - மேடையினிடத்தில். விளக்கெடுத்து விளக்கேற்றிவைத்து. பசப்பி-வசப்படும்படி மயக்கிப்பேசி. காசுகொண்டு-(உள்ள) திரவியத்தைவாங்கி. தணியாது-(ஆசை) குறையாமல். இதுக்கு அதுக்கு-இதன்பொருட்டு, அதன்பொருட்டு. கடப்படாம்-(நாங்கள்) கடன்படமாட்டோம். என-என்று. கைக்கக - (கையிலுள்ள மோதிரத்தைக்) கைவிரல்கள் தா. கழற்றி,—சேர்வை-கலப்பு. பணைத்தது-பருத்ததாகிய. பொர-(இராவணன்) யுத்தஞ்செய்ய. பொருப்பின்-மலையைப் போலும். கதித்த-ஓங்கிய. முட்ட-முழுவதும். வரப்பை-வரப்பில். தளம்-தாமரைமலரிதழ். மதர்த்த-சாரப்புடைய. குவட்டி-(சாற்பரியம்) [illegible]. புவிக்குள்-நிலத்துக்குள்ளில். சிறப்பில்-சிறப்புடன். வயத்த-வெற்றியையுடையவனே. நித்தத்துவத்தனே-தத்துவக்கூட்டங்கள் நீங்கினவனே. தனித்தனி கூறும்போது-துவத்த குறுக்கியென ஒருமையாகவும் சேர்த்துச் சொல்லும்போது அநாத்துவாவெனப் பன்மையாகவுங் கூறினார்.

(௪௪) தொந்திசரிய மயிரே வெளிறநிரை
தந்தமசைய முதுகே வளையஇதழ்
தொங்கவொருகை தடிமேல் வரமகளிர் நகையாடி-
தொண்டுகிழவ னிவனு ரெனஇருமல்
கிண்கிணெனமு னுரையே குழறவிழி
துஞ்சுகுருடு படவே செவிடுபடு செவியாகி;
வந்தபிணியு மதிலே மிடையுமொரு
பண்டிதனுமெ யுறுவே தனையுமிள
மைந்தருடைமை கடனே தெனமுடுக துயர்மேவி-
மங்கையழுது விழவே யமபடர்கள்
நின்றுசருவ மலமே யொழுகவுயிர்
மங்குபொழுது கடிதே மயிலின்மிசை வ[illegible]
எந்தைவருக ரகுநா யகவருக
மைந்தவருக மகனே யினிவருக
என்கண்வருக எனதா ருயிர்வருக அபிராம-
இங்குவருக அரசே வருகமுலை
யுண்கவருக மலர்சூ டிடவருக
என்றுபரிவி னொடுகோ சலைபுகல வருமாயன்;
சிந்தைமகிழு மருகா குறவரிள
வஞ்சிமருவு மழகா அமரர்சிறை
சிந்தஅசுரர் கிளைவே ரொடுமடிய அடுதீரா-
திங்களரவு நதிசூ டியபரமர்
தந்தகுமர அலையே கரைபொருத
செந்திநகரி லினிதே மருவிவளர் பெருமாளே.

(௪௫) தோலொடு மூடிய கூரையை நம்பிப்
பாவையர் தோதக லீலையி லம்பிச்
சூழ்பொருள் தேடிட வோடிவ ருந்திப் புகுதான-

(௪௪) தொந்தி-வயிறு. வெளிற-வெளுக்க. இதழ்-உதடு. தொண்டுகிழவன்-பழங்கிழவன். துஞ்சு-உறங்குகின்ற. செவியாகி-சமயம் ஆக. மிடையும்-நெருங்கும். பண்டிதனும்-வயித்தியனும். வேதனையும்-துன்பமும் (வர). இளமைந்தர்-சிறுபிள்ளைகள். உடைமை-இருப்புச்சொத்து. முடுக-விரைந்துகேட்க. சருவ-கிட்டவர. அபிராம-அழகுடையவனே. பரிவு-அன்பு.

(௪௫) கூரை-சிறுவீடாகிய தேகம். தோதகம்-வஞ்சகம். அம்பி-வரு

தோலொடு நாண்மலி மாமிசப் பந்தக்
கோவையு லாமடல் கூறிய முந்தித்
தோமுறு காலியர் வாசலிற் றாழ்ந்து கலமாரும்;

காலனை வீணனை நீடிகல் வெம்பொய்க்
கோளனை மாமடி லாவழி நெஞ்சக்
காதக லோபவ்ரு தாவனை நிந்தைப் புலையனைக்-

காரண காரிய லோகப்ர பஞ்சச்
சோகமெ லாமற வாழ்வுற நம்பிக்
காசறு வாரிமெய்ஞ் ஞான தவஞ்சற் றருளாதோ;

பாலன மீதும னான்முக செம்பொற்
பாலனை மோதப ராதன பண்டப்
பாரிய மாருதி தோள்மிசை கொண்டுற் றமராடி-

பாவியி ராவண னார்தலை சிந்திச்
சீரிய வீடணர் வாழ்வுற மன்றற்
பாவையர் தோள்புணர் மாதுலர் சிந்தைக் கினியோனே;

சீலமு லாவிய நாரதர் வந்துற்
றீதவள் வாழ்புன மாமென முந்தித்
தேமொழி பாளித கோமள இன்பக் கிரிதோய்வாய்-

சேலொடு வாளைவ ரால்கள் கிளம்பித்
தாறுகொள் பூகம ளாவிய இன்பச்
சீரலை வாய்நகர் மேவிய கந்தப் பெருமாளே.

---

௪௫. தோம்-குற்றம். அலமாரும்-சுழலும். காலனை - யமன்போன்ற என்னை. காதகம்-கொலை. வாழ்வு-மோக்ஷஇன்பம். நம்பில்-விரும்பினால். காசு-குற்றம். வாரி - கடல்போன்ற. சற்று-கிஞ்சித்து. பால் - வெள்ளிய. மன் - பொருந்திய. செம்பொற்பாலனை - சிவந்தபொன்னிறமுள்ள குழந்தையாகிய பிரமனை. அபரா-பிணக்குடையவனே. தன-(சிவஞானச்)செல்வமுடையவனே. அ-அந்த. பாரிய-பருத்த. மிசைகொண்டு-மேலேறிக்கொண்டு. மன்றல்-விவாகஞ்செய்த. பாவையர்-சீதையார். மாதுலர்-மாமனாகிய விஷ்ணு. ஈது-இவ்விடம். தேமொழி-(அன்மொழித்தொகை) வள்ளிநாயகி. பாளிதம்-கருப்பூரங்கலந்த சந்தனம். கோமளம்-இளமை. கிரி-மலைபோலுந்தனத்தை. கிளம்பி-மேலெழுந்து. தாறு-காய்க்குலை. பூகம்-கமுகமரம். அலமருமென்பது, அலமாருமென நீண்டது.

(௪௬) நாலு மைந்து வாசல் கீறு தூறு டம்பு கால்கை யாகி
நாறி யென்பி லாரு மாக மதனூடே-

நாத மொன்று ஆதி வாயில் நாட கங்க ளான ஆடி
நாட கந்தி டாம லேக வளராமுன்;

நால நந்த கோடி தேடி மால்மி குந்து பாரு ளோரை
நாறு செஞ்சொல் கூறி மாறி வினைதீமை-

நோய்க லந்த வாழ்வு றாமல் நீக லந்து வாகு ஞான
நூல டங்க வோத வாழ்வு தருவாயே;

காலன் வந்து பால னாவி காய வென்று பாசம் வீசு
காலம் வந்து வோல மோல மெனுமா-

காம னைந்து பாண மோடு வேமி னென்று காணு மோனர்
கால கண்ட ரோடு வேத மொழிவோனே;

ஆல மொன்று வேலை யாகி யானை யஞ்சல் தீரு மூல
ஆழி யங்கை ஆயன் மாயன் மருகோனே-

ஆர ணங்கள் தாளை நாட வார ணங்கை மேவு மாதி
யான செந்தில் வாழ்வ தான பெருமானே.

(௪௭) நிதிக்குப் பிங்கலன் பதத்துக் கிந்திரன்
நிறத்திற் கந்தனென் றினைவோரை-

நிலத்திற் றன்பெருந் பசிக்குத் தஞ்சமென்
றாற்றித் துன்பநெஞ் சினில்நாளும்;

---

(௪௬) நாலுமைந்து-ஒன்பது. வாசல்-துவாரம். கீறு-பிளக்கின்ற. தூறு-பழிச்சொற்கிடமாகிய. நாறி-(கெட்ட) நாற்றத்தையுடைய. நாதம்-ஒலி. ஆதிவாயில்-மூலாதாரவாயில். வளராமுன்-வளர்தற்குமுன். மால்-ஆசை. சொல் (ஆகுபெயர்) பாட்டு. கூறி-பாடி. மாறி-(நல்வினை) நீங்கப்பட்டு. அடங்க-முழுதும். எனும்-என்றுசொல்லப்படும். ஆதி-முதல்வராகிய. மோனர் - சனகாதியருக்கு (அருள்செய்ய) மௌனத்தை யுடையவராகிய. காளகண்டரோடு-நீலகண்டத்தையுடைய சிவபெருமானுக்கு. ஆலம்ஒன்று-விடம்பொருந்திய. வேலைஆழி-கடல்போன்ற உடலையுடையவிஷ்ணு. அஞ்சல்-பயம். ஆயன்-இடையனாகிய. வாரணம்-கோழிக்கொடி. நாலுமென்பதில். உம்-அசை. பாலன் ஓலமெனுமெனக் கூட்டுக.

(௪௭) பிங்கலன்-குபேரன். பதத்துக்கு-பதவிக்கு. இனைவோரை-வருந்துகின்ற மனிதரை. ஆற்றி-சொல்லி. துன்பம்-துன்பத்தையுடைய. சஞ்சல-

புகழ்ச்சொற் சங்கமா னிணைந்துச் சங்கடம்
புகட்டிக் கொண்டிடம் பழிமாயும்;
புலத்திற் சஞ்சலங் குலைந்திட் டுன்பதம்
புணர்க்கைக் கன்புதந் தருள்வாயே;
மதித்துத் திண்புரஞ் சிரித்துக் கொன்றிடு
மறத்திற் றந்தைமன் றினிலாடி-
மழுக்கைக் கொண்டசங் கரற்குச் சென்றுவந்
தமிழ்ச்சொற் சந்தமொன் றருள்வோனே;
குதித்துக் குன்றிடத் தலத்துச் செம்பொனுங்
கொழித்துக் கொண்டசெந் திலில்வாழ்வே-
குறப்பொற் கொம்பைமுன் புனத்திற் செங்கரங்
குவித்துக் கும்பிடும் பெருமாளே.

(௪௮) படர்புவியின் மீது மீறி வஞ்சர்கள்
வியனுரை பகர்ந்து வாய்வி யந்துரை
பழுதில்பெரு சீல நூல்கள் தெரி சங்கபாடல்-
பனுவல்கதை காவ்ய மாமெ ணெண்கலை
இருமொழிவ தேவர் வாய்மை யென்கிற
பழமொழியை யோதி யேயு ணர்ந்துபல் சந்தமாலை;
மடல்பரணி கோவை யார்க லம்பக
முதலினவு கோடி சோர்வி பந்தமும்
வகைவகையி லாசு சேர்பெ ருங்கவி சண்டவாயு-
மதுரகவி ராஜ னானெ னுங்குடை
விருதுகொடி தாள மேள தண்டிகை
வரிசையொடு லாவு மால கந்தைத விர்ந்திடாதோ;

கூட்டத்தை. இசைந்து-சேர்ந்து. சங்கடம்-வருத்தமாக. புகட்டி (பிறர்காதுகளில்) அழுத்தமாகக்கூறி. அழி-கெட்டு. புலத்தில்-இடத்தில். புணர்க்கைக்கு-சேர்த்தலுக்கு. மறத்தின்-வீரத்தையுடைய. குன்று-மகாமேருமலையை. இடித்து-கிழித்து. கொழித்து-இட்டி-கொண்டவாழ்வேயென முடிக்க.

(௪௮) படர்-விரிந்த. மீறி-வளர்ந்து. வஞ்சர்கள்-பொய்யர்களது. வியனுரை-பெருமையுடைய புகழை. பாதுவாய்-அழகாக. வியந்து-புகழ்ந்து பேசி. உரைபழுதில்-சொற்குற்றமில்லாத. தெரி-தெளியப்பட்ட. உன்று-உள்ளதாகி. வகைவகையில்-விதவிதமாக. ஆசு-விரைவாகப்பாடுதல். நானென்-நானென்

அடல்பொருது பூசலேவி ளைந்திட
எதிர்பொரவொ ணாமலேக சங்கர
அரகர சிவாம காதெ வென்றுனி அன்றுசேவித்-
தவனிவெகு கால மாய்வ ணங்கியு
ளுருகிவெகு பாச கோச சம்ப்ரம
அதிபெல கடோர மாச லந்தர னொந்துவீழ;
உடல்தடியு மாழி தாவெ னம்புய
மலர்கள்தச நாறு தாளி டும்பக
வொருமலரி லாறு கோவ ணிந்திடு செங்கண்மாலுக்-
குதவியமகேசர் பால இந்திரன்
மதலைமண மேவி வீறு செந்திலி
லுரியஅடி யேனை யாள வந்தருள் தம்பிரானே.

(௪௯) பாத நூபுரம் பாடகஞ் சேர்ந்துகொள்நடை
போதி மோகுலம் சேர்வசம் போகமொடு
பாடி பாளிதங் காருகம் பாவையிடை வஞ்சிபோல-
பாகு பால்குடம் போலிரண் டானகுவ
டாட நீள்வடஞ் சேரலங் காரகுழல்
பாவ மேகபொன் சாபமிந் தேபொருவ ரந்தமீதே;

து. மால்-மயக்கமுடைய. அகந்தை-செருவம் அடல்-பலத்தால். ஏக-ஒப்பற்றவனே. உனி-நினைத்து. அவனி-பூமியில். பாசகோசம்-அன்புடைய செல்வம். சம்ப்ரமம்-மகிழ்ச்சி. கடோரம்-கொடுமை. மா-பெரிய. சலந்தரன்-சலந்தராசுரன். ஆழி-சக்கரம். தாவென்-அருளென்று. தசநூறு-ஆயிரம். பகல்-நாளில். கோ-கண்ணை. அணிந்திடு-(குறைந்தவொருமலருக்குப் பிரதிநிதியாகச்) சாத்துகின்ற. வீறு-பெருமையுடைய. வியந்து நானென வுலாவுமகந்தையெனக் கூட்டுக. நான்என-என்பது நானென்என அகரங்கெட்டது. தேவென்றென்பது தெவென்றென முதலிற் குறுகின்றது. தாவென என்பதும் தாவென்என அகரங்கெட்டது.

(௪௯) பாதம்-காலின். நடை-நடையானது ஓதிமோகுலம்போல-அன்னப்பறவையின் கூட்டத்தைப்போலாக. சம்-நல்ல. போகமொடு-செல்வத்தையுடைய. பாடி-பட்டினத்திலுள்ள. பாளிதம்-பட்டுச்சேலையின். காருகம்-(தாற்பரியம்) நூலில். பா ஐ-பரந்த அழகையுடைய. வஞ்சிபோல-வஞ்சிக்கொடியையொப்பாக. குவடு-கொங்கைகள். பாகுபால்குடம்-தேன்பாகும்பாலும் நிறைந்தகுடங்களை. போல்-ஒப்பாக. ஆட-அசைய. நீள்வடம்-நீண்ட முத்துச்சரம். பாஅம்பரந்திருண்ட. மேகம்-மேகத்தைப்(போல). பொன்சாபம்-இந்திரதநுசு. இந்

மாதர் கோகிலம் போல்சரும் பானமொழி
தோகை வாகர்கண் டாரைகொண் டாடிநகை [போல்-
வாரும் வீடேயென் றேநிதம் பாயல்மிசை யன்புளார்

வாச பாசகஞ் சூதுபந் தாடஇழி
சேர்வை பாயசிந் தாருகொஞ் சாரவிழி
வாரு தோள்கரஞ் சேர்வைதந் தாடுமவர் சந்தமாமோ;

தீத தோதகந் திந்திந் தோதிதிதி
டிடு டுடுடின் டுடுடின் டுடுடு
டகுடகுகம் போலவொண் பேரிமுர சங்கள்வீற-

சேடன் மேருவுஞ் சூரனுந் தாருகனும்
வீழ வெழ்நடந் தாளிகொண் டாடமரர்
சேசெ சேசெயென் றாடநின் றாடிவிடு மங்கிவேலா;

நாதை காதிலங் கோதசிப் காரமுக
மாறும் வாருவுங் கூப்சந் தானசுக
நாரி மார்பலங் காரியென் பாலவளி யெங்கள்மாதை-

தாரு பாளிதஞ் சோரசிந் தாமணித
ளாட வேடுளாந் நாடிவங் காரமொடு
தாழை வானுயர்ந் தாடுசெந் தூரிலுறை தம்பிரானே.

தே-(தெற்றியாகிய) பிறைச்சந்திரனையே. பொருவர்-ஒப்பாகப்படுவோராகிய. மீதேயந்தமாதர்-மேலேயழகுள்ளபெண்கள். தோகைவாகர்-மயில்போன்ற அழகியபெண்கள். தாரை கண்கொண்டு-கூரியகண்களால். ஆடி-வென்று. நகுதி-நகுதியையுடையவரோ. வீடே-வீட்டினிடத்தே (கொண்டுபோய்). பாசகம்-(கச்சுக்கட்டும்) கயிற்றினையுடைய. சூதுபந்து - சூதாடு கருவியும் பந்தும்போன்ற கொங்கையால். ஆட-விளையாட. பாயசிந்தாரு-பரவிய கடலாகப்படு. கொஞ்சு ஆர-கொஞ்சுதல் பொருந்த. வாரு-அழகிய. சேர்வைதந்து-அணைத்தலைச்செய்து. ஆடும்-புணரும். அவர்-அவ்விருவகையாகிய வேசையர். சந்தம்-அழகு. வீற-பெருமுழக்கஞ்செய்ய. எழ்-எழுகின்ற. நடம்-விசாலமாகிய. அங்கி-அக்கினி போன்ற. கூப-பூரிக்க. சந்தான-தொடர்ச்சியாகிய. சுகதாரி-சுகத்தைத்தரித்திருப்பவளாகிய. என்-என்று சொல்லப்பட்ட. வளி-வள்ளிநாயகி. தாரு-மாலை. பாளிதம்-பட்டுச்சேலை. வங்காரம். செப்பம்; ஒழுங்கு. ஓதிமகுலம்-சக்கரவாக்கி ஓதிமோகுல மென்றாயது. போல என்பது போலென நின்றது. போல்-உரையசை. வீடே யென்பது வீடெயென நின்றது. பாசகம் என்பதில், க. பிரத்தியோகம். தாரு என்பதில், உ. சாரியை.

(௩௰) பெருக்கச்சஞ் சலித்துக்கந்
தலுற்றுப்புந் தியற்றுப்பின்
பிழைப்பற்றுங் குறைப்புற்றும் பொதுமாதர்-

ப்ரியப்பட்டங் கழைத்துத்தம்
கலைக்குட்டங் கிடப்பட்சம்
பிணித்துத்தந் தனத்தைத்தந் தணையாதே;

புரக்கைக்குன் பதத்தைத்தந்
தெனைக்குத்தொண் டிறப்பற்றும்
புலத்துக்கண் செழிக்கச்செந் தமிழ்ப்பாடும்-

புலப்பட்டங் கொடுத்தற்குங்
கருத்திற்கண் படக்கிட்டும்
புகழ்ச்சிக்குங் க்ருபைச்சித்தம் புரிவாயே;

தருக்கிக்கண் களிக்கத்தெத்
தளிட்டுத்தன் புனத்திற்செங்
குறத்திக்கன் புறச்சித்தந் தளர்வோனே-

சலிப்புற்றங் குரத்திற்சம்
ப்ரமித்துக்கொண் டலைத்துத்தன்
சமர்த்திற்சங் கரிக்கத்தண் டியசூரன்;

சிரத்தைச்சென் றறுத்துப்பந்
தடித்துத்திண் குவட்டைக்கண்
டிடித்துச்செந் திலிற்றங்குங் குமரேசா-

சிறக்கற்கஞ் செழுத்தத்தந்
திருச்சிற்றம் பலத்தத்தன்
செவிக்கப்பண் புகச்செப்பும் பெருமாளே.

(௩௰) கந்தல்-நைதல். குறைப்புற்றும்-அவமதிக்கப்பட்டும். கலை-சேலையுடைய அரை. பட்சம்-அன்பால். பிணித்து-கட்டி. புரக்கைக்கு-இரட்சிக்கற்கு. தொண்டு-அடிமை. புலத்துக்கண்-ஞானக்கண். புலப்பட்டம்-புலவனென்கிற பட்டப்பெயர். கருத்தில்-மனத்தில். கண்பட-தரிசிக்க. கிட்டும்-அணுகும். உரத்தில்-புயவலியால். சம்ப்ரமித்து-மகிழ்ந்து. சமர்த்தில்-சாமர்த்தியத்தால். தண்டிய-நெருங்கிய. சிறக்கற்கு-சிறப்படைதற்கு. அத்தம்-பொருளே.

(௫௧) மஞ்செ ஞங்குழ லும்பிறை யும்புரு
வங்க ளொன்சிலை யுங்கணை யங்கயல்
வண்டு புண்டரி கங்களை யும்பழி சிந்துபார்வை.

மண்ட லஞ்சுழ லுஞ்செவி யங்குழை
தங்க வெண்டர ளம்பதி யும்பலு
மண்ட லந்திக ழுங்கழு சஞ்சிறு கண்டமாதர்;

கஞ்சு கங்குர லுங்கழை யம்புய
கொங்கை செங்கிரி யும்பவ ளம்பொறி
கந்த சந்தன மும்பொலி யுந்துகில் வஞ்சிசேரும்

கஞ்ச மண்டினி னின்றிர சம்புகு
கம்ப டர்ந்திட ரம்பையெ னுந்தொடை
கண்கை யஞ்சர ணஞ்செயல் வஞ்சனை நம்புவேனோ;

சஞ்ச கஞ்சக ணஞ்சக டுண்டுடு
டுண்டு டிண்டிமி டண்டம டுண்டுடு
தந்த னந்தன திந்திமி சங்குகள் பொங்குகாரை

சம்பு வின்கும ரன்புல வன்பொரு
கந்த னென்றிடு துந்துமி யுந்துவ
சங்க ளங்கொளி ருங்குடை யுந்திசை விஞ்சவேகண்;

டஞ்ச வஞ்சசு ரன்றிர ளுங்குவ
டன்ற டர்கனும் வெந்துபொ ரிந்திட
அண்ட ரிந்திர னஞ்சர ணம்புக வென்றவேளே.

---

(௫௧) மஞ்சு-மேகம். பிறையும்-மூன்றாம்பிறைச் சந்திரன்போன்ற நெற்றியும். புண்டரிகம்-தாமரை. பழிசிந்து-சிந்தித்துச் சொறுகின்ற. பார்வை-கண்கள். மண்டலம்-பூவுலகத்திலுள்ளார். தங்க குழை-பொற்குண்டலமும். மங்கலம்-மண்ணிடத்து. கண்டம்-கழுத்தும். மாதர்-அழகிய. கம்-ஆகாயத்திற் பறக்கின்ற. சகம்குரலும்-இனிமொழி போன்ற சொல்லும். கழை-கரும்புபோன்ற. அம்புயம்-அழகிய கையும். பவளம்பொறி-(அக்கொங்கையில்) பவளக்கொடி பெழுதிய. பொலியும் துகில்-விளங்கும் சேலையுடைய. வஞ்சி-வஞ்சிக்கொடிபோலும் இடையும். கஞ்சம்அண்டுஉளின்- நீர்நெருங்கிய இடத்தில். இரசம்புகு-(பழத்தின்) இனிமைபுகுந்த. கன்-பெருமை. படர்ந்திடு-விரிந்த. அரம்பை-வாழை. தொடையும்-தொடைகளும். சேரும்-பொருந்தும். கண்-கருதப்படு. கை-கைகளால். அஞ்ச-பயப்பட. ரணம்செயல்-(அடித்துப்) புண்செய்தலையுடைய. வஞ்சனை-வஞ்சகத்தையுடைய வேசையரை. தாரை-சின்னம்.

அம்பு யந்தனி ரம்பைகு றிஞ்சியின்
மங்கை யங்குடில் மங்கையொ டன்புடன்
அண்ட ருந்தொழு செந்திலி லன்புறு தம்பிரானே.

(௫௨) மாய வாடைதி மிர்ந்திடு கொங்கையில்
மூடி சேலைதி றந்தம ழுங்கிகள்
வாசல் தோறுந டந்துசி ணுங்கிகள் பண்டையோர்மேல்.

வால நேசநி னைந்தழு வம்பிகள்
ஆசை நோய்கொள்ம ருந்திடு சண்டிகள்
வார பேர்பொருள் கண்டுவி ரும்பிக ளெவரேனும்;

*நேய மேகவி கொண்டுசொல் மிண்டிகள்
காசி லாதவர் தங்களை யன்பற
நீதி போலநெ கிழ்ந்தப றம்பிக ளவர்தாய்மார்.

நீலி நாடக மும்பயில் மண்டைகள்
பாளை பூசுக ளுண்டிடு தொண்டிகள்
நீச ரோடுமி ணங்குக டம்பிக ளுறவாமோ;

பாயு மாமத தந்திமு கம்பெறு
மாதி பாரத மென்றபெ ருந்தனை
பார மேருவி லன்றுவ ரைந்தவ னிளையோனே.

பாவை யாள்குற மங்கைசெ ழுந்தன
பார மீதில ணைந்துமு யங்கிய
பாக மாகிய சந்தன குங்கும மணிமார்பா;

துவசங்கள்-கொடிகள். விஞ்சவே-மிகவே. அஞ்ச-(தன்சேனை) பயப்பட. அஞ்ச-(தானும்) பயப்படு. அசுரன்-சூரன். அம்புயம்-தாமரை மலரிலுள்ள. தண் அரம்பை-குளிர்ந்த தெய்வப்பெண்போலும். அம்-அழகிய. குடில்மங்கை-ஆகாயத்திலுள்ள பெண்ணாகிய தெய்வயானை. குடிலமென்பது அம், கெட்டுக் குடில் என நின்றது. சேரும் வஞ்சனையெனக் கூட்டுக.

(௫௨) மாயவாடை-மயக்கஞ் செய்கின்ற களபச்சந்தனம். திமிர்ந்திடு-பூசுகின்ற. மழுங்கிகள்-மான மற்றவர்கள். வாலநேசம்-இளமைப் பருவத்துச் சிநேகம். வார-(மருவ) வருகிற. கவிகொண்டு-பாடலால். மிண்டிகள்-தடிச்சிகள். பறம்பிகள்-புலைச்சிகள். நீலிநாடகம்-வஞ்சகநடிப்பு. தொண்டைகள்-கட்குடிச்சிகள். கடம்பிகள்-ஒருவகையிழிந்த சாதிப்பெண்கள். சேயம்-சேஷ்டம்? அந்நேசன்-இரணியன். இட்டு-பிளந்து. கோடசேகரம்-மகுடமணிந்த

சீய மாயுரு வங்கொடு வந்தசு
ரேசன் மார்பையி டந்தய சுங்குடர்
சேர வாரிய ணிந்தகெ டும்புயல் மருகோனே-

தேறு லாவுக டம்பம ணிந்தணி
நீட சேகர சங்கரர் தந்தருள்
தேவநாயக செந்திலு கந்தருள் பெருமாளே.

(௩௫) முகிலாமெனு மளகங் காட்டி
மதிபோலுயர் நுதலுங் காட்டி
முகிழாகிய நகையுங் காட்டி அமுதான-

மொழியாகிய மதுரங் காட்டி
விழியாகிய கணையுங் காட்டி
முகமாகிய கமலங் காட்டி மலைபோலே;

வகையாமிரு முலையுங் காட்டி
யிடையாகிய கொடியுங் காட்டி
வளமானகை வளையுங் காட்டி யிதமான-

மணிசேர்கடி தடமுங் காட்டி
மிகவேதொழி லதிகங் காட்டி
மடமாதர்கள் மயலின் சேற்றி லுழல்வேனோ;

நகையால்மத னுருவந் தீத்த
சிவனாரருள் சுதனென் றார்க்கு
நலனேயரு ளமர்செந் தூர்க்கு றுறைவோனே-

நவமாமணி வடமும் பூத்த
தனமாதெனு மிபமின் சேர்க்கை
நழுவாவகை பிரியங் காட்டு முருகோனே;

அகமேவிய நிருதன் போர்க்கு
வரவேசமர் புரியுந் தோற்ற
மறியாமது மையயங் காட்டு முறைகூறி-

அயிராவத முதுகின் தோற்றி
யடையாமென இனிதன் பேத்து
மமரேசனை முழுதுங் காத்த பெருமாளே.

(௩௬) மூளும்வினை சேர மேல்கொண்டி டாவைந்து
பூதவெகு வாய மாயங்கள் தானெஞ்சில்
மூடிகெறி நீதி யேதுஞ்செ யாவஞ்சி யதிபார-

மோகவினை வான போகஞ்செய் வேனன்டர்
தேடஅரி தாய ஞேயங்க ளாய்நின்ற
மூலபர யோக மேல்கொண்டி டாதின்ற துணைதாவி;

நாளுமதி வேக கால்கொண்டு தீமண்ட
வாசியன லூடு போயொன்றி வானின்க
ளூமமதி மீதி லூறுங்க லாஇன்ப அமுதூறல்-

நாடியதன் மீது போய்நின்ற ஆநந்த
மேலைவெளி யேறி நீயின்றி நானின்றி
நாடியினும் வேறு தானின்றி வாழ்கின்ற தொருநாளே;

காளவிட மூணி மாதங்கி வேதஞ்சொல்
பேதைநெடு நீலி பாதங்க ளால்வந்த
காலன்விழ மோது சாமுண்டி பாரம்பொ டனல்வாயு-

தலைமையுடைய-பெருமானென்பது, வரைந்தவனென்பதேயே முடியும். வருகிறனென்பது- வார என மருஉ வழக்காயிற்று.

(௩௫) அளகம்-கூந்தல் முகிழ்-(முல்லை) யரும்பு. மணி-மேகலாபரணம். கடிதடம்-அல்குல். மிகவே-(அளவுக்கு) மிஞ்சும்படி. நகை-புன்சிரிப்பு. தீத்த- சுட்ட. இபமின்-தெய்வயானை. நழுவாவகை-வழுவாவிதம், அகம்- (யுத்தகளத்தில்) விடத்தில். நிருதன் - அரக்கரின்சூரன். அறியாமதும் - திருவனை;

சொல்லாமலும். அயிராவதம்-வெள்ளையானை. அடை-இரசவருக்கம். இனிது- இனிமையுடன். அன்பு-அன்பால்.

(௩௬) வினை-தீவினைகள். சேர-ஒருமிக்க. மேல்கொண்டு-அதிகப்பட்டு. ஐந்துபூத-மெய், வாய், கண், மூக்கு, செவியென்கிற பஞ்சபூதங்களால். வெகுவாய-பலவாகிய. ஏதும்-ஒன்றும். வஞ்சி-பெண்கள். ஞேயம்-ஞானத்தினால் அறியப்படுபொருள். மூலபரயோகம்-ஆதியாகிய ஞானயோகத்தை. மேல்கொண்டிடாதின்று-மேலாகக்கொண்டுநின்று. துணைதாவி-அத்தன்மையையுடையதாகி. கால்கொண்டு-பிராணவாயுவால். தீமண்ட-வெப்பம் நெருங்க. வாசி-(சுழுமுனைநாடியின்) சுவாசம். வானின்கண்-சிதாகாசத்தினிடத்து. காமமதி-பெருமைதங்கிய சந்திரமண்டலம். மீது-மேலே. மேலைவெளி - பண்டைத் துவாத சாந்தத்தலம். நீயின்றி நானின்றி-இரண்டறக் கலந்து. இதும்வேறு

காதிமுதிர் வான மேதங்கி வாழ்வஞ்சி
ஆடல்விடை யேறி பாகங்கு லாமங்கை
காளிநட மாடி நாளன்பர் தாம்வந்து — தொழுமாது;
வாளமுழு தாளு மோர்தண்டு மாய்தங்கு
சோதிமணி மார்ப மாலின்பி னானிகன்சொல்
வாழுமுமை மாத ராள்மைந்த னேயெங்கை யினையோனே.
மாசிலடி யார்கள் வாழ்கின்ற வூர்சென்று
தேடிவினை யாடி யேயங்கு னேநின்று
வாழுமயில் வீர னேசெந்தில் வாழ்கின்ற — பெருமாளே.

(௫௫) வஞ்சங்கொண் டுந்திட ராவண
னும்பர்த்தெந் திண்பரி தேர்கரி
மஞ்சின்பண் புஞ்சரி யாமென — வெகுசேனை;
வந்தம்பும் பொங்கி யதாகவெ
திர்ந்துந்தன் சம்பிர தாயமும்
வம்புந்தும் பம்பல பேசியு — மெதிரேசை;
மிஞ்சென்றுஞ் சண்டைசெய் போதுகு
ரங்குந்துஞ் சுங்கனல் போலவெ
குண்டுங்குன் றுங்கர டார்மர — மதும்வீசி.
மிண்டுந்துங் கங்களி லலைத
கர்ந்தங்கம் கங்கர மார்பொடு
மின்சந்துஞ் சிந்திநி சாசரர் — வதைசேர;

சாவின்றி-இதற்குமேலுந் தானென்பதொருபொருளில்லாமல். வாணி-உண்டவன். பார்-பூமி. அம்பு-நீர். காதி-மோதி. வானம்-ஆகாயம். தங்கி-பதிந்து. வாழ்-வாழ்கின்ற. நாள்-தினமும். வாசம்-வனவாகிய உலகம். பினுள்-தங்கை. எந்தை-எங்கள் பிதாவாகிய.

(௫௫) திட-வலிய. பந்தனென்-தாவுதலில் பந்தென்று சொல்லப்படும். திண்-வலிய. பரி-குதிரை. கரி-யானை. மஞ்சின்-மேகத்தின். பண்பும்-தன்மையும். அம்பும்-(சமுத்திர) சலமும். ஆக-போல. சை-(தன்) படை. குரங்கும்-வானரவீரர்களும். துஞ்சும்-கொல்லும். வெகுண்டு-கோபித்து. கரடு-வயிரம். மிண்டும்-நெருங்கும். துங்கம்-வெற்றி. தகர்ந்து-உடைபட்டு. சம்-தலை. மின்-பிரகாசிக்கின்ற. சந்து-தொடை. சிந்தி-சிதறி. நிசாசரர்-அரக்கர். வதைசேரவு

வஞ்சகண்டன் றென்றிசை நாடிவி
ழுந்தங்குஞ் சென்றெம தூதர்க
ளுந்துந்துந் தென்றிட வேதசை — நிணமூளை;
யுண்டுங்கண் டுஞ்சில கூளிகள்
டிண்டிண்டென் றுங்குதி போடவு
யர்ந்தம்புங் கொண்டுவெல் மாதவன் — மருகோனே;
தஞ்சந்தஞ் சஞ்சிறி யேன்மதி
கொஞ்சங்கொஞ் சந்துரை யேயருள்
தந்தென்றன் பந்தரு வீடது — தருவாயே.
சங்கங்கஞ் சங்கயல் சூழ்தட
மெங்கெங்கும் பொங்கம காபுனி
தந்தங்குஞ் செந்திலில் வாழ்வுயர் — பெருமாளே.

(௫௬) வந்து வந்து முன்ற வழ்ந்து
வெஞ்சு கந்த யங்க நின்று
மொஞ்சி மொஞ்சி [illegible]ன்ற ழுங்கு — ழந்தையோடு.
மண்ட லங்கு லுங்க அ[illegible]டர்
விண்ட லம்பி ளங்கெ ழுந்த
செம்பொன் மண்ட பங்க ளும்ப — யின்றவீடு;
கொந்த விழ்ந்த குந்த ளந்த
ழைந்து குங்கு மந்த யங்கு
கொங்கை வஞ்சி தஞ்ச மென்று — மங்குகாலம்.

ம்-பிரிவுபட்டுப் போகவும். விழுந்து-குதித்து. உந்துஉந்து-தள்ளுதள்ளு. கூளிகள்-பேய்கள். தஞ்சம்-அடைக்கலம். என்று-எக்காலம். கஞ்சம்-தாமரை. பொங்க-அதிகப்பட. கூளிகள் குதித்தெனக் கூட்டுக. இப்பாட்டில் அசையாக வந்தஉம் பலவற்றையும் பொருள்நோக்கிக்கண்டு கொள்க.

(௫௬) வெம்-விருப்பம். சுகம்-இன்பம். மொஞ்சி-(ஆகுபெயர்) முலைப்பால். கொந்து-பூங்கொத்து. அளைந்த-கலந்த. குந்தளம்-கூந்தல். வஞ்சி-வஞ்சிக்கொடிபோலு மனைவி. கொங்கு-கோங்கு. அடம்பு-ஓர்விதக்கொடி மலர். கொங்கு-வாசனை. கொஞ்சு-முழங்குகின்ற. பங்கயம்-தாமரை மலர்போலுந் திருவடிகள். சந்து-சந்தனமரத்துடன். அரும்பு-உண்டாகின்ற. மந்தாரம்-மந்தாரம். கச்சரம்பை-இளங்கோடுகூடிய வாழை. செண்பதம்-சேண் இடம். கொள்-(தாற்பரியம்) அடைகின்ற-கடம்-காடு. தந்து-ஒத்து. இன்சொல்-இனியவார்த்

கொங்கடம்பு கொங்கு பொங்கு
வங்கடம்பு தண்டை கொஞ்சு
செஞ்சதங்கை தங்கு பங்க யங்கள்தாராய்;
சந்தடர்ந்தெ ழுந்த ரும்பு
மந்த ரஞ்செ ழுங்க ரும்பு
கந்த ரம்பை செண்ப கங்கொள் செந்தில்வாழ்வே-
தண்க டங்க டந்து சென்று
பண்க டங்க டர்ந்த இன்சொல்
திண்பு லம்பு குந்து கம்பி மஞ்ஞைகோவே-
அந்த கன்க லங்க வந்து
கந்த ரங்க லந்த சிந்து
ரஞ்சி றந்து வந்த லம்பு சிந்தமார்பா;
அம்பு லம்பு குந்த கன்பர்
சம்பு நன்பு ரந்த ரன்ற
ரம்பு ஐம்பர் கும்பர் நம்பு தம்பிரானே.

(௫௭) வெஞ்ச ரோருக மோகடு ரஞ்ச மோகப லோசன
விம்ப சாகர மோவடு வகிரோமுன்-
வெந்து போனபு ராதன சம்பா ராரிபு ராரியை
வென்ற சாயக மோகரு விளையோகன்;
தஞ்ச மோயம நாதுவர் நெஞ்ச மோவெனு மாமத
சங்க மாதய யோதர மதில்மூழ்கு-

னையுடைய வள்ளிநாயகி. அந்தகன்-யமன். வந்து-(அவனைவென்று) வந்து. கந்தரம்-(அன்பதரிதயமாகிய)குகையில். சிந்தூரம்-தெய்வயானை. அலம்-அமைவாக. புரிந்த-விரும்பிய. புனம்-ஆரணியத்தில். கன்பர்-சிநேகமுடைய மகருஷிகளுக்கு. சம்பு-சுகஞ்செய்பவராகிய. நன்-நல்ல. புரந்தரன் - இந்திரனது. தாரம்-தருநியையுடைய. கும்பர்-அகத்தியமுனிவர். கோங்கென்பது கொங்கெனநின்றது. மந்தாரம், மந்தரமென்றாயிற்று. சேண்வன்பது-செண்ணென நின்றது. சேண்-ஆகாயம்.

(௫௭) சரோருகம்-தாமரை. கடி-கொடிய. சாகரம்-கடல். வடிவகிர்-மாவடுவின்பிளப்பு. புராதனசம்பாரி-பழையமன்மதன். புராரியை-சிவபிரானை. சாயகம்-பாணம். கருவிளை-நீலோற்பலமலர். தஞ்சம்-பெருமை. ஒய்-அற்ற. மாமத-பெரியவிரதத்தையுடைய. சங்கம்-கூட்டமாகிய. பயோதரம் - கொங்கையில்.

சங்கை யோவிரு கூதள கந்த மாலிகை தோய்தரு
தண்டை சேர்கழ லீவது மொருநாளே;
பஞ்ச பாதக தாருக தண்ட னீறெழ வானவர்
பண்டு போலம ராவதி குடியேறப்-
பங்க யாசனர் கேசவ ரஞ்ச லேயென மால்வரை
பங்க நீறெழ வேல்விடு மிளையோனே;
செஞ்ச டாடவி மீமிசை கங்கை மாமதி தாதகி
திங்கள் சூடிய நாயகர் பெருவாழ்வே-
செண்ப காடவி நீடிய துங்க மாமதில் சூழ்தரு
செந்தில் மாநகர் மேவிய பெருமாளே.

(௫௮) இயலிசையி லுசித வஞ்சிக் கயர்வாகி-
இரவுபகல் மனது சிந்தித் துழலாதே;
உயர்கருணை புரியு மின்பக் கடல்மூழ்கி-
யுனையெனது ளறியு மன்பைத் தருவாயே;
மயில்தகர்க லிடைய ரந்தத் தினைகாவல்-
வனசகுற மகளை வந்தித் தணைவோனே;
கயிலைமலை யனைய செந்திற் பதிவாழ்வே-
கரிமுகவ னிளைய கந்தப் பெருமாளே.

(௫௯) இன்பமுந் துன்பமுஞ் சந்ததங் கொண்டுசென்
றிங்குமங் குஞ்சுழன் றிடுமாயத்-
துன்பவெண் கும்பியங் கந்தவிர்ந் துன்பெருந்
தொண்டனென் றுய்ந்துளாங் கனியேனோ;

சங்கை-பயம். ஓவ-நீங்க. இரு-பெரிய. கூதளம்-ஒருவகைச்செடியின்மலர். தாரகதண்டன்-தாரகாசுரனாகிய அரசன். கேசவர்-விஷ்ணுமூர்த்தி. அஞ்சல்-அஞ்சற்க; பயப்படவேண்டாம. ஏ-அசை. மால்வரை-பெரிய கிரௌஞ்சமலை. பங்கநீறு-சூற்றமாகிய சாம்பர். சடாடவி-சடைக்காட்டின். மீமிசை-மேல். தாதகி-ஆத்தி. செண்பகாடவி-செண்பகவனம். ஓவஎன்பதிலிறுதி அகரங்கெட்டது.

(௫௮) உசிதவஞ்சி-மேன்மையுடைய பெண்கள். தகர்-ஆடு. கல்இடையர்-மலையிடத்தில் வசிக்கும் வேடர். வனசம்-அழகோடுகூடிய.

(௫௯) சந்ததம்-எப்பொழுதும். கும்பி-(தாய்மார்) வயிற்றிலுதிக்கும்.

புள்குறுந் தந்தியந் தந்தமுஞ் சிந்திமுன்
பொங்கிவெள் ளந்தெறிந் — தலைவீசும்
தண்பொருந் தப்பதம் பொங்கொலிக் கெங்கணுந்
தங்கிடுஞ் செந்திலம் — பெருமாளே.

(௩௰) எவினை கேர்விழி யாதரை மேவிய
ஏதனே மூடனே — நெறிபேணா
ஈனனே வீணனே யேடெழு தாமுழு
ஏழையே மோழையே — அகலாநின்;
மாவினை மூடிய நோய்பிணி யாளனே
வாய்மையி லாதனே — யிகழாதே
மாமணி நூபுர சீதள தாள்தனி
வாழ்வுற ஈவது — மொருநாளே;
நாவலர் பாடிய நூலிசை யால்வரு
நாரத னார்புகல் — குறமாதை
நாடியெ கானிடை கூடிய சேவக
நாயக மாமயி — லுடையோனே;
தேவிம நோன்மணி யாயிப ராபரை
தேன்மொழி யாள்தரு — சிறியோனே
சேணுயர் சோலையி னீழலி லேமிகு
சீரலை வாய்வரு — பெருமாளே.

(௩௧) ஓரா தொன்றைப் பாரா தந்தத்
தோடே வந்திட் — டுயிர்சோரா
ஊடா நன்றற் றார்போல் நின்றெட்
டாமால் தந்திட் — டுழல்மாதர்;

புள்-கிளிய. உந்தி-தள்ளி. பொருந்தம்-பொருனையாறு. பொருந்தம்தன் எனக் கூட்டுக.

(௩௰) எவினை-பாணத்தை. ஏதனே-துன்பத்தையுடையவனே. ஏழையே, மோழையே- (இருபெயரொட்டு) ஏழையாகிய அறிவில்லாதவென்னை. மாவினை-பெரியதீவினை. சீதளம்-குளிர்ச்சியுடைய. தாள்-திருவடியை. இசைபயில்-இசைப்பாட்டென். சேணுயர்-ஆகாயம்வரை உயர்ந்த.

(௩௧) அந்தத்தோடே-அழகுடனே. வந்திட்டு-வந்து. ஓராது-(பின்வருவதை) உணராமல். பாராது-(நன்) றாக்கஞ்செய்யாமல். ஊடா-ஊடல்செய்

கூரா வன்பிற் சோரா நின்றக்
கோயா நின்றுட் — குலையாதே
கோடார் செம்பொற் றோளா நின்சொற்
கோடா தென்கைக் — கருள்தாராய்;
சோரா வென்றிப் போரா மன்றற்
றோளா குன்றைத் — துளையாடும்
சூதா வெண்டிக் கோயா வஞ்சச்
சூர்மா அஞ்சப் — பொரும்வேலா;
சீரார் கொன்றைத் தார்மார் பொன்றச்
சேவே றெந்தைக் — கினியோனே
தேனே யன்பர்க் கேயா மின்சொற்
சேயே செந்திற் — பெருமாளே.

(௩௨.) கன்றிலுறு மானை வென்றவிழி யாலெ
கஞ்சமுகை மேவு — முலையாலே
கங்குல்செறி கேச மங்குல்நிலை யாமை
கந்தமலர் சூடு — மதனாலே;
நன்றுபொருள் தீர வென்றுவிலை பேசி
நம்பவிடு மாத — ருடனாடி
நஞ்சுபுசி தேரை யங்கமது வாக
லைந்துவிடு வேனை — யருள்பாராய்;
குன்றிமணி போல்வ செங்கண்வரி போகி
கொண்டபடம் வீசு — மணிகூர்வாய்-

து. நன்றற்றார்-நன்மையில்லாதவராய். எட்டா மால்-அடங்காதமயக்கம். உழல்-சஞ்சரிக்கின்ற. கூரா-மிகாத. சோரா-சோர்ந்து. அக்கு-(ஆகுபெயர்) எலும்பையுடைய சரீரம். ஓயாநின்று-இளைத்துநின்று. கோடு-(ஆகுபெயர்) மலைபோலும். சொல்-கீர்த்தி. கோடாது-கோணுதலில்லாது. என்கைக்கு-என்றுதுதித்தற்கு. சோரா-சோர்ச்சியில்லாத. ஏயா-பொருந்தி(கின்ற). ஒன்று-பொருந்துகின்ற. சே-இடபவாகனம். கோடாது, விகாரமொழி.

(௩௨) கன்று-(ஆகுபெயர்) இளம்பருவம். கஞ்சமுகை-தாமரையரும்பு. கங்குல்-இருள். கேசமங்குல்-கூந்தலாகியமேகம். நிலையாமை-அவிழாமல். அதனாலே-அந்த அழகாலே. நன்று-நன்மையுடைய. தீர-போக. நம்பவிடும்-நம்பி

கொண்டை மயிலேறி யன்றசுரர் சேனை
 கொன்றருளு நேச குருநாதா;
மன்றல்கமழ் பூகத் தெற்றுகிரன் சோலை
 வஞ்சிசிறி வாவி புடைசூழும்
மந்திநட மாடி செந்தினகர் மேவு
 மைந்தவமுய நேச பெருமாளே.

(௬௩) குகர மேவுமெய்த் துறவினின் மறவாக்
 குடிலிடைத் தனித் தடமூழ்கிக்
குமுத வாயின்முற் றருநிலை நகராக்
 கொண்டற் கொண்டைக் குழலாரோ
டகரு நாவிகர்ப் புரதன இருகோட்
 டன்புற் றின்பக் கடலாடி
அமிழு வேலையிற் றெனவொரு கரைசேர்த்
 தம்பொற் றண்டைக் கழல்தாராய்;
ககன கோளகைக் கணவிட மளவாக்
 கங்கைத் தங்கப் புனலாடுங்
கமல வாதனற் களவிட முடியாக்
 கம்பர்க் கொன்றைப் புகல்வோனே;

விருக்க (அப்படி யிருப்பவராக்) கைவிடும். உரக-(ஆகுபெயர்) பாம்பு. தேரை யாகி-தேரைபோல. போல்வ-ஒப்பனவாகிய. வரி-கீற்றுக்களையுடைய. போகி-பாம்பு. படம்-படத்திலுள்ள. மணிவீசும் - இரத்தினத்தைச்சிந்தும். கூர்-கூரிய. மன்றல்-மணம். பூகம்-கமுகு. மந்தி-குரங்கு. அமரேசர்-இந்திரனுக்கு. பேசி விடுமெனக் கூட்டுக.

(௬௩) குகரம்-மலைக்குகையில். மெய்த்துறவின் - உண்மைத்துறவால். நின்றறவா-உன்னைமறவாமல். (இராமல்) குடிலி-கொப்பூழாகிய. தடா-உண் டு. கொண்டல்-மேகம்போன்ற. அகரு-அகிற்சந்தனம். நாவி-மகரந்தப்பொடி. கர்ப்புர-பச்சைக்கர்ப்பூரங்கலந்த சந்தனமணிந்த. தன இருகோடு-கொங்கை யாகிய இரண்டுகொம்புகளின். மெத்தென-மிருதுவாக; லையை. கோளகைக்கக னம் கண்-வட்டமாகிய ஆகாயத்தின்கண். அவிரும்-பிரகாசிக்கும். அளவா-அளக்கப்படாத. கமலஆதனற்கு - தாமரையாசனத்தையுடைய பிரமதேவனுக் கு. கம்பர்க்கு-(அக்கினித்) தம்பமாய்நின்றசிவபிரானுக்கு. ஒன்றை-பிரணவப்

சிகர கோபுரத் திருமதி ளினுமேற்
 செம்பொற் கம்பத் தளமீதும்
தெருவி லேயுமித் திலமெறி யலைவாய்ச்
 செந்திற் கந்தப் பெருமாளே.

(௬௪) குடர்நிண மென்பு சலமல ம[illegible]ண்டு
 குருதிந ரம்பு சீயூன் பொதிதோல்
குலவு குரம்பை முருடு சுமந்து
 குனகி மெலிந்து நாயேன் றளரா;
அடர்மத னம்பை யணிபக ருங்க
 ளரிவையர் தங்கள் தோடோய்ந் தயரா
அறிவழி கின்ற குணமற வுன்றன்
 அடியிணை தந்து நீயாண் டருள்வாய்;
தடவியல் செந்தி லிறையுவ கன்பு
 தருகுற மங்கை வாழ்வாம் புயனே
சரவண கந்த முருகக டம்ப
 தனிமயில் கொண்டு பார்சூழ்ந் தவனே;
சுடர்படர் குன்று தொளைபட அண்டர்
 தொழுதொரு செங்கை வேல்வாங் கியவா
அரிதப தங்க இரதப்ர சண்ட
 சொரிகடல் நின்ற சூராந்தகனே.

(௬௫) கொலைமத கரியன ம்ருகமத நளகி
 கும்பத் தனமானார்

பொருளை. மதிள்-மதில். கம்பத்தளம்-(தூசத்) தம்பத்தையுடைய மேடை. கர்ப்பூரமென்பது-கர்ப்புரமென நின்றது.

(௬௪) குடர்-குடல். நிணம்-கொழுப்பு. அண்டு-நெருங்குகின்ற. குருதி-இரத்தம். குரம்பை-உடலாகிய. முருடு-விறகுக்கட்டை. குனகி-(சாம்பரியம்) இளித்து. தளரா-தளர்ந்து. அடர்-நெருங்குகின்ற. தோள்-புயத்தை. அயரா-சோர்ந்து. தட-இயல்-தடாகங்களினழகுள்ள. சுடர்-ஒளி. படர்-விரிந்த. அரி தம்-விரைவாகச் செல்லும். பதங்க-மயிலாகிய. இரத-தேரையுடைய. பிரசண் ட-உக்கிரமானவனே. சொரி-(எல்லாவளங்களையும்) சொரிகின்ற. சூராந்தக னே-சூரனுக்குயமன்போன்றவனே.

குமுதமு முகிழ்த்து பருகியு ருகியல்
கொண்டுற் றிடாயேன்;

நிலையழி கலைகள் கெடவுன தருள்விழி
நின்றுற் றிடவேதான்-

நினதிரு வடிமல ரிணைமகிழ் நினைவுற
நின்பற் றடைவேனோ;

சிலையென வடமலை யுடையவ ரருளிய
செஞ்சொற் சிறுபாலா-

திரைகட லிடைவரு மசுரனை வதைசெய்த
செந்திற் பதிவேலா;

விலகிகள் தனமிரு மயில்குற மகளுடனின்
கும்பிப் புணர்வோனே-

விருதணி மரகத மயில்வரு குமரவி
டங்கப் பெருமாளே.

(௬௪) சேமக் கோமள பாதத் தாமரை
சேர்தற் கோதுமை — நந்தவேதா-

நீதத் தோனி ரோதத் தேத்தம
நிலைத் தோதக — அன்பூர்ந்தே;

காமக் ரோதவு லோபப் பூதவி
காரத் தேயழி — இன்பமாயா-

காயத் தோடக பாசத் தேசிலர்
காமுற் றேற — தென்கொலோதான்;

கேழிக் கூடொடு பேருக் காளொழு
நீரக் காணபு — மங்ககால-

(௬௩) அனை-ஒத்த. ம்ருகமத-கஸ்தூரியணிந்து. குமுதம் - குமுதமலர் போலும். நின-உன்னுடைய. நின்பற்று-நின்னிடத்திலன்பு. சிலையென-வில் லாக. வடமலை-மகாமேரு... இமயமில்-தெய்வயானை. விடங்கம்-அழகு.

(௬௪) சேமம்-காவலாகிய. கோமளம்-அழகிய. வேதாந்தத்தே-வேதத் தினுக்கப்பாற்பட்ட நிலையிலே. அபேதத்தே - வேற்றுமையில்லாத விடத் திலே, நான் நீயென்னும் பகுப்பற்ற இடத்திலே. பூதவிகாரத்து - பஞ்சபூதபரி ணாமத்தால். மாயா-பொய்யாகிய. காயத்து-சரீரத்தில். பகபாசத்து-சிவயோ ஞானத்தால். காமுற்று-ஆசைப்பட்டு. ஏயும்-பொருந்தும். கேழிக்கூர்-கடலிலேமர ததில்.

நீலக் கீரப கலாபத் தேர்விடு
நீபச் சேவக — செந்தில்வாழ்வே;

ஏமத் தீவழு வார்கட் கூர்தி
லோகத் தேதரு — மங்கைபாலா-

யோகத் தாறுப தேசத் தேசிக
வூமைத் தேவர்கள் — தம்பிரானே.

(௬௫) தந்த பசிதனைய றிந்து முலையமுது
தந்து முறைமுறை — யிடுதாயார்-

தம்பி பணிவிடைசெய் தொண்டர் பிரியமுள
தங்கை மருகருயி — ரனவேசார்;

மைந்தர் மனைவியர்க ளும்பு கடனுதவு
மந்த வரிசைமொழி — பகர்கேடா-

வந்து தலைவிர கிடந்து தரைபுரள
யங்க மொருமடி — மிசையேறி;

அந்த கனுமெனைய டர்ந்து வருகையினில்
அஞ்ச லெனவலிய — மயில்மேல்நீ-

அந்த மறலியொடு கந்த மனிதனம
தன்பு மெனமொழிய — வருவாயே;

சிந்தை மகிழுமலை மங்கை நகிலிணைகள்
சிந்து பயமயிலு — மயில்வீரா-

மாமாய் நின்றருள்வாய். நீள-நீண்ட. காளபுயங்க-கடத்தையுடைய பாம்புக்கு. கால-யமனாகிய. நீலக்கிரீப-பசியகழுத்தையுடைய. கலாபத்தேர்-மயிலாகிய இரதத்தை. விடு-செலுத்துகின்ற. நீபம்-கடப்பமாலை. ஏமம்-யாககுண்டம். வழு வார்கட்கு-தவறாமல் வளர்க்கின்றவர்களுக்கு. ஊர்-(ஆகுபெயர்) இருப்பிடம். ஆறு-மார்க்கம். ஊமை-மௌனம்; பேசாநிலை.

(௬௫) தந்த-(உதாரணம் [illegible]) கொடுத்த. அமுது-பால். மருகர்-மருமக்கள். கடும்பு-சுற்றத்தார். கடன்உதவு-(தங்கள்) கடமையைச்செலுத்துகின்ற. வரிசை-ஒழுங்காகிய. மொழி-வார்த்தைகளை. பகர்-பேசி. கேடா-கெடுதலாக. தலைவிர்-தலைமயிர். மடிமிசை-எருமைக்கடாமேலே. அஞ்சல்-பயப்படாதே. அந்தகனும்-யமனும். அடர்ந்து-நெருங்கி. மறலியொடு-யமனுடன். உகந்த-மகிழ்ப்பட்ட. நகிலிணைகள்-இரண்டுகொங்கைகள். பயம்-பாலை. அயிலும்-உண்

திங்க ளரவுநதி துன்று சடிலருள் — பெருமாளே.
செந்தி னகரிலுறை

(௬௮) தரிக்குங்கலை நெகிழ்க்கும்பரி — மதனேவிற்-
தவிக்குங்கொடி

தனைக்குந்தனி நினைக்குந்திறு — முடனேநின்;
தமிழ்த் தென்றலி

தெரிக்கும்மறை யெனப்புன்பரி — சிலபாடி-
மெனப்புன்கவி

யிருக்குஞ்சிலர் திருச்செந்திலை — அறியாரே;
யுரைக்கும்படி

அரிக்குஞ்சரர் மறைக்கும்பிர — வரிதான-
மனுக்குந்தெரி

அடிச்செஞ்சடை முடிக்கொண்டிடு — தவபாரத்;
மரற்கும்புரி

கிரிக்கும்பகன் முனிக்குங்குரை — பரவாழ்வே-
வரிக்குங்குரு

கிளைக்குந்திற லரக்கன்கிளை — பெருமாளே.
கெடக்கன்றிய

(௬௯) நிலையாப் பொருளை யுடலாக் கருதி — மலமேபோய்-
நெடிநாட் பொழுது

ஊறும். துன்று-நெருங்குகின்ற. சடிலர்-சடையையுடைய சிவபிரான். கவிரம்-கவிரெனவும், கலிலம்-கலிலவும், தின்றனை.

(௬௮) கலை-சேலையை. நெகிழ்க்கும்-நெகிழ்த்து உடுத்துவன். பரிதவிக்கும்-பரிதாபப்படுவள். எகில்-பரணத்தால். தகைக்கும்-இளைப்பன். எரிக்கும்-சுடும். பிறை-பிறைச்சந்திரன். என-என்று. புண்படும்-புண்படுவன். எனக்கு உரைத்து என்று(துறையமைத்து மனிதர்மேலே). புன்கவி-அற்பப்பாடல்களை. புரிந்து-பேசி. உய்த்திட பிழைக்க. அடி-திருவடிகளை(யு)ம். முடி-முடியையும். புரிந்து செய்யப்பட்ட. தவபாரம்-தவப்பெருமையுடைய. கிரி-பொறுமைமலை. வரிக்கும்-வாச்செய்யும். கிளைக்கும்-விருத்தியாகும். திறல்-வலிய. அரக்கன்-சூரன். கன்றிய-கோபித்த.

(௬௯) நிலையாப்பொருளை - பிரபஞ்சமாகிய அநித்தியப் பொருள்களை.

நிறைபோய்ச் செவிடு குருடாய்ப் பிணிகள் — தடுமாறி;
நிறைவாய்ப் பொறிகள்

மலர்ச் சயன மிசையாய்ப் பெருகி — நெறியாக-
மடிவேற் குரிய

மறைபோற் றரிய வொளியாய்ப் பரவு — மருள்வாயே;
மலர்தாட் கமல

கொலைகாட் டவுணர் கெடமாச் சலதி — முதுசூதம்-
குளமாய்ச் சுவற

குறிபோய்ப் பிளவு படமேற் கதுவு — விடுவோனே;
கொதிவேற் படையை

அலைவாய்க் கரையின் மகிழ்சீர்க் குமர — வடிவாகும்-
அழியாப் புனித

அரனார்க் கதித பொருள்காட் டதிப — பெருமாளே.
அடியார்க் கெளிய

(௭௰) பரிமள களபசு கந்தச் சந்தத் — தனமாதர்-
படையம படையென அந்திக் குங்கட் — கடையாலே;
வரியளி நிரைமுரல் கொண்டற் கங்குற் — குழலாலே-
மறுகிடு மருளனை யின்புற் றன்புற் — றருள்வாயே;
அரிதிரு மருகக டப்பத் தொங்கற் — றிருமார்பா-
அலைகுழ குழுவென வெம்பக் கண்டித் — தெறிவேலா;
திரிபுர தகனரும் வந்திக் குஞ்சற் — குருநாதா-
செயசெய அரகர செந்திற் கந்தப் — பெருமாளே.

உடலா-பொன்போல அருமையாக. அவம்-வீண். நிறை-நிறைந்த குணம். பொறிகள்-(கைகால் முதலிய) இந்திரியங்கள். சயனமிசையா-படுக்கையின் மேலாக. ஒளியாய்-சோதி ரூபமாய் (வந்து). மாசலதி-பெரியகடல். குளமா-(சிறிய) குளமாகி. சுவற-வற்ற. முதுசூதம்-பெரிய சூரனாகிய மாமரம். குறிபோய்-(தன்) பெயர் கெட்டு. மேற்கதுவு-மேலே பற்றுகின்ற. அதித-அப்பாற்பட்ட. அதீதம்-அதிதமென்கின்றது.

(௭௰) சுகந்தம்-நறுவாசனை. படை-சேனை. அந்திக்கும்-அடுக்கும். வரிகிற்று. அளிநிரை-வண்டின் வரிசை. முரல்-ஒலிக்கின்ற. கங்குல்-இருள்போன்ற. மறுகிடும்-சுழலும். மருளனை-மயக்கமுடைய வடியேனை. தொங்கல்-மாலை. வெம்ப-சொதிக்க. திரிபுர தகனர்-முப்புரத்தையெரித்த சிவபிரான்.

44

(எக) புகரப் புங்கப் பகரக் குன்றிற்
புயலிற் றங்கிப் பொலிவோனும்;
பொருவிற் றஞ்சச் சுருதிச் சங்கப்
பொருளைப் பன்பிற் புகல்வோனும்;
திகிரிச் செங்கட் செவியிற் றஞ்சத்
திகிரிச் செங்கைத் திருமாலும்-
திரியப் பொங்கித் திரையற் றுண்டுட்
டெளிவுற் றொன்றைத் தருவேதா;
தகரத் தந்தச் சிகரத் தொன்றிக்
கடகத் தந்தத் துறைவோனே-
தருணக் கொங்கைக் குறவிக் கின்பத்
தையளித் தன்புற் றருள்வோனே;
பகரப் பைம்பொற் சிகரக் குன்றைப்
படியிற் செற்றுத் தொடும்வேலா-
பவளத் துங்கப் புரிசைச் செந்திற்
பதியிற் கந்தப் பெருமாளே.

(எஉ) மங்கை சிறுவர் தங்கள் கிளைஞர்
வந்து கதற வுடல்தீயின்-

(எக). புகர்-புள்ளிகளையுடைய. அ-அந்த. பகரம்-அலங்காரம்பொருந்தி ய. குன்றில்-மலைபோன்ற வெள்ளையானையில். பொலிவோனும்-விளங்குகின்ற இந்திரனும். பொருவில்-ஒப்பில்லாத. தஞ்சம்-(எல்லாருக்கும் பற்றுக்கோடா கிய. சுருதிச்சங்கம்-வேதத்தின் கூட்டமாகிய. புகல்வோனும்-சொல்லுகின்ற உருத்திரனும். திகிரி-வட்டமாகிய. செம்-சிவந்த. கட்செவி- (ஆதிசேடனாகிய) பாம்பில். துஞ்சு-நித்திரை செய்கின்ற. திகிரி-சக்கரத்தையுடைய. திரிய- (கற் பாந்தத்தில்) கெட. பொங்கி-(நீர்) எழுந்துநின்று. திரை அற்று-(பிறவிக்) கடலைக் கடந்து. உண்டு-அநுபவித்து உள் தெளிவுற்று-மனந்தெளிவடை ந்து. ஒன்றை-ஏகமாகிய மெய்ப்பொருளை. தருவேதா-தகவித்தையுடைய வேதநூலின். அ-அந்த. சிகரத்து-உச்சியாகிய பிரமரந்தானத்தில். கடகம்-விசா லமாகிய. கஞ்சத்து-(இதய) தாமரையில். தருணம்-இளமை. குறவி-குறத்தன் மையுடைய வள்ளிநாயகி. பகரம்-பிரகாசம். படியில்-பூமியில். செற்று-சிதறும்ப டி. புரிசை-கோட்டை.

(எஉ). மண்டி-நெருங்கி. விண்டு-(மேற்கூறிய மங்கைமுதலியோர்) வெ.

மண்டி யெரிய விண்டு புனலில்
வஞ்ச மொழிய விழுவாவி;
வெங்கண் மறலி தன்கை மருவ
வெட்டி யிட வொருபாச-
விஞ்சை விளையு மன்று னடிமை
வென்றி யடிகள் தொழுவாராய்;
சிங்க முழுவை தங்கு மடவி
சென்று மறலி யுடன்வாழ்வாய்-
சிந்தை மகிழ புகழு
செந்தி லுறையு முருகோனே;
பெங்கு மிலகு திங்கள் கமல
மென்று புகலு முகமாதர்-
இன்பம் விளைய அன்பி னணையு
மென்று மிளைய பெருமாளே.

(எங) மனைகனக மைந்தர் தமதழகு பெண்டிர்
வலிமைகுல நின்ற நிலையூர்பேர்-
வளரிளமை தஞ்ச முனைபுனைவ ளங்கள்
வரிசைதம ரென்று வருமாய;
கனவுநிலை யின்ப மதனையென தென்று
கருதிவிழி யின்ப மடவார்தங்-
கலவிமயல் கொண்டு பலவுடல்பு ழுந்து
கருவில்விழு கின்ற இயல்போதான்;

ளிவந்து. வஞ்சம்-சிறுமையாகிய திட்டு. ஒழிய-நீங்க. ஆவி-உயிர். வெங்கண்-கொடிய. மறலி-யமன். வெட்டி-வாடி. இடறும்-(நல்விஷயங்களிற் செல்லவி டாமல்) தடுக்கும். பாசவிஞ்சை-(யமன்) பாசமாகிய கயிற்றின் வித்தை; அஃ தாவது: கட்டுதல். விளையும்-உண்டாகும் அந்தக்காலத்தில். அடிமை-தொண்டனாகிய அடியேன். உழுவை-புலி. அடவி-இனக்காடு. மறலின்-வள்ளிநாயகி. ஆவிவெம்பி-தவளைக்கூட்டுக. புகழு-என்பதில். உகாம்-சாரியை.

(எங) கனகம்-பொன். நின்றநிலை-இருந்த இருப்பு. தஞ்சம்-ஆதாரமாயுள்ளவைகள். முனை-யுத்தகளத்தில். புனை-அலங்கரிக்கப்பட்ட. வளங்கள்-(ரதகஜதுரகபதாதிகளாகிய) செல்வங்களின். வரிசை-ஒழுங்கு. தமர்-சுற்றத்

கிளைபுகளை தன்பர் பழகி யாக வாக்கு
நெடுமையரவி னந்த — கதிர்வேலா.

நிலமுதல்வி ளங்கு கலைமுழு செந்தில்
நிலைபெறநி றைந்த — முருகோனே;

புனைமலர்பு னைந்த புளகமட மங்கை
புளகிரு கொங்கை — புணர்மார்பா.

பொருதுடனை திர்ந்த நிருதர்முடி யங்கள்
பொடிபட நடந்த — பெருமானே.

(௭௪) முலைமுகந்தி மிர்ந்த மலர்சொரிந்த ணிந்த
முறுவலுஞ்சி வந்த — கனிவாயும்.

முருகவிழ்ந்து திர்ந்த மலர்சரிந்து சிந்த
முகிலுமின்ப சிங்கி — விழிவேலும்.

சிலைமுகங்க லந்த திலதமுங்கு னிந்த
திருமுகந்த ருப்பு — குறவேர்வும்.

தெரியவந்து நின்ற மகளிர்பின்சு ழன்று
செயலழிந்து ழன்று — திரிவேனோ;

மலைமுரிந்த மங்க புலவர் செஞ்சொல் கொண்டு
வழிதிறந்த செங்கை — வடிவேலா.

வளர்புனம்ப யின்ற குறமடந்தை கொங்கை
மணிவடம்பு னைந்த — புயவேளே;

தார். மாய-பொய்யாகிய. விழுமின்பம்-விழிந்தவாலே செய்யுஞ்சுகம். பலவுடல்-அநேக சரீரம். புணர்ந்து-சேர்ந்து. இயல்போ-அழுசோ. நிலமுதல்-மண் முதலிய (மற்றையவளங்களும்). புனை-அணியப்பட்ட. புளகமடமங்கை-காட்டிலுள்ள வீரத்தையுடைய வேடப்பெண். புளகம்-மகிழ்ச்சி. நிருதர்-அரக்கர். மருடம்-கிரீடம்.

(௭௪) திமிர்ந்த-பூசிய. முறுவலும்-புன்சிரிப்பும். முருகு-வாசனை. அவிழ்ந்து-விரிந்து. முகிலும்-மேகம்போன்ற கூந்தலும். இன்பம்-சிந்தையைத்தரும். சிங்கி-விடம்போன்ற. சிலை-வில்லாகிய புருவம். குனிப்பு-வளைகின்ற. குறுவேர்வும்-சிறுவேர்வையும். உழன்று-வருந்தி. மலைமுரிந்த மங்க-கந்தமுடிவென்றும் பூதத்தால் சுமந்துகொண்டு போயடைக்கப்பட்ட. புலவர்-நக்கீரர். செஞ்சொல்-(ஆகுபெயர்) திருமுருகாற்றுப் படையை. கொண்டு-ஏற்றுக்கொ

அலைமுகந்த ழுந்து பிணைமுதிர்ந்த சங்க
மலர்பொருந்து கஞ்ச — மலர்மீதே.

அளிகலந்து ரங்க இசையுடன்று யின்ற
அரியசெந்தில் வந்த — பெருமானே.

(௭௫) மூப்புற் றுச்செவி கேட்பற் றுப்பெரு
மூச்சுற் றுச்செயல் — தடுமாறி.

மூர்க்கச் சொற்குரல் நாட்டிக் கக்கிட
மூக்குக் குட்சளி — யினையோடும்.

கோப்புக் கட்டிடு றுப்பிச் செற்றிடு
கூட்டிற் புக்குயி — ரலையாமுன்.

கூற்றைத் தத்துவ நீக்கிப் பொற்கழல்
கூட்டிச் சற்றருள் — புரிவாயே;

காப்புப் பொற்கிரி கோட்டிப் பற்றலர்
காப்பைக் கட்டவர் — குருநாதா.

காட்டுக் குட்குற வாட்டிக் குப்பல
காப்புக் குத்தர — மொழிவோனே;

வாய்ப்புற் றத்தமிழ் மார்க்கத் திட்பொருள்
வாய்க்குச் சித்திர — முருகோனே.

வார்த்தைச் சிற்பர தீர்த்தச் சுற்றலை
வாய்க்குட் பொற்பமர் — பெருமானே.

ண்டு, வழி-(பூதத்தாலடைக்கப்பட்ட மலைக்குகையின்) வழியை. பிணை-குவ். அலர்ந்து-முழங்கி. இரங்க-இசையொலிசெய்ய. இசை-அவ்விராகத்துடன்.

(௭௫) செவிகேட்பு-காதுகேட்டல். மூர்க்கச் சொற்குரல். கடினவார்த்தையினொலி. இனை-ஈளை; கோழை. கோப்புக்கட்டி-கோவைசெய்து; ஒழுங்குபடுத்தி. இறு-துன்பமானது. பிச்சுற்றிடு-சிதைத்து அழித்திடு. கூட்டில்-சரீரத்தில். கூற்ற-(உடல்வேறு உயிர்வேறாகக்) கூறுபடுத்து தலையுடைய. தத்துவம்-யமனுடைய வேதனைத்தன்மை. கூட்டி-சேர்த்து. காப்பு-காவலையுடைய. கோட்டி-வளைத்து. பற்றலர்-பகைவர். காப்பை-காவலையுடைய திரிபுரத்தை. கட்டவர்-களைந்தவர். ஆட்டி-மனைவி. புக்கு-புகுந்து. உத்தரம்-(அம்மனைவி கேள்விக்கு) மறுமொழி. அத்தமிழ் மார்க்கத்திட் பொருள்வாய்க்கு-அந்தத் தமிழ்வழியிலுள்ள உறுதிப்பொருளிடத்துக்கு. வாய்ப்புற்ற-பொருந்த முற்ற. சித்திரம்-அழகிய. வார்த்தை-நல்வார்த்தைகளையுடைய. தீர்த்தம்-நீர். சுற்று-சூழ்கின்ற. வாய்ப்புற்ற என்பதில் இறுதி அகரங்கெட்டது.

(௭௬) வஞ்சத் துடனொரு நெஞ்சிற் பலநினை
வஞ்சிக் கொடியிடை மடவாரும்-
வந்திப் புதல்வரும் அந்திக் கிளைஞரு
மண்டிக் கதறிடு வகைகூடி;
அஞ்சக் கலைபடு பஞ்சிப் புழுவுடல்
அங்கிக் கிரையென வுடன்மேவ-
அண்டிப் பயமுற வென்றிச் சமன்வரும்
அன்றைக் கடியிணை தரவேணும்;
கஞ்சப் பிரமனை அஞ்சத் துயர்செய்து
கன்றச் சிறையிடு மயில்வீரா-
கண்டொத் தனமொழி அண்டத் திருமயில்
கண்டத் தழுவிய திருமார்பா;
செஞ்சொற் புலவர்கள் சங்கத் தமிழ்தெரி
செந்திற் பதிநக ருறைவோனே-
செம்பொற் றுலவட குன்றைக் கடலிடை
சிந்தப் பொரவல பெருமாளே.

(௭௭) வரியார் கருங்கண் மடமாதர்-
மகவாசை தொந்த மதிலாகி;
இருபோது லைந்து மெலியாதே-
இருதாளி னன்பு தருவாயே;
பரிபால னஞ்செய் தருள்வோனே-
பரமேசு ரன்ற னருள்பாலா;
அரிகேச வன்றன் மருகோனே-
அலைவா யமர்ந்த பெருமாளே.

(௭௬) பல-பலவிஷயங்களை. வந்தி-வணங்குகின்ற. அந்தி-அடுக்கின்ற. வகை-விதம். கூர-மிக. அஞ்சம்-(தத்துவப்பகுதிகளின்) அம்சம். கலைபடு-பிரியப்பட்டுப்போகின்ற. பஞ்சி-வருத்தமுடைய. அங்கிக்கு-அக்கினிக்கு. இரையென-உணவாக. உடன்-உடனே. பயமுற-பயப்படும்படி. சமன்-யமன். கண்டு-கற்கண்டு. ஒத்தன-ஒத்த. அண்டு-நெருங்குகின்ற. அத்திரு-அந்தச்சிறப்புடைய. மயில்-மயில்போல்வாளாகிய வள்ளியம்மையின். கண்-கண்கள். தத்து-தாவுகின்ற. வடகுன்றை-மகாமேருமலையை. சிந்த-சிதற. ஒத்தனஎன்பதில்-அன்சாரியை.

(௭௭) வரி-இரேகை. தொந்தம்-தொடர்ச்சி. பரிபாலனம்-காவல்.

(௭௮) விந்ததி னூறி வந்தது காயம்
வெந்தது கோடி யினிமேலோ-
விண்டுவி டாம லுன்பத மேவு
விஞ்சையர் போல அடியேனும்;
வந்துவி நாச முன்கலி தீர
வண்சிவ ஞான வடிவாகி-
வன்பத மேறி யென்களை யாற
வந்தருள் பாத மலர்தாராய்;
எந்தனு ளேக செஞ்சுட ராகி
யென்கணி லாடு தழல்வேணி-
எந்தையர் தேடு மன்பர்ச காய
ரெங்களு வாமி யருள்பாலா;
சுந்தர ஞான மென்குற மாது
தன்திரு மார்பி லணைவோனே-
சுந்தர மான செந்திலில் மேவு
கந்தசு ரேசர் பெருமாளே.

(௭௯) துன்பங்கொண் டங்க மெலிந்தற
நொந்தன்பும் பண்பு மறந்தொளி
துஞ்சும்பெண் சஞ்சல மென்பதி லணுகாதே-
இன்பந்தந் தும்பர் தொழும்பத
கஞ்சந்தந் தஞ்ச மெனும்படி
யென்றென்றுந் தொண்டு செயும்படி யருள்வாயே;

(௭௮) விந்து-இந்திரியம். காயம்-சரீரம். விண்டுவிடாமல்-விடுபட்டுப் போகாமல். விஞ்சையர்-அறிவுடையோர். விநாசம்-அழிவை. முன்-நினைக்கின்ற. கலிதீர-சிறுமை நீங்க. வன்-வலிய. பதம்-பதவி. களையாற-சிரமம் நீங்க. உள்-மனத்தில். கணில்-கண்ணிடத்து. தழல்வேணி-அக்கினிபோன்ற சடையையுடைய. எந்தையர்-எங்கள் பிதாவாயுள்ள சிவபிரானார். சுந்தரம்-அழகு. சுரேசர்-தேவர்களுக்குத் தலைமையான இந்திரனார். என்றனுளென்பது எதுகைநோக்கி எந்தனுளெனநின்றது.

(௭௯) அங்கம்-சரீரம். அற-மிக. ஒளி-பிரகாசம். துஞ்சும்-கெடும். பெண்சஞ்சலம்-பெண்கள் காமத்துன்பம். தம்-தங்களுடைய. தஞ்சமெனும்படி-பற்றுக்கோடென்று சொல்லும்விதம். உம்பர் [illegible] தொழும்பத கஞ்சம்-[illegible]

இன்பங்கொள் அன்றுமகின்சர
மங்கையர்க் குந்தமெட் டாடிமா
யின்தன்பின் றன்பழ குமபிடி — யிலேயோனே.

வேயப்பொன்பிக் கின்றந்த கஞ்சய
குன்றெங்குந் தங்குவ லம்புரி
பம்புந் தென் செந்திலில் வந்தருள் — பெருமாளே.

(அ௭) பதும விருசரண் குமபிட் டன்பாக்
கலவி கலவிருந் தங்க் கொவ்வார்
பகடி புளகிதத் துன்று கமரிக் — கயல்போலும்;

பரிவு தரியவன் செம்பொற் சமபிக்
குழைமுகன் போரமருங் டகம்மொற் கொஞ்சிப்
பகற விருமுறுங் கந்துங் கொந்தும் — குழல்சாயத்;

புதமை தாநிகமம் பங்கந் தங்கந்
இனிது வமைபவென் சந்தத் திந்துப்
புருவ வெயர்வுடன் பொங்கக் கங்கைச் — சடைதாரி.

... நருகமதன் தந்தாப் பந்திக்
கறிவை யிழுவிடும் பஞ்புத் துன்பப்
பொருளின் மகளிர்தம் மன்புப் பண்பைத் — தவிர்வேனோ;

திதிதி ததததத் திக்திக் திக்தட்
டிடிடி டடடடன் டண்டிட் டண்டத்
தெனன தனதனத் தெந்தத் தந்தத் — தெனனேனே.

வணங்கும் திருவடித் தாமரையின். இன்பம்-ஆனந்தத்தை. தந்துமிளிர்ந்த. தொணடு-வழிபாடு பந்து-பாகத்தில். கலந்திடு-தரித்துவம். அன்பின்-அன்பாம். தன்-சாரிலை. படி-பூமியில். இன்துறை-இனியநீர்த்துறைகள். குன்று-(மணற்) குன்று. வலம்புரி சங்கு-வலம்புரிச்சங்கு. பம்பும்-நெருங்கும்.

(அ௭) பதுமம்-தாமரைபோன்ற. பகடு-யானை. புளகிதம்-மகிழ்ச்சி. துன்று-நெருங்க. கண்-கண்களானவை. குழைகள்-காதணிகளோ. பொர-மோத. மருண்டு-மயங்கி. இன்சொல்-இனிய சொற்களால். பகற-கூறும். இதம்-நன்மை. கந்து-பற்றுக்கோடாயிருக்கும். கொந்து-பூங்கொத்துகளையுடைய. சாய-அவிழ. நகநுதி-நகத்தின்நுனி. பங்கந்து-வேறுபாடுடன். அங்கத்து-சரீரத்தில். இனிதுவமைய-இனிமையாக அழுந்த. சந்தம்-நிறம். இந்து-சந்திரன் போன்ற முகத்தில். உடன்-உடனே. சடைதாரி-சடை தரித்திருக்கப்பட்ட சிவபிரான். தந்தாப்பந்திக்கு படை வரிசை ... -இடுக்குவிடும். பண்பு-விதமாகிய.

திகுர்தி தகிர்ததிக் திக்திக் திக்திக்
திரிரி தராவென் றெவ்வெறுப் பின்றித்
திமிலை பறையறைந் தெண்டிக் கண்டச் — சுவர்சோரச்;

சதியில் வருபெருஞ் சங்கத் தொங்கற்
புயல சுரர்வெருண் டஞ்சிக் குஞ்சித்
தலைகொ டடிபணிந் தெங்கட் குன்கட் கருணைதாவென் —

சமரு மரகதஞ் சஞ்சுற் றுஞ்செய்ப்
பதியில் முருகமுன் பொங்கித் தங்கிச்
சலதி யலைபொருஞ் செந்திற் கந்தப் — பெருமாளே.

(அ௯) பூரண வாரகும்ப சீதப டீரகொங்கை
மாதர்வி கார வஞ்ச லீலையி லேயுழன்று
போதவ மேயிழந்து போனது மானமென்ப — தறியாத;

பூரிய னாகிநெஞ்சு காவல்ப டாதபஞ்ச
பாதக னாயறஞ்செ யாதடி யோடிறந்து
போனவர் வாழ்வுகண்டு மாசையி லேயுழன்று மயல்தீர;

காரண காரியங்க ளானதெ லாமொழிந்து
யானெனு மேதைவிண்டு பாவக மாயிருந்து
காலுட லூடியங்கு நாசியின் மீதிரண்டு — விழிபாய;

காயமு நாவுநெஞ்சு மோர்வழி யாகவன்பு
காயம்வி டாமலுன்ற னீடிய தாளினைந்து
காணுதல் கூர்தவஞ்செய் யோகிகளாய்விளங்க வருள்வாயே;

பெருநரின் மகளிர்-வேசையர். பண்பை-குணத்தை. ஒப்பின்றி-உவமானமில்லாமல். திமிலை பறை-திமிலையும் (எனை) வாத்தியங்களும். அறைந்து-ஒலித்து. சோர-இடிந்துவிழ. சதியில்-வஞ்சகத்துடன். சங்கம்-கூட்டமாகிய. தொங்கல்-வஞ்சிமாலை. வெருண்டு அஞ்சி-மிகப்பயந்து. குஞ்சி-குடுமி. கொடு-கொண்டு. கட்கருணை-கண் அருள். எண்-நினைக்கப்பட்ட. சமர-யுத்தத்தையுடைய. செய்ப்பதி-வயலூர். சலதி-கடல். மருண்டுஇங்கு இழுவிடும்பண்ணை ... முடிக்க.

(அ௯) ஆரம்-முத்துமாலை. சீதபடீரம்-குளிர்ந்த சந்தனம். உழன்று-வருந்தி. போது-காலத்தை. பூரியனாகி-இழிஞனாகி. காவல்படாது-கட்டுக்குளடங்காது. அடியோடிறந்து-முழுவதும்கெட்டு. ஏதை-குற்றத்தை. விண்டு-(பிறவினை) ... பாவகம்-புனிதம். கால் ஊடு இயங்கி-(சுழுமுனை வேறுபடுத்தி. உடல்-சரீரம். பிராணவாயுவினிடையே சஞ்சரித்து. நாசியின்மீது-நாடியிலே செல்லுகின்ற) மூக்கின் (இரண்டு பக்கத்து) மேதும். இருவிழிபாய-இரண்டு கண் ...

ஆரணா சாரமந்த்ர வேதமே லாய்விளங்க
ஆதிரை யானைநின்று தாழ்வனை ஏவிணங்கு
மாதரா லால்விளங்கு பூரண ஞானமிஞ்சு முரவோனே;

ஆர்கலி யூடெழுந்து மாவடி வாகிநின்ற
சூரனை மாளவென்று வானவர் காருமண்ட
மானவர் கூரசங்கை தீரமு னாண்மையிட்ட முநிகேசா;

வாரணை மூலமென்ற போதினி லாழிகொண்டு
வாவியின் மாடுடங்கர் பாழ்பட வேயெறிந்த
மாமுகில் போலிருண்ட மேனிய னாமுகுந்தன் மருகோனே

வாளுக மீதுவண்ட லோடிய காவில்வந்து
சூல்கொடு வானசங்கு மாமணி யீனவந்து
வாரிதி நீர்பரந்து சீரலை வாயுகந்த பெருமாளே

(௮௨) உரைத்த சம்ப்ரம வடிவு இரங்கிக்
கறுத்த குஞ்சியும் வெளிறிய பஞ்சொத்
தொலித்தி டுஞ்செவி செவிடுற வொண்கட் குருடாகி-

யுரத்த வெண்பலு நழுவிம தங்கெட்
டிரைத்து கிண்கிணி விருமலெ ழுந்திட்
டுளைப்பு டன்றலை விறகொடு தும்மித் தடுமேல்கொளல்;

உரத்த மின்றிய புழுவினும் விஞ்சிப்
பழுத்து வெஞ்செயல் வசனம் வரம்பற்
றறித்த பெண்டிரு மெதிர்வர நிந்தித் தனைவோரும்-

து செல்ல. காயம்-சரீரம். நாவு-வாக்கு. நெஞ்சு-மனம். நேர்வழியாக-ஒருவழிப் பட. காயம்-சோபத்தை. விடாமல்- (வெளி) விடாமல்; உள்ளடக்கியென்றபடி. கூர்-மிகு. ஆதிரையான்-திருவாதிரை நட்சத்திரத்தையுடைய சிவபிரான். ஐ-சாமியை. தாழ்வனை-வணங்குவேனென்று சொல்லி. ஆதரவு-அன்பு. உரவோனே-வலிமையுடையவனே. ஆர்கலி-கடல். கூர் அசங்கை-மிகுந்த துன்பம். வாரணம்-யானை. மாடு-பக்கத்தில். இடங்கர்-முதலை. பாழ்பட-இறக்க. முகில்-மேகம். வாளுகம்-வெண்மணல். மீது-மேல். வண்டல்மூடிய-நீர்ச்சுழி நிறைந்த. காவில்-வாய்க்காலில். மணியீன-முத்துக்களைப்பெற. வாரிதி-கடல்.

(௮௨) உரைத்த-சொல்லப்பட்ட. சம்ப்ரம-மகிழ்ச்சியுடைய. வடிவு-சரீரம். இரங்கி-தோல்சுரித்து. குஞ்சி-மயிர். வெளிறிய-வெளுத்த. ஒலித்திடும்-சத்தம் கேட்கப்படும். உரத்த-பல்முன்ன. நழுவி-கழன்று. மதம்-ஆணவம். உளைப்பு-வருத்தம். அரத்தம் இன்றிய-இரத்தம் வற்றிய. விஞ்சி-மிகுந்து.

அரத்த வெண்டிட வுரைவது குன்றிப்
புடைப்ப அந்தினி தனிதில நென்னைக்
கலத்தை யந்தகனி சலமொரு மன்றைக் கருள்வாயோ;

திகுத்தி திந்திமி திமிதிமி திந்திமிட்
டொட்டொ டொண்டொடு டொடொடொ டொண்டொட்
டிகுட்டி குண்டிகு டிகுடிகு டிண்டிட் டிகுதிதோ-

திமித்தி திந்திமி திமிதிமி யென்றிட்
டிடக்கை தந்துமி மூரசு முழங்கச்
செருக்க ளந்தனில் திருநடர் தயங்கச் சிலபேய்கள்;

தரித்து மண்டையி லுதிர மிகுந்து
திரட்ப ருந்துகள் குடர்கள் பிடுங்கத்
தருக்கு சம்புகள் நிணமது துய்ப்பப் பொரும்வேலா-

தழைத்த கண்டியில் வயலியி லன்னைப்
படைத்த செந்தினி லியல்செறி கொங்கிற்
றனித்த செங்கிரி வளிதுறை கந்தப் பெருமாளே.

(௮௩) மொழியுநி றங்கருத்து மகார மிணங்கலக்கு
முடியவ லோர்ந்தரற்று கடலோடும்-

முதிரவி டம்பரப்பி வடவையு டன்கொளுந்து
முழுமதி யுந்திருக்கு நிலவோடும்;

மழையென கந்தரித்த கொடியிடை வஞ்சியுற்ற
மயல்தவி ரும்படிக்கு நினைவாயே-

மரகத துங்கவெற்றி விகட நடங்கொள்சித்ர
மயில்மிசை வந்துமுத்தி தரவேணும்;

உளம்பழுத்து-உள்ளம் வெறுத்து. செயல்-செய்கையும். வசனம்-பேச்சும். வரம்பு-அதன் அளவு. உணர்வு-அறிவு. உளது-(உயிர்) இருக்கிறது [illegible] இல்லது-இல்லை. என்கைக்கு-என்று சொல்லுதற்கு. அலத்தை-மரணத்துன்பம். அலமுரும்-சுழலும். இடக்கை, தந்துமி, மூரசம்-இம்மூன்றும் ஒவ்வொருவாச்சியங்கள். தயங்க-திகைக்க. தரித்து-தங்கி. சம்புகள்-நரிகள். கண்டி, வயலி, கொங்கு-இம்மூன்றும் ஒவ்வொருதலங்கள். தனித்த-ஒப்பற்ற.

(௮௩) மொழியும்-சொல்லப்படும். மகர இனம்-மகரமீன்கூட்டங்கள். முடிய-முழுவதும். அரற்று-பேரொலிசெய்கின்ற. முதிர்-முதிர்ந்த. அ-அந்த. வடவை-முகம் [illegible]-வடவாமுகாக்கினி இடத்தில் [illegible]-சேர்ந்தொன்று [illegible]

அழகிய மென்குறத்தி புளகித சந்தனத்தி
னழுந்த ணம்படைத்த — திருமார்பா-
அமரர்பு ரத்தனைக்கு மழகிய செந்திருக்கு
மருநிளை வைப்பதிக்கு — மிறையோனே;
யெழுபுவ னப்பிழைக்க அசுரர்சி ரந்தெறிக்க
எழுசயி லந்துளைத்த — சுடர்வேலா-
இரவிக ளந்தரத்த ரரிஅர பங்கயத்த
ரிவர்கள்ப யந்தவிர்த்த — பெருமாளே.

(௮௪) தோடு மென்குழை யூடே போரிடு
வாளி னங்கயல் போலே யாருயிர்
சூறை கொண்டிடு வெவ்போ லேதொடர் — விழிமாதர்-
சூது கந்தனி லேமா லாயவர்
வத மென்றறி யாதே யூழ்வினை
சூழும் வெந்துய ராலே தாளுயிர் — சுழலாதே;
யாடும் வெம்பணை மார்நீள் காரர
வூறு கண்டிட மேல்விழ் தோகையி
லாரும் வண்குப ரேசா வாதிரு — புயவேளே-
யாரு நின்னரு ளாலே தாழ்ம
வாண்மை தந்தருள் வாழ்வே தாழ்வற
வாதி நந்தவ நாயேன் வாழ்வுற — வருள்வாயே;
யோடும் வெங்கதி ரோடே சோமனும்
ஊழி யண்டமு லோகா லோகமு
மூரு மிந்திர னுரு தேவரு — மடிதேனே-

னகம்-கூந்தல். மரகத-பச்சைநிறமுள்ள. விகட-ஆச்சரியமான. புனிதம்-இங்கிதம். வைத்த-(தாற்பரியம்)தழுவிய. எழுபுவனம்-ஏழுலோகம். தெறிக்க-தெறித்துவிழ. எழு-மேலெழுகின்ற. சயிலம்-கிரௌஞ்சமலை. அந்தரத்தர்-ஆகாயவாசிகள். அரிஅரபங்கயத்தர்-திரிமூர்த்திகள்.

(௮௪) குழை-காது. குறை-கொள்ளை. சூறையகம்-வஞ்சகமனம். மருள்-மயக்கம். வதம்-குற்றம். பணம்-படம். கார்அரவு-கரியபாம்பு. ஊறுகண்டிட-புண்பட. தோகை-மயில். ஆரும்-நிறையும் ஆண்மை-வீரம். ஓடும்-ஓடுகின்ற. சோமன்-சந்திரன். லோகாலோகம்-எல்லாஉலகமும். மையூரும்-மேகத்திலூர்ந்துசெல்லும். நாளும்-பலவித. ஊழி-(தே) ஊழுகின்ற. அம்புயன் - தாமரைப்

ஊதி டம்புயன் வேலா வாலய
மூடு தங்கிய மாலா யாரண
னோது வெண்டிரை நீர்மார் பூடுற — விடும்வேலா;
வேடு கொண்டுள வேடா வேடைய
வேழம் வெம்புலி போலே வேடர்கள்
மேவு தண்புன மீதே மாவொடு — மிதண்மேவி-
மேக மென்குழ லாய்நீ வாவென
மேவு கந்தசு வாமீ மாதமிழ்
வீறு செந்திலின் மீதே மேவிய — பெருமாளே.

(௮௫) படிதனி லுறவெனு மனைவர்கள் பரிவொடு
பக்கத் திருபல கத்திட் டுத்துயர் — கொண்டுசோரப்-
பணிமர விறகிடை யழலிடை யுடலது
பற்றக் கொட்டிக ளடிச் சுட்டிடு — துன்பமேவி;
கடிசம னுயிர்தனை யிருவிழி யனலது
கக்கச் சிக்கென முட்டிக் கட்டிய — டைந்துபோமுன்-
கதிதரு முருகனு மெனநினை பவரொடு
கற்பிற் புக்கறி வொக்கக் கற்பது — தந்திடாயோ;
வடகிரி தொளைபட வலைகடல் சுவறிட
மற்றைத் திக்கினு மெட்டுத் திக்கினும் — வென்றிவாழ-
வலியுட னெதிர்பொரு மசுரர்கள் பொடிபட
வட்டத் திட்டியர் வெற்பைக் குத்திமு — லைந்தவேலா;
அடர்சடை யிசைமதி யலைசல மதுபுனை
யத்தற் குப்பொருள் கற்பித் தத்தரு செந்தில்வாழ்வே-

பூவிலுள்ள பிரமன். வேலாலயம்-கடல். மால்-விஷ்ணு. ஆரணன்-ஆ ... ராயப்பட்டவேதத்திலுள்ள ருத்திரன். ஓத-துதிக்க. வெண்டிரை - வெள்ளிய அலைகளையுடைய கடல். வேடு-வேடத்தன்மை. வேடா-வேஷத்தையுடையவனே. வேடைய-வெப்பமுள்ள. வேழம்-யானை. இதண்-பரணில். வீறு-பெருமை(பொருந்திய). வேலாவலயமென்பது வேலாவாலயமென விகாரமாயிற்று.

(௮௫) படி-பூமி. உறவு-சுற்றம். பரிவு-அன்பு. கத்து-கதறுதல். விறகிடை-விறகினிடத்துள்ள. கடி-கோபிக்கின்ற. முட்டி-எதிர்த்து. கட்டி-கட்டப்பட்டு. கற்பில்-படித்தலில். புக்கு-புகுந்து. வடகிரி-மேருமலை. சுவறிட-வற்ற. வட்டத்திட்டு-வட்டமாகிய மேட்டில். அடர்-நெருங்கிய. வடிவொடு - உருவத்

யடிமுதன் முடியிரவும் வடிவொடு தொழுமவு
ரெத்தித் பத்திகொள் நித்தச் சுத்தர்கள் — தம்பிரானே.

(௮௬) புரக்க வந்தநங் குறக்க ரும்பைமென்
புணர்த்தி லன்றுசென் — றுறவாடிப்
புடைத்த லங்கிர்தம் படைத் தெழுந்ததன்
புறக்க ரும்பைதின் — புயமீதே;
செருக்கு தெந்தநங் களிக்கு மன்புடன்
இளைக்கு நின்றிடர் — புகழாதிக்
த்ரிபக்க டந்தமத் தலைக்கலர் மணிமென்
றிபக்க மென்றெழுதிக் — இடுவேனோ;
குரக்கி னங்கொணர்த் தரக்கர் தண்டமுங்
குலைத்தி லங்கையுந் — தழலாகக்-
கொதித்து வெம்பியங் கதிர்த்து வந்துடன்
குதித்த கொண்டலின் — மருகோனே;
சுரக்க வம்பரும் பரப்பு சண்டசித்
துரத்த வும்பிறந் — திறவாத-
சுகத்து வன்பருந் துதிக்க செந்திலில்
துதிக்கு மும்பர்தம் பிரா — பெருமானே.

(௮௭) புகரில் சேவல செங்கர சங்கம
நிருதர் கோபக்ர வஞ்சகெ டுங்கிரி
பொருத சேயக குன்றுறை பெண்கொடி — மணவாளா-

துடன். மவுனம் - யோகம். நித்தம்-நித்தியம். முருகனும் என்பதன் உம்மை, அனைவர்க ளென்பதனோடு கூட்டுக.

(௮௬) புரக்க-காக்க. குரும்பை-தென்னம்பிஞ்சுபோன்ற முலை. இளைக்கும்-அநுபவிக்கும். இரிபக்கடம் - பஞ்சேந்திரியங்களிடமாகிய சரீரம். அலக்கண்மன்றிப் - துன்பம்நெருங்கும். இயக்கம் - மயக்கம். கொணர்ந்து-சேனைகொண்டு. தண்டமும்-கொடுங்கோன்மையும். குயிலு-மலையிலுறைகின்ற. பரப்புக் குறிக்க-(காருபரியம்) தோன்றிய. துரக்க-சொர்க்கலோகத்தையுடைய. பரப்பு-விரிகின்ற. சண்ட-வேகத்தையுடைய. சித்தாந்தர் - (வெள்ளை), யானையுடைய இந்திரன். உவ்-கருதுகின்ற. துறக்க என்பது எதுகைநோக்கித் துக்க வெனருயிற்று.

(௮௭) புகர்-குற்றம். சேவல-கோழிக்கொடியுடைய. சங்கம-கூட்டமுடைய. பூசுரர்-பூதேவர்; பிராமணர். புயகபூதர-சர்ப்பங்கள்வசிக்கும் மலையுடையவ

புளித பூசர ருஞ்சர ரும்பணி
புயக பூதர வென்றிரு கண்புனல்
பொழிய மீமிசை யன்புத ரும்பிய — மனஞானி;

அகில பூதவு டம்பு முடம்பினி
லமரு மாருயி ருங்கர ணங்களு
மவுன வார்வமு குந்ததொ மூந்தனி — யுணர்வாலே.

யகில வாதிக ளுஞ்சம யங்களு
மடைய வாமென வொன்றென நின்றதை
யறிவி லேனறி யும்படி யென்றருள் — புரிவாயே;

மகர கேதன முந்திகழ் செந்தமிழ்
மலையின் மாருத மும்பல வும்பரி
மளசி லீமுக மும்பல மஞ்சரி — வெறியாடு-

மதுக ராரவ சிஞ்சினி யுங்கன
மதுர கார்முக மும்பொர வந்தெழு
மதன ராசனும் வெந்துவி ழும்படி — முனிவாரும்;

முகுள்வி லோசன முஞ்சிறு திங்களு
முதுப கீரதி யும்பணி யுஞ்சடை
முடியர் [illegible] லில்வி ளங்கிய — வயிராமி-

முகுர நூபுர பங்கய சங்கரி
கிரிகு மாரிதி ரியம்பிகை தந்தருள்
முருக வேள்வளர் செந்திலில் வந்தருள் — பெருமானே.

னே. துரும்பிய-ததும்பிய. மனஞானி-மனத்தையுடையஞானி. அகில-எல்லா. பூதவுடம்பு-பஞ்சபூதபரிணாமங்களாகிய சரீரமும். கரணங்களும்-அந்தக்கரணங்களாகிய; மனம் புத்தி சித்தம் அகங்காரங்களும். மவுனம்-அடங்கும். ஆர்வம்-ஆசை. அகிலவாதிகளும்-எல்லாவாதிகளும். அடைய-முழுவதும். ஆமென-ஆமென்றுசொல்ல. ஒன்றென-ஏகமாக. நின்றதை-நின்ற தத்துவத்தை. மகரகேதனம்-மீனக்கொடி. மாருதம்-தென்றற்காற்று. பரிமளசிலீமுகம்-வாசனையுள்ள புட்பபாணமும். மஞ்சரி-பூங்கொத்துக்களில்வசிக்கும். மதுகரம்-வண்டாகிய ஆரவம்-முழக்கத்தையுடைய. சிஞ்சினியும்-வில்லிற்கட்டும் கயிறும். மதுரகார்முகமும்-இனிமையுடைய கரும்புவில்லும். பொர-சண்டைசெய்ய. முகிழ்விலோசனமும்-(யோகத்திலிருக்கும் போது) மூடியகண்ணும். முது-பெரிய. பகீரதி-கங்காநதி. பணியும்-பாம்பும்(உடைய). முகுர-தளிர்போன்ற. பங்கயம்-(நூபுரம்) பாதம். கிரிகுமாரி-மலையரையன்மகள்.

(௮௮) அதல சேட னாராட அகில மேரு மீதாட
அபின காளி தானாட அவளோடன்-
றதிர வீசி வாதாடும் விடையி லேறு வாராட
அகில பூத வேதாள மலையாட;
மதுர வாணி தானாட மலரில் வேத னாராட
மருவு வானு ளோராட மதியாட-
வனச மாமி யாராட நெடிய மாம னாராட
மயிலு மாட நீயாடி வரவேணும்;
கதைவி டாத தோள்வீம னெதிரி யான போர்வீரி
கருதொ ணாத பாவே[illegible]னை பொடியாகக்-
கதறு காலி போய்மீள வி[illegible]ய னேறு தேர்மீது
சதிகொள் வீறு கோடூதி யலையோது;
உததி மீதி லேசாயு முலக மூடு சீர்பாத
உவண மூர்தி மாமாயன் மருகோனே-
உதய தாம மார்பான ப்ரபுட தேவ மாராஜ
னுளமு மாட வாழ்தேவர் பெருமாளே.

(௮௯) உததியின்முறை கதறிய[illegible]ருமாசையற
பறைதிமிலை முழவின்இசை யாகாச மீதுமுற
வுலகிலுள பலசிவிகை வாய்மீதி லேசொரிய மங்களாளி-
உனதுமுக கருணைமல ரோராறு மாறிருகை
திரள்புயமு மெழில்பணிகொள் வார்காது நீள்விழியு
முபயபத மிசைகுலவு சீரேறு நூபுரமு மங்கமார்பும்;

(௮௮) அதலம்-பாதலம். அகிலமேரு-உலகத்தைத்தாங்கும் [illegible]மேரு மலை. அபினை - [illegible]. அதிர - முழங்க. வீசி-நீட்டி. அகிலபூத வேதாளம் - எ[illegible]களாகிய வேதாளங்கள். கதை-தண்டாயுதம்-எதிரி-பகைவன். போர் வீரி - யுத்தவீரனான துரியோதனன். காலி - பசுக்கூட்டங்கள். வீறு - பெருமையுடைய. கோடு - வெற்றிச்சங்கு. உததி - கடல். சாயும் - கண்படுக்கும். உலகம் மூடும் - பூமியை யளக்கும்போது மறைக்கும். உவணமூர்தி - கருடவாகனத்தையுடையவன் - உதயதாமம் - புதியமாலை-ப்ரபுடதேவமாராஜன் - அருணகிரிநாதரை யாதரித்துவந்த ஓரரசன்.

(௮௯) திமிலைபறை-திமிலையென்னும் வாச்சியம். இசை-ஒலி. மீது[illegible]-மேலே பொருந்த. பணி - குண்டலங்களாகிய ஆபரணம். உபயம் - இரண்டு

மறையறையு மமரர்தரு பூமாரி யேசொரிய
மனுவொழுகு காளமணி மீதேழு நூலுமொரு [தூ-
மயிலின்மிசை யழகுபொலி தாளவு ளடியர் வந்துக-
மறலிபடை யமபுரமு மீதோட வேபொருது
விருதுபல முறைமுறையி லேயூதி வாதுசெய்து [யோ;
மதலையொரு குதலையடி நாயேனை யாளவிங்ஙன் வந்திடா
பிறையெயிறு முரணசுரர் பேரோது பாரில்விழ
வதிரவெழு புவியுலக மீதேழு மோலமிட [கம்-
பிடிகளிறு வரிநிரைகள் பாழாக வேதிசையி னின்றநா
பெரியநெடு மலையிடிய மாவாரி தூளியெழ
பெரியதொரு வயிறுடைய மாகாளி கூளியொடு [றதிரா;
பிணநிணமு முணவுசெய்து பேயோடு மாடல்செய வென்
குறமறவர் கொடியடிகள் கூசாது போய்வருடை
கரடிபுலி இளிகடிய வாராத காதன்மிகு
குளிர்கனியி னிளமரம தேயாகி நீடுபுயர் குன்றுலாவு-
கொடியதொரு முயலகனின் மீதாடு வாருடைய
வொருபுறம துறவளரு மாதாபெ ருவருள்செய்
குமரகுரு பரவமரர் வாநாடர் பேணவருள்தம்பிரானே.

(௯௰) குயிற்பரிய குழற்கும்மதி
நுதற்புருவ விலுக்குமிரு
குழைக்குவடு விழிக்குமெழு குழலாலும்-

மறை அறையும்-வேதமோதும். மனுவொழுகு - [illegible]முகப்பட்ட. காள-[illegible] (அடியார்க்காக்கு) முயற்சியுடையவனே. உன்றல்-உ[illegible]து. மறலி - யமன். [illegible]து - விருதாகியவெற்றிச் சங்கம். இங்ஙன் - இவ்விதத்து. எயிறு - பல். [illegible] அதிர - ஓசையுண்டாக. பிடி - பெண்யானை. அரிநிரை-குதிரை [illegible] எழுபுவி [illegible] - ஏழுபூமிகளும் [illegible]. கூளி - பூதம். நிண வரிசை. நாகம்-பாம்புகள். மலை - அட்டகுலபருவதம். [illegible] அடிகள் - கால்கள் [illegible]ம் - கொழுப்பு. கொடி - கொடி போன்ற வள்ளி[illegible]. ஆராத- அடங் [illegible] வருடை-மலையாடு. கடிய. (தினைப்புனத்தினின்று) வி[illegible]ட. மாதா - தாயாகிய உமா [illegible]காத. கனி-வெங்கை-முயலகன்- ஒருபூதத்தலைவன் - [illegible] யமபுரமும் என்பதின் [illegible] தேவி. பெரு-பெற்ற. மீதும் என்பதின் உம்மும் [illegible] உம்மும் சாரியைகள்.

(௯௰) குயிற்பரிய - கருதற்கரிய. விலுக்கும் - வில்லுக்கும். குழை- [illegible]ாது. வடு - மாவடுப்போன்ற. எழு - எழுகின்ற - குழலாலும் - குழலோசை

கொடிப்பவள விதழ்க்குமிழு
　　கடர்க்கரள மெகக்குழுமு
　　திலக்குமிக வுறக்கழுவு　　　　குறியாலும்;

அறப்பெரிய தனத்துமுக
　　ளைடக்குமிளி விடைக்குழல
　　ரதக்குமிள நகைக்குமுள　　　　மயராதே-

யகத்தியமெ நெரைக்கபொரு
　　ளளித்தருளி யபிப்பிரம
　　ரளப்பரிய பதக்கமல　　　　மருள்வாயே;

கறுத்தடரு மரக்கரணி
　　கருக்குலைய நெருக்கியொரு
　　கணத்திலவர் சினக்குடர்கள்　　　　கதிர்வேலால்-

கறுத்தருளி யலக்கணுறு
　　சுரர்க்கவர்கள் பதிக்குரிமை
　　யளித்திடரை யறுத்தருளு　　　　மயில்வீரா;

செறுத்துவரு கரித்திரள்கள்
　　திடுக்கிடமன் மருப்பையுரி
　　சினத்திமொடு பறித்தரிசெய்　　　　பெருகானிற்-

செலக்கருதி யறக்கொடிய
　　சிலைக்குறவர் கொடிக்கனது
　　சிறுத்தனமு முறத்தழுவு　　　　பெருமாளே.

போன்ற சொல்லுக்கும். கொடி - நீண்ட. அமுதினுக்கும் (ஆகுபெயர்) றைய அமுதமிற்கின்ற அவயவங்களுக்கும். குறியாலும் - அல்குலுக்கும். அற-மிக. தனத்து - முலைக்கும். மினின் - மின்னல் போன்ற. இளநகை - புன்சிரிப்பு. அயராது - வாடாமல். கறுத்து - கோபித்து. அடரும் - நெருங்கும். அணி-சேனை. கணம்-செருப்பு. கருத்து-(தாற்பரியம்) அறுந்து. அலக்கண் - துன்பம். உரிமை - தந்தாம். இடர் - அத்துன்பத்தை. செறுத்து-கோபித்து மன்-நிலைபெற்ற. அரி - சிங்கம். பெருகானில் - பெரியகாட்டில். சிறுத்தனம் - சிறியகொங்கை. குழலாலும், குறியாலுமென்ற வற்றில் ஆல் இரண்டும் குவ்வுருபுப் பொருள்கள் கொண்டன. தனத்துக்கு மென்றதில், குவ்வுருபு மறைந்தது.

(௬௪) பழுதற வோதிக் கடந்து
　　பகர்வன நீதத் துறந்து
　　பலபல யோகத் திருந்து　　　　மதராசன்-

பரிமள பாணத் தயர்ந்து
　　பனிமட வார்கற் கிசைந்து
　　பரிதவி யாமெய்த் தளர்ந்து　　　　மயல்கூர;

அழுதழு தாசைப் படுங்க
　　ளையிதவ மாதர்க் கிரங்கி
　　யவர்பிர மாணத் தகைந்து　　　　மறைபோய்நின்-

றழிவுறு நான்முற் பயந்த
　　விதிவச மோமற் றுமுன்ற
　　னருள்வச மோவிப் ரமந்தெ　　　　ரிகிலேனன்;

எழுதரு வேதத் தமன்றி
　　முழுதினு மாய்நிற் குமெந்தை
　　யெனவொரு ஞானக் குருந்து　　　　றருள்மேவு-

மிருவுரு வாகித் துலங்கி
　　யொருதன தூணிற் பிறந்து
　　இரணியன் மார்பைப் பிளந்த　　　　தனியாண்மை;

பொழுதிசை யாளிக் ரமன்றன்
　　மருகபு ராரிக் குமைந்த
　　புளகப டீரக் குரும்பை　　　　யுடன்மேவும்-

---

(௬௪) கடந்து-(கலைஞானத்தை) நீங்கி. பகர்வன - சொல்லப்படுவன வாகியபிரபஞ்சம். நீர - முழுவதும். பனிமடவார்தமக்கு - (குறித்தபெண்கள் தமக்குரியர்மையால்) பணங்களுக்காற் செய்யப்பட்ட ஒளிமைமேலேறுதற்கு. பரிதவியா - பரிதவித்து. அபிநவ - ஆச்சரியமுடைய- பிரமாணத்து - (வாய்ச்) சத்தியத்தால். அறைபோய் - ஒட்டைபட்டு. இப்ரமம் - இந்தப்பிரமை. முழுதினும் - எல்லாப்பொருளிலும். ஆய் - வியாபகமாய். குருந்தர் - குருந்தமரத்தடியிலெழுந்தருளிய சிவபிரான். இருவுரு - நரசிங்கவடிவம். தனியாண்மை - ஒப்பற்றவீரம். பொழுது - காலந்தோறும். இசையாளா - இசைதலாகிய விக்ரமன் - மிகுபலத்தையுடைய விஷ்ணு. புராரி - திரிபுரமெரித்த சிவபிரான். புளகம் - இங்கிதம் - படீரம் - சந்தனம். குரும்பை - குரும்பைபோன்ற கொங்கை. புயகிரி - (உம்முடைய) புயம்போன்ற கிரியாகிய. வாம: அழகிய.

புயநிரை வாமச் சிலம்பின்
வனசர மாதுக் குகந்து
புனமிசை யோடிப் புகுந்த பெருமாளே.

(௬௨.) புருவத்தை நெறித்து விழிக்கயல்
பயில்விட்டு வெருட்டி மதித்திரு
புறவட்டை மினுக்கி யளிக்குல மிசைபாடி.

புயல்சற்று விரித்து நிரைத்தொளி
வளைமிட்ட கரத்தை யசைத்தகில்
புனைமெத்தை படுத்த பளிக்கறை தனிலேறி

சரசத்தை விளைத்து முலைக்கிரி
புளகிக்க வணைத்து நகக்குறி
தனைவைத்து முகத்தை முகத்துட னுறமேவிக்

தனிவித்தி ரதத்த தரத்துமி
முமுதத்தை யளித்து மிருக்கியல்
தருபித்தை யகற்றி யுனைத்தொழ நயல்வேனோ;

பாதத்தை யடக்கி நடிப்பவர்
த்ரிபுரத்தை யெரிக்க நகைப்பவர்
பரவைக்குள் விடத்தை மிடற்றிடு பலிதேடு

கரபப் பரையுற்று மிகப்பசி
தநியுற்ற சிரத்தை நிறைத்துயர்
ரரவத்தை யொருப்ப விருப்பவ ளாளர்;

சிலம்பின் - மலையிடத்து வனசமான் - வேடப்பெண். மேவும் என்பதுமா னென்பதனோடு முடியும்.

(௬௨) நெறித்து - முரிப்புக்கொள்ள வளைத்து. பயில்வு. (தாற்பரியம்)- கன்னம் - வெருட்டி மருளச்செய்து. மதி - சந்திரன்போன்ற. திரு - நெற்ற. புறவட்டை - புதிய வட்டவடிவமாகிய முகத்தை. புயல - மேகம்போன்ற கூந் தல். நிரைத்து வரிசைப்படுத்தி. அகில் - அகிற் கட்டைப்புகை. படுத்த - விரி த்த - பளிக்கறை - பளிங்கு மண்டபம். புளகிக்க - இங்கிதங்கொள்ள. தனி வித்து - மேழ்தாழ்த்தி உபசாரஞ் செய்தென்றபடி. இரதத்து - இனிமை யுடைய. அதரத்து - வாயிதழினின்றும். இயல்தரு-பொருந்துகின்ற. பித்தை- மயக்கத்தை. பாதத்தை. பாதநூல்விதியை. அடக்கி - அமைத்து. மிடற்றி டு-கண்டத்திலணிந்த. பலிதேடு - பிச்சையிருந்த. கர - கையிலுள்ள. கப்பரை- பாத்திரம். சிரத்தைப்பற்றநரிதி - தலையையடைந்த கங்கையை, நிறைத்து.

கரர்சுந்தர் மனத்து றைவித்தகர்
பனிபத்தர் பதத்தை யுறப்பவர்
கடலைப்பொ டியைப்ப ரிசிப்பவர் விடையேறிக்

துளைபொத்த பதத்த வரெற்றிடு
மதனைக்க டிமுத்தர் கருத்தமர்
நலைவற்ற கிர்பைக்கு ருவித்தருள் பெருமானே;

(௬௩.) அளகநிரை குலையவிழி
குவியவளை கலகலென
வமுதமொழி பதறியெழ வலியார்-

மழகொழுகு புளகமுலை
குழையவிடை துவளவிக
வமுதநிலை யருள்பரவ வதிமோகம்;

உளமுருக வருகலவி
தருமகளிர் கலவிதனி
லுழலுமதி கவடுமதி யொழியாதோ-

உலகடைய மயிலின்மிசை
நொடியளவு வருமள்வி
னொருதமது மலரடியை யருள்வாயே;

வளையுமலை கடல்சுவற
விடுபகழி வரதனெதிர்
மருதினொடு பொருதருளு மபிராமன்-

வரியரவின் மிசைதுயிலும்
வரதசய மகள்கொடுமை
மருகியமர் முடிகிவிடு திருநேசன்;

உயர் அரவம் - மார்பைப்பொருந்திய உயர்ந்தசர்ப்பம். (இவ்விரண்டிலும்) ஒருப்ப -ஒற்றுமைப்பட. விருப்பவர் - ஆசையையுடையவர். பரிசிப்பவர்-பூசிய வர். பதத்தவர்-திருவடியையுடையவர். எற்றிடு-மோதுகின்ற. கடி-கோபிக் கின்ற.

(௬௩) அளகநிரை - கூந்தல்வரிசை. பதறி - விரைந்து. ஆரம் - முத்து மாலை. புளகம் - இங்கிதம். நிலை- அந்தந்த இடங்களில் அருள் - அருள்போல. பரவ - வியாபிக்க. கலவி - புணர்ச்சி. கலவி - சேர்க்கை. உழலுமது-வரு ந்துகின்ற அச்செய்கை (யுடன்). உலகு அடைய - உலகமுழுவதும். நொடி யளவு நொடிப் பொழுதளவில். வரும் - சுற்றிவரும் அளவில்) ஏண்ணுக்கட

நளமுறிய வரைதகர
வசுரருடல் நலிசிதற
நகனமெழ முடுகிவிடு வடிவேலா
தரளமணி வடமிலகு
குறவர்திரு மகள்கலவை
சகலகலை யெழுதவல பெருமாளே.

(௧௯௪) சுட்டது போலாசை விட்டுல காசார
துக்கமி லாஞான சுகமேவு
சொற்கரு ணாநீத நற்குண மூடாடு
சுத்தநி ராதார வெளிகாண;
மொட்டலர் வாரிச சக்ரச டாதார
முட்டவு மீதேறி மதிமீதாய்
முப்பது மாறாறு முப்பதும் வேறான
முத்திரை யாமோன மடைவேனோ;
எட்டவொ ணாவேத னத்தனி சேர்கோவெ
னப்பெரு மான்மேவு வரைசாய
வெற்றிய வேழாழி வற்றிட மோருத
வெத்தனை யேகோடி யசுரேசர்;
பட்டொரு சூர்மாள விக்ரம வேலேவு
பத்திரு தோள்வீர தினைகாவல்
பத்தினி தோடோயு முத்தம மாறுத
பத்திசெய் வாருடை பெருமாளே.

ங்கார. சுவற-வற்ற. எதிர்-எதிர்க்கின்ற. மருது-மருதமரமாகிய அசுரன். அபிராம-அழகுடைய. வ[illegible]த-விஷ்ணுபோன்றவனே. சயமகன்-தார்க்[illegible]க. (செய்யும்) கொடுமை-கொடுமைக்கு. மறுகி-மனஞ்சுழன்று. அமர்-போரை. முடுகிவிடு-[illegible]து நடாத்து. நிருதேசன்-சூரன். தனம்-சேனை. தகனம்-சுடுதல்.

(௧௯௪) சொல்-சொல்லப்படுகின்ற. காருணீத- அந்தக்கரணங்களுக்கப்பாற்பட்ட. நிராதாரவெளி- ஆதாரமற்றசிதாகாயம். வாரிச-தாமரைப்பூவையுடையாய். சக்ர-சக்கரத்தையும் சடாதார-ஆறு தாரங்களையுமுடையவனே. முப்பதும்ஆறாறுமுப்பதும்-தொண்ணூற்றாறு தத்துவங்களும். முத்திரையாம்-அடையாளமாம். மோனம்-மௌனநிலை. எட்டவொணா - காணக்கூடாத. னத்தனிசேர-சங்கத்தரித்தவிஷ்ணு. சேர்கோவென-ஐயோவென்றலற. பெருமான்-பெருமையுடையவனாகிய தாரகாசுரன். வரை-கிரௌஞ்சமலை. எற்றிய-மோதிய. சூர்-சூரபன்மன்-விக்ரம-பராக்கிரமத்தையுடைய.

(௧௯௫) முருகம யூரச் சேவக
குறமக ளாசைப் பூதர
முகுளப டீரக் கோமள முலைமீதே
முழுகிய காதற் காமுக
பசுபதி பாசத் தாய்வினை
முதியபு ராரிக் கோதிய குருவேயென்;
அருகியு மாடிப் பாடியு
மிருகம ணாடிச் சூடியு
முணர்வின ராடிக் கூடியும் வழிபாடுற்;
அலகிலொ ராசைப் பாடற
நிலைபெறு ஞானத் தாலினி
யுனதடி யாரைச் சேர்வது மொருநாளே;
மருகனெ னுமற் குழ்தொலை
கருதிய மாமப் பாதகன்
வரவிடு மாயப் பேய்முலை பருகாமுன்
வருகரி யானைக் கோடவை
திருகிவி ளாவிற் காய்கனி
மதுரையில் வீழச் சாடிய விதமார்புட்;
பொருநிகல் சோரப் பாரிய
மருதிடை போயப் போதொரு
சகடுதை யாமற் போர்செய்து விளையாடி
பொதுவியர் சேரிக் கேவளர்
புயன்மரு காவச் ராயுத
புரவதி பாபுத் தேளிர்கள் பெருமாளே.

---

(௧௯௫) சேவக-வீரனே. பூதர-மலைபோன்ற. முகுளம்-மலர்தல். படீரம்-சந்தனம். கோமளம்-இளமை. காமுக-விடாயுள்ளவனே. பசுபதிபாச திரிபதார்த்தங்களின். தாய்வினை-பரிசுத்தத்தொழிற்றன்மையை. [illegible]மைய. உணர்வினோர்-அறிவுடையா (ருடன்) ஆடி-விளையாடி. மருகன்-மருமகன். மாமப்பாதகன்-மாமனாகிய கஞ்சன். பேய்-பூதனையாகியதாய். பருகா-உண்டு. கரியானை-கரியாகிய குவலயாபீடமென்னும்யானை. கோடுஅவை-கொம்புகளை. விளாவில்-விளாமரத்தில். மதுரையில்-வீரத்தால். ஆர்-பொருந்திய. புள்-பறவையை. பாரிய-பருத்த. மருது-மருதமரம். சகடு-பண்டி. உதையா-உதைத்து. சேரிக்கு-இடைச்சேரியில். வச்ராயுதபுர அதிபா - இந்திரலோகத்துக்கரசனவனே. விளாமாமுதலியவைகளெல்லாம், கஞ்சனால் விடப்பட்ட ஒவ்வோரசுரர்கள்.

(௧௬) திடமுடை யசுரர் மணிமுடி சிதற
வயிறனை முடுகி — விடுவோனே
திரிபுர மதனை யொருநொடி யதனி
லெரியெழ நகைசெய் — சிவன்வாழ்வே
படவரை யதனை யுருவிட வெறியும்
அயின்முக முடைய — வடிவேலா
பசலைகொ டணைபு பிணமுலை மடவர்
படர்விடு மதனி — டலாமோ
கடகரி முகமொ டிடவயி றுடைய
கணபதி பிறகு — வருவோனே;
கனதன முடைய குறவர்கள் சிறுமி
கருணையொ டணைபு — ணர்மார்பா
அரவணை யுடைய வரிதிரு மருக
அவனியை முழுது — முடையோனே
அடியவர் வினைபு மமரர்க டுயரு
மறவற முடைய — பெருமாளே.

(௧௭) துன்றுமரு வேள்கைக் — கணையாலே
தொல்லைநெடு நீலக் — கடலாலே
மென்மருவு சோலைக் — குயிலாலே
மெய்யுருகு மானைத் — தழுவாயே
தென்றனிழ் சேரத் — தெரிவோனே
செய்யகும ரேசத் — திறலோனே
வள்ளல்தொழு ஞானக் — கழலோனே
வள்ளிமண வாளப் — பெருமாளே.

(௧௬) அயில்-வேல். எரி-அக்கினி. பட-இறக்க. வரை-கிரௌஞ்சமலை. பசலை-பச்சைநிறம். படர்-துன்பம். இடல்-தள்ளுதல். கடம்-மதம். இடவயிறு-பெருவயிறு-சிறுமி. இளம்பெண். அவனி-பூமி. அற-செட.

(௧௭) துன்றும்-தடிக்கும். தொல்லை-பழைய. சேர-முழுவதும். திறலோன்-வலிமையுடையவன், வள்ளல்-கொடைத்தன்மையுடையசிவபிரான்.

(௧௮) கருப்பத் — தூறிப் — பிறவாதே
கனக்கப் — பாடுற் — றழியாதே
திருப்பொற் — பாதத் — தநுபூதி
சிறக்கப் — பாலித் — தருள்வாயே
பரப்பற் — றாருக் — குரியோனே
பரத்தப் — பாலுக் — களியோனே
சிறக்கைச் — சேவற் — கொடியோனே
செகத்திற் — சோதிப் — பெருமாளே.

(௧௯) பட்டுப்ப டாத — மதனாலும்
பக்கத்து மாதர் — வசையாலும்
சுட்டுச்சு டாத — நிலவாலும்
துக்கத்து நான் வாடி — யலைவேனோ
தட்டுப்ப டாத — மயில்வீரா
தக்கத்தி ருவி — தருபாலா
மட்டுப்ப டாத — பெரியோனே
மற்றொப்பி லாத — பெருமாளே.

(௨௰) விடமென வயிலென வடுவென நடுவென
மிளிர்வன சுழல்விழி
வித்தைக் குப்பக ரொப்புச் சற்றிலை — யென்றுபேசும்
விரகுடை வனிதைய ரணைமிசை யுருகிய
வெகுமுக கலவியில்
விச்சைய பட்டுயிர் தட்டுப் பட்டுமு — ழன்றவாடும்

(௧௮) கரு-கருப்பத்தில். பத்து-பத்துமாதம். கனக்க-மிகுக்க. பாடு-துன்பம். அநுபூதி-கைவந்தபயன். பரப்பு-(விஷயங்களின்) விரிவு. பரத்து-பிரமத்தின். அப்பாலுக்கு-அப்புறமாயுள்ள இடத்துக்கு. அளியோன் [illegible]வன்.

(௧௯) பட்டு-இறந்து. படாத-(இரதிதேவிவேண்டுதலால் அருவமாகி) இறவாமையடைந்த. சுட்டு-வெதுப்பி. சுடாத-சாம்பராக்காத. தட்டு-(யுத்தகளத்தில்) தடை. தக்கத்திருவி-தக்கன் யாகத்திற்பிறந்த மூக்கவர்ச்சூலத்தையுடைய உமாதேவி. மட்டு-அளவு. மற்றொப்பு-(தனக்குத்தானேசமானமாதலன்றி) வேறு உவமானம்.

(௨௰) நடு-யமன். மிளிர்வன-விளங்குவனவாகி. வித்தை-மாயவித்தை. பகர்-சொல்லுகின்ற. பேசும்-பேசப்படும். விரகு-உபாயம். வெகுமுக-பலவித.

நடலையி லுநின்பிக வுரியவு ரவியானே
கமண்கிரி நிகழ்து
கட்டிக் கிங்கென வொக்கப் பெருக்கொடு கோலங்கோ [டி-
நகைதர குழிலிடு மணிவளை யுறழ்பவ
நகைமயம் நிறைவுற.
முத்திக் குட்டமி ரிப்பத் தக்கவம் ருந்திடாதே;
இடியென வதிர்குர லிசைசர் குலபதி
யிருபது கரம்புய
மற்றுப் பொற்றலை யற்றுத் தெறித்தொழி ந்தவாளி-
யெறிபெறு முகிலெழு கிலைவிக முகில்,
சிறுவிளை புரிமகள்
பச்சைப் பட்சியின் கைப்பற் றிட்டுமி கிந்தபோக;
படவரை யிடிபட வலைகடல் கனம்பட
மகவரை பொடிபட
மெய்க்கட் பெற்றிடு முக்கட் கட்செவி வடசைகூடன்-
மணிமுடி சிதறிட வலைகயல் பகைபட
வலதட வடமிட
முட்டிப் பொட்டெழ வெட்டிக் குத்திய தம்பிரானே.

கட்டிப்பட்டு-வருத்தப்பட்டு. நடலையில்-பொய்யிருப்பிடத்தில். தமியனை-தனியனாகியவென்னை. கிரன்-கூட்டம். கிட்டிக்கை-விரைவாக. ஒக்க-ஒருமிக்கை. கைக்கொடு-கைப்பற்றி. நகை-மணம். சித்தம்சுத்தம்-அறிவில்லாதவே. நிசெர்-இரவிற் சஞ்சரிப்பவராகிய இராக்கதர். பொற்றலை - பொன்முடிதரித்தலை. தொக்குற்று-தோலினிடத்து. எரி-அக்கினி. கிலைமினர்-வில்லையுடைய இருமாலின். நெறிவினை - கிரியதொழில்; அக்காலத்து நினைப்புணர் காத்தல். மகள்-புத்திரியாகிய. பச்சைப்பட்சி-பசுங்கிளி, வள்ளிநாயகி. கைப்பற்றிட்டு-கையைப்பிடிக்கும். இந்தபோக - உயர்ந்தபோகத்தையுடைய வுலகிலா. தனர்-தனர்மி. மகவரை- இளையமலையாகிய கிரௌஞ்சகிரி. முக்கண்-கொடுமை. கட்செவி-கண்ணே காதாகவுடைய ஆதிசேடன். வலதுதட-வலிமையுடையதாகிய சரீரம். வடமிட-(வடத்துறையாய நின்று) கூத்தாட. பொட்டு-இரத்தத்துளி.

முற்றிற்று.

இவ்வருட்பாவுரை யெழுதியவர்,
மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான்,
ஸ்ரீ மு. ரா. அருணாசலக் கவிராயர்.

திருப்புக ழருளிச்செய்த
அருணகிரிநாதர் சரித்திரச்சுருக்கம்.

பிரமவிஷ்ணுக்களிருவரும் அகங்காரத்தால் முடியும் அடியுங்கண்டுவருவோமென்று சங்கற்பஞ்செய்து அன்னமும் பன்றியுமாகித்தேடி யறியப்படாத சிவபெருமான் அக்கினிப் பிழம்பாகின்ற திருவண்ணாமலை யென்னுந் திவ்ய க்ஷேத்திரத்திலே நீண்ட காலத்துக்குமுன் பட்டணத்துச் சுவாமிகள் துறவியாக வெழுந்தருளியிருக்கும் போது பூருவவினை வசத்தா லவ்வூரிலொரு கணிகைமாதைக் காதலித்து வெளிப்படுத்திய வீரியத்தை அம்மாதுசிகாமணி கையினாலே தாங்கிச் சேவாமுகத்தினு மினிமையாக வுண்டு மகிழ்ந்து, அன்னாள் கருப்பமுற் றிருந்தனள்; அக் கருப்பத்திலே கந்தவுலகத்தி லிருந்த [illegible] பொய்யாமொழிப் புலவர் முருகக்கடவுளைப் பாடமாட்டேனென்ற பாவநீங்குதற்காகப் பிறந்து பத்துமாதஞ்சென்ற பின் புத்திரராகத் திருவவதாரஞ் செய்தனர்.

அப்புத்திரனை மாதாவும் மாதாவைப்பெற்ற பாட்டியும் தங்கள் தொழிலுக்கேற்ற பெண்மகவைப் பார்க்கிலும் பெரும்பிரியம் வைத்து அருணகிரிநாதரெனப் பெயரிட்டு, அருமை பெருமையாக வளர்த்து வருவாராய் எவ்வெக்காலத்து எவ்வெச்சடங்கு செய்யவேண்டுமோ அவைகளை வழுவாமற் செய்து மனமகிழ்ச்சியுற்று ஐந்தாவதாண்டிலே வித்தியாரம்பமுஞ் செய்வித்தனர். பின்னர்ச் சிலதினங்கள் கழிந்தபின் அருணகிரிநாதருக்கு மாதாவானவள் தன்னுடைய மூத்தபிள்ளையாகிய புத்திரியை நோக்கி யுன்னுடைய தம்பியவன் தன்னுடைய பிறப்புத்தன்மையுடையவனாதலால் அவனுடைய மனம் கருப்பியாகும்படி நடந்து பாதுகாத்து வருவாயென்று சொல்லிவிட்டுத் தேகவியோக மாயினள்.

அவ்வாறே அருணகிரிநாதரை அவர் தமக்கையானவள் பாதுகாத்து வரும்போது அவர் கிரமப்படி யுபாத்தியாயர் சொல்வழி நடந்து கல்வியைக் கல்லாமற் பராமுகமாய்த்திரிந்து யௌவனப் பருவமடைந்து மிக்க விடபுருடராய் வேண்டியவாறு விலைமாதரைக் கலந்து காமமநுபவிப்பா ராயினர்.

இங்ஙன மநுபவித்தற்குக் கேட்கும்போதெல்லாம் வேண்டுந் திரவியங்களைத் தமக்கையானவள் கொடுத்துத் தொன்றுதொட்டுத் தொகுத்து வைத்திருந்த திரவியங்களையு மிழந்து தன்னாலே யீட்டப்பட்ட திரவியத்தையு மப்போதப்போது கொடுத்தும் காணாமல் வீடுமுதலிய நிலங்களையும் விற்றுக் கொடுத்து மிகத் தரித்திரத்தை யடைந்தனள்; அவற்றை யொரு சிறிதுங்கவனியாமலும் தம் மட்டிற் கொள்ளாதநோயெல்லாங் குடிகொண்டிருப்பதை நோக்காமலும் தம்மைக்கண்டவ ருவருப்பதைக் கருதாமலும் அருணகிரிநாதர் தமது தமக்கையிடம் மீண்டு மீண்டு திரவியங் கேட்டனர். அவள் அருமைத் தம்பியே யினி நீ யநுபவிக்கும் பொருளென்னைத் தவிர வேறொன்றில்லையே யென்ன செய்வதென, மனம் வருந்திநின்றனள்.

அந்தவார்த்தை வேறு பொருள்பட அருணகிரிநாதர் செவிவழிச்சென்று மனத்தைப் புண்படுத்துதலும், அந்தோ இக் கொடுஞ்சொற் கேட்குமாறு அறிவை யிழந்துவிட்டோமே யிதென்ன பாதகமென நெஞ்சுநொந்து விலைமாதருடைய மயக்கத்தையும் வஞ்சகத்தையு மெண்ணி யெண்ணி யிதனைத் தீர்ப்பதற் கென்செய்வோ மென்று பெருங்கவலையுற்று மரணமடைய நிச்ச

யித்து அருணைமாநகர்க் கோபுரத்தின்மேலேறிக் கீழே குதித்தனர். அப்போது நம்பெருமானாகிய குமாரக்கடவுள் ஒருசந்நியாசிபோ லெதிரே யெழுந்தருளி வந்து நின்று யாதொருகேடும் வாராமற் காத்து அன்பனே பூருவ புண்ணியத்தாற் பிழைத்தாய் இனி யிக்கோபுரத்தில் வடபக்கத்திலே யிருக்குமிந்தக் குமாரக்கடவுளே யுன்னைக்காக்கும். நீ சடாக்ஷர மந்திரத்தை மறவாமற் செபஞ்செய்தா லெல்லாப் பாக்களும் பாட வல்லவனாவாயென்று சொல்லி விபூதி தரித்துத் தம்யாற் சுட்டிக்காட்டிய திருவுருவத்திலே மறைந்தருளினர்.

உடனே யருணகிரிநாதரானந்த பரவசராய் எம்பெருமானுடைய கருணையிருந்தவா றென்னே யிங்ஙனமடிமை கொள்ளுதற்கேற்ற பத்தி யெள்ளளவுமென்னிடத்திலில்லையே யென்னை யறிமாமல் யான்செய்த தவம் யாதிருந்ததோவென்று நெஞ்ச நெக்குருகிச் சடாக்ஷரத்தைச் செபஞ்செய்தலும், கடன்மடை திறந்தது போலக் கனிந்த மதுரமுடைய செந்தமிழ் பாடும் வாக்குவர நம் குமாரக்கடவுளைப் பற்பல அற்புதச் சந்தப்பாக்களாற் பாடி கண்டவர் கேட்டவர் கண்களிப்பு மனக்களிப்புங் கொள்ளக் காலங்கழித்து வருவாராய் நம்மைக் காத்தருளிய கந்தசுவாமியே கடவுளென்று கைகுவித்து வணங்கித் தமது சரீரத்தி லுள்ள நோயெல்லாநீங்கி யிளஞ்சூரியனைப்போலப் பிரகாசித்து முப்பத்தாறுயிரந் திரும்புகழும் முப்பத்திரண்டு புயவகுப்பும் பாடினர். அப்பாடல்களைக் கேட்டருளிய அவ் வெம்பிரான் மயில்வாகனத்தி லெழுந்தருளிவந்து அருணகிரிநாதருக்குத் தரிசனங் கட்டளையிட்டுப் பிரணவப் பொருளை யுபதேசித்தனர்.

அப்போது அருணகிரிநாத ரஞ்சலிசெய்து ஆடிப்பாடிப் புளகாங்கிதராகி அப்பிரணவப் பொருள் முற்றுமுணர்ந்து மயில்விருத்தம், வேல்விருத்த முதலியவை பாடித் தோத்திரஞ்செய்து தலங்கடோறுஞ் சென்று குமாரக்கடவுளைத் தரிசித்துத் திருப்புகழ்பாடித் திருச்செந்தூரை யடைந்து தாம் பாடிய எல்லாப் பாடல்களையுஞ் சந்நிதானத்துள் முன்னர்ப் படித்தனர்; அப்பாடல்களைக் கேட்ட குமாரக்கடவுள் திருமுடியை யசைத்தனர். அப்போது அருணகிரிநாதர் சுவாமீயடியேன் பாடிய திருப்புகழைப் பாடமாகப் படித்தவர் அடியேன் பெற்ற பேற்றை யடையவேண்டுமென்று வரங்கேட்டனர்; அதற்குக் குமாரக்கடவுளொன்றுங் கூறாமையால் தமது கைவசமிருந்த திருப்புகழ் முழுவதையுஞ் சமுத்திரத்திலே வீசியெறிந்து வெளியே புறப்பட்டனர்.

அச்சமுத்திரம் உலகோபகாரமாக அலைகளாலே அவ்வேடுகளை யாங்காங்கு கரையிலொதுக்க அன்பர்கள் அவற்றைத்திரட்டி யொன்றாய்ச்சேர்த்துக் கிடைத்தமட்டுந் தொகுத்துவைத்துப் படித்து வருவாராயினர். திருப்புகழ்ச் சேர்த்துத் தொகுத்துவைத்த இடந் திருச்செந்தூரதலமால் அத்தலத்துக்குச் சிறப்பாகவும் பொதுவாகவுமுள்ள நூறுபாடல்கட்கு அரும்பதவுரையெழுதி யச்சிற்பதித்து வெளிப்படுத்தலாயிற்று. மேலே நிகழ்ந்த அருணகிரிநாதர் சரித்திரமுழுவதும் அவர் புராணத்தில் விரிவாகக்கண்டு கொள்க.

இங்ஙனம்,

மு. ரா. அருணாசலக்கவிராயர்,

மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான்.

உ

குமரன்றுணை.

இராமநாதபுரம் சம்ஸ்தான வித்துவான் துவாத்ரிம் சதாவதானி

சரவணப்பெருமாள் கவிராயரவர்களியற்றிய

கந்தவருக்கச் சந்தவெண்பா.

பாயிரம்.

திருக்கச்சந் தத்தையன்பர் சேரவொட்டா வேண்மேல்
வருக்கச்சந் தத்தைவெண்பா வாழ்த்த—இருக்குநெஞ்சி
லந்தா வளவதனந் தன்பா னவர்பரவத்
தந்தா வளவதனத் தன்.

நூல்.

அங்கசனம் பாலுமருந் தாய்க்குமட்டு மாமங்கைக்
கங்கசனம் பாலுமருந் தாய்க்குமட்டுந்—சங்கையுண்டா
கொஞ்சவளை யாவுருந்த கொஞ்சுகுயி லால்வருந்தி
யஞ்சவளை யால்கடம்பை யா. (௧)

ஆரம்பார் நீறுன கையா கருப்புமுனி
யாரம்பார் நீக்குவர்நீ யல்லாம—லேரம்பன்
வந்தபின்பு வந்தகந்த வருகியின்ப மிஞ்சநெஞ்சு
வந்தணைந்தி தம்புரிந்து வா. (௨)

பாயிரம்.

திருக்குஞ்சகம். அச்சம்-பயம். தத்து-துன்பம். வருக்கம்-(அகரமுதலாகிய முதன் மொழிக்காமெழுத்தின்) வரிசைப்படி. சந்தத்து-பல சந்தங்களையுடைய. ஐ-அழகிய. அம்-அழகான. தாவளம்-வெண்ணிறமுடைய. வதுமனைவியாகிய சரசுவதியினிடத்து. அனத்து - அன்னப்பறவையினிடத்து. அன்பானவர்-அன்புவைத்த பிரமதேவர் பரவு-துதிக்கி[illegible]ந்த. தந்தாவளவதனத்தன்-யானைமுக விநாயகர். தவளமென்பது எதுகைநோக்கித் தாவளமென முதனீண்டது.

நூல்.

(௧) அங்கு-அவ்விடத்து. அசனம்-சோறு. குமட்டுமா-அருவருக்குமா. அங்கசன்-மன்மதன். அரு-அருமையுடைய. சங்கை-சந்தேகம். வளை-வளையல். உகுந்த-கழன்றன. அஞ்சு-பயப்படுகின்ற. கடம்பு-கடப்பமாலையுடைய.

(௨) ஆரம்-முத்துமாலை. கருப்புமுனி-கரும்புவில்லில். ஆர்-பொருந்திய. உவந்து-மகிழ்ந்து.

இக்குவலை யம்புகழு மேரகா காமன்வனந்
திக்குவலை யம்புதொட்டா லென்செய்யு—நெக்குளநா
வண்டுநெருந்த வஞ்சிநெஞ்ச மங்கைசெங்கை பங்கயங்கண்
வண்டுகொண்டை யம்புகொண்ட மான். (௩)

சூரம் பனந்தமழ னெய்தான்மெய் தான்மடந்தை
யீரம் பனந்தமணி யேயுமிழை—சோருமிடை
போலுமங்கை மார்பிலென்று போர்புரிந்த சூரைவென்ற
வேலிலங்கு பாணிமுன்சொல் வீர். (௪)

உள்ளமுத லைப்பறிப்போர்க் குள்ளமுத லேயானை
யுள்ளமுத லைப்பகைதீர்த் தோன்மருகா—தெள்ளமுத
முக்கனிச ருக்கரைமொ ழிக்கிளிநி ழிக்கணைகொ
ளிக்கனிர திக்கதிக மே. (௫)

ஊடலைத்தான் கண்டாரு முள்ளமத னம்பான்மா
லூடலைத்தான் கண்டா ருரையணங்கு—வாடுமந்தோ
நித்தமுரு கையதனி நித்யரும ரையகுக
சித்தமுரு கையவருள் செய். (௬)

என்னவரு மந்தணியா ரின்னமுரு கேசரென்மே
லென்னவரு மந்தநங்கை யென்னுடனே—சொன்னவுரை

(௩) குவலையம்-பூமி. ஏரகா-திருவேரக மென்னுந் தலத்திலெழுந்தருளி யிருப்பவனே. இக்கு-கரும்புவில்லில். வல்லையம்பு-வலிய ஐந்து புட்பபாணம். செய்யும்-செய்வள். நெக்கு-நெகிழ்ந்து. உளம்-மனம். பங்கயம் - தாமரைமல(ராகவும்). கண்-கண்களானவை. அம்பு-பாண(மாகவும்).

(௪) சூர்-ஏலாக்கின்ற. மடந்தையீர்-பெண்களே. அம்பல்-பழிமொழி. நந்த-மிக. மணிவயும்-அழகு பொருந்தும். இழை-நூல். சூர்-சூரன். பாணி-கையையுடைய முருகக்கடவுள்.

(௫) உள்ள-இருக்கின்ற. முதலை-மூலமாகிய ஆணவமலத்தை. பறிப்போர்க்கு-கெடுக்கின்ற ஞானிகட்கு. உள்ளமுதலே - மனத்தின்கண் முதற்பொருளாயுள்ளவனே. உள்ள-நினைக்க. இக்கனி-இந்தப்பெண். கனி, இடைகுறைந்து நின்ற சொல்.

(௬) ஊடலை-ஊடல்செய் கிருத்தலை. தான்-தானே. கண்டு-பார்த்து. உள்ளம்மதன்-மனத்தின்கட்டோன்று மன்மதன். அலைத்தான்-வருத்தப்படுத்தினன். கண்டு-கற்கண்டு. ஆர்-நிறைந்த. உரை-சொல்லையுடைய. வாடும்-வாடுவள். முருகைய-முருகையனே. உருகு-உருகுவாயாக. ஐய-ஐயனே.

கண்டிருக்க நெஞ்சிலைக்க ணந்தரிக்கி லன்றிலொத்த
வொண்டொடிக்கு ளந்தரிக்கு மோ. (௭)

ஏலஞ் சுமந்தகுழற் கின்பங் கொடுக்கவரா
யேலஞ் சுமந்தமதிக் கென்செய்யும்—பாலஞ்சு
மந்தவிழி யெந்தைதிரு மைந்தவொரு செந்திலரு
கந்தவுமை தந்தமுரு கா. (௮)

ஐயமிலை மாலைவந்தா லாவியிலை யென்பதற்கே
யையமிலை மாலைவந்தா லாவிரவா—துய்யுமென்று
அந்தனஞ்சொ லுங்குகன்ற ருங்கடம்பை யென்றனைய
சந்தனங்க சந்ததெங்கை தான். (௯)

ஒப்பனையு மாவிரதிக் கொப்பாங் கலைபிரமா
னொப்பனையு மாவிரதிக் குன்பாரங்காண்—சிற்பாஞ்
சோதிசத்தி பாலவற்பர் சூரவெற்பின் வீறுடைத்த
வாதிசத்தி பாணிவைத்த வா. (௰)

ஓமறையைக் கேட்கமல லோனுமெம்பி ரானுமறி
யோமறைவா யென்ன வுணர்த்தியவா—சோமன்முக

(௭) என்ன-யாது. வருமம்-வாது. என்ன-என்று. அருமந்த-அருமருந்தன்ன. கணம்-க்ஷணநேரம். தரிக்கிலே-(இங்கே வராமலங்கே) தரித்திருந்தால். அன்றில் ஒத்த - (க்ஷணநேரமும் பிரிதலைச் சகியாமலிறக்கின்ற) அன்றிற்பறவையைப்போன்ற. என்ன-என்னென்பதன்மரூஉ.

(௮) ஏலம்-ஏலத்தின் வாசனை. குழற்கு-கூந்தலையுடையவளுக்கு. அஞ்சும்-பயப்படுவேன். அந்தமதிக்கு-அந்தச் சந்திரனுக்கு. பாலம்-நெற்றி.

(௯) மாலை-மாலைக்காலம். வந்தா-(தென்றற்) காற்று. ஆவி-உயிர். ஐய-ஐயனே. மிலை-(நீ) அணிந்த. மாலை-கடப்பமாலை. ஆ-ஆச்சரியமாக. சந்து-தாது. தரும்-கொடுப்பான். உளம்-(ஆகுபெயர்) நெஞ்சம். பசந்தது-பசலைநிறமடைந்தது. கசந்தது-கசப்படைந்தது. (ஆமொன்றால்) எங்கை-என்றங்கை.

(௰) ஒப்பனையும் - அழகும். மா இரதிக்கு-பெருமையுடைய மன்மதன் மனைவிக்கு. ஒப்ப-சமானமாக. ஆவி-உயிர். ரதிக்கு-இனிமையுடைய இவளை. (காப்பது) உன்பாரம் - உன்னுடைய பாரம். சத்தி-உமையம்மை. பால-மைந்தனே. அற்பர்சூர்- அற்பராகிய சூரர். அவெற்பு-அந்தக்கிரௌஞ்சமலை. வீறு-பெருமையை. சத்தி-வேல். பாணி-கை.

(௧௧) ஓம்-பிரணவமாகிய. மறையை-இரகசியார்த்தத்தை. அறியோம்-தெரியமாட்டோம். அறைவாய்-சொல்லியருளுவாய். சோமன்-சந்திரன். வஞ்சி-வஞ்சிக்கொடி. வஞ்சி-பெண். அபராஞ்சி-பொன்போல்வாள். சுகம்-கிளி.

மந்தகுழல் வஞ்சியிடை வந்தியப சஞ்சிமொழி
யந்தகல லோந்திவலோ யாள். (௯௧)

ஔவையதுக் கோன்பாலை யாண்டான் மருகநிந்த
மௌவையதுக் குந்தேற்றி யாரணங்கைத்—தெவ்வசுரர்
தானைகொன்ற வாலகந்த சாமிசெஞ்சொ லாறுயர்ந்த
தேனைவென்ற மானைவந்து சேர். (௯௨)

கம்புகல லாமாது கண்டமலை கொந்தளந்தே
கம்புகல லாமா கனகமென்றே—யம்புயத்தின்
சித்திரத்த னத்தனைச்சி றைப்படுத்தி யக்கரத்தை
யத்தனுக்கு ரைத்த முத்தை யா. (௯௩)

காதமணக் கும்பைக் கடம்பாசை வாகமந்தைக்
காதமணக் கும்பைக் கழுவேற்று—நாதமுல்லை
தந்தமொம் பெண்கொடிநின் றஞ்சமகிழ்ந் தின்பரசந்
தந்தநகம் பந்தநாந் தா. (௯௪)

கின்னாத்த வத்தைநின்கைக் கிற்றமதி போலுநராற்
கின்னாத்த னத்தைநிகர்க் கின்றகண்டம்—வண்ணநடை
யாநம்பி னையன்பி னைவந்த சாமிகந்த
மாரனம்பி னுல்வருந்து மான். (௯௫)

(௯௨) ஔ-ஔகார வெழுத்துக்கு. அயலுக்கு-பக்கத்திலுள்ள வெழுத்தாகிய ஓகாரவெழுத்துக்கு. ஒன்பானை-ஒன்பதாவதெழுத்தாகிய ஆகாரவெழுத்தை-சிலேடையால். (ஆ)-பசுவை. ஆண்டான்-விஷ்ணு. ஔவை-தாய். அலுக்கும்-சலிப்பன். தானை-சேனை. ஓகாரத்துக்கு ஒன்பதாவதெழுத்து, இகரமாயிருத்தலால் இந்நூலாசிரியர் ஓகாரத்தைச் சேராமல் ஒகாரமுத லெண்ணினார்போலும்.

(௯௩) கம்பு கல் அல் ஆம்-சங்கு, மலை, இருள் ஆகும். கண்டம்-கழுத்து. கொந்தளம்-கூந்தல். தேகம்-சரீரம். புகலல்-சொல்லுதல். கனகம்-பொன். சித்திரத்து-அழகுடைய. அனத்தன்- அன்னவாகனத்தையுடைய பிரமன். அக்கரம்-பிரணவவெழுத்து.

(௯௪) பை-அழகிய. காது-மோதுகின்ற. அமணக்கும்பை - சமணர்கூட்டத்தை. முல்லை-முல்லை யரும்பு. தந்தம்-பல். தஞ்சம், பற்றுக்கோடு. அதரம்-இதழ்.

(௯௫) கை-கையிலுள்ள கிற்றமதி-பிறைச்சந்திரன். உகிரால் நகத்தால். கின்-கின்றவாய். நத்து அனத்தை - சங்கினையும் அன்னப் பறவையினையும். கண்டம்-கழுத்து. ஆர்-பொருந்த. கந்த-கந்தனே.

கீரனலங் காட்டுமொழிக் கின்னமுலைப் பெண்ணரசு
கீரனலங் காரகவி கேட்டருள்வோய்—மாரனம்பான்
முத்தனந்த நீறுதென்று முத்தையன்க ளேறுமென்று
சித்தனந்த லாறுவந்து சேர். (௯௬)

கும்பனுக்குஞ் சங்கரனுக் குங்குருவே பிள்ளைமதிக்
கும்பனுக்குஞ் சங்குவரிக் குங்குயிலுக்—கும்பயந்தேன்
றென்றலுக்கு மைங்கணைச்சி லம்பனுக்கு மென்செயச்சொ
லென்றனுக்கு மங்கைநித்த மே. (௯௭)

கூனன்மதி யங்கனலாய்க் கொப்புளிந்தா லெப்படித்தா
னன்மதி யங்கனலாய் நாட்டுவேன்—றேனலரா
லிண்டுகுரை யுண்டகாய மென்றுமோது சென்றானது
வண்டுகூரை வென்றவேலர் பால். (௯௮)

கெண்டையஞ்சு மால்விழியி ரிடையஞ்சு மாயிர
வெண்டையஞ்சு மாபுனைவான் வில்லியென்பான்-சண்டைசெய்ய
வந்துமாலை வந்திடாமுன் மங்கைகாமி கந்தசாமி
வந்துமாலை தந்துமேவு வாய். (௯௯)

கேசமஞ்சம் பாமிருதோள் கெண்டைவிழி நங்கைநின்ப
னேசமஞ்சம் பானமரை நீக்குவாய்—வாசமலர்க்

(௯௬) கீரலம்-பாலினன்மை. கீரன்-நக்கீரனார். நீறுது-பொரிகின்றது. சித்தம்-மனம். நந்தலால்-கெட்டிருத்தலால். நகரம் னகரத்தொடு திரிபுநோக்கி வேற்றுமையின்றி வருதல் காண்க. மேலுமுண்டு. நீறுகின்ற தென்பது, நீறுதெனவந்தது.

(௯௭) கும்பன்-அகத்தியமுனிவர். பனுக்கும்-தெளிக்கும். உவரி-கடல். சிலம்பன்-மன்மதன். என்செய-யாதுசெய்வேன். அலுக்கும்-சலிப்பன்.

(௯௮) கூனல்மதி - வளைந்தசந்திரன். அங்கு-அவ்விடத்து. அனலாய்-(தன்கிரணத்தை) அக்கினியாக. நன்மதி-நல்ல அறிவை. அங்கனலாய்-சரீரத்தின் நன்மையுடையவனே; அழகுடையவனே யென்றபடி. நாட்டுவேன்-(தளராவிடாது) நிலைநிறுத்துவேன். இண்டுகுரை - (ஆகுபெயர்கள்) இண்டின் முள், குரைமுள். உண்ட-பட்ட. காயம்-சரீரம். (ஆனது)| கூரை-குரை.

(௯௯) மால்விழி-மயக்கத்தைத்தருகின்ற கண்ணையுடையவள். ரிடை-கலவிக்கு. அஞ்சுமா-பயப்படுமானா. வெண்டையம் - காலிலணியுமோர் விருதாகிய ஆபரணம். சுமா-அடிக்கடி. வில்லி-(கருப்பு) வில்லையுடைய மன்மதன். வந்து-தெற்றற்காற்று. மாலை-மாலைக்காலம்.

(௱) கேசம்-கூந்தல். அம்பு-மூங்கில். தோள்-புயம். நேசம்-அன்புடையவன். அஞ்சு அம்பான்-பஞ்சபாணத்தையுடைய மன்மதன். அமரை-சண்டை

காமன்மாம ஞதிதேவர் காவெணுந சாமிநாத
காமன்மாம ஞதிதேசி கா. (உ௰)

கைக்குமா பாவிரசங் கண்டுவிட மாமடநங்
கைக்குமா பாவிநெஞ்சங் கல்லாமா—லைக்குமா
னஞ்சியேகு மூந்தைவேல னன்பைநாடு மென்றுகூடும்
வஞ்சியேகு சந்துமோதி வா. (உக)

கொண்டனுக்குந்தண்டலைக்குங்கொந்தளமொக்கும்பெணுன்மால்
கொண்டனுக்குந் தண்டலைக்கும் பிட்டனுப்புங்—கொண்டுவந்த
விந்தமுத்தங் கொங்கைலவத்தங் கெங்குசித்தந் தங்கிநிற்குங்
கந்தமுத்தந் தந்துநித்தங் கா. (உஉ)

கோகனகந் தந்தங் குவளையாந் துண்டமிடை
கோகனகந் தந்தங் குவளையா—தேகமிவள்
கைக்குவமை யைப்புலவர் கற்றநிலை முத்தையசு
வைக்குமுத முத்துமுறு வல். (உங)

கௌவைக் கலைவாரிக் கங்குலியா னைக்கரவங்
கௌவைக் கலைமதிக்குக் கண்டிலாள்—வெவ்விடத்தை

யை. கா-கற்பகத்தினிடத்து. மன்-நிலைபெற்ற. மா-பெரிய. மன் - அரசனுகிய இந்திரன். மாமன்-மாமனுகிய. ஆதி - சிவபிரானுக்கு. தேசிகா - குருவாயுள்ளவனே.

(உக) கைக்குமா-சுசக்குமா. கண்டு-கற்கண்டு. மாபாவி-பெரியபாவியாகியதலைவன். மாலைக்கு-மாலைக்காலத்துக்கு. மான்-மான்போன்ற (அங்கங்கை). கூடும்-(நம்மிடம்வந்து) சேர்வன். வஞ்சி-வஞ்சிக்கொடிபோல்பவளே. சந்தும்-தூதும். ஓதி-சொல்லி.

(உஉ) தண்டலை-சோலை. கொந்தளம்-கூந்தல். அழுக்கும்-வருந்துவள். தண்டலை-ஏவல்செய்பவரை. அங்குதண்டலைக்கும்பிட்டனுப்புமெனக்கூட்டுக.

(உங) கோகனகம்-தாமரை. தந்து-நூல். துண்டம்-முகம். கோ-கண். கனகந்தம்-மிக்கவாசனை. தேகம்-சரீரத்தில். தங்குவள்-தங்கப்படுவேன். சுவை-மதுரமுள்ள. குமுதம்-செவ்வாம்பல்போலும்வாயில். முறுவல்-பற்கள். முத்து-முத்துக்களாம்.

(உச) கௌவைக்கு-பழிச்சொல்லுக்கு. அலைவாரி-அலைகளையுடைய சமுத்திரத்துக்கு. கங்குல்-இருளாகிய. அரவம்-பாம்பால். கௌவு-பற்றப்படுகின்ற. ஐ-அழகிய. அயில்வான்-உண்பானுகிய சிவபிரான். வாரிய அன்னிக் கொள்ளப்

வாரியமு தாகவயில் வான்மதலை வேள்முநல்வ
வாரியமு தாகவனு மான். (உச)

வெறிவிலக்கல்.

சலசமனந் தந்துநடுத் தையனடை கைகாச்
சலசமனந் தந்துணித்த தாற்போங்—கலசமதன்
மாலைவந்தா லேகுமைந்தாள் மாதுகந்தா நீதருந்தார்
மாலைவந்தா லேகுமென்றுண் மான். (உரு)

சாமிநா தாமிதமா தாநினைக்கு மானினைக்கொஞ்
சாமிநா தாமிதமா தாசெய்யுங்—காமன்விடுங்
கஞ்சமல ராவளவு கண்டவரி யாவர்மன
கஞ்சமல ராருரைசெய் வார். (உசு)

சித்தசனம் பான்மதியாற் றென்றலன்றி லான்மனமஞ்
சித்தசனம் பான்மணியாச் சேர்ந்தநங்கை—கைத்தசனஞ்
சோனைக்கந் தாரைக்கண் டேறுய்க்கும் பூதத்தின்
றானைக்கந் தாமுத்தந் தா. (உஎ)

சிதமதி யங்கவிகை தென்றலிர தஞ்சசிவஞ்
சிதமதி யங்கடலாஞ் சித்தசற்கிப்—போதவள

பட்ட. முதா-மகிழ்ச்சியுடையவனே, பெருமகிழ்ச்சியுடையவனே யென்றபடி. கவலும்-கவலையடையும். கவலுமான் கண்துயிலாளெனக் கூட்டு.

(உரு) சலசம்-தாமரை. அனம்-அன்னப்பறவை. தந்து-நூல். தையல்-பெண்ணின். நடு-இடை. காச்சல்-சுரநோய். அசம்-ஆடுகள். துணித்தால்-வெட்டினதனுல். போம்-போகுமா. மாலை-மாலைக்காலம். வந்தாலே-தென்றற்காற்றாலே. குமைந்தாள்-(உள்ளம்) குழைந்தாள். தார்-தாராகிய. முதலடியில் எதிர்மறைப்பொருள் கொள்க.

(உசு) மா-பெரிய. தா-வருத்தத்தின். மிதம்-அளவை. நினைக்குமான்-எண்ணி மான்போன்றவள். நினை-உன்னை. கொஞ்சாமினு-கொஞ்சாத்பெண்ணு. தாமிதம்-கோபம். மாதா-தாய். செய்யும்-செய்வள். கஞ்சமலரா-தாமரைமலராகிய பாணமோ. அலர்-பழிமொழி. ஆர்-எவர். தாமதமென்பது இறுதியடியில் தாமிதமென எதுகைநோக்கி வந்தது. யாவர் என்பதில் ரகரவொற்றைக் கெடுத்துத் தனிப்பிரித்துக்கொள்க. இங்ஙனமேலுங்கொள்க.

(உஎ) அஞ்சி-பயந்து. தசனம்-பற்கள். பால்-வெள்ளிய. மணியா-முத்தாக. அசனம்-சோற்றை. கைத்து-வெறுத்து. சோனைக்கம்-விடாமழைபெய்கின்ற மேகம்போலும். தாரை-நீரொழுக்கினையுடைய கண்-கண்களை. தாது-தூதாக. உய்க்கும்-(உன்னிடம்) செலுத்துவள். தானை-படை.

ஞம்பொருதா லென்செயலா மொன்றியள்வே ளன்பர்குழா
நம்பொருதா ளெம்பெருமா னால். (௨௮)

சுந்தரிக்கு மாமன்பேர் சொல்லவொண்ணு மாமதிக்கஞ்
சுந்தரிக்கு மாமணநீ தேயாம—லுய்ந்திருக்கக்
காமனத்தன் பார்ஙிக்குங் காரணக்கந் தாகடப்பந்
தாமனத்தன் பாலமுத்தந் தா. (௨௯)

சூதவம்பா நெஞ்சந் துளைத்துயம் வராததென்ன
சூதவம்பார் வாலியசொ ரூபமந்தோ—மாதரசே
வேதனைய னுடரும் வேலனுமை பாலனுடல்
வேதனைய னலெரியும் வேள். (௩௰)

செந்தினக ரான்சோமன் றேவர்முத லோர்பரவச்
செந்தினக ராள்பரம தேசிகா—வந்தெதிரே
முத்தனைவ ளைத்தரிமு மக்குமத னுக்குமதி
சித்தனைவ ளைந்தழுவல் செய். (௩௧)

சேரலன்பா லேவுந் திருமுகத்தான் மைந்தனெனைச்
சேரலன்பா லென்கசக்கச் செய்வானீ—பாரென்றான்

(௨௮) சீதம்-குளிர்ச்சி. கவிகை-குடை. சவிஞ்சி-சவியாகியபெண்ணே. தமது-தம்முடைய. இயம்-வாத்தியம். சித்தசர்க்கு-மன்மதனுக்கு. ம்பர்து-புட்பபாணம். ஒன்றியன்-தனிமையாயுள்ளவன். வேள்-முருகக்கடவுளே. ஒரு-ஒப்பற்ற. எம்பெருமான்-எங்கள் தலைவனே. ஆல்-அசை.

(௨௯) சுந்தரிக்கு-சுந்தரமுடைய இரதிக்கு. மாமன்பேர்-மாமனாகிய விஷ்ணுவின் பேர்., அஃதாவது, மால். மதிக்கு-சந்திரனுக்கு. அஞ்சும்-பயப்படுவன். உய்ந்து-பிழைத்து. கா-காப்பாய். தாமன்-மாலையுடையவனே. அத்தன்-சிவபிரான். பால-மைந்தனே.

(௩௰) உடல்-சரீரம். வேதனையனல்-மூங்கிலுக்கு மகனாய்த் தோன்றிய சிவபிரானால். வேள்-மன்மதனுடைய. சூதஅம்பா-மாம்பூப்பாணமோ. வாலிய சொரூபம்-இளமையுடையநல்லவடிவம். அவம்-வீணும். பார்-கண்பார்ப்பாயாக வேதனை-பிரமதேவனை. அனல்-அந்தக்காலம்.

(௩௧) தினகரான்-சூரியர்கள். சோமன்-சந்திரன். செந்தில் நகர் - திருச்செந்தூர். முத்து அனை-முத்துக்குத்தாயாகிய சரும்பை. அரி-கடலாகிய மூரசத்தை. அதி-மிக. சித்தம்-மனம். வைவனை -வருந்துகின்றவளை. தினகரர்க ளென்பது, தினகராளென மரூஉ மொழியாக வந்தது.

(௩௨) சேரலன்-மலையாளதேசத் தரசன்; சேரமான் பெருமாளுயனார். திருமுகத்தான் - பாசுரமுடைய சோமசுந்தரக்கடவுள். சேரலன் - சேரமான்.

னின்றாள்க டம்பா னெருங்காமை யென்பாகி
யென்றாள்க டம்பா வினம். (௩௨)

சைவலங்கொண் டற்குழலாய் சாமிமலை யாளுமா
ரைவலங்கொண் டற்குவரச் சாற்றுவா—யுய்வகையாக்
கந்தர்ப்ப னம்புதொடு கண்டிப்பை யுஞ்சொலியு
கந்தர்ப்ப மன்றுகல கம். (௩௩)

சொல்வளஞ்சேர் செந்திற் சுவாமிநா தாகுறையென்
சொல்வளஞ்சே லென்றுநீ தோய்ந்திருந்தால்—நல்லறத்தைக்
கா வரை நந்தவொரு காலயிலெ றிந்தமுரு
கா வரை நந்தன்மரு கா. (௩௪)

சோதிக்கு மாலிமயத் தோகைக்குந் தோன்றன்மனஞ்
சோதிக்கு மாமிலென்ன சொல்வதென்றான்—போதிக்க
வந்தனம்பி ஞாநந்த மைந்தகந்த சாமிசிந்தை
வந்தனம்பி லுல்வருந்து மான். (௩௫)

சௌரியங்கம் வீழவொரு தாளா லுதைத்தச்
சௌரியங்கைக் கொண்டான் றனையா—வுவரியொலி
தென்றலந்தா வந்ததங்கோ சிந்தைநொந்தாள் வஞ்சிகந்தா
மன்றலந்தார் தந்தணைந்தாள் வாய்.

ன். என்-யாதுகாரணத்துக்கு. ன்தாள்கள்-உன்னுடைய திருவடிகள். தம்பால்-தன்னிடத்து. நெருங்காமை-நெருங்கிவராமையால். ஆள்-ஆண்டருள்.

(௩௩) சைவலம்-பாசிக்கொத்து. கொண்டல்-மேகம் மியலை - திருவேரகம். அரசை-இராசாவாகிய குமாரக்கடவுளை. வலங்கொண்டு-வலப்பிரதக்கணமாகச் சுற்றிவந்து. அற்கு-இராத்திரிக்கண். கந்தர்ப்பன்-மன்மதன். உகந்து-மகிழ்ந்து. மகிழ்ந்து உய்வகையாக வரச்சாற்றுவாயெனக் கூட்டுக.

(௩௪) சொல்-நெல்; அல்லது கீர்த்தி. அஞ்சேல்-பயப்படாதே. காதுவரை. மோதுகின்ற அசுரரை. நந்த-கெட. துவரை-துவாரகை நகரையுடைய. நந்தன்-விஷ்ணு. நந்தன் என்பதில் னகரத்தைக்கெடுத்துத் தனைபிரித்துக்கொள்க. இங்ஙனமே தனை கெடவந்த இடத்து எல்லாவொற்றுக்களையுங் கெடுத்துக்கொள்க.

(௩௫) சோதி-சிவபிரான். மால்-பெருமை. தோகை - மயில்போன்ற உமாதேவி. தோன்றல்-புத்திரன். சோதிக்கும்-பரிசோதனை செய்வான். போதிக்க-(பிரணவப்பொருளை நீ) உபதேசிக்க. வந்தனம்-வணக்கம். பினாகி-சிவபெருமான். வந்தன்-மன்மதன்.

(௩௬) சௌரி-யமன். சௌரியம்-வீரம். தனையா-புத்திரனே. உவரி-கடல். அந்தா-(ஒரு குறிப்புமொழி) பக்கத்தில். மன்றல்-வாசனை.

ஞமலியஞ்சா யற்குறமா னண்பகரி வாக
னமலியஞ்சா யற்கடலா னற்செங்—கமலியஞ்சார்
மாதுகரு காதுபுனை மாலையருள் வாதுசெய
லேதுகரு வேல்கொளர சே. (௩௭)

ஞாலமிசை யார்முடிகொ ணாவனந்த னற்சொலருங்
கோலமிசை யாழ்பூங் குயின்மொழியாள்—பாலருள்செய்
யன்பத்தி யொன்றின்முன மன்புற்ற கொண்டல்புகழ்
மின்பத்தி கொண்டவயில் வேள். (௩௮)

சுரிமிறுகுமு றுஞ்சிலையா னீள்கச் சிடையங்
கமிறுகுமுன் காத்தல்கடன் கண்டா—புமையருளு
முத்தையாக டப்பமாலை மொய்த்தமார்ப நிற்கலாம
லித்தையாவர் பக்கலோது வேன். (௩௯)

ஞெண்டுமுழந் தாளனையா னின்மயலி னுன்முருகா
பண்டுமுழந் தாளனையாற் பாலித்தல்—கொண்டன்றே
இன்றுமிருந் தாளவளை யென்றுமிருந் தாளிலரு
டுன்றுமிருந் தாரருள்செய் து. (௪௰)

தங்கநகங் கொங்கைவன சங்கணிளந் தந்தமுருந்
தங்கநக மங்கமிவள் சங்கமமின்—பங்கொடுக்கும்

(௩௭) ஞமலி-மயில். கரிவாகன-யானைவாகனத்தையுடையவனே. மஷி-வலிய. இயம்-வாச்சியம். கடலானல் - கடலாகவுடைய மன்மதனல். செங்கமலி-செந்தாமரையிலுள்ள இலக்குமியின். அம்-அழகு. சார்-சேர்ந்த. மாது-பெண்ணுக்கு. கருகாது-வாடாது. கரு-கரிய.

(௩௮) ஞாலம்-பூமியை. மிசை-மேல். முடி-தலையில். நா அனந்தன்-இரண்டாயிர நாக்குடைய ஆதிசேடன். கோலம்-அழகு. இசை-பொருந்திய. அத்தி-யானை. கொண்டல்-மேகம்போன்றவிஷ்ணு. மின்பத்தி - பிரகாசிக்கின்ற அன்பு. அயில்-கூர்மை.

(௩௯) சுரிமிறு-வண்டு. குமிறும்-ஒலிக்கும். சிலை-கரும்புவில். இடை-அங்கம்-இடையாகிய சரீரத்தில். இத்தை-(விகாரமொழி) இதை.

(௪௰) ஞெண்டு-நண்டு. முழந்தாள்-முழங்கால். பண்டும்-முற்காலத்தும். உழந்தாள்-வருந்தினள். பாலித்தல்-இரக்ஷித்தல். இல் - (அவள்) இருக்கையில். அருள்-கருணை. துன்றும்-நெருங்கும். இருந்தார்-பெருமை தங்கியமாலை. அருள்செய்து-கொடுத்து.

(௪௧) தங்கநகம்-மகாமேருமலை. இளந்தந்தம் - சிறுபற்கள். முருந்தம்-மயிலிறகினடிமுள். கநகம்-பொன். அங்கம்-சரீரம். சங்கமம்-புணர்ச்சி. வேள்-

வேடனக்கார் தூதுரைப்பார் வேளெதிர்ப்பா னெலெனச்சோர்
வாடனைக்கா வாமைநடப்பா மா. (௪௧)

தானத்தந் தாவளத்தைச் சக்கரவா கத்தைப்பொற்
றானத்தந் தாவளத்தைச் சாற்றலாம்—வானத்தார் [வா
மின்பொருவாள் கொங்கையைமால் விண்டுரையா ளென்செய்கு
ளன்பொருவாள் வந்தணைவே லா. (௪௨)

தித்தித் தகைத்தவெனச் செப்புவனீ யின்னமும
தித்தித் தகைத்தவெனத் தேர்ந்தணைவாய்—பத்தர்க்கா
யாமந்தோர் தூதிற்சே ரீசற்கோர் காதற்சேய்
யாமத்தோ ணீபத்தா மா. (௪௩)

ங்கரும்பா முன்னஞ் சிலையனவ னுவிட்கோர்
ங்கரும்பா முன்னஞ் சிறிதருள்வாய்—வெங்கொடிய
தங் கொடுக்குநம னோரன்பர் பக்கலுறு
காதங் கொடுக்குமுரு கா. (௪௪)

துவரதர மானேநீ சொல்லலர்மா னோரோ
துவரதரந் தோயிரும்பிற் சோர்வாக்—குவதுளத்தை
யென்றுள்வான் மின்போல்வா ளெங்கோமா னன்பாலே
சென்றுள்வா னின்றேநீ சேர். (௪௫)

றாமுதலின் மூன்றைநிகர் சொன்னகையாய் தாமரைமேற்
றாமுதகம் போலுட் டுளங்குவதென்—சாமிவரா

முருகக்கடவுள். வேள்-மன்மதன். காவாமை-காவாதிருத்தல்.

(௪௨) தானம்-மதம். தந்தாவளம்-யானை. பொன்தானத்து-பொன்னிடத்து. அம்-அழகு. தா-வலிமையுடைய. வளத்தை-கிளிளைத்தை. (நிகர்) மின்-மின்னல். பொருவாள்-ஒப்பாகப்படாதவள். கொங்கையை-தனங்களுக்கு. மால்-ஆசை. விண்டு-(வாய்) திறந்து. ஒருவாள்-நீங்கமாட்டாள்.

(௪௩) தித்தித்த - மதுரப்பொருள்கள். கைத்தவென - கைப்புடையவென்று. இத்தகைத்த-இத்தன்மையுடையன. பத்தர்-சுந்தரமூர்த்தி நாயனார். யாமம்-சாமம். சேய்-மைந்தனே. வாமம்-அழகு. நீபத்தாமா-கடப்பமாலையுடையவனே.

(௪௪) கரும்பா-கரும்பாக. முன்-நினைக்கப்பட்ட. சிலையன்-வில்லையுடையவனுகிய. தீங்கு-பொல்லாங்கு. அரும்பாமுன்னம்-தோன்றுதற்கு முன்னர். ஏதம்-துன்பம். ஒடுக்கும்-அடக்கும்.

(௪௫) துவர் அதரம்-பவளம்போன்ற இதழையுடைய. அலர்-பழிமொழியை. மானார்-(பிற) பெண்கள். ஓதுவர்-சொல்வர். அது- அப்படிச்சொல்வது. இரும்பின்-இரும்பைப்போல. சோர்வு-சோர்தலை. கோமான்-தலைவனே. ஆள்வான்-ஆளும்பொருட்டு. மானேநீசொல்லென்று எனக் கூட்டுக.

ரோவென்று ணீயவருக் கோதென்று ளோதியினிற்
காவென்று ணீயவளைக் கா. (௪௬)

தென்னவனு கத்தரையாள் சேவகன்பா லெற்களித்து
மென்னவனு கத்தணையா தென்றனத்தை—பின்னரசே
யெந்தக்கா லம்புணர்வா னென்றப்பா லுஞ்சொலிமின்
னெந்தக்கா லென்செயலென் றே. (௪௭)

தேங்குவளை யார்விழியா மம்பால் வெறுத்துமனந்
தேங்குவளை யார்வினவித் தேற்றுவா—ரோங்குமதத்
தந்தவரைக் குந்தவடற் சந்தவயிற் கொண்டகரக்
கந்தவரைத் திங்களுதற் கா. (௪௮)

தைக்குஞ் சரத்தைவிழி சங்கங்கண் டங்கலசத்
தைக்குஞ் சரத்தைநிகர் தங்கக்கொங்—கைக்குப்
புகலார் முருகா புகலாய் துதிவா
யகலார் மனதா லயா. (௪௯)

தொய்யில்வரை மென்முலையோ சொன்னவரை மின்னுவளைக்
கையில் வரைபதுமங் காமசரத்—தைய
வுடம்பா மெலிந்தா ளுடன்பா டுடன்சேர்
கடம்பா சிலம்பாகு கா. (௫௰)

(௪௬) தூ-தூவென்னு மெழுத்துக்கு. முதலின்-முதலெழுத்தாகிய., து-என்பதில். மூன்று-து, தூ, தீ; முத்து. நிகர்சொல்-சமானஞ்சொல்லுகின்றி. கலையாய்-பற்களையுடையவளே. தாம்-தாவுகின்ற. உதகம்-நீர். உள்-மனம். துளங்குவாள்-சலனப்படுவாள் ஓதியினில்-கூந்தலால். கா-சோலையை.

(௪௭) தென்னவன்-உக்கிரகுமாரபாண்டியன். சேவகன்-வீரன். என்பாது. அகத்து-மார்பில். அணையாது-சேராதது. அப்பாலும்-மேன்மேலும். இமின்-இந்தப்பெண். என்செயல்-என்செய்கை.

(௪௮) தேங்குவளை-(தாற்பரியம்) கலங்குகின்றவளை. தந்தம்-(ஆகுபெயர்) யானைகளையுடைய. வரை-கிரௌஞ்சகிரியை. குந்த-(விகாரம்) குத்த. அடல்-வலிய. அரைத்திங்கள்-அர்த்தசந்திரன்போன்ற. நுதல்-நெற்றியையுடையவளை.

(௪௯) சரத்துஐ-பாணங்களின் அழகுடைய. கண்டம்-கழுத்து. குஞ்சரத்தை-யானையை. கொங்கைக்கு-தனத்தையுடையவளுக்கு.

(௫௰) வரை-எழுதப்பட்ட. சொன்னவரை-தங்கமலை. வரை-இரேகை. பதுமம்-தாமரை. பத்மரேகை யென்றபடி. காமர்-அழகிய. அசத்துஐய-ஆட்டுவாகனத்தையுடையனே. உடம்பா-சரீரமோ. உடன்பாடு-ஒற்றுமை.

தோகைக்கும் பாலிலங்குந் தோகைவரை யாய்பகட்கந்
தோகைக்கும் பாலிரசந் தோய்கருப்பம்—பாகைக்கும்
பாவில்விட்டு நாவிலிட்டும் பாவைசற்றும் வாய்திறப்பின்
றுவிவிட்டங் கோய்முனுற்றின் ருள். (௫௧)

தௌவக் கரத்தயன்முன் னேழெட்டுத் தாமரைப்போ
தொவ்வக் கரத்தயல்சென் றேதென்று—ளெவ்வந்
தணித்தாள் கடப்பந் தனித்தார் கொடுத்தின்
பணித்தா மயிற்செங்கை யா. (௫௨)

நந்தலறுந் தொண்டருள நண்ணுவாய் பண்ணைதொறு
நந்தலறுஞ் சோலைவரை நாயகமே—யிந்தமின்னுன்
றஞ்சமுரு காதெரிய றந்திடென வோதியுமுன்
னெஞ்சமுரு காததென்ன நீ. (௫௩)

நாளவன சத்திருவே நங்கள்குகன் றைப்பூச
நாளவனா சத்தில்வர நான்கண்டேன்—வேளெய்த
அம்பினையா ரென்புகல்வா ரஞ்சுகமே யென்றனள்சோர்
கொம்பினையா வுய்ந்திடவே கும். (௫௪)

நிலவலையந் தாங்குமுடி நீளரவின் வாயூ
ணிலவலையந் தாங்குயிலே நெஞ்சை—யுலைமெழுகாச்

(௫௧) தோகை-மயில். கும்பு-கூட்டம். தோகை வரையாய்-மயூரகிரியாய்., குன்றுக்குடியுடையவனே. கும்பாவில்-திருபாத்திரத்தில். நாவிலிட்டும்-நாவினூற்றியும். திறப்பின்று-திறத்தலில்லாமல். ஓய்முன்-மூச்சடங்கு முன்னே.

(௫௨) தௌஅக்கரத்து-தௌவென்னுமெழுத்துக்கு. அயல்முன்-பக்கத்தில் கருதப்பட்ட. எட்டு-எட்டாவதெழுத்து; தீ. ஏழு-ஏழாவதெழுத்து; து. (தீது) தாமரைப்போது-தாமரைபூ. ஒவ்வு-பொருந்துகின்ற. அக்கர-அந்தக்கையையுடைய. தயல்-பெண். எவ்வம்-துன்பம். அணித்தாம்-சமீபமாக்கிடைக்கும். அயில்-வேல். தையல்-தயலெனப்போலியாயிற்று.

(௫௩) நந்தல்-கேடு. பண்ணை-வயல். நந்து-சங்குகள். சோலைவரை-சோலைமலை., பழமுதிர்சோலை யென்னுந்தலம். தெரியல்-மாலை.

(௫௪) நாளவனசம்-தண்டினையுடைய தாமரை. அவன் அசத்தில்-அவனுடைய ஆட்டுவாகனத்தில். எண்-தோகை. கொம்பு-பூங்கொம்புபோல்வாள். இனையா-வருந்தாமல். உய்ந்திட-பிழைக்கும் பொருட்டு. ஏகும்-(அங்கே தூதாகச்) செல்லுங்கள்.

(௫௫) நிலவலையம்-வட்டமாகியபூமியை. ஊண்-உணவாகிய தென்றல். நிலவல்-விளங்குதல். ஐயம்-சந்தேகம். தாம்-அசை. ஐய-ஐயனே. அந்தோ-

செய்வதென்று ளையவந்தோ தெய்வமென்றுண் மெய்யுநொந்தா
னுய்வதென்று ளைகடம்பா ரோய். (௫௫)

நீராஞ் சனமெடுத்தா நின்றாட்கு லாப்போந்த
நீராஞ் சனநெருக்கி னேயமளித்—தீராமே
வின்னமரு வாதிருப்ப தென்னையலை வாரிவற்ற
மின்னமரும் வேலெடுத்த வேள். (௫௬)

தன்டா திறைக்குமலர் வேலா தவன்மதன்போ
ரண்டா திறைக்குரைப்பா ராரென்றாள்—விண்டோய்
மதிக்கா குயிற்கா மலைக்கா லிலைக்கா
மதிக்கா யெதற்கிட வள். (௫௭)

தனமா பாலாநின் ஞைக்கருள்பெற் றார்க்குளித்த
மாதனமா பாலாதன் வாய்மையா—மாதனமா
வெங்கனற்கொ ழுந்தநீப மென்புயத்த ழுந்துமாகி
லங்கனற்கொ ளம்மைவேற லாம். (௫௮)

நெய்குழலாய் வேள்வரவு நேர்ந்திருக்கும் வாயிலுக்கு
நெய்குழலாய் நான்றிரித னீதியோ—வுய்குவதென்
றென்றவனை யுந்துயர்கள் டிங்குமொடு விண்டனனென்
பொன்றவனை யும்புகழ்ன் டும். (௫௯)

நேர்வாளை வென்றவிழ் கூர்மையை வாரிசமின்
னேர்வாளைப் போர்வேளை நீவிலக்கிச்—சேர்வாவென்

ஐயோ. ஆள்வை-ஆள்வாயாக. கடம்பாரோய்-கடப்பமாலையுடையவனே.

(௫௬) நீராஞ்சனம்-ஆலத்தி. உலாப்போந்த-பவனிவந்த. ஆம்-ஆகின்ற. மின்-பிரகாசம். வேள்-குமாரக்கடவுளே.

(௫௭) தாது-மகரந்தத்தை. இறைக்கும்-சொரிகிம். இறைக்கு-தலைவனாகிய வுனக்கு. மலைக்கால்-தென்றல். மதிக்காய்-(நீ) மதிக்கமாட்டாய்.

(௫௮) தனமா-புதிதா. பாலா-குமாரக்கடவுளே. மாது-பெண். ஆதனம் - இருப்பிடம். வெங்கனற்கொழுந்தா - கொடிய அக்கினிக் கொழுந்தா. நீபம்-கடப்பமாலை. மென்புயத்து-(இவள்) மெல்லிய தோள்களில். அம்-அழகிய. கனல்-கரும்பாகிய வில்லில். கன்னல்-கனலென நின்றது.

(௫௯) நெய்குழலாய் - நெய்பூசிய கூந்தலுடையவனே. நேர்ந்து-உடன்பட்டு. இல்-வீடு. நெய்குழலாய்-நெய்யின் றகுழல் போன்று. அவன்-அப்பெண். உம்மொடு-உம்முடன். ஒன்ற-பொருந்த. அணையும்-சேர்வீர்.

றந்தையனு ரைத்தமிதை யத்தனுவி ரக்கமிலே
முந்தையவி திற்றரும மோ. (௬௰)

நைவளங்காந் தாரமன நன்மொழியா ளின்மயலா
னைவளங்காந் தாரமுத நாவிலிடா—துய்வ
தொருகா லுளதோ வுமையா ளருள்செய்
முருகா வவடான் மொழி. (௬௧)

நொய்யம் பருப்பதமா தூறியவே லெற்கலதங்
கையம்ப ருப்பதமா வார்க்குரைப்பான்—மெய்யன்பர்
கைத்தலங்கு வித்திறைஞ்சு கைக்கிரங்கு முத்தையன்செய்
வித்தலங்கு ரித்தெழும்பு மேல். (௬௨)

நோக்கஞ் சனங்கரைய நுண்டுளிசிந் தப்பகழி
தாக்கஞ் சனங்கரையார் தாந்தடுப்பா—ரேக்கஞ்
சகிக்கமுடி யாளோர் கூணத்தி லணையாயே
லகிக்கமுடி யார்பால கா. (௬௩)

நௌவி யணையவிழி நங்கைகொண்ட நின்காமச்
செவ்வி யணையறிந்தாற் சீறுளோ—தெவ்வியலிற்
றானவரை போன்மேவு தானவரை நீறுடி
வானவரை யாள்வேல வா. (௬௪)

பந்தரும்பா வாய்ந்த ... வலவனீ
பந்தரும்பா வாய்வழுத்திப் பாரென்—றொந்தரும்பா

(௬௰) நேர்-கூர்மை. வாளை-வாளாயுதத்தை. வாரிசம்-தாமரை. போர்-சண்டையுடைய.

(௬௧) நைவளம், காந்தாரம்-ஒவ்வொரு பண்கள். அன-ஒத்த. அங்காந்து-வாய்திறந்து.

(௬௨) நொய்-நுண்பொடி. பருப்பதம்-மலை. ஆ-ஆக. தூறிய-கெடுத்த. ஐயம்பு-பஞ்சபாணம். அருப்பது-பிளப்பது. வித்து-(காமமாகிய) விதை. அல்இராக்காலத்தில். அங்குரித்து-முளைத்து.

(௬௩) நோக்கு அஞ்சனம்-கண்களின்மை. துளி-கண்ணீர்த்துளி. தாக்கு-மோதுகின்ற. அஞ்சுபகழி-ஐந்துபாணத்தையுடைய. அனங்கரை-மன்மதனை. அகி-பாம்பு. கம்-கங்கைநீர். முடியார்-தலையிலுள்ளார்.

(௬௪) நௌவி-மான். செவ்வி-ஒழுங்கு. தெவ்-பகை. தானவரை-மதத்தையுடைய மலை(யானை). தானவரை-அசுரரை. நீறுஆடி-சாம்பராக்கி.

(௬௫) அரும்பு-தாமரை யரும்பு. ஆ-ஆக. நீபம்-கடப்பமாலை. பாவாய்-

மின்றுள்க ளீரா று நெஞ்சார வேமேவி
யின்றுள்க ளீரா றனே. (௬௫)

பாலனங் கசப்பாவிப் பாவைகைக்கு தென்றன்மால்
பாலனங் கசப்பாவி பாணந்தாற்—கோலகங்கை
பாலகா வாதாநீ பாராபா ராதாரா
வேலாகா வாநோகா மே. (௬௬)

பிரமரமார் பூங்கடம்பா பேராழி யூடாம்
பிரமரமாஞ் சூர்வெல் பிரானே—சரமரமாங்
கன்னினுளை யின்றமேவு கன்னலோடு நின்றவேளை
யென்னிகாளை யென்றிடாம லே. (௬௭)

பீரம்படர்ந்தழலை பெய்முகில்போ லெய்புமதன்
சரம்ப டர்ந்தவினி யென்செய்வாள்—சீரங்க
சந்தா னுடம்பும்ப சந்தாள் சிவன்றந்த
மைந்தா வினங்கொஞ்ச மா. (௬௮)

புலவரையாள் கந்தாபூம் போதார் சினைவிண்
புலவரையார் தோகைப் பொருப்பா—நிலவரையா
ரஞ்சடையா னந்தனயே லன்பிலையே யுன்புயமார்
மஞ்சடையா ளஞ்செய் யலா மா. (௬௯)

பாவைபோல்பவளே. வழுத்தி-சொல்லி. அரும்பாநின்றுள்-உண்டாகாநின்றுள். கண்ணீராறனே கண்கள் பன்னிரண்டையுடையவனே.

(௬௬) கசப்பா-கசப்பாக. மால்பாலன்-விஷ்ணுவின் மைந்தனாகிய. கங்கைபாலகா-பெண்ணிற் சிறந்த பார்வதிதேவி மைந்தனே. நீபாரா-கடப்பமாலையுடையவனே. பாராதாரா-பூமிக்கு ஆதாரமாயுள்ளவனே. நோகாமே-நோகாமல். பாலகாவென்பது, எதுகைநோக்கிப் பாலாகாவென்றாயிற்று.

(௬௭) பிரமரம்-வண்டு. ஆழிநடு-கடலினடுவில். ஆம்பிரமரம்-மாமரம். கன்னல்-கரும்புவில்.

(௬௮) பீரம்-பசலையினழகு. சரம்அம்பு-பிளக்கின்ற பாணங்கள். அடர்ந்த-நெருங்கின. சீரம்-பால். இனம்-இன்னமும்.

(௬௯) புலவர்-தேவர். சினை-மரக்கிளைகள். விண்புலவரை. ஆகாயத்தினிடம் வரையும். தோகைப்பொருப்பா-மயூரகிரியுடையவனே. நிலஅரை-அநந்தசக்கிரன். நந்தன-புத்திரனே. புயம்ஆர்-புயத்தைச்சேர்கின்ற. மஞ்சு-அழகிய. அடையாளம்-குறி. இது, குறிபிழைத்தகலைவனை நோக்கிப்பாங்கி கூறியது.

பூவாசு கந்தாவு போர்வேள் சிலைபூட்டும்
பூவாசு கந்தான் பொறுக்கலா—மாவாசு
கந்தரநஞ் சம்புனையுங் கந்தரனங் கங்கைதருஞ்
சுந்தரமின் றன்புடனஞ் சும். (௭௰)

பெய்வளையா கம்பசப்பப் பெய்களைவே ளெவிடுலென்
செய்வளையா கம்பமுறுந் தேகமுற்றுங்—கைவளையால்
வாசவனை மோலிசிதை வாகவிடு மாறமலர்
வாசவனை நீபமரு மா. (௭௧)

போராத வணியற்கை பேரினுமுன் மாவிவட்குப்
பேராத வணியிலைப் பெண்மொழில்போல்—வாராது
மாவாக நின்றவனை வாநாடி வென்றருளு
மாவாக வின்றனைய வா. (௭௨)

பையவளைத் தான்சிலைவேள் பாணந் துளைத்ததுமார்
பையவளைத் தாங்கியொரு பஞ்ரனைக்கு—ணையலைவுந்து
நானோடி வாகாவெ னுதாவெ னுவோதின்
மானோடி வாதாகு மா. (௭௩)

பொய்யா தவளவளை போனதுவென் புத்தியினை
யையா தவளவளை நானுரைத்தேன்—மையாத

(௭௰) சுகம்பூவா-இன்பம் உண்டாகாது. பூசுகம்-புட்பபாணம். பொறுக்கலாமா-தாங்கலாகுமா. வா-வருவாய். சு-நல. கந்தரம்-கழுத்தில். கந்தரன்-கங்கையைத்தரித்த சிவபிரான். சுந்தர-அழகுடையவனே. மின்-இப்பெண். அஞ்சும்-பயப்படுவள். பூவாதெனபதில் மூன்றிறுதிதொக்கது.

(௭௧) பெய்வளை-அணியப்பட்ட வளையலையுடையவள். ஏ-பாணம். கம்பம்-நடுக்கம். வளை-சக்கரம். மோலி-கிரீடம். சிதைவு-அழிவு. மாற-உக்கிரமாரபாண்டியனே. நீபம்-கடப்பமாலை. வனை-அணிகின்ற. மரு[illegible]பையுடையவனே.

(௭௨) பேர்-பெரிய. மா-மாமரம். மாவாக-பெரிய தோள்களையுடையவனே.

(௭௩) ஓடி-ஓடிவந்து. வா-வருவாய். கா-காப்பாய். என்நாதா எனுவோதின் என்னுடைய நாதனே என்று சொன்னால். இவாது-இந்தச்சண்டை.

(௭௪) தவளவளை-வெள்ளியவளையல். மையாது-நொந்துசொன்னது. மையாத-கசவாத. நிம்பம்-வேம்பு. ஏது-எங்கிருக்கிறது. எனவே, அலர்தூற்று

நிம்பமே துரைக்கிலென்று நெஞ்சவர் வெட்குனன்பு
நம்பமே தூணர்க்கடம்பு தா. (௭௪)

போதகங்கை கொண்டிரிந்துப் பூண்டார்க் குரைத்தமறைப்
போதகங்கை யீன்ற புதல்வருட—நாதகங்கை
யேறுதிரு மான்மருக வேழைமய லாறுதக
வாறுதிரு மால்விழியி னான். (௭௫)

பௌவமுர சோதைக்கும் பான்மதிக்கும் பாவைபடு
மெவ்வமுர சோதைக்கு மேவளவர்—சைவசமை
யாசரிய சம்பந்த வாரமரு ளன்புந்த
நேசரித யந்தங்கு நீ. (௭௬)

மஞ்சம் பயிலாள் வனமுலைக்க ணீருகுத்தாள்
மஞ்சம் பயிலா வரைபெயலி—னெஞ்சந்
தரியா தையிலாய் சரணு மவர்பான்
மரியா ளதயிதா மதி. (௭௭)

மானுரைக் கும்பிட்டு வந்திக்குந் தூதுசெல்வான்
மானுரைக் கும்பிட்டு வந்திக்குந்—தானுள்ப

தபெண்க ளில்லை யென்பது கருத்து. தம்பம்-பற்றுக்கோடு. தூணர்-பூங்கொத்து.

௭௫ போதகம்-யானையை. கைக்கொண்டு-கைப்பற்றி. மறைப்போத-வேதப்பொருளைப் போதித்தவனே. கங்கை-பருந்தினை. உதகஆறு. கங்கையாகிய நதி-உதிரும். ஒழுகும்-மால் மயக்கத்தையுடைய. விழியினாள்-கண்ணையுடையவன் ஆனாள்.

(௭௬) பௌவம்-கடலாகிய. முரசு ஒதைக்கும்-மன்மதன்முரசவாத்திய முழக்கத்துக்கும். எவ்வம்-துன்பம். உரசோ-தேய்த்தலோ. எவுதளவா-பாணத்தினாலுரு. ஒன்று-அதற்கு மேலுமாம். சமையாசரிய-சமயத்தின்குருவாகிய. ஆரம்-(உமது) மாலையை. உந்த-செலுத்த. நேசர்-அன்பாது. ஆசாரியவென்பது-ஆசிரியவென்றாயிற்று.

(௭௭) மஞ்சம்-படுக்கையில் மஞ்சு. மேகம்-அம்பு-நீரை. பயிலா-வேலாக. வரைபெயலின்-மலையிற்பெய்தலைப்போல. முலைக்கண்-கொங்கையினிடத்து. தரியாது-தங்காது. சரண்ஆம்-அடைக்கலமாகிய. மதி-முன்னிலையசைச்சொல்.

(௭௮) தூதுசெல்வான்-தூதுக்குப்போம்பொருட்டு. வந்திக்கும்-வணங்குவள். மால்-பெருமை. ஆள்-அடிமையாக்கும். பதம்-பதவியை. புரிந்தார்-செ

தம்புரிந்தார் தந்தகந்தா சஞ்சலம்யார் நெஞ்சினங்கோ.
வம்புரிந்தா லென்செயும்பா வை. (௭௮)

மின்னுளை யாகட்டு மென்முலையீர் வெட்கு ணர்த்து
மின்னுளை யாகட்டு மென்னுது—சொன்னுளைந்
தூறுதலை யாசுரனை நூறுதலை வேலவரு
ளாறுதலை யாறுதலை யாய். (௭௯)

மீனப் புடுங்கண்மின்மால் விள்ளுதற்கென் பாலும்வெரு
மானப் படுங்கண் மலர்க்கடம்பா—வானப்
படுத்தகுடி லத்தா னளித்தசுத நிஃகா
ரெடுத்தகு துரைப்பா ரினி. (௮0)

முதுகுதரப் பாலணைசூர் முற்றும்வென்றாய் வாய
முதுகுதரப் பாலனையான் மோகித்—ததுகுறையென்
றெண்கலக்க ணீருகுத்தின் கென்சொலுக்கும் வாயடைக்கும்
பெண்கலக்க மார்விலக்கும் பேர். (௮௧)

மூடமனத் தானகல மோலிபுடைத் தானகலங்
கூடமனத் தானகலக் கொங்கைசெங்கை—குடமயில்

ய்தவர். சஞ்சலம்-(இவள்படும்) துன்பத்தை. இனம்-இன்னம். புரிந்தால்-விரும்பினால். செயும்-செய்வள்.

